

உயர்திரு,
விபுலாநந்த அடிகளார்அவர்கள் B.Sc.(Lond)
உஉ-வது ஆண்டுவிழாத் தலைவர்.



திருவாளர், பண்டித,
ந.மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள், நடுக்காவேரி.
உய, உஉக-வது ஆண்டுவிழாத் தலைவர்.



கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரித்
தலைமையாசிரியர்,
திருவாளர், சிவ குப்புசாமிப்பிள்ளையவர்கள்



கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி
மாநேசர், திருவாளர்,
மா. வே. கோபாலகிருட்டின ஐயரவர்கள்.



உயர்திரு,
மறைமலையடிகளார் அவர்கள்.
பிறந்து, பிசுவது ஆண்டுவிழாத் தலைவர்.



உயர்திரு,
சிவசண்முக மெய்ஞ்ஞானசிவாச்சாரியதேசிகஅடிகளார் அவர்கள்
திருப்பாதிரிப்புலியூர்.
எழுபத்தெட்டாம் ஆண்டுவிழாத் தலைவர்.



மாண்புமிக்க, இராமநாதபுரமன்னர்,
பா. இராஜராஜேசுவரசேதுபதி அவர்கள்,
ஐந்தாவது ஆண்டுவிழாத் தலைவர்.



திருவாளர், தி. செல்வகேசவராயமுதலியார் அவர்கள், M. A.,
சென்னை.
ஆறாவது ஆண்டுவிழாத்தலைவர்.



சங்கப்பேரன்பர்,
ரா.வ்பகதூர், திருவாளர்,
ப்பாசுமிவாண்டையார் அவர்கள்,
பெருநிலக்கிழவர், பூண்டி.



சங்கப்பேரன்பர்,
திருவாளர், பெ. சித. விசுவநாதன் செட்டியார் அவர்கள்,
தேரழுந்தூர்.



சங்கப்பேரன்பர்,
திருவாளர்,
L. S. மாணிக்கம்பிள்ளை அவர்கள்,
தஞ்சாவூர்.



சங்கப்பேரன்பினர்,
திருவாளர்,
ஆ. பொன்னுசாமி நாடார்
அவர்கள், தஞ்சாவூர்.



சங்கப்பேரன்பினர்,
திருவாளர் T. P. K. அழகிரிசாமிபிள்ளை அவர்கள்
தஞ்சாவூர்.

உ

தமிழ்த்தாய் வாழ்க

காரைதந் கட்டுரை

வெள்ளிவிழா நினைவுமலர்



காரைத் தமிழ்ச் சங்கம்

தஞ்சாவூர்

—

1938



உ

தமிழ்த்தாய்வாழ்க.

வையமீன்றதொன் மக்கள் உளத்தினைக்
கையி னுறுரை காலம் இருந்திடப்
பையநாவை யசைத்த பழந்தமிழ்
ஐயை தாள்தலை கொண்டு பணிதுவாம்.

முகவுரை.

நமது சங்க வெள்ளிவிழாவில் தமிழ்த் தாய்க்குச் செய்யும் பலவகைச் சிறப்புக் களுள், வெள்ளிவிழாவின் நினைவுக்குறி யாக ஒருகட்டுரைத் தொகுதி வெளியிட வேண்டுமென எண்ணி, பல பெரியோர் களுக்கும் எமது விருப்பத்தைத் தெரிவித் தோம். எம் விருப்பத்தைத் தெரிந்த அளவிலேயே, சங்கத்தினிடத்தும் தமி ழன்னையிடத்தும் உள்ள பேரன்பினால் பெரியோர்கள் பலரும் கட்டுரையெழுதி உதவினர்கள். அவர்களனைவர்க்கும் சங்கத்தின் உளமார்ந்த நன்றியைத் தெரி வித்துக்கொள்ளுகிறோம். இக் கட்டுரை வெளியிடுவதற்குப் பொருளுதவி புரிந்த பெரியோர்களுக்கும், இதனைத் திறம்பட அச்சிட்டுக் கொடுத்த கரந்தைக்கூட்டுற வுப் பதிப்பகத்தாருக்கும் எமது நன்றி உரியதாகும். இப் பெரியோர்கள் கட் டுரையையெல்லாம் **கரந்தைக் கட்டுரை** என்னும் பெயரால் தமிழ்த்தாயின் திரு வடிகளுக்கு எம் வெள்ளிவிழா நன்னாளா கிய இன்று காணிக்கையாகச் செலுத்த முன் வந்துள்ளோம். தமிழ்த்தாய் ஏற் றருள்வாளாக.

15— 4—38
க. த. சங்கம்.

த. வே. உமாமகேசுவரன்,
சங்கத்தலைவர்.

பொருளடக்கம்

எண்		பக்கம்
க	நமது சங்கமும் தமிழ் வளர்ச்சியும் ஜீரால்சாகிப், செந்தமிழ்ப்புரவலர், திரு. த. வே. உமாமகேசுவரம் பின்னை அவர்கள் B.A. B.L., சங்கத்தலைவர்	க
உ	எச்சம் திரு. R. வேங்கடாசலம் பின்னை அவர்கள்	உக
ங	வீரமாமுனிவர் நாடு திரு. ரா. பி. சேதுப்பின்னை அவர்கள், B.A., B.L.	ஙக
ச	ஞானத்தின் திருவுரு திரு. பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்	ஙச
ஞ	மாந்தையும், மாந்தையும் திரு. மகாவித்துவான், ரா. இராகவையங்கார் அவர்கள்	சஅ
ட	சமணமுனிவரின் தமிழ்த்தொண்டு திரு. வித்துவான், ஔவை. சு. அரைசாமிப் பின்னை அவர்கள்	ஞஎ
எ	கந்தகமும் கந்தகைகளும் திரு. அ. ஸ்ரீனிவாசாசாரியார் அவர்கள், B.A., L.T.	டஅ
அ	வித்துவான் தியாகராசசெட்டியார் திரு. மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்	அக
கூ	திருக்குறளின்மாண்பு திரு. ம. ரா. சோமசுந்தரம் பின்னை அவர்கள்	கூஉ
ம	பிற்காலச்சோழரும் அவர்காலத்துப் புலவரும் இலக்கணவிளக்க பரம்பரை, திரு. சோமசுந்தரதேசிகர் அவர்கள்	ணஉம
மக	தமிழின் உண்மைப்பொருள் அமைப்பு திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B.A., வழக்கறிஞர்	ணசம
மஉ	கர்னாடக சங்கீதம் திரு. இசைத்தமிழ்ச்செல்வர், தி. இலக்குமணபின்னை அவர்கள் B.A.	ணசஎ
மங	நாலோக வீரன் திரு. க. அ. நீலகண்டசாஸ்திரியார் அவர்கள் M.A.	ணஞசு
மச	பெண்மைநலமும் புலமையறமும் திரு. ச. சோமசுந்தரபாரதியார் அவர்கள் M.A., B.L.	ணசஉ
மஞ	தமிழ்த்தொகை திரு. S. வையாபுரிப்பின்னை அவர்கள் B.A., B.L.	ணஎஉ
மட	இறைச்சிப்பொருள் திரு. வே. வேங்கடராஜுலுசெட்டியார் அவர்கள்	ணஅஎ

எண்		பக்கம்
யஎ	தூற்றலத் தமிழ் திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்கள்	ஈகூஅ
யஅ	சோழபாண்டிய மன்னர்கள்காலத்தில் வழக்கத்திலிருந்த நிலவரியும் நிலஉரிமைமாற்றுதலும் இராவ்சாகிப். திரு. C. S. ஸ்ரீநிவாசாசாரியார் அவர்கள் M.A.	ஊசு
யகூ	மணிமேகலை திரு. பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்	உாயஎ
உய	வித்துவான் அழகிய சொக்கநாதபிள்ளை இராவ்சாகிப், திரு. வெ. ப. சுப்பிரமணியமுதலியார் அவர்கள்	உர்ஙஅ
உக	தென்னிந்திய வணிகம் திரு. S. K. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் M.A.	உாருசு
உஉ	திருவிருத்தம் திரு. வித்துவான் ஆ. பூவராகம் பிள்ளை அவர்கள்	உாஎங
உங	பொழுதும் போதும் திரு. வித்துவான் கி. வா. ஜெகந்நாத ஐயர் அவர்கள்	உாகூக
உச	கம்பர் திரு. A. C. பாக்நாடார் அவர்கள், B.A., B.L.	உாகூஎ
உஞ	கலியாணித் சளுக்கியர்கள் திரு. வித்துவான் சி. சு. நாராயணசாமி முதலியார் அவர்கள்	ஙாயிங
உசு	தேவார ஆசிரியர்கள் மேற்கொண்டொழுகிய சமயக்கோள்கை திரு. வித்துவான், வெள்ளைவாரண முதலியார் அவர்கள்	ஙாஉசு
உஎ	நம்மாழ்வார் காலம் திரு. கே. ஜி. சேஷையர் அவர்கள் B.A., B.L.	ஙாசுத
உஅ	அடங்கன்முறை ஆராய்ச்சி திரு. அ. சிதம்பரனார் அவர்கள், M.T.S., M.T.A.S., M.S.SC.,	ஙாசாஎ
உகூ	'தாய்', 'தந்தை' 'தங்கை' திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் B.A.B.L.	ஙாஎச
ஙய	திராவிடக் குழமொழிகள் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், M.A.	ஙாஎசு
ஙக	தமிழின் தொன்மை திரு. வித்துவான் மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள் P.O.L. (M.U.)	சாருி
ஙஉ	ஆண்டுவிழாத் தலைவர்களுக்களித்த வரவேற்புப்பா முதலியன (பிற்சேர்க்கை)	



சங்கத்தொண்டர்,
திருவாளர். ம. கவிஞனுசாமிபிள்ளை அவர்கள்,
மருத்துவர், காரந்தை, தஞ்சாவூர்.



சங்க அன்பர்,
திரு. இராவ்பகதூர், சர். A. T. பன்னீர்செல்வம் அவர்கள், Bar-at-law,
தஞ்சாவூர்.



சங்கத்தொண்டர்,
திரு. இராம. நடேசபிள்ளை அவர்கள்,
திருச்சிராப்பள்ளி.



சங்கப்பேரன்பர்,
திருவாளர், இராம. பஞ்சநதம்பிள்ளை அவர்கள்,
தஞ்சாவூர்.



சங்கத்தொண்டர்,
திரு. வே இராமசாமிவன்னியர் அவர்கள்,
கூடலூர், தஞ்சை.



சங்கத்தொண்டர்,
திரு. T. N. குருமூர்த்திப்பிள்ளை அவர்கள்,
திருச்சிராப்பள்ளி.



சங்கத்தொண்டர்,
திருவாளர், ச. அ. சாம்பசிவம்பிள்ளை அவர்கள்,
க்ராந்தை, தஞ்சாவூர்.



சங்கத்தொண்டர்,
திரு. அ. கணபதிப்பிள்ளையவர்கள்,
திருச்சிராப்பள்ளி.



சங்கப்புலவர்,
திரு. R. வேங்கடாசலம்பிள்ளையவர்கள்,
மோகனூர்.



சங்கப்பேரன்பினர்,
திரு. மு. இரத்தனசபாபதிபிள்ளை அவர்கள்,
தென்னூர், திருச்சிராப்பள்ளி.



திரு. கா. நமசிவாயமுதலியாரவர்கள், M.R.A.S., சென்னை.
க, கஎ-கஅ-கக-ஆண்டுவிழாக்களின், தலைவர்.



திருவாளர், திவான்பகதூர்,
T. A. இராமலிங்கஞ் செட்டியார் அவர்கள் B.A., B L., கோயம்புத்தூர்.
இரண்டாவது ஆண்டுவிழாத் தலைவர்.



திருவாளர், பண்டிதமணி,
மு. கதிரேசச்செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.
பதின்நான்காவதாண்டுவிழாத் தலைவர்.



சங்கப்புலவர், தமிழ்வள்ளல், திவான்பகதூர்,
சா. ராம. மு. சித. பெத்தாச்சிச்செட்டியார்அவர்கள், M.R.A.S.,M.L.C.
(ஆண்டிப்பட்டி, குறுநிலமன்னர்.)
பன்னிரண்டாவது ஆண்டுவிழாத் தலைவர்.



திருவாளர், கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M. A., M. L.,
தாலூர் சட்ட விரிவுரையாளர், திருநெல்வேலி.
மகாவது ஆண்டுவிழாத் தலைவர்.



திருவாளர், திவான்பகதூர், சர், T. N. சிவஞானம் பிள்ளை அவர்கள்.
சென்னைமாகில வளர்ச்சிதெறி யமைச்சர், திருநெல்வேலி.
பதின்மூன்றாவது ஆண்டுவிழாத் தலைவர்.



திருவாளர், திவான்பகதூர்,
சா. ராம. மு. இராமசாமிச்செட்டியார் அவர்கள், சிதம்பரம்
நான்காவதாண்டுவிழாத் தலைவர்.



திருவாளர், தோட்டக்காடு,
இராமகிருட்டினபிள்ளை அவர்கள், B.A., F.M U.,
மூன்றாவது ஆண்டுவிழாத் தலைவர்



திருவாளர், சிவசிதம்பரம் பிள்ளை அவர்கள்,
கீழையூர்.
பத்தாவது ஆண்டுவிழாத் தலைவர்.



சங்கம் நிறுவியதுங்கன்,
திருவாளர் வே. இராதாகிருட்டினபிள்ளை அவர்கள், B



சங்கப்புரவலர்,
வாளர் வா. இராசகோபால இரகுநாதராசாளியார் அவர்கள்,
அரித்துவாரமங்கலம்.



திருவாளர், சேதுசமஸ்தான
மகாவித்துவான், ரா. இராகவையங்கார் அவர்கள்.
உயிர-வது ஆண்டுவிழாத் தலைவர்.



திருவாளர், மகாமகோபாத்யாய,
டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்கள்,
உரு-வது ஆண்டுவிழாத் தலைவர்.

நமது சங்கமும் தமிழ் வளர்ச்சியும்

இராவ்சாகிப், செந்தமிழ்ப்புரவலர்,
திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் B. A., B. L.,
சங்கத்தலைவர்.

இறைவன் திருவருளால் வெள்ளிவிழாக் கொண்டாடப் பெறத்தக்க நிலையிலுள்ள நமது சங்கம், தான் தோன்றிய காலமிருந்து இது காறும் தமிழ்மொழியும் தமிழகமும் சென்றுள்ள செலவையும், நேராகவும் பிறர்வழியாகவும் தான் செய்துள்ள தொண்டுகளையும், ஒருவாறு எண்ணிப் பார்ப்பது இயற்கையேயாகும். இவ்வாறு பார்க்கும்போது, இச்சங்கம் தோன்றிய காலத்திற்கும் இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட காலம் சுமார் பத்தாண்டுகளே யாகின்றமையின், நாம் மேற்பார்வையாகப் பார்க்க விருக்கும் மொழிவளர்ச்சியைப் பொதுவாக இவ்விருபதாம் நூற்றாண்டிலிருந்தே தொடங்குவது வழுவாகாதென்று எண்ணுகிறோம். எனவே, இவ்வாராய்ச்சி இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சியும், நம் சங்கத்தின் தொண்டும், தமிழ் வளர்ச்சி குறித்து நாம் செய்யவேண்டியனவும் என மூன்று பெரும் பிரிவினதாகும்.

இவ்விருபதாம் நூற்றாண்டின் இந்நாள் வரையுள்ள காலவெல்லையை, சென்ற நூற்றாண்டின் ஒத்தபகுதியோடு ஒப்பிட்டுப் பார்ப்போமாயின், கல்விப்பரப்பினாலும், செல்வப் பெருக்கினாலும், பல உரிமைகளையுங் கொண்டுள்ள ஆண்மையினாலும், அறிவு பரவுதற்காய வழிகளாலும், இன்னும்பல புறம்பான காரிகத்தாலும் இந்நூற்றாண்டு மிகவும் சிறந்துள்ளதெனினும், தமிழ்மொழியின் வளர்ச்சியைக் கருதும்வழி அத்துணைச் சிறப்புடையதாக இல்லையென்றே மனமடங்கிக் கூறவேண்டியிருக்கிறது.

சைவமணமும் தமிழ் மணமும் ஒருங்கே பரப்பிப் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மறைந்த சிவஞான முனிவரது மரண

வர்கள், சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் நாட்டின் பல்வே றிடங்களிலும் சென்று தமிழ்க்கல்வியையும் சமயநெறியையும் பரப்பி வந்தார்கள். எல்லிஸ் துரைபோன்ற அரசாங்கத்துப் பெரும்பதவி பெற்றிருந்த ஆங்கில அறிஞர்கள், தமிழ்மொழியின் உயர்விலும், இனி மையிலும் ஈடுபட்டு, ஐயந்திரிபறக்கற்று, ஆராய்ச்சி முறையில் நூல் களை யெழுதியுந் தொகுத்தும் தொண்டுசெய்யத் தொடங்கினர். கீழ் நிலம் வாய்ந்த மேல் நாட்டுப் பாதிரிமார்களுட் பலர், தங்கள் சமயத்தைப் புகுத்துவதற்காகச் சமய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்த அளவில் நின்றுவிடாது, அறிவுநூல்களுள் சிலவற்றை நம்மொழியில் மொழி பெயர்த்தும், நம் உயரிய நூல்களுட் சிலவற்றை மேனாட்டு மொழிகளுள் மொழிபெயர்த்தும் தமிழ்ப்பணி செய்யத்தொடங்கினர். தமிழ்ப் பேரரசர்கள் பெயர்தானுமின்றி மறைந்தாரேனும், குறுநில மன்னரும், பெருநிலக்கிழவரும் தமிழ்ப்புலவர்களை ஆதரிப்பதும், தமிழ்க்கல்வியை அக்காலமுறைக்கேற்பப் பலருமுணரச்செய்வதும் தங்கள் கடமையாகக் கொண்டுவந்தனர். இவையெல்லாம் சென்ற நூற்றாண்டு. பழங்கதை!

இந்நூற்றாண்டோ, இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். தேனாட்சி செய்யும் மொழியால் திசைமணக்கக் கவிபாடும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையை நிகர்ப்பார் இக்காலத்தெவர்? தானடைந்த கல்வி தமருமடையச் செய்த வள்ளலன்றே? கல்லுங் கனியக் கவிபாடும் இராமலிங்க சுவாமிகளுக்கு இணையாக இந்நூற்றாண்டில் எவரைக் கூறுவது? தம் அறிவு, ஒழுக்கம், ஆற்றல்களால் கல்லூரிநாட்டியும், பழைய நூல்களையச்சிட்டும் தமிழும் சைவமும் தழைத்தலே தம் வாழ் வெனக் கருதிய ஆறுமுகநாவலருக்கு அருகிருக்கவல்லார் எவர்? மேனாட்டு மொழி யிலக்கணப் பண்பெல்லாம் நன்குணர்ந்து, தென்னாட்டு மொழிகளை அம்முறையிலாய்ந்து, தமிழ் மொழி தனிமொழி என நிலை நாட்டிய ஆங்கிலப் பெரியார் கால்டுவேல் எழுதிய ஒப்பிலக்கணத்திற்கு ஒப்பு கூறக்கூடியதொன்று இன்றுவரை எழுந்ததுண்டா? கற்பனை யையும், கடையெளிமையும் மிக்க உரைநடைத்தலைவர் வேதநாயகம் பிள்ளையோடு விரல் விட்டெண்ணத்தக்கார் யாவர்? மேலைக்கடல் கடைந்த அறிவமுதத்தைத் தென்றமிழ் வள்ளத்து நம்மனோர்க்கிந்த சுந்தரம்பிள்ளைதம் நிறம் படைத்தார் எவரெனக் கூறுவேம்? சன விநோதனி போன்ற வெளியீடுகளால் தமிழ் மக்களிடை அறிவு பரவச் செய்த அரசாங்கத்தினரது தண்ணளி எங்கொளித்தது? தமிழையுஞ் சைவத்தையும் இருகண்ணைப் போற்றி இம்மை மறுமை யிரண்டிற்கும் ஒருதுணையாய் நின்ற திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய பேரற நிலையங்களின் சென்ற நூற்றாண்டின் அறப்பண்பு யாண்டையதோ? அந்தோ! அறியேம்! அறியேம்!

இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கமும், தமிழ் மொழி வரை யில் கலுழ்ச்சியும் மகிழ்ச்சியும் கலந்ததொன்றாகும். இந்நூற்றாண்டு தொடங்கிய சிலவாண்டுகளுக்குள்ளேயே பாவாண்ட தொன்மைத்தமிழ் நூல் பலவும் அச்சிட்டுதவிய ராவ் பகதூர், சி. வை. தாமோதரம்பிள்ளை

யவர்களும், தமிழாராய்ச்சி வல்லுநரும் 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டு களுக்கு முற்பட்ட தமிழர்' என்ற அரிய நூலை இந்நூற்றாண்டின் முற் பகுதியில் வெளியிட்டவருமாகிய வி. கனகசபை பிள்ளையவர்களும், இரட்சணியயாத்திரை முதலிய கிறித்தவகாவியங்களைழுதிய கவிஞர் கிருஷ்ணபிள்ளையவர்களும், தனித் தமிழின் முதன் மகனாய் நின்று மாணவர் பலருக்கும் தமிழ்ச்சுவையூட்டி நாடகம், உரைநூல், மொழி நூல், பாட்டு முதலிய பலவகையான தமிழ் நூல்களை யெழுதித் தமி முன்னேக்குப் பேரணி செய்ய முன்வந்த இளைஞர் பரிதிமாற்கலைஞன் என்னும் வி. கோ. சூரியநாரயணசாத்திரியாரவர்களும், தமிழ்விரிவுரை களாலும், நூல்களாலும், சைவத்துக்கும், தமிழுக்கும் சிறந்த தொண் டாற்றிய சைவசித்தாந்த சண்ட மாருதம் சோமசுந்தர நாயகரவர்களும் தமிழகத்தே தம் புகழ்நிலவ, மறைவாராயினர். இன்னேரது தொண்டின் பயனை மக்களுக் கெழுந்த ஊக்கமும் மொழிக்கான ஆக்க மும் பலவாம். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலக் கல்லூரி களின் மாணவர்களாக இருந்த பலருக்கும், தமிழ் மொழியின் தனிப் பண்புகளில் ஆர்வமும், மொழிமேம்பாட்டில் உலியாவூக்கமும், உலகத்தி னுயர்ந்த மொழிகளுள் ஒன்றற்கேனுந் தமிழ் பிற்பட்டதல்ல என்ற வுணர்ச்சியும் உண்டானதற்குப் பரிதிமாற்கலைஞரவர்களது உழைப்பும், சுந்தரம்பிள்ளையவர்களது தமிழ்த்தெய்வ வணக்கமுமே தக்க துணை யாயின எனல் மிகையாகாது. அப்போதைய மாணவர்களும் தமிழறி ஞர்களும் புதுமுறையில் நூலெழுதுதற்கெனத் தொடங்கிச் செய்த முயற்சிகள் பலவாயினும், முற்றுப் பெற்றவை சிலவேயாகும். ஆங்கிலக் கலைநூல்களிலிருந்து சில சிறு மொழிபெயர்ப்புகளும், புதிய முறையில் உரைநூல்களும் வெளிவந்தன. தமிழ், தமிழ்நாடு இவற்றைக்குறித்த சில ஆராய்ச்சிகள், தமிழறிஞர்களாலும், ஆங்கில அறிஞர்களாலும் சென்னை, கல்கத்தா, கொழும்பு, இலண்டன் முதலிய நகரங்களிலிருந்து கடைபெற்ற ஆங்கிலத் திங்களிதழ்களில் வெளிவந்துகொண்டுமிருந்தன. சென்றநூற்றாண்டினிறுதியில் தொடங்கிய சித்தாந்த தீபிகை யென்னும் ஆங்கிலத்திங்களிதழ் அரிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், தமிழரது மொழி இலக்கணம், சமயம், தத்துவம், முதலிய வற்றைப்பற்றிப் பல ஆராய்ச்சிகளை ஆங்கிலத்திலெழுதியும் தான் செய்து வந்த தொண்டைத் தொடர்ந்து இந்நூற்றாண்டில் சிலஆண்டுகள் வரை யில் செய்துவந்தது. இதன் உயிர்போன்று நின்றவர் காலஞ்சென்ற J. M. நல்லசாமிப்பிள்ளையவர்களேயாவர். சிவஞானபோதம், சித்தியார் முதலிய தத்துவநூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பரவச் செய்த பெருமையும் இவரைச் சார்ந்ததே. ஆங்கிலங் கற்ற தமிழ் மக்களின் கருத்தின்மையே இத்திங்களிதழ் இடையில் நின்றுவிட்ட தற்குக் காரணமென்பதை நாம் கூறுமலிருக்க முடியவில்லை. பல ஆண்டுகளாகத் தாம் அரிதின் முயன்று மொழிபெயர்த்துவந்த திரு வாசகத்தைப் போப்பையரவர்கள் முற்ற வெளியிட்டது இந்நூற்றாண் டின் தொடக்கமேயாகும். இவர் இந்நூற்றாண்டின் முற்பகுதியில்

கமது சங்கமும் தமிழ் வளர்ச்சியும்

(1907-ம் ஆண்டு) காலமாயினுமே னும், இவ்ரது தமிழ்த்தொண்டு சென்ற நூற்றாண்டின்வரலாற்றிற் சேரவேண்டியதேயாகும். தன் கடிகல்லில் தன்னை 'ஒரு தமிழ்மாணவன்' எனப்பொறிக்கும் வண்ணம் கேட்டுக் கொண்ட இவருடைய பேரன்பு தமிழ் மக்கள்யாவரும் கேட்டுமனமுடை யத்தக்கதே யாகும்.

"பாவேந்தர் காற்றில் இலவம்பஞ்சாகப் பறக்கையிலே, தேவேந் த்ரதாரு வொத்தாய்" எனப் புலவர்களாற் பாராட்டப் பெற்ற சேது பதிகளின் மரபைச் சார்ந்தவரும், சென்ற நூற்றாண்டிற் பல தமிழ்த் தொண்டு ஆற்றிய பெருந்தகையும், இராமநாதபுரம் சீமையை மேற்பார்த்து ஆட்சிபுரிந்தவருமாகிய பொன்னுச்சாமித் தேவரது அருந்தவப் புதல்வர் பாண்டித்துரைத் தேவரவர்களால் இராமநாதபுர அரசர் பாஸ்கர சேதுபதியவர்களது உதவியைக்கொண்டு மதுரையில் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் (1901) மதுரைத்தமிழ்ச்சங்கம் என் னும் பெயரால் நிறுவப்பெற்ற சங்கம் இறைவன் திருவருளால் என்றும் நிலைத்துத் தமிழ்த்தொண்டாற்றுதற் கேற்ற வலிமையுடன் வாழ்ந்து வருவது தமிழ் மக்கள் யாவரும் உளமகிழத் தக்கதாம். தமிழ் மக்க ளிடை மொழியுணர்ச்சி பரவிப்பெருகுவதற்கு இச்சங்கம் செய்த தொண்டுகள்பலவாகும். தனித்தமிழ்ப் பரீட்சைகளை யேற்படுத்தியும், சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையென்னும் பெயரால் மாணவர்களுக்கு உண்டியும் உறையுளுந் தந்து தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்பித்தும் வந்ததன் பயனாகப் பலமாணவர் தமிழில் நல்ல பயிற்சி பெறுவாராயி னர். இப்போது தமிழகத்தில் வாழ்ந்துவரும் புலவர்களுட் பலர் இச்சங்கத்தின் தொடர்புடையவரே யாவர். பாண்டியன் புத்தகசாலை யுள் பல அரிய ஏட்டுச்சுவடிகளைத் தொகுத்தும் அவற்றுட் சிலவற்றைச் செந்தமிழ் வெளியீடாகவும், சங்கவெளியீடாகவும் வெளியிட்டும் வருகிறது. சென்ற முப்பத்தேழாண்டுகளாகத் தொடர்ந்து செந்தமி ழென்னும் திங்களிதழ் வெளிவருவது தமிழ்மக்கள் யாவரும் மகிழத் தக்கதெனினும் தொடக்கத்தின் முதற்பதினைந் தாண்டுகள் வரையி லிருந்த வுயர்நிலையிலேயே தொடர்ந்து வருகின்றதா என்று ஐயுற வேண்டியிருக்கிறது. சங்கம் அரிதில் தேடிவைத்த ஏட்டுச்சுவடிக ளும் தமிழ்நாட்டிற்குத் தக்கஅளவில் பயன்படுகிறதென்று கூறமுடிய வில்லை. அச்சுவடிகளுக்கு விளக்கமான அட்டவணைகூட வெளிவந்த தாகத் தெரியவில்லை. இச்சங்க வளர்ச்சியை உள்ளத்துட்கொண்டு களைகணாக நின்ற பாஸ்கர சேதுபதி, பாண்டித்துரைத் தேவர், இராஜ் ராஜேசுவர சேதுபதி எனுமிவர்கள் சங்கத்தினிளமையிலும், தங்க ளிளமையிலும் விண்ணெய்த நேர்ந்தது தமிழ்நாடு செய்த தவக்குறையே யாகும்.

இம்மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுக் கூட்டங்கள் தமிழ் நாட்டின் பலவிடங்களிலும் நடந்ததன் பயனாகவும், இதன் தனித்தமிழ்ப் பரீட்சையின் சார்பாகவும் பலசங்கங்களும் தனித்தமிழ்க் கல்லூரிகளும்

ஏற்பட்டன. அங்கிலேயங்களிற் பல, போற்றுவாரும் கொண்டுசெலுத்துவாருமின்றி, சிலபல ஆண்டுகள் நின்று தத்தமாலியன்ற தொண்டைச் செய்து மறைவனவாயின. இவ்வாறு மறைந்தவற்றுள் தஞ்சைத் தமிழ்ச் சங்கமும், அதன் சார்பில் நடந்த தமிழகம் என்னும் திங்களிதழும் குறிப்படத்தக்கன. மறையாது நிலைத்து நிற்பவற்றுள் மேலைச் சிவபுரிச் சன்மார்க்கசபை குறிப்பிடத் தக்கதாகும். இச்சபையின் சார்பான கல்லூரியினின்று பல மாணவர்கள் தக்க தமிழ்ப் பயிற்சி பெற்று வெளிவந்திருக்கின்றனர். இச்சபையைத் தோற்றுவித்த பழனியப்பசெட்டியாரவர்கள் இளமையிலேயே காலஞ்சென்றமை பெரிதுங்கவலத்தக்கதாகும். அச்செட்டியாரவர்களது தோன்றலாகிய சாமிநாதச் செட்டியாரவர்கள் மிக்க ஊக்கத்துடன் இச்சபையை நடத்திவருவது பெரிதும் போற்றற்பாலதேயாம்.

சைவசமயத்திலும் சித்தாந்தவுண்மையிலும் பெரும்பற்றுள்ள சன்மக்கள் பலர்கூடி, சைவசித்தாந்த மகாசமாசம் என்னும் ஒரு சமயச் சார்பான சங்கத்தைச் சென்னையில் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் (1906) நிறுவினர்கள். சமயவுண்மைகளைப் பரப்புவதற்குச் சமாசக் கூட்டங்களைப் பல இடங்களிலும் நடத்திவந்ததோடு சித்தாந்தம் என்னும் ஒரு திங்களிதழையும் வெளியிட்டுவந்தார்கள். சமயமே இவர்களது முதன்மையான நோக்கமெனினும், சமயத்தினின்று பிரிக்க முடியாத தமிழ்மொழியும் இவர்கள் தொண்டின் பயனைப்பெறுவதாயிற்று. இக்கூட்டங்கள் பலவிடங்களிலும் நிகழ்ந்தமையாலும் பேரறிஞர்கள் பலரும் விரிவுரையாற்றி வந்தமையாலும் உயர்ந்த முறையில் விரிவுரையாற்றும் பழக்கம் நாளுக்குநாள் பெருகுவதாயிற்று. இவ்வுயரிய முறையான விரிவுரைகளைத் தங்கள் விரிவுரைகளால் பரவச் செய்தவர்களுள் உயர்திரு. மறைமலையடிகளும், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகளும் தலைசிறந்தவராவர். இச்சமாசம் இடையே சில காலம் தளர்வுற்றிருந்ததேனும் 1928-ஆம் ஆண்டு தொடங்கி மிகச் சீரிய முறையில் தொண்டாற்றி வருகின்றது. மிகக்குறைந்தகால எல்லைக்குள் பன்னிருதிருமுறைகளையும், பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களையும், திருப்புகழையும் அடக்கவிலைப் பதிப்பாக வெளியிட்டு எல்லோரும் வாங்கக்கூடிய குறைந்த விலைக்கு விற்றுவருவது பெரும் பயனளிப்ப தொன்றாகும்.

திருச்சிராப்பள்ளியில் பண்டிதர் D. சவரிராயர் அவர்கள் முயற்சியின் பயனாகத் தோன்றிய 'தமிழர் பழங்கலையாராய்ச்சிக்கழகம்' (Tamilian Antiquarian Society), "தமிழர் தொன்மை தொகுப்போன்" ('Tamilian Antiquary') என்னும் தாள்வாயிலாகத் தமிழர் நாகரிகம் முதலியவற்றைக்குறித்த பல கட்டுரைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும், புதுவதாக எழுதியும், பழங்கட்டுரைகள் சிலவற்றை மறுமுறை வெளியிட்டும் தமிழர் தனி நாகரிகத்தை நிலை நிறுத்தச் செய்த முயற்சிகள் பெரிதும் போற்றத்தக்கனவாகும். சென்னையில் தமிழர்

நமது சங்கமும் தமிழ் வளர்ச்சியும்

சங்கத்தினின்று வெளிவந்த 'தமிழர்நேசன்' என்னும் தாள், அறிவு நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தும், சில புதிய தமிழ் நூல்களை யெழுதத் தொடங்கியும், தமிழ்த் தொண்டு செய்துவந்தது தமிழகம் பாராட்டற்பாலதேயாகும். இவ்விருதாள்களும், தாங்கள் கொண்ட நோக்கங்களையெல்லாம் நிறைவேற்ற இயலாது இடையே நின்றுவிட்டது, தமிழ்மக்களின் போதிய ஆதரவின்மையேயென்று மனமழுங்கிக் கூற வேண்டியிருக்கிறது.

நெல்லையிலுள்ள சில தமிழறிஞர்களது முயற்சியால் தோன்றிய, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் சைவநூல்களையும், தமிழ் நூல்களையும், அழகிய முறையில் அச்சிட்டு வருவதோடு 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் திங்கள் வெளியீட்டை யும் சென்ற பதினைந்தாண்டுகளாக நடத்திவருகின்றது. சைவம், தமிழ் இவற்றின் ஆக்கங்கருதி இவ்வெளியீடுகள் செய்துவரும் முயற்சி மிகச் சிறந்தனவேயாகும். இக்கழக வெளியீடுகள் உயரியமுறையில் வெளி வரினும், அவற்றின் விலை மிகுதியால் நம் எளிய தமிழ் மக்கள் பலரிடை யும் பரவுதற்கு அத்துணை யெளிதாக இல்லாதிருந்தது. சிலகாலமாக அதிக விலையுள்ள சுவடிகளைக் குறைந்த விலைக்கு விற்றுவருவது நல்ல தொடக்கமே யாகும்.

சென்னையினின்று, பலவகைக் கட்டுரைகளையும் கொண்டு வெளி வரும் 'ஆனந்தபோதினி' 'கலைமகள்' என்னுந் திங்களிதழ்களும் தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படக் கூடிய வெளியீடுகளாகும்.

இந்நூற்றாண்டிலே, மேற்கண்ட முயற்சிகளைத் தவிர, வேறு பல முயற்சிகளால் தோன்றிய பல திங்களிதழ்களும், சிலசில காலம் நின்று மறைவனவாயின. இவ்வாறு மறைந்தவற்றுள் 'வாணிவிலாசனி' 'பிழைக்கும்வழி' 'பாலபாரதி' முதலியவை குறிப்பிடத்தக்கனவாகும். 'கலாநிலையம்' என்னும் வாரத்தாள் தமிழிலக்கிய விலக்கணங்கற் போருக்கு ஓர் ஆசிரியன் போன்ற நிலையை மேற்கொண்டு வெளிவருவ தாயிருந்தும் இடையீடின்றி வருவதாகத் தெரியவில்லை. செய்தித்தாள் களாகவும், வாரவெளியீடுகளாகவும், நாளிதழ்களாகவும் மாறிக்காலக் காலன்போல் காலம், இடம், மக்களுணர்ச்சி முதலியவற்றிற் கேற்ப எழுந்தெழுந்து ஒழிந்தன பலவாகும். இவையெல்லாம் தமிழ் வளர்ச் சிக்கு ஒருவாற்றானும் பயன்படுவன அல்லவாகலின் அவற்றைக் குறித்து நாம் ஆராயவேண்டுவதொன்றுமில்லை. இவற்றுள் 'தேசபக்தன்' என்னும் நாளிதழ் வடமொழிப் பெயரொடு உலவினும் நல்ல தமிழைப் பலரும் சுவைப்பதற்குத் துணையாயிருந்தது குறிக்கத்தக்கது. 'நவ சக்தியும்' தன் பல உருவினும் தமிழை மறந்துவிடவில்லை.

அண்மையில் தோன்றிக் களியாட்டமாடும் 'ஆனந்தவிகட'னில், தமிழிலக்கியப் பகுதியொன்று இடைவிடாது வருவதும், மேலட்டையில் தீட்டியுள்ள ஓவியம் தமிழிலக்கியத் தொடர்பான பொருள்களைக் குறித்

திருத்தலும், படிப்போர் உளங்கொள்வாராயின், பெரிதும் தமிழ்ச் சுவையைப் பரவச் செய்வனவேயாகும். இவ்வினிய இருபகுதிகளும், அவ்விதழில் காணும் ஏனைய பகுதிகளிடையில், பறையொலியிற்பட்ட யாழொலிபோன்று ஒடுங்கியிருப்பதாகவே யாம் கருதுகின்றுமெனி னும், செய்யுந்தொண்டைப் போற்றுமலிருக்கமுடியாது.

கழகங்களும், வெளியீடுகளும் செய்த தொண்டிவ்வாறுக, அரசிய லாரும், பல்கலைக் கழகங்களும், தமிழ்நலங்கருதி மேற்கொண்ட செயல் எவையெனஆராயப்புகின், பெரிதாகக் கண்முன்தோன்றுவன,சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தோற்ற முமேயாகும். இவற்றிற்கடுத்தபடியாக, சென்னைப் பல்கலைக் கழகத்தார் தனித்தமிழ் வித்வான் தேர்வு ஏற்படுத்தியமையும், தமிழாராய்ச்சிப்பகுதி யொன்று நிறுவியுள்ளமையும், சென்னை அரசியலார் உயர்தரப் பள்ளி களில் ஆங்கிலந் தவிர வேறுபாடங்களை அவரவர்கள் தாய்மொழியிலும் படித்துக்கொள்ளலாம் எனச் செய்த பயனற்ற ஏற்பாடுமேயாகும். இவற்றோடு ஆங்கிலக் கலைச்சொற்களைத் தமிழ் மொழிபெயர்ப்போடு வெளியிட்ட துண்டு வெளியீடுகளையும் வேண்டுமாலை சேர்த்துக் கொள்வோம். அரசாங்க வெளியீடுகள் தமிழெழுத்தில் வருகின்றவை யெல்லாம், ஏதோ ஒரு மொழிபோன்று ஒலிக்கின்றமையின் அவற்றைத் தமிழென்று கொண்டு இவ்வாராய்ச்சியில் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டுவதில்லை யென்றே கருதுகின்றோம்.

இவற்றுள், முதற்கண்ணதாகத் தமிழகராதியை நோக்குவோமாயின், அதற்கான செலவிற்கும், காலத்தாழ்வுக்கும் ஏற்றநிலையிலில்லாது, வெளிவந்தவுடனே, 'சூலுறுகுன்றம்ஈலிமகவுயிர்த்த'தென யாவரும் ஏமாற்றமடைய நேர்ந்தது. அகராதி பதிப்பிக்கும்முறை நன்குகைவந்து தெளிந்த இக்காலில், இருபத்துமூன்றாண்டுகளுழைத்து, 4,10,000 ரூபா செலவிட்டு, 'இன்னும் முற்றுப்பெறவில்லை'என்ற பல்லவியுடன்இவ் வகராதிவருமாயின், இது, தமிழ்நாட்டின் தவக்குறையும், தமிழ்மக்க ளின்கருத்தின்மையுமன்றே? இவ்வகராதியில்,சொற்களை அமைத்துள்ள முறையோ, ஒருமுறையிலும் சேர்ந்ததாகத் தெரியவில்லை. தமிழுக்குத் தமிழிலெழுதியுள்ள பொருள் ஆங்கிலத்தினின்றுதான்தெரிந்துகொள்ள வேண்டிய இடம் பலவாகும். ஒருக்கால் இவ்வகராதி, ஆங்கிலேயருக் காகத்தான் தொகுக்கப்பெற்றது எனக் கூறுவாரேல், அவர்களுக்கு, இன்றியமையாத 'உச்சரிப்புமுறை' எவ்வாறு கையாளப் பெற்றிருக் கின்றதென்பதையும் அதன் பயனையும், ஒரு அறிஞர் முன்னமே எழுதி யுள்ளமையால் நாம் இங்குக்குறிப்பிடவில்லை. ஆன்றோராட்சி காட்டி யுள்ள முறையோ, ஒருபடித்தாக இல்லை. இவற்றோடுஅமையாது,காணப் படாதசொற்களும், சொற்பொருள்களும் பல. ஒருக்கால் அவை இன் னும் வெளிவராத இருபதினாயிரம் சொற்களுள் இருப்பினுமிருக்கலாம். சுருங்கக்கூறின், வேறொரு அகராதி வெளிவந்தாலன்றி, இவ்வகராதி யால், அகராதியாற்பெறும் பெரும் பயனைத் தமிழ்மக்கள் பெறுரென்று

திண்ணமாகக் கூறலாம். இவ்வகராதி இலக்கிய அகராதியா? வழக்கியலகராதியா? இழிவழக்ககராதியா? மரபகராதியா? குறுகில அகராதியா? எல்லாமா? இன்றேல் ஒவ்வொன்றிற் கொஞ்சமா? இவ்விருபதாம் நூற்றாண்டில் இத்தகைய அகராதியை, அரசாங்கம், பல்கலைக்கழகம் இவற்றின் கன்கொடையாகப் பெற்ற தமிழ் மக்கள், அந்தோ! அளியர்.

தமிழ்நாட்டில் ஒரு தமிழ்ப்பல்கலைக்கழகம் ஏற்படவேண்டுமென்ற ஒரு கிளர்ச்சியிருந்தகாலத்து, அக்கிளர்ச்சியை யமர்த்திவிட்டு, அதன் கிலையில்தோன்றியது அண்ணாமலைப் பல்கலைக்கழகமாகும். இது, பெரும்பாலும், சென்னைப்பல்கலைக்கழகப் பாடதிட்டங்களையொட்டியே பயிற்றி வருகின்ற தெனினும், தமிழ்மொழிப் பயிற்சிக்குத் தக்க அளவு ஆதரவளிக்கவில்லை. நம் நாட்டிலேவுள்ள சில பல்கலைக்கழகங்கள், மொழியொழிந்த பலபாடங்களையும் நாட்டுமொழியிலேயே நடத்த முன்வருவதொப்ப, இப்பல்கலைக் கழகமும் முயலவேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது இயற்கையாகும். இதன் இளம்பருவத்துள் இஃதியலாதெனினும், குறிக்கோள் மொழியொழிந்த பாடங்களைத் தமிழிலேயே நடத்தவேண்டும் என்றிருத்தலின்றியமையாதாகும். குறிக்கோள் இஃதேல், இன்றில்லாவிடினும் சில ஆண்டுகள் கழிந்தேனும் இயலாது போகுமா? இன்றேல், என்னும்? இப்பல்கலைக் கழகத்தார் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை அறிவியல் நூல்களைத் தமிழில் ஆக்குவோர்க்குப் பரிசளித்தூக்கும் கன்முயற்சியால் தோன்றும் அறிவியல் நூல்கள், அண்மையில், பரந்ததமிழகத்திற்குப் பயன்பட்டுத் தமிழ்க்கலையின் பகுதிகளாகச் சிறக்கும் காலம் சேய்மையிலாதல்வருமென்று எண்ணவேண்டிய கிலையிலேதான் இருக்கின்றோம். ஆண்டொன்றுக்கு சுமார் நாலாயிர ரூபா செலவில், ஏறக்குறைய கான்காண்டுகளாக நடைபெற்றுவரும் தமிழாராய்ச்சியின் பயனைத் தமிழுலகம் துய்க்கும் நாள் எதுவென இன்னுமறிந்திலேம்; அதன் சுவைதானும் எத்தன்மைத்தெனத் தெரிந்துகொள்ளும் பேறும் தமிழ் நாடு பெற்றிலது.

சென்னைப் பல்கலைக்கழகம் ஆண்டொன்றுக்குப் பதினாயிர ரூபாவிற்கு மேல் செலவிட்டு நடத்திவரும் தமிழாராய்ச்சிப் பகுதியினின்றும் செலவுக்குத் தக்கபயன் கிடைத்ததாகத் தோன்றவில்லையெனினும், வேங்கடராஜலு ரெட்டியாரவர்களால் வெளிவந்துள்ள கபிலர், பரணர் என்னும் தமிழ் நூல்களும், சிவராஜபிள்ளையவர்களால் வெளிவந்த தமிழர்கால அட்டவணை என்னும் ஆங்கில நூலும், குறிப்பிடத்தக்கனவாம்.

சென்ற நூற்றாண்டிற் பலவாகத் தமிழ்த் தொண்டாற்றி வந்த ஆதீனங்களின் இந்நூற்றாண்டின் தமிழ்த்தொண்டை எண்ணுமிடத்துத் திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவரவர்களின் தொண்டே சிறந்து காணப்படுகின்றது. அவர்களுக்கு மனங்கொண்ட தமிழ்நூல்கள்

நமது சங்கமும் தமிழ் வளர்ச்சியும்

சிலவற்றை அச்சிடுவித்துத் தமிழ்ப் புலவர்களுக்கு விலையின்றி வழங்கும் வள்ளன்மையும், தனித்தமிழ் வித்துவான் தேர்வில் முதலாவதாகத் தேறுபவருக்கு ரூபா 1000 பரிசாக அளிக்கும் பெருங்கொடையும் பெரிதும் பாராட்டத்தக்கனவாகும். தமிழ் மாணவர்களிற்பலர் நூல்களை ஆழ்ந்து படிப்பதற்கு இப்பெருங்கொடை துணைபுரியுமென்பதில் ஐயமில்லை. சைவமும் தமிழும் ஒருங்கே தழைக்கத்தோன்றிய குமரகுருபர அடிகளின் வழித்தோன்றிய இப்பெரியார், இத்தமிழ்ப் பரிசை ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் பெயரால் அமைத்தது, இவர்களது பரந்த வுள்ளத்தையும், கோப்பற்றையும் புலப்படுத்துவதாகும். இவர்கள் வழி காட்டிய வண்ணம் ஏனைய ஆதீனங்களும் தமிழ்வளர்ச்சியைத் திரு வுளங்கொள்ளுமேல், கந்தமிழ் அண்மையில் பெருஞ்சிறப்பெய்தலெளி தாகும்.

மேற்குறித்த பலவகைத் தொண்டுகளையும் தவிர்த்து, தனித்தனி யாகப் பழம்பணி புதுக்கியும், புதுப்பணி குயிற்றியும், தொண்டாற்றிய பெரியோர்களைப்பற்றிப் பேசுவோமாயின், பழைய நூல்களைப் பதிப்பித் தாருள், மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையரவர்கள் முதன்மை வாய்ந்தவர்களாவார்கள். சென்ற நூற்றாண்டிலே தொடங்கி, இன்று வரை, தம் விடாமுயற்சியால், உயர்ந்த பதிப்புக்களுக்கு எடுத்துக் காட்டாகப் பதிப்பித்துள்ள நூல்கள் பலவாகும். சிந்தாமணி, சிலப்பதி காரம், மணிமேகலை, பெருங்கதை முதலிய காப்பியங்களும், பத்துப் பாட்டும், எட்டுத்தொகையுள் குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், புறநானூறு என்ற தொகைகளும், பிற்காலத்திய கலம் பகம், தூது, புராணம் முதலியவற்றுட் பலவும், இவர்களது பேருழைப் பினாலேயே வெளிவந்தனவாகும். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாறும், பலகட்டுரைகளும் இவர்கள் எழுதியனவாகும். இவர்கள்பால், கல்லூரியினும், தனித்தும், தமிழ்பயின்ற மாணவர்கள் பலராவர். குறுந்தொகையை முதன்முதலாகப் பதிப்பித்தவர், சௌரிப் பெருமாளரங்கன் அவர்களாவர். அகநானூறு என்னும் அரியதொகை, இராஜகோபாலையங்காரவர்களால் பதிப்பிக்கப்பெற்றது. நற்றிணை என்னும் அரியநூலைப் பதிப்பித்த பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்கள், பதிப்பாசிரியர் என்ற நிலையோடு, அந்நூலுக்கு உரை யாசிரியர் என்னும் பெருமைக்கும் உரியவராகின்றார். தொல்லா சிரியர்கள் உரையோடு ஒத்த நிலையில் வைக்கக்கூடிய சங்க நூலுரை, இவர்கண்ட நற்றிணை உரையே யெனக் கூறுவோமாயின், மறுப்போர் பலராகார். இவ்வுரையேயன்றி, இவரெழுதிய தூது கோவை முதலிய பிரபந்தங்கள் பலவாம். பழையது விடுதூது என் னும்நூல் காலநிலையை யொட்டியெழுந்ததாகும். சிலப்பதிகாரமுறை யில் இவர் தொடங்கிய வீரகாவியம் என்னும் நூல், முற்றுப்பெறுதது தமிழிலக்கியத்திற்கு ஒரு குறையென்றே கூறலாம்.

பவானந்தம்பிள்ளையவர்களும், நமசிவாயமுதலியாரவர்களும் அச் சிட்ட நூல்கள் பலவாயினும், குறிப்பிடத்தக்கவை, யாப்பருங்கல

வுரையும், தொல்காப்பிய இளம்பூரணவுரைகளிற் சிலபகுதிகளுமேயாம். தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணருரையும், திருக்குறள் மணக்குடவருரையில் ஒரு பகுதியும், வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் அச்சிட்டுள்ளார். இவர்களது தமிழன்பு பாராட்டத்தக்கதேயாம்.

இக்காலத்தெழுந்த புதுநூல்கள், பெரும்பகுதியும் பள்ளிக்கூடப் பாடபுத்தகங்களும், மேனாட்டுக்கற்பனைக் கதைகளைத் தழுவிய சிறப் பில்லாக் கட்டுக் கதைகளுமே ஆயினமையின், அவற்றை நம் ஆராய்ச்சி யிற் சேர்த்துக்கொள்ளவேண்டுவதில்லை. வடமொழியினின்று உரை கடையில் மொழிபெயர்க்கப்பெற்ற பெருங்காப்பியங்களாகிய இராமா யண பாரதங்கள், மொழி பெயர்த்தோர் சிறப்பு எத்துணையாயினும், தமிழிலக்கியவரிசையில் இடம்பெறத்தக்கன அல்லவென்றே யெண்ணு கின்றேம். வடமொழியினின்று மொழிபெயர்க்கப்பட்ட நூல்களுள், 'காளிதாசன்' என்ற இதழில் மொழி பெயர்க்கப்பட்ட நாடகங்களும், மறைமலையடிகள் மொழிபெயர்த்த சாகுந்தலமும், பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள் மொழிபெயர்த்த மண்ணியல் சிறு தேரும் சிறப்பாகக்குறிப்பிடத்தக்கனவாம். வடமொழி சமயதத்துவ நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தோருள் தஞ்சைக் குப்புசாமிராஜர், பூவை கலியாணசுந்தரமுதலியார், அம்பலவாண நாவலர், தேவகோட் டை வேதாகம சங்கத்தார் முதலியோர் குறிப்பிடத்தக்கவராவார்கள். இராமகிருஷ்ண மடத்தாரும் இப்போது சில முயற்சிகள் செய்து வருகின்றனர். இவர்கள் வெளியிட்டுள்ள 'இராமகிருஷ்ணர்' வரலாறு நல்ல தமிழ்நடையில் வெளிவந்துள்ள வாழ்க்கை வரலாறுகளில் ஒன்று கும்.

ஆங்கிலமொழிப் பயிற்சி மிக்க இக்காலத்து, அவ்விலக்கியத்திற் சிறந்து காணப்படும் நூல்கள், நம்மொழியில் மொழிபெயர்க்கப்பெறும் என்று, எவரும் எண்ணக் கூடியது இயற்கையாகும். அத்தகைய முயற்சிகளை நம்மக்கள் ஒன்றும் அதிகமாக மேற்கொண்டு விடவில்லை. இந்நூற்றாண்டின் முற்பகுதியில், வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர் களால் மொழிபெயர்க்கப்பெற்ற, ஆங்கிலக்கவி மில்டனர் எழுதிய துறக்க நீக்கத்தின் பகுதிகளும், கள்ளபிரான் பிள்ளையவர்கள் மொழிபெயர்த்த வெனிஸ் வர்த்தகன் என்னும் செகப்பிரியர் நாடகமும், அ. மாதவைய ரவர்கள் மொழிபெயர்த்த ஒத்தலோ என்னும் செகப்பிரியர் நாடகமும், செய்யூர் முத்தையா முதலியார் தழுவியெழுதிய 'இராஜராஜேசுவரி' என்னும் செகப்பிரியர் நாடகமும், (As you like it) வேறுசிலர் மொழி பெயர்த்த சிறு செய்யுட்களுமன்றிச் சிறப்பாகக்குறிப்பிடத்தக்கன இது காறும் வேறொன்றும் காணேம். வங்காளமொழியினின்று, பனங் குளம், சந்திரசேகரன், ஆனந்தமடம், பரிமளா என்னும் நூல்கள் மொழிபெயர்க்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாம். இவற்றை மொழிபெயர்த்தார் திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்களும், மகேச குமார சர்மா அவர்களும், கிருஷ்ணசாமி சாஸ்திரியாரவர்களும் ஆவார்கள்.

அண்மையிலும் அம்மொழியினின்று, இரவீந்திரநாததாகூர் அவர்கள் நூல்களும், வேறு சிலர் நூல்களும் மொழிபெயர்க்கப்பெற்று வருதல் மகிழத்தக்கதாம்.

புதுவதாக எழுந்த உரைநூல்களுள், இலக்கியத்தில் இடம் பெறத் தக்கனவாகக் கூறக்கூடியவை, மறைமலையடிகள் எழுதியுள்ள 'சிந்தனைக் கட்டுரைகள்', 'கோகிலாம்பாள் கடிதங்கள்' 'மாணிக்கவாசகர் கால வாராய்ச்சி' முதலிய நூல்களும், பரிதி மாற்கலைஞர் எழுதிய 'மதி வாணன்'. என்னும் நூலும், செல்வகேசவராய முதலியார் அவர்கள் எழுதிய கதைகளும் கட்டுரைகளும், அ. மாதவையர் அவர்கள் எழுதிய பத்மாவதி, விசயமார்த்தாண்டம் முதலிய கற்பனைக் கதைகளும், பண்டித, நடேச சாஸ்திரியார் அவர்கள் எழுதிய பல கற்பனைக் கதை களும், வான்மீகத்தைத் தழுவியெழுதிய இராமாயணமும், பொன்னு சாமிப் பிள்ளை அவர்கள் எழுதிய சில கற்பனைக் கதைகளும், உலக நாதபிள்ளை அவர்கள் எழுதிய 'கன்றுங்கனியுதவும்' என்னும் நூலும், முத்துசாமி ஐயரவர்கள் எழுதிய பத்மினி முதலியநூல்களுமாம். இவர் செய்யுள்கள் சிலவும், ஆராய்ச்சிநூல்கள் சிலவும் எழுதியுள்ளார்.

இக்காலத்தெழுந்த ஆராய்ச்சிநூல்களுள், தமிழ் மொழி, இலக்கிய வரலாறு, புலவர்கள் வரலாறு முதலியவற்றைப் பொறுத்தமட்டும் கருதத்தக்கவை, செல்வகேசவராய முதலியாரவர்களெழுதிய தமிழ், திருவள்ளுவர், கம்பர் என்பவையும், பரிதி மாற்கலைஞரவர்களெழுதிய தமிழ்மொழி வரலாறும், M. S. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் ஆங்கிலத்திலெழுதிய தமிழிலக்கிய வரலாறும், பண்டித வேங்கடசாமி நாட்டாரவர்களெழுதிய நக்கீரர், கபிலர் முதலிய நூல்களும், சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களெழுதிய தமிழ்ப் புலவர்கள் வரலாறுகளும், சோமசுந்தர பாரதியாரவர்களெழுதிய திருவள்ளுவர், தசரதன் குறையும் கைகேயி நிறையும், சேரர்தாயமுறை முதலிய நூல் களும், மறைமலையடிகளெழுதியுள்ள திருவள்ளுவர், பட்டினப் பாலையாராய்ச்சி, முல்லைப்பாட்டாராய்ச்சி, முதலியவைகளும், அவர் களால் தனித்தே இந்நூற்றாண்டின்றொடக்கத்தினின்று வெளி யிடப்பட்டுவரும் ஞானசாகரம் என்னுந்திங்களிதழிற் காணப்பெறும் பல அரியகட்டுரைகளும், K. S சீனிவாசபிள்ளை அவர்கள் எழுதிய தமிழ் வரலாறும், துரைசாமிபிள்ளை அவர்கள் எழுதிய சங்ககால வரலாறும், கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழுதிய தமிழிலக்கிய வரலாறும், ஆங்கிலத்தில், M. சீனிவாச ஐயங்காரவர்களெழுதிய தமிழாராய்ச்சிகளும், P. T. சீனிவாச ஐயங்காரவர்கள் எழுதிய தமிழாராய்ச்சிகளுமேயாகும். பழம் புலவர்கள் காலங்களை ஆராய முயலும் நூல்களுள்ளும் கட்டுரைகளுள்ளும், ரா. இராகவையங்கார் அவர்கள், மு. இராகவையங்கார் அவர்கள், இலக்கணவிளக்க பரம்பரை சோமசுந்தர தேசிகர் அவர்கள் முதலியோர் எழுதியுள்ளன குறிப் பிடத்தக்கனவாம். மாகறல் கார்த்திகேய முதலியாரவர்களெழுதிய

மொழி நூலும் அதனோடு வைத்தெண்ணக் கூடிய சில ஆராய்ச்சிகளும் அவ்வாசிரியர்களது அழுத்தமான தமிழ்ப் பற்றையும் ஆர்வத்தையுமே வெளிப்படுத்துவனவாகும்.

காட்டுவரலாற்றைக் குறித்து எழுந்த நூல்களைப் பற்றிப் பேசப் புகுமுன், அவற்றிற்கு அடிப்படையான கல்வெட்டு முதலியவற்றை ஆராய்ந்து வெளிப்படுத்திய அரசாங்கத்தினரையும், அவ்வுயரிய பணியை மேற்கொண்டு நடத்திய பெருந்தகையாளர்களாகிய, உல்ஷ், வெங்கையர் அவர்கள், கிருஷ்ணசாஸ்திரி அவர்கள், சுப்பிரமணிய ஐயர் அவர்கள், கோபிநாதராயரவர்கள் முதலியவர்களையும் மனமார வாழ்த்த வேண்டியிருக்கிறது. இவர்களுள் கோபிநாதராயர் அவர்கள் சோழவம்சசரித்திரம் என்னும் நூலைத் தமிழில் எழுதியவராவார். உலகநாதபிள்ளை அவர்கள் எழுதிய சோழன் கரிகாலனும் மு. இராகவையங்கரவர்களெழுதிய சேரன் செங்குட்டுவனும் சதாசிவப் பண்டாரத்தாரவர்கள் எழுதிய குலோத்துங்கன், பாண்டியர் வரலாறு என்பனவும் இவ்வரிசையில் சேர்க்கத்தக்கனவாகும். இங்கெறியில் அரசாங்கப் பழங்கலையாராய்ச்சிப் பகுதியார் (Archaelogcial Department) ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள அறிக்கைகளும், படிகளும், மிகச்சிறந்தனவாகும். ஆங்கிலத்தில் வெளிவந்தவற்றுள், இந்தியர் தொன்மை தொகுப்போன் (Indian Antiquary) இந்தியக் கல்வெட்டு (Epigraphia Indica) கர்நாடகக் கல்வெட்டு (Epigraphia Carnatica) முதலிய இதழ்களுட் காணும் கட்டுரைகளும், அறிஞர் கிருஷ்ணசாமி ஐயங்காரது, பண்டை இந்தியா (Ancient India) முதலிய நூல்களும், நீலகண்ட சாஸ்திரியாரது, சோழர்கள் (Cholas) பாண்டியர்கள், (Pandyas) என்ற நூல்களும், துப்ரீல் எழுதிய பல்லவர்கள், (Pallavas) தெக்கணசரித்திரக் குறிப்புகள், (Dekkahn) முதலிய நூல்களும், கோபாலன் அவர்களது பல்லவர் (Pallavas) என்னும் நூலும், K. G. சேஷையரெழுதிய சேரர் (Cheras) என்னும் நூலும் காட்டுவரலாறுணர்தற்குப் பெரிதும் துணை புரிவனவாகும்.

காடக அரங்கு பலவாறு சீர்திருத்தப் பெற்றும் பரவியும் வருகின்ற இக்காலத்து, உயர்ந்த தமிழ் காடகங்கள் ஒன்றும் எழுந்ததாகக் கூறமுடியவில்லை. சம்பந்தமுதலியாரவர்கள் பலகாடகங்களெழுதியுள்ளாரேனும் அவை தமிழிலக்கியத்துள் புகத்தக்கனவென்று யாம் கருதமுடியாது. இலக்கியத்தைச்சாரும் சிறப்புடைய காடகங்களுள் மனோன்மணியம் அளித்த ஊக்கத்தால் அதைப்பின்பற்றியெழுந்த, பரிதிமாற்கலைஞரெழுதிய மானவிசயமும் முத்துசாமிஐயரெழுதிய விசுவநாதமுமே கமக்குத்தோன்றுகின்றன. அண்மையிலெழுந்த, கடராசபிள்ளையவர்களெழுதிய புகழேந்தி என்னும் காடகமும் இவ்வகையைச் சாரலாம். காடக இலக்கணத்தை வகுத்துரைத்த நூல்கள், பரிதிமாற்கலைஞரது காடகவியலும், விபுலாநந்த அடிகளெழுதிய மதங்கசூளாமணியுமேயாம்.

நமது சங்கமும் தமிழ் வளர்ச்சியும்

இலக்கண ஆராய்ச்சியிலும், காலத்திற்கேற்ப இலக்கணத்தை வகுக்கும் முறையிலும், நம்மவர் ஒரு சிறு முயற்சியுஞ் செய்ததாகத் தெரியவில்லை. இலக்கணப்பகுதியுள் பெரிதும் உழைத்துத் தம் நுண்ணுணர்வினால் அரிய பல பொருள்களை வெளியிட்டவர், சோழவந்தான் அரசஞ் சண்முகம்பிள்ளை யவர்களே யாவர்கள். இவர்க ளெழுதியுள்ள பாயிரவிருத்தியும், நுண்பொருட் கோவையும், தமிழி லக்கணப் பயிற்சிக்குப் பெரிதும் பயன்படுவனவாகும். சில ஆண்டு களுக்கு முன்பு தொல்காப்பியம், சொல்லதிகாரத்தின் பலவுரைகளையும் ஒப்புநோக்கிச் 'சொல்லதிகாரக்குறிப்பு' என்னும் பெயரால், டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரியாரவர்கள் ஓர் நூல் வெளியிட்டனர். அந்நூலை ஆராயுமுகத்தான் மன்னார்குடி இலக்கணப் புலவர், நா. சோமசுந்தரம் பிள்ளை யவர்கள், தமிழ்ப்பொழில் வழி வெளியிட்ட ஒரு பெரிய இலக்கண ஆராய்ச்சி, தமிழிலக்கணக் கடல்கடைந்து ஈந்த ஓரமுதம் போன்று நிலைநிற்கின்றது. சொல்லதிகாரங் கற்பார்க்குப் பிள்ளையவர்களது ஆராய்ச்சி ஓர் ஆசிரியனாக நின்று துணைபுரியு மென்பதில் ஐயமில்லை. இவர்களது இலக்கணப் பேரறிவையும், ஆராய்ச்சித் தெளிவையும், தக்கபடி தமிழ்நாடு பயன்படுத்திக்கொள்ள வில்லையென்றே கூறலாம்.

புதுவதாக எழுந்த செய்யுள்களையும், செய்யுள் நூல்களையும் நோக்குவோமாயின், அவை மிகவும் அருகியே காணப்படுகின்றன. சென்ற நூற்றாண்டுகளைப்போல் அழகுமிக்க தனிச்செய்யுட்கள் பல காணப்படவில்லை. இக்காலத்திய தனிச்செய்யுட்களை யெல்லாம் வாழ்த்துக்கவி, சாற்றுக்கவி, சரமகவி என்ற மூன்று பிரிவுகளுள் அடக்கிவிடலாமென்றே கருதுகின்றோம். தொல்லோர் முறையை யொட்டி யெழுந்த செய்யுள் நூல்களுள், வே. ப. சுப்பிரமணிய முதலியா ரவர்கள் எழுதிய அகலிகை வெண்பா, கோம்பிவிருத்தம், நெல்லைச் சிலேடை வெண்பா முதலியனவும், சேதுகாவலர் வாயிற்புலவர் மகா வித்துவான் ரா. இராகவையங்காரவர்களெழுதிய பாரிவெண்பா, புவி யெழுபது, தொழிற் சிறப்பு முதலிய நூல்களும், கந்தசாமிக் கவிராய ரியற்றிய குமண சரித்திரமும், சோழவந்தான் சண்முகம் பிள்ளை யியற்றிய இன்னிசை யிருநூறு, ஏகபாதநூற்றந்தாதி, முதலிய நூல் களும், சதாவதானம் சுப்பிரமணிய ஐயரவர்கள் எழுதிய இராமாயண வெண்பா, தலபுராணங்கள் முதலியனவும், பாம்பன் சுவாமிகள் எழுதிய பல பிரபந்தங்களும், சிறப்பாகக் குறிக்கத் தக்கனவாகும். இப்புலவர்க ளெல்லாம் பாடிய தனிப்பாடல்கள் பல இனிமை தரத்தக்கனவாக இருக்கின்றன. புதிய முறையில் பாட்டுக்களைப் பாடத்தொடங்கினவர் இப்பொழுது தமிழகம் புகழும் சுப்பிரமணிய பாரதியாரவர்களே யாவர்கள். பழம்புலவர்களைப்போல் பழைய முறைகளோடு நின்று விடாது, மக்களுக்கு ஊக்கமும், உணர்வும் மிகுமாறு இக்காலத்து யாவருடைய உள்ளத்திற்கும் அருகிலிருக்கும் நாடு, மொழி, கல்வி, வீரம் முதலியவற்றையே பாடுவாராயினர். பல்லோரும் பாடிப்

நமது சங்கமும் தமிழ் வளர்ச்சியும்

பயனடையவேண்டுமென்ற ஓர் பரந்த அன்புடையவராகலின் மிக எளிய நடையில் தமிழ்ச்சுவை கெடாது இனிமை மேம்பட தம் பாடல்களை இயற்றுவாராயினர். இவர் பாடல்கள் தமிழ் மக்களுக்கு ஓர் புத் துணர்வு கொடுத்து வருகின்றனவென்று கூறலாம். ஓர் உண்மைக் கவிஞன் தன்னுள்ளத்திற் கேற்பக்கொண்ட தனியமைப் புடையன வாகலின், இவர் பாடலைப் பின்பற்றி ஏனையோர் எழுதப் புகுவன வெல்லாம் வீண் முயற்சிகளென்றே கூறலாம். இவர் பாடலுட் பல இக்காலத்திய உணர்ச்சியினால் பாராட்டப் பெறுவனவாகப் பலர் எண்ணினும் மக்களுக்கு என்றும் இன்பம் பயக்கத்தக்க கவிதை யமைந்த பாடல்களும் இவர் பாடற்றொகுதியிலுள்ளன வென்பதை காம் வற்புறுத்த விரும்புகிறோம். இவரது இயற்கைக் கவியுள்ளம் தமிழ் மக்களின்புறக்கணிப்பாலேயே தன் ஆற்றலை ஏற்றபடி வெளிப் படுத்த வில்லை யென்றே எண்ணுகிறோம். தேசிக விநாயகம் பிள்ளை யவர்களது கவிகள் புதுமுறையிலமைந்த இனிய உண்மைக் கவிகளாம். இத்தகைய செய்யுள்கள் மலியுமாயின் பெரும்பாலரும் கவிச்சுவை நுகர வதுவாகுமெனக் கருதுகின்றோம். நாட்டின் அரசியலுணர்ச்சியால் வெளிவந்த கவிகளுள் அசலாம்பிகையம்மையாரெழுதிய காந்திப் புராணம், திலகர்மான்மியம் முதலியன ஏற்றுக்கொள்ளத்தக்க செய்யுள் நடையை யுடையன. ஐ. சாமிநாதமுதலியாரவர்கள் எழுதியுள்ள பல செய்யுள் நூல்களும் பொருட்செறிவும் சொற்பொலிவும் உளவாயிருந் தும் இதுகாறும் சரவித்திரி வெண்பா நீங்கலாக ஏனைய வெளிவராதது கவலத்தக்கதேயாம். ஒரே அச்சில் வார்த்ததுபோன்ற பாடல்கள் இங்குமங்கும் சில வந்துளவேனும் அவை யெல்லாம் யாம் ஏற்றுக் கொள்ளுந் தரத்தனவல்ல.

தமிழ் நூல்களை ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கும் முயற்சி இக்காலத்து அதிகமாகக் காணப்பெறவில்லை. தக்கவழியில் மொழி பெயர்க்கப்பட்டதெனக் கூறுவதற்கு நம்முன்னே தோன்றுவன வி. வி. எஸ். ஐயர் அவர்கள் மொழிபெயர்த்த திருக்குறளும், ஜஸக் தம்பையா மொழிபெயர்த்த தாயுமானவர் பாடற்பகுதிகளும், நல்லசாமி பிள்ளையவர்கள் மொழிபெயர்த்த சித்தாந்த நூல்களுமேயாம். போப்பையரவர்கள் மொழிபெயர்ப்பு முன்னமே குறிக்கப்பெற்றுள்ளது.

இசைத்தமிழ் வளர்ச்சியைக் கருதுமிடத்து ஆபிரகாம்பண்டித ரவர்களும் இலக்குமணபிள்ளையவர்களுமே தனித்து நிற்கின்றனர். இசைக்கலையைப்பற்றிய எல்லாச் செய்திகளையும் அடக்கிக் கருணாமிர்த சாகரம் என்னும் ஒரு பெரிய நூலைப் பண்டிதர் வெளியிட்டுள்ளார். இலக்குமணப்பிள்ளையவர்கள் பல இசைப் பாடல்களையும் நாடகங்களையும் செய்யுள்களையும் நல்ல தமிழில் எழுதியும் பல மாணவர்களுக்குத் தாமே அவற்றைப் பயிற்றியும் இசைத்தமிழை வளர்த்து வருகின்றார். சரவணப்பிள்ளையவர்கள் எழுதிய கண்ணப்பர் சரித்திரக் கீர்த்தனையும், கந்தசாமி சுவாமிகள் எழுதிய மாணிக்கவாசகசுவாமிகள்

சரித்திரக் கீர்த்தனையும் இப்பகுதியின்பாற் படுவனவாகும். பண்டைத் தமிழிசை யியல்பினையும் சுர அமைப்பினையும் இசைக்கருவிகளையும் பற்றிய தம் ஆராய்ச்சிமுடிபினை விபுலாநந்த அடிகளார் நம் சங்கத்திலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தும் எடுத்துரைத்துள்ளார்கள். அவர்களது ஆராய்ச்சி முடிபுகள் நூலுருவாக வெளிவருமாயின் தமிழிசை வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுமென்பதில் ஐயமில்லை.

மேற்குறித்த பல வழியாலும் தமிழ்த் தொண்டாற்றிய பெரியார்களைத் தவிர தங்கள் பேரன்பு உலையாவூக்கம் நுண்ணறிவு முதலிய அருங்குணங்களால் தமது தோற்றமே பல்லோரும் தமிழ் கற்க ஊக்கம் அளிப்பதாக நின்ற பெரியோர்களுள் தலை சிறந்தவராக நாம் கருதக் கூடியவர் பா. வே மாணிக்க நாயக்கரவர்களாவார்கள். தமிழ் ஒலியிலக்கண நுட்பங்களை யெல்லாம் தம் நுண்ணுணர்விஞல் எடுத்துக் காட்டியும், எவ்வகை மொழியையும், ஒலியையும் தமிழ்வரிவடிவினுல் எழுதிக்காட்டியும், பிறமொழிக் கலப்பு ஒரு சிறிதுமின்றித் தமிழ் மொழியிலேயே எவ்வகைக் கருத்துக்களையும் வெளியிடலாமென்பதற்குத் தாமே எடுத்துக்காட்டாக நின்றும், தம்மோடு கூடிய அன்பரெல்லாம் இல்லத்தில் உரையாடும்போது கூட தனித்தமிழிலேயே பேச வேண்டுமென்பதைப் பல வழியாலும் வற்புறுத்தியும், தமிழ்நாட்டின் பரப்பெல்லாம் தாமே வலியச்சென்று தமிழ்மொழியின் தனிப் பண்புகளையும் ஆற்றலையும் யாவருமறிய எவரும் மறுக்கவொண்ணு ஆராய்ச்சியால் விரிவுரையாற்றி நிலைநாட்டியும்வந்த இப்பெரியாரைத் தமிழகம் ஒருநாளும் மறக்க முடியாது. மேல்நாட்டுக்கலைச் சொற்களை யெல்லாம் தனித் தமிழில் மொழிபெயர்த்துக் காட்டியதோடு எவ்வாறு மொழி பெயர்ப்பதென்பதற்கு இலக்கணம் வகுத்தவரிவரேயாவார். தமிழெழுத்துக்களின் மறைநிலை, ஒலியிலக்கணக் குறிப்புக்கள், அஞ்ஞானம், வான்மீகரும் கம்பரும், தமிழகத்தோற்றம் என்னும் சில சிறு ஆராய்ச்சிகளையன்றி இவரது பேருணர்விஞலும் உழைப்பிஞலும் கிடைத்த பயனை யெல்லாம் தமிழகம் துய்க்க இயலாதிருப்பது வருந்தத் தக்கதாகும். இவர்கள் இன்னுஞ் சில காலம் இருந்திருப்பார்களேல் நம்மொழி பல நன்மைகளை அடைந்திருக்கக்கூடும்.

இக்காலத்து, யாழ்ப்பாணம், இலங்கை, பர்மாமுதலிய இடங்களில் தமிழின் ஆக்கங்கருதி செய்துவந்த பல முயற்சிகளும் போற்றத்தக்கனவாகும்.. தமிழகத்தைவிட மேற்கண்ட நாடுகளில் தமிழ்த்தொண்டு அதிகமாகவே யிருந்து வருகிறது. விரிவஞ்சி இங்கு எழுதவியலவில்லை. இலங்கையில், Sir. P. இராமநாதன் அவர்கள், Sir. A. அருணாசலம் அவர்கள், ஸ்ரீகந்தர் அவர்கள் முதலியவர்களுடைய ஆதரவு போற்றத்தக்கதாகும்.

இத்தகைய தமிழகத்து, தமிழின் தனிநிலை, தொன்மை, செம்மை முதலிய உயரிய பண்புகளை நன்குணர்ந்து, மக்களனைவரும் இவ்வுயர்வை யேர்ந்து பயனடையவேண்டுமென்னும் விருப்பத்தினுலும், உலக

நமது சங்கமும் தமிழ் வளர்ச்சியும்

மொழிகளுள் உயர்மொழியாய் வீற்றிருந்த தமிழ்மொழி மீண்டும் அவ் வுயர்வைப் பெறவேண்டுமென்னும் ஆராத காதலினாலும், தமிழ்மக்கள் கலைகலம் முதலிய எல்லா நலங்களையும் பெற்று உலகமக்களுள் ஒருவ ராகக் கருதப்படவேண்டு மென்னும் கருத்தினாலும் நம் சங்கம் 1911 வது ஆண்டு வைகாசித்திங்கள் முதல் நாள் சில இளைஞர்களால் நிறுவப் பெற்றது. தமிழின் தனிநிலையைப் பாதுகாக்கப் பற்பல அறிஞர்கள் தனித்தனியே முயற்சி செய்துள்ளாரேனும் அப்பணியை முதற்கடமை யாகக் கொண்ட சங்கமாக முதன்முதல் தோன்றியது நம் சங்கமே யாகும். பெருஞ்சிறப்புற்ற பிரஞ்சுமொழிக் கழகத்தோற்றத்திற்கும் நம் சங்கத்தோற்றத்திற்கும் ஒற்றுமையாகவுள்ளனபல. நம் சங்கம் தோன்றிய சிலகாலத்திற்குள் இதன் கூட்டங்களில் நிகழும் தனித் தமிழ் விரிவுரைகளும், அறிக்கை, அழைப்பு முதலியவற்றின் தமிழ் நடையும் தமிழ் மக்களிடத்துத் தனித்தமிழில் ஓர் ஆர்வத்தை யுண்டாக்கிப் பலரையும் தனித்தமிழைக் கையாளச் செய்தன. அதற்கு முன்பு தமிழிற் கலந்திருந்த ஆங்கில ஆரியச் சொற்களெல்லாம் தூய தமிழ்ச்சொற்களுக்கு இடந்தருவனவாயின. திருச்சிராப்பள்ளியி லிருந்த இதன் கிளையினால் ஆங்கிலக் கல்லூரி மாணவர்கள் பலரும் தமிழ் நலத்தில் ஈடுபடுவாராயினர். இவ்வாறு ஈடுபட்ட மாணவர் களுட்பலர் வெளித்தோற்றமும் ஆரவாரமுமின்றித் தமிழ்நாட்டின் பல விடங்களிலும் தனித்தமிழ் வளர்ச்சிக்குச் செய்துவரும் தொண்டுகள் பல. அரசியலாரும் பல்கலைக்கழகத்தாரும் தமிழுக்குத் தனிச்சிறப்புக் கொடுக்கவேண்டுமென்று நம் சங்கம் முறையிட்டதின் பயனை விளைந்த நன்மைகள்பல. நம் சங்கத்தின் உண்மைத்தொண்டை நன்குணர்ந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் அவர்கள் பேரவைக்கு (Senate) நம் சங்கம் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கக் கொடுத்துள்ள உரிமையே இதற்குத் தக்கசான்றும்.

நம் மாணவர்களுக்கு இளமையிலேயே தமிழில் ஆர்வம் உண்டாக வேண்டுமென்னும் விருப்பத்தினால் நாம் தொடங்கிய தொடக்கக் கல்லூரி இதுகாறும் ஆயிரக் கணக்கான மாணவர்களைப் பயிற்றி வெளியனுப்பியுள்ளதும், அம்மாணவர்கள் எத்தகைய வாழ்க்கையிலிருப் பினும் தங்கள் தங்கள் ஆற்றலுக்குத் தக்க வண்ணம் தமிழைப் போற்றிவருவதும் அளவிட்டுக் கூறக்கூடிய தொன்றன்றும். இக்கற்ற பல பிள்ளைகளையும் உண்டியும் உறையுளுங் கொடுத்து நம் கல்லூரி போற்றி வருவது தமிழ்மக்கள் அகமகிழக் கூடியதொன்றாகும்.

நம்மவரது பண்டைய மருத்துவமுறையின் சிறப்பையும், எளிமை யையும், இக்காலத்து அது அடைந்துள்ள நிலையையும் யாவரும் நன் குணர்வார். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நம்நாட்டின் நிலைக்கு ஏற்றவண்ணம் அமைந்து, மக்களைக்காத்து வந்த இம்முறை, மீண்டும் தக்க நிலையில் நம் நாட்டில் நிலைபெற்று காலவளர்ச்சிக் கேற்பத்தன் தனிநிலையிலே வளர்ந்து வருமாயின், நம்நாட்டிற்கு எவ்வளவு துணை புரியுமென்பதையும், எத்தனைகோடி ரூபாவைச் சேமித்து வைக்குமென்

பதையும் கன்குணர்ந்த நம்சங்கம், தன்னிலைக்கேற்ப ஒரு தமிழ்மருத்துவ சாலையை ஏற்படுத்தித் தஞ்சையில் பலருக்கும் நோய் தீர்த்துவருகின்ற செய்தி நம்மவருக்கு உவகையூட்டுமென்றே எண்ணுகின்றோம். இம் முறையை மீண்டும் நிலைபெறச்செய்யவேண்டுமென்பது நம் சங்க நோக்கங்களுள் ஒன்றாகும். அதற்காகும் வழியிலும் பாடுபட்டு வருகிறது.*

சங்கத்தினின்று வெளிவரும் திங்கள் வெளியீடாகிய தமிழ்ப் பொழில், பல அரிய கட்டுரைகளையுங் கொண்டு தமிழ்மொழிக்கு ஆக்கந் தேடும் முறையில் உழைத்து வருகின்றது. தொல்காப்பியம் தெய்வச் சிலையாருரை முதலிய அரியநூல்களும் சங்கத்தினின்று வெளிவந்துள்ளன. இச்சங்கநூல்நிலையத்துள் சேர்த்துவைக்கப்பட்டுள்ள பல அரிய தமிழ்நூல்களும், ஆங்கிலநூல்களும், ஆராய்சிநூல்களும் தமிழ்கற்பார்க்குப்பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

இச்சங்கத்திற்குத்துணையாயினர் பலரையும் எண்ணும்போது பெருந்தொண்டுபுரிந்து இன்று நம்மோடில்லாது புகழால் நிற்கின்ற அன்பர்களே முதலாக நம்முன்தோன்றுகின்றார்கள். இவ்வாறுதோன்றுபவர்களுள் இச்சங்கம் நிறுவிய வே. இராதாகிருட்டின பிள்ளையவர்கள் முதலாமவராவர். பலகாலுந்தன் உள்ளத்திலெண்ணி இச்சங்கத்தைத் தோற்றியவர் அவரேயாவார். தன் சிந்தையுஞ் செயலும் சொல்லுமெல்லாம் இச்சங்கத்திற்கே உடைமையாக்கியவர். இத்தகைய பெருந்துணைவர் இச்சங்கம் தோன்றிய சில ஆண்டுகளுக்குள்ளே நம்மை விட்டுப்பிரியநேர்ந்தது தமிழுக்கும் சங்கத்திற்கும் மாற்றொணாப் பெருங்குறையாகும். இச்சங்கத்தின் தொடக்க காலத்திலிருந்த எளியநிலையில் தம் உயர்வெல்லாம் எண்ணிவிலகியிராது, சங்கத்தோடு சேர்ந்து பலவாறு ஊக்கமளித்துவந்த அரித்துவாரமங்கலம் கோபாலசாமி ரகுநாத ராஜாளியார், தமிழ்வள்ளல், பெத்தாச்சி செட்டியார், சிதம்பரம்பிள்ளை ஆகிய புரவலர்களும், பண்டிதர் சவரிராயபிள்ளை, ஐ. சாமிநாதமுதலியார், தொல்காப்பியத்திற்குப் புத்துரை வகுத்துவந்த சிங்காரவேலு முதலியார், வையை. சுப்பிரமணிய ஐயர், சிவ. சோலைமுத்துப்பிள்ளை முதலிய புலவர்களும் நம் சங்கத்தின் இளமையிலேயே இறைவனடி சேர்ந்தது தமிழ் செய்த தவக்குறையாகும். இப்பெரியார்கள் போலவே பலவழியாலும் சங்கத்திற்கு உற்ற துணையாயிருந்த பூண்டி அப்பாசாமி வாண்டையாரவர்கள் காலஞ்சென்றமையும் இரங்கத்தக்கதேயாம். நமது உறுப்பினருள் திருச்சிராப்பள்ளிக் கிளையமைச்சர் இராம. கடேசபிள்ளை, மாணிக்க நாயக்கர், சென்னைமாகாண அமைச்சராகவிருந்த ஆரோக்கியசாமி முதலியார், பண்டித பாலசுப்பிரமணிய பிள்ளை, தா. பி. சோமநாதாரவ் முதலியோர் காலஞ்சென்றமை பெரிதும் வருந்தத்தக்கதாகும். சங்கத்தின் விழாக்காலங்களிலெல்லாம் கேட்போருளங் கனிய, தமிழ்த்தெய்வவணக்கத்தை இன்னிசையோடு இருபத்துநான் காண்டுகளாக இடைவிடாது பாடிவந்த உண்மைத்தமிழ்த் தொண்டர்

கூடலூர். வே. இராமசாமிவன்னியரவர்களது இன்னிசையை இனி கேட்பதற்கில்லையே என்பதை எண்ணுந்தோறும் நம்மவருள்ளம் வருந்தாதிராது. மேற்குறித்தார்போன்றே பல்வகையாலுந் தொண்டாற்றி மறைந்த அன்பர்களது பிரிவு எம் உள்ளத்தை அலைக்கின்றது. ஒவ்வொருவரையும் தனித்துக்கூறவியலாமைக்கு வருந்துகிறோம்.

இச்சங்கந்தோன்றிய காலந்தொட்டு இடையீடின்றிப்பலவழியாலும் சங்கத்திற்கு உழைத்துவரும் அ. கணபதிப்பிள்ளையவர்களும், நமது சங்கப்புலவர் R. வேங்கடாசலம்பிள்ளையவர்களும், அழகர்சாமிபிள்ளையவர்களும் இராவ்சாகிப், ஐ. குமாரசாமி பிள்ளையவர்களும் உறுப்பினருள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவராவர். இவர்கள் போன்றே பலவகையாலும் நம் சங்கத்திற்கு உழைத்துவரும் அன்பர்களையும் உறுப்பினரையும் பெரிதும் பாராட்டுகின்றோம்.

காம் முற்குறித்தபலவகைத் தமிழாக்கங்கருதிய முயற்சிகளாலும், சங்கத்தின் முயற்சியாலும் விளைந்தபயன் போற்றத்தக்கதேயெனினும் காம் விரும்பும் அளவு கன்மை தமிழகத்திற்கு விளைந்துவிட்டதாகக் கூறமுடியாது. இம்முயற்சிகளால் நூறுயிரவரில் கால்வர்கூட உண்மைத் தமிழ்மகனாகிவிடவில்லை. இரண்டரைக்கோடி மக்களுடைய தமிழ் நாட்டில் எந்த தமிழாக்கங்கருதி வெளிவரும் திங்கள் வெளியீட்டிற்கேனும் ஆயிரம் உறுப்பினர்கள் இருக்கின்றார்களென்று கூறமுடியுமா? ஆங்கில இலக்கிய புத்தகங்கள் தமிழ் நாட்டில் செலவாகின்ற அளவு தமிழிலக்கிய புத்தகங்கள் செலவாகின்றனவா? தமிழ்நாடு பயனற்ற பலவழிகளில் செலவிடும் தொகையுள் ஆயிரத்திலொருபங்கு தன் உயிர்நிலையாகிய தமிழிலக்கிய வளர்ச்சிக்குச் செலவிடுகிறதென்று கூறமுடியுமா? பலவாகநடக்கும் பொதுக்கூட்டங்களில் தமிழிலக்கியம், வரலாறு முதலியவற்றை யாவரும் தெரிந்துகொள்வதற்கெனக் கூட்டப் பெற்ற கூட்டங்கள் எத்தனையென்று கூறலாம்? எத்தனையுயர்ந்த தமிழிலக்கியநூல் வெளிவரினும் ஓராண்டில் ஆயிரம் படிகள் செலவாகின்றனவா? அறிவுடைய தமிழ் மக்கள் பேசுகின்ற பேச்சிலும் எழுதுகின்ற கடிதங்களிலும் ஆங்கிலமொழியளவு தமிழ்மொழி பயிலப்படுகின்றதா? ஆங்கிலநாட்டையாண்ட அரசர்களின் வரலாறெல்லாம் அருகிருந்து தெரிந்தார்போல் கூறும் நம்மவர், அருந்தமிழ் நாட்டையாண்ட அரசர்களின் பெயர்கூடத் தெரிந்துகொள்ளாதிருப்பதை என்னென்று கூறுவேம். செகப்பிரியர் நாடகத்தால் சிந்தையை அரண்செய்யும் நம்செல்வர், சிலப்பதிகாரத்தின் சிறுமணிகூடக்காணுதிருப்பது சிறுமையோ, செருக்கோ? இவற்றையெல்லாம் நோக்கின் நம்சங்கமும் ஏனைச்சங்கங்களும் தமிழ்ப் பெரியார்களும் செய்யவேண்டியதொண்டு மலையினும் பெரிதாக இருக்கிறதென்பதை காம் கூறவேண்டுவதில்லை. இத்தொண்டையெல்லாம் பலவகையாக வகுத்து இதுகாறுஞ் செய்த தினுஞ் சிறக்க நடத்த நம் சங்கம் காத்துக்கொண்டிருக்கிறது. சங்கத்தின் எண்ணங்களையெல்லாம் பலபடியாகவும் தமிழ் நாட்டிற்குத் தெரி

வித்துள்ளோம். தமிழ்நாட்டின் கூட்டுறவிற்கேற்ப நம்சங்கம் சிறக்கு மென்பதில் ஐயமில்லை. தமிழகம் கடைக்கணிப்பதாக. நம்சங்கம் தோன்றியகாலத்தைவிட இக்காலத்து, தமிழ்ப் பயிற்சி ஒருவாறு பரவி யுள்ளதென்றே கூறலாம். தமிழ்கற்ற மாணவர்களின்தொகை சிறிது அதிகமாகவே காணப்படுகின்றது. தமிழ் மக்களுட் பலரும் தம்மொழி யையும் பழையவரலாறுகளையும் நன்கு தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவலுடையவர்களாகவே காணப்படுகின்றார்கள். பொதுக்கூட்டங் களில் தமிழில் பேசத்தெரியாதது சிறப்பு என்று எண்ணியகாலம்போக இழிவு என்று எண்ணுங்காலம் வந்துவிட்டது. அரசியல் சமூக சீர் திருத்தம் முதலிய கூட்டங்களில் நல்ல தமிழ் பேசக்கூடியவர்களும் பலர் காணப்படுகின்றனர். அறிவுநூல்களைத் தமிழிலாக்கவேண்டு மென்ற எண்ணம் பள்ளிக்கூடப் பாடங்கள் வரையிலாவது வலுப் பெற்று வருகிறது. இவையெல்லாம் மிகமிகச் சிறியவையெனினும் தக்கபடி பயன்படுத்திக் கொள்ளப்படின் நம்மொழியின் பிற்காலவளர்ச் சிக்குப்பெருந்துணை புரிவனவாகும்.

நாம் மேற்பார்வையாகப் பார்த்த அளவில் தமிழகத்தின் மொழி இலக்கியம் முதலியவற்றின் வளர்ச்சி இந்நூற்றாண்டில் இதுகாறும் சிறந்ததாகவில்லையென்பது, ஏனையமொழிகளின் வளர்ச்சியோடு ஒத்து நோக்கின் நன்கு புலப்படும். தமிழர் தாங்களே தங்கள் மொழி இலக் கியத்தின் சிறப்புக்களையெல்லாம் தெரிந்துகொள்ளாது அயர்ந்து விட்டமையின் பிறநாட்டாரும் இதன் பெருமைகளை அறிந்துகொள் ளாது, இது வதோ இந்தியநாட்டின் ஒரு மூலையில் விளங்கும் சிறு மொழியென்று எண்ணிவிட்டார்கள். இத்தகைய எண்ணம் பிறக்கவே உறங்குமில்லத்துக்கள்ளன் புகுமாறு பிறமொழிகள் இங்கு புகுந்து அரசுசெய்யத்தலைகாட்டுகின்றன. தமிழ்நாட்டிற் பெரும்பாலோர் "கள்ளரோடில்லமுடையார் கலந்திடில் வெள்ளவெளியாமென்றுந்தீபற" என்பதற்கேற்பக் கன்னமிட்டு நுழைவார்க்கு அன்னமிட்டு ஆதர வளிக்கும் பெருங்குடிகளாக வாழ்கின்றனர். தமிழ் நாட்டின் வேற்று மொழி புகுந்ததால் தமிழ்மொழிக்கு இடையூறொன்றுமில்லை யென்று பறையறைந்து கூவித்திரியும் அறியாமக்களும் தமிழ்நாட்டிற் பலருளர். உண்மைத்தமிழர் இங்கிலையில் தாங்கள் தமிழ்மொழிக்குப் பூண்டுள்ள கடனைமறவாது செலுத்துவாராக.

தம்மக்களாலேயே அறியாமையால் போற்றப்பெறுதிருக்கும் தமிழன்னையைப் பிற அறிஞர் எவ்வாறு தெரிந்துகொள்வார்கள் என்று நம்மவர் கவலைப்படவேண்டியிருக்கிறது. தமிழ்மக்கள் அறிவித்தோ, அன்றித் தாமாகவோ தமிழ்மொழியை, எந்த நடுநிலை நிறம்பாத வாய்மையறிவாளனும் தெரிந்து கொள்ள நேருமாறல், தன்னை அம் மொழிக்கு அடிமையாக்கி அம்மொழியே நாடெல்லாம் பரவவேண்டு மென விரும்புவானென்பது, யாம் அறுதியிட்டுக் கூறக்கூடிய உண்மை யாகும். நாம் இவ்வாறு கூறுவது காய்தலுவத்தலின்றி யெழுந்த

நமது சங்கமும் தமிழ் வளர்ச்சியும்*

கூற்றென்பதனையும் மொழிப்பற்றினால் கண்மூடிக் கூறுகின்றில மென் பதனையும் உண்மைக்கும் உயர்குணங்களுக்கும் உறைவிடமாய்த் திகழும் காந்தியடிகளது சொற்களால் நிலைநாட்டி இக்கட்டுரையை முடிக்கின் றோம்.

*"இந்த சச்சரவில் (டிரான்ஸ்வால் சச்சரவு) தமிழர்கள் செய்த காரியத்தைப்போல் வேறு எந்த இந்திய ஜாதியும் செய்யவில்லை. ஆதலால் வேறு யாதொரு காரணமும் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு என் திருப் தியை நன்கு உணர்த்துவதற்காக மாத்திரமாவது அவர்களுடைய புஸ்த கங்களை ஊன்றிப்படிக்க வேண்டும். சென்ற மாதம் அவர்களுடைய பாஷையைக் கவனமாகப் படித்து வந்தேன். அதைப் படிக்கப்படிக்க அந்த பாஷையிலுள்ள அழகு அதிகமாகத் தெரிகிறது. அது சுருக்கி யானதும் அமிர்தம் போன்றதுமான பாஷை. நான் படிப்பதிலிருந்து எனக்குத் தெரிவது என்னவெனில்—தமிழர்களின் மத்தியில் பூர்வ காலத் திலும் இப்போதும் அநேக புத்திமான்களும் ஞானவான்களும் இருந் திருக்கிறார்கள், முடிவில் இந்தியா முழுமையும் ஒரே ஜனங்கமாக ஏற்பட வேண்டுமானால் சென்னைராஜதானிக்கு வெளியில் உள்ளவர்களும் தமிழ்ப் பாஷையைத் தெரிந்து கொள்ளவேண்டும்"

*செந்தமிழ் தொகுதி 8, பக்கம் 214, மாடர்ன் ரிவியூவில் காந்தியடிகள் எழுதி யதை சுதேசமித்திரன் மொழி பெயர்த்து வெளியிட்டது.

எச்சம்.

திருவாளர், R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்,
தமிழ் விரிவுரையாளர், அரசர் கல்லூரி, திருவையாறு.

தமிழ்ப்பெருந் தெய்வத் தனிமுதற் புதல்வன்
தமிழ்ப்புல வோர்கள் தம்பெருந் தோழன்
தன்னலங் கருதாப் பொதுநலத் தொண்டன்
எண்ணில் சிறார்க்குக் கண்ணருள் அண்ணல்
தஞ்சைக் காந்தித் தமிழ்ச்சங் கத்திற்
குடல்பொருள் உயிரெலாம் உரிமையாக்கித்
தமிழ்த்தொண் டியற்றுஞ் சங்கத் தலைவன்
செந்தமிழ்ப் புரவலன் நற்தம தன்பன்
உமாமகேசனும் ஒளியோன் வாழியர்'

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தே, எச்சவியல் என்று ஒருபெரும் பகுதியுளது. அவ்வியலில், பெயர் வினை யிடை யுரிச்சொற்களின் பொதுவிலக்கணங்கள் பலவும் கூறப்படுகின்றன. அவ்விலக்கணங்களுள் எச்ச இலக்கணம் என்பதும் ஒன்றாகும். இவ்வெச்ச இலக்கணம் பற்றியும், இதற்கு எடுத்துக்காட்டும் உதாரணங்கள் பற்றியும் உரைகாரர்களுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகள் மிகப்பலவாகும். இன்னும், இவைபற்றி நன்னூல் முதலிய வேறு இலக்கணங்களிலும் அவற்றின் உரைகளிலும், திருக்குறளாரை முதலிய இலக்கிய உரைகளிலும் காணப்படும் வேறுபாடுகளையும் இவற்றோடு சேர்கோக்கின், மிக மிகப் பலவாகும். இவைகளையெல்லாம் தொகுத்து முடிப்பின், ஒரு தனி நூலாக முடியும். அவ்வளவிற்கெல்லாம் ஆற்றலும் காலமும் இன்மையின், அவ்வெச்ச இலக்கணம்பற்றிய கருத்து வேறுபாடுகளுள், பெரும்வேறுபாடாய மிகச் சிலவற்றையே இங்குக் குறிப்பேன் ஆயினன். இது கற்கும் மாணவர்கட்கு ஒருவாறு பயன்படும் என்பது என் கருத்து.

இவ்வெச்ச இலக்கணம் கூறுமுறைபற்றித் தொல்காப்பிய உரைகாரர்களுக்குள், இளம்பூரணர், சேனாவரையர் கச்சிணர்க்கினியர் இவர்கள் உரைகள் பெரும்பாலும் ஒத்திருத்தலின், இவற்றை ஒருவகையாகவும், தெய்வச்சிலையார் உரை இவற்றின் முற்றும் வேறுபடுதலின், இதனை வேறு ஒருவகையாகவும் கொள்ளலாம். நன்னூல் உரையாயமனிலைகாதர் உரையுள் இவ்வெச்ச விலக்கணம்பற்றிக் காட்டப்பெறும் இருவகை யுரையுள் ஒன்று இளம்பூரணர் உரையேயாகும். மற்றொன்று, இராசபவித்திரப் பல்லவதரையர் உரையென்பது. இது தெய்வச்சிலையார் உரையைப்பெரிதும் ஒத்திருப்பதொன்றாகும். (பின்னதனைக் குறிக்குமிடத்து மயிலை என்றே குறிக்கப்படும்.)

எச்சம்

தொல்காப்பியர் கூறும் எச்சம், பத்தாகும். அவர் அவற்றுள் முதல் ஏழும் ஒருவகையாகவும், ஈற்றில் மூன்றும் வேறுவகையாகவும் அமையப் பிரிக்கின்றார். அவை வருமாறு—

1. பிரிநிலையெச்சம் 2. வினையெச்சம் 3. பெயரெச்சம் 4. ஒழியிசையெச்சம் 5. எதிர்மறையெச்சம் 6. உம்மையெச்சம் 7. எனவெச்சம். 8. சொல்லெச்சம் 9. குறிப்பெச்சம் 10. இசை யெச்சம்.

"பிரிநிலை வினையே பெயரே யொழியிசை
யெதிர்மறை யும்மை யெனவே சொல்லே
குறிப்பே யிசையே யாயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்று மெஞ்சு பொருட்கிளவி"

* * * *

இங்கு விடுபட்ட சூத்திரங்களைப் பின் ஆங்காங்குக் காணலாம்.

"எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கும்
எஞ்சு பொருட் கிளவி யிலவென மொழிப."

எஞ்சுபொருட்கிளவியென்பதும் எச்சம் என்பதும் ஒன்றே. இளம் பூரணர் முதலியோர் கொள்கையின்படி, முடிவு கூறப்படாத வினை, இடைச்சொல் நிலவற்றிற்கு முடிபு கூறுவதே எச்சவிலக்கணமாகும். ஒரு சொற்றொடரில் நின்று, முடிபு வேண்டிநிற்கும் சொற்கட்கும் எச்சம் என்று பெயர்; சொற்றொடரின் வெளியில் நின்று, தம்மை வேண்டி நிற்பனவற்றை முடித்துவைப்பனவற்றிற்கும் எச்சம் என்று பெயர். சாத்தனும் வந்தான் என்பதிலுள்ள உம்மை, ஒரு எச்சம்; இது முன்பு கொற்றனும் வந்தான் என்பதனுன்முடியும். இது முன்னிய வகை. 'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றேயுலகு'. இங்கு 'அதுபோல' என்பது செய்யுட்கு வெளியே நின்று சொற்றொ டர்ப் பொருளை முடித்துவைக்கின்றது. இது பிறிந்தியவகையாய எச்சம். இங்குக் கூறப்பட்டவற்றை, 'மேல்வினையியலுள்ளும் இடைச்சொல் லுள்ளும் முடிபுகூறப்படாது நின்ற எச்சங்கட்கு முடிபு உணர்த்து வான் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று' என்ற இளம்பூரணர் உரையாலும், 'எஞ்சுபொருட்கிளவி (எச்சம்) கொண்டல்லது அமை யாமையின் எச்சமாயினவும், ஒருதொடர்கொழிபாய் எச்சமாயினவும் என அவை இருவகைப்படும். அவற்றுட் கடை நிலை மூன்றும் ஒரு தொடர்க்கொழிபாய் எச்சமாயின. அல்லன எஞ்சுபொருட்கிளவியான் முடிவன' என்ற சேனாவரையர் உரையாலும், 'இவற்றுட் பிரிநிலை யெச்சம் முதலிய ஏழும் எச்சச்சொல் வந்து முடித்தலியுடைய, ஏனைய மூன்றும் அச்சொல் வந்து முடியாவென்றுணர்க' என்ற நச்சினார்க் கினியர் உரையாலும் உணரலாகும்.

இனி, இவற்றின் இயல்பற்றித் தெய்வச்சிலையார் உரை காண்க. 'எஞ்சுபொருட்கிளவியாவது, சொல்லாதொழிந்த பொருளை இனிது விளக்குஞ்சொல்; நெறிப்படத்தோன்றலாவது, வாக்கியமாகிய தொடர்-

மொழிகளில் முன்னும் பின்னும் நின்ற சொல்லை தெறிப்படுத்தற்கு ஆண்டுத்தோன்றுதல். அது புலப்பட நில்லாமையின் எச்சமாயிற்று.' இதனானே, சொற்றொடரின் வெளியே நிற்பதே எச்சமென்பது பெறப்பட்டது. தொல்காப்பியர் கூறும் இருவகையுள் முதலன ஏழும் இவர் கருத்தின்படி, கூறிய சொற்றொடரின் வெளியே நிற்பனவாய், அச் சொற்றொடரொடு தொடர்புபட்டு முற்றுப்பெறுவனவென்பதும், கடை நிலை மூன்றும் கூறிய சொற்றொடரின் குறிப்பாற் பெறப்படுவனவாய், அச்சொற்றொடரோடு இணைந்து முடியவேண்டும் என்னும் நியதியில வாம் என்பதும் பெறப்படும். இவ்விருவகையினர் கூறும் எச்ச இலக் கணங்களை அவரவர் காட்டும் உதாரணங்களைக் கொண்டு ஆங்காங்கு கண்டு உணரலாகும்.

இனி இவைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு ஆங்காங்கு அவ்வவ்வுரைகாரர்கள் கூறுவதனைச் சுருக்கி எழுதுவாம்.

1. பிரிநிலையெச்சம்.

பிரிநிலையெச்சம் பிரிநிலைமுடிபின.

இளம்:—ஏ, ஓ, இவை பிரிநிலையெச்சங்கள். 'அவனே கொண் டான்' என்பதில், அவன் பிரிக்கப்பட்டவன். ஏகாரம் எச்சம், அது, அவன் என்பதில் முடியும்.

சேனா:—தானேகொண்டான்—என்பதில் உள்ள ஏகாரம் எச்சம், அது பிறர்கொண்டிலர் என்பதில் முடியும். அவன் என்பதில் முடியும் எனல் பொருந்தாது.

நச்:—அவனே கொண்டான்—ஏ, எச்சம்; அது கொண்டான் என் பதில் முடியும்; 'பிறர்கொண்டிலர் என்பது கொண்டு முடியும்' எனல் பொருந்தாது.

தெய்:—பிரிநிலையெச்சமாவது, பலபொருளில் ஒன்று பிரிக்தவழிப் பிரிக்கப்பட்ட பொருண்மையுத் தோன்ற நிற்பது. 'இவன் கல்வி யுடையன்' என்ற வழி 'இவ்வலைவத்தாருன்' என்பது எஞ்சி நின்று பிரிநிலை எச்சமாயிற்று. 'இவட்குக் கண்ணழகிது' என்றவழி, 'மற்றுள்ள உறுப்புக்களின்' என்பது எஞ்சி நின்றது. இவை பிரிக்கப் பட்ட பொருளொடு தொடர்புபட்டு முற்றுப்பெற்றன.

தெய்வச்சிலையார் உரையின் வேறுபாட்டினைக் காண்க.

மயிலை:—'' அறிமி னறமெறி யஞ்சுமின் கூற்றம், பொறுமின் பிறர் கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம், வெறுமின் வினைதீயோர் கேண்மை யெஞ் ஞான்றும், பெறுமின் பெரியோர்வாய்ச் சொல்'' என்னும் இதனுள், ஒருவழி நின்ற எஞ்ஞான்றும் என்றதனைப் பிரித்துப் பிறவழி யுங் கூட்டிமுடிக்க வேண்டுதலிற் பிரிநிலையெச்சமாயிற்று; இதனை விளக்குமென்ப. (விளக்கணி)

2. வினையெச்சம்.

"வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே யாக்கமொடு வருமே."

இளம்:—உழுதுவந்தான், மருத்துண்டு கல்லன் ஆயினன். உழுது, உண்டு என்ற வினையெச்சங்கள், முறையே தெரிநிலை வினையையும் குறிப்பு வினையையும் கொண்டுமுடிந்தன. கல்லன் என்ற குறிப்பு வினை ஆயினன் என்ற ஆக்கச் சொல்லொடு வந்தது. அன்றியும் உழுது வருதல், உழுது வந்தவன்—என்ற தொழிற்பெயர்களையும் கொண்டு முடியும்—என்பது இவர் உரைக்கருத்து.

சேனா:—மேற்கூறியவைகளையே கூறியதோடு, கற்றுவல்லன் ஆயினன் எனவரற்பாலது, சிறுபான்மை கற்றுவல்லன் எனவும் வரும் என்பதும் கூறினர்.

நச்:—மேற்கூறியவைகளையே கூறி, ஆக்கவினைகின்றிவருவது தொகுத்தல் விகாரம். அவை ஆக்கம் விரித்தல்லது பொருளுணர்த்தாமையறிக—என்பதும் கூறினர். இது சேனாவரையர் உரைக்கு ஒரு வாறு மறுப்பாகும்.

தெய்:—வினையெச்சமாவது ஒரு வினைச் சொல் எஞ்சிநிற்பது. அதற்கு வினையும் வினைக்குறிப்பும் முடிபாகும். வினைக்குறிப்பு ஆக்கச் சொல்லொடுமுடிந்துவரும். 'ஆழ்கா துடையார்க் கதுசாலு பொன்னுர் வழுக்கியுங் கேடுஞ் பது' என்பதனுள் கேடுபயத்தற்கு அழுக்காறுதானே அமையும், பகைவர்கெடுக்குதல்தப்பியும்(கேடு)வரும்எனப்பொருளுரைக்க வேண்டுதலின், வரும் என்பது எஞ்சிநின்றது. 'அற்ற ழிபசி தீர்த்தல் ஆஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி' என்பதற்குப் பொருள், அற்றாரது குணங்களையழிக்கும் பசியைப்போக்குவது செய்ய, ஒருவன் தான் தேடின பொருள் வைத்தற்கு இடம் பெற்றான் ஆம் என உரைக்க வேண்டுதலின், ஆம் என்னும் வினைக்குறிப்பு எஞ்சி நின்றது. இது வினையியலுட் கூறிய வினையெச்சம் அன்று. (இங்கும் இவர் உரையின் பெரும் வேறுபாடுகாண்க. இவ்வாறே பின் வருவனவற்றுட் காணப் பெறும் வேறுபாடுகளையுங்காண்க.)

மயிலை. "காலங்கருதி யிருப்பர் கலங்காது, ஞாலங் கருது பவர்"
"வேண்டி வேண்டாசத் துறக்க துறந்தபி, னீண்டியற் பால பல".
"நுண்மா ணுழைபுல மில்லா னெழின்ல, மண்மாண் புனைபாவை யற்று"
எனவருமிவை, முறையானே கொள்ளுங் காலங் குறித்துக்கலங்கா திருப்பர் ஞாலங்கருதுபவனெனவும், உய்ய வேண்டிற் காலமுண்டாகத் துறக்க, துறந்தபின் இப்பிறப்பில் உய்யற்பாலனபல வெனவும், நுண் ணறிவில்லாதான் எழில்நலம், மண்மாண் புனைபாவை எழில் நலம் எற்று அற்றெனவும் வினையும் வினையுளடங்கும் வினைக்குறிப்புங் கொண்டு முடிதலின், வினையெச்சமாயின.

3. பெயரெச்சம்.

'பெய ரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே'

இளம் :—'உண்ணும் சாத்தன்' எனவரும். சேனா—நச்—உரைகளில் வேறுபாடில்லை.

தெய்:— 'உயர்திணையென்மனார் மக்கட் சுட்டே' என்பதனுள் என்ம்னார் ஆசிரியர் என வேண்டுதலின், ஆசிரியர் என்னும் பெயர் எஞ்சி நின்றது.

மயிலை :—இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

பிறர் இன்னா செயினும் தான் வெகுளாமை நன்று.....எஞ்சிய பெயர் கொண்டு முடிதலிற் பெயரெச்சம்.

4. ஒழியிசை யெச்சம்.

'ஒழியிசை யெச்சம் ஒழியிசை முடிபின'

இளம்:—ஒழியிசைகள்—மன், தில், ஓ.

கூரியதோர் வாள்மன்—வாள் கோடிற்று—என் வாள்மேல் முடிபு சென்றது. கொளலோகொண்டான்—கோண்டான் என்பதில் முடியும்.

சேனா:—(மேற்கூறிய மன்) திட்பமின்று என்னும் ஒழியிசையான் முடிந்தது. கொளலோகொண்டான், கொண்டேய்யப்போமாறு அறிந்திலன் என்பதில் முடியும்.

நச் :—கொளலோகொண்டான்—கோண்டான் என்பதிலே முடியும். சேனாவரையர் கூறுவது பொருந்தாது.

தெய் :—'இவர்கல்வியாற் குறைவிலர்' என்றவழி, ஒழுக்கத்தாற் குறையுடையர் என்றுதல், பொருளாற்குறையுடையர் என்றுதல், ஒழிந்த பொருண்மை குறித்தவழி, அப்பொருள்பட்டவாறும் அதனானே அச்சொல் முற்றுப்பெற்றவாறுங் கண்டுகொள்க.

மயிலை:—'செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை' ... ... கிழக்காந் தலை யென்பதன்துணிபு தோன்றுதற்கு, ஒழிக்கப்பட்ட அவர் கேடுவேர் என்பதைக் கொண்டு முடிதலின், ஒழியிசை யெச்சம். இசை—சொல். 'துன்னிக்-கலந்தாரைக்கைவிடுதல் கானகநாடவிலங்கிற்கும்மின்னலரிது.' கலந்தாரைக் கைவிடுதலின் அருமை தோன்றுதற்கு, ஒழிக்கப்பட்ட மக்கட்கேளிதோ என்பதைக்கொண்டு முடிதலின் ஒழியிசை யெச்சம்.

5. எதிர்மறையெச்சம்.

'எதிர்மறை யெச்சம் எதிர்மறை முடிபின'

இளம் :—எதிர்மறைகள், ஓ, உம். யாரே கொண்டேன் என்பது யான்கொண்டிலன் என்பதனையும், வாழுமுரியன் என்பது வாராமைக்கு முரியன் என்பதனையும் கொண்டு முடியும். சேனா, நச்—உரைகளில் வேறுபாடில்லை. ஏகார எதிர்மறையும் கொண்டனர்.

தெய்:—' இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனுக்
கண்ணிறை நீர்கொண் டனள் ' (மணக் 1312)

என்பதனுள் மறுபிறப்புப் பிரிவேம் எனுமினைத்துக் கண்ணிறை நீர் கொண்டனள் எனப்பொருளுரைக்க வேண்டுதலின், எதிர்மறை, எஞ்சி நின்ற தன் எதிர்மறைப்பொருளொடு முடிந்தவாறு கண்டுகொள்க.

மயிலை:—' பிறவிப்பெருங்கடனீந்துவர் நீந்தார்—இறைவன்டி சேரா தார்.' சேர்ந்தார் நீந்துவர்—எதிர்மறையெச்சம்.

6. உம்மையெச்சம்.

' உம்மை யெச்ச மிருவீற் றுளுங்
தன்வினை யொன்றிய முடிபா கும்மே'.

இளம்:—' சாத்தனும் வந்தான் ' என்றக்கால், பின்னைக்கோற்றனும் வந்தான் என்றுளும் கோற்றனும்வரும் என்றுளும் ஒன்றியவினையே கொண்டுமுடியும். சாத்தனும் வந்தான், கொற்றனும் போயினன் என வாராது. சேனா, நச்—மேற்கூறிய கருத்துக்களையே கூறினர்.

தெய்:—'சாத்தனும் வந்தான் கொற்றனும் வந்தான்' எனற்பாலன சாத்தன் வந்தான், கொற்றன் வந்தான் எனவரின், ஆண்டு உம்மை எஞ்சி நின்றதென்க. 'வதுவைவந்த வன்பறழ்க் குமரி யிருதோ டோழர் பற்ற' என்றவழி, இருதோளும் என்னும் உம்மை எஞ்சிநின்றது.

இரண்டானும் பலவானும் பெயரையடுக்கி ஒரு சொற்போல ஒரு வினையான் முடிக்கும்வழி, உம்மைத்தொகை. தனித்தனி வினைகொண்டு உம்மை பிரிந்து நின்றே பொருள்படும் சொற்கள், செய்யுளகத்து எஞ்சி நிற்கின்றது, உம்மையெச்சம்.

மயிலை:—' இருதோ டோழர்பற்ற ' (இருதோளும்) இது உம்மை யெச்சம்.

7. என வெச்சம்.

' எனவெனெச்சம் வினையோடு முடிமே '

இளம்:—கொள்ளெனக் கொண்டான்—எனவரும் (என என்பது கொண்டான் என்பதில் முடியும்.) சேனா—மேற்கூறியவாறே கூறினர்.

நச்:—' என ' எனும் இடைச்சொல் ஏழுவகையதாம். அவற்றுள் வினை, குறிப்பு, இசை, பண்பு, எனும் நால்வகை 'என'வே இங்குக் கூறப்படுவது. வினையெச்சமாய 'என' வினைகோடல் முற்கூறப்பட்டது. எண் 'என'வும், பெயர் 'என'வும் வினைகொள்ளா. என வென்னேச்சம் வினையோடும் முடியும் என்ற உம்மையாற் பெயரொடும் முடியும். முடித லாவது சார்ந்து நின்று பொருளுணர்த்தல்; முடிதலெனினும் தொடர் தலெனினும் ஒக்கும்,

தெய்:—'பிரிநிலை வினையே' என்னும் சூத்திரத்துள், ' குறிப்பே யிசையே யாயீ ரைந்தும் என்றவழிக், குறிப்பே இசையே என வீரைந்து மெனப் பொருளுரைக்கவேண்டுதலின் என என்பது எஞ்சி நின்றது.

மயிலை:—தெய்வச்சிலையார் உரைபோலவேகூறினர்.

தொல்காப்பியர் இறுதி மூன்றெச்சங்கட்கும் இலக்கணம் கூறிய பொதுச் சூத்திரங்கள் மூன்று. அவற்றுள் சொல்லெச்சத்திற்கே உரிய சிறப்புச் சூத்திரம் பின்னர்க் கூறப்படும். ஏனைய :—

'எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்
எஞ்சு பொருட்கிளவி யிலவென மொழிப'

'தத்தங் குறிப்பின் எச்சம் செப்பும்'—எனுமிவை.

இவற்றைத் தத்தம் கருத்திற் கேற்பப் பொருள் கொண்டு அவரவர் கூறுவனவற்றைக் காண்பாம்.

8. சொல்லெச்சம்.

சொல்லெச்சம்பற்றி இலக்கண இலக்கிய உரைகளிற் காணப்படும் வேறுபாடுகள் மிகப்பலவாய்ப், பெருவியப்பினைத்தரும். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தே கூறப்படும் எச்சங்களையன்றிப் பொருளதிகாரத்துச் செய்யுளியலிலும், 'சொல்லெச்சம், குறிப்பெச்சம்' என இரு எச்சங்கள் கூறப்படுகின்றன. நன்னூலார், தொல்காப்பியர் சொல்லதிகாரத்தே கூறும் பத்து எச்சங்களையும் கூறி, அவற்றுள் குறிப்பெச்சம் ஒழிந்த ஒன்பதனையும் ஒருவகையாக்கி, அதற்குச் 'சொல்லெச்சம்' என்றே பெயர் இடுகின்றனர். (இலக்கண விளக்க நூலார், இவ்வெச்சங்களைத் தொல்காப்பியம், நன்னூல், இவற்றின் உரைகள்—எனும் இவைகளையெல்லாம் கலந்து ஒருவாறு கூறிவைத்தனர்.) நிற்க.

'சொல்லெ னெச்சம் முன்னும் பின்னுஞ்
சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே'—என்பது தொல்-சூத்திரம்.

இளம் :—முன்னையினும் பின்னையினும் சொல் என்னும் சொற் கொண்டு முடிவதல்லது பிறிதில்லை. 'பசித்தேன் பழஞ்சோறு தா எனநின்றுள்.' இது, என்று சொல்லி என்றுளும், என்று சொல்ல என்றுளுமாக, இரண்டனுள் ஒன்றுன் முடியும்.

சேனா:—சொல்லெச்சமாவது-ஒரு சொற்கு முன்னும் பின்னும் சொன்மாத்திரம் எஞ்சுவதல்லது, தோடராய் எஞ்சுதலின்று. 'உயர்திணை என்மனார்' என்புழி 'ஆசிரியர்' என்னும் சொல் முன்னும், 'மருந்தெனின் மருந்தே' என்புழி எமக்கு என்னுஞ் சொல் பின்னும் எஞ்சி நின்றவாறு காண்க. 'பசித்தேன் பழஞ்சோறு தா வென்று நின்றுன்' என்புழி தா வெனச் சொல்லியெனச் சொல்லென்னுஞ் சொல் எஞ்சிநின்ற தென்று காட்டுப. அவர், முன்னும் பின்னும் என்பதற்குச் சொல்லென்னுஞ் சொற்கொணர்ந்து கூட்டுவதன் முன்னும், பின்னும் என இடர்ப்பட்டுப் பொருளுரைப்ப என்பர். இதனால், இளம்பூரணர் இவ்வாறு பொருள் கூறினவர் என்பது உணரப்படுகின்றது.

ஈச்;—(இவர் கூறும் உரை) 'என் எச்சம்—என் என்கின்ற எச்சமானது, சொல்லளவல்லது—சொல்லென்னும் முதனிலை மாத்திரைதன்னுள்ளே எஞ்சி நிற்றலல்லது, சொல் முன்னும் பின்னும் எஞ்சுத

லின்று—செய்யுளியலிற் கூறும் சொல்லெச்சம் போல ஒரு சொல், செய்யுட்கு முன்னும் பின்னும் எஞ்சி நிற்றல் இல்லை'

உ—ம். 'வினை யெனப்படுவது' என்றது வினை யென்று சொல்லப் படுவது என்று பொருள் தந்த விடத்து, என் என்னும் எச்சம் தான் அவாவுதலின், இடையே நின்ற சொல் என்னும் முதனிலைக்குத் தன்னீற்றில் நின்ற செயவென்னச்சத்தை யுணர்த்தும் அகரத்தை எற் பித்து நின்றவாறு காண்க. இடைநின்ற றகர வுகரம் (று) அவ்விரண் டினையும் கூட்டுவதற்கு வந்தது. தா வென நின்றான் என்பது தா வென்று சொல்லி நின்றான் என, என்வெச்சம் சொல்லி யென்னும் வினை கொண்டு நின்றது. இது சொல்லெச்சமன்று.

இனி இவர் செய்யுட்கண் வரும் சொல்லெச்சமாயின், ஒரு சொல் லோ சொற்றொடரோ எஞ்சும் என்று கூறி, அதற்கு 'எமக்கு,' 'யாங் காந்தட் பூவாற் குறைவிலம்' என்றெல்லாம் உதாரணம் காட்டுவர். சிந்தாமணி யுரையில் பல செய்யுட்களில், 'யான் அத்தகையன் அல்லன்' என்பது முதலாகப் பல உதாரணங்கள் காட்டி, அவை யெல்லாம், செய்யுளியலிற் கூறப்படும் சொல்லெச்சம் என்பர்.

மணக்குடவர், 'புலவி நுணுக்கமாவது, தலைமகன் மாட்டுத் தவ றலவாயினும் தன் காதன் மிகுதியால், சொல்லெச்சத்தினாலும், குறிப் பெச்சத்தினாலும் வேறுபடப் பொருள்கொண்டு தலைமகள் புலந்து கூறுதல்' என்று கூறுமிடத்துவருவனவும் அன்ன.

பரிமேலழகர், சேர்ந்தார் (10-ம் குறள்) உணரப்படும் (37) வழி படுதல் (58) செய்து (171) செய்வது (188) நோக்கி (1095) என்றாற் போல்வன பலவற்றைச் சொல்லெச்சம் எனக்கூறுவர். அடியார்க்கு நல்லார், 'வலம்படுதானை' ... . சிலம்பு காணிய வந்த தோர்' என்றவிடத்துக் 'காட்டுமின்' என்பது சொல்லெச்சம் என்றார். இவரெல்லாம் இங்குச் சொல் என்பது—யாதாயினும் ஒரு சொல் என்னும் கருத்தினரே.

இனி, தெய்வச்சிலையார் கூறுவனவற்றை நோக்குவாம். அவர் கொண்டபொருள்—சொல்லென்னுமெச்சம், அச்சொல்லாவதற்கு முன் னும் பின்னும், மற்றொருசொல் எஞ்சிநிற்றல் இலது. எனவே அச் சொல்லினானே உய்த்துணர்ந்துகொள்ளப் பிறிதுபொருள்வரும். எனவே, இவர், 'சொல்லளவல்லது' என்பதற்கு-கூறிய சொற்றொடரே யல்லது-என்று பொருள் கொண்டவராவர்.

உ-ம்—'நெடும்புனலுள் வெல்லுமுதலை யடும்புனலின்-நீங்கினதனைப் பிற' என்ற வழித், தமது நிலத்தில் எளியவர் நின்றாலும் (வலியராவர்.) பிறரது நிலத்தில் வலியாரும் எளியராவர் என்னும் பொருண்மை இச் சொல் (சொற்றொடர்) தானே யுணர்த்தலின், சொல்லெச்சமாயிற்று என்பர். இதனால் இவர் உரையின் பெரும் வேறுபாடுகாண்க. இங்கு, மயிலை உரை, இளம்பூரணர் உரையொடு ஒத்ததே.

குறிப்பெச்சம்.

குறிப்பெச்சத்திற்குரிய பொதுச் சூத்திரங்கள் முற்கூற்றப்பட்டன.

இளம்:—'தத்தம் குறிப்புப்பற்றிய எச்சத்தானே முடிபு கூறப்படும். விண்ணென விசைத்தது. விண்ணென்றதே விசைத்தது எனப்பட்டது. இடைச்சொல் லோத்திலுள் அறுபகுதிய எனப்பட்ட என விகற்பத்து முடிபு இது.' எனவே இவர் கூறுவது விண் விண் என்று தெறிக்கின்றது அல்லது வலிக்கின்றது என்பார் கூறும் விண் என்பதின் பின் வரும் என் என்பது காட்டும் குறிப்பே குறிப்பெச்சம் என்பதாயிற்று.

சேனா:—' பசப்பித்துச் சென்றூரை யுடையையோ வன்ன
நிறத்தையோ பீர மலர் ' என்ற செய்யுளிற் பெறப்படும் 'யான் பசப்பித்துச் சென்றூரை யுடையேன்' என்றாற் போல்வன குறிப்பெச்சம்.

நச் :—' கற்கறிக்க நன்கட்டான் ' என்றவழிப் பெறப்படும் 'நீங்கட்டான்' என்பது குறிப்பெச்சம்.

பரிமேலழகர்:—' குழலினிது யாழினிது என்ப ' என்ற குறளில் ' கேட்டவர் அவற்றினும் மழலைச் சொல் இனிது என்பர் ' என்பது குறிப்பெச்சம். 'வித்து மிடல் வேண்டுங்கொல்லோ' என்பதில் 'தானே வினையும்' என்பது குறிப்பெச்சம். இவ்வாறு அவர் கூறும் சொற்றொடராகவுள்ள குறிப்பெச்சங்கள் மிகப்பல.

தெய் :—இளம்பூரணர் முதலிய உரைகாரர்கள் எச்ச இலக்கணங்கள் என்றுகொண்ட சூத்திரங்களுக்கு அப்பால், அவர்கள் வேறு இலக்கணத்தன என்று கொண்ட சூத்திரங்களையும், இவர் குறிப்பெச்சம் இசையெச்சம் கூறும் சூத்திரங்களாகக்கொண்டு உரை வகுத்து உதாரணம் காட்டிச் செல்லல் ஒரு பெரும் வியப்பாகவுள்ளது. அவ்வாறுய சூத்திரம் :— ' அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல் ' என்பது. மறைத்துச் சொல்லுதல் இருவகைப்படும். மங்கலமரபினற் கூறுதலும் இடக்கர் அடக்கிக் கூறுதலும் என. 'செத்தாரைத் துஞ்சினர்' என்றலும், கண் கழீஇ வருதும் என்றலும் உதாரணம். இவை வேறொன்றைக் குறித்துக் கூறுதலிற் குறிப்பெச்சமாயின.

'ஈதா கொடு வேனக் * * * உயர்ந்தோன் கூற்றே'

இச்சூத்திரத்துக் கூறப்படும், ஈ., தா., கொடு என்னும் சொற்கள் முறையே இழிந்தான், ஒப்பான், மிக்கான் ஆய இவர்கள் கூற்றுக்கள் ஆகும். இச்சொற்கடம்மானே இழிந்தான், ஒப்பான், மிக்கான் என்னும் பொருண்மை எஞ்சி நிற்றலிற் குறிப்பெச்சமாயிற்று.

இசையெச்சம்.

இதற்குரிய பொதுச் சூத்திரங்களும் முற்கூறப்பட்டன.

இளம்:—ஒல்லென ஒலித்தது—என்னுமிட்டது என என்பது காட்டும் பொருண்மையே இசையெச்சம்.

சேனா:—இசை = சொல், ஒன்றின் மேலாய சொற்கள்வருவது இசையெச்சம். 'அகரமுதல ... உலகு' இங்கு, அதுபோல என்பது இசையெச்சம். 'அளித்த சொல் ... தவறு' இக்குறளில், நீத்தார்க்கே தவறு என்பது இசையெச்சம்.

நச்:—'வயிறு மொடு மொடுத்தது' என்றவிடத்து உண்டாகும் மொடுமொடுப்பாகிய ஒலியாற் பெறப்படும் குறிப்பாகிய உண்ண வேண்டாம்என்ற எஞ்சு பொருளினைத்தந்தது இசையெச்சம். பரிமேலழகர், தும்முச் செறுப்ப வழுதா ணுமருள்ளல்—எம்மை மறைத்திரோ வென்று—என்ற குறளில் எம்மை என்பது 'நும்மோடு யாதுமியையில் லாத எம்மை' என்பது பட நின்ற இசையெச்சம். இதனை வடநூலார் காகு என்ப என்றார். (காகு—அச்சம், இரக்கம் முதலிய வற்றாலாகும் ஒலி வேறுபாடு என்பர்.)

தெய்:—பெயர் நிலைக் கிளவியின் * * கடப்பல டிலவே.

என்ற சூத்திரத்தை, இசை யெச்சம் கூறும் சூத்திரமாகக் கொண்டார். அங்ஙனம் கொண்டு கூறுவது-சில சொற்கள் தம்பொருள் ஒழிய பிறிது பொருளும்படும். அங்ஙனம்இரண்டுபொருள்படநின்றவழி,ஒருபொருளை உணர்த்தும் இசை எஞ்சி நிற்கும். அஃது இசையெச்சம் என்பது.

1. 'பெயர்நிலைக் கிளவியின் ஆகு'

வேங்கை—ஒரு மரம், புலி இவற்றின் பெயர்; கைவேம் என்னும் பொருளும் படும். இவ்வாறு ஒரு சொல்லினை பிறிது பொருள் வரின், அதை உணர்த்தும் இசை எஞ்சிநின்றது.

2. 'திசைநிலைக் கிளவியின் ஆகு'

கரை-வரம்பு-கருநாடர், விளித்தற்கண் வழங்கல், இசையெச்சம்.

3. 'தோன்னெறி மொழி'யின் ஆகு'

'குன்றேறுமா' குன்று. ஏறு, ஆ, மா, இவ்வாறு வருவன. இவை முந்து வழக்காகித் தொடர்வு பட்டுச் செய்யுளகத்தும் பரவை வழக்கினும் வரும் தொடர்மொழி. இது தனிமொழியாகிய பெயர்நிலைக்கிள விியின் அடங்காமையின் வேறோதப்பட்டது.

4. 'மெய்ந்நிலை மயக்கின் ஆகு'

'குருகுகரு வுயிர்ப்ப வொருதனி யோங்கிய திருமணிக்காஞ்சி'

குருகு—மாதவிக்கொடி—இங்கு மாதவி என்பாள். காஞ்சி—மேகலை, மணிக்காஞ்சி=மணிமேகலை. எனவே, மாதவி பெற்ற மணிமேகலை என்பது பொருள். (மெய்ந்நிலை—பொருணிலை.) இவ்வாறு பொருணிலை மயங்கவருவனவும் இசையெச்சம்.

5. 'மந்திரப் பொருள்வயின் ஆகு'

மந்திரம்—பிறர் அறியாமல் தம்முள்ளார் அறிய மறைத்துக்கூறும் சொல். இது இருவகைப்படும். (1) யானைப் பாகர்—ஆடையைக் 'காரை' யென்றல் முதலாய குழுவின் வந்த குறிநிலை வழக்கு. (2) மண்ணைச் சுமந்தவன்றனும் (க) வரதராசன் மகன்றனும் (ம) எண்ணிய வரகாலி மூன்றும் (சி) இரண்டு மரமும் (வர) ஓர் யாறும் (ய) திண்ணமறிய வல்லார்க்குச் சிவகதியைப் பெறலாமே-எனக்கூற நமசிவாய எனப்பொருளாயிற்று. இது எழுத்திற்குப் பிற பெயரிட்டு வழங்குதலாகிய இசையெச்சம்.

இவற்றைப்பற்றிய ஆராய்ச்சிகள், இடம்பெற்றுழி, பொழிலில்வெளிவரும்.

வீரமாமுனிவர் நாடு

திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் B. A., B. L.

"பெற்ற தாயும் பிறந்தபொன் னுடும்
நற்ற வானினும் நனிசிறந் தனவே."

'தேன்தரும் விரைமலர்த் தேம்பாவணி' என்று தமிழறிஞர் தலைக் கொண்டு போற்றும் விழுமிய நூல்வீரமாமுனிவரென்னும் வித்த கரால் இயற்றப்பட்டதாகும். எத்திசையும் புகழ்மணக்க இனிதிருந்த இத்தாலிய நாட்டிற் பிறந்து, தமிழகத்திற் போந்து இயேசு மதத்தொண்டாற்றத் தலைப்பட்ட இவ்வறிஞர் அமிழ் தினுமினிய தமிழ்மொழியை அரிதின் முயன்று பயின்றார். நிறைந்த கல்வியும், சிறந்த சீலமும் வாய்ந்து விளங்கிய இம் முனிவரை,

"மறை மொழி வாயினன் மலிதவத் திறைவன்
நிறை மொழிக் குரவன் நிகரில் கேள்வியன்" என்று

தேம்பாவணிப் பதிகம் பாராட்டுகின்றது. செல்வத்துட் செல்வமாய செவிச்செல்வம் பெற்று, இருமையும் பயக்கும் இருந்தவம் புரிந்து, தமக் கென வாழாப் பிறர்க்குரியாளராய் வாழ்ந்த வீரமாமுனிவர் பெருமை அவர் அருளிய தேம்பாவணி யெனும் காவியத்தால் இனிது விளங்குவ தாகும். வான் அரசியாய் விளங்கிய மேரி என்பாள் திருவாய் மலர்ந்த வளன்பெருமையைத் தமிழ்மொழியில் எழுதப் போந்த வீரமாமுனிவர் தமிழ்நூல் மரபினைத் தழுவி இறைவணக்கம் பாடியருளினர். மும்மை சால் உலகுக்கெல்லாம் முதல்வனுய இறைவனே, படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையும் முறையாகப் புரிகின்றான் என்றும், அப்பெருமானது மலரடி பணிதலே இருவினையை வேரறுக்கும் வழி யென்றும் மாசறவுணர்ந்த முனிவர்,

"சீரிய உலகம் மூன்றும் செய்து அளித்து அழிப்ப வல்லாய்
நேரிய எதிர்வொப் பின்றி நீத்தவோர் கடவுள் தூய
வேரிய கமலபாதம் விணையறப் பணிந்து போற்றி
ஆரிய வளன்தன் காதை அறமுதல் விளங்கச் சொல்வாம்" என்று

பாடியருளினார். எல்லாம் வல்ல இறைவன் பெருமையை அவன் முத் தொழில் புரியும் முறைமையால் அறிவித்தார். தனக்குவமை யில்லாத் தலைவனை "நேரிய எதிர் ஒப்பில்லான்" என்று ஏத்தினர். மனம் மொழி, மெய்களால் அளந்தறியலாகாதவனும், காலமும் கணக்கும் நீத்த காரணனும் நின்ற ஒருவனை, 'நீத்தவோர் கடவுள்' என்று குறித்தார். உள்ளுவார் உள்ளத்தில் உலப்பிலா ஆனந்தத் தேன் சொரியும் இறைவன் திருவடியை, 'வேரிய கமலபாதம்' என்று வியந்தார். இத்தகைய தெய்வ மணங்கமழும் திருவடித் தாமரைகளை வாக்கால் தணிவுதோன்ற வாழ்த்தியும், மெய்யாற் பணிவு தோன்றத்தொழுதும், அறன் முதலாய உறுதிப் பொருள்களை விளக்கும் வளன் கதையை முனிவர் தமிழ்மொழி யால் வழங்கலுற்றார்.

அறம் நிரம்பிய மனத்தினராய முனிவர் இருமையும்தரும் பெருமை வாய்ந்த வளன் என்னும் சூசையப்பர் கதையை, ஆசைபற்றி அறை யுற்றிறம் அறிந்து போற்றத் தக்கதாகும்.

" .....ஓசையுற்று ஒழுகமிர்தம் உடைகடல் என்னநண்ணிப்
பூசையுற்று அதனைநக்கப் புக்கென உளத்தைத் தூண்டும்
ஆசையுற்று ஊமனேனும் அருங்கதை அறைய லுற்றேன்" என்று

ஆசிரியர் அருளிய அவையடக்கம் கம்பரது அவையடக்கக் கவிகளோடு ஒப்புநோக்கி உணரத்தக்கதாகும். வளன் கதையை வளமார்ந்த பாலாழி யென்றும், அக்கதையை ஆர்வத்தால் பருகலுற்ற தன்னை, ஆசையுற்ற பூசையென்றும், வானமேரி திருவாய் மலர்ந்த வளன் கதையை ஈன முற்றதான் எடுத்துரைக்கப் போந்த எளிமையை " ஆசையுற்று ஊம னேனும் அருங்கதை அறையலுற்றேன்" என்றும் முனிவர் அருளிப் போந்தார். எண்ணரிய நலம் வாய்ந்த இராம கதையை எழுதப்போந்த இன்கவிச் செல்வராய கம்பர்,

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றுரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறைய லுற்றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதை யரோ"

என்று அவையடக்கம் கூறிப்போந்தார். இன்னும், வடமொழியில் இராம கதையை அருளிய வான்மீக முனிவர் பெருமையையும், தமிழ் மொழியில்அக்கதையைஅமைக்கப்போந்த தன் எளிமையையும் கினைந்து,

" ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவமாந்தி
மூங்கையான் பேசலுற்றான் என்னையான் மொழியலுற்றேன் "

என்றார். கவியரசராகிய கம்பர்சொல்லையும் பொருளையும் வீரமாமுனிவர் தம் கவிகளில் எடுத்தமைத்து, "முன்னோர் மொழிபொருளேயன்றி அவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" என்னும் இலக்கிய மாபினை விளக்கிப் போந்தார்.

இவ்வாறு தமிழ் நாட்டில் வாழ்ந்து தமிழ்மொழியில் இலக்கித்த வீரமாமுனிவர் தம்மையீன்ற நாட்டின் பெருமையைத் தேம்பாவணியிற் போற்றிப் புகழும் திறம் அறிந்து இன்புறத்தக்கதாகும். எங்கெங்கு சென்றாலும், எக்காட்டில் வாழ்ந்தாலும், நல்லான் ஒருவனுக்குத் தன்னாடே பொன்னாடாகத் தோன்றும். இத்தகைய தாய்நாட் டன்பு வீரமா முனிவர் மனத்தில் பொங்கித் ததும்பி நிற்கக் காணலாம். இணையற்ற இத்தாலிய நாட்டின் பெருமையைத் தெய்வத்திருக்குமரன் வாயிலாக முனிவர் பாடித் துதிக்கின்றார்.

"எனையீன்ற இணைபா இத்தாலியநாடு
அளவின்றி இயலும் மாட்சி
சுனையீன்ற மலர்வாயான் துளி மதுப்போல்
இன்பமுகும் சொல்லாற் சொன்னன்"

என்றெழுந்த தேம்பாவணி அடிகளில் முனிவரது தாய்நாட்டார்வம் தழைத்திலங்கக் காணலாம். தன்னை ஈன்றெடுத்த தெய்வத்திருநாட்டை 'இணையா இத்தாலியநாடு' என்று முனிவர் போற்றினர். இணையற்ற அந்நாட்டின் பெருமையை அன்பார்ந்த இன்ப மொழிகளால் எடுத்துரைத்த திருக்குமரனது செம்மைசான்ற வாயினைச் 'சுனையீன்ற மலர் வாயான்' என்று சிறப்பித்தார். அப்புகழுரையைச் செவிவாயாகப் பருகி இன்பவெறியுற்ற முனிவர், தேவகுமரன் சொல்லை 'மதுப்போல் இன்பமுகும் சொல்' என்று ஏத்தினர். தாய்நாட்டுப் புகழுரை தக்கார் செவிகளில் தேன்போல் இனிக்கும் என்பது,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்னும் பாரதியார் பாட்டாலும் இனிதுணரப்படும்.

இங்ஙனம் வீரமாமுனிவர் செவிகளில் தேன்போல் தித்தித்த திருக்குமரன் மொழிகளைச் சிறிது கருதுவோம்.

"சென்னகம் நீர்பொழியத் தேன்பொழியும்
புன்னகம் திருவிற்பூப்ப
கன்னகம் நேருமிழக் கவினகம் வெருண்டஞ்சக்
கல்லூடேர்ந்த
கொன்னகம் ஒப்பமணி கொழித்தருவி பாய்ந்தோடக்
கொழுஞ்செய் வாய்ப்பப்
பொன்னக மொப்பவளர் புகழித்தா வியநாட்டுப்
பொலிவி தன்னை"

என்று இத்தாலிய நாட்டின் நீர்வளம், நிலவளம், மலைவளம் முதலிய வளங்களைத் திருக்குமரன் செஞ்சொற்களால் எழுதிக்காட்டும் நயம்

இணையற்ற இன்பம் தருவதாகும். மழைவளம் பொருந்திய மலைகளில் புன்னைமரங்கள் பூத்துத் தேன் பிலிற்றும் என்றும், மலையில் வீழும் மழைநீர் சுனைகளிற் பாய்ந்து பொங்கி எழும் பொழுது அம்மலையில் மன்னிவாழும் மந்திகள், அஞ்சிக்கலங்குமென்றும், கருமலையினிடையே வளைந்து நெளிந்து செல்லும் புதுப்புனல் மாசுணம்போல் மலைவிளிம்பினின்றும் வழிந்திறங்குமென்றும், அவ்வருவிநீர் ஆறுகச் சென்று புலங்களிற் பாய்ந்து வன்னிலத்தை கன்னிலமாக்கு மென்றும், தெய்வகுமரன் திருவாய் மலர்ந்தருளினர்.

இன்னும் நீர்வளத்தால் பூஞ்சோலைகள் பூத்திலங்கவும், மதுவுண்ட வண்டுகள் மகிழ்ந்திசை பாடவும், ஓகை நிறைந்த மயில்கள் தோகை விரித்தாடவும், தேன்சொரியும் சோலைகளில் நீங்கனிகள் தூங்கவும், செழுமையுற்று நின்ற அத்திருநாட்டின் செம்மையை,

"விரைவாய்ப்பூந் தாழையுலாம் வெள்வளைபூ
வயலூர்ந்து மிளிர்முத் தீன்ற
கரைவாய்ப்பூஞ் சுனைபூப்பக் கனியாழ்வண்
டிமிர்க் தொகாங் களிகூர்ந் தாடுஞ்
சுரைவாய்ப்பூம் பொழில் காய்ப்ப ஈசறமும்
முச் சீருஞ் சுகமோ ரேழு
நிரை வாய்ப்பூங் குடியாக நிமிரித்தா
லியநாட்டு நிலையிதன்றே"

என்று திருக்குமரன் புகழுக்திறம் அறிந்து போற்றத் தக்கவாகும். இயற்கை கலம் வாய்ந்த இத்தாலியகாடு இல்லறம், துறவறம் என்னும் இருவகை அறங்கட்கும் இருப்பிடமாகவும், அருட்செல்வம், பொருட் செல்வம், கலைச்செல்வம் என்னும் மூவகைச் செல்வங்கட்கும் நிலைய மாகவும், எழுவகை இன்பமும் கெழுமிய இடமாகவும் இலங்கியதன்மை இக்கவியால் இனிதுணரப்படும்.

இங்ஙனம், பல்வகைச் செல்வமும் பெருகிநின்ற திருநாடே உலகிற்கு ஒளிநெறி காட்டிய உயரியகாடென்னும் உண்மையை,

பொருளீன்ற பெருஞ் செல்வப் பொலிவொழிக்கும்
வளம்புணரப் புகன்ற நாடு
மருளீன்ற அவா வொழிப்ப வையகத்தில் நானுதித்து
மறையென் றோதுந்
தெருளீன்ற நூலொருங்கே திருவிளக்கென் றேற்றியெல்லாத்
திசைக்குந் தானே
அருளீன்ற விளக்காகி அவனியெலா மாளுமித்தா
லியநா டன்றே"

என்னும் கவி அழகுற எழுதிக் காட்டுகின்றது. அங்கண்மாஞாலத்து

வீரமாமுனிவர் நாடு

அவிரொளியாய் நின்று ஆன்ற நெறிகாட்டிய பெருமை இத்தாலிய நாட்டிற்கே உரியதென்று திருக்குமரன் புகழ்ந்து போற்றும் திறம் கற்போர் கருத்தைக் கவர்வதாகும். இத்தகைய இத்தாலிய நாட்டில் அந்தமிலின்பத்து அழியா வீட்டினுக்கு அழகிய வாயிலாய் நின்ற தெய்வத்திருமனையின் மாட்சியினை,

"ஓங்கியதோ ருடன் முகமோ முகக் கண்ணே
கண்மணியோ ஒளிசெய் மார்பிற்
தூங்கிய தோர் பூண்கலனே சுடர் முடியோ
மணிமுடியோ சொல்லுத் தன்மை
நீங்கிய தோர் வனப்பினிலிந் நிலத் தெல்லை
நிகரிலா நேமிதன்னில்
வீங்கிய தோர் பேரின்ப வீடதுவே
மேல்வீட்டு வாயலஃதே"

என்று தேம்பாவணி வியந்துரைக்கின்றது. இத்தாலிய நாட்டு மலைமேலமைந்த தெய்வத்திருமனை பேரின்ப நெறிகாட்டும் பெற்றி வாய்ந்த தென்பது இதனால் இனிது விளங்குவதாகும். நானிலத்திற் பேரின்ப வீடாகவும், மேனில வீட்டிற்கு மேவிய வாயிலாகவும் விளங்கும் தெய்வத் திருமனை, மெய்யில் அமைந்த முகமோ, முகத்தில் அமைந்த கண்ணே, கண்ணில் விளங்கும் மணியோ, சென்னியிலிலங்கும் முடியோ, முடியிலிலங்கும் மணியோ என்று முனிவர் புகழ்ந்து போற்றுகின்றார்.

இங்ஙனம் சொன்னலங்கடந்த தெய்வத் திருமனையின் செம்மையையும், அம்மனையைத் தன்னகத்தேயுடைய இத்தாலிய நாட்டின் பெருமையும், மனமாரப்பாடி மகிழும் முனிவர் ஆர்வம்போற்று தற்குரியதன்றே?

ஞானத்தின் திருவுரு

திரு. பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார், அவர்கள்.

உலகத்துப் பொருள்கள் உண்மை மாத்திரை உணர்த்திப் பிழம்பு உணர்த்தப் படாதனவும், உண்மையும் பிழம்பும் உணர்த்தப் படுவனவும் என இருவகைப் படுமென்று கூறுவர் களவியல் உரையாசிரியர். உண்மை யுணர்த்தல் அருமான அளவையானும், பிழம்புணர்த்தல் காட்சி யளவையானும் பெறப்படுவனவாம். பிழம்பு வடிவாதலின், அன்பு, அருள், அறிவு, முதலிய பண்புகளெல்லாம் உண்மை மாத்திரையான் உணர்த்தப்படுமல்லது பிழம்பு உணர்த்தப்படாதனவாம். ஆகவே, பிழம்புணர்த்தப்படாது, உண்மை மாத்திரை உணர்த்தப்படும் ஞானம் முதலிய குணங்களுக்கு அழகிய வடிவு கூறுதல் அரிதாம் என்பது யாவரும் உணர்வர். அவ்வருஞ் செயலிற் றலைப்பட்டு நிறுவும் ஆற்றல் செயற்கரிய செய்யும் புலவர் பெருமக்கள் பால் அமைந்துள தென்பதை அப்பெரும் புலவர்களால் ஆக்கப்பட்ட பொருள் நிரம்பிய பாடல்களிற் காணலாம். திருவருட்பேறு பெற்ற பெரியோர்கள் அருளிய தெய்வ மணங்கமழும் பாசுரங்களினும், உலகியலை நுனித்துணர்ந்தும் தெய்விக நிலையை அழுந்தி யறிந்தும் கற்பாருள்ளம் அவ்வெண்ணமாமாறு, பெரும்புலவர்களாற் பாடப்பெற்ற பெருங் காப்பியங்களினும், குணிப் பொருளாகிய தெய்வங்களையும், மக்களையும் உயர்ந்த நிலையில் வைத்துப் புனைந்துரைக்குங்கால், எக்குணத்தால் யாவர் சிறந்து விளங்குகின்றனரோ, அன்னரை அக்குணவடிவாகவே வருணித்தல் மரபென்பதை அவர்தம் மொழிகளால் கன்குணரலாம். தன்னை அணைக்தார்க்கு அருள் புரிந்து பேரின்பளிக்கும் இறைவனை அவ்வருட்குணத்தினும், இன்பப் பண்பினும், சிறந்து விளங்குதல் பற்றியும், உண்மை அன்பர் பத்தி வலையிற் படுதல் பற்றியும், முறையே, "கருணையே வடிவமாகி" எனவும், "இன்பமே என்னுடை அன்பே" எனவும், ஆன்றோர் பாடி இன்புறுவர். "அன்பே சிவமாவது" என்னும் திருமூலர் அநுபவ மொழியும் ஈண்டு எண்ணத்தக்கது. புலவர் பெருமக்கள் பாடல்களில், உவமை கூறுங்கால் உவமிக்கப்படுவோர் இயல்பை கன்குணர்ந்து குணியைக் குணமாகக் கூறுதல் மரபென்பதற்கு ஒருசில எடுத்துக் காட்டுதல் ஈண்டுப் பொருந்துவதாகும்.

சுந்தாமூர்த்திகளைத் தடுத்தாட் கொள்ளப் போந்த அத்தணரின் மூத்த வடிவத்தைப் புனைந்துரைக்கப் புக்க தெய்வப்புலமைச் சேக் கிழார்பெருமான், "மொய்த்துவளர் பேரழகு மூத்தவடிவேயோ,

அத்தகைய மூப்பெனும் அதன் படிவ மேயோ'' என்று கூறினர். முதியராகிய அந்தணர்க் கமைந்த அழகிய உருவத்தை, 'அழகின் மூத்தவடிவேயோ' எனவும், 'அம்மூப்பெனும் அதன்படிவமேயோ' எனவும் அழகு, முதுமை என்னும் குணங்களாகக் கூறினர். மூப்பின் முடிந்த எல்லையையும், அழகின் முடிந்த எல்லையையும் அவர் வடிவ முடையதாய் இருத்தல் குறித்து இங்ஙனம் எழில் பெறப் புனைந்துரைத் தனர். கல்வியிற் பெரிய கம்பநாடர் இங்ஙனம் குணிப்பொருள்களைக் குணங்களாக உருவகஞ் செய்தலினும், உவமை கூறுதலினும் மிகத் திறமையும் ஆர்வமுமுடையவர் என்பது அவர் பாடல்களால் நன்கறிவ தொன்று. சீதாபிராட்டியைத் தேடச்சென்ற சொல்லின் செல்வனாகிய அநுமான் இலங்கைபுக்குச் சிறையிருந்த செல்வியைக் கண்கூடாகக் கண்டு திரும்பிவந்து அவன் வாயுடைய தென்னுடைய வாழ்வென்று எதிர் பார்த்திருந்த இராமபிரானுக்கு அங்கம் செய்தியைத் தெரிவிக்கும் முகமாகக் கம்பர் பாடிய பாடல்களுள் ஒன்று ஈண்டு நினைந்து இன் புறத்தக்கது. அப்பாடல்,

> ''விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீ ரிலங்கை வெற்பின்
> நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்
> இற்பிறப் பென்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும்
> கற்பெனும் பெயரதொன்றுங் களிநடம் புரியக்கண்டேன்''

என்பதாம். இது, பிராட்டியார் அநுமான் காட்சிக்குக் கற்புடை மகளிர்க்குச் சிறந்த அணிகலன்களாகவுள்ள உயர்ந்த குணங்களின் வடிவமாகக் காணப்பட்டாளன்றிக் குணிப் பொருளாகக் காணப் பட்டிலள் என்பதைப் புலப்படுத்துவதாகும். ஒரு குணிப் பொருளில் அதற்குரிய குணங்கள் மிகவும் சிறந்து காணப்படுமாயின், அக்குணிப் பொருளைக்காணும் அறிஞன் உள்ளம் அக்குணங்களில் ஈடுபடுமென் பது இயல்பே. அங்ஙனியற் சிறந்த அறிஞனாகிய அநுமான் உள்ளத் தைப் பிராட்டியின் கற்குண கற்செயல்கள் மிகவும் ஈடுபடுத்தினவாதலின் அவள் திருவுருவைக் குணிப் பொருளாகக் கண்டிலேன் என்பான் 'நங்கையைக் கண்டேனல்லேன்' என்றான். பின்னை அவன் காட்சிக் குப் பொருளாக ஆங்குக் காணப்பட்டன யாவை யெனின், இற்பிறப்பும், இரும் பொறையும், கற்பும் என்னும் சிறந்த குணங்களேயாம். இவை ஒருங்கு கூடித்தமக்கமைந்த பற்றுக்கோட்டின் சிறப்பால் தம்மியல்பில் ஒருசிறிதும் குறையாது நிரம்பி விளங்கின என்பதைப் புலப்படுத்தவே 'களிநடம் புரியக்கண்டேன்' என்று கூறினன். பிராட்டியை உயி ருடனிருக்கக் கண்டேன் என்று அநுமான் கூறுதலினும், அவர் பிறந்தகுலம், புக்க குலங்களின் பெருமைக் கேற்பக் கற்பரசியாக விளங்கிய நிலையை எடுத்துக் கூறுதலே இராமபிரானுக்கு உவப்பாகும் என்பது கண்ட அநுமான் இங்ஙனம் கூறினன். இவ்வுண்மையைக் 'கண்டனன் கற்பினுக் கணியை' என்னும் அநுமானது முன்மொழி யாலும் நன்கறியலாம். பிராட்டியின்பால் சனககுலமாகிய உயர்குடிப் பிறப்பிற்கேற்ற அறிவொழுக்கங்களும், உயர்ந்த கற்பும் ''அறையிருந்

கழலவற் காணுமாசையான்'' மேற் கொண்ட பொறையும், சிறந்து காணப்பட்டமையால் அறுமான் குணிப்பொருளாகிய 'கங்கையைக் கண்டிலேன்' எனவும், இன்னகுணங்கள் ஒருங்கு கூடிச் செழித்து விளங்குதலைக் கண்டேன் எனவும் கூறினன். இங்ஙனமே, இராமன் பிரிவிற் பரதன் எய்திய துயர்நிலையை வருணிக்கப் புக்க கம்பர், 'அவலம் ஈதென, எழுதியடி படிவமொத்து' இராமபிரான் கட்புலனுக்குக் காணப்பட்டான் என்பர். இராமபிரானும் பிராட்டியும், இளையபெருமாளும் ஒருங்கு செல்லும் காட்சிநிலை முறையே வாய்மையும், சிலமும், பத்தியும் உருக்கொண்டு நடப்பனபோலாமென்று வடமொழி காடக ஆசிரியராகிய பாசகவி கூறியதும் ஈண்டு நினைந் தின்புறத்தக்கது.

இங்ஙனம் குணிப் பொருள்களைக் குணங்களாக வருணிக்குஞ் சிறந்த கவிமரபு, செய்யுளெல்லாம் தெய்வமணங் கமழத் திருத்தொண்டர் புராணத்தை யாக்கி யருளிய சேக்கிழார் பெருமான்பாற் சிறந்து அமைந்துள தென்பதை, அத்தொண்டர் புராணத்தைப் பயின்றோர் எல்லாம் நன்குணர்வர். அவர் அடியார்களை உவமை முகமாகவும், உருவகமுகமாகவும் இங்கிலையில் வைத்துப் புனைந்துரைப்பதைப் பல இடங்களிற் காணலாம். அடியாருட் கண்ணப்பநாயனர் அன்பெனும் குணத்தாற் றலைசிறந்தவராவர். இது 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்' என்று அன்பெனும் ஆறு கரைபுரளப் பெற்ற மணிவாசகனர் அருளிய திருவாசகத்தினும் கண்டது. இவ்வுண்மையை அவர் வரலாற்றுன் நன்குணர்ந்த சேக்கிழார் அவரை எங்ஙனம் பாடுவர் என்பது சொல்லாமலே விளங்கும். கண்ணப்பர் காளத்தி மலையில் ஏறுங்கால், நாணன் என்பான் வழிகாட்டிச் சென்றான். 'ஆணையாஞ் சிவத்தைச்சார அணையும் ஐயர்' அவன் பின் சென்றார் என்று கூறுதலில், உள்ளம் ஒருப்படாத சேக்கிழார் நாணன் வழிகாட்டி மலையிற் செல்லக் கண்ணப்பர் உடல் பின் சென்ற தெனினும், அவர் அன்பு முன் கடந்ததென்று முகிழ்ந்த அவ் அன்பின் விரைவைக் குறிக்க 'நாணனும் அன்பும் முன்பு களிர்வரையேறத்தானும், பேணுதத்துவங்களென்னும் பெருகு சோபான மேறினர்' என்றும், மலையுச்சிக்கட் சென்றவுடன், அங்கணராகிய இறைவன் கருணை நோக்கமாகிய கயன தீக்கை பெற்றதும், பிறவிக்குரிய சார்புகளை யெல்லாம் ஒழித்துச் சிவபிரான் திருவடி நீழலில் அன்புருக்கொண்டு விளங்கினர் என்பது தோன்றப் 'பொங்கிய வொளியினீழற் பொருவிலன் புருவமானர்' என்றும் அருளிச்செய்வாராயினர். இங்கே இறைவனை 'ஒளி' என்னும் குணவடிவாகவும், கண்ணப்பரை 'ஒப்பற்ற அன்பே'ன்னும் குணவடிவாகவும் கூறியது அறிந்து இன்புறத்தக்கது. யாண்டும் விளங்கித் திகழ்தல் பற்றி இறைவன் ஒளியாகவும், அவ்விறைநிலை ஒன்றே பற்றுக் கோடாகக் கொண்டு, குழைந்து உருகுதலின் கண்ணப்பர் அன்புருவமாகவும் கூறப்பட்டனரென்க. கண்ணப்பரது முறுகிய அன்பின் நிகழ்ச்சியை நாணன் முகமாகக் கேட்ட அவர் தந்தை நாகனென்பான் மலைக்கட்சென்று அவரை மீட்கப் பல்லாற்றானும் முயன்றும் இயலாமையாற் கைவிட்டுத்

ஞானத்தின் திருவுரு

திரும்பிணன் என்று கூறுமிடத்து அங்ஙனம் மீளாமைக்குரிய உண்மையை உணர்ந்த சேக்கிழார்,

"முன்பு திருக் காளத்தி முதல்வனுர் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திருப்பு பொன்னுறப் போல்யாக்கைத்
தன்பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற
அன்புபிழம் பாயினுர் அவர்கருத்தின் அளவினரோ"

என்று பாராட்டிக் கூறியுள்ளார். விதிநெறிநின்று இறை வழிபாடு செய்த சிவகோசரியார், கண்ணப்பரின் அன்பு நெறிவழிபாட்டிற்கண்ட இறைச்சி முதலியவற்றை அநுசிதம் என்று வெறுத்தாராக, அவர் கனவில் இறைவன் எழுந்தருளிக் கண்ணப்பரின் குணம், செயல்களெல்லாம் நமக்கு உவப்பாவனவாம் என்று திருவாய் மலர்ந்தருளுங்கால் 'அவனுடைய வடிவெல்லாம் நம் பக்கல் அன்பு' என்று அருளிய உண்மையும் ஈண்டுக் கருதத்தக்கது. கண்ணப்பர், சிவகோசரியார் ஆகிய இவ்விரு பேரன்பர்களின் வழிபாட்டின் உண்மையை நன்குணர்ந்த திருஞான சம்பந்தப் பெருமான் இவ்விருவர் செயல்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனபோல் காணப்படினும் இவற்றிற்கு மூலகாரணமாகவுள்ளது உண்மை அன்பெனக் கண்டு தாம் பாடிய தேவாரத்தில், "ஊனெடுண்டல் நன்றென ஊனெடுண்டல் தீதென, ஆனதொண்டர் அன்பிணைப் பேசுகின்ற தன்மையான்" என்றருளிச் செய்வாராயினர். 'ஊனெடுண்டல் நன்றென' என்பது கண்ணப்பர் செயலாகவும், 'ஊனெடுண்டல் தீதென' என்பது சிவகோசரியார் செயலாகவும் குறிப்பிடப்பட்டனவாம். அன்பு காரணமாக நிகழ்ந்தவளவில் இவ்விருவர் செயல்களும் ஒக்குமாயினும், கண்ணப்பர் இறைவனை 'ஆர்வமுன்பொங்க ஆரா அன்பினிற்கண்டு கொண்டு' பிறிதொன்றனையுங் காணுமையானும், தமக்கெனப் பொறிகள் புலனுகர்ச்சியிற் றலைப்படாமையானும், கண்ணிடந்தப்பிய எண்ணருஞ் செயலானும், ஈண்டு அவர் அன்பு சிறந்துள தென்பது குறித்தே அவர் அன்புருவமாகப் பாராட்டப்பட்டனர் என்பது தெளிவாம். இத்துணையுங் கூறியவாற்றுல் உயர்ந்த குணங்களின் முடிந்த எல்லையில் நிற்பாரைச் சிறந்த கவிகள் குணவடிவாக வருணித்துரைப்பர் என்னும் கவிமரபின் உண்மை ஒருவாறு புலப்படுத்தப்பட்டவாறும்.

இனி, இங்கே எடுத்துக்கொண்ட ஞானத்தின் திருவுருவைப்பற்றி ஆராய்வாம். இப்பொன்மொழி, சிவனடியார் பெருமையைச் செப்பமுறத் தெளித்துரைக்கும் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளியதாகும். பாண்டிநாடும், அரசனும் சமண் சமயம் புக்குச் சமய நெறியில் முறை பிறழ்ந்திருக்குங்கால் அச் சைவச் செங்கோலைத் தாங்கிநின்ற பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் பெருமானுகிய குலச்சிறையாரும், அமணிருளோட்டிச் சைவக்கதிர் பரப்ப எண்ணி ஞான இள ஞாயிறுக விளங்கிய திருஞான சம்பந்தப் பெருமானை மதுரைக்கு எழுந்தருளுவித்தனர். அதுகாலை, அப்பெருமான் அமர்ந்த திருமடத்தில் அமண்கையர்

ஞானத்தின் திருவுரு

கொலுவிய தீயின் வெம்மை, திருவருட்பாங்கால், இக்கொடுஞ் செயற்கு உடம்பட்ட அரசன் உடலிப்பற்றி வெதுப்பியது. அது தீர்க்கும் வாயிலறியாது சமணர் இடர்ப்பட்டுழல்பொழுது தேவியாரும், அமைச்சரும் அரசனை யணுகித் ''தீய இப்பிணியே யன்றிப் பிறவியும் தீர்த்தற்குரிய ஞானசம்பந்தர்'' என்னும் நாம மந்திரத்தை அம்மன்னவன் செவியில் ஓதினராக, அம்மந்திரவன்மையால் அரசன் உணர்வுற்று ' மன்னிய சைவநீதி மாமறைச் சிறுவர் வந்தால், அன்னவரருளாலென்னுயிர் அகலுமேல் அழையு ' மென்று கூறினன். அப்பணியை மேற்கொண்டு அரசியாரும், அமைச்சரும், விரைந்து சென்று திருமடத்தைச்சார்ந்து, ஆங்கு இளஞாயிறுபோல ஞான ஒளிபரப்பி விளங்கும் திருஞான சம்பந்தப் பெருமானைக் கண்களிப்பக் கண்டனர். இவ்வமயத்தில் அன்னர் காட்சிக்குத் திருஞான சம்பந்தப்பெருமான் எங்ஙனம் காணப் பட்டனர் என்பதைச் சேக்கிழார் பெருமான் தம்முள்ளக்கிழியின் உரு வெழுதிக் கண்டு தெரிவிக்கப் புக்குத்தம் அகக்காட்சிக்குப் புலனகிய அத்திருவுருவை அன்புலகங்கனிந் தொழுகும் ஓர் அருண்மொழிப் பாடலால் விளக்கியருளினர். அத்திருப் பாட்டின் தலைப்பில் இப்பொன் மொழி விளக்கமுற்றுத் திகழ்கின்றது. அப்பாடலை ஈண்டுக் காண்பாம்.

> '' ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
> வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
> தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
> கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்'',

இப்பாசுரத்தில், காண்டற்குரிய செயப்படுபொருள்களைப் புலப்படுத்தும் இரண்டாம் வேற்றுமை உருபையுடைய சொற்கள் நான்குள்ளன. அவை முறையே 'திருவுருவை', 'தனித்துணையை', 'மதிக்கொழுந்தை', 'கானத்தின் எழுபிறப்பை', என்பனவாம். இந்நான்கும் தனித்தனியே 'கண்களிப்பக்கண்டார்கள்' என்புழிக் காண்டல் வினையைக் கொண்டு முடிந்தன. இரண்டாம் வேற்றுமைக்கு ''வினையே வினைக்குறிப், பல் விருமுதலிற்றோன்றும்'' எனவும், 'நோக்கலின்' எனவும் கூறிய தொல் காப்பிய விதிக்கிணங்கக் 'கண்டார்கள்' என்னும் தெரிநிலை வினைமுற்று முடிக்குஞ் சொல்லாயிற்று. இந்நான்கும் திருஞானசம்பந்தப் பெரு மானைக் குறிப்பனவாம். கனிந்த போன்புடைய மங்கையர்க்கரசி யாரும் குலச்சிறையாரும் சம்பந்தப் பெருமானை ஆர்வமிகக் காணுங் கால், அவர்கள் கட்புலனுக்கு அப்பெருமானுடைய உள்ளமும், மெய் யும், மொழியுமாகிய மூன்று கரணங்களும் இங்ஙனம் புலப்பட்டன வென்று சேக்கிழார் பெருமான் தெளிந்து, ஒரு வரையறையைத் தம் உள்ளத்தமைத்து உளங்குளிரப் பாடுவாராயினர். உட்கருவியாகிய தூய உள்ளத்தின் இயல்பைக் குறித்து, 'ஞானத்தின்றிரு உருவை' 'நான்மறையின் தனித்துணையை' என்னும் இரண்டு தொடர்மொழி களானும், மழவிளங் குழவிப் பருவத்ததாகிய தூய உடலினியல்பைக் குறித்து, 'வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தை' என்னும் தொடர்மொழியானும், சிவபரம் பொருளைப் பற்றியே நிகழும்

ஞானத்தின் திருவுரு

இசைத்தமிழ் பயிலும் திருவாயினின்றும் வெளிப்படும் தாய்மொழி இயல்பைக் குறித்துச் 'செஞ்சடையார் சீர்தொடுக்குங் கானத்தின் எழு பிறப்பை' என்னும் தொடர்மொழியானும் புலப்படுத்தார் என்பது உய்த்துணருவார்க்கு கன்குபுலனும். சம்பந்தப் பெருமான் சித்தம் சிவமாகப் பெற்ற செவ்வியராதலின் அவருள்ளத்தின் தூயகிலேநோக்கி 'ஞானத்தின் றிருவுருவை' என்றார். அன்பின் முடிந்த எல்லையினின்ற கண்ணப்பநாயனரை 'அன்பு பிழம்பாயினர்' 'பொருவிலன்புருவமானர்' என்று கூறியது போலவே, மெய்யுணர்வின் முடிந்த எல்லையிற்றிகழும் ஞானசம்பந்தப் பெருமானை 'ஞானத்தின் திருவுரு', என்றது மிகவும் பொருந்திய தொன்றும். இறைவனை அடைதற்குரிய நெறிகள் பல வற்றுள், அன்புநெறியும், அறிவுநெறியுமே சிறந்தனவா மென்பது பெரியார் கண்ட முடிபு. அன்பும் ஞானமுமாகிய இவ்விரு குணங்களும் கண்ணப்பர், ஞானசம்பந்தராகிய இருவரிடத்தும் ஒருங்குள்ளன வெனி னும், வெளிப்பட்டு விளங்கிய சிறப்புப்பற்றி அவ்விருவரையும் முறையே அன்புருவம் எனவும், ஞானத்தின்றிருவுரு எனவுங் கூறினர். சம்பந்தப் பெருமான் இறைவியின் திருமுலைப்பாலுண்டு, அங்கிலையில் ஞானம் எய்தினர் என்பதைச் சேக்கிழார் பெருமான்,

> "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
> பவமதனை யறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞானம்
> உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
> தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தாரந்நிலையில்"

என்னும் திருவிருத்தத்தால் விளக்கினர். இப்பாடலிற் குறிக்கப்பட்ட ஞானம், 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞான'மாகிய உவமை யிலாக் கலைஞானமும், பவமதனை யற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானமும்' என இரண்டாகும். ஆகவே, நூலறிவும், அநுபவ உணர்வும் ஆகிய அபரஞான பரஞானங் களை யொருங் கெய்தினர் என்பதே முடிந்த பொருளாகும். இறைவன் றிருவருட் சத்தியாற் பெற்ற ஞானமே சம்பந்தப் பெருமானுக்கு உள்ளத்தின் றூய இயல்பாகத் திகழ்தலே நோக்கி, ஞானத்தின் அழகிய வடிவம் இதுவென்பார், 'ஞானத்தின்றிருவுரு' என்றார். பண்பாகிய ஞானம் பண்பியாகிய ஒருவடிவைக் கொள்ளப்புகின் இதுபோலுஞ் சிறந்த பிழம்பு அதற்கரிதென்பார் 'ஞானத்தின் உரு' என்னாது 'திருவுரு' என்றார். ஈண்டு மனமொழி மெய்களாகிய மூன்றனுள் மெய்யின் றூய்மையையும் மொழியின் றூய்மையையும் புலப்படுத்துவார் முறையே, 'மதிக் கொழுந்தை' எனவும், 'கானத்தின் எழுபிறப்பை' எனவும் ஒவ்வொன்றே கூறிய ஆசிரியர் உளத்தூய்மைக்குத் 'திருவுருவை' 'தனித்துணையை' என்று இரண்டுபொருள் கூறியதன் கருத்தை ஆராய்தல் வேண்டும்.

"ஞானமாவது வீடுபயக்கும் உணர்வு" என்பர் பரிமேலழகர். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்

ஞானத்தின் திருவுரு

பொருள் காண்பதறிவு'' என்பது உலகியலறிவின் இலக்கணமாகவும், ''எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்பது வீடுபயக்கும் உணர்வாகிய மெய்யுணர்வின் இலக்கணமாகவும் பொய்யில் புலவர் பொருளுரையிற் காணப்படுகின்றன. பொருளிரண்டனுள் முன்னது சொல்லாலறியப்படுவது; பின்னது இயங்குதிணையும், நிலைத்திணையுமாகிய உலகத்தைக் குறிப்பது. இவ் வுண்மை கருதியே, முறையே ''யார் யார் வாய்க் கேட்பினும்'' எனவும், ''எத்தன்மைத்தாயினும்'' எனவும் கூறுவாராயினர். முன்னது ஒருவற்குக் கல்வி கேள்விகளாலுகிய செயற்கை அறிவுக்குக் காரண மாகிய மதிநுட்பம் என்னும் இயற்கை அறிவென்பதும், அஃது உயர்ந் தார், இழிந்தார், நட்டார், பகைவர் யாவராயினும் அவர்வாய்க் கேட்கப் படுஞ் சொல்லைப் பொருளின் பயனெக்கிக் கொள்ளுதற்கும், தள்ளுதற் கும் உரிய கருவியாம் என்பதும் அறிகின்றேம். பின்னது, இயங்கு திணையும், நிலைத்திணையுமாகிய உலகத்துப் பொருள்களின் கற்பனை களைப் போக்கி, நிலமுதலிய தத்துவங்களின் தொகுதியென அறி தற்கும், அவற்றைத் தத்தம் காரணங்களுளொடுக்கிக் கொண்டு சென்று முடிவிற் காரண காரிய மிரண்டுமின்றி நிற்பதாகிய பரம்பொருளை உணர்தற்கும் உரிய கருவியாமென்பது புலனும். இவ்வுண்மை யறிந்தே 'முன்னது பொருட்பாலில் அரசியற் பகுதியினும், பின்னது அறத்துப் பாலில் துறவறப் பகுதியினும் அமைத்துக் கூறப்பட்டனவாம். இவ் வுண்மையையே சமயநூலார் ஞானம், அபரம், பரமென இருதிறப் படுமென்று வகுத்துக் கூறுப. அவ்வகை முன்னருங் கூறப்பட்டது. அபரஞான மென்பது மறையாகம முதலிய நூல்களின் வாயிலாக உண் டாவது; பராஞான மென்பது அநுபவ வாயிலாக நிகழ்வது; அபரஞான மாகிய நூலறிவே பராஞானமாகிய அநுபவ வுணர்வைப் பயக்கு மாத லான் அவ்விரண்டும் அழிவிலின்ப மெய்து மார்வமுடைய உயிர்க்கு இன்றியமையாதனவாம். இவ்வுண்மையைப் புலப்படுத்தற்கே, திரு நாவுக்கரசுநாயனார் ''உடம்பெனும் மனையகத்து ளுள்ளமேதகழியாக, மடம்படுமுணர்நெய்அட்டி உயிரெனுந் திரிமயக்கி, இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கிற், கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே'' என்னும் தேவாரத் திருப்பாசுரத்தில், 'மடம்படு முணர் நெய்' எனவும், 'இடம்படு ஞானத்தீ' எனவும் ஞானத்தை உருவக வுறுப்பு இரண்டாகக்கொண்டு திருவாய்மலர்ந்தருளினர். ஈண்டு 'மடம்படுமுணர், என்பது, அறியாமை கெடுதற் கேதுவாகிய அபர ஞான மெனவும், 'இடம்படு ஞானத்தீ' என்பது அநுபவ உணர்வாகிய பராஞானமெனவும் பொருள் கொள்ளல் வேண்டும். முன்னது நெய்யா கவும், பின்னது தீயாகவும் உருவகஞ் செய்யப்பட்ட வியைபு ஈண்டுக் கருதத்தக்கது. ''கற்றறியேன் கலைஞானம், கசிந்துருகே னெயிடினும்'' என்று மணிவாசகனார் கூறியருளியதும் இவ்வுண்மையை நிலைப்படுத்து வதாகும். அபரஞானத்தை, பாசஞான பசுஞானங்களாகவும், பர ஞானத்தைப் பதிஞானமாகவும் சைவநூல் கூறும். பதிஞானம், சிவ

ஞானத்தின் திருவுரு

ஞானம், மெய்யுணர்வு, அநுபவ வுணர்வு என்பன ஒரு பொருளனவாம்; சிவஞானமே சிவாநுபவத்திற்கு நேர் வாயிலாகும். 'ஞானத்தால் வீடு எனவும், "பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம பரனைப் பதிஞானத்தாலே, நேசமுறுமுள்ளத்தே நாடி" எனவும் சைவ சித்தாந்தம் புலப்படுக்கும். வீட்டின்பத்திற்குச் சிவஞானம் நேர்வாயி லாதலைத் திருநாவுக்கரசு நாயனரின் முத்திநிலையை விளக்கவந்த ஆசிரியர், "நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி, அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டவரசெய்திஞர்" என்று கூறினர். 'ஞானவடிவே யாகி' என்பது ஈண்டுக்கருதத்தக்கது. காமம் முதலிய குற்றங்களை யெல்லாம் ஒழித்தற்கும் இச்சிவஞான மொன்றே கருவியாமென்பது ஆன்றோர் அநுபவம். சேக்கிழார் பெருமான் இவ்வநுபவ வுணர்ச்சியிற் பெரிதும் தலைப்பட்டவர் என்பதை உலகியல் நிகழ்ச்சிக்கு உவமை கூறு மிடத்தும், அவர் திருவாக்கில் இவ்வுண்மை வெளிப்படுதல் கொண்டு தெளியலாம். ஏனாதிநாயனர் அதிசூரன் என்பவனைடு செய்த வாட் போரில் அதிசூரனுடைய படைவீரருட்பலர் இறந்தனராக, எஞ்சினின்ற ரெல்லாரும் போர்க்களத்தை விட்டுப் புறமுதுகிட்டோடினர் என்பதை உவமிக்கப் போந்த ஆசிரியர், "தலைப்பட்டா ரெல்லாரும் தனிவீரர் வாளிற், கொலைப்பட்டார் முட்டாதார் கொல்களத்தை விட்டு, நிலைப் பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதி, லலைப்பட்ட ஆர்வமுதற் குற்றம் போலாயினர் என்று கூறியருளினர். மெய்யுணர்வின் முன்னர்க்காம வெகுளி மயக்கங்கள் நில்லா என்னும் உண்மையையே ஈண்டு உவமை யாக்கிய நயம் பாராட்டத்தக்கது. இன்பச்சுவையை வருணிக்குங்காலும் தெய்வமணங் கமழப்பாடும் இப்புலவர்பெருமான் பாடல்களில் இத் தகைய உவமை முதலியன அமைதல் இயல்பேயாம். ஆதலின் சிவ ஞானச் செல்வர்களாகிய மங்கையர்க்கரசியார்க்கும், குலச்சிறையார்க் கும், திருஞானசம்பந்தப் பெருமான் காட்சியில், உளத்தூய்மைபற்றி அப்பெருமான்றிருவுரு மெய்யுணர்வின் வடிவாகப் புலப்பட்ட தென் பதைத் தெய்வக்கவிஞர் திருவுள்ளம் உணர்ந்தமையால், 'ஞானத்தின் றிருவுரு' என்றுமுதற்கட் கூறினர். அத்தகைய ஞானம் பரமாகவும், அபரமாகவுமிருவகைப்படு மென்பதை யுட்கொண்டும் அவ்விருவகை ஞானத்தையும் அம்மையா ரருளாற் சம்பந்தப்பெருமானுருங் கெய்தின ரென்னு முண்மையை யுணர்ந்தும், உளத்தூய்மைபற்றிப் பரஞான வடிவமாக விளங்குதலைக்குறித்து 'ஞானத்தின் றிருவுருவை' என்ற ருளிய வாசிரியர் அபரஞானமும் அவர்க்கு எளிதிற் கைவந்த தென் பதைப் புலப்படுத்தவே, 'நான் மறையின் தனித்துணையை' யென்றுங் கூறினர் பரஞானமாகிய மெய்யுணர்வின் வடிவாக விளங்கும் சம்பந்தப் பெருமான் அதனிற் குழ்ந்த அபரஞானமாகிய நூலுணர்வின் வடிவாக வும் விளங்கினரென்று கூறுதல், அப்பெருமான் பெருமைக்கு ஏலாத தொன்றென்பது கருதியும், அந்நான்மறை யறிவாகிய அபரஞானம், பேரின்ப மெய்தமுயலும் உயிர்களின் பொருட்டு என்றும் அழியாத நிலைபெற்றிருக்கவேண்டும் என்பது அப்பெருமான் திருவுள்ள மாதலை

யுணர்ந்தும், அவ்வபர ஞானத்திற்கு அவர்அருட் பாசுரங்களாற் பெரி தும் துணைநின்றவர் என்பதைப் புலப்படுத்தவே 'கான் மறையின்றனித் துணையை' யென்றுங் கூறியருளினர். சம்பந்தப் பெருமான் முதலிய சமயகுரவரருளிய தேவாரத்திருப்பாசுரங்கள், தமிழ் மறையாக விளங்குகிறன வாதலால், அபரஞானத்திற்கு ஒப்பற்ற துணையாக வுள்ளாரென்று அப்பெருமானைக் குறிப்பிட்டது பெரிதும் போற்றத் தக்கதே. பரஞானமாகிய மெய்யுணர்வின் வடிவாகவும், அபரஞான மாகிய நூலறிவிற்குச் சிறந்த துணையாகவும் அப்பெருமான் காணப் பட்டாரென்று மரபு பிறழாது வரையறைப் படுத்துரைத்த நயம் அறிஞ ருள்ளத்தை மிகவும் இன்புறுத்துவதாகும். இங்ஙனமே இப்பெரு மானைத் தோணி புரத்தவர் தாமெதிர்கொண்டு துதிக்குங்கால், '' கலை ஞானத் தாழிய கடலே, எனவும், 'வளர்ஞானப் பொறையணிமுகிலே' எனவும் இருதிறத்து ஞான வடிவமாகக் கொண்டு பாராட்டினர் என்று பிறிதோரிடத்தும் ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார். இங்ஙனம் சம்பந்தப் பெருமான் இவ்விரு ஞானங்கட்கும் எல்லையாக விளங்குதலைத் தெளி வுறுத்தற்கே மெய், மொழிகளின் தூய்மைபற்றித் தனித்தனியே செயப் படுபொருள் ஒரோ வொன்றாகவும், உள்ளத்தின் தூயவியல்புபற்றி அதற்கு மாத்திரம் செயப்படுபொருளிரண்டாகவும் வகைப்படுத்துரைத் தனர் ஈண்டு ஆசிரியரது நுண்மாணுழை புலம் அறிஞருள்ளத்தைப் பெரிது மின்புறுத்துவதாகும்.

இனி, சம்பந்தப் பெருமான் திரு மேனியின் ஒளியும் மழவிளங் குழவிப்பருவமும் பொலிந்து திகழ்தலைப் புலப்படுத்தற்கே, 'வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக் கொழுந்தை' என்றார். இஃதோ ரணியாகும். மதி வானத்திலுார்ந்தியங்குவது. இஞ்ஞானமதி மண் ணுலகிற்றிகழ்ந்தின் புறுத்துவது. ஈண்டு வளர் மதியென விசைத் தொகையாகக் கூறியதன் நுண் பொருள் ஆராயத்தக்கது. வளர் மதிக்குப் பதிணுறுகலைகள் நிரம்பியதும் மேல் வளர்ச்சியின்று. அது போல்ச்சம்பந்தப் பெருமான் திருவுடல் பதிணுறியாண்டு வளர்சியுற்றுப் பின் பேரொளிப் பிழம்பாகிய இறை வடிவில் மறைந்தது. இவ்வுண்மை புலப்படுத்தற்கே 'வளர்மதி' யென்று கூறினர் போலும். இங்ஙனமே, கண்ணப்ப நாயனர் புராணத்திலும் "பான்மதி உவரி யீன்முலை மகப் பயந்த போது" என்று அவர் அவதாரத் தொடக்கத்தில் அன் புருவாகிய கண்ணப்பரைப் பான்மதியாகவும், அவர் தோன்றிய வேடர் குலத்தை உவர்க்கடலாகவும் உவமித்துக் கூறினர். அதற் கேற்ப அந் நாயனர்க்கு வீட்டுநிலை யெய்தும் திருணத்திற் பதிணுாண்டு நிறை வுற்றது எனக்குறிப் பிடப்புக்க ஆசிரியர் "கலைவளர் திங்களேபோல், எண்ணிரண்டாண்டின் செவ்வி யெய்தினர்" என்று தெளிவுறுத் தருளினர். இத்தகைய இயைபையே திருஞான சம்பந்தப் பெருமான் வரலாற்றிலும் புலப்படுத்தாரெனக் கோடல் பொருந்துவதாகும். "கண்ணிறை கதிரே, கலைவளர் மதியே" எனப் பிறிதோரிடத்துக் குறிப்பிடுதலும் அறியத்தக்கது. ஒளி தீயினும் மணியினும் காணப்

படினும், தீயொளி சுடுவதாக, மணியொளி குளிர்க்திருத்தலையும், அங்ஙனமே ஞாயிற்றினொளி வெய்யதாகத் திங்களொளி, தண்ணிதாக விருத்தலையு முணர்கின்றேம். சம்பந்தப் பெருமான் திருமேனியிற் றிகழு மொளி தண்ணிதாதலையும், அவ்வொளியின் செழுமையும் மேன்மையும் கொழுந்து போற் காணப்படுதலையும் புலப்படுத் தற்கே 'மதிக் கொழுந்தை' என்று கூறினர்.

இனி, சம்பந்தப் பெருமான் மொழியின்றாய வியல்புபற்றிக் 'கானத்தி னெழுபிறப்பை' என்றார். அவர் அவதாரப் பயன் கூறுமிடத்தும், பிறிதோரிடத்தும், முறையே "இசை முழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலை பெருக" எனவும், "பண்ணியல்கதியே" எனவும் கூறியருளினர். அப்பெருமான் தம் மெய்யுணர்விற்கண்டநுபவித்த பொருள்களை யெல்லாம் செழுந்தமிழ் மொழியிற் றேனினும் இனிய இசைப்பாடலிலியைத்து உளங் குளிர்ந்துபாடி, வண்டமிழ் செய்தவம் நிரம்பச் செய்தவராதலானும், அத்திருப்பாசுரப் பொருளெல்லாம் சிவபரம் பொருளையே பற்றினவாதலானும், "தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்குங், கானத்தின் எழுபிறப்பை" யென்றார். அப்பெருமான், "காழுமின்னிசையாற் றமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" எனத் தம்மைத்தாங் கூறிய அடை மொழிகளானும், அவர் தமிழிசையிற் சிவபரம் பொருளைப் பாடுதலில் மிக்க விருப்பமுடையவரென்பதை உணரலாம். கானத்தின் எழுபிறப்பாவது, இசைக்குரிய குரல் துத்தம் முதலியனவாம். இவற்றைச் 'ச. ரி. க. ம. ப. த. நி' என்று கூறுவர்—வடநூலார். பிறப்பு எழுவகைத்தாதலின் இசைக்கும் எழுபிறப்புக் கூறியது பொருத்தமே. இவ்வெழுவகைப் பிறப்பையுடைய இசை வடிவாகவும், அப்பெருமான் காணப்படுதலால், "கானத்தின் எழுபிறப்பை' யென்றார். அக்கானமும் உலகியற் பொருள் பற்றி நிகழுமாயின் சிறந்ததாகா தென்னுங் கருத்தால் 'செஞ்சடையார் சீர் தொடுக்கும் கான' மென விசேடித்துரைக்கப்பட்டது. இறைவன் 'எழிசையாய் இசைப்பயனுய்' விளங்குமியல் பினாதலின் அப்புர மெரித்தார் திருமகனாகிய சம்பந்தப் பெருமானுக்கும் அது பொருந்துவதாகும்.

இனி, மனமொழி மெய்களின் தூய நிலைபற்றி இங்ஙனம் கூறிய பொருள்களிற் பிறிதோரியைபும் நம்முள்ளத்தை யின்புறுத்துவதாகும். அஃதாவது, மனமொழி மெய்களாகிய மூன்றன் தூய்மைக்கும் ஞானமே வெளிப்படையாகவும், குறிப்பாகவுமியைத்து விளங்குதலாம். உளத் தூய்மை பற்றி "ஞானத்தின் திருவுருவை நான் மறையின் தனித் துணையை" என வெளிப்படையாகக் கூறினர். உடற்றூய்மை பற்றி 'மதிக் கொழுந்தை' யெனக் குறிப் பிற்பெற வைத்தார். மதி கலைகளையுடையதென்பதனையும், கல்விக்கு உவமை கூறுங்கால் "திங்களன்ன கல்வியும்" என இதனையே ஆன்றோர் எடுத்தாளுதலானும் குறிப்பிற் பெறப்பட்டதாம். 'கலைவளர் மதியே' யென முன்னர் எடுத்துக் காட்டியதும் ஈண்டியைபுடைத்தாம். சிவகன், "கோண் மின்னுமின்

பேரற் குளிர் மாமதித் தோற்ற'' மொத்திருந்தான் என்று கூறிய சீவக சிந்தாமணிப் பாடற்குறிப்பில் "ஞாயிறு போல்வானைக் கலையைத் தோற்றுவிப்பதாக விருத்தலின் ஈண்டு மதியை உவமைகூறினர்'' என்று நச்சினார்க்கினியர் கூறியதனாலும் இவ்வுண்மை புலனும். மூன்றாவதாகிய மொழித்தாய்மைபற்றிக் கூறிய விடத்தில் 'ஞானத்திற்குச் 'செஞ்சடையார் சீர்தொடுக்கும்' என்று அடைபுணர்த்ததால் ஆண்டும் ஞானம் புலனுதல் நோக்கத்தக்கது.

இனி, இப்பாசுரத்தில் இரண்டாம் வேற்றுமைகளுக்கு முடிக்குஞ் சொல்லாகவுள்ள 'கண்களிப்பக் கண்டார்கள்' என்பது வியப்பின் பாலதாகிய இன்பத்தை அளிப்பதாகும். இங்கே கூறப் பட்டனவெல்லாம் கண்களிப்பக் காண்டற்கியலாதனவாம். ''ஞானத்தின் திருவுருவும் ஞான்மறையின் தனித்துணையும்'' பொறிகளாலறியப்படாத குணங்களாதலானும், மதி கட்புலனுலறியத்தக்க தாயினும், மண்ணில்வளர் மதிக் கொழுந்து, இல்பொருளாக நின்று காணப்படாத தொன்மூகலானும், ''கானத்தின் எழுபிறப்பு'' செவியுணர்விற் கன்றிக்கட்பொறிக்குப்புலனுவதொன்றன்மையானும், இம்மூன்றும் கண்ணுற் காணப்படாதனவாகவும், அவற்றைக் 'கண்களிப்பக் கண்டார்கள்' என்றது வியப்பின் பாலதாகும். காண்டற்கியலாப் பொருள்களைக் 'கண்களிப்பக் கண்டார்கள்' என்று கூறுதல் எவ்வாறு பொருந்துமெனின் கண்ட அதிகாரிகளின் ஞானமும் பத்தியும் இங்ஙனம் காண்டற்குக் கருவிகளாயினமையிற் பொருந்துமென்க. இஃது அவ்வியப்பின்பாலதாய் நின்று இன்பம் விளைவிப்பதாகும். புறக்காட்சிக்குப் புலனுகாத பொருள்கள், காணும் அதிகாரிகளின் சிறப்பியல்பாகிய அகக்காட்சிக்குப் புலனுமென்னும் உண்மையைக் கண்ணப்ப நாயனூர் புராணத்திலுங் காணலாம். ஞானத்தின் திருவுருவாகிய சம்பந்தப் பெருமான் அன்பின் திருவுருவாகிய கண்ணப்ப நாயனரின் திருவுருவத்தைத் தரிசித்த முறையைக் கூறுங்கான், மரபு பிறழாமல் அழகுற இவ்வுண்மை புலப்படுக்கப் பட்டுள்ளது. சம்பந்தப் பெருமான் முதலில் இறைவன்திருவுருவத்தை வணங்கிப் பின்னர், கண்ணப்பர் திரு வுருவத்தை வணங்கினரென்று கூறும் பொழுது கண்ணப்பர் வணக்கம் இறைவணக்கத்தின் பின்னிகழ்ந்ததெனினும், ''வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன்காண்பார் போல் மெய்வேடர் பெருமானைக் கண்டுவீழ்ந்தார்'' என்று அதனை இறைவணக்கத்தின் பயனுகக் கூறியது, உணர்வார் உள்ளத்தைப் பெரிதும் கனிவிப்பதாகும். ஆண்டுக் கண்ணப்பர் வணக்கம் இறை வணக்கத்தின் பயனுதற்குக் காரணம் என்னுங்கொல் என்றையுறுவாரைத் தெளிவிக்கும் முகமாக "உள்ளத்திற்றெளிகின்ற அன்பின் மெய்ம்மை உருவினையும் அவ்வன்பின் உள்ளே மன்னும், வெள்ளச் செஞ்சடைக் கற்றை கெற்றிச் செங்கண் விமலரையுமுடன்கண்ட விருப்பம் பொங்கி .....வணங்குகின்றூர்''. என்று கூறியருளினர். கண்ணப்பர் வடிவத்தை அன்பின் மெய்ம்மை யுருவாகவும், "அன்பிலே விளைந்தவாரமுதே'' என்று மணிவாசகனூர் திருவாய்மலர்ந்தருளியபடி, அவ் அன்புரு

ஞானத்தின் திருவுரு

வத்தில் இறைவன் விளங்குதலையுங் கண்டார் என்றார். இலிங்க உருவத்தினும் அன்புருவத்திற் காணப்படும் இறைவன் விளக்கம் சிறந்ததாகலின் இங்ஙனம் கூறப்பட்டது. கண்ணப்பர் வடிவத்தை அன்புருவமாகவும், அவ் அன்பிலே இறைவன் விளங்குதலையும் உள்ளுணர்வாற் காண்டற்குரிய தகுதி ஞானத்தின்திருவுருவாகிய சம்பந்தப் பெருமான் பால் உள்ளதென்பது இங்கிகழ்ச்சியாற் புலனும். இங்ஙனமே, ஞான சம்பந்தப் பெருமானுடைய உள்ளம், உடல் மொழிகளின் றூயவியல்பு பற்றி அவரை ஞானத்தின்திருவுரு முதலியவாகக் காண்டற் குரிய தகுதி, பங்கயச் செல்வியாகிய பாண்டிமா தேவியார்க்கும், அடியவர் தங்களைக்கண்டால் குணங்கொடுபணியும் குலச்சிறையார்க்கும் உளதாயிற்று என்பது போதரும்.

இத்துணையும் 'ஞானத்தின் திருவுரு' என்பது பற்றி ஆராயுமுகமாக அப்பொன் மொழியை முதற்கணுடையதாக அருண்மொழித் தேவரருளிய திருவிருத்தத்திற்கு ஒருவாறு நுண்பொருள் விளக்கம் கூறியதாகும்.

இதுகாறும் கூறியவாற்றுற் போந்த தொகைப் பொருள் வருமாறு:

உலகத்துப் பொருள்களுள் ஞானமுதலிய குணங்கள் உண்மை மாத்திரை உணர்த்திப் பிழம்புணர்த்தப் படாதன என்பதூஉம், தெய்வங்களுள்ளும், மக்களுள்ளுஞ் சிறந்த குணங்களான் மேம்பட்டாரை அக்குணவடிவாக வருணித்தல் பெரும்புலவர் இயல்பென்பதூஉம், அந்நெறியினின்று வளம்பெறப் பாடிய சேக்கிழார், கம்பர் பாடல்களில் அப்பொருள் இன்னின்ன படியாகப் புலனுமென்பதூஉம், கண்ணப்ப நாயனர் முடிந்த அன்பின் எல்லைக்கு இலக்காக விளங்குதல் நோக்கி, அவர் பலவிடத்தும், அன்பின்திருவுருவாக வருணிக்கப்பட்டுள்ளார் என்பதூஉம், திருஞான சம்பந்தப் பெருமானை மங்கையர்க்கரசியாரும், குலச்சிறை நாயனரும் தரிசிக்குங்கால் அன்னர் கட்புலனுக்குச் சம்பந்தர் ஞானத்தின் திருவுரு முதலியவாகக் காணப்பட்டார் என்பதூஉம், அப்பொன் மொழியைச் சேக்கிழார் முற்கண் அமைத்துப் பாடிய திருவிருத்தத்தில் அப்பெருமானுடைய மனம், மெய், மொழிகளின் றூயவியல்புபற்றி மூன்றுபடியாக வருணித்துரைத்தனர் என்பதூஉம், முதலாவதாகிய உளத்தூய்மை பற்றி "ஞானத்தின் திருவுரு" எனவும், "நான்மறையின் றனித்துணை" யெனவும் கூறினரென்பதூஉம், அதற்கிரண்டு பொருள் கூறியது பரஞான, அபாஞான வகைபற்றி யென்பதூஉம், இரண்டாவதாகிய மெய்யின் மழவிளம் பருவங் குறித்து, 'மண்ணில் வளர் மதிக்கொழுந்து' என்று கூறினரென்பதூஉம், மூன்றுவதாகிய மொழியின் றூயவியல்பு பற்றிக் 'கானத்தின் எழு பிறப்பு' என்று கூறினரென்பதூஉம், இம்மூன்றன் கண்ணும் ஞான விளக்கமே வெளிப்படையினும், குறிப்பினும் பெறப்பட்டதென்பதூஉம் பிறவுமாம்.

மாந்தையும், மரந்தையும்

மகாவித்துவான். ரா. இராகவையங்கார் அவர்கள்,
சேதுசமஸ்தான வித்துவான்,
ஆராய்ச்சியாளர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

இவற்றுள் முன்னது மேற்குக் கடற்றுறையிற் சேரர்க்குரியதாகிய பட்டினமென்பது "குட்டுவன் மாந்தை" (அகம் கஎசு, குறுந் தொகை கூடு), "கடல் கெழுமாந்தை" (கற்றிணை அகூடு), என வருதலான் அறியப்பட்டது. தாலமி என்னும் யவனஞாயிர் தம் பூகோள நூலிற் சேரநாட்டிற்கு வடக்கட் கடற்றுறைப் பட்டினமாக மாந்தைக் கரையினையும் சேரநாட்டின் தெற்கே ஆஅய் நாட்டிற் கடற் றுறையில்லாது அகநாட்டுள்ளதாக மரந்தையினையுங் கூறினர். பரணர் பாடிய அகப்பாட்டில் (கூஎசு),

"குரங்குளைப் புரவிக்குட்டுவன்
மாந்தையன்னவென் னலந்தந்து சென்மே"

என்புழிக் "குரங்குளை" என்னுஞ் சிருக்கு எதுகைத்தொடை இயைய வருதலான் இவ்வூர் "மரந்தை" என்று படிக்கப்படவேண்டு மென்று சிலர் கருதினர். எதுகை நயம் ஒன்றே கருதி இவ்வூரை இங்ஙனம் படிப்பது பிறசான்றுகளால் ஆதரிக்கப்படுவது கொல்லோ என்று இங்குச் சிறிது ஆராய்வாம். பரணர் பாடல்களிற் பெரும்பாலன எதுகை நயம்பட வந்தனவேனுஞ் சிறுபாலன

"காமங் கைம்மிக வுறுதர
வாணு வரும்படர் தலைத் தந் தோயே" (அகம். உருஅ)

எனவும்,

"நல்ல ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியாதோயே" (குறுங். கஉ0)

எனவும்,

(See Ancient India Ptolemy p. 45, 57)

" மாயா வியற்கைப் பாவையிற்
போத லொல்லாளென் னெஞ்சத்தானே " (நற்றிணை. உஅக)

எனவும், எதுகை நயமில்லாமலும் வருதலான் இவ்வூர் வந்தசீர் எதுகையில் நின்றது, எதுகையில் நின்றதன்று எனத்துணிதற்கட் பிறசான்றுகளே வேண்டுதல் இன்றியமையாதென்றுணரலாம். இவ்வூர் வந்த பல்லிட்டத்தும், கல்லிசைப்புலவர்

" கடல் கெழு மாந்தை " (நற்றிணை. ஙகூடு)

எனவும்,

" பொங்கு திரை பொருத வார்மணலடைகரை
.....துறைகெழு மாந்தை (ஙடி. ஙடு)

எனவும்

" யானையங் குருகின் கானலம் பெருந்தோ
டட்ட மன்ன சார்ப்பிசை வெரூஉங்
குட்டுவன் மாந்தை " (குறுந். ஙச)

எனவும் பாடிக்காட்டுதலான், இவ்வூர் கடற்றுறைப் பட்டினமென கன்கு துணியப்படுவது. கடல் கெழீஇய இங்ஙகர் குட்டுவனுடைய தென்று கூறுதலான் இது மேற்குக் கடற்கரையிலுள்ளதென்று தெளியத்தக்கதாம். அகப்பாட்டினும் குறுந்தொகையினும் குட்டுவனுவனுடையதாகக் கூறிய மாந்தை கடற்றுறைப் பட்டினமாகவே நினைதல் தகும். அகப்பாட்டில் (கஉள) மாமூலனர்

" வலம்படு முரசிற் சேர லாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத் தொன்னர்
பணிதிறை தந்த பாடுசா னன்கலம்
பொன்செய் பாவை வயிரமோ டாம்பல்
ஒன்றுவாய், நிறையக் குவை இயன்றவ
ணிலந்தினத் துறந்த நிதியத் தன்ன
வொருநா ளொருபகற் பெறினும் வழிநாட்
டங்கலர் "

எனக் கூறுதலாற் சேரலாதன் என்பவன் இங்ஙகர்க்கண்ணே அன்னவில்லாத பெருஞ் செல்வம் தொகுத்துப் புதைத்திருந்தவன் ஏதோ ஒரு காரணத்தால் அந்நாளில் அவற்றை யெல்லாம் நிலந்தின்னும்படி விட்டுத்துறந்தனன் என்றும் அறியப்படுவது. ஈண்டு

" மாந்தை முற்றத் தொன்னர்
பணிதிறை தந்த பாடுசா னன்கலம் "

என்பதனானும் சேரலாதன் தான் தொகுத்த பெருஞ் செல்வத்தை நிலந்தினத் துறந்தனன் என்பதனானும் இவ்வூர் இவன் நாட்டின் எல்லைப் புறத்ததென்று உய்த்துணரலாகும். "முந்நீரோட்டிக் கடம்பறுத்து அக்கடம் பறுத்த வென்றியை நிலைநாட்டவேண்டி இமயத்து விற்பொறித்து மீள்கின்றவன் நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார் பணி திறை தந்த நன்கலம், பொற்பாவை இவையெல்லாம் ஆம்பலென்னும் பெரிய எண்ணளவாகக் குவித்துப்பின் இவற்றை நிலந்தின்னும்படி விட்டுத்துறந்தது கூறுதலான் இவ்வாறு கருதப்பட்டதென்க.

பதிற்றுப்பத்து ஒன்பதாம் பத்திற் பரணரோடொருகாலத்தவரான பெருங்குன்றூர் கிழார்,

"வளைகடன் முழவிற் றொண்டியோர் பொருந" (பதிற். அ௰அ)

"கட்டிப் புழுக்கிற் கொங்கர் கோவே"

"மட்டப் புகாவிற் குட்டுவ ரேறே"

"எழா அத்துணைத்தோட் பூழியர் மெய்ம்மறை"

"இலங்கு நீர்ப்பரம்பின் மாந்தையோர் பொருந" (ஷை அ௰)

எனப்பாடுதலான், இவ்வூர் தொண்டிப் புறத்தும், கொங்குநாட்டும், குட்டநாட்டும், பூழிநாட்டுமில்லாது சேரருடைய வேறோர் தனி நாட்டிருப்பது நன்கு தெளியலாகும். ஈண்டுத் தொண்டியோர், கொங்கர், குட்டுவர், பூழியர், மாந்தையோர் என்று கூறப்பட்ட மக்கள் வேறு வேறு நாட்டவராதலே தகுமென்க. இதனான் மாந்தையுள்ள நாடு பூழிநாட்டிற்கும் வடக்கணுள்ளதாகலாம். அன்றிக்கடன் மலை நாட்டின் தெற்கணுள்ள தாகலாம். கடன்மலை நாட்டின் தெற்கணுள்ள நாடு அக்காலத்து ஆஅய் என்னும் வள்ளலுடையதாயிருந்ததென்பது இந்நல்லிசைப் புலவர் காலத்தேயிருந்த மேற்றிசை யவனாசிரியரான தாலமி என்பவரெழுதிய பூகோள நூலானன் கறிந்தது.

"தென்றிசை யாஅய்குடி யின்றாயின் (புறம் ௱௩௨)

எனவும்,

"பொதுமீக் கூற்றத்து நாடுகிழவோயே" (ஷை ௱௩௫)

எனவும் நல்லிசைப் புலவர் வேள் ஆஅயைப் பாடுதல்கொண்டு இவ்வுண்மை வலியுறுதல் காண்க. இந்த ஆஅயினுடையதாய் அவனாட்டுக் கூற்றுறையிலில்லாததாய் அவனுடைய அகநாட்டே அவனுக்குச் சிறந்த ஊர் 'Morounda' மரந்தை என்பது ஒன்றுண்டென்பது அத்தாலமி நூலானன்கறியலாவது. இம்மரந்தை கடற்றுறைப்பட்டினமாகாது அகநாட்டேரே யாதலால் ஈண்டுக் குறித்த கடல்கெழு நன்னகர் அஃது ஆகாதென்பது ஒருதலை. இம் மரந்தை என்னும் ஊர் ஆஅய் வேட்குப் பின்னர்ச் சேரர் மலைநாட்டொடு சேர்ந்து சேரர்க் குரியதாதலால் இதனை "வஞ்சியர் மரந்தை" (குலோத்துங்கசோழன் பிள்ளைத்

தமிழ்) எனப்பின்னுள்ளோர் பாடுவாராயினரென அறிக. ''வஞ்சியு முறந்தையு மரந்தையும் கோதையுமளிக்கும் பயன்வருகவே'' என்பதும் அது. இதனுலிம்மரந்தையின் வேருய மாந்தைக் கடற்றுறைப்பட்டினம் பூழி நாட்டிற்கு வடக்கணுள்ளதெனக் கருதுவது பொருந்தும். கொச்சிக்கு வடக்கண் சமீபகல் தூரத்திற் கொண்கானத்துள்ள ஏழின் மலைக்குத் தெற்கில் மாதை என்னும் பெயரில் இப்போது வழங்கும் ஓர் கடற்றுறையூர் உண்மை (Vide Logan's Malabar Manual, p 78, 224, 231 etc) அறியப்படுதலால் இவ்வூரே பண்டைக்காலத்துச் சேரருடைய மாந்தை யென்னத்துணியப் படுவது. மாந்தையை மாதை யெனத் துளுவர் வழங்கினர் போலும்

> ''கொண்கான,
> நன்னனன்னுட் டேழிற் குன்றம்'' (நற்றிணை ஊகூக)

என்பதனுல் ஏழின்மலை கொண்கானத்திருத்தல் புலனும்.

இவ்வூர் பழையவரசரின் கோவிலக முள்ளதென்று கேரளோற்பத்தி கூறுதல் காணலாம். (Vide Logan's Manual p. 286). இதன்கண்ணே முதன்முதல் புத்தவிகாரம் ஏற்படுத்தப்பட்டதென்றும் அந்நூல் கூறும்[1]. இவற்றுல் இவ்வூரின் பழைமையும் முக்கியமும் நன்குணரலாகும். பதிற்றுப் பத்திற்பெருங்குன்றூர்கிழார் தொண்டியுள்ள பக்கத்தையும் பூழி நாட்டையும் குட்டநாட்டையும், கொங்குநாட்டையும் பிரித்துத் தனித்தனியே கூறி இவற்றின் வேருக ''மாந்தையோர் பொருந'' என்று கூறுதலாலும் மரந்தை தெற்கணுள்ளதெனத் தெளியப்பட்டதனுலும் இம் மாந்தை கொண்கானத்து ஏழில் மலைக்குத் தெற்கணுள்ளதாகக் கருதப்பட்டதென்க. ஏழில்நன்னனைக் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், பொரித் கொன்ற செய்தி 199. ஆம் அகப்பாட்டிற்

> ''குடா அ
> திரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
> பொலப்பூ ணன்னன் பொருதகளத் தொழிய
> வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
> களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
> இழந்தநாடு தந்தன்ன''

எனவும், பதிற்றுப்பத்துள்

> (அஅ) சுடர் வீவாகை நன்னற் றேய்த்துக்
> குருதி விதிர்த்த குவவுச் சோற்றுக் குன்றே,
> டுருகெழு மரபி னயிரை பரைஇ''

1. Logan's Manual p. 224.

எனவும் கூறுதல் கொண்டு அறியப்படும். இதனைச் சேரர் ஏழில் மலைக்குத் தெற்கணுள்ள மாந்தைப் புறத்துநாட்டை மீளவும் வென்று கொண்டது புலப்படுதலான் சேரன் மாந்தையோர் பொருநன் எனப் பாடல் பெறுதல் பொருத்தமேயாமென்க. இனி இங்ஙனமன்றி ஏழில் அரசர் குலதேவதை யாகிய பகவதி இவ்வூரிற் கோயில் கொண்டது பற்றி இது மாதாபூர்[1] என வழங்கப்பட்டு, அதுவே மாதை, மாந்தை எனப் புலவராற்றிரித்துக் கொள்ளப்பட்டதோ எனக் கருதினும் பொருந்தும். இஃது உறையூர் என வழக்கினும் உறந்தையென நூலினும் வழங்குவது போலுமெனக் கொள்ளத்தகும். அகநானூற்றில்,

"ஓங்குபுகழ்க்
கானமர் செல்வி யருளலின் வெண்காற்
பல்படைப் புரவி யெய்திய தொல்லிசை
நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய
வின மழை தவழு மேழிற் குன்றத்து (கூசரு)

என்பதனைச் சிறப்பிக்கப்பட்ட 'ஓங்குபுகழ்க் கானமர் செல்வி' இப்பகவதி என்பது நன்கு பொருந்தும். இவ்வகப்பாட்டுப்பாடிய குடவாயிற் கீரத்தனார்க்கு முன் இவ்வேழில் மலையைப் பாடியவர் பரணரும், (அகம் கருஉ) மாமூலனாரும் (அகம் கூசகூ) ஆவர். இவ்விருவருள் யாரை

"நுணங்கு நுண்பனுவற் புலவன்"

என்பதனாலிப்புலவர் குறித்தனரோ, நன்கு தெரிகிலேம்.

"அருந்தெறன் மாபிற் கடவுள் காப்பப்
பெருந் தேன் றூங்கு நாடுகாணனந்தலை
யணங்குடை நெடுவரைப் பாழிச்சிலம்பின்" (அகம் கூஎஉ)

எனப்பரணர் இவ்வேழினெடுவரையிலுள்ள பாழிச்சிலம்பினை இங்ஙனம் விசேடித்துப்பாடுதலான் "நுணங்கு நுண் பனுவற்புலவன்" என்பதனைக் கருதப்பெற்றவர் பரணரென ஒருவாறு துணியலாம். கடவுள் பெண்டெய்வத்திற்காதல் "கடவுட் பெயரிய கானம் (பதிற். அஅ) என்றது விந்தாடவியை; கடவுளென்றது ஆண்டுறையுங் கொற்றவையினை" எனப்பழைய வுரைகாரர் கூறியதனையும் "கடவுளெழுதவோர் கற்றூரானெனின்" (சிலப். காட்சிக். கசுவி) என இளங்கோவடிகள் கூறுதலானும் அறியலாம். 'கடவுளெழுதி' என்புழிக் கடவுள்-தெய்வமாகிய கண்ணகி யாதல் காண்க. 'கடவுள் அயிரை' (பதிற். எகூ) என்புழியும் கடவுள் கொற்றவை என்னூர் பழைய வுரைகாரர். இதனால் ஏழின் மலைப்புறம் இப்பகவதி காவலாற் பண்டு சிறந்தது நன்குணரலாகும். இதனால் இவ்வூர் மாதாய், மாதை என வழங்கப்பட்ட தன் காரணமு முணரலாகும். குடவாயிலினும் உறையூரினுமில்லாத நகர தகரவொலிகள் ஏறி, முறையே குடந்தை, உறந்தையெனத் திரிந்து

1. (Vide Logan's Manual 'p' 286)

மாந்தையும் மரந்தையும்

வருதல் தமிழ்ச் செய்யுள் வழக்காயின் மாதாயூர் என்பது மாதையெனவும் அதுவே மாந்தை யெனவும் வழங்கப்படுதல் நூனெறியேயாமென்று கொள்க. இவ்வூர் சேரலாதனுற் பெருநிதி முழுதும் நிலந்தின்னும் வண்ணம் விட்டுத் துறக்க நேர்ந்ததன் காரணம் பெரும் போர்த்தோல்வி யாகலாமென்று முன்னரே கூறினும். "நிலந்தினத்துறந்த நிதியத்தின்ன" எனப்பாடுதலான் இது சேரலாதன் சந்நியாசமாகக் கொள்ளற் கியையாமை உணர்க. சந்நியாசமாயின் அவன் வழியினன் அந்நிதியை ஆண்டுதுய்த்து வழங்குவன் என்க. இனிப்பரணர்,

"குரங்குளைப் புரவிக் குட்டுவன்
.....மாந்தை" (அகம். கூஎசு)

எனப்பாடியது

"கானமர் செல்வி யருளலிற்
பல்படைப்புரவி யெய்திய தொல்லிசை" (ஷி கூசரு)

யைக் கருதியதோ என ஊகிக்கவும் இவ்வரலாறு இடந்தருகின்றது. கானமர் செல்வி யருளலாற் போர்ப்படைக்கு மாவந்தவாயி லாதலான் இக்கடற்றுறையூர் மாந்தை யெனப்பட்டதோ என நினைக்கவும் இடனுண்டு. இருந்த வளமுடையார் கோயிலுடைமையால் இருந்தையூர் என்றூற்போல இதனைக் கொள்ளலாம். ஏழின் மலைக்குத் தெற்கண் ஒருகாததூரத்திற்குள் இத்துறைமுகத்தூர் உள்ளதனால் ஏழிற்கு எய்திய புரவிகள் இத்துறைவாயிலாக வருதல் கூடுமென்க. இதன் கணுள்ள பகவதி குடவாயிற் கீரத்தனர் பாடிய "கானமர் செல்வி" ஆவளென்றுணரலாம். கானமர் செல்வி—காடுகிழாள். துர்க்கா தேவிக்கு இப்பெயர் வந்தது தக்ஷிண பதங்காவல் பூண்டு முதன்முதல் இத்தெய்வம் விந்தியாடவியில் வதிதலான் என்றுணரலாகும். இவ்வுண்மை "கடவுட் பெயரியகானம்" எனவரும் பதிற்றுப்பத் (எகூ) துரையிற் "கானம் என்றது விந்தாடவியை கடவுள் என்றது ஆண்டுறையுங் கொற்றவையினை" எனப்பழைய வுரைகாரர் கூறுதலானுணரலாம். இதனால் இவ்வூர் மாவிந்தை யெனப்பட்டது மருவி மாந்தையென வழங்கலாயிற் றெனினுமமையும்.

"விந்தை.....சீர்சால் பகவதி சிறந்ததால்
பெயரே" (சிவாகரம் தெய்வப்பெயர்).

சாத்தூர் சமீபனச் சேர்ந்ததான ஓர் ஊரில் மாதாயின் கோயில் ஒன்றுள்ளது. அதன் றேவியை மாதாவரசி என வழங்குவர். இக்கொற்றவை குதிரை வாணிகரால் இன்றைக்கும் பூசிக்கப்படுவது ஈண்டைக்கு நினைக்கத்தக்கது. குதிரைகள் தேவர்காவலிற் கடல் வழியாக வந்திறங்குமெனப்பாடுதல் பண்டைவழக்கென்பது.

"செல்லா நல்லிசை, யமர்க்காப்பி
னீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்" (ஈஅச—அரு)

எனப்பட்டினப்பாலையுள் வருதலானறியலாம். பிற்காலத்து மேற்றிசை யினின்று வந்த யாத்திரிகர்கள் பலரும் இவ்வூரையும் இதன்றுறையை யும் மாராவியா, மாராபியா, ஏழில் மாராவி என வழங்கினர் என்றும், இவ்வூர் இங்காளில் மாதாவி, மாதாய், மௌதாய் என வழங்குவ தென்றும் கர்னல்யூல் என்பவர் மார்க்கோ போலோ யாத்திரை நூலில் எழுதி விளக்கியுள்ளார் (பக்கம் 387—388) அவர் ராஷிட்உடன் என்பவர் ஏலி மலையினின்று கீழே கஉ கல். தூரத்திலுள்ள சேர பட்டினத்திற்கு (Jorpathan)ச் சென்றதாகக் கூறுகின்றார் என்றெழுதிக் காட்டலான் (ஷி பக். 386) இம் மாந்தையே ஏழிலையடுத்துள்ள சேரர் பட்டினமாதல் உணரலாம். அவர் அரபிய எழுத்திலுள்ள "ராஷிட் உடன்" நூற்கையெழுத்துப் பிரதியை (Royal Asiatic Society)யில் கேரிற் பார்த்தபோது அங்கு ஹேலி மாராவி (Heli Marawi) என்றே எழுதியிருப்பதைத் தெரிந்ததாகக் கூறியுள்ளனர். அவர் இத்தொடர்க் குரிய அம்மொழிஎழுத்துக்களை ஆண்டுள்ளபடியே அச்சிற்பதித்துக் காட்டியுள்ளனர். இவற்றுள் இவ்வூரின் முதலெழுத்து மா என நெடி லாதலல்லது, ம. எனக் குறிலாதலின்றென்பது நன்கறியப்படுவது. இப் பல பெயருமே சங்கநூலிற் புரவிவந்த வரலாறு குறித்து மாவருவாய் என்பதன் சிதைவோ என்று ஊகிக்கப்படுவது மராபீத் என்பது குதிரைப்பந்திக்கும் மூராபிதாத் என்பது கிறுவப்பட்ட குதிரைப்படைச் சூழலுக்கும் பெயராகப் பாரஸீக மொழியின் வழங்கலான் சங்க காலத்துப் புரவிவந்த கதைபற்றி அவர் மொழி பெயர்த்திட்டதனால் இவ்வூர்ப்பெயர் இங்ஙனமெல்லாம் வழங்கல்பட்டது என்பது நன்கு பொருந்தும். மேல் கடற்கரையில் மாந்தைக்கரை (Mandagora) எனப் பெயரிய துறைமுகப்பட்டினம் உள்ளதெனத் தாலமியும் பெரிப்ளஸும் கூறினர். அவர் நன்கு இடம் விளங்கக் கூறினரில்லை. தாலமி, இடங் களைப்பற்றிப் பலவாறு பிறழக் கூறுதலால் இவர் சொல்லும் ஊர்களின் நிலை ஒருதலையாகத் துணிதற்கில்லை யென்று யூல், காம்பெல் முதலியோர் அபிப்பிராயங்கொள்வர். (Ancient India Ptolemy Page 48)

எங்ஙனநோக்கினும் கானமர் செல்வியருளான் மாவந்தவூர் இஃதாதல் உய்த்துணரலாகும். இனி இத்துறையையே வங்கம் வருவாயென்பது கருதி மரவாய் என்று வழங்கியதை மாராவியென யாத்திரிகரும் மரந்தையெனப் புலவருந்திரித்து வழங்கினரெனக் கொள்ளலாமெனிற் கூறுவாம். முசிரியாசிரியர் நீலகண்டனார் எடுத் தாண்ட இறையனார் களவியல் உரைமேற் கோட் கலித்துறைகள் பல வற்றுள்

"வேல் கொண்ட வேந்தனம் மாந்தையன்னாள்"

எனவும்

மாந்தையும் மரந்தையும்

"மன்னேந்திய புகழ் வாணெடுமாறன்றன்
மாந்தையன்ன"

எனவும்

"வாருங் கமழ்கண்ணி வானவன் மாறன்றன்
மாந்தையன்ன,"

எனவும்

"வானலங் கொண்டகை யான்மன்னன் மாறன்
றன் மாந்தையன்னுள்"

எனவும்

வருவன கொண்டு இவ்வழக்கினுண்மை யுணரப்படுதல் கண்டுகொள்க. ஈண்டெல்லாம் வேந்தன் மரந்தை, மாறன் மரந்தை யெனவும் இயைத்துப்பாடாது, அம்மாந்தை, தன்மாந்தை யெனப்பாடும் வண்ணம் புலவரை யேவியது மாந்தையெனவே அந்காளில் இத்தமிழ் நாடு வழங்கிய வழக்காகுமென்றெளிதிதுணரலாம். ஈண்டுக் காட்டிய கலித்துறையடிகள் பாண்டியன் அரிகேசரியைப் பாடிய பாண்டிக் கோவையிலுள்ளனவாகும். பாண்டியன் அரிகேசரி காலம் கி. பி. 670 முதல் 710 வரையும் ஆகுமென்பது ஆராய்ச்சியாளர் துணிபாதலான் இவ்வழக்கு இற்றைக்கு 1100 ஆண்டுகட்கு முற்பட்டதாதல் அறியலாம். இப்பழங்காலஞ் சங்கநூல்வழக்கு மறந்தகாலமென்று கருதுவது பொருந்தாதாகும்.

இனி, அக்காலத்து மரந்தையென்றுதான் ஏடுகளிலிருந்தது. அதனைப் படித்தவர் மாந்தை யெனப் படித்துக்கொண்டு வெண்டேர் பிழையாமைக்கு அம்மாந்தை யெனவும் தன்மாந்தையெனவும் பிரதி செய்து வைத்தனர். அப்பிரதியினடியாகவே இம்மாந்தை வழக்குண்டாய தென்று வாதிக்கலாமெனிற் கூறுவாம். இப்பாண்டிக் கோவைக்கு முற்பட்டவரும் சங்கநூல் வழக்கெல்லாம் வடித்துணர்ந்தவரும், சங்ககாலத்திற்கு மிகவும் பிற்படாதவரும், தமிழ் மூவேந்தர் உள்ள காலத்தே தந்நூல் செய்தவரும் ஆகிய முத்தொள்ளாயிர முடையார்,

"மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினுஞ்
சொல்லவே வேண்டும் நமகுறை—நல்ல
திலகங் கிடந்த திருநுதலா யஃதா
லுலகங் கிடந்த வியல்பு"

என்பதனுல் இவ்வூரை "மாந்தை எனவே தெளியக் கொள்ளுதலறியலாம். இதனுல் இவ்வழக்கின் பழைமையும் உண்மையும் இனிதுணரலாகும். ஈண்டு மாக்கடுங்கோ எனப்பட்டவன் சேரன் என்பது 'மரீந்தரன் பொறையன்' கடுங்கோ" (அகம் ஈசஉ) எனவருதலான்

மாந்தையும் மரந்தையும்

அறிக. சங்க நூல்கள் இவ்வூரைக் ''கடல் கெழுமாந்தை'' ''இலங்கு நீர்ப்பரப்பின் மாந்தை'' ''பொங்கு திரை பொருதவார் மணலடைகரை .....துறை கெழுமாந்தை'' எனக் கூறுதற்கியையவே "மல்லனீர் மாந்தை'' என இவ்வாசிரியர் பாடுதல் கண்டுகொள்க. ''மல்லனீர்'' என்பது கடலாதல் மல்லனீர்த் திரையூர்பு'' (நக) என நெய்தற்கலியுள் வருதலானறியலாம். ஈண்டு மல்லனீரென்றே ஆசிரியர் கருதினராதல் அடுத்த அடிமுதலிற் சோல்லவே என இன்னுரைசெப்பட எதுகையின் வைத்துத் தொகுத்தவாற்று னன்குணரலாம். ஈண்டு மரந்தையெனப் படித்தால், தளிசிதைந்து வெண்பாவிலக்கணஞ் கெடுமாதலால் மாந்தை யெனவே படிக்க வேண்டியதை நோக்கி இவ்வூர்ப் பெயருண்மை யிஃ தெனத்துணிந்துகொள்க. சோணாட்டாரும் தொண்டி, முசிரி, மாந்தை என்னும் பெயர்களைத்தம்மூர்க்கிட்டு வழங்கியுள்ளனராதலால் இப் பெயர் வழக்கினுண்மையுணரலாகும். மாந்தை மாயூரஞ் சேகரத் துள்ளதோரூர். பாண்டிநாட்டும் மேன்மாந்தை என்ற சிறு சமீன் உண்டு. இதுவும் இப்பெயர் வழக்கினைக்காட்டும். இவற்றுற் கடற்கரையிலில் லாது அகநாட்டோகிய ஆஅயவேள் மரந்தையும் கடற்றுறைப் பட்டின மாகிய சேரர்மாந்தையுந் தம்முள் வேறுதல் தெளியலாம்.

இனி மாக்கடுங்கோ மாந்தான் எனவழக்குப் பெறுதல்பற்றி அவனூர் மாந்தரனூர் எனப்பயிலப்பட்டு அதுவே மாந்தை எனப்புல வாரற்றிரித்துக் கொள்ளப் பட்டதெனினும் அமையும். இவற்றுற் மேல்கடற்றுறைப் பட்டினமாகிய ஊர் மாந்தை யென்றும் கடலடுக்காது அகநாட்டுள்ள ஊர், அதனின் வேறுய மரந்தை என்றும் கன்கறிந்து கொள்க.

சமணமுனிவரின் தமிழ்த்தொண்டு

திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
ஔவைத் தமிழ்க மாணவர்கழகம், திருவோத்தூர்.

நம் தமிழ்மொழியின் இலக்கண இலக்கிய நெறியின் வளர்ச்சியினை வரலாற்று முறையால் ஆராய்கின்றவர், இவ்வளர்ச்சி குறித்துச் சமண முனிவர் செய்துள்ள தொண்டுகளைக் காணுதுபோக முடியாது. தமிழ் வளர்ச்சிக்கெனச் சிறந்த தொண்டு புரிந்த தமிழ் மக்களைவிடச் சமண முனிவரே தலைசிறந்து நிற்கின்றனர் என்று பலரும் கூறுகின்றனர். அவர் செய்த தொண்டினை ஒரு சிறிது ஆராயின், அவர் தொண்டு முற்றும் தம் சமயநெறியினைத் தமிழ்நாட்டில் நிலைபெறுவித்தற்குச் செய்த சமயத்தொண்டாகவே தோன்றுகின்றமையின், அதனைப் புலப் படுக்கும் குறிப்பால் இக்கட்டுரை எழுதப்பெறுகின்றது.

1. சமண முனிவர் வரலாறு

சமண முனிவர் என்பவர் சைனசமய வொழுக்கத்தை மேற்கொண்டு, துறவிகளாய், நன்ஞானம், நற்சாட்சி, நல்லொழுக்கம் சிறந்து, வினைத் தொடர்வு கெடுமாறு முயலும் சான்றோராவர். இது பண்டைக் காலத்தில் வடநாட்டில் தோன்றிய புதுச் சமயம் என்று சிலர் கூறுவர். சமயக்கலையில் வல்லுநராகிய இராதாகிருட்டினன் என்னும் பேராசிரியர், "இஃது இந்திய நாட்டிற்கே உரித்தாகிய வைதிக சமயத்திலிருந்து புதிதாய்க் கிளைத்த சமயம்" என்கின்றார். இச்சமயம் வடநாட்டில் ஜைனசமயம் என்றும், தென்னாட்டில் சமணசமயம் எனவும் வழங்கப் பட்டது. சைனருள், இல்லறத்தோர் சிராவகர் என்றும், துறவுபூண்டு இன்பத்து விருப்பும், துன்பத்து வெறுப்பும் இலராய் இரண்டனையும் ஒப்பமதித்தொழுகும் சான்றோர் சமணர் எனவும் கூறப்படுவர். இவர் கள், புத்தசமயத்தை நாடெங்கும் பரப்புதற்குரிய பெருமுயற்சியினைச் செய்த பேரரசப் பெருந்தகையாகிய அசோகமன்னராலும் நன்கு மதிக்கப்பெற்றவர்கள். இச்சமணர்கள் நம் தமிழ்நாட்டிற் புகுந்து தம் சமயநெறியினைப் பரப்பியதனால், இவர்களது சமயமாகிய ஜைனசமயம் இவர்கள் பெயரால் சமணசமயம் என வழங்கப்படுவதாயிற்று.

2. சமணமுனிவர் வரவின்கண் தமிழ் இருந்த நிலைமை

தமிழ் நாட்டில், ஆதியில் தமிழ்மக்களே வாழ்ந்து வந்தனர்; அவர் கள்பால் தனித்தமிழே நிலவியிருந்தது. பின்னர், வடநாட்டுமக்கள்

தமிழ்நாட்டிற் குடிபுகுந்தனர். அவர் வழங்கிய வடமொழியும் அவரோடு போந்து தமிழ்நாட்டில் இடம்பெற்றது. வடவரும் தமிழரும் வாழ்க்கையில் ஒருங்கு இயைந்து உலவத் தொடங்கியதும், வடமொழியும் தமிழிடைக் கலந்து வழங்கப் பெறுவதாயிற்று. சமணர் தமிழ் நாட்டிற் புகுந்த காலத்துத் தமிழரிடை வடவர் வழக்கும், வடமொழி வழக்கும் நிலவியிருந்தன. தமிழ் மக்களின் மனப்பான்மையும், வடவர் வழக்கினையும், வடமொழி வழக்கினையும் மேற்கொண்டொழுகுதற்கண் பேராரவமும், பேரூக்கமும் கொண்டு இருந்தது.

நம் நாட்டிற்குப் புதியராய், புதுவழக்கும், புதுவொழுக்கும், புது மொழியும் உடையராய்ப் போந்த மேனாட்டுமக்களின் கூட்டுறவால், நம்நாட்டவர்க்கு அவர்மொழி வழக்கினும், நடையொழுக்கினும் வேட்கையும் விழைவும் பெருக, அதனால் நம்நாட்டு மொழிகளே தாழ்வுற்றதன்றே ? அங்ஙனமே, வடவர் கொணர்ந்த மொழிவழக்கினையும், நடையொழுக்கினையும் கண்ட தமிழர் அவற்றின்பால் எழுந்த வேட்கையால், தமிழ்வளர்ச்சியிற் கருத்தூன்றாது தாழ்த்தனர்; வடவரது வைதிக சமயக் கோட்பாடுகளை மேற்கொண்டனர். வடவரது வடமொழி உயர்ந்தோர்க்கல்லது உணர்த்தப்படாதென்னும் வடவர் வகுத்த முறையால், இக்காலத்து ஆங்கிலம் போலத் தமிழரிடம் முதலிடம் பெறுதாயிற்று. ஆனால், வடமொழியைத் தமிழொடு விரவிப் பேசும் நெறியினைமட்டும் கைவிடாது பேணிவந்தனர். அதனால், வடசொல் விரவாத தனித்தமிழ் நூல்கள் அருகின; வடசொல் விரவிய நூல்கள் கூடிய அளவிற் பெருகின. இலக்கணங்களும் வடசொற்கள் தமிழொடு நடைபெற்று இயலுதற்கு இடம் வகுத்து அமைப்பவாயின. "வடசொற் கிளவி வடவெழுத்தொரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே" என்று தொல்காப்பியம் கூறுவதாயிற்று.

இவ்வாறு வடவர் கூட்டுறவால், தமிழர் தம் தாய்மொழி வளர்ச்சிக் கண் ஊக்கம் குறைந்திருப்பதையும், வடமொழிக்கண் விருப்பும், வைதிக சமயக் கதைகளில் வேட்கையும் மிக்குற்றிருப்பதையும், சமணமுனிவர் தெளிய வுணர்ந்தனர். தமிழர், வைதிக சமயப்பற்று மிகுந்து அது பற்றிய கதைகளைக் கேட்டு, அவற்றிற்கு வேறுகவரும் சமண சமயக் கருத்துக்களையும் கதைகளையும் மேற்கொள்ளுதற்குத் தாழ்த்தனர். இவ்வாறு தம்பால் வேறுபட்டு நிற்கும் தமிழர் கூட்டுறவைப் பெறுதற் குரிய நெறியில் சமண முனிவர் முயல்வாராயினர். தமிழர்க்கு வடநூற் கதைகளில் விருப்புமிக்கிருந்தமையின், தாமும் வடநூற்களையும், வடநூல் மரபுகளையும் தமிழின்கட் கொணருமுகத்தால் தமிழர் ஆதரவைப் பெறலாயினர். இந்நெறிக்குப் பெருங் கருவியாக விளங்குவது இளஞ்சிறுர்க்குக் கல்விபயிற்றுவிக்கும் பெருந்தொண்டேயாகும் என்று உணர்ந்தனர். அதனால் தாம் தங்கியிருந்த பள்ளிகளில் கூடங்கள் அமைத்து, அவற்றுள் இருந்து சிறுவர்க்குக் கல்விக் கொடை புரியலாயினர். அந்நாள் தொட்டே கல்விபயிலும் இடங்கள் பள்ளிக்கூடங்கள் என வழங்கப்படுவவாயின.

3. தமிழ்த்தொண்டு.

சமணமுனிவர்களின் தொண்டு தேவார காலத்துக்கு முன்னைய தும், பின்னையதும் என இருவகைப்படும். தேவார காலத்தும், அதற்கு முன்னரும் இருந்த சமணமுனிவர் பெருங்கல்வியும், அறம் உரைக்கும் அமைதியும் நிரம்பித் துறவறமே சிறிதாக மேற்கொண்டு இருந்தனர். இவர்கள் நெறியினைக் கடிந்து வாதபுரிந்த சைவப் பெரியோர்களான ஞானசம்பந்தர் முதலியோர் இவரது பெருங்கல்வியினையும், அறவுரை களையும் சுட்டி இருக்கின்றனர். "அமணரும் குண்டரும் சாக்கியரும் நயமுக உரையினர்", "ஓதியும் கேட்டும் உணர்வினையிலாதார் உள்கலா காததோர் இயல்பினையுடையார்" என்றும், இவர்கள், அறம் உரைத்த பெருமையினை, "பாடுடைக்குண்டர் சாக்கியர் சமணர் பயில்தரும் அற வுரை", "அறங்காட்டும் அமணரும் சாக்கியரும்", "கடுமலி உடலுடை அமணரும் கஞ்சியுண் சாக்கியரும், இடும் அறவுரை" என ஞான சம்பந்தப் பெருமான் கூறியருளியிருக்கின்றார். இவற்றால், தேவார காலத்திற்கு முன்னர் இருந்த சமணமுனிவர் தம் சமய அறங்களை மக்களுக்கு உணர்த்துவதே தமது கடனாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிய விளங்குகிறது. அக்காலத்திற்கு முன்னர் இருந்த தமிழ் நூல் களை நோக்கின், அவற்றுட் சமண முனிவர் செய்தனவாகக் காணப்படு வன யாவும் அறநூல்களேயாக இருக்கின்றன. நாலடியார், அறநெறிச் சாரம், சிறுபஞ்சமூலம் முதலிய பலவும் அறங்கூறுவனவேயாகும்.

அக்காலத்தே அவர்கள், வரலாறு கூறும் தமிழ் இலக்கியங்கள் மிகச் செய்திலர். ஒன்றிரண்டு செய்தாராயினும் அவை, தமிழ் வளங் கெழுமியவாய்த் தமிழர் மனத்தைக் கவ்வுவனவாய் இல்லை. அவர்கள் உலகவாழ்க்கையில் வெறுப்பும், துறவுநெறியில் விருப்பும் மிக்கு இருந்த மையின், தமிழர் வாழ்க்கையில் நிலவிய அகப்பொருள் கலங்களும், புறப்பொருட்டுறைகளும் நெடுநாள்காறும் அவர்கள் மனத்தில் இடம் பெற்று, அவர்கள் அறிவை ஏவல்கொள்ளவில்லை. அதனால், அவர்கள் தமிழ்மொழியின் இலக்கணத் துறையிற் புகுந்து, அதன் பகுதிகளுள் ஒன்றாகிய செய்யுளியலில் பெருந்தொண்டு புரிவாராயினர்.

கற்றவர் கல்லாதவர் என்ற இருதிறத்தார்க்கும் அறவுரை வழங்கு மிடத்தும் உரையும் பாட்டுமே மிக வேண்டற்பாலன. இவற்றுள் முன்னதைவிடப் பின்னையதே கல்லாதவரையும் எளிதிற் பிணிக்கும் வாய்ப்புடையதாகும். ஆகவே, அதற்குரிய செய்யுளியலில் பெரும்பாடு பட்டுப் பல புது நெறிகளையும் இயல்களையும் காண்பாராயினர். யாப் பருங்கல விருத்தியுரையிற் காட்டப்பெற்றுள்ள செய்யுளியல் நூல்களுட் பல, சமண முனிவராற் செய்யப்பெற்றிருப்பதற்கு இதுவே காரண மாகும். இசைநூலும் நாடகநூலும் காமம்பயக்கும் சிறுமையுடையவை என்பது அம்முனிவர்களின் கருத்து. அதனால் அத்துறையை நெகிழ்ப்ப தோடு அவ்விசைநாடகங்களில் பற்றுண்டாகாமையும் வளர்த்து

வந்தனர். தமிழர் தாமும், தம் தமிழையே மறந்து, வடநூற் கதை களிலும், வடவர் வழக்கவொழுக்கங்களிலும் வேட்கைமீதூர்ந்து நின்றமையின், அவை பேணற்பாடின்றி இறந்தன.

தொல்காப்பிய நூலுட் காணப்படாத பாட்டினங்கள் இவர்கள் செய்த செய்யுளியல்களிற் காணப்படுகின்றன. இவ்வாறு பழைய தமிழ் நெறிகளைப் புது நெறியிற் கொணர்தற்கு முயன்று பெருந்தொண்டு புரிந்த இப்பெரியோர்கள் இசைநாடகங்களிலும் தம் கருத்தைச் செலுத்தியிருப்பின், நம் தமிழ்மொழியில் எத்துணையோ இசைநூல் களும், நாடக நூல்களும் தோன்றியிருக்குமே! இசைநூல்களுட் சில இவர்களால் இயற்றப்பட்டன என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், அதனை உண்மையெனத் துணிதற்குரிய சான்றுகள் கிடைத்தில.

தொடக்கத்தில் தம் சமயநெறிகளை மக்கட்கு உரைப்பதே பொரு ளாகக் கொண்டு தமிழ் நாடெங்கும் திரிந்து சமண் பள்ளிகளையும், சமண் பாழிகளையும் இவர்கள் நிறுவிவந்தனர். அவையாவும் அற நிலையங்களாக இருந்தனவேயன்றி, அறிவுச் சுடர்வழங்கும் தமிழ் நூல் நிலையங்களாக இல்லாமையால், தேவாரப் பெரியோர்கள் காலத்தில், இவரது தொண்டு இவர்கட்குப் போதிய அரண் செய்யாதாயிற்று. சமயப்போர் நிகழ்ச்சிகளில், இவர்கட்குப் போதிய படையாகக்கூடிய தமிழ் நூல்கள் இல்லை. அதனால் இவர்கள் எளிதில் வெல்லப் பெற்றனர். தமிழிலக்கணங்களாக, இவர்கள் செய்த அவிநயம், இந்திரகாளீயம், பரிமாணம் முதலியவை சமய நூல்களாகவோ சமயஅற நூல்களா கவோ பயன்படவில்லை.

தேவாரகாலத்தில் இச் சமண முனிவர்களுக்குண்டாகிய தோல்வி இவர்கட்குப் பிற்காலத்தில் அழியாப் புகழைப் பயப்பதாயிற்று. இவர் கட்குத் தம் தொண்டில் இருந்த குறைபாடுகள் நன்குபுலனாயின, தமிழர் கூட்டத்தில் நிலவிய சமய நூல்களைப் பயின்று, அவற்றைப்போல இலக்கியங்களையும், சிறு நூல்களையும் செய்யத் தொடங்கினர். இளஞ் சிறார் முதல் பெரியோர் ஈறாகப் பலர்க்கும் பயன்படத்தக்க தமிழ் நூல் களை இயற்றத் தலைப்பட்டனர். தமிழ்த்தொண்டினைத் தம் சமயத் தொண்டிற்குக் கருவியாகக் கொள்ளும் கருத்தினராகலின், இளஞர்க் கென இயற்றிய சின்னூல்களிலும் தம் சமயக் கருத்துக்களைப் புகுத்து மிடமறிந்து புகுத்தித் தம் கருத்துமுற்ற நினைந்தனர்.

சிறுவர் கற்கும் கணக்கியல் வாய்பாடுகளில், தம் சமயக் கருத்தை நுழைத்தற்கு இடமில்லாமையால், அவற்றிற்குக் காப்புச் செய்யுள் யாத்து, அதன்கண் சமயவுணர்வைப் புகட்டினர். "வன்மதி முக்குடை யான் மலரடிதொழ, நெல்லணி லக்கம் நெஞ்சினில் வருமே" என்பது நெல்லிலக்கவாய்பாடு. "அருகனை அமலனை அசலனையடிதொழ, சிறு குழி முப்பதும் சித்தையில் வருமே" என்பது சிறுகுழி வாய்பாடு. இவ் வாறு கல்விபயின்றுவரும் சிறுவர்கட்குத் தமிழ் நூல்களைக் கற்பித்

தற்குத் தோற்றுவாயாக நிகண்டுகள் செய்யத்தொடங்கினர். இவர் காலத்துக்கு முன்பிருந்தவை நூற்பாவடிவில் பெருநூல்களாக இருந்தன. அவை, இசையொடுவிரவி, புதுப்பாவினத்திற் செய்யப்படின், கற் பார்க்கு ஊக்கம் மிகும் என்று கருதினர். அதனால் அவர்கள் சூடா மணி நிகண்டு முதலிய நூல்களைச் செய்தனர். இதன்கண்ணும் தம் சமயக் கருத்துக்களை வேண்டுமிடங்களிற் காட்டியிருக்கின்றனர். காப்புச் செய்யுள், "முடிவில் இன்பத்து மூவா முதல்வனைப் போற்றி" செய்தது உலகறிந்தது. பகவன் என்னும் சொல்லுக்குப் பொருள்கூறு மிடத்து, "பகவனே ஈசன்மாயோன் பங்கயன் சினனேபுத்தன்" எனத் தொகுத்துரைத்தனர். பன்னிரண்டாவது தொகுதிக்கண், "சொல் வகை எழுத்தெண்ணெல்லாம் தொல்லோள் எல்லையாக நல்வகை யாக்கும் பிண்டி நான்முகன் நாளும் தீமை, வெல்லினை தொடங்கச் செய்து வீடருள் வோன்தாள் போற்றி" செய்கின்றார். பின்னர், நாணிலங்கள், நால்வகையங்கங்களை விரித்துக் கூறலுறுவார், இடையே, சமண்சமயக் கருத்தாகிய நாற்கதி வகையினை நுழைத்து, "நாற்கதி உம்பர்மக்கள் சொல்லிய விலங்கினோடு நரகர்" எனக் கூறினர். இவ்வாறே சைவர்கள் கூறும், சிவனுக்குரிய எண்வகைக் குணங்களைக் கூறுமிடத்து, அருகனுக்குரிய எண்வகைக்குணமும், இறைவனுக்கு ஆகாவெனத் தம் சமய நூல்கள் விலக்கிய எண்வகைக் குற்றங்களையும் கூறியிருக்கின்றனர்.

தமிழ் நாட்டில் நிலவிய தொல்காப்பியம் மிக விரிந்து பரந்த நூலாய்க் கிடந்தமையின், அதனைச் சிறுவர்கள் எளிதில் கற்றற்குரிய நிலையில், சின்னூலும் நன்னூலும் இயற்றியிருக்கின்றனர். சின்னூல் செய்த குணவீரபண்டிதர் என்னும் பெரியார் வடநூன் மரபுகளை ஒரு சிறிதே தழுவி, தம் சமயப் பொருட்குரிய வணக்கங்கூறிச் செல்கின்றார். நன்னூல் செய்த பவணந்தி முனிவர் சுருங்கிய சிலவாய சொற்களால் மிக அழகியதாக இதனைச் செய்துள்ளார். இதன்கண், இவர் தம்சமயக் கருத்தைக் காப்புச் செய்யுளிற் காட்டியதோடு நில்லாது, எழுத்தின் இலக்கணத்திலும் புகுத்தியிருக்கின்றார். ஆசிரியர் தொல்காப்பியனார் "எழுத்தெனப்படுப அகரமுதல் னகர விறுவாய் முப்பஃதென்ப" எனத் தொடங்கினரேயன்றி, எழுத்தாவது இஃது என இலக்கணங் கூறிற் றிலர். அவ்விலக்கணங் கூறப்புகுந்த பவணந்தியார், "மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து" என்று மொழிகின்றார். இதன்கண் "அணுத்திரள் ஒலி" என்றது சமண்சமயக் கருத்து. இதனையே எழுத்துக்களின் பிறப்புக் கூறுமிடத்தும், "நிறையுயிர் முயற்சியின் உள்வளி தூரப்ப எழும் அணுத்திரள்" எனச் சிறுவர் மனதில் நன்குபதியக் கூறியிருக்கின்றார். இத்துறைக்கண் ஆசிரியர் தொல்காப்பியனார், "அகத்தெழுவளியிசை அரில்தப நாடி, அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே; அஃதிவண்ணுவலாது எழுந்து புறத் திசைக்கும், மெய்தெரிவளியிசை அளவு நுவன்றிசினே" என்றே கூறினர். தொல்காப்பியர் கூறியதனையே அவிநயனாரும், குணவீர

பண்டிதரும், புத்தமித்திரனரும் கூறினர். இதனாலும், பிற்காலச் சமணமுனிவர்களின் கருத்தும் தம் தமிழ்த்தொண்டு சமயத் தொண்டிற்குக் கருவியாதல் வேண்டும் என்பது தெளிவாகும். இதனை யறிந்தே இலக்கணவிளக்கம் பாடிய வைத்தியநாததேசிகர், " மொழிக் காரணமாம் நாதகாரியவொலி எழுத்து " எனக் கூறினராதல் வேண்டும்.

இனி, இவர்கள் பாடியருளிய இலக்கியங்கள் சிற்றிலக்கியம், பேரிலக்கியம் என இருவகைப்படும். இவற்றுள், சிற்றிலக்கியங்கள் பலவும் அந்தாதி, கலம்பகம் முதலாகப் பலதிறப்படும். அவையாவும் சமயப் பொருள்களையும், சமணசமயச் சான்றோர்களையும் புகழ்ந்துபாடும் சின்னூல்களாகும். திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி முதலியவை சமணசமயத்தினர் பெரிதும் போற்றிப் படிக்கும் தூய செந்தமிழ் நூல்கள். கரிவிருத்தம் போலும் கதைச் செய்யுள் நூல்களும், மேருமந்தர புராணம், யசோதரகாவியம் போல்வனவும் சமண் சமயப் பொருள்களையும் வரலாறுகளையும் விளக்கும் நற்றமிழ் நூல்கள்.

சிந்தாமணி முதலாகக் கூறப்படும் பெருங்காப்பியங்களும், சூளாமணி முதலாகக் கூறப்படும் சிறுகாப்பியங்களும் தமிழ்மொழிக்குப் பொதுவாக வைத்துக் கூறப்படுவன. சிறுகாப்பியமைந்தனுள், மேலே காட்டிய யசோதர காவியமும் ஒன்றெனக் கூறப்படும்.

சிறுகாப்பியமைந்தும் தமிழ்மொழிக்குரிய பொதுக்காப்பியங்களாகக் கருதப்படும் செந்தமிழ் நலம் சிறந்தவையாயினும், இவையாவும் சமண் சமயக் கருத்துக்களையே முற்றும் கூறிக்செல்கின்றன. இவற்றுள் சூளாமணி என்பது தலையாயது. இதனை இயற்றிய பெரியார் தோலாமொழித்தேவர். இவர் பெயரும், சீவகச் சிந்தாமணி செய்த திருத்தக்கதேவர் பெயரும் இயற்பெயரல்ல என்று கருதுகிறேன். இவர்களைப் போலத் தமிழ்த் தொண்டு புரிந்த சமணமுனிவர் பெயரெல்லாம் வடமொழிப் பெயராகவே இருக்கின்றன. குணவீரபண்டிதர், அமுதசாகரர், மண்டலபுருடர், வாமதேவர் என்பன பலவும் வடமொழிப் பெயர்களே. ஆகவே, இவர்கள் தமிழ் நூல் பயின்று, தமிழ் வேட்கை மிகுந்து, தமிழர்போலத்தாமும் தமிழராகவே இயைந்துகிற்கும் தமிழ் நல மிகுதியால், தம்மைத் தமிழ்ப் பெயரால் திருத்தக்கதேவர், தோலாமொழித்தேவர் என்பனவாகக் கூறினராதல் வேண்டும். இவர்கட்குப் பலவாண்டுகட்குப் பிற்போந்த கான்ஸ்டான்டினஸ்பெஸ்ச்சி என்பாரும், தமிழ்த்தொண்டு புரியும் சால்பு எய்தியவழித் தம்மை வீரமாமுனிவர் எனக் கூறிக்கொண்டது, என் கருத்திற்கு ஆதரவு தருகின்றது. இவ் வீரமாமுனிவரும் தேம்பாவணி என்னும் காவியமும், தொன்னூல் என்னும் இலக்கணமும் பிறவும் செய்து தமிழ்த் தொண்டு புரிந்திருக்கின்றார். சீவகசிந்தாமணி யென்பது பெருங்காப்பியமைந்தனுள் தலையாயது. ஏனைகான்கனுள் சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் என்னும்

சமணமுனிவரின் தமிழ்த்தொண்டு

சைவரும், மணிமேகலையைச் சீத்தலைச் சாத்தனர் என்னும் தமிழரும் எழுதினர். ஏனை இரண்டும் இறந்துவிட்டன. இவற்றுள மணிமேகலை புத்தசமயக் கருத்துக்களைத் தன்பாற் கொண்டது. சிலப்பதிகாரத்தும் சமண் சமயக் கருத்துக்கள் காணப்படும். ஆயினும் சமயத் தொண்டிற்கும் தமிழ்த்தொண்டிற்கும் ஒத்த இலக்கியமாய் விளங்குவது சீவகசிந்தாமணியே யாகும்

சூளாமணி, சமண்சமயத்தவரும் ஏனைச் சமயத்தவரும் ஒப்பப் போற்றும் தகுதியுடையதாய் இருக்கிறது. இதனை எழுதிய ஆசிரியர், தமிழ்நாட்டில் நிலவிய புறச்சமயப் பொருள்களையும் சமயப்பொருளையும் கற்று, தம்சமய நூல்களிலும், புறச்சமய நூல்களிலும் ஒத்தவாய் உள்ள கதைப்பகுதிகளைக் கண்டு, அவற்றைத் தமிழ்மக்கட்கு உணர்த்தி அவர்தம் ஆதரவு பெறுவதை நாடிய நல்லறிஞராகும். இதனால், இவர் எழுதிய இந்நூல் இன்றுகாறும் நன்கு போற்றப் பெற்று வருகிறது. சீவகசிந்தாமணியும் இப்பெற்றித்தாய்ச் சைவர் ஒருவரால் உரைகாணவும் பெற்றிருக்கிறது.

தோலாமொழித் தேவர் எழுதிய சூளாமணியின்கண், திவிட்டன், விசயன் என்ற இரண்டு அரச குமாரர்கள் வரலாறு கூறப்படுகிறது. இவர்கள் வரலாறு வைதிகசமய நூற்கதைகளுள் வரும் வரலாற்றைப் பெரிதும் ஒத்திருக்கிறது. இடையிடையே சமண் சமயக் கருத்து விரவிநிற்கிறது எனினும், சிந்தாமணிபோல, வைதிக சமயநெறி நிற்பவரும் விரும்பத்தக்க அத்துணை உவமநலம் உடையதன்று என்றே கூறவேண்டும்.

கண்ணன் கடல் வண்ணன் என்றும், பலராமன் வெள்ளவண்ணன் என்றும் தமிழ் நூல்கள் கூறும். பால்நிற உருவிற் பனைக் கொடியோனும், நீல்நிற உருவின் நேமியோனும் என்றிரு பெருந்தெய்வமும் உடனின்றுங்கு (புறம் 58) எனவரும். திவிட்டனைக் கண்டமகளிர், "கடலொளி மணிவண்ணன் கனவினில் வந்தெமது, உடலகம் வெறுவி தாய் உள்ளம் வவ்வினன்" (குமார 12) என்றும், விசயனைக் கண்டவர் வார்வளை வண்ணன் எம் மனத்துளான் பிறர், ஏர்வளர் நெடுங்கணுக்கு இலக்கமல்லனால்" (13) என்றும் கூறினர் என்பர். இதனால் நிறமொத்தல் கூறியவாறும்.

கண்ணன் கஞ்சன் விடுத்த குவலயா பீடத்தை அடர்த்தான்; திவிட்டன் அச்சுவகண்டன் விடுத்த சிங்கத்தை வாய்பிளந்தான். கண்ணன் பெருகிவந்த மழையைத் தடுப்பது குறித்துக் குன்றினையெடுத்துக் குடையாகப் பிடித்தான்; திவிட்டனும் புலவர் ஓதிய வரலாற்றிற் கேற்பக் கோடிமாசிலை என்னும் குன்றத்தை யெடுத்துப் புகழ்நிறுவினன்.

"எரிமணி கடகக்கை இரண்டு மூன்றியப்
பெருமணி நிலம் பிலமாகக் கீழ் நுழைத்
தருமணி நெடுவரை யதனை ஏந்தினன்
திருமணி நெடுமுடிச் செல்வன் என்பவே" (அரசு 382)

எனச் சூளாமணி கூறுகிறது.

கண்ணன் பின்னைப்பிராட்டியை மணந்தான்; திவிட்டன் சுயம் பிரபை என்னும் வித்தியாதர மகளை மணந்தான். கண்ணன் சிசுபாலனை ஆழி யெறிந்து வென்றான்; திவிட்டன் அயக்கிரீவனை ஆழியெறிந்து வென்றான். இவ்வாறு திவிட்டன் செயல் பலவும் கண்ணன் செயல்களோடு ஒத்திருத்தலை,

"கோடிசிலை யெடுத்தான் கோளரிமாவாய் போழ்ந்தான்,
ஆடியல் யானை அயக்கிரீவனை அடித்தான்
வீடின் மணியருவி வெண்மலையும் கைப்பிடித்தான்,
வாடலில் பூங்கண்ணி மாமேக வண்ணனே

"வலம்புரிவாய் வைத்தான்; வார்சிலைகைக்கொண்டான்,
சலம்புரிசண்டை தலைபணிப்புக் கண்டான்,
பொலம்புரிதாமரையாள் பொன்னுகம் தோய்ந்தான்,
கலம்புரிவண்டடக்கைக் கார்மேக வண்ணனே"

(சுயம் 107, 8)

என்ற பாட்டுக்களால் இனிது காணலாம்.

இனி, இப்பெரியோர்களுள் திருத்தக்கதேவர் ஏனையோரைக் காட்டிலும் உலகியலில் மிக்க தேர்ச்சியுடையவராக விளங்கியிருக்கின்றார். தமிழ் நாட்டில் தாம் பரப்பக் கருதும் சமயப்பொருள் குறித்த இந்த நூல், தமிழ் நாட்டிற் பரவியிருக்கும் சமயப்பொருளைப் புறங்கூறுவதாயிருப்பினும், தம் சமயப்பொருளையே நிரல்படக் கூறுவதாயிருப்பினும், தமிழர்களால் ஆதரிக்கப்படுவது இல்லையாம் என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். அம்மதி நுட்பத்தால், தமிழ் நாட்டிற் பயின்றிருந்த வைதிக சமயக்கதை நிகழ்ச்சிகளை இந்நூற்கண் உவமமுகத்தாற் பயில வழங்கியுள்ளார். அதனால் இந்நூல் சமயக் கொள்கையால் வேறுபட்ட தமிழர் பலராலும் ஆதரிக்கப்பெற்ற தென்பது நாட்டில் வழங்கும் கதைகளால் நாம் அறிகின்றோம். இவ்வியல்பினைக் கடைப்பிடியாமையாற்றான், தேம்பாவணி, சீறாப்புராணம் முதலியன தமிழரிடையே நன்கு வழங்காதிருக்கின்றன போலும். இவ்வியல்பினை மூன்று இயல்களாற் காட்டி இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

1. தேவர்காலத்தே, தமிழர் தேவர்கள் இமையாநாட்டம் உடையரென்றும், அவர்கட்கும் அசுரர்கட்கும் பகைமை யிருந்து வந்ததென்றும், அதனால் தேவர்கள் அடிக்கடி துன்புற்றனரென்றும்,

தேவர்கள் திருமாலின் உதவியால் கடல் கடைந்து இனிய அமுதம் பெற்று மகிழ்ந்தனரென்றும் கேட்டிருந்தனர். அந்நிகழ்ச்சியினைத் திருத்தக்கதேவர் தாம் பாடிய, சமயத் தொண்டு குறித்துப் பாடிய, சீவகசிந்தாமணியின்கண் குறித்திருக்கின்றார். கட்டியங்காரன் சச்சந்தனைக் கொல்லக் கருதி அமைச்சரோடு சூழ்ந்தகாலத்தில் அமைச்சருள் தருமதத்தன் என்பான் கூற்றில் வைத்து, "இறங்கு கண்ணிமையார் விழித்தே யிருந்து, அறங்கள் வவ்வ அதன்புறம் காக்கலார்" (248) என்றும், தேவர்கள் கடல் கடைந்து அமுது பெற்ற செய்தியை, பதுமுகன் கோவிந்தையை மணந்து கூடிக் கூறும் நயப்புரையில், "தீம்பாற் கடலைத் திரைபொங்கக் கடைந்து தேவர், தாம்பாற் படுத்த அமுதோ" என்றும், அக்கடல் நாகம் கயிறாகக் கொண்டு கடையப்பட்டதென்பதை சீவகன் காந்தருவதத்தையை மணந்தகாலையில், கட்டியங்காரனது ஏவலால், அச்சீவகனை எதிர்த்த வேந்தர் அவனுல் அலைப்புண்ட செய்தியை விளக்குதற்கு உவமையாக நிறுத்தி, "அருவரை நாகஞ்சுற்றி ஆழியான் கடையவன்று, கருவரை குடையப்பட்ட கடலெனக் கலங்கி வேந்தர்.....உடையலுற்றார்" (812) என்று கூறுகின்றார்.

இரண்டாவதாக, முருகன் தாமரைப்பூவில்தோன்றியவன் என்றும், அவன் மலைநாட்டுக்குரிய கடவுள் என்றும், அவன் ஏந்திய வேல் வலி சிறந்தது என்றும் அவன் ஆடவரிற் பேராற்றலிலும் பேரழகிலும் மேம்பட்டவன் என்றும் தமிழர் சமயவுலகு கூறிப்பாராட்டி வந்தது. இச்செயல்களைத் திருத்தக்கதேவர், "பூவினுட் பிறந்த தோன்றல் புண்ணியன்" (316) என்றும், "தாமரை அமரர் மேவரத் தோன்றிய அண்ணல்', (994) என்றும், மணங்கொள் பூமிசை மைவரை மைந்தனே" (1311) என்றும், "அமருள் ஆனது, ஓக்கிய முருகன் எஃகம் ஓரிரண்டனையகண்ணுள்" (1291) என்றும், "செம்பொற் கடம்பன் செவ்வேலும்" (1664) என்றும், "கதம்பனே முருகன் வேற்போர்" (1681) என்றும், "திருவரைமார்பன்திண் தேர் மஞ்ஞையே முருகன்தான்,' (812) என்றும், "வள்ளல் மாத்தடிந்தான் அன்னமாண்பினன்" (1029) என்றும், "மூந்து சூர்தடிந்த முருகன் நம்பி என்பார்" (2548) என்றும் இவைபோலப் பிறவாறும் கூறிச் சிறப்பித்திருக்கின்றார். இவற்றை இடங்கூறி விளக்கலுறின் கட்டுரை விரியும்.

இனி, சிவபெருமானைக் கூறுமிடத்துப் "போகமீன்ற புண்ணியன்" (362) என்றும், "காரியுண்டிக்கடவுள்" (670) என்றும், "அறவாழியண்ணல்" என்றும் பிறவும் கூறியும் பாராட்டுவர். பரமன் கண்ணுதலால் காமனைக் காய்ந்த செய்தி, "கண்ணுதற் கடவுள் சீறக்கனலெரிப்பட்டகாமன், (1611) என்பதனாலும், புரமெரித்த வரலாற்றினை, "கடிமதில் மூன்று மெய்த கடவுள்" (1087) என்பதனாலும், "கணையெரியழலம் பெய்த கண்ணுதல் மூர்த்தி யொத்தான்" (2249) என்பதனா

லும், மங்கையங்கினைஞ் நிற்கும் நிலையினை, "பிறையணி யண்ணல் கொண்ட பெண்ணெர்பால் கொண்ட தொத்தார்" (2537) என்பதனாலும் பிறவாற்றாலும் புகழ்ந்துள்ளார்.

இனி, திருமால், பரமன் புரமெரித்த காலத்தில் அம்பாயின செய்தியை, "போகமீன்ற புண்ணிய னெய்த கணையே போல், மாக மீன்ற மாமதியன்னன் வளர்கின்றான்" (360), என்றும், அவற்குக் கருடப்புள் ஊர்தியென்பதை, "ஆழியான் ஊர்திப்புள்" (449) என்றும், அவன் சக்கரப்படை யுடையன் என்பதனை இதனாலும் பெற வைத்தும், திருமால் கண்ணனாய்த் தோன்றியகாலத்து, பாரதப்போரில் சங்கோசை எழுப்பிய செய்தியை, "செங்கண்மால் தெழிக்கப்பட்ட வலம்புரித்துருவங்கொண்ட, சங்கு" (811), என்றும் கண்ணனைக் கோறற்குப் போந்த குவலயாபீட மென்ற யானையை அவன் அடர்த்த நிகழ்ச்சியினை, "மல்லல்நீர்மணிவண்ணனைப் பண்டொர்நாள், கொல்ல வோடிய குஞ்சரம் போன்றதச், செல்வன் போன்றனன் சீவகன்" (984) என்றும், திருமால் இராமனாகிய காலத்து, அவன் மராமர மேழும் எய்த வில்வன்மையை, மராமர மேழும் எய்த வாங்குவில் தடக்கைவல்வில், இராமனை வல்லன் என்பது இசையலாற்கண்டதில்லை" (1643) என உவமித்தும் மகிழ்கின்றார்.

மேலும் ஈண்டுக்கூறிய சிவபெருமானும் திருமாலும், தாம் பரவும் அருகமூர்த்தியே எனவும், அவ்விருவரையும் பரவுவோர், அருகனைப் பரவுதல் வேண்டும் என்பார்,

"மலரேந்து சேவடியமாலென்பமாலால்,
அலரேந்தி அஞ்சலி செய்தஞ்சப்படுவார்
அலரேந்தி அஞ்சலி செய்தஞ்சப்படுமேல்
இலரே மலரெனினும் ஏத்தாவாறென்னை

"களிசேர் கணையுடைய காமனையும் காய்ந்த
அளிசேர் அறவாழி அண்ணல் இவனென்ப,
அளிசேர் அறவாழி அண்ணல் இவனேனல்,
விளியாக் குணத்துதி நாம் வித்தாலாறென்னே" (1610-11)

என்று மொழிந்திருக்கின்றார்.

இனி, இவர் காட்டி மகிழ்விக்கும் தமிழ்நாற் சொல்லாட்சிகளும், தமிழர் வழக்கவொழுக்கங்களும் ஈண்டு எடுத்துக் காட்டலுறின், இஃதோர் பெரும் பரப்பினதாகும். இவ்வாறு, தம் சமயப் பொருளை முற்ற விரித்துரைக்கும் பெருங்காப்பியம் பாடத்தொடங்கியவர், அதனைத் தமிழ் காட்டவர் பெரிதும் விரும்பி யேற்றுப்பேணத்தக்க விரகு அறிந்து அமைத்த அமைதி, அவரது தமிழ் மாண்புலமையினை நன்குவிளக்குகின்றது. மேலும், இவர் காட்டிய நெறியினை இவர்க்குப் பின்வந்தோர் கடைப்பிடித்திருப்பரேல், சமயப்பூசல்களும், பிற தீமைகளும் உளவாதற் கேதுவில்லையாகி யிருக்கும்.

சமணமுனிவரின் தமிழ்த்தொண்டு

இதுகாறும் கூறியவாற்றால், சமணமுனிவர் ஜைனசமயத்துச் சான்றோர் என்பதும், அவர்கள் நம் தமிழ் நாட்டில் தம் சமய நெறியை உணர்த்தப் புகுந்தபோது, தமிழர், இப் பெரியார்கட்குப் பல ஆண்டுகள் முன்பே வந்த வடவர் கூட்டுறவால் தம் தமிழ்ச் சமய நெறிமறந்து, வடவர் சமயக் கொள்கையிலும், வடநூன் மரபுகளிலும் வேட்கையுற்றுத் தம் தமிழ் வளர்ச்சியைக் கருதாது நின்றனர் என்பதும், ஆயினும் சமணமுனிவர்கள் தேவாரகாலம் வரையில் தமிழ்த் தொண்டு புரிதற்கண் ஊக்கங் கொள்ளாதிருந்தனர் என்பதும், பின்பு அக் காலத்து வாதங்களில் தோல்வியுற்றதன் பயனால், தமிழ்த் தொண்டு புரியத்தொடங்கி, சின்னூல்களும் பெருநூல்களும் செய்தனர் என்பதும், இலக்கணங்களின் சில புது நெறிக் கருத்துக்களைப் புகுத்தியும், தாம் செய்த நூல்களுள் வேண்டுமிடங்களில் தம் சமயக் கருத்துக்களை நுழைத்தும் சமயத் தொண்டு புரிந்தனர் என்பதும், அதுவே நம் தமிழுக்குப் பெருந் தொண்டாயிற்றென்பதும் பிறவுமாகும். இந் நெறியைக் கைப்பற்றியே பின்வந்த கிறிஸ்தவப் பெரியார்களும் தமிழ்த் தொண்டு புரிந்தனர். இக்காலத்து ஏனைச் சமயத்தவர்களும் இம் முறையை மேற்கொள்வார்களாயின், தங்கள் சமயநெறி வளம் பெறுவதோடு நம் தமிழ்மொழியும் சிறப்பெய்தும் என்பது உறுதி.

கந்தகமும் கந்தகைகளும்.

திரு. அ. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள், B.A. L.T.,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

கந்தகம்.

குறி-கந்; அணுநிறையெண்-32; இயைபாற்றல்-2, 4 அல்லது 6; ஒப்படர்த்தியெண்-சுமார் 2; கொதிவரை-444° நூ.

குலமுறை.—கந்தகக் கூட்டுகள் உயிரக்கூட்டுகளைப் போன்றுள்ளன. கந்தகமும் உயிரமும் பிறமூலப்பொருள்களோடு இயையுங்கால் ஈராற்ற வுடையன. கந்தகம் சிலகால் உயிரத்தைப்போல் காலாற்றவுடைய தாகவும் ஓரோவழி ஆரூற்றவுடையதாகவும் காணப்படுகின்றது. யாரும் நன்கறிந்த கந்தகக் கூட்டுப்பொருளாகிய நீரயக்கந்தகை அதற் கிணையான நீரய உயிரியை ($நீ_2உ$)ப்போன்று $நீ_2கந்.$ என்னும் வாய்பாடு டையது. கந்தக உயிரிகளான கந்தக ஈருயிரியும் ($கந் உ_2$) கந்தக மூவுயிரியும் ($கந் உ_3$) முறையே கந்தகயப்புளியத்தையும் ($நீ_2 கந் உ_3$) கந்தகிகப் புளியத்தையும் ($நீ_2 கந் உ_4$) உண்டுபண்ணுகின்றன.

வரலாறு.—கந்தகம் எண்ணருங்காலந்தொட்டே மக்களால் அறியப் பட்டு வந்ததோர் பொருளாகும். கிறிஸ்தவரது ஞான நூலாகிய பைபி ளிலும் யவனரது இதிகாச நூலொன்றிலும் இது கூறப்பட்டுள்ளது. எரி பொருள்களில் ஒன்றுதலின், அதனை எரிமயமெனப் பிழைபடக் கருதினர் பண்டையோர். ஆயினும் அதனைப் பிற்றைநாளில் மூலப் பொருள்களில் ஒன்றாக ஆராய்ந்து கண்டனர் 'லவாய்சியே' என்னும் இயைபுநூலறிஞர். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கந்தகத்தின் இயல்பினை நன்கறிந்திருந்தனர் நமது நாட்டு ஆன்றோர்; ரசமும் கந்தகமும் முறையே சிவமும் சத்தியும் போன்று உலோகப் பொருள்கட்கும் மக்களுடலிற்கும் உறுதிபயக்கும் என்பதும், இப் பொருள்களின் துணையால் மனிதன் யாண்டும் இளமையோடிருந்து இறப்பையும் வெல்லலாம் என்பதும் திருமூலர் மரபில்வரும் வித்தகச் சித்தரது கொள்கைகளாகும்.

கிடைக்கும் வகை.—கந்தகம் ஒரு மூலப்பொருளாயும் கூட்டுப் பொருளாயும் உலகிற் பலவிடங்களிலும் பரந்து காணப்படுகின்றது.

கந்தகமும் கந்தகைகளும்

கந்தகம் பெரும்பான்மையும் மூலப்பொருளாகக் காணப்படுவது எரிமலைகளிலும் அவைகள் வதியும் காடுகளிலுமே. இப்பொருள் உலகில் ஓராண்டிற்கு இருபத்தைந்து இலக்கம் 'டன்' நிறை வீதம் அழிகிறது என்றும், இதிற் பத்திலொருகூறு எரிமலை யரசாகிய 'எட்னா'வையுடைய சிசிலி யென்னும் தீவிலிருந்து பெறப்படுகின்றது என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இக்கந்தகம் பாறைகளின்மீது பற்றிக்கொண்டு விளைகின்றது. எரிமலைகளினின்றும் வெளிக்காலப்படும் கந்தக ஈருயிரியும் நீரயக் கந்தகையும் ஒன்றையொன்று அடர்தலின் பயனாய் இது உண்டாவதெனக் கருதப்படுகின்றது.

$$\text{கந்}\ \text{உ}_2 + \text{நீ}_2\ \text{கந்} = 2\ \text{நீ}_2\text{உ} + 3\ \text{கந்}.$$

கந்தக ஈருயிரி + நீரயக் கந்தகை = (நீர் + கந்தகம்.)

ஜப்பான், சிசிலி யொழிந்த (எரிமலை யில்லாத) அமெரிக்கநாட்டிலும் கந்தகம் காணப்படுகின்றது; இங்கே தரைக்கு 700 அடி தொலையி லுள்ள கந்தகப் பாறைகளினின்றும் ஆண்டுதோறும் இருபது இலக்கம் 'டன்' நிறையுள்ள கந்தகம் பெறப்படுகின்றது. பல உலோகக் கனிகளில் இது கூட்டுப்பொருளாகவும் அமைகின்றது. உலோகங்களோடு இணைந்த கூட்டுப்பொருளான கிலையில், அயக்கந்தகைக்கனி (அய கந்^{2}), ஈயக்கந்தகைக் கனி (ஈ கந்), ரசக்கந்தகைக்கனி (ர கந்), முதலிய பல வடிவங்களாகத் தோன்றுகின்றது. உலோகங்களோடும் உயிரத்தோடும் இணைந்து கந்தகிகங்களாகத் தோன்றும் முறையில், சுண்ணாகக் கந்தகிகமும் (சு கந் உ_4), பாரயக் கந்தகிகமும் (பாகந் உ^4) சிறப்புற்றனவாம். முட்டையின்கண்ணுள்ள வெண் கருவிலும் விலங்கின் ஊனிலும் மரங்களின் தசைகளிலும் அது காணப்படுகின்றது. நீரயத் தோடிணைந்த கூட்டுப் பொருளாகச் சிற்சில நீரூற்றுகளிலும் இதன் இருப்பு அறியப்படுகின்றது.

பிரிக்கும்வகை.—சிசிலியில் இயற்கையாகக் காணப்படும் கந்தகம் மண்ணும் கல்லும் பிறமாசுகளுங் கலந்த பொருளாகக் காணப்படுகின்றது. மாசுகள் மலிந்த இக்கந்தகக் கனிப்பொருளைக் கட்டிகட்டியாக ஒருமலைச் சரிவின்மீது அடுக்காகக் குவித்து, காற்று உட்புகாத வண்ணம் மண்ணினால் மூடி, அடியிற் கனலை மூட்டுவர். கந்தகத்தின் ஒரு பகுதி அச்சூட்டினால் எரியத் தொடங்கி மீதப் பகுதியை இளக்கவும், இளகிய கந்தகம் பிறபொருள்களினின்றும் பிரிந்து ஓடி ஈரமான மரப் பெட்டிகட்குட் புகுந்து உறைந்து விடுகிறது. இக் கந்தகம் இன்னும் போகியவாறு பண்படுமாறு, இருப்புப் பாளைகளில் உருக்கிக் கொதிக்கவைக்கப்படும். அவைகளினின்றெழும் ஆவி செங்கலாற் சமைத்த ஓர் அறைக்குட் புகுந்து, முதற்கண் குளிர்ந்துள்ள சுவர்களின்மீது பதங்கமாகப் படிகின்றது. நுண்ணிய தூள் வடிவினதாய இது 'மாக்கந்தகம்' எனப்படும். ஆனால், பொழுது செல்லச்செல்ல, அவ் அறையிற் சூடு மிகுதலும், கந்தக ஆவி திணிப்பொருளாக உறையாது நீரியான கிலை

யினை அடையும். இந்நீரிக் கந்தகம் தரைக்கு இழிந்து ஓடி உருட்டுக் குழாய்க்குட் புகும்; ஆங்கே அது ஆறலும் "உருட்டுக் கந்தகம்" ஆகின்றது.

அமெரிக்க நாட்டில் மற்றொரு முறை கையாளப்படுகின்றது. அங்குள்ள கந்தகப் பாறைகட்குள் நீண்ட குழாயைச் செருகி, அதன்வழியாகக் கடுஞ்சூடடைந்த கொதிநீராவி செலுத்தப்படுகிறது. இதனால் இளகும் கந்தகம் பின்னர் வேறொரு குழாய்வழியாக அமுக்கிய காற்றின் வலியால் வெளியேற்றப்படும். இது நூற்றுக்கு 99·5 கூறு தூயதாயிருத்தலின், இதனைப் பண்படுத்தல் வேண்டா. ஒரு சிறு குழாய்க் கிணற்றினின்றும் ஒரு நாளைக்கு இவ்வாறு 500 'டன்' நிறையுள்ள கந்தகம் புரித்தெடுக்கப் படுகின்றது.

கந்தகத்தின் பண்புகள்.—கந்தகம் வெளிறின மஞ்சணிறமும் உடையுந் தன்மையும் வாய்ந்த ஒரு திணிப்பொருள். அது நீரிற் கரையாது, கற்பூரத் தைலத்தும் மயக்க மருந்திலும் ஓரளவிற்குக் கரையாது. ஆனால் கரியிரு கந்தகை (க கந்$_2$) யெனும் நீரியில் எளிதாக முற்றுங் கரைந்துவிடும். அது மின்சாரத்தை இறையுங் கடத்தாத ஒரு பொருள். அனலைத் தாமதமாகக் கடத்தும் இயல்புடையது; இக்காரணம் பற்றியே கந்தகத் துண்டொன்றைச் சூடாக்குங்கால் சூடு விரைவில் எங்கணும் பரவாமையின் சூட்டின் ஏற்றத் தாழ்வால் படீரென வெடித்து நொறுங்குகிறது.

கந்தகத்தைச் சூடாக்கும்போது, அது முதற்கண் நூற்றுக்கோல் 113°-ல் இளகி, மஞ்சணிறமும் ஓடியலும் (ஓடும் நீர்மையும்) வாய்ந்த ஒரு நீரியாகிறது. சூடு ஏற ஏற, சிவப்பாயும் கருஞ்சிவப்பாயும் கருப்பாயும் மாறுகிறது. கருநிறம் அடைந்தபின் அது மென்மேலும் இறுகி 200°-ல் குப்புறக் கவிழ்க்கினும் கீழ்நோச்கி வழியாத் திண்மையினை எய்துகின்றது. பின்னர்ச் சூடு மிகுங்கால் மீண்டும் ஓடியலைப்பெற்று, 445°-ல் கொதித்து ஆவியாகின்றது. இளகிய கந்தகம் ஆறும்போது, முற்கூறிய மாற்றங்களனைத்தையும் எதிர்நிரல் முறையில் அடைகின்றது. கந்தகத்தை ஒரு வட்டையில் வைத்துச் சூடாக்கினால், அது முற்கூறிய மாற்றங்களனைத்தையும் அடைந்து, இறுதியில் நீலக் கொழுந்துவிட்டெரிந்து, மூச்சடைக்கும் தீய நாற்ற ஆவியாக மாறுகின்றது.

கந்தகத்தின் கொதிவரைக்குச் சற்று உயர்ந்த அனற்பதனிலும் அமுக்கம் மிக்குள்ள போதிலும் கந்தக ஆவியின் அடர்த்தி 128-ஐ அணுகுகின்றது; அந்நிலையில் அதன் வாய்பாடு கந்$_8$; 860° முதல் 1600° வரை அதன் அடர்த்தி 32, வாய்பாடு கந்^{2}; 2000°-ஐ அடுத்துள்ள நிலையில் அதன் அடர்த்தி 24 ஆகலின், ஈரணுத் தொகுதிகளான நுண்டூள்கள் ஒருவாறு பிளவுபட்டுத் தனித்தனி யணுக்களாகின்றன என்பதை அது குறியாநின்றது. கரியிருகந்தகையிற் கரைந்துள்ளபோது, கந்தகத்தின் வாய்பாடு கந்$_8$ ஆகும்.

கந்தகமும் கந்தகைகளும்

கந்தகம் சூடான நிலையிற் பல உலோகங்களோடு இணைந்து பல கூட்டுப்பொருள்களாகின்றது. கந்தகம் ஒரு மூலப்பொருளோடு இணைவதால் உண்டாகும் கூட்டுப்பொருள் 'கந்தகை' யெனப்படும். செப்புத் தூளையும் மாக்கந்தகத்தையும் நன்கு கலந்து ஒரு சோதனைக் குழாயிற் சூடாக்கினால், அக்கலவையில் திடீரெனச் செவ்வொளிபடர்கின்றது; பின்னர் முழுதும் ஒரு கரிய கூட்டுப்பொருளாகின்றது, இது செப்புக் கந்தகையாகும். அயத்தூளும் கந்தகமும் இங்ஙனமே சூடடையும் போது ஒளிவிட்டு இணைந்து கரிய அயக்கந்தகையாகின்றது. இரசத்தையும் கந்தகத்தையும் ஒரு கண்ணுடியுரலிலிட்டுச் சேர்த்தரைக்குங்கால், கரிய இரசக் கந்தகை தோன்றுகின்றது. கொதிக்கும் கந்தகத்தின்மீது நீரய ஆவியைப் பாய்ச்சுங்கால், நீரயக் கந்தகையென்னும் தீயநாற்ற ஆவி உண்டாகின்றது. செந்தழற்கரியோடு இணையுங்கால் கரியிரு கந்தகையென்னும் நீரிப்பொருளாகின்றது. சற்றேறக் குறைய மூலப் பொருள்கள் யாவும் இதனோடு இணைந்து கூட்டுப்பொருளாதலின், கந்தகம் சுறுசுறுப்புள்ளதொரு மூலப் பொருளாகின்றது.

கந்தகத்தின் பயன்கள்.—கந்தகம் பல வழியாலும் மக்கட்குப் பயன் பட்டு வரும் பொருளாகும். அது வளியில் எரியும்போது தோன்றும் கந்தக ஈருயிரியென்னும் ஆவி ஓர் அறையிலுள்ள நோய் முதல்களாகிய நச்சு நுண்ணுயிர்களைக் கொன்று வளியைத்தூய்தாக்கவல்லது. வளியில் வாழும் நுண்ணிய நச்சுயிர்க்களைக் கொல்லுவதில் அது இணையற்றதாகலின் தொற்று நோயாளர் உறைந்த அறையிற் கந்தகவத்தியை எரிப்பதுண்டு. அவ் ஆவிகாளானையும் கொல்லும் தன்மையதாம் நாகரிகத்தில் நனி முதிர்ந்துள்ள மேலைநாட்டினர், 1914-18 வரை நிகழ்ந்த பெரும் போரிற் பகைவரது உயிர்கள் எளிதே வெள்வதற்கெனச் சமைத்த நச்சு வெடிகுண்டுகட்கு வேண்டிய 'கடுகாவி'யின் இன்றியமையாததொரு பகுதியும் கந்தகமே. பசியம் என்னும் ஆவியால் சலவை செய்யத் தகாத வைக்கோல் கம்பளி பட்டு முதலியவற்றைச் சலவை செய்தற்குப் பயன்படும் கந்தக ஈருயிரி பண்படாக் கந்தகத்தை எரிப்பதனால் ஏராளமாக உண்டாக்கப்படுகின்றது. நாம் அணியும் ஆடைகள், வீட்டுப் பொருள்கள், எழுதும் காகிதம், நாம் உண்ணும் சில செயற்கை உணவுகள் இவைகள் ஒவ்வொன்றையும் செய்தற்கு வேண்டிய கந்தகிகப் புளியமும் கந்தகத்தினின்றே ஆக்கப்படுகின்றது. கரியிருகந்தகை, கந்தகம் வெடியுப்பு கரியென்னும் முப்பொருட் கலவையாகிய வெடிமருந்து, செந்தீத்தீக்குச்சி, வண்ணச்சுடர்கள், இயக்கி வண்டியுருளைகளின் பட்டைகட்குதவும் கந்தகப்பாலி (Vulcanite) சில மருந்துகள் அவைகட்கும் இவையன்ன பிறவற்றிற்கும் கந்தகம் இன்றியமையாத சரக்காகும்.

கந்தக வகைகள்.—உருட்டுக்கந்தகம் மாக்கந்தகம் என்னும் முற்கூறிய இருவகைகளினின்றும் உருவிவகைகள் இரண்டு உருவற்ற வகைகள் இரண்டு ஆக நான்கு வகைக் கந்தகங்களைப் பெறலாகும். உருட்டுக்

கந்தகமும் கந்தகைகளும்

கந்தகம் கரியிரு கந்தகையிற் கரையும்போது வெண்மையான கரையாத தூளொன்று அடியிற் படிகின்றது. இதுவே வெண்டூட் கந்தகம் எனப் படும். இதனால் உருட்டுக் கந்தகத்துள் இருவகைக் கந்தகங்கள் அமைந் திருத்தல் அறியக்கிடக்கின்றது. கந்தகத்தை ஒரு சிறு ஆய்குழாயி லிட்டு நன்றாகச் சூடேற்றிக் கொதிக்கவைத்தபின், அதைத் தண்ணீரிற் சாய்க்குங்கால், அது உறைந்து களிக்கந்தகம் என்னும் புதிய வகையின தாகின்றது. இதனை இழுக்குங்கால் இது நீண்டு பின்னர்த் தானே சுருங்கும் தன்மையதாயும், நினைத்தவாறு நாம் உருட்டி யமைக்கவல்ல தாயும் உள்ளது. இவ்விரண்டும் உருவற்றவகைகளாம். கரியிரு கந்தகையிற் கரைந்த கந்தகக் கரையத்தைத் தாறுக ஆவியாக விடுங்கால் எஞ்சி நிற்றற்குரியது கந்தகமே யன்றோ. அப்போது கந்தகம் எண் முகங்கொண்ட உருவியாகத் தோன்றலால், அது 'எணமுகக் கந்தகம், எனப்படும். ஒரு சிறு கிண்ணம் நிறையக் கந்தகத்தை எடுத்து, மஞ்சணிற நீரியாக உருகும் வரை சூடாக்கியபின், சற்றே அதனை ஆற வைக்கின் மேற்பரப்பில் ஒரு பொருக்கு எழும்; இப்பொருக்கைத் தூளைத் துக் கீழுள்ள நீரியை வெளியில் ஊற்றிவிட்டுக் கிண்ணத்தின் உட் பகுதியை ஆராயின், ஆங்கே ஊசிவடிவான மும்முகக் கந்தக உருவிகள் காணப்படுகின்றன. இது பட்டைக் கந்தகம் எனப்படும்.

கந்தகம் இங்ஙனம் நால்வகை வடிவமைந்ததாயினும், பொருள் ஒன்றே யென்பது ஆராய்ச்சிவாயிலாகத் துணியப்படுகின்றது. எவ் வகையதாயினும் ஒரே எடைக் கந்தகத்தை எடுத்து எரித்து ஆவியாக்கி அவ்ஆவியின் நிறையைக் காணின், வேறுபாடின்றி ஒன்றாகவே அவ் எடை அமைகின்றது. இதனால் இந்நான்கு வகைகளும் புறப்பண்பு களால் வேறுபடினும், அகப்பண்பாகிய பொருட்டன்மை மாறு படாமையின், பொருள் ஒன்றே யென்பது கண்கூடு. இவ்வண்ணம் ஒரு மூலப்பொருளே பொருட்டிரிபடையாது வடிவங்களாலும் நிலை மைப் பண்புகளாலும் வேறுபட்ட பலவகைகளாகக் காணப்படின், அவ்வகைகள் அப்பொருளின் 'உருத்திரிபுகள்' எனப்படும்.

கந்தக உருத்திரிபுகளின் பண்பு வேறுபாடுகளைச் சற்று நோக்கு வோம். எண்முகக் கந்தகம் கரியிரு கந்தகையிற் கரைக்கூடியது; 113 நூ. பாகையில் உருகக்கூடியது; அதன் ஒப்படர்த்தியெண் 2·05. மும்முகச் கந்தகமும் கரியிருக்கந்தகையிற் கரையக்கூடியது, 119 நூ. பாகையில் உருகக்கூடியது, அதன் ஒப்படர்த்தியெண் 1·98. இதனைத் திறந்து வைத்திருக்குங்கால், உருவிகள் பளிங்குத்தன்மை யை இழந்து ஒளிபுகாத்தன்மையை எய்துகின்றன. அவை தொறுங்கும்போது, ஒவ் வோர் ஊசிவடிவுற்ற உருவியும் சிறிய எண்முக உருவிகளாக உடைந்து பிரிந்து விடுகின்றது. வெண்டூட் கந்தகம் பொதுப்படக் கூறின், நிலைத்த வடிவுடையதாயினும், 1000° நூ. அனற்பதனை எய்தும்போது மஞ் சணிறத்தையும் எண்முகவடிவையும் பெறுதலின், அது கரியிரு கந்தகையிற் கரையவல்லதாகின்றது. களிக்கந்தகமும் திறந்துவைக்கப்

படுங்கால், தனது தோற்றத்தையும் இழுபடும் இயல்பையும் இழந்து, ஒளிபுகாத்தன்மையையும் கொறுங்கும் இயல்பையும் எய்துகிறது. இது கரியிருகந்தகையிற் கரையவொண்ணாதது; இதன் ஒப்படர்த்தியெண் சுமார் 1·95.

கந்தகக் கூட்டுகள்.—கந்தகம் உயிரத்தோடு இணையும்போது கரியீருயிரி கரிமூவுயிரி யென்னும் இரண்டு கூட்டுப் பொருள்களாகின்றது. கந்தகம் ஓர் உலோகத்தோடோ அலோகத்தோடோ இணையும் போது கந்தகையாகின்றது. கந்தகைகளின் பண்புகளையும் ஆக்கமுறைகளையும் சற்று விரிவாக ஆராய்வாம். பலதிறப்பட்ட கந்தகைகளைப் பெறுதற்கு நீரயக் கந்தகை பெருந்துணையாதல் பற்றி, முதற்கண் அதனைப்பற்றிய ஆராய்ச்சியைத் தொடங்குவாம்.

நீரயக் கந்தகை. ($நீ_2 கந்$)

கிடைக்கும் வகை. இப்பொருள் சிற்சில ஊற்றுநீர்களிலும் எரிமலைகளினின்று கிளம்பும் ஆவிகளிலும் இயற்கையாக விளைகின்றது. கந்தகம் அமைந்த உயிர்ப் பொருள்கள் அழுகும்போதும் இவ் ஆவி தோன்றுகின்றது. அழுகும் முட்டைகளினின்றெழும் முடைநாற்றத்திற்குக் காரணம் இவ் ஆவியின் தோற்றமே.

ஆக்கமுறை.—(1) நீரய ஆவியைச் சூடாக்கப்பட்ட கந்தகத்தின்மீது செலுத்துங்கால், அவ்விரு மூலப்பொருள்களும் கலந்து நீரயக் கந்தகையாகின்றது. அனற்பதன் குறைந்தவழி மிகத்தாமதமாக இரண்டும் இணையுமென்றும் சுமார் 310° நூல் இணைவு முற்றுப்பெறுகின்றது. அங்ஙனமே நீரயக் கந்தகை உயர்ந்த அனற் பதனுக்கு உள்ளாகுங்கால் மீண்டும் நீரயமாகவும் கந்தகமாகவும் முறிவுபடுகின்றது.

$$2\ நீ_2 கந் = 2\ நீ_2 + கந்_2$$

(2) ஆய்வுக்கூடத்து நீர்த்த நீரப்பைம் புளியத்தையோ கந்தகிகப் புளியத்தையோ அயயக் கந்தகையின்மீது ஊற்றுதலினுற் பெறப்படுகின்றது.

கிண்ணப் புனற்குழாயும் விடுகுழாயும் அமைக்கப்பெற்ற ஓர் உண்டையடிக்கூம்பியில் சிறிது அயயக் கந்தகையை இட்டுப் புனற்குழாய்வாயிலாக நீர்த்த நீரப்பைம்புளியத்தை ஊற்றுக. உடனே நீயநாற்றமுள்ள ஓராவி கிளம்புகின்றது. அதைக் கீழ்முக விலக்கமுறையால் வளிமீது சேமித்துவைக்கக்கூடும்; அன்றியும் அது தண்ணீரினும் வெங்நீரில் மிகுதியாகக் கரையுமாதலின், அதை வெங்நீர்மீது சேமித்தலும் இயலும். இவ் ஆவியை உலர்த்தவேண்டின், எரிய ஐந்துயிரியடங்கிய ஓர் உலர்குழாய் வழியாக அதனைச் செலுத்தவேண்டும். கந்தகிகப் புளியம் இதனை அடர்ந்து பிற பொருள்களாகப் பிரிவுபடுமாதலின், அது உதவாது. அம்முறைப்படி கிடைக்கும் ஆவி (அயயக்

கந்தகையின்கண் தனி அயம் கலந்திருக்கும் காரணத்தால்) நீரய ஆவியொடு கலப்புற்றதாகும்.

$$\text{அய கந்} + 2\ \text{நீப} = \text{அய ப}_2 + \text{நீ}_2\ \text{கந்}\dagger.$$

(3) கலப்பற்ற நீரயக் கந்தகையைப் பெறவேண்டின் கூர்த்த நீர்ப்பைம்புனியத்தை அஞ்சனியமுக்கந்தகையின்மீது ஊற்றிச் சூடாக்கவேண்டும்.

$$\text{அஞ்}_2\ \text{கந்}_3 + 6\ \text{நீப} = 2\ \text{அஞ் ப}_3 + 3\ \text{நீ}_2\ \text{கந்}.$$

எழுந்த ஆவியை உலர்த்தும் பொருட்டு அதனை நீரொழிந்த சுண்ணகப் பசியைமீது செலுத்தவேண்டும்.

ஆய்வுகள்:—(1) நீரயக் கந்தகையாவியைத் தண்ணீர்க்குட் செலுத்திப் பின் பாசித்தாளால் அதனை ஆராய்க. (2) பின்வரும் நீரிப் பொருள்களைத் தனித்தனியாக ஆய்குழாய்களில் எடுத்துக் கொண்டு, அவையொவ்வொன்றின் வழியாகவும் ஆவியைச் செலுத்துக. 1. ஈயவெடியிகக் கரையம், 2. செப்புக் கந்தகிகக் கரையம், 3. நீறியக் காரம், 4. கூர்த்த கந்தகிகப் புளியம், 5. நீறியப் பேர்மாங்கனிகக் கரையம், 6. நீறிய இரு நிறமியகக் கரையம், 7. பூதியக் கரையம் அல்லது பசியக்கரையம், 8. அயிகப் பசியக் கரையம், 9. புகையும் வெடியிகப் புளியம்.

நிலைமைப்பண்புகள்.—நீரயக் கந்தகை நிறமற்றது; மோத்தற்கு அருவருப்பான தீய காற்றமுடையது; மிகுதியாக உட்கொள்ளின் தலைக்குத்தையும் வாந்தியையும் உண்டாக்கும் தன்மையது. அங்ஙனம் உட்கொள்வார்க்கு மாற்றுவது வளியொடு கலந்த பசிய ஆவியை உட்கொள்ளலே. இவ் ஆவி நீரிற் கரைவதொன்று; 2·9 கூறுகள் 20° நூலிலும், 3·58 கூறுகள் 10° நூலிலும், 4·37 கூறுகள் 0° நூலிலும் 10° கூறு நீரிற் கரையும். இவ் ஆவியை நீரியாக்கவும் திணியாக்கவும் இயலும். இது வளிக்கு ஒன்றரை மடங்கு கனமுடையதாகலின், கீழ்முக விலக்கமுறையாற் சேமித்தல் இதற்கு உரியதாகின்றது. இது மிகக் கொடிய நச்சுக் காற்றாகும். எண்ணூற்றில் ஒரு பங்கு இவ் ஆவி வளியிற் கலந்திருப்பினும், காயைக் கொல்ல வல்லதாகும்; ஆயிரத்தைஞ்ஞூற்றில் ஒன்று கலந்திருப்பினும் பறவைகளைக் கொல்லுதற்குப் போதியதாகும் என்பர்.

இயைபுப் பண்புகள். இவ்ஆவி வலுத்த சூட்டிற்குள்ளாகுங்கால், நீரயம் கந்தகம் எனும் இருபொருள்களாக முறிவுபடுகின்றது. இவ் ஆவி வளியில் எரியும்போது கந்தக ஈருயிரியும் நீரும் உண்டாகின்றன. ஆவி எரியும்போது குளிர்ந்த பீங்கானைச் சுடரின்மீது பிடித்தால், அதில் மஞ்சட் கந்தகம் படியும். இவ் ஆவியின் கரையம் 'நீரயக்கந்தகைக் கரையம்' எனப்படும். இது நிலையற்றதாகலின், வளிபடும்போது அதனுள் உயிரியூட்டப் பெற்று நீராக மாறும்; அன்றியும் கந்தகப்

படிகையும் உடன்தோன்றும். இவ்ஆவியையும் பசியத்தையும் கலக்கின் கந்தகமும் நீரப்பைம்புளியமும் உண்டாகும்.

$2\,ப_2 + 2\,நீ_2\,கந் = 4\,நீ\,ப + கந்_2$

நீரயக் கந்தகை வலுத்த உயிரிகுறைப்பாலுகும். உப்பீனிகளே இது அந்தந்த நீரயைகளாக்க கந்தகப்படிகையும் உடன்தோன்றும். இவ் ஆவியை கூர்த்த கந்தகிகப் புளியத்திடைச் செலுத்துங்கால், அப் புளியம் கந்தக ஈருயிரியாகவும் நீராகவும் மாற, கந்தகப் படிகையும் உடன் தோன்றுகிறது.

$நீ_2\,கந் + நீ_2\,உ,\ கந்\ உ_3 = 2\,நீ_2\,உ + கந்\ உ_2 +$ கந் + நீறியப் பேர்மாங் கனியிகக் கரையத்து இவ் ஆவியைப் புகுத்தும்போது, அது நிற மிழப்பதோடு நீறியக்கந்தகிகமும் மாங்கனியக் கந்தகிகமும் நீரும் வெண்மையான கந்தகப் படிகையும் தோன்றுகின்றன. இவ்ஆவியின் துணையால் நீறியஇருநிறமியிகம் உயிரிகுறைவுறுங்கால், நீறியக் கந்தகிகமும் நிறமியக் கந்தகிகமும் நீரும் கந்தகமும் தோன்றுகின்றன; அயிகப்பசியை உயிரிகுறைந்து அயயப்பசியையாக, கந்தகப் படிகையும் உடன்தோன்றுகிறது.

நீரயக் கந்தகையை ஈயவெடியிகம் ஈயக்காடியிகம் செம்புக் கந்தகிக முதலியவைகள் வழியாகப் புகுத்தும்போது, அந்தந்த உலோகக் கந்த கைகள் படிகைகளாகத் தோன்றுகின்றன.

$ஈ.வெ\ உ_3)_2 + நீ_2\,கந் = ஈ\,கந் + 2\,நீ\,வெ\,உ_3$ நீறியக்காரம் போன்ற காரயத்தோடு இணையும்போது, கந்தகை தோன்றுகின்றது. அவ்ஆவி மிகுதியாகச் செலுத்தப்படும்போது புளிக்கந்தகை தோன்றுகிறது. இக்காரணத்தால் இவ்ஆவி இருகாரயப் புளியம் என்பதாயிற்று.

ஆவியின் இயைபு.—சூடேறியுள்ள காகம், செம்பு, ஈயம் இவை களின்மீது நீரயக் கந்தகையைச் செலுத்தும்போது, அவ்வக் கந்தகை களோடு நீரய ஆவியும் தோன்றும். இதனால் இவ் ஆவியின்கண் நீரயத்தின் இருப்பு அறியப்படுகின்றது.

$கா + நீ_2\,கந் = கா\,கந் + நீ_2.$

நீரயக் கந்தகை யாவியைச் சூடேறிய குழாய் வழியாகப் புகுத்தும் போது, நீரயமும் கந்தகமும் உண்டாகலானும், நீரயமும் கந்தகமும் இணையுங்கால் நீரயக் கந்தகை உண்டாகலானும், நீரயம் கந்தகம் இரண்டும் அதில் அமைந்திருத்தல் புலனுகும். இன்னும் நீரயக் கந்தகை எரியும்போது, நீரும் கந்தக ஈருயிரியும் தோன்றுதலானும், அவ்விரு பொருள்களின் இருப்பும் உய்த்துணரப்படும்.

இயைபின்பருமைவீதம்.—உடல் நீண்டு பருத்து வாயொடுங்கிய ஒருகண்ணுடிக் குழாயை எடுத்துக்கொண்டு, தகரத்தாள் ஒன்றை

அதனுள் இடு. அக்குழாயின் வாயில் ஒரு பாலிக்குழாயைச் செருகி, அதன்மேற் கவ்வியை மாட்டு. பின்னர் கண்ணுடிக்குழாயை நீரயக் கந்தகையால் நிரப்பிக் கடுமையாகச் சூடாக்கு. அப்போது தகரம் ஆவியோடு இணைந்து கந்தகையாக மாறும். குழாய் ஆறியபின், வாயை இரசத்தடியில் வைத்துக் கவ்வியை நெகிழ்த்து. அப்போது இரசம் சிறிதும் உள்ளேறாது நின்று விடுகிறது. எஞ்சுகின்ற ஆவியைச் சோதனை வாயிலாக ஆராய்ந்தால், அது நீரய ஆவியாதல் அறியப்படும் இதனால் நீரய ஆவியின் பருமையும் நீரயக் கந்தகையாவியின் பருமையும் ஒன்றாகும் என்பது புலனாகிறது; அதாவது நீரயக்கந்தகையில் கண் சமபருமையுள்ள நீரய ஆவி அடங்கியுள்ளது என்பது முடிவாகின்றது.

ஆவியின் ஆய்குறிகள்.—1. நீரயக் கந்தகையாவி அழுகும் முட்டை களின் தீயநாற்றத்தை உடையது. 2. ஈய வெடியகக் கரையத்து முக்கிய ஒரு தாளினை இவ் ஆவியிற் பிடித்தால் அது கருநிறமடைகிறது. 3. வெள்ளி நாணயத்தில் இவ் ஆவி படுங்கால் அது கரிய கறையினைப் பெறுகின்றது.

கந்தகைகள்

ஆக்கமுறைகள்.—(1) மூலப்பொருள்கள் கந்தகத்தோடு இணையுங் கால் இவை உண்டாகும். உதாரணமாக, கந்தகத்தூளையும் அயத் தூளையும் கலந்து, ஒரு கடுத்தக் கண்ணுடிக் குழாயிலிட்டுக் கந்தகம் கொதிக்கும்வரை சூடாக்கினால், இரண்டும் செந்தழலாகி இணைந்து அயயக் கந்தகை யென்னும் ஒரு கரிய பொருளாகின்றது. இவ் வண்ணமே கந்தக ஆவியைச் சூடாக்கின் கரித்தூளின்மீது செலுத்தி னால் கரியிரு கந்தகை உண்டாகிறது. இரசத்தையும் கந்தகத்தூளையும் ஒரு கண்ணுடி யுரலிலிட்டு ஓருலக்கையால் இரண்டையும் சுறுசுறுப்பாக ஒன்றாகுமாறு தேய்த்தால், இரசக்கந்தகை யென்னும் கரியகூட்டு தோன்றுகிறது.

(2) நீரயக் கந்தகையின்கண் அமர்ந்துள்ள நீரயத்தைத் தகரம் போன்ற உலோகங்களால் வெளியேற்றும்போதும் கந்தகைகள் பெறப் படும். தகரத்தாளொன்றை நீரயக் கந்தகை யாவியினையுடைய ஒரு குழாயிலிட்டுக் குழாயை ஒரு முனையிலிருந்து மறு முனைவரை சூடாக் கினால், தகரம் கருமையெய்தி தகரக் கந்தகையாகின்றது.

(3) நீரயக் கந்தகை யாவியை உலோக உப்பக்கரையங்கள் வழியா கப் புகுத்தும்போது கரையாப் பொருள்களாகிய கந்தகைகள் படிகை களாகத் தோன்றுகின்றன. செப்புக் கந்தகை ஈயக் கந்தகை முதலியவை இங்ஙனம் பெறப்படுகின்றன.

$$\text{செ கந்} + \text{நீ}_2\ \text{கந்} = \text{செ கந்} + \text{நீ}_2\ \text{கந்}_4.$$

$$\text{ஈ (வெ உ}_3)_2 + \text{நீ}_2\ \text{கந்} = \text{ஈ கந்} + 2\ \text{நீ வெ உ}_3.$$

(4) காரக் கரையங்களும் நீரயக் கந்தகையும் இணையும் போதும் சில கரையங்கள் உண்டாகின்றன. நீறியக் காரக் கரையத்தின் வழியாக நீரயக் கந்தகை யாவியை வெகுநேரம் செலுத்திஞல், இரண்டும் இணைந்து நீறியக் கந்தகையாகும். இது கரைபொருளாதலின் கரைய மாய் கிற்கும்.

(5) நீர்த்த புளியத்திற் கரையும் கந்தகைகள் படிகைகளாகத் தோன்ற வொண்ணுமையால் அவைகளைப் பெறுதற்கு வேறு முறை களைக் கையாளல்வேண்டும். நீரயக் கந்தகையை உலோக உப்பக் கரையங்கள் வழியாகச் செலுத்துங்கால் நீர்த்த புளியம் ஒன்றும் கந்தகையோடு தோன்றுதல் முறை (3)ல் காணப்பட்டது; இப்புளியம் அக்கந்தகையின் மீது படுங்கால் ஒன்றையொன்று அடர, நீரயக் கந்தகை மீண்டும் தோன்றிவிடுகிறது. இது இருவழி மாற்றத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

$காகந_4 + நீ_2கந = காகந + நீ_2கந_4$. இத்தகைய கந்தகை யைப் படிகையாகப் பெறல்வேண்டின், உப்பத்தின் நீர்க்கரையத்திற்குச் சாரயக் கந்தகையைச் சேர்த்தால் அந்தந்த உலோகக் கந்தகை படிகை யாகத் தோன்றும். இன்னெரு முறையாவது, உப்பத்தின் நீர்க்கரை யத்திற்கு முதலில் சாரயப் பசியையையும் சாரய நீருயிரியையும் மிகுதி யாகச் சேர்த்துப் பின்னர் அதன் வழியாக நீரயக் கந்தகை யாவியைப் புகுத்த வேண்டும். காரம் மிகுதியாக உள்ளபோது புளியத்தைக் கொன்றுவிடுமாதலின், புளியம் கந்தகையினைத் தாக்க வழியில்லை; இதனுற் கந்தகை படிகையாகத் தோன்ற ஏது உண்டாம்.

கந்தகைகளின் பாகுபாடு. 1. நீரிற்கரையும் கந்தகைகள். உப்பியம் நீறியம் சாரயம் ஆகிய கார உலோகங்களின் கந்தகைகள் இவ் இனத் தைச் சார்ந்தனவாம். காரமண் உலோகங்களாகிய சுண்ணகம் பாரயம் சிந்துரம் முதலியவற்றின் கந்தகைகள் நீர் முறிவுறுதலின், கார வினையை யுடையனவாகின்றன.

2. நீரிற் கரையாது நீர்த்த புளியத்திற் கரையும் கந்தகைகள். அயம் கேலியம் போலியம் மாங்கனம் நாகம் முதலியவற்றின் கந்தகை கள் இவ்வினத்தைச் சார்ந்தன. இவை அவ்வவ் உப்பக்கரையங்களி னின்றும் நீரயக் கந்தகையாவியின் துணையால் படிகைகளாகத் தோன்ற வொண்ணுதனவாம். காரணம் முற்கூறப்பட்டதே. இவ்வினத்தைச் சார்ந்த கந்தகைகளை அவ்வவ் உப்பங்களின் நீர்க் கரையங்களினின்றும் சாரயக் கந்தகையின் உதவியால் அடைதற்குரியன.

3. நீரிலும் நீர்த்த புளியத்தும் கரைவுறுதன. ஈயம், செம்பு, தகரம் அஞ்சனியம் முதலியவற்றின் கந்தகைகள் இக்கீர்மையவாம். இவை (1) நீர்த்த புளியத்தினும் காரங்களினும் கரைவுறுத இரசக்

கந்தகை செப்புக் கந்தகை போன்றனவும் (2) நீர்த்த புளியத்திற் கரை வுறுது காரத்திற்கரையும் அஞ்சனியக் கந்தகை தகரக் கந்தகை போன் றனவுமாக இருவகைப்படும்.

மேற்கூறிய பாகுபாடு பண்பறிபகுப்புமுறையில் உலோக உப்பக் கரையங்களின் வழியாக நீரயக் கந்தகையாவியைப் புகுத்தும்போது தோன்றும் படிகைகளினின்றும் இன்னின்ன உலோகங்கள் உப்பங் களில் அடங்கியுள்ளன என்பதை ஆராய்தற்கு மிகவும் பயன்படுவ தாகும்.

வாய்பாடு.—நீரயக்கந்தகையின்கண் சமபருமையுள்ள நீரய ஆவி அமைந்திருத்தல் முற்கூறப்பட்டது. அவகேதரின் கருதுகோளின்படி இவ் ஆவியின் ஒரு துண்டுளில் நீரயதுண்டுள் ஒன்று உள்ளது என்ப தாகிறது. ஆனல் நீரய துண்டுளின் வாய்பாடு நீ 2. நீரயக் கந்தகை யின் ஆவியடர்த்தி 17 ஆதலானும், துண்டுள் நிறை யெண் ஆவி யடர்த்தி யெண்ணிற்கு இருமடங்காதலானும், நீரயக் கந்தகையின் துண்டுள் நிறையெண் 34 ஆகிறது. ஆனல் இம் 34 கூறுகளில் நீ 2-க் குரிய நீரயக் கூறுகள் 2 போக எஞ்சுவன 32 கூறுகளே ; இவையே கந்தகத்திற்குரியன; கந்தகத்தின் அணுநிறையெண் 32 ஆகலின், கந்தகத்தில் ஒ ந கூறே அமைந்துள்ளது அறியப்படுகின்றது. இதனல் நீரயக் கந்தகைக்குரிய வாய்பாடாவது நீ 2 கந் என்பதே.

கந்தகமும் கந்தகைகளும்

குறி-Symbol
அணுநிறையெண்-Atomic Weight
இணையாற்றல்-Valency
ஒப்படர்த்தியெண்-Specific Gravity
கொதிவரை-Boiling Point
குலமுறை-Family-Relationship
கூட்டுகள்-Compounds
உயிரம்-Oxygen
இணைதல்-Combining
ஈராற்றல்-Bi-Valent
நீரியக்கந்தகை-Hydrogen Sulphide
நீரிய உயிரி-Hydroxide
உயிரி-Oxide
கந்தக ஈருயிரி-Sulphur Dioxide
கந்தக மூவுயிரி-Sulphur Trioxide
கந்தகயப்புளியம்-Sulphurous Acid
கந்தகிகப் புளியம்-Sulphuric Acid
எரிமயம்-Phlogiston
மூலப்பொருள்-Element
அடர்தல்-Chemical Action
கனிகள்-Ores
கந்தகை-Sulphide
அயம்-Iron
கந்தகிகம்-Sulphate
சுண்ணக்கந்தகிகம்-Calcium Sulphate
பாரயம்-Barium
நீரயம்-Hydrogen
பதங்கம்-Sublimate
ஆவி-Gas
திணி-Solid
நீரி-Liquid
கொதி நீராவி-Steam
கற்பூரத்தைதலம்-Turpentine
மயக்க மருந்து-Chloroform
கரியிருகந்தகை-Carbon-bi-sulphide
நூற்றுக்கோல்-Centigrade
ஓடியல்-Mobility
அனற்பதன்-Temperature
அமுக்கம்-Pressure
நச்சுநுண்ணுயிர்கள்-Germs
காளான்-Fungus
கடுகாவி-Mustard Gas
பசியம்-Chlorine
கலவை-Mixture
இயக்கிவண்டி-Motor Car

உருவி-Crystal
உருவற்ற-Amorphous
உருட்டுக் கந்தகம்-Roll Sulphur
வெண்மேட் கந்தகம்-White Amorphous [Sulphur
களிக்கந்தகம்-Plastic Sulphur
கரையம்-Solution
எண்முகக் கந்தகம்-Octo-hedral Sulphur
பட்டைக் கந்தகம்-Prismatic Sulphur
உருத்திரிபுகள்-Allotropic modifications
பாகை-Degree
அலோகம்-Non-metal
நீர்த்த புளியம்-Dilute Acid
கூர்த்த புளியம்-Concentrated acid
நீர்ப்பைம் புளியம்-Hydrochloric Acid
இண்ணப் புனற்குழாய்-Thistle Funnel Tube
விடுகுழாய்-Delivery Tube
கூம்பி-Flask
அய்யக்-...Ferrous...
அயிகக்-...Ferric...
கீழ்முகவிலக்கம்-Downward Displacement
சேமி-Collect
எரிய ஐந்துயிரி-Phosphorous Pentoxide
உலர்குழாய்-Drying Tube
அஞ்சனியம்-Antimony
நீரொழிந்த-Anhydrous
பசியை-Chloride
பாசித்தாள்-Litmus paper
ஆய்குழாய்-Test Tube
ஈய வெடியிகம்-Lead Nitrate
—அயக்கூட்டு—'Ous Compound
—இகக்கூட்டு—'ic Compound
நீரியம்-Potassium
காரம்-Alkali
பேர்மாங்கனிகம்-Permanganate
நிறமியம்-Chromium
பூரியம்-Bromine
வெடியிகப்புளியம்-Nitric Acid
இலைமைப்பண்புகள்-Physical Properties
வளி-Atmosphere (Air)
உயிரிகுறைப்பான்-Reducing Agent
உப்பீனிகன்-Halogens

கந்தகமும் கதந்கைகளும்

சாரயம்-Ammonium
நீரயை-Hydride
படிகை-Precipitate
காடியிசம்-Acetate
புளிக்கந்தகை-Acid Sulphide
இருகாரய-Di-Basic
இயைபு-Composition
நாகம்-Zinc
இயைபின் பருமைவீதம்-Volumetric Composition
தகாத்தாள்-Tinfoil
பாலிக்குழாய்-Rubber Tube
கவ்வி-Clip
ஆய்குறி-Test
கடித்தக்கண்ணாடி-Hard glass
உப்பங்கள்-Salts
வெளியேற்றல்-Displacement
நீரியக்காரம்-Caustic Potash
இருவழிமாற்றம்-Reversible Re action
வெடியுப்பு-Nitre
பளிங்குத்தன்மை-Crystaline Property
ஒளிபுகாத்தன்மை-Opaqueness

கரியீருயிரி-Carbon di-oxide
உலோகம்-Metal
இணைவு Chemical combination
உண்டையடிக் கூம்பி-Round bottomed flask
வெடியிகக் கரையம்-Solution of a nitrate
செப்புக்கந்தகிக்கரையம்-Copper sulphate solution
கூர்த்த கந்தகிப் புளியம்-Concentrated sulphuric acid
நீரியப் பேர்மானிங்கக் கரையம்-Potassium permanganate solution
புகையும் வெடியிகப் புளியம்-Fuming Nitric acid
கந்தகப் படிகை-Precipitate of sulphur
நீரிய இரு நிறமியிசகம்-Potassium-di-chromate
சுயக்கந்தகைக்கனி-Lead Sulphide ore

உப்பியம்-Sodium
கார உலோகம்-Alkalic Metal
காரமண் உலோகம்-Alkaline Earth Metal
சிந்தூரம்-Strontium
நீர்முறிவு-Hydrolysis
காரவினை-Alkaline Re-action
கேவியம்-Cobalt
போவியம்-Nickel
பண்பறிபகுப்பு-Qualitative Analysis
வாய்பாடு-Formula
கருதுகோள்-Hypothesis
நுண்ணுள்-Molecule
ஆவியடர்த்தி-Vapour Density
நுண்ணுள் நிறையெண்-MolecularWeight
ஆய்வுகள்-Experiments
இயைப்புப் பண்புகள்-Chemical Properties
இயைபு நூல்-Chemistry
நீரியக் கந்தகிகம்-Potassium sulphate
நிறமியக் கந்தகிகம்-Chromium sulphate
காரயம்-Base
உலோக உப்பக்கரையம்-A solution of metallic salt
நீரியக் காரக்கரையம்-Caustic potash solution
நீரியக் கந்தகை-Potassium sulphide
காலாற்றல்-Latent energy
ரசக் கந்தகைக் கனி-Mercuric sulphide ore (cinnabar)
மாக்கந்தகம்-Flowers of sulphur
எதிர் நிறல்-In the reverse order
சாணுத் தொகுதி-Group of two atoms
செப்புக்கந்தகை-Copper sulphide
செந்தழற்கரி-Glowing charcoal
கரி-Charcoal
அயயக்கந்தகை-Ferrous sulphide
அஞ்சனிய முக்கந்தகை-Antimony tri-sulphide
பூகியக் கரையம்-Bromine solution
நீர்க்கரையம்-Dilute solution

வித்துவான்
தியாகராச செட்டியார்

உயர்திரவாளர் மகாமகோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

1

கல்வியிற் சிறந்த பெரியோர்களிற் பலர் தங்கள் கடமைகளை உண்மையோடும் ஊக்கத்தோடும் அன்போடும் செய்துகொண்டு, பிறருடைய செல்வத்துக்கேனும் அதிகாரத்துக்கேனும் அஞ்சிப் பிறழ்ந்தொழுகாமல் இன்புற்று வாழ்ந்து வந்ததுண்டு. அத்தகையோர்கள் நம் தமிழ் நாட்டில் பண்டைக் காலத்திலும் பிற்காலத்திலும் இருந்தனரென்பதை நூல்கள் வாயிலாகவும், கண்கூடாகவும், வேறு விதமாகவும் அறிந்து வருகிறோம். பிற்காலத்தில் வாழ்ந்தவர்களுள், கும்பகோணம் கல்லூரித் தமிழ்ப்பண்டிதராக இருந்து பெரும்புகழ் பெற்ற ஸ்ரீ சி. தியாகராச செட்டியார் ஒருவராவர்.

செட்டியார் தைரியம் மிக்கவர்; தம்முடைய கடமைகளை ஒழுங்காகச் செய்துவருபவர்; பிறருடைய நூல்களிலும் உரைகளிலும் உள்ள நயமான பகுதிகளைக் கண்டு மகிழ்ந்து பாராட்டுபவர்; பிழைகள் கண்டவிடத்து அஞ்சாமற் கண்டிக்கும் துணிவுடையவர். கல்வியறிவில்லாருடைய மேற்போக்கான கடிப்புகள் அவரிடம் பயன்படா.

அவர் திருச்சிராப்பள்ளிக்கு வடக்கேயுள்ள பூவாளூரென்னும் ஊரில், 'பூவாளூர்ச் செட்டியார்' என்னும் சைவமரபிற் பிறந்தவர். அவர் பிறந்த வருடம் 1825. அவருடைய தந்தையார் பெயர் சிதம்பரஞ் செட்டியாரென்பது. அவர் பதினெட்டுப் பிராயம் வரையில் தம்முடைய குடும்பத்திற்குரிய விவசாயத்தையும் வர்த்தகத்தையும் கவனித்து வந்தனர்; தமிழ் நூல்களையும் தக்கவர்களிடத்திற் கற்றுவந்தார். அக்காலத்தில் அவருக்கு பயிர்த்தொழில் முதலியவற்றில் ஊக்கம் உண்டாகவில்லை. பழம்பிறப்பின் வாசனையால் தமிழ்க்கல்வியை நன்முகப் பயின்று தேர்ச்சிபெற வேண்டுமென்னும் அவா அவர்பால் உண்டாகி முதிர்ந்தது. ஆதலின், தந்தையாரிடம் விடைபெற்றுக்கொண்டு, திருச்சிராபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் சென்று படிக்கத் தொடங்கினர். பிள்ளையவர்கள் அவருடைய அன்பையும் அறிவையும் ஊக்கத்தையும் அறிந்து அவர்பாற் பெரிதும் அன்பு வைத்துப் பாடஞ் சொல்லிவந்தனர். காலடைவில், செட்டியார் 'தமிழ்ப் புலமை மிக்கவ

ராஞர்; பிள்ளையவர்களுக்கு அவரிடம் அளவற்ற அன்பு உண்டாயிற்று; அவர்களுடைய மாணக்கர்களுட் சிறந்தவராக அவர் கருதப்பட்டார்.

அதன் பயனக அவர் திருசிரபுரத்திற் பட்டாளத்தார்க்குரிய பள்ளிக்கூடமொன்றில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பெற்ரூர். அங்கிருந்து பாடஞ்சொல்லி கன்மதிப்பையடைந்தார். அதன் பிறகு திருவரங்கத்திலிருந்த ஒரு பள்ளிக்கூடத்திற் (Taluk High School) பண்டிதராக இருந்து பாடஞ் சொல்லிவந்தார். அக்காலத்தில் அவர் பாடஞ்சொல்லும் இயல்பு மாணக்கர்கள் மனத்தையும் அவர்கள் வழி யாக ஏனையோர் மனத்தையும் கவர்ந்துகொண்டது.

அப்போது, கும்பகோணம் மாகாணக் கலாசாலையில் (Provincial School) ஆசிரியராக இருந்த தண்டலம் கோபாலராவ் அவர்கள் செட்டியாருடைய கல்வியாற்றலைப்பற்றியறிந்து 1865-ஆம் ஆண்டில் கும்பகோணத்திற்கு வருவித்துக்கொண்டார். அதுமுதல் செட்டியார் அங்கேயே பண்டிதராக இருந்துவந்தார். அந்தப் பள்ளிக் கூடம் கல்லூரியான பின்பும் இருந்து புகழ்பெற்ரூர். அவருடைய கல்வியாற்றலின் சிறப்பு எங்கும் பாராட்டப்பெற்றது. யாவரும் அவரை மேலாக மதித்து மிக்க மரியாதையோடு உபசாரம் செய்து வந்தனர்.

1880-ஆம் ஆண்டு வரையில் அங்கே வேலை பார்த்தனர். பின்பு, உபகாரச் சம்பளம்பெற்று முதலில் திருவானைக்காவிலும் பின்பு உறையூரிலும் இனிது வாழ்ந்து வந்தார். தாம் ஈட்டிய பொருளின் பெரும் பகுதியைப் பூவாளூர் நடராஜப் பெருமான் கட்டளை முதலிய வற்றிற்குச் சேர்ப்பித்து சர்வசித்து ஆண்டு, தைத்திங்கள் 7-ஆம் நாள் (19—1—1888) சிவபிரான் திருவடி நீழலை அடைந்தார்.

ஸ்ரீ தியாகராச செட்டியருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் அவருடைய தைரியத்தையும் கல்விப்பெருமையையும் பிற இயல்புகளையும் நன்கு விளக்கும். எல்லாவற்றையும் அமைத்து அவருடைய சரித்திரத்தை விரிவாக எழுதி வெளியிட எண்ணியிருக் கிறேன். இங்கே மூன்று நிகழ்ச்சிகளை மட்டும் தெரிவிக்கிறேன்.

2

தியாகராச செட்டியார் கும்பகோணத்தில் இருந்த காலத்தில் உயர்தர நீதிமன்ற வழக்கறிஞர் (High Court Vakil) ஒரு பெரிய கனவான், நன்னூற் சூத்திரங்களில் 200-க்குமேல் நீக்கிவிட்டு, மற்ற வற்றைத் தொகுத்து உரையெழுதி வெளியிட்டார். அக்கனவான் சிறிதளவு தமிழறிவுடையவர்; தம்முடைய பிள்ளைகளும் தம் நண்பர்க ளுடைய பிள்ளைகளும் பள்ளிக்கூடங்களில் நன்னூற்பாடத்தைப் பயில இயலாமல் இருத்தலை அறிந்து வருந்திய அவர், இப்படி ஒன்றை

வெளியிட்டு தம்முடைய நண்பர்களாகிய அதிகாரிகளின் உதவியாற் பள்ளிக்கூடங்களில் இதையே பாடபுத்தகமாக வைத்தால் பயன்படுமே, என்று எண்ணினார்; நண்பர்கள் சிலர் அங்ஙனம் செய்தல் மிகவும் கல்லதென்று கூண்டினர்கள். அதனால் அக்கனவான், சட்டைப்பையில் வைத்துக்கொள்ளும் அளவில் அதனைப்பதிப்பித்து ஊர்தோறும் உள்ள பள்ளிக்கூடங்களில் வைக்கச்செய்தார். அதனை யாவரும் வாங்கியதோ டன்றி அவ்வழக்கறிஞரை மிகப் பாராட்டவும் தலைப்பட்டனர். தமிழ்ப் பண்டிதர்களில் இலக்கணம் கற்பித்தலில் வண்மையற்ற சிலர் அப் பதிப்பை விரும்பிப்பெற்றுப் புகழ்ந்தனர்.

புத்தகத்தை வெளியிட்ட கனவான், கலாசாலைகள் உள்ள இடங் களுக்கெல்லாம் அதனை அனுப்பி அங்கங்கே பாடமாக வைக்கும்படி ஏற்பாடுகளை செய்துவந்தார். கும்பகோணத்தில் உள்ள 'நகர உயர்தரக் கலாசாலை'க்கும் (Town High School) ஒரு பிரதியை அனுப்பினர். அந்தப்பள்ளிக்கூடத்து தலைமையாசிரியர், தமிழ்ப்பாட புத்தகங்களைத் தியாகராச செட்டியார் தகுதியுடையனவென்று சொன்னால்தான் பாட மாக வைப்பார்; ஆதலின் அந்தப் புத்தகத்தைச் செட்டியாரிடம் கொடுத்து அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டார். அதனைப் படித்துப்பார்த்த செட்டியார், "அது பாடமாக வைக்கத் தகுதி யற்றது" என்று சொல்லிவிட்டார். அதனால் அந்தப்பள்ளிக்கூடத்தில் அது பாடம் வைக்கப்பெறுமற் போயிற்று. பிறகு அப்புத்தகம் கும்ப கோணம் கல்லூரிக்கும் அனுப்பப்பட்டது. அங்கும் அது வைக்கப் படவில்லை. செட்டியார் அந்த நூலை மதிக்கவில்லை யென்றசெய்தி அருகிலுள்ள ஊர்களிலும் பரவியது. அதனால் அங்கங்கே உள்ள பள்ளிக்கூட ஆசிரியர்கள் அதனைப் பாடபுத்தகமாக வைக்க விரும்ப வில்லை. அதனை வெளியிட்டோர் தக்க அதிகாரிகள்மூலம் செய்துவந்த முயற்சிகளால் அவ்வாசிரியர்கள் தரும சங்கடத்துக்காளாயினர்.

இந்த நிலையில், அந்தக்கனவான் கும்பகோணம் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர்; அப்படியே கல்லூரிக்கும் வந்தார். செட்டியார் தம் புத்தகம் பாடமாக வைக்கத் தகுதியற்றதென்று கூறியதையும், அதனாற் பல பள்ளிக்கூடங்களில் அது பாடமாக வைக்கப்படாமல் மறுக்கப் பெறுவதையும் உணர்ந்திருந்தார். தம்முடைய மதிப்பை செட்டியாருக்கு அங்குள்ளவர்களாற் புலப்படுத்திக் கண்டித்துவிட்டுச் செல்லவேண்டு மென்பது அவர் எண்ணம். கல்லூரிக்கு வந்த அவர், தம்மோடு படித்த ஒருசாலை மாணாக்கரும் அங்கே ஆங்கில ஆசிரியராக இருந்த வருமான சுந்தரராவ் என்பவருடன் பல வகுப்புகளையும் ஆசிரியர் களையும் பார்த்துவிட்டுத் தமிழ்வகுப்புக்கும் வந்துகின்றார்; தியாகராச செட்டியார் பாடஞ் சொல்லும் ஆற்றலைக் கவனித்தார். அவரிடம், நேரிலே தம் புத்தகத்தைப்பற்றிக் கேட்க வேண்டுமென்று எண்ணி யிருந்த அக்கனவான், 'இவரிடம் நாம் எப்படிக்கேட்பது? இவர் மிகச் சிறந்த கல்வியாற்றல் உடையவராகத் தோற்றுகிறார்' என்று எண்ணி அஞ்சிச் சும்மாயிருந்துவிட்டுச் சென்றார்.

வித்துவான் தியாகராச செட்டியார் சரித்திரம்

சுந்தரராவ் நாள்தோறும் பாடம் முடிந்தவுடன் தம்முடைய வண்டியில் தியாகராச செட்டியாரையும் ஏற்றிக்கொண்டு செல்வது வழக்கம். அன்று அவர் செட்டியாரையும் தம் நண்பராகிய அக்கன வாணையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்.

வண்டி செல்லுகையில், சுந்தராவ் தம்முடைய நண்பரை இன்ன சென்று செட்டியாருக்குப் பழக்கம் செய்துவைத்துவிட்டு, "இவர்கள் புதிய முறையில் நன்னூல் ஒன்று அச்சிட்டிருக்கிறார்; அதைத்தாங்கள் பார்த்ததுண்டோ?" என்றுகேட்டனர். செட்டியார், "ஆம்; பார்த் திருக்கிறேன்" என்று கூறிவிட்டுப் பேசாமல் இருந்தார்.

உடனே சுந்தரராவ் அந்தக்கனவாணைப்பார்த்து, "இவர்களே தியாகராச செட்டியாரவர்கள்; சிறந்தவித்துவான். இந்நாட்டில் இவர் களைப்போன்ற வித்துவான்களே இல்லை" என்று சொல்லி செட்டி யாரைப் பழக்கம் பண்ணிவைத்தார்.

அதனைக்கேட்ட கனவான், தம்முடைய நண்பராகிய சுந்தரராவ் அருகில் இருக்கிறாரென்ற தைரியத்தினால் செட்டியாரை நோக்கி, "என்ன, ஐயா! நான் ஆராய்ந்து அச்சிட்ட நன்னூலைப் பாடம் வைக்கக்கூடாதென்று நீங்கள் கண்டித்தீர்களாம்; என்ன நியாயத்தைக் கொண்டு அப்படிச்செய்தீர்கள்?" என்று கேட்டார். அவருடைய கேள்வி அதிகாரத் தொனியோடு இருந்தது.

செட்டியார் உடனே, "அந்த நன்னூலைப் பதிப்பித்தவர் தாங் களோ! எனக்குத்தெரியாது. இருக்கட்டும்; நன்னூலில் 200 சூத்திரங் களுக்குமேல் விலக்கியிருக்கிறீர்களே; என்ன நியாயத்தைக்கொண்டு விலக்கினீர்கள்?" என்றுகேட்டார்.

கனவான்:—எல்லாச் சூத்திரங்களும் பயன்படுகின்றனவா? பிள்ளை களுக்கு அவசியமானவற்றை மட்டும் வைத்து மற்றவற்றை நீக்கிவிட் டால், அவர்கள் எளிதிலே படிப்பார்களல்லவா?

செட்டியார்:—எல்லாச் சூத்திரங்களும் பயன்படவில்லையென்று உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் எந்தப் பள்ளிக்கூடத்திலாவது பாடஞ் சொல்லி யிருக்கிறீர்களா? பிள்ளைகளுக்கு எளிதாயிருக்க வேண்டுமென்றால் எல்லாச்சூத்திரங்களையும் எடுத்திருக்கலாமே? நீங்கள் விலக்கியுள்ள சூத்திரங்களெல்லாம் அவசியமாக இருக்கவேண்டுமென்று நான் காரணங்காட்டி நிரூபிக்கின்றேன்; நீங்கள் அல்லவென்று மெய்ப் பிப்பீர்களா? நன்னூல் உங்கள் விருப்பப்படி குறைப்பதற்கும் கூட்டுவ தற்கும் என்ன, கிள்ளுக்கீரையா? அதுகிடக்கட்டும். நீங்கள் நன்னூலைப் பதிப்பிக்க வந்தீர்களே; அதிலுள்ள உதாரணங்களை ஏன் கத்தரித் திருக்கிறீர்கள்? அந்த உதாரணங்கள் எதற்காக இருக்கின்றனவென் பதை நீங்கள் அறிந்ததுண்டா? அன்மொழித்தொகைக்கு உதாரணம் வாக்கியத்தில் அமைத்துக்காட்டாமல் தொடர்மொழியை மட்டும் காட்டி யிருக்கிறீர்களே; பூங்குழல் வந்தாளென்பதைப் பூங்குழலென்று

குறைத்துவிட்டால் அன்மொழித்தொகையாகுமா? பூங்குழல் வந்தா ளென்று வாக்கியத்தில் வரும்போதுதானே அது பூங்குழலியுடையா ளென்று பொருள்படும்? இவைகளை அறிந்து கொள்ளாமற் பதிப்பித் திருக்கிறீர்களே. 'தண்டையினினக்கிளிகடிவோள், பண்டையளல் லள் மாணைக்கினளே' என்ற உதாரணத்தைப் பிள்ளைகளுக்கு எளிதாக இருக்கவேண்டு மென்று வெட்டி, 'தண்டையினினக்கிளிகடிவோள்' என்பதைமட்டும் காட்டியிருக்கிறீர்களே; பண்டையளல்லளென்பதும் இருந்தால்தானே எதுகையின் பொருட்டுத் தட்டை யென்பது தண்டை யென்று வந்ததென்று தெரியும்?

கனவான்:—அவையெல்லாம் உபாத்தியாயர் சொல்லி விளக்க மாட்டாரா?

செட்டியார்:—உபாத்தியாயர் புத்தகத்தில் இருப்பதைத்தானே விளக்குவார்? இல்லாதபோதும், இருப்பதே தப்பாக இருந்தாலும் எப்படி விளக்குவார்? உபாத்தியாயர் கன்னூல் முழுவதையுமே மனப் பாடம் பண்ணிச்சொல்லிவிடுகிறார்; உங்களுடைய புத்தகம் எதற்கு?

இங்ஙனம் சொல்லி மேலும் மேலும் அப்பதிப்பிலுள்ள குறை பாடுகளை எடுத்துச்சொல்லியதோடு சில கேள்விகளையும் செட்டியார் கேட்கத்தொடங்கினர். அவற்றிற்கு விடைசொல்ல இயலாமலிருந்த கனவான் மனங்குழம்பி ஆத்திரம் மிக்கவராகி உரத்தகுரலில், "நான் என்ன பண்டிதனா?" என்றார். அவர் கேட்டமாதிரியில், பண்டித னென்று கூறப்படுதல் இழிவென்று அவர் நினைத்தமை தோற்றியது.

செட்டியாருக்குக் கோபம் வந்துவிட்டது; "உங்களை எவனையா பண்டிதரென்று சொன்னார்? பண்டிதரல்லவென்று நினைத்துத்தானே சொல்லுகிறேன்! இதை உங்களுடைய ஏவலின்மேற் பதிப்பித்தவன் யாரோ அவன் அறியாதவன்; குல்லாய்க்கேற்றபடி தலையை நறுக்கிக் கொண்ட புத்திசாலியைச் சேர்ந்தவன்; நீங்கள் பண்டிதரென்பது இழிவான பட்டமென்று நினைப்பதாகத்தெரிகிறது; இப்படிப்பட்ட காரியத்தைப் பண்டிதர்களே செய்யவேண்டும். நீங்கள் சட்ட புத்த கங்களைப் படித்து ஆராய்ந்து வாதம் பண்ணுவதோடு நில்லாமல் தமிழ் வழிக்கு ஏன் வருகிறீர்கள்? உங்களுக்குத் தெரியாத துறையில் இவ்வ ளவு துணிவாக நீங்கள் இறங்கியதோடு தமிழ்ப்பண்டிதர்களையும் வற் புறுத்திப்பாடம் வைக்கும்படி தூண்டலாமா? உங்களுக்குத்தமிழபி மானம் இருந்தால் நல்ல புத்தகங்களை வாசித்து இன்புறும் அளவே டல்லவா நிற்கவேண்டும்?" என்றார்.

அந்தக்கனவானுக்கும் கோபம் சிறிது சிறிதாக வளர்ந்தது; மீசை துடித்தது; "என்னை இன்னாரென்று தெரியாமற் பேசுகிறீரே" என்று கோபத்துடன் அவர் கூறினர்.

உடனே செட்டியார், "உங்களை நன்றாகத் தெரிந்துகொண்டுதான் பேசுகிறேன்; உங்கள் கடிகாரச் சங்கிலிக்கும் சட்டைக்கும் மீசைக்கும்

பயந்தவனல்லன் நான். வண்டியைவிட்டு இறங்குங்கள்; ஓரிடத்தில் இருந்துபேசுவோம். உங்களுடைய அறியாமையை வெளிப்படுத்து கிறேன்'' என்று சொல்லிச் சுந்தரராவைப் பார்த்து, ''வண்டியை நிறுத்தச் சொல்லுங்கள்'' என்றார்.

இந்த விபரீதத்தைக் கேட்ட சுந்தரராவ் இடைமறித்து, அந்தக் கனவானைப்பார்த்து, ''நாமெல்லாம் படித்தவர்களோடு வாதம் செய்ய லாமா? இவர்களிடம் நாங்கள் பெரிய மதிப்பு வைத்து மரியாதையாக நடந்துகொள்கிறோம். இவர்கள் இருப்பது எங்கள் கல்லூரிக்கே கௌர வம். நீங்கள் இவர்களைத் தெரிந்துகொள்ளாமற் பேசுகிறீர்களே. தமிழ் விஷயத்தில் இவர்கள் இட்ட சட்டத்தை மீறுபவர் இங்கே யார் இருக்கிறார்? உங்களுடைய தமிழ்ப்படிப்பு எனக்குத் தெரியாதா? நாமிருவரும் சேர்ந்து படித்தவர்களல்லவா? இப்போது நான் ஒரு புத்தகம் போட்டுவிடலாமா? கன்னூலைப் பதிப்பிக்க நம்மைப் போன்ற வர்களுக்குத்தகுதி ஏது?'' என்று சொல்லிவிட்டுச் செட்டியாரையும் சமாதானப்படுத்தினர்.

இந்தப்பேச்சுக்கள் வண்டியிலே நிகழ்ந்தாலும், பக்கத்தில் நடந்து வந்த மாணாக்கர்கள் காதிலும் மற்றவர்கள் காதிலும் பட்டன. மாணாக் கர்களுக்குத் தெரிந்தால் அப்புறம் வேறு விளம்பரங்கள் எதற்கு? இந்த நிகழ்ச்சி எங்கும் பரவியது; தியாகராச செட்டியாருடைய புகழ் பின்னும் மிகுதியாயிற்று.

3

10துரையிலிருந்த ஓர் ஐரோப்பியர் தமிழின்பால் விருப்பமுற்று ஒரு பண்டிதருடைய உதவி பெற்றுப் படித்துவந்தார். தமிழ்ச் செய்யுட்களுக்கு ஒருவாறு பொருள் தெரிந்துகொள்ளும் அறிவைப் பெற்ற பின்பு தமிழில் மிகச் சிறப்பான நூல் யாதென்று விசாரித்தார்; திருக்குறள் ஒப்பற்ற நூலென்பதை அறிந்து அதனைப் படித்தார்; இலக்கண நூலையும் இடையிடையே பயின்றுவந்தார்; போப்பையர் இலக்கணத்தைப் படித்தார்; பிறகு யாப்பிலக்கண வசனத்தைப் படித்து அசை, சீர், தளை, தொடை என்பவற்றை ஒருவகையாகத் தெரிந்து கொண்டார். அதனல் தாம் படித்த நூல்களிலுள்ள செய்யுட்களில் எதுகை மோனை அமைந்திருக்கின்றனவாவென்று ஆராயத் தொடங் கினர்.

அவர், தாம் படித்துவந்த திருக்குறட் புத்தகத்தை எடுத்துத் திறந்தார்; திறந்த பக்கத்தில்,

''தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்''

என்ற குறள் அவர் கண்ணிற்பட்டது. 'இதில் எதுகை நன்றாக அமைய

வில்லையே' என்று எண்ணினார். எச்சமென்பதற்கு மக்களென்பது பொருளென்று அறிந்துகொண்ட பிறகு, 'ஏன், மக்களென்றே இதை மாற்றிவிடக்கூடாது? அப்படிச் செய்தால் எதுகை அழகாக அமையுமே' என்று எண்ணித் தம் புத்தகத்தில் அவ்வாறே திருத்திக் கொண்டார். திருக்குறளைத் திருத்திவிட்டோம் என்ற எண்ணத்தால் அவருக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. இப்படியே மேலும் மேலும் சில குறள்களைத் திருத்தினர்; தமக்குப் பாடஞ் சொல்லும் பண்டிதரிடம் இவற்றைக் காட்டி, "ஏன்? நான் செய்தது எப்படி? இப்போது இந்தச் செய்யுட்கள் முன்பைவிட அழகாக இல்லையா?" என்று கேட்டார். பண்டிதர் அவர் கூறுவதை மறுக்க அஞ்சினர்; "நன்றாக இருக்கின்றன; ஆனால் தக்க பண்டிதர்களிடம் காட்டி, இப்படிச் செய்வது சரியாவென்று, ஆராயவேண்டும்" என்றார்.

ஐரோப்பியர்:—தாங்கள் பண்டிதரல்லவா?

பண்டிதர்:—நான் பண்டிதனானாலும் உங்களைச் சேர்ந்தவனாதலின் என் கருத்தை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். வேறுசிலர் உடன்பட்டால் உங்கள் திருத்தத்துக்குக் கௌரவம் உண்டாகும்.

ஐரோப்பியர், தம் திருத்தங்களை யாரிடம் காட்டலாமென்று ஆராய்ந்தபொழுது, கும்பகோணம் கல்லூரியிற் பண்டிதராக இருந்த தியாகராச செட்டியார் அவற்றை ஏற்றுக்கொண்டால் மற்றப் பண்டிதர்கள் உடம்படுவார்களென்றும், அவர் உபகாரச் சம்பளம் பெற்றுக் கொண்டு உறையூரில் இருக்கின்றாரென்றும் அறிந்தார். உடனே அவர் திரிசிராப்பள்ளியிலிருந்த செவல்பாதிரியாருக்குத் (Father Sewell) தாம் புறப்பட்டு வருவதாகவும் ஸ்ரீ தியாகராச செட்டியாரைப் பார்க்கும் பொருட்டு உதவிபுரிய வேண்டுவதாகவும் கடிதம் எழுதினர். பிறகு குறித்தகாலத்தில் திரிசிராபுரம் சென்றார். செவல்பாதிரியார் அவரைத் தக்கவண்ணம் உபசரித்து ஓர் அழகிய வண்டியில் அவரை உறையூருக்கு அனுப்பினர்; அவருடன் தக்கவர் சிலரையும் போகச் செய்தார்.

ஸ்ரீ தியாகராச செட்டியார் உறையூரிலுள்ள பெரிய தெருவில் அண்ணுமலை செட்டியாரென்பவருடைய வீட்டில் இருந்து வந்தார். அக்காலத்தில் அவருடைய கண்ணொளி சிறிது மழுங்கியிருந்தது. அவரைத் தேடிவந்த ஐரோப்பியர் உறையூருக்கு வந்து செட்டியாருடைய வீட்டை விசாரிக்கலானார். அங்குள்ளவர்கள் அத்தகைய சிறந்த வண்டியையும், வெள்ளைக்காரரையும் கண்டு வியப்பு மேலிட்டவர்களாய்ப் பெருங்கூட்டமாகக் கூடி அவ்வண்டியைப் பின்தொடர்ந்து வந்தார்கள். வண்டி செட்டியாருடைய இருப்பிடத்தின் முன்னே வந்து நின்றது.

செட்டியார் சிவபூசையை முடித்து உணவருந்திவிட்டுக் கையில் ஓரு விசிறியுடன் வந்து அப்பொழுதுதான் வெளித்திண்ணையில் அமர்ந்

திருந்தார்; முழங்காலளவுள்ளதாகிய பழுப்புநிற ஆடையொன்றையே அவர் உடுத்திருந்தார்.

துரையுடன் வந்தவர்களுள் ஒருவர் வண்டியிலிருந்து இறங்கிவந்து செட்டியாரிடம், ''ஒரு பெரிய துரை வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமாம்; அவரை வரவேற்று நாற்காலிபோட்டு இருக்கச்செய்யுங்கள்'' என்றார்.

செட்டியார், ''துரையா? வரட்டுமே. இங்கே நாற்காலி இல்லை. இந்தத் திண்ணையிலேதான் உட்காரவேண்டும்'' என்றார்.

கும்பகோணம் கல்லூரியில் எவ்வளவோ 'துரைகளை'ப் பார்த்தவர் அவர்; அன்றியும் அவரைப் பார்க்கப் பல துரைகள் வந்து செல்வதுண்டு; ஆதலின் அவருக்கு இந்தத்துரை வந்தது ஒரு பெரிய சிறப்பாகத் தோன்றவில்லை.

துரை வண்டியைவிட்டு இறங்கிவந்து எதிர்த்த திண்ணையில் அமர்ந்தார்.

''தாங்கள் வந்தது எதன் பொருட்டு?'' என்று கேட்டார் செட்டியார். துரை, ''நான் குறளைத் திருத்தியிருக்கிறேன். உங்களுடைய அபிப்பிராயத்தைப் பெற்றுப்போக வந்தேன்'' என்று கூறத் தொடங்கினார்.

அந்த வார்த்தைகளைக் கேட்டது செட்டியாருக்கு இடி விழுந்தது போல இருந்தது; ''என்ன குறளையா திருத்தினீர்கள்?'' என்று வியப்பும் கோபமும் நிறைந்த தொனியிற் கேட்டார்.

''ஆமாம்; எதுகை மோனை சில இடங்களில் இல்லை. அவை அமையும்படி திருத்தினேன்; 'தக்கார் தகவிலரென்ப தவரவர், எச்சத்தாற் காணப்படும்' என்பதைவிட, 'தக்கார் தகவிலரென்ப தவரவர், மக்களாற் காணப்படும்' என்பது எதுகை நயத்தோடு கூடி எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?'' என்றார் துரை.

செட்டியார் எழுந்து நின்றார்; தலையிலே இரண்டடி அடித்துக் கொண்டு காதைப் பொத்திக்கொண்டார்; ''ஐயையோ! குறளையா திருத்தினீர்? [அது] மதிப்புள்ள பழைய நூலாயிற்றே! இவ்வளவு காலாக அறிவாளிகள் செய்யாத ஒன்றைச் செய்துவிட்டதாக எண்ணமோ! எச்சமென்னும் சொல்லின் பொருள் மக்களென்பதால் உண்டாகுமா? ஒருவருக்குப் பிறகு அவருடைய குணமுதலியவை எஞ்சி நிற்கும் சந்ததியென்று காரணத்தைப் புலப்படுத்தும் சொல்லல்லவா எச்சமென்பது? அவ்விடத்தில் அச்சொல் அமைந்ததனால் உண்டாகும் பொருட்செறிவு மக்களென்னும் சொல்லால் உண்டாகுமா? ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தமிழில் இருந்தாலும் அவை ஒன்றற் கொன்று வேறுபட்ட பொருளுடையனவாக இருக்கும். அவற்றை

இடமறிந்து கவிஞர் உபயோகிப்பார்கள். அது தெரியாமல் திருத்தி விடலாமா? எதுகை நயத்தைவிடப் பொருள் நயம் அல்லவா சிறந்தது?'' என்று சொல்லிவிட்டு, ''குறளைத் திருத்தினவர் முகத்தில் விழிப்பது கூடப் பாவம்!'' என்று கூறிக்கொண்டே உள்ளே சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டு இடைகழித் திண்ணையில் அமர்ந்து விட்டார்.

துரைக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. உடன் வந்தவர்கள் சன்னல் வழியாகச் செட்டியாரிடம், ''இவர் பெரிய மனிதர்; இப்படி இவரைத் தாங்கள் அவமதிக்கக்கூடாது. இவரால் உங்களுக்குப் பெரிய இலாபம் உண்டாகும்'' என்றார்கள்.

செட்டியார்:—இவரை யாரையா இங்கே வரச் சொன்னர்? உலகமெல்லாம் புகழும் திருக்குறளைத் திருத்திய இச் செயல் திருவள்ளுவரை அவமதித்ததல்லவோ? தெய்வம்போல யாவரும் கொண்டாடும் அவருடைய குறள் வேதமல்லவா? அதைத் திருத்தத் துணிந்தவர் வேறு என்னதான் செய்யமாட்டார்? இவருக்கு மதிப்பு எங்கிருந்து வரும்? இவரால் எனக்கு ஓரிலாபமும் வேண்டாம். இனிமேல் நான் சம்பாதித்து யாருக்குத் தரப்போகிறேன்? எனக்குப் பிள்ளைகுட்டிகள் இல்லை. போதும், போதும்; உங்கள் துரையை அழைத்துக்கொண்டு போய்விடுங்கள்.

தாம் என்ன கூறினாலும் செட்டியார் வழிக்கு வாராரென்பதை உணர்ந்த அவர்கள் துரையை அழைத்துக்கொண்டு மீண்டு சென்றார்கள்.

4

பிறருடைய குறையைக் கண்டவிடத்துக் கண்டிக்கும் இயல்புடைய செட்டியார் தம்முடைய அறிவெல்லையையும் கன்றுக உணர்ந்திருந்தார். தம்முடைய அளவுக்கு மிஞ்சிய காரியத்தைப் பிறர் வற்புறுத்தினாலும் செய்யார்; இது மிகச்சிறு பான்மையோரிடத்தில் மாத்திரம் காணப்படும் அருமையான குணம்.

திரிசிராப்பள்ளியிலும் வேறு இடங்களிலும் சிரஸ்தேதாராகவும் டிப்டிகலெக்டராகவும் இருந்து விளங்கிய திரு. பட்டாபிராம பிள்ளை யென்பவர் தமிழபிமானமிக்கவர்; தமிழ்ப்புலவர்களை ஆதரித்துப் பாதுகாக்கும் இயல்பினர்; ஸ்ரீ தியாகராச செட்டியாரிடத்தில் மிக்க அன்பு பூண்டவர்; அறிவாளிகள் சிலையான காரியங்கள் செய்யவேண்டுமென்பது அவருடைய விருப்பம். திவ்யபிரபந்தங்களுக்கு வடமொழி தென்மொழியிற்சிறந்த பெரியோர்களாற் செய்யப்பெற்ற வியாக்கியானங்கள் இருப்பதுபோலத் தேவார திருவாசகங்களுக்கும் இல்லையே யென்ற வருத்தம் அவருக்கு உண்டு. அதனால் சைவமடாதிபதிகளையும் சைவவித்துவான்களையும் சந்திக்கும் பொழுதெல்லாம் திருமுறைகளுக்கு ஓர் உரை எழுதும்படி வற்புறுத்திக்கூறுவார். கேட்பவரிற் பெரும்பாலோர் இயன்றவரையில் உழைத்துப் பார்ப்போமென்றே விடை பகர்ந்து வந்தார்கள்.

வித்துவான் தியாகராச செட்டியார் சரித்திரம்

தியாகராச செட்டியார் உபகாரச்சம்பளம் பெற்றுத் திருவாஞைக் காவில் சில ஆண்டுகள் இருந்தபோது பட்டாபிராமபிள்ளை அவர் வீட்டிற்கு அடிக்கடி சென்று பார்த்து வருவார். அப்பொழுது அவரைத் திருவாசகத்திற்கு உரை எழுதவேண்டுமென்று வற்புறுத்திக்கூறுவார். அன்றியும் அங்கங்கே நிகழும் கல்யாணங்களை விசாரிக்கப்போன காலங்களிலும் மற்ற இடங்களுக்குச் சென்றிருந்த காலங்களிலும் அவரைச் சந்தித்தபோதெல்லாம் மேலும் மேலும் கூறுவார்; "எழுத ஆரம்பித்தீர்களா? எவ்வளவு ஆயிற்று?" என்று கேட்பார்; அருகிலுள்ள கனவான்களிடம், "இவரிடம் எவ்வளவுகாலாகச் சொல்லிவருகிறேன்; கேட்கமாட்டேனென்கிறாரே" என்று சொல்லுவார்.

ஒருநாள் செட்டியார் திரிச்சிராப்பள்ளியிலுள்ள உறவினரொருவர் வீட்டில் நிகழ்ந்த ஒருதுக்கத்தைச் சென்று விசாரித்துவிட்டுக் காவிரியில் நீராடி ஈரத்துணியோடு மீண்டு காவிரிப்பாலத்தின்மேல் நடந்து வந்து கொண்டிருந்தார். அப்பொழுது கடுப்பகல் பன்னிரண்டு மணி நேரம். செட்டியார் வெயிலாலும் பசியாலும் மிகக் களைப்படைந்திருந்தார்.

அப்பொழுது பட்டாபிராமபிள்ளை ஸ்ரீரங்கம்சென்று பெருமாளைத் தரிசனம்செய்துவிட்டுமார்பிற்சந்தனம் விளங்க உற்சாகத்துடன் எதிரே ஒருவண்டியில்வந்தார். அவர், செட்டியாரைக் கண்டவுடன் வண்டியை நிறுத்திக்கீழே இறங்கினர்; செட்டியாரையணுகி க்ஷேமசமாசாரம் விசாரித்தபின்பு வழக்கம்போல, திருவாசகவுரை எவ்வளவாயிற்றென்று கேட்டார்.

நீண்டகாலாக இந்த விஷயத்தைப்பற்றி எவ்விடத்திலும் கேட்டுவந்ததனாலும், அப்பொழுது இருந்ததளர்ச்சியினாலும் செட்டியாருக்குக் கோபம் உண்டாயிற்று; "நீங்கள் கொஞ்சமாவது திருவாசகத்தின் பெருமையை அறிந்துகொள்ளவேயில்லை யென்று நிச்சயமாய்ச் சொல்கிறேன். அதற்கு என்னால் உரை எழுத முடியுமா? திருவாசகம் எவ்வளவு! என்னுடைய படிப்பு எவ்வளவு! அதற்கு உரையெழுத வேண்டுமென்றால் வேதம், உபநிஷதம், ஆகமங்கள், புராணங்கள், யோக சாஸ்திரங்கள் முதலியவை தெரிய வேண்டாமா? தமிழில் உள்ள இலக்கண இலக்கியங்களையும் சில சைவசித்தாந்த சாஸ்திரங்களையுமே படித்த நான் எப்படி எழுத முடியும்?" என்றார்.

பட்டாபிராமபிள்ளை :—திவ்யப்பிரபந்தத்திற்கு அவர்கள் வியாக்கியானம் செய்யவில்லையா?

செட்டியார்:—என்ன ஐயர! உங்களுக்கு அவர்களுடைய படிப்பின் அளவு சிறிதேனும் தெரியாது போல் இருக்கிறது. அவர்கள் வடமொழி தென்மொழிகளிற் சிறந்த புலமையுடையவர்கள்; அவர்கள் உரையினுலல்லவா நூலின் பெருமை அதிகமாகின்றது? நான் உரை

எழுதினால் திருவாசகத்திற்கு எவ்வளவு குறைவு உண்டாகுந்தெரியுமா? என்னுடைய உரையினால் அதற்குக் குறைவேற்பட வேண்டுமென்பது தங்கள் எண்ணமோ? எங்கே கண்டாலும் நச்சுநச்சென்று என் படிப்பின் அளவு தெரியாமல் திருவாசகத்துக்கு உரையெழுதும்படி சொல்லிச்சொல்லி என்னை வருத்துகின்றீர்கள். இனிமேலும் இப்படித்தொந்தரவு செய்வதாயிருந்தால், இதோ இந்தக்காவிரியில் இப்படியே பொத்தென்று விழுந்து என் உயிரை விட்டு விடுவேன். பட்டாபிராம பிள்ளையவர்கள் திருவாசகத்திற்கு உரையெழுதும்படி அடிக்கடி தொந்தரவு செய்ததனால் அந்தத்துன்பத்தைத்தாங்கமாட்டாமல், தியாகராசசெட்டியார் ஆற்றில் விழுந்துவிட்டாரென்ற அபக்கியாதி உங்களுக்கு ஏற்படட்டும்.

பட்டாபிராமபிள்ளை உடனே செட்டியாருடைய கைகளைப்பிடித்துக் கொண்டு, "ஐயா! ஐயா! வேண்டாமையா! இனிமேல் நான் இதைப் பற்றிக் கேட்பதே இல்லை ஐயா! என்று சொல்லிச் சமாதானப்படுத்தி விட்டு அவருடைய அயர்ச்சியான நிலையை அறிந்து தம்வண்டியில் ஏற்றித் திருவானைக்காவிலுள்ள அவர் இருப்பிடத்தில் அவரை விட்டு விட்டு மீண்டு திரிசிரபுரத்திலிருந்த தம்மிடம் சென்றார்.

திருக்குறளின் மாண்பு

மன்னர்குடித் தமிழ்ப்புலவர்.
உயர்திரவாளர் நா. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்

இங்கிலவுலகத்தில் வழங்கும் ஆயிரக்கணக்கான மொழிகளிலே மிக உயர்ந்தது யாது? உலகத்தில் வழங்கும் நூல்களிலெல்லாம் மிகப்பயன் தருவது யாது? என்று அறிவுடை மக்களாய்ப்பிறந்தார் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளவேண்டுவது உண்டு. நம் தமிழ் மொழியாளரிற் பலரும், உலகத்தில் சீர்திருத்தம்உற்ற பழமையான மொழிகளுள் வடமொழியென்னும் ஆரியமும் தென்மொழியென்னும் தமிழுமே சிறந்தன; இரண்டு மொழியும் பரமசிவனாலே உண்டாக்கப்பட்டு அப்பரமனருள் பெற்ற பாணினியர் அகத்தியர் முதலிய முனிவர்களால் இலக்கணமும் வகுத்து வளர்க்கப்பட்டன; அவ்விரண்டினுள்ளும் பரமசிவனே மதுரையில் சங்கத்தலைவராக வீற்றிருந்து தமிழை வளர்த்தனர்; அப்பரமன் அருள்வழி நின்ற அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், முதலியோரும் திருமால் அருள்வழி நின்ற ஆழ்வார் முதலியோரும் தமிழ்ப்பாடலாலே பல தெய்வச்செயல்களும் நிகழ்த்தினர்கள்; ஆதலின் தமிழ்மொழியே சிறந்தது என்பர். இவர் சொல்லுவதில் உண்மையுள்ளது ஆயினும், இக்காலத்தில் மிகவிருத்தியுற்ற ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், கிரீக்கு, லத்தீன், முதலிய மேனாட்டு மொழியாளரும் அரபி, பாரசீகம், முதலிய கடுகாட்டு மொழியாளரும் பிறரும் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அம்மொழியாளர்பலரும்தத்தம்மொழிபோற் சிறந்ததுவேரொன்றும் இல்லையென்று சொல்லித் தம்மொழி வளர்ச்சியிலே கண்ணும் கருத்துமாய்த் தம்உடல் பொருள் ஆவியைத் தம்மொழியின் பொருட்டு உதவ முன்வந்துள்ளார். அவருள் சிலர் பிறமொழி எத்துணைப்பெருமையுடையதாயிருந்தாலும் இக்கால நிலைமைக்கு எவ்வளவு இன்றியமையாதனவாய் இருந்தாலும் அம்மொழி விரவாமலே தம்மொழியே தலைசிறந்து நிற்கவேண்டுமென்று கருதுகின்றனர். நம் தமிழ்காட்டாருக்குப்பெரும்பாலும் அந்த உணர்ச்சியில்லை. அவருள்ளும் பெரும்பாலர் வயிற்றுப்பிழைப்புக்காகத்தம் வாழ்நாளிற் பெரும்பாகத்தை ஆங்கிலமொழிப் படிப்பிலும் மற்றப் பாகத்தைத் தமிழ்ப்படிப்பிலும் செலுத்தி ஒரு மொழியிலும் முடிவடையாமல் தொட்டதெல்லாம் சந்தேகமாய், தமிழ்மொழியிலே அது இல்லை; இது இல்லை; ரெயில், மோட்டார், ஆகாயக்கப்பல், மற்றும் புதிய போர்க்கருவிகள் முதலியன இல்லை; Algebra, Euclid, முதலிய நூல்கள் இல்லை. தமிழையே படிப்பதனால் இவற்றால் ஆகும் தொழின்முறைகளெல்லாம் கைடைபெறுமா என்பர். ஆங்கில மொழியிலும் பிற மேனாட்டுமொழி

யிலும் எண்ணிறந்த நூல்களும் நூனிலையங்களும் உள்ளனவே; தமிழில் மிகச்சிறிதே உள்ளன என்பர். மொழியின் உணர்ச்சிக்கும் விருத்திக்கும் தொழின்முறைகளுக்கும் சம்பந்தமில்லை. தொழின்முறைகளுக்கு வேண்டிய தமிழ் நூல்கள் அக்காலத்தில் இருந்தன. அது திருக்குறளாசிரியரும் பிறரும் சுட்டுவதனால் தெரிந்துகொள்ளலாம். அந்நூல்கள் இப்போது காணப்பெறுதது தமிழின் குறையன்று. தமிழ்ப்புலவர் குறையும் அன்று. தமிழராய்ப்பிறந்து தமிழை ஆதரிக்காத குறையும், தமிழுவரசர் இல்லாத குறையுமேயாம். அக்காலத்தில் தமிழ் வளர்ச்சி யெப்படியிருந்தது என்பது சங்கவிலக்கியங்களையும் இலக்கணங்களையும் ஊன்றிப் படித்தவர்க்கு விளங்காமல் போகாது. இற்றைஞான்று தமிழின் வீழ்ச்சிக்குக் காரணம் தமிழ்ப்புலவர்களை மதியாமையேயாம். தமிழ்ப்புலவர் கலாசாலைகளில் பெறும் சம்பளம் மிகக்கொஞ்சம். ஒரு பெரும் பொருளுடையானிடத்தில் ஒரு தமிழ்ப் புலவன் சென்றால் இவனால் இன்று நம் பொருளுக்கு அழிவு வருகிறதென்று நினைக்கிறான். வீண்விநோதங்கட்கும், கூத்துக்கும், பாட்டுக்கும், குடிக்கும், விலைமாதருக்கும், அவன் கூசாமல் செலவிடும்பணத்திற்குக்கணக்குவழக்கு இல்லை. கோவில் திருவிழாக்களிலும் மற்றும் கொண்டாட்டங்களிலும் ஏழைகள் அல்லாதார்க்குச்சோறு வழங்குவதிலும் வாணவேடிக்கைகளிலும் எவ்வளவு பணம் செலவிடுகிறார்கள். தமிழில் குறையுள்ளதென்று பழிக்கத்தொடங்குவார் அங்ஙனம் பழிப்பதை விட்டுவிட்டு அக்குறைகளை நீக்கி அம்மொழியை உயர்த்தவேண்டுமென்னும் கருத்தைக் கடைப்பிடித்து, அதற்கு ஆன வழி முறைகளை வகுத்து வேண்டிய பொருளை உதவியும், திரட்டியும், தக்க புலவர்களைத் தெரிந்தெடுத்துச் செல்லவேண்டிய வழியிற் செலுத்தின் இத்தமிழ் மொழி மிகவளர்ந்து மேம்பாடுறும் என்பதில் தடையில்லை. தஞ்சைக் கரந்தைச்சங்கமும் மதுரைச்சங்கமும் தமிழ்க்குப்புரியும் தொண்டை நோக்குக. அது கிடக்க.

தமிழிலே திருக்குறள் எனப்பெரிய நூல் ஒன்று உண்டு.

திருக்குறள் வரலாறு.

திருக்குறள் என்பது தெய்வப்புலமைத்திருவள்ளுவ நாயனார் என்பவரால் மதுரையில் கடைச்சங்கம் நடையுற்ற காலத்தே இயற்றப்பட்டு அச்சங்கப்புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. அச்சங்கப் புலவர்களாகிய கபிலர், பரணர், நக்கீரர், மாமூலர், கல்லாடர், சீத்தலைச் சாத்தனார், மாங்குடி மருதனார், அரிசில்கிழார், கல்லந்துவனார், கத்தத் தனார், கோவூர்கிழாஅர், கோதமனார், செங்குன்றூர்கிழார், கரிவெரு உத்தலையார், கவிசாகரப்பெருந்தேவனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், இடைக்காடனார், ஔவையார் முதலியவர்கள் அத்திருக்குறளின் பெருமையைப் புகழ்ந்துரைத்த வெண்பாக்களைத் திருவள்ளுவமாலை யென்னும் நூலில் பாக்கக்காணலாம்.

திருக்குறளின் மாண்பு

திருவள்ளுவமாலையின் தோன்மை.

திருவள்ளுவமாலை யென்பதை இக்காலத்துப்புலவருள் சிலர் பழைமையான பாடல் என்று கொள்வதில்லை. அதற்குக் காரணம் பிற்காலத்தார் என்று கருதப்பட்ட பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடல் அதனுள் சேர்க்கப்பட்டிருப்பதும், மற்றும் சில புலவர்கள் கபில பரணர் காலத்தினரல்லர், பிற்காலத்தினர் என்பது முதலியன. அவர் ஆராய்ச்சித்திறன் செவ்விதன்று. திருக்குறள் அரங்கேற்றப்பட்ட காலத்தே திருவள்ளுவமாலைப்பாடலைப்பாடிய புலவருள் பெரும்பாலர் அப்போதே பாடியவையும் உள்ளன. திருக்குறள், சங்கத்தின் மாணாக்கருக்குப் பாடமாக அமைக்கப்படவே, பின்னர் அம்மாணாக்கர்க்கு ஆசிரியராகவந்தோர் சிலர் கூறிய பாடல்களும் அதில் சேர்த்துக்கொள்ளப்பட்டன என்பதே உண்மையென்று பிற்கூறும் காரணங்களால் தெளிந்துகொள்ளலாம். 'உப்பக்கநோக்கி உபகேசிதோண்மணந்தான்' என்னும் வெண்பா ஒன்று திருவள்ளுவமாலையுள் காணப்படுவது. இது நல்கூர் வேள்வியார் என்பவர் பாடியது என்பர். இவ்வெண்பா நேமிநாத உரையாசிரியரால் எடுத்தாளப்பட்டது. வேள்ளிவீதியார் என்பவரால் பாடப்பட்ட 'செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிக்த பொய்யா மொழிக்கும் பொருளொன்றே' என்னும் வெண்பா பிரயோகவிவேகஉரையில் எடுத்தாளப்பட்டது. இதுவேயன்றிக் 'கபில பரண கக்கீரர்' என்னும் தொடர் மொழியும் 'கல்லாட மாமூலசித்தலிச்சாத்தனார்' என்னும் தொடர் மொழியும் 'உயர்திணைமருங்கின் உம்மைத்தொகையே பலர் சொன்னடைத்தென மொழிமனார் புலவர்' என்னும் சூத்திரவுரையில் சேனவரையராலும் நச்சினார்க்கினியராலும் மேற்கோளாகக் காட்டப்பட்டன. இந்த வரிசை ஒழுங்கு திருவள்ளுவமாலையில் கண்டது என்னலாம். ஆகவே சேனவரையர், நச்சினார்க்கினியர், நேமிநாதவுரையாசிரியர் காலத்துக்கு முன்னரே திருவள்ளுவமாலை விளக்கமுற்றிருந்ததென்பதுதடையின்றித் துணியப்படும். இது கிற்க 'திணையளவு போதாச்சிறுபுன்னீர் நீண்ட பனையளவு காட்டும் படித்தான்—மனையளகு, வள்ளைக்குறங்கும் வளநாட வள்ளுவனார், வெள்ளைக்குறட்பாவிரி' என்னும் கபிலர் பாடியதாகச் சொல்லப்படும் பாட்டு பழைய சங்கப்புலவர் பாட்டு என்னத் தடையுண்டா? திணையளவு பனையளவு மனையளகு வள்ளைக்குறங்கல் முதலியன சங்கநூல்வழக்கு அறிந்தார்க்கன்றி அறியலாகுமா? ஆகலின் அது கபிலர் பாட்டேயாம். அது ஒக்கும்; 'ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளும்—பாயிரத்திலேடுபகர்ந்ததற்பின்' என்றும், 'அறநான் கறிபொருள் ஏழொன்று காமத்—திறமூன்றெனப்பகுதிசெய்து—பெறலரிய நாலுமொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்' என்றும், 'பாயிர நான்கில்லறம் இருபான் பன்முன்றே தூய துறவறமொன்றாழாக—வாய, அறத்துப்பால் நால்வகையால் ஆய்ந்துரைத்தார்' என்றும், 'அரசியல் ஐயைந்தமைச்சியல் ஈரைந் துருவல் அரணிரண்டொன்றிருண்கூழ்—இருவியல்—திண்படை கட்புப்பதினேழ் குடிபதின்மூன்—றெண்பொருளேழாமிவை'—என்றும், 'ஆண்பாலேழ் ஆறி

திருக்குறளின் மாண்பு

ரண்டு பெண்பால் அடித்தன்பு—பூண்பால் இருபாலோர் ஆருக—மாண் பாய—காமத்தின் பக்கமொரு மூன்றுகக் கட்டுரைத்தார்', என்றும், 'ஐயாறு நூறும் அதிகாரமூன்றுமா' என்றும், 'அறமுப்பத் தெட்டுப் பொருள் எழுபதின்பத்—திறம் இருபத் தைந்தாற் றெளிய' என்றும் திருவள்ளுவமாலைப்பாடல்களில் வரையறை செய்திருப்பதால் அவை சங்ககாலத்துசசெய்யுள் அல்ல போலும் எனின், அறியாது கூறினுய், அவர் அவ்வாறு வகுத்துச்செய்ததை வரையறைசெய்துகாட்டியது மாணுக்கர்க்குப்பெரும்பயன் கொடுப்பது. அந்தப்பாடல்களைப்பார்க் காமல் இக்காலத்துப்பெரும்புலவர்களும் அறத்துப்பால் எத்தனையியல், பொருட்பால் எத்தனையியல், காமத்துப்பால் எத்தனையியல், என்னும் வினவிற்கு விடையிறுத்தலாற்றூர். அல்லதூஉம், சிந்தாமணியுள்கந்தி யார் சில பாடல்களை இடைச்செருகினுற்போலச் சில குறள்களைச் சிலர் நுழைவிக்கவும் கூடும் எடுத்துவிடவும் கூடும்; அதற்கு இடமில்லா மலும் அவர் கருவிசெய்தது பாவலர்க்குத்துணைக்கண் கொடுத்ததாகும் என்க. ஆகவே திருவள்ளுவமாலை வெண்பாக்கள் அக்காலத்தலே பாட்டப் பட்ட உண்மைப்பாடல்கள் என்றே துணிக தொல்காப்பியச்செய்யுளியல் உரையிலும் மரபியலுரையிறுதியிலும் சூத்திரத்தொகை முதலியன இவ்வாறு உரைச்சூத்திரங்களால் வரையறுத்து உணர்த்தப்பட்டவாறு காண்க.

இனித்திருக்குறள் என்னும்பெயர்க்காரணம். குறள் என்பதுவெண்பா வகையுள் ஒன்று. இது குறுவெண்பாட்டு எனவும் படும். இது இரண்டு அடிச்சிறுமையுடையதாய் முதலடி நான்கு சீரும் இரண்டாம் அடி மூன்று சீரும் ஆக எழு சீர் உடைத்தாய் வருவது. இதனை 'நெடுவெண்பாட்டே முந்நாலடித்தே, குறுவெண்பாட்டின் அளவெழு சீரே' என்னும் செய்யுளியற் சூத்திரத்தால் அறிக. திரு என்பது அழகு என்னும் பொருட்டு. அது குறள் என்பதற்கு அடையாய் நின் றது. ஆகவே திருக்குறள் என அடையடுத்து நின்ற பாவின் பெயர் அப்பாவால் ஆகிய நூலுக்குப்பெயராயிற்று. இது காரணவாகுபெயர். கருவியாகுபெயர் எனினும் ஒக்கும். இந்நூல் நூற்றுமுப்பத்துமூன்று அதிகாரங்களையுடையது. ஒவ்வொரு அதிகாரமும் குறள் பத்துக் கொண்டது. ஆக 1330 குறட்பாக்களை உடையது இந்நூல். இக் குறள் வெண்பா பாட்டுவகையால் சிறியதாயினும் பொருள் விரிவால் கடலினும் பெரிது என்பது 'கடுகைத்துளைத்தேழ் கடலைப்புகட்டிக் குறுகத் தறித்தகுறள்' என்னும் இடைக்காடர் என்னும் சங்கப்புலவர் பாடலால் அறிக.

திருக்குறள் என்னும் நூல் நுதலிய பொருள்:—நூல் என்று தமிழில் இயற்றப்படுவதெல்லாம், மக்கள் உயிர்க்கு உறுதியைக் கொடுப்பன வென்று கருதப்படும். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கினுள் ஒன்றனைப்பற்றியாதல் பலவற்றையும் பற்றியாதல் உரைப்பனவாகும். இந்நான்கில் ஒன்றனையும்பற்றிக்கூறுதது நூல் எனப்படாது. பயனில்

திருக்குறளின் மாண்பு

மொழியாம். என்னை ? 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற் பயனே' என்பது தமிழ் இலக்கணம். ஆகவே, தமிழ் இலக்கணத்துக் குப் பொருந்த இலக்கியம் செய்த ஆசிரியர் திருவள்ளுவனார், உலகத் தார்க்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகிய அறம் பொருள் இன்பம் என்பனபற்றி அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால், எனமூன்று பால் வகுத்து அவற்றின் கூறுகளையெல்லாம் நிரம்ப எடுத்தோதினர். வீடு என்பதற்குத் தனியே ஒருபால் வகுத்து விரித்து ஓதிற்றிலர். ஆயி னும் நூன்முதற்கண் பாயிரம் என நான்கு அதிகாரங்களைவைத்து, அவற்றுள்ளும் முதலாவதாக வைத்த 'கடவுள் வாழ்த்து' என்பதனுள் பத்துக்குறள்களிலும் வீட்டின் இயல்பை சுருங்க விளங்க ஓதினர். அதுவேயன்றி அறத்துப்பாலுள் துறவறப்பகுதியில் வைத்த மெய்யுணர் தல் அவாவறுத்தல் முதலியவற்றுள்ளும் வீடுபேற்றிற்கு வழிகூறினர். அதனால் வீட்டினியல்பை நுண்ணறிவும் செவ்வியும் உடையார் உய்த் துணர்ந்து கொள்ளும்படியே ஓதினர். வீட்டினியல்பு சிவஞானபோதத் தில் பன்னிரண்டு சூத்திரத்தில் சுருங்கக்கூறி விரித்துணர்ந்து கொள்ள வைத்தாற்போல இதனுள்ளும் வைக்கப்பட்டதென அறிக. இத்திருக் குறளில் முதல் மூன்றற்கே பால் வகுத்துக் கூறியது பற்றி இந்நூலுக்கு 'மூப்பால்' என்னும் பெயர் வழங்கியதும் உண்டு. அது கழகத்தோட் டம் என்றூற்போலப் பன்மைபற்றியவழக்கு. அறம், பொருள், இன்பம், வீடு, என்ற நான்கும் உணர்த்தியது இந்நூல் என்பதே சங்கத்துச் சான்றோர் கருத்து.

> அறம்பொருள் இன்பம் வீடென்னும் அந்நான்கின்
> திறந்தெரிந்து செப்பியதேவை—மறந்தேயும்
> வள்ளுவன் என்பானோர் பேதை அவன்வாய்ச்சொல்
> கொள்ளார் அறிவுடை யார்

என்றூர் மாமூலனார்.

> தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
> ஆனா அறமுதலா அந்நான்கு—மேனருக்
> கூழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
> வாழியுலகு என்னற்றும் மற்று'

என்றூர் நக்கீரர்.

அற்றேல் அது ஒக்கும், ஆயினும் பாயிரம் என நான் முதற்கண் வைத்த கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரம் ஒன்றுமே அமையும். அதனோடு, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன்வலியுரைத்தல் எனமூன்று அதிகாரங்களையும் சேரவைத்து ஆக நான்கு அதிகாரங்களைப் பாயிரம் என்று கொள்ளவைத்தற்குக் காரணம் என்னை யெனின், இது நல்ல தோர் வினவே. கடவுள் வாழ்த்து என்பது தொல்காப்பியப் பொரு ளதிகாரத்தில் புறத்திணையியலுள் ஓதப்பட்ட ஏழுதிணையுள் பாடாண் டிணை யென்பதன் துறைகளில் ஒன்று. இக் கடவுள் வாழ்த்து என்பதனை உணர்த்தும் சூத்திரம்

அமரர்கண்முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி யொன்றும் என்ப'

என்பது. அச்சூத்திரத்தில் தெய்வங்களில் சிறந்தாரை வாழ்த்தும் தெய்வவாழ்த்து என்னும் கடவுள் வாழ்த்து என்பதும், தெய்வத்தைப் போலக்கொண்டு வாழ்த்தும் அறுமுறைவாழ்த்துளன்பதும், உணர்த்தப்பட்டது. அறுமுறை வாழ்த்து என்பது அறுவகைவாழ்த்து எனவும்படும். அஃதாவது, நிறைமொழிமாந்தர் எனப்படும் முனிவரையும், ஒழுக்கம் தவறுத மறையோரையும், ஆனிரையையும், மழையையும், மூடியுடை வேந்தரையும், உலகையும் வாழ்த்துதல். ஆகவே மழையை வாழ்த்துதல் பற்றி வான்சிறப்பு என்பதும், முனிவரை வாழ்த்துதல்பற்றி நீத்தார் பெருமை என்பதும், கூறப்பட்டன. 'என்பிலதனை வெயில்போலக் காயுமே அன்பிலதனை அறம்' என அறம் என்பது தெய்வத்தின்பாற் சார்த்தி அறக்கடவுள் எனப்படுதலால் அறன்வலியுறுத்தல் என்பதும் வாழ்த்தப்பட்டதென உணர்ந்துகொள்க.

முனிவர் வாழ்த்திற்கு உதாரணமாக

'நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்' என்னும் குறளும்

மழைவாழ்த்திற்கு உதாரணமாக,

'கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை'

என்னும் குறளும் காட்டப்பட்டிருத்தல் காண்க.

இவ்வாழ்த்துக்களேயன்றிச் செங்கதிர்ச்செல்வனை வாழ்த்துதலும், தண்கதிர்ச்செல்வனை வாழ்த்துதலும், ஒருபற்றுக்கோடும் இன்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்தபொருளை வாழ்த்துதலும், என மூன்றுவகை வாழ்த்து உள. அவற்றிற்கு முறையே கொடிநிலை, வள்ளி, சுந்தழியென்று பெயர். இவற்றின் இயல்பையெல்லாம்,

'கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'

என்னும் சூத்திரவுரையால் உணர்க ; ஈண்டு விரிப்பிற் பெருகும். இப்படிக் கடவுள்வாழ்த்தும், அறுவகை வாழ்த்தினுள் முனிவர் வாழ்த்தும், மழைவாழ்த்தும், ஆசிரியர் திருவள்ளுவனார் அமைத்துக்கூறினர். ஆதலாலே அவர்க்கு இலக்கணம் தொல்காப்பியமே என்பது துணியப்படும். அல்லாமலும், அத் தொல்காப்பியனார் 'நிறைமொழிமாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப' என்னும் சூத்திரத்தில் ஓதிய நிறைமொழிமாந்தர் என்னும் சொற்றொடரையே தங்குறளுள் அமைத்து ஆண்டதனாலும் அது தெளியப்படும்.

திருக்குறளின் மாண்பு

இனி, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் இவை அமைக்கப்பட்ட முறையும் அவற்றின் பாகுபாடுகளும் உணர்த்தப்படும். அவற்றை அறியப்புகுமுன்னரே அவற்றைப்பற்றித் திருக்குறள் உரையாசிரியர் ஆகிய பரிமேலழகர் எழுதிவைத்த தப்புரைகளைக் கடைப்பிடியாது மறந்துவிட வேண்டும். அல்லாக்கால், உண்மை உணராது தடுமாறுவதற்கு ஏதுவாகும் என்று உணர்க.

இப் பரிமேலழகர் மிகச்சிறந்த உரையாசிரியர் என்பதில் தடையில்லை. தமிழ் நூல்களேயன்றி வடநூல்களையும் கற்றுவல்லவர். ஆயினும், வடமொழி நூல்களைக் கரைகண்டவர். ஆதலால் வடநூல்களின் பெருமையை விரித்துக் கூறியதனால், தமிழ் நூல்களின் பெருமையைக் குறைத்துக்கூறினாராவர். ஆதலால் தாய்மொழியாகிய தமிழுணங்கிற்கு அவர் என்றும் உய்தியில் குற்றம் செய்தவராவர். இவர் தாம், முதன்முதல், தமிழ்நூல்களெல்லாம் வடமொழி நூல்களின் வழிவந்தனவே, தமிழ் மொழிக்கும் தமிழ்நூல்களுக்கும் தனியே ஒரு பெருமை கிடையாது என்னும் உணர்ச்சியைத் தமிழ் நாட்டில் விதைத்தவர். இவர் திருக்குறளிற்குச் செய்த உரை முன் வழங்கிய ஒன்பது உரைகளிலும் சிறந்த உரையே. இவர் அவ்வுரையில் குறித்த இலக்கணக்குறிப்புக்களுக்கு அளவில்லை. இவர் இலக்கணக்குறிப்பில் தமிழ்இலக்கணக் குறிப்புக்களோடு, வடநூல் இலக்கணக்குறிப்புக்களைப் பொருத்திக்கொண்டு காட்டுகிறார். அதனால் தமிழ் இலக்கணத்திற்கு வடமொழியிலக்கணம் மூலம் என்பது குறிப்பிக்கிறார். இதனால் மயங்காத தமிழறிஞர் இல்லை. இலக்கணக்கோத்து நூலார் 'அன்றியும் தமிழ்நூற்களவிலை அவற்றுள்—ஒன்றேயாயினும் தனித்தமிழுண்டோ' என்று மயங்கிக் கூறியதற்குக் காரணம் இவர் உரையே.

> 'பரலெல்லாம் கல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
> நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ—பாரிற்
> பரித்த உரையெல்லாம் பரிமேலழகன்
> தெரித்த உரையாமோ தெளி'

என்பது முன் ஒருவர் இவர் உரையைப்புகழ்ந்து கூறிய பாட்டு. சிவஞானமுனிவர் ஒருவரும் இம்மயக்கம் கொள்ளாதவர். அவர் பரிமேலழகர் உரையில் பொருந்தாவுரைக் குறிப்புக்கள் பலவுள என்னும் கருத்தினர். அக்கருத்தை அவர் இலக்கணவிளக்கச்சூறாவளியிலும், சூத்திரவிருத்தியிலும் குறிப்பித்து அவர் உரைக்குறிப்புக்களை மறுத்த வாற்றால் அறிக.

அற்றேல், பரிமேலழகர்கூறிய பொருந்தாஉரைகள்யாவையோ வெனின், அவை மிகப்பல; அவற்றுள் முதன்மையானவை ஈண்டு உணர்த்தப்படும்.

(1) அவர் காமத்துப்பால் முகவுரையுட் கூறியது—ஈண்டு இன்பம் என்றது காமவின்பத்தினை.—இது புணர்ச்சி, பிரிவு என இரு வகைப்படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊடல், என்பனவோவெனின்,

இவர் (ஆசிரியர் திருவள்ளுவர்) பொருட்பாகுபாட்டினை அறம், பொருள், இன்பம் என வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான், அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினர் என்க. இனி அவைதம்மையே தமிழ்நூல் களோடும்பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும், பிரிவைக் கற்பென் றும், பெரும்பான்மை பற்றி.....வகுத்துக் கூறுகின்றார்' எ-து.

(2) இவர் காமத்துப்பாலுரை முடிவில் கூறியது—ஈண்டுப் பிரிவினை வடநூலார் மதம்பற்றிச் செலவு, ஆற்றுமை, விதுப்பு, புலவி யென நால்வகைத்தாக்கிக் கூறினர். அவற்றுள், செலவு பிரிவாற் றுமையுள்ளும், ஆற்றுமை படர்மெலிந்திரங்கல் முதல் நிறையழிதல் ஈறுயவற்றுள்ளும், விதுப்பு அலர்வயின் விதும்பல் முதல் புணர்ச்சி விதும்பல் ஈறுயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடுபுலத்தல் முதல் ஊடலு வகையீறுய வற்றுள்ளும் கண்டுகொள்க' எ-து.

(3) அவர் உரைப்பாயிரம் என்பதனுட்கூறியது—அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அது ஒழுக்கம், வழக்கு, தண்டம், என மூன்றுவகைப்படும். அவற்றுள் சிறப்புடைய ஒழுக்கமே தெய்வப்புலமைத் திருவள்ளுவரால் அறமென எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுதான் நால்வகை நிலைத்தாய் (பிரம சரியம், கிரகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம், என) வருணந்தோறும் வேறுபாடுடைமையின் சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகள் ஒழித் துப்பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறமென இருவகை நிலையாற் கூறினர்.....ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளி னின்று அவ்வவற்றிற்கு ஓதியஅறங்களின் வழுவாதொழுகுதல்.'—எ-து.

(4) 'ஊருரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின், ஆறென்பர் ஆய்ந்தவர்கோள்' என்னும் குறளுரையிற் கூறியது—முன் நீதிநூல் ஆராய்ந்த அமைச்சரது துணிபு, பழுதுபடும் வினைகளைச் செய்யாமையும், செய்யும்வினை தெய்வத்தாற் பழுதுபட்டவழி அதற்குத் தளராமையும் ஆகிய இவ்விரண்டன் வழியென்பர் நூலோர். தேவர்க் கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழவெள்ளிகளின் துணிபு தோகுத் துப் பின் நீதிநூலுடையார் கூறுமாறு கூறுகின்றமையின் ஈண்டு வினைத் தூய்மையையும் உடன் கூறினர் ...எ-து.

(5) 'அறம்பொருளின்பம் உயிரச்ச நான்கின்—திறந்தெரிந்து தேறப்படும்' என்னும் குறளுரையில் அவர், அமைச்சர் முதலாயினரை அரசன் தெரிந்து எடுத்துக்கொள்ளுதற்கு அறவுபதை, பொருளுபதை, இன்பவுபதை, உயிரச்சவுபதை யென நான்கு சோதனைகளால் அவரைச் சோதிக்கச்செய்து அவர் அவற்றுல் மயங்காத திறனுடையவர் என்று தெளியப்பட்டபின்பு அவரை யெடுத்துக்கொள்ளலாம் என்று கருத் துரை கூறி, இவ்வடநூற் பொருண்மையை உட்கொண்டு ஆசிரியர்

திருக்குறளின் மாண்பு

திருவள்ளுவனார் ஓதியது அழியாது பிறர் (உரையாசிரியர்) எல்லாம், தத்தமக்குத் தோன்றியவாறே பாடந்திரித்துக் கூறினர்....எ-து.

இப்பரிமேலழகர் அறத்துப்பால் பற்றி உரைப்பாயிரத்தால் குறிக்கப்பட்டவர் மனுவென்றும், பொருட்பால்பற்றிய உரையால் குறிக்கப்பட்டவர் சாணக்கியரும் காமந்தகருமாவர் என்றும், காமத்துப்பால் முகவுரையால் குறிக்கப்பட்டவர் வாத்ஸ்யாயனர் என்றும் சொல்லுப.

இனி இப் பரிமேலழகர் உரைக் குறிப்புப் பொருள் பொருந்தாமை விளக்குவாம்.

(1) ஆசிரியர் திருவள்ளுவனார் பொருட்பாகுபாட்டினை அறம், பொருள், இன்பம், என வடநூல்வழக்குப்பற்றி ஓதினர் என்றது. தமிழ் நூல் வழக்குப்படி பொருட்பாகுபாடு எப்படி உணர்த்தப்பட்டது? 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' என்று தமிழ் நூன்முகில் முழக்கம் கேட்டறியார்போலும்! எண்ணும் எழுத்தும் ஆகிய இருகண்ணும் பெற்றுவைத்தும் குருடராயினர். அஃது அவரது வினையின் பயனென்றொழிக. தமிழ் நூல்களுள் அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றை உணர்த்தாதது எது? பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, காலடி, நான்மணி, கானூற்பது, ஐந்திணை, முதலிய கீழ்க்கணக்குகள் இவையெல்லாம் எத்தை உணர்த்துகின்றன? ஆத்திசூடி முதலிய ஔவையார் பாடல் உணர்த்துவது என்ன? அது நிற்க, ஆங்கிலம் முதலிய மேலைட்டு மொழிகளிலே எழுந்தநூல்கள்யாவும்அறம், பொருள், இன்பத்தைத்தவிர்த்து யாதினை உணர்த்துகின்றன? ஆகையால் அறம் பொருளின்பம் என்னும் பாகுபாடு வடமொழிக்கே உரித்தெனவும், அவ்வடநூல் வழக்குப்படியே ஆசிரியர் திருவள்ளுவனார் தம் பெருநூலில் பால் வகுத்துக்கூறினரென்றும் பரிமேலழகர் கூறியது தமிழ்நூல் வழக்கு முறையும், உலக நூல் வழக்கு முறையும், உணராது கூறியதேயாமெனவிடுக்க. இவர் திருக்குறளுக்கு முற்பட்ட தமிழ்நூல்கள் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் பாகுபாட்டினைப்பற்றிச் சொல்லவில்லையென்னும் கருத்தினர் போலும். அ, ஆ, இவர்தம் கூற்று கன்று, கன்று!!

'இன்பமும் பொருளும் அறனுமென்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக்கூட்டம் காணுங்காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை கல்லியாழ்த் துணைமையோர் இயல்மே.

என்பது 'தொல்-களவியற் சூத்திரம்.

'ஆசிரியம் வஞ்சி வெண்பாக்கலியென
காலியற்றென்ப பாவகைவிரிவே'

'அங்கிலே மருங்கின் அறமுதலாகிய
மும்முதற்பொருட்கும் உரியவென்ப'

திருக்குறளின் மாண்பு

இவை செய்யுளியற் சூத்திரம். இறுதிச்சூத்திரத்தில் 'மும்முதற் பொருட்கும்' என்ற உம்மையால் அறமும், பொருளும், இன்பமும், என்னும் மூன்றேயன்றி வீடும் பாவால் உணர்த்தப்படும் என்றார் பேராசிரியர். இஃது உணர்ந்துகொள்ளாத பரிமேலழகர் 'வீடாவது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலால், துறவறமாகிய காரண வகையால் கூறப்படுவதல்லது இலக்கணவகையால் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன (அறம் பொருள் இன்பமென்னும்) ஈனை மூன்றுமேயாம்' என்றார். அவர், தாம் போற்றிப் பயின்ற திருவாய் மொழியும், தேவார திருவாசகம் முதலியனவும் வீட்டுநெறி கூறும் நூலல்லவென்று கருதினர்போலும்! அவர்

'ஆராவியற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.' என்னும் குறளுரையில்

'நன்றாய் ஞானங்கடந்துபோய் நல்லிந்திரியம் எல்லாம் ஈர்த் தொன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பிலதனை உணர்ந்துணர்ந்து, சென்றாங் கின்பத் துன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றால்—அன்றே அப்போதே வீடும் அதுவே வீடு வீடாமே' என்னும் திருவாய் மொழியை மேற்கோள்காட்டி அதனால் சீவன் முத்தன் இயல்பு கூறப் பட்டது எனவும்.

'பற்றற்றகண்ணே பிறப்பறுக்கும்' என்னும் குறளுரையில் 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்னும் திருவாய்மொழியை மேற்கோளாகக் காட்டி வீடு அடையுமாறு இதுவெனவும் கூறியதனையும் மறந்தார்போலும்.

இப் பரிமேலழகர் கூறியதே கருத்தாக நச்சினார்க்கினியரும் தொல்—சிறப்புப்பாயிரவுரையில் கூறினர். இவரும் சிந்தாமணியில் முத்தி யிலம்பகத்திலே வீட்டினியல்பு கூறப்பட்டது என்பதனை மறந்தார் போலும். இனி சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய நூல்களும் கந்தபுராணம், கம்பராமாயணம் முதலிய நூல்களும் வீட்டி லக்கணம் கூறியனவேயாமென்று தெளிக.

இனிப் பன்னிரு படலத்துள்ளும்,

'ஆன்ற சிறப்பின் அறம்பொருள் இன்பமென
மூன்று வகைதுதலிய துலகம் அவற்றுள்
அறமும் இன்பமும் அகலா தாகிப்
புறன் எனப்படுவது பொருள் குறித்தன்றே' என்றொரு

சூத்திரம் ஓதப்பட்டிருத்தல் காண்க.

ஈண்டுக் கூறியவாற்றால் ஆசிரியர் திருவள்ளுவனார் அறம் பொருள் இன்பம் என்னும் பாகுபாடுசெய்து கூறியது தமிழ்நூல் வழக்குப்பற்றி யென்பதன்றி பரிமேலழகர் உரைத்தவாறு வடநூல் வழக்குப்பற்றி அன்றென்க.

(2) அறம் என்பது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன தவிர்தலும்; அது ஒழுக்கம் வழக்குத்தண்டம் என மூவகைப்படுமெனவும்; அவற்றுள் வழக்கும் தண்டமும் விடுத்துச் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்கொண்டார் என்றும், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் நால்வரும் தத்தமக்கு விதித்த ஒழுகலாற்றின் வழுவாதொழுகுதலும் பிரமசரியம் முதலிய நிலைகளின் வழுவாதொழுகுதலும் ஆம், எனவும் பரிமேலழகர் கூறினர். இதனால் திருக்குறள் ஆசிரியர் அறத்துப்பாற் பகுதிகளை மனுநூலின் வழியே வகுத்துரைத்தார் என்று தெரிவித்தாராவர்.

திருக்குறளாசிரியர் தம் திருக்குறள் நூலை வேறொரு நூலின் வழியாகச் செய்தாரல்லர். மனுநூலின் வழியாகச் செய்தாரென்று சங்கப் புலவருள் யாரும் கூறினரிலர். பாரதம் பாடிய பெருந்தேவனார் ஒருவரும்,

> 'எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
> செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரு—மூப்பாற்குப்
> பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
> நேர்வனமற் றில்லை நிகர்.' என்றார்.

என்றதனால் பாரதமும் சீராமகதையும் மனுவும் பண்டைமறைகளும் கூட்டிச் சீர்தூக்கின், இத்திருக்குறளுக்குத் துலை நேராகும் என்பதாம்.

உற்றுநோக்கின், மனுநூலில் கண்ட ஒழுக்கவழக்கங்களில் பெரும் பாலன, தமிழ்நாட்டின் ஒழுக்கவழக்கங்களுக்கு மாறுபடுகின்றன வென்று திருவள்ளுவர்கண்டு அவற்றை விலக்கித் தமிழ் நாட்டிற்கு ஏற்பனவற்றைக்கொண்டு திருக்குறள் என்னும் நூலை இயற்றினர் என்பது காணலாம்; ஆகவே, இவ்வாசிரியர் பேரிய சீர்திருத்தக்காரர் (Great Reformer) என்னலாம், ஆனால், புத்தர், யேசுகிறிஸ்துநாதர் முதலியவர்களோப்போன்றவரோவெனின், அவரினும் பேரியார்; அவரெல்லாம் சொன்ன ஒழுக்கங்களின் சீரிய ஒழுக்கங்களை உணர்த்தினமையினாலே.

அற்றேல், மனுநூலார் கொண்ட கொள்கைகட்கும் திருக்குறளாசிரியர் கொள்கைகட்கும் மாறுபாடுகாணும் இடங்கள் யாவையோ வெனின்,

(1) ஊன் உண்ணல் மனுநூலில் விதிக்கப்பட்டது.

அது திருக்குறளில் அறவே விலக்கப்பட்டது.

மீன் முதலிய கையில்லாத பிராணிகள் ஆகாரமாகப் படைக்கப் பட்டன என்பது. மனு 5—29.

முள்ளம்பன்றி, உடும்பு, ஆமை, முயல் இவற்றின் மாமிசம் புசிக்கலாம். மனு 5—18.

சிரார்த்தத்தில் பிராமணன் மாமிசம் புசிக்காவிட்டாலோ 21 சனனம் பசுவாய்ப்பிறப்பான் என்பது. மனு 5—35.

திருக்குறள் புலான்மறுத்தல், என்று ஓர் அதிகாரம் வகுத்து, அதனுள்

'தன்னூன்பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான்
எங்ஙனம்ஆளும் அருள்' என்றும்,
கோல்லாமை யென்னும் அதிகாரத்துள் :
'தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை'. யென்றும் ஓதியது.

(2) இனி பசுக்கொலை வேள்வியில் செய்யப்பட்டு அந்த மாமிசம் புசித்தல் அறத்தாறேயென்பது வடநூல் வழக்கு. 'எக்கியத்தில் செய்யும் பசுஇம்சை இம்சையல்ல என்பது. மனு 5—39.

இவ்வடநூற் கருத்தேபற்றிப் பரிமேலழகரும்,

'கொலை வினையராகிய மாக்கள் புலைவினையர்' என்னும் குறளுரையில் வேள்விக்கண் கொலை கொலையல்லவென்றார். திருக்குற ளாசிரியர்

'அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணுமை நன்று' என்று ஓதினர்.

அவர் கருத்து, செய்யப்படுவது வேள்வி யென்றாலும், பசுக்கொலை புரிதல் பாவமேயாம் என்பது. ஆகவே பரிமேலழகர் ஆசிரியர் கருத் துணராமல் கூறியவாறும். மற்று, மனுநூலில் 'நூறுண்டு பரிமேதம் செய்தானுக்கும் சாந்துணையும் புலால் மறுத்தானுக்கும் பயன்ஒக்கும்' என்று 5—53-ல் ஓதப்பட்டது. ஆதலால் அக்கருத்துப்பற்றி ஆசிரியர் கூறினர் என்பாரும் உளர். அது ஒவ்வாது, மனுவின் கருத்தும்வேறு. திருவள்ளுவர் கருத்தும்வேறு என்பது, இரண்டையும் செம்பொருள் காணவல்லார்க்குப் புலனும். அன்றியும் அம்மனுநூற் பொருண்மொழி முன்னெடு பின் மலிவுறுதலால் அதனைப் பிற்காலத்தார் ஒருவர் திரு வள்ளுவர் குறட்கருத்துக்கு இணங்க இடைச்செருகினர்போலும் என்க.

இங்ஙனம் பசுக்கொலை நிகழும் வேள்வி வடநூலிற் குறித்ததனைத் திருவள்ளுவர் மறுத்து குற்றமற்ற வேள்வி ஒன்றனை விதிக்கிறார். அது

'பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பார் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.' என்னும் குறளில் கண்டது.

விருந்தினரைப் பாதுகாத்தலே பெரிய வேள்வி யென்கிறார். வேறு வேள்வியைக் குறித்திலர். 'அறுதொழிலோர் நூன்மறப்பர்' என்று குறித்ததனால், தெய்வப்புலவர்க்கு வேள்வி செய்தல் உடம்படாகும் எனின், அது பிறர் மதம்பற்றி அவரைச் சுட்டியதாகுமேயன்றி, பசுக் கொலை நிகழும் வேள்வி உடம்பாடல்லவென்றே கொள்க.

மூன்றாவது. ஊன் உண்ணலோடு மதுவுண்டலும் மனுநூலில் விதிக்கப்பட்டது. திருவள்ளுவர் மதுவுண்டலை அறவே ஒழிக்கச் சொல்லுகிறார் ;

திருக்குறளின் மாண்பு

'காணென்னும் கல்லாள்புறங் கொடுக்கும் கள்ளென்னும்
பேணுப் பெருங்குற்றத் தார்க்கு' என்பதும்

'களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று' என்பதும் குறள்.

வடநூல்களில் பாரதமும் ஊன்உண்ணலையும் மதுஉண்டலையும் விலக்கவில்லை. இராமர்கதையும் விலக்கவில்லை. இராமர்கதையைத் தமிழிலே செய்த கம்பர் அவற்றை விலக்கிச்சொல்வது நோக்கத்தக்கது.

'நிந்தனை நறவமும் நெறியில் ஊன்களும்
தந்தன கண்டிலேன் தருமதானமும்
வந்தனை நீதியும் பிறவு மாண்பமைந்து
அந்தணர் இல்லெனப் பொலிந்த தாமரோ. என்னும்

பாடல் அனுமார் இலங்கையில் பிராட்டியாரைத்தேடினபோது விபீடணன் இல்லம் இருந்தபடியை உணர்த்துகிறது. அரக்கனுயினும் விபீடணன் மதுவையும் ஊனையும் விலக்கினனெனவும் அந்தணருக்கு அவை முற்றும் விலக்காம் எனவும் கம்பர் உணர்த்தி அவற்றை மறுக்கிறார். ஆகலால் மதுவுண்டலும் ஊனுண்ணலும் குற்றமென்று கண்டவர் தமிழ்நாட்டுத்தெய்வப்புலவரே யென்பது காண்க. மற்றை மேனாட்டு மக்களுக்கு அவையிரண்டுமின்றி ஆகாரம் அமையா. ஆதலால் அவர்நூல்பற்றிப் பேசவேண்டா.

நான்காவது—மனுநூலார் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், என நால்வகைவருணப்பாகுபாடுசெய்து இலக்கணம் கூறினர். திருக்குறளாசிரியர் அப்பாகுபாடு கொள்ளவில்லை. அவ்வகுப்பாரைப் பற்றி இலக்கணமும் கூறவில்லை. சாதியென்றுவது, குலம் என்றுவது, ஓர் அதிகாரம் வகுத்து ஓதினரிலர். குடிமை யென்றொரு அதிகாரம் வகுத்து 'ஒழுக்கமுடைமை குடிமை' யென்று கூறி அக்குடிமையையே குலன் என்றும் குறிக்கிறார். அக்குடியுள் சாதிவகையான் உயர்ந்தது இது, தாழ்ந்தது இது, என்று கூறினரிலர். அறம், பொருள், இன்பம், வீடு, அடைதல் என்பவற்றுள் வீடடைதல் இன்னார்க்குரித்து என்றுதல் இன்னார்க்கு உரித்தன்றென்றுதல் கூறினரிலர். மக்கள் எனப் பிறந்தார் எல்லாரும் ஒருவரின் ஒருவர் உயர்ந்தார் தாழ்ந்தார் அல்லர் என்பதை உணர்த்துவது.

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்'. என்னும் குறள்.

'நலம்வேண்டின் காணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.' என்னும் குறளில்

யாவர்மாட்டும் பணிதலே மேற்கொள்வது நல்லகுலத்தின் இயல்பு எனப்பட்டது. இதுவேயன்றி, செப்பம், காண், ஒழுக்கம், வாய்மை, ஈகை, இன்சொல் பிறரை இகழாமை, அன்புடைமை, சால்பல்லாத காரியங்களைச் செய்யாமை இவற்றை ஆளுமவனே உயர்ந்த குலனுடை

யான் என்பதும், அந்த ஒழுக்கத்தைவிட்டவன் இழிந்த குலனுடை யான் என்பதும், திருவள்ளுவனார் குறிப்பு.

'ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்'

'மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்' என்பது குறள்.

ஈண்டு ஓதிய ஒழுக்கம் என்பதெல்லாம் திருக்குறள் அறத்துப்பாலுள் ஓதிய புலால் உண்ணுமை, கள்ளுண்ணுமை, பொய்யாமை, பிறர்க்கின்னு செய்யாமை, பிறர் பொருளை வெஃகாமை, முதலியனவேயாம். மனு நூலில் கண்ட வருணாசிரம ஒழுக்கம் என்பதன்று. பிராமணர் என்ற சாதியாரைப்பற்றி மேற்கண்ட குறளில் 'பார்ப்பான்' என்றும் 'ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்' என்னும் குறளில் 'அறு தொழிலோர்' என்றும் குறித்ததனால் ஆசிரியர்க்கு நால்வகை வருணப் பாகுபாடும் அவர்க்கு மனுநூலில் விதித்த தொழில் முறையும் உடன் பாடேபோலும் எனின், அற்றன்று, அறுதொழிலோர் என்றது பிறர் மதம் பற்றியே; தங்கருத்தின்படியன்று. அறுதொழில் என்றது ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தல், என்னும் இவை யன்றே. இவற்றுள், வேட்டல் குற்றமுடைத்து என்பது இவர் கருத்தாதல் முன்னமே உணர்த்தப்பட்டது. வேட்பித்தல் என்பதும் இவர் கொள்ளாமை சொல்லவேண்டாதாயிற்று. இனி ஈதல், ஏற்றல், என்னும் இரண்டனுள் ஈதலை மாத்திரம் கொள்கிறார். ஏற்றல் கூடா தென்று விலக்குகிறார். இதனை,

'நல்லாறெனினும் கொளல் தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று' என்பதனால் அறிக.

இரவு, இரவச்சம் என்னும் அதிகாரத்துக் குறளினாலும் ஏற்றல் தகா தென்று மறுக்கப்பட்டது. ஈதல் என்பது ஈகையென்றொரு அதிகாரம் வகுத்தோதப்பட்டது. அதனுள் பசித்தானுக்குச்சோறளித்தலே சிறந்த ஈகை யெனப்பட்டது.

'அற்றார் அழிபசிதீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி'

'வறியார்க் கொன்றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து'

'ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்' (குறள்)

இதனால் மிக்க பசியினால் வருந்தும் வறியவர்க்குச் சோறு கொடுப் பதே சிறந்த ஈகை என்பதும், அதுவும் அதற்கு மாறாக ஒருபயனை நோக்காது கொடுத்தல்வேண்டுமென்பதும், மற்றைப்பொருளை வறியரல் லாதார்க்கு ஈவது ஈகையன்று என்பதும், பசியை விரதம் முதலிய வற்றால் மாற்றும் பெரியார் ஆற்றலினும் இரப்பார் பசியை மாற்றுவார் ஆற்றல் உயர்ந்தது என்பதும் உணர்த்தப்பட்டது.

திருக்குறளின் மாண்பு

இனி, ஓதல் என்பது கல்வி, கல்லாமை என த் தெய்வப்புலவர் அதிகாரம் வகுத்து, அதனுள் மக்களாகப் பிறந்தார் எல்லாரும் கல்வி கற்றற்குரியர். கல்வியறிவால் எய்தக் கடவதாகிய பயனை யெல்லாரும் எய்துதற்குரியர் என்னும் கொள்கையினராவர். அவர் வேதம் ஓதுவது இன்னார்க்குரியது, மற்றவை ஓதுவது இன்னார்க்குரியது என்ற கருத் திலர். ஆரியமொழியின் மறையன்றித் தமிழ்மொழியினும் எல்லாம் உணர்த்தவல்ல நூல் உள வென்ற கருத்தினர்.

'விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்'

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்'

'மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்று ணைத்திலர் பாடு'

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

'கற்றதனல் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'

'ஒதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான் அடங்காப்
பேதையிற் பேதையார்இல்' இதனல் ஓதுவித்தலும் கூறினர். ஆகலின் அறுதொழிலோர் என இவர் குறித்தது பிறர் மதம் கூறல் என்பதுபற்றியே. தந்துணிபு கூறல் அன்று.

இங்ஙனம் ஓதலையும் ஓதுவித்தலையும் எல்லார்க்கும் உரியன வென்று கொள்ளாக்கால் சைவ வைணவ சமயத்துப் பலவகைப்பட்ட பெரியாரும் வீடடைதல் எவ்வாறு முடியும்? வேதம் என்பதை ஓதாத கண்ணப்பரை ஏத்தித் தொழாத நாயன்மார் இல்லையே. இனி ;

கூத்தீரியர் என்ற சாதியார் ஒழுக்கத்தைப்பற்றி நாயனர் திருக் குறளில் ஓதினரிலர். நாடு காத்தளிக்கும் அரசர் என்பாருடைய இலக் கணம் விரிவாக உணர்த்தினர்.

'படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு'

'ஓர்ந்து கண்ணோடா திறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை'

'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்'

'அரனிழுக்காதல் லவைநீக்கி மறன்இழுக்கா
மான முடைய தரசு'

'ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்' என்பதில்,

திருக்குறளின் மாண்பு

உரைசான்றநூல் என்றது படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரணைப்பற்றிய நூலும், உழவு, மருந்து, முதலியவைபற்றிய நூலும் பிறவுமாம்.

காயனார் ஓதிய அமைச்சர் இலக்கணம்,

'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்ட தமைச்சு

ஒற்றுடல் இலக்கணம்: ஒற்று இக்காலத்து, 'Police' என்று சொல்லப்படுவது.

'எல்லார்க்கும் எல்லா நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்'

'கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யார்க்கும்
உகாஅமை வல்லதே ஒற்று'

'ஒற்றொற்றித் தந்த பொருளை மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்'

'ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்.

இந்த ஒற்றிலக்கணம் வடநூலார்க்குத் தெரியாதது. மனு ஓதவில்லை. இப்போது மேனாட்டு அரசியலினும் இந்த ஒற்றுமுறை காணேம்.

தூதன் இலக்கணம்,

'தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது'

இந்த இலக்கணமும் மனுநூலிற் காணலாகாது.

வரைவின் மகளிர், மது, சூது, இவை அரசர்க்கு விலக்கவேண்டியன என்பது திருக்குறள்.

'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு' எ-து.

மனுநூலில் இதைக் காணேம்.

இனி வைசியர் சாதியொழுக்கம் திருக்குறளுட் கூறப்படவில்லை.

'வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்' என்று ஒரு குறள்

'நடுவு நிலைமை' அதிகாரத்தில் காணப்படுகிறது.

இனி சூத்திரர் என்ற சாதியாரைப் பற்றியும், அவர் பிராமணருக்குப் பணிவிடை செய்வதே மோட்சம் என்றும் அவர்க்கு, முறை தவறின விடத்துக் கொடிய தண்டனை விதித்தலை மனுநூல் கூறியது.

திருக்குறளின் மாண்பு

திருக்குறளில் இத்தகையார் ஒரு சாதியார் உளரென்று சொல்ல வில்லை. அவருக்கு அச்சாதி யொழுக்கமும் வகுக்கவில்லை. 'உழவு' என்னும் அதிகாரத்தில் உழுவார் என்று ஒரு தொழிலார் குறிக்கப்படு கிறார். இவர் வேளாளர் என்று கருதப்படுகிறார். ஆயின் இவர் வேறொருவரையும் தொழுதற்குரியரல்லர். மற்றையோரெல்லாம் தம் மைத் தொழுதற்குரியர் என்று சொல்லப்படுகிறார்.

'உழுவார் உலகத்தார்க் காணி அஃதாற்றாது
எழுவாரை யெல்லாம் பொறுத்து'

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்'

'பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்' (குறள்)

தண்டமுறைமைபற்றி,

'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்'

'ஓர்ந்து கண்ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை' என்பது குறள்.

இது சாதி உயர்வு இழிவுபற்றித் தண்டமும் ஏற்றமும் இழிவும் படும் என்று விதித்த மனுநூற்கொள்கையை மறுக்கின்றது.

'பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்

'இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல்' என்னும் குறள்கள்

ஒருவன் சந்ததிக்கு ஒருபுத்திரனைப்பெறாது இறந்தால் விதவையானவள் அவனுடன் பிறந்தானுடன்கூடி ஒரு புத்திரனைப் பெற்றுக்கொள்ள லாம் என்னும் மனுநூல் வழக்கை மறுக்கின்றது.

இனி ஐந்தாவது—மனுநூலார் பிரமசரியம், கிரகத்தம், வானப்பிரத் தம், சந்நியாசம், என நான்கு நிலை கொண்டார். தெய்வப்புலவர் பிரம சரியம், வானப்பிரத்தம் என்னும் இரண்டு நிலைகளையும் விலக்கி, இல்லறம், துறவறம் என்று நிலை இரண்டேகொண்டார். பிரமசரியம் என்பது வேதம் ஓதுதலும் பிச்சையேற்று உண்பதும் தொழிலாக் கொண்டது. ஏற்றல் கூடாதென்று முன்னமே விலக்கப்பட்டது. அரசர், வணிகர், இவர்க்குத் தம்வாளினிற் காற்கூறு இதனில் செல விட்டால், படைக்கலம் பயிறல், பொருணூல்கற்றுப்பெருக்கல் முதலிய வற்றுக்கு இடமில்லை. வேளாளர்க்கும் உழவுத்தொழில் முதலியன செய்யமுடியா. ஆகலின் சிறுபான்மை பார்ப்பார்க்கு உரித்தென்று ஓதப்பட்ட பிரமசரியத்தால் பெரும்பயன் விளையாது என்பது கருத்து. வானப்பிரத்தம் மூன்றும் பாகத்தில் வனத்தில் சென்று இல்லாள் பணி

செய்யத் தவம்செய்வது. இதுவும் முடியாத காரியம். ஆதலின் இதுவும் விலக்கப்பட்டது. இனி அஃது அப்படியன்று. 'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்றதூணை' என்ற நாயனார்க்கு அவையிரண்டும் உடம்பாடுபோலும் என்பாரும் உளர். அவர் அறியார். 'இயல்புடைய மூவர்' என்று திருக்குறளில் கூறியது 'பிறர் மதம் கூறல்' என்பதுபற்றியே, தக்துணிபன்று எனப் பரிமேலழகரே கூறினர். அன்றியும் நாயனார்,

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்'

'இயல்பினுல் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை'

'ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்'

'ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து' என

ஓதியதனுல் வானப்பிரத்த நிலை மறுக்கப்பட்டவாறும், ஏனைத்துறவறத்தார் நிலையினும் இல்லறத்தார் நிலை உயர்ந்ததென்றவாறும் காண்க. துறவறவொழுக்கத்தை இல்லறத்தின் வழுவாது நின்றே தழுவலாம் என்பது இவர் கருத்தாம். இவ்வாசிரியர் இந்த நிலையினரே. இது நிற்க, மனுநூற் கொள்கைகள் பொருந்தாவென்று கனிந்து இவர் வேறு விதித்த கொள்கைகள் மேலும் பலவுள. ஆகலின் திருக்குறள் அறத்துப்பால் மனுநூல்வழியாக இயற்றப்பட்டதென்ற பரிமேலழகர் கூற்றுத் தவறுதல் தெளிக.

இனித் திருக்குறளிற் பொருட்பாலின் கருத்துக்கள் காமத்தகம் என்னும் வடநூற்கருத்தைப்பற்றி உரைக்கப்பட்டன என்பதுபற்றி ஆராய்வாம். பரிமேலழகர் அதற்குக் குறித்த ஏதுவாவது

'அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறத்தெரிந்து தேறப் படும்' என்னும் திருக்குறள் உரைக்கருத்து. அஃதாவது அரசனுல் தெளியப்படுவான் ஒருவன், அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டான்வரும் அச்சமும் என்னும் நான்கின்திறத்தால் மனவியல்பு ஆராய்ந்தால், பின்பு தெளியப்படும். (உபதை—சோதனை) அறவுபதையாவது புரோகிதரையும் அறவோரையும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோன் அன்மையின், இவனைப்போக்கி, அறனும் உரிமையும் உடையான் ஒருவனை வைத்தற்கு எண்ணினம். இதுதான் யாவர்க்கும் இயைந்தது; நின்கருத்தென்னை யெனச்சூளுறவோடுசொல்லுவித்தல். பொருளுபதையாவது சேனைத்தலை வரையும் அவனோடு இயைந்தாரையும் விட்டு, அவரான், இவ்வரசன் இவறன்மாலியன், ஆகலின், இவனைப்போக்கிக் கொடையும் உரிமையும் உடையான் ஒருவனை வைத்தற்கு எண்ணினம், நின்கருத்தென்னை யெனச்சூளுறவோடு சொல்லுவித்தல்; இன்பவுபதையாவது, தொன்று

தொட்டு உரிமையொடு பயின்ருள் ஒருதவமுதுமகளைவிட்டு, அவளால், உரிமையுள் இன்னள் கின்னைக்கண்டு வருத்தமுற்று கூட்டுவிக்கவேண்டு மென்று என்னைவிடுத்தாள். அவளைக்கூடுவையாயின் கினக்குப் பேரின்பமேயன்றிப் பெரும்பொருளும் கைகூடும் எனச்சூளுறவோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது—ஒரு கிமித்தத்தின்மேலிட்டு, ஓர் அமைச்சனுல், ஏனையோரை அவன் இல்லின்கண் அழைப்பித்து இவர் அறைபோவான் எண்ணற்குக் குழீஇயினரென்று தான்காவல்செய்து, ஒருவனுல், இவ்வரசன் கம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின், அதனை காம் முற்படச்செய்து கமக்கினிய அரசன் ஒருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கும் இயைந்தது; கின்கருத்தென்னையெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இக்கான்கினும் திரிபிலனுயவழி எதிர்காலத்தும் திரிபிலன் என்று தெளியப்படும் என்பதாம். இவ்வுபதைகள் காமந் தகம் என்னும் நூலில் சொன்னவையாயினும், இவையெல்லாம் படிப் பார்க்கு மிக்க வியப்பை விளைவிப்பனவே ஆயினும், செய்கையில் கடை பெறுவனவல்ல. ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாதென்பது ஓர் பழ மொழி. இந்த உபதைகள் முற்காலத்திலேனும் கடைபெற்றதாக ஓர் தமிழ் இலக்கியத்தைக் காணேம்.

அன்றியும், அவ்வுபதைகள் அரசியற் பிறழ்ச்சியை (Revolution) உண்டாக்கவும் கூடும். பொய்யில் புலவர் எனப்போற்றப்பட்ட ஆசிரியர் மனத்தில் அக்கருத்துக் கனவிலும் நுழையாதாம் என்று விடுக்க.

அற்றேல், அத்திருக்குறட்குப் பொருள் காணுமாறு யாதோ வெனின், அது மிகவும் எளிதானது.

அரசியற்முறைகளில் அமைச்சர்முதல் ஏவன்மாக்கள்வரையில் தொழிலில் அமர்வோர் தாம் கல்லொழுக்கத்திற் றவருதார் என்பது பற்றித் தக்கோர்பால் கன்கு மதிப்பு உறுதியோடு (Good Conduct Certificate) பெற்று அளிக்கவேண்டும். மேலும் அக்கல்லொழுக்கத்தைப் பாதுகாத்தல் வேண்டும். முறை செய்வார் முதலிய தொழிலில் கிற்பாரைப் பொருள்கொடுத்தோ, பெண்டிரைச்சேர்ப்பித்தோ முறை தவறச்செய்வது உலகவழக்கு. மிக்க கொடியவன் ஒருவன் உயிர்க்கு அச்சம் உண்டாகும்படி செய்தாலும் முறைசெய்தற்குரியான் முறை பிறழ்தலும் உண்டு. இனி இக்காரியத்தைச் செய்தால் கம் உயிர்க்கு ஏதம் வருமென்று அஞ்சி முறைதிறம்புவாரும் உளர். இனி அறத் தாறுபற்றிப்பொய்யாமை, கள்ளாமை, வெஃகாமை, முதலிய குண முடையராயிருத்தல்வேண்டும். போலி அறச்செயல்களில் மயங்கா திருத்தல்வேண்டும். இவ்வாறு கான்கு வகையிலும் ஆராய்ந்து தெளிக்தபின், 'இதனை இதனுல் இவன் முடிக்கும் என்றுய்ந்து அதனை அவன்கண்விடல்' என்பதாம். இம்முறையே இன்றும் வழக் கில் கிற்பதாம். ஆகலின் காயனர் கருத்தும் இதுவேயாம் என்க. இதனுல் காமந்தகம் என்னும் நூற்கருத்தை உட்கொண்டு இத்திருக் குறளை காயனர் ஓதினர் என்பது பொருந்தாது.

திருக்குறளின் மாண்பு

இனி, 'தார்தாங்கிச் செல்வது தானை' என்னும் குறளுரையில் படைவகுப்பு என வியூகம் என்பவற்றைக் குறித்து இவற்றின் விரிவை (காமந்தகம் என்னும்) வடநூலுட்கண்டுகொள்க என்றுரை பரிமேலழகர். இவ்வியூகம் என்பனவற்றைப்பற்றி வடநூல்வழிவந்த புராணங்களில் கேள்வியுற்றேமேயன்றி அவை தமிழகத்துப்போர்நிகழ்ச்சியில் நடைபெற்றனவல்ல. தமிழர்போர்நிகழ்ச்சிக்கு இலக்கணம் புறத்திணையியலுள்ளும் புறத்திணைவெண்பாமாலையுள்ளும் நிரம்பக் காணப்பெறும். படையணிவகுப்பு முதலியன பற்றிக்கூறும் தமிழ்நூல்கள் இறந்தன. அத்தத்த காட்டிற்கு அவரவர் படையணிவகுப்பும் போர் முறையும் வேறுவேறும். வெண்ணிப்பறந்தலையில் கரிகாலன் வகுத்த படையணிவகுப்பு யாது? தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வகுத்த வியூகம் யாது. மேலைட்டுப் போர்வீரரும் மகமதியப் போர்வீரரும் எந்த வியூகம் வகுத்துப்போர்செய்தார்கள்? அவரவர்க்கும் அவ்வக்காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவகையால் அணிவகுத்துக்கொண்டார் என்பதே முடிபு. வியூக வகுப்பு, எனைத்தாயினும், தமிழ்நாலார்க்கும் தமிழவரசர்க்கும் வேண்டாதனவே. இதனைத் திருக்குறள் உரையில் பரிமேலழகர் குறித்தது மிகையே. இனி;

'ஒலித்தக்கால் என்னும் உவரியெலிப்பகை
நாகம் உயிர்ப்பக்கெடும்.'

'பீலிபெய்சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சாலமிகுத்துப் பெயின்.'

'நுணிக்கொம்பர் ஏறினர் அஃதிறந்தூக்கின்
உயிர்க்கிறுதியாகிவிடும்.

'ஆகாறளவிட்டிதாயினும் கேடில்லை
போகாறகலாக்கடை.' (Economy)

'பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.' (காலமறிதல்)

'நெடும்புனலுள் வெல்லும்முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப்பிற.' (இடனறிதல்)

'சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.

'காலாழ்களரின் கரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்தகளிறு.'

'அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென்றேவற் பாற்றன்று (தெரிந்துவினை)

'காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீரார்க்கேயுள (சுற்றந்தழால்)

'கடிதோச்சிமெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டுபவர்.' (வெருவந்த—)

திருக்குறளின் மாண்பு

'இன்மையின் இன்னாதுடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.' (கொடுங்கோன்மை)

'மயிர்நீப்பின் வாழாக் கவரிமாவன்னர்
உயிர்நீப்பர் மானம்வரின்.' (மானம்)

'நாணுல் உயிரைத்துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணுள்பவர்.'

'செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுக
ஆன்ற பெரியார் அகத்து.'

'தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறுமறிவு.'

'செவிக்குணவில்லாதபோழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்.'

'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்.' (கண்ணோட்டம்)

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண்களைவதாம் நட்பு.' (நட்பு)

இத்திருக்குறட்பாக்களின் கருத்துக்களும் உவமைச்சிறப்புக்களும் காமந்தகம் முதலிய வடநூல்களிற் காணப்படாதன. ஆகலின் திருக்குறளிற் பொருட்பாற் செய்யுள்கள் காமந்தகம் முதலிய வடநூல் வழிவந்தனவென்ற பரிமேலழகர் கூற்றுப் பொருந்தாமை அறிக.

இனி காமத்துப்பால் முகவுரையுள், வடநூற் பொருளைத் திருவள்ளுவனுர் களவியல் கற்பியல் எனப் பகுத்துக்கூறினர் என்ற பரிமேலழகர் கூற்று முற்றும் பொருளிலமொழிதல் என்பது கூறவேண்டா. களவியல் கற்பியல் என்னும் பாகுபாடு முன்னமே தொல்காப்பியத்தினும் இறையனுர் அகப்பொருளினும் கண்டது என்பதையும், திருக்குறட்பாக்களுள் பெரும்பான்மைய ஆண்டு உதாரணமாகக் காட்டப்பட்டன என்பதையும் மறந்தார்போலும்,

'கடலன்ன காமம் உழந்து மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்கதில்.'

'செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்குரை.'

'விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.'

'துஞ்சுங்கால் தோண்மேலராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து.'

'காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இக்நோய்.'

'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு'

'தொடிற்சுடி னல்லது காமத்தீப் போல
விடிற்சுட லாற்றுமோ தீ'

'ஒருதலையான் இன்னது காமம் காப்போல
இருதலை யானும் இனிது'

'முகைமொக்குள உள்ளது நாற்றம்போற் பேதை
நகை மொக்குள் உள்ளதொன் றுண்டு'

'இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனைக்
கண்ணிறை நீர்கொண்ட னள்'

'ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று'

'மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.'

இக்காமத்துப்பாற் செய்யுட் கருத்துக்களும் அணிநயங்களும் வட நூலில் இருந்து எடுத்துக்கொண்டாரல்லர் திருவள்ளுவனார்.

அறத்துப்பாலில்,

'அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடை'

'குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்'

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து' என்றாற்போலும்

திருக்குறட்பாக் கருத்துக்களும் அணிநயங்களும் வடநூலில் கண்டு கொண்டன வல்ல. ஆகவே திருக்குறள் என்னும் நூல் வடநூல் ஒன்றன் வழிவந்த நூலுமன்று; தமிழ்நூல் ஒன்றன் வழிநூலும் அன்று; முதனூலேயாம். 'வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூல்' என்றார் தொல்காப்பியனார். திருவள்ளுவனார் வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவன் ஆதலின், அவரால் இயற்றப்பட்ட திருக்குறள் முதனூல் என்பதற்குத் தடையென்னை? இறையனார் இயற்றியருளிய அகப்பொருள் முதனூலே யெனப் பேராசிரியரும் துணிந்து கூறியவாறு அறிக. திருமந்திரமும் அது.

'சமயக்கணக்கர் மதி வழி கூறுது
உலகியல் கூறிப் பொருள் இதுவென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற் கவிபாடிய முக்கட்பெருமான்.'

என்ற கல்லாடத்துச் செய்யுட் பகுதியால் திருக்குறள் முதனூல் என்பதே அந்நூலார்க்கும் கருத்துப்போலும்.

திருக்குறளின் மாண்பு

இனி, திருக்குறளில் வடசொற்கள் பயின்றனவாதலால் வடமொழி தூற்குப் பெருமை காட்டினர்போலும் எனின், ஓராயிரம் தமிழ்ச் சொற்களோடு ஐம்பது வடசொல் விரவத் தொடுப்பது தமிழ் இலக்கண முறையேயாம். திருக்குறளாசிரியர் 'அகரமுதல' என அகரத்தில் தொடங்கி 'கூடிமுயங்கப்பெறின்' என னகரத்தில் முடித்தலால் தமிழ் இலக்கணத்திற்கே முற்றும் பொருந்த இந்நூல் இயற்றப்பட்டது என்பது தெளியப்படும்.

இனித் திருவள்ளுவர் வரலாறு:—

'தெய்வப்புலவன் திருவள்ளுவன்' என்பது 'சிறப்பினுகிய பெயர் நிலைக்கிளவிக்கும்—இயற்பெயர்க்கிளவி முற்படக்கிளவார்' என்னும் சூத்திரத்துச் சேனவரையர் உரையிற் கண்ட உதாரணம். நச்சினர்க் கினியர் உரையிற் கண்டதும் அது; மற்றொரு உதாரணம் 'முனிவன் அகத்தியன்' என்பது. ஆகவே திருவள்ளுவர் என்பது இயற்பெயரே யென்பது சேனவரையர்க்கும், நச்சினர்க்கினியர்க்கும் கருத்தாதல் உணரப்படும். ஆகவே அது குடிப்பெயரன்று என்பது தெளிவாம். சங்கப்புலவருள் பலரும் அந்தாமரைமேல் அயன் திருவள்ளுவர் எனத் தோன்றித் திருக்குறளை இயற்றியருளினர் என்றார். அவருள் சிலர் 'தே' என்றும் 'தேவர்' என்றும் சுட்டினர். நக்கீரர் 'தானே முழுதுணர்ந்தோர்' எனக் குறித்துத் தெய்வப்புலவர் என்பது விளக்கினர்.

பரிமேலழகர்: 'தெய்வப் புலமைத் திருவள்ளுவனர்' என்று குறித்தார்—(உரைப்பாயிரம்).

நச்சினர்க்கினியர்: 'தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனர்' எனக் குறித்தார்—(தொல். சிறப்புப்பாயிரவுரை).

சிவஞானமுனிவர்: இவரைச் சுட்டும்போதெல்லாம் 'தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனர்' என்றே சுட்டுவர்—(சிவ. பேருரை) (சூ—வி).

திருக்குறள் பலவற்றைத் தேவாரத்தில் அமைத்துப் பாடிய சுந்தர மூர்த்திநாயனரால் 'பொய்யடிமையில்லாத புலவர்' என்று பாராட்டப் பட்டவர் இத்திருவள்ளுவரே போலும் என்பர் பெரியோர்.

ஆகவே, முனிவர் அகத்தியனரோடு ஒத்த தெய்வத் தன்மையுடைய புலவர் திருவள்ளுவனர் என்பதும் அகத்தியம் தமிழ் இலக்கணமுத னூல் ஆயவாறுபோலத் திருக்குறளும் தமிழ்மறை முதனூலாம் என் பதும் கண்டுகொள்க.

இவ்வுண்மை தேறமாட்டாத பிற்காலத்தார், திருவள்ளுவர் என்பது குடியான் வந்த பெயர் என்றும், ஆதிபகவன் என்பார் இவர்க்குத் தாயும் தந்தையுமாவர் என்றும், இவர் வள்ளுவர் குடியினரால் வளர்க்கப்பட்டாரென்றும், கபிலர், ஔவையார், வள்ளியம்மையார்,

முதலியோர் இவர் தாய்வயிற்றில் பிறந்தாரென்றும், இவர் பெயர்க்கு ஏற்பக் கதைபுனைந்து வழங்கிவிட்டார். கபிலர், ஔவையார், வாக்கில் இவ்வரலாறுபற்றிச் சிறிதும் புறப்படாமையாலும் வள்ளியம்மையார் திருமணம் மிகச்சேய்மையில் நடந்ததாகத் திருமுருகாற்றுப்படையில் சொல்லப்படுவதாலும் அவையெலலாம் பொய்க்கதை யென்றெழுதிக.

திருவள்ளுவர் திருக்கோயில்

திருவள்ளுவனுர்க்குத் திருக்கோயில் ஒன்று (மயிலாப்பூர்) திருமயிலை யீசன் கோயிலுக்கு வடபால் அமையப்பெற்றுள்ளது. அக்கோயிலின் வடபால் இவர் தெய்வக் கற்புடைமனைவியார் வாசுகி அம்மையாருக்கும் ஒரு கோயில் அமைந்துள்ளது. இவர் மிகப்பழுத்த வயதும் திருநீறு புனைந்த திருமேனியும் சடைமுடியும் தாடியும் உடைய வராய் பொறிவாயில் ஐந்தவித்தார் நிலையில் இருப்பவராக இவரது திரு வுருவம் விளங்குகிறது. இவரது திருமுன் ஓர் பெரிய இருப்பைமரம் கிளைகள் தறிக்கப்பட்டு, செப்புக் கவசத்தால் மூடப்பெற்று நிற்கிறது. இவ்விடத்தில் இவர் யோகநிலையில் அமர்ந்திருந்ததாகச் சொல்லுவர். அம்மையாரும் அந்நிலையில் அமர்ந்துள்ளார். இலிங்கம்தரித்த ஆசாரி யார் ஒருவர், பூசைசெய்து திருநீறு குங்குமம் அளிக்கிறார். இக்கோயி லில் நாயனருக்குத் திருவிழா நடப்பதுண்டு.

தெய்வப்புலவர் கொள்கைகள்

கடவுள், ஆன்மா, இருள்சேர் இருவினை, அவ்வினைப் பயனைத் துய்க்கும் உலகம் ஆகிய 'புத்தேளிர் வாழும் வுலகு' இருள் சேர்ந்த இன்னுவுலகம் முதலியவை உண்டென்பது. கல்லொழுக்கத்தில் நின்ற வர்; திருமகள் உடனுறைதலால் இம்மையின்பம் எய்தி மேல் துறக்க வின்பத்தையும் துய்ப்பர் என்பதையும், தீயொழுக்கத்தினர் செய்யவள் தெளவையைக் காட்டிவிடப்பட்டு இம்மையில் துன்பமெய்தி, மேலும் இருள் சேர்ந்த இன்னுவுலகம் புகுவர் என்பதையும், வற்புறுத்திக் கூறி அறவொழுக்கத்தை கடைப் பிடித்துய்யச் சொல்லுவர்.

ஒரு பிறப்பில் ஒருவன்கற்ற கல்வியும், செய்த யோகப் பயிற்சியும், கட்பினரால் உதவிபுரியப்பெறுதலால் உண்டாகிய நன்றியும், மேல் எழு பிறப்பிலும் தொடர்ந்து பயனளித்தே தீரும், என்னும் துணிவுடையவர்.

'ஒருமைக்கட் டான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து'

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கலாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து'

'எழுமை யெழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு' (குறள்)

திருவள்ளுவர் சமயக்கொள்கை

இவர் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் பரம்பொருளை ஆதிபகவன், இறைவன், வாலறிவன், தனக்குவமையில்லாதான், அறவாழியந்தணன்,

மலர்மிசையேகினான், பொறிவாயில் ஐந்தவித்தான், எண்குணத்தான் எனச்சுட்டினர்.

பிறவிடங்களில் சுட்டிய தெய்வம் முதலியன:—

அடியளந்தான்—தாமரைக் கண்ணன்—எனத்திருமால்—உலகியற்றியான எனப் படைத்தற் கடவுள்—இந்திரன்—வேந்தன்—காமன்—கூற்றம்—திங்கள்—தேவர் தாமரையினுள்—திரு—செய்யவள்—மாமுகடி—தெளவை—அணங்கு—தாக்கணங்கு—பேய்—அலகை—திங்களைப் பாம்பு கோடல்—தாமரைக் கண்ணன் உலகு—புத்தேளிர் வாழுமுலகு—அவியுணவின் ஆன்றோர்—இருள்சேர்ந்த இன்னுலகம்—அளறு.

இவர் கடவுள் வாழ்த்தில் குறித்த தெய்வப் பெயர்களால் இவரைச் சிலர் அருகசமயத்தினர் என்றும் சிலர் புத்தசமயத்தினரென்றும், சிலர் சைவசமயத்தினர்என்றும் சிலர் வைணவசமயத்தினர்என்றும் கூறுவர். உண்மைநோக்கின் இவர் சமயங்கடந்த நிலையினர். அருகனும் புத்தனும் சிவனும்திருமாலும் ஆகிநின்றவன் யாவனே அத்தப்பரம்பொருளே இறைவன் என்னும் கருத்துடையவர். எண்குணத்தான் என்னும் பெயர்ப்பொருள் சைவாகமத்தில் கண்டதெனப் பரிமேலழகர் கூறுதலும், திருநீறு தரித்த திருவுருவமும் திருநீறு வழக்கமுடைய திருக்கோயிலின் நிலையும் விளங்குவதலும், திருவள்ளுவநாயனார் என்னும் சிறப்புப்பெயர் புனையப்பெற்றதலும் இவரைச் சைவர் என்பார் பக்கம் வலியுடைத்து.

நாயனார் துதி—விருத்தம்

திருமுடிமிசையார் மயிர்முடியழகும்
தீர்க்கபுண்டர நுதலழகும்
திரண்மணிபுயந்தைவரு செவியழகும்
திகழ்நெடுந்தாடியினழகும்
அருமுடி செபமாலிகையின் முத்திரைசேர்
அபயநேர் வலக்கையினழகும்
அமிழ்துற தமிழ்மாமறைமுறைவரதம்
அமைதரும் இடக்கையினழகும்
கருமுடியோகப்பட்டையினழகும்
கடிகொள்கீட்கோவணவழகும்
கழல்களிற்றிகிரி வளைவரையழகும்
கமலநல்லாதனத்தழகும்
தருமுடிமுகிழ்ஞெய் மயிலையினிடைமா
தவர்கள் கண்டிரைஞ்சவீற்றிருக்கும்
தழைபுகழ்த் திருவள்ளுவரெனுநாம
சற்குருசரணமே சரணம்

திருக்குறளின் மாண்பு

இப்பாடல் திருவள்ளுவதேவர் கோயிலில் பூசை செய்கிறவரிடத்துள்ள பழைய அச்சுப் பதிப்புப் புத்தகத்தின் முகவுரையில் கண்டது. இதில்கூறப்பட்டபடியேஅக்கோயிலில்காயனர்திருவுருவமைத்துள்ளது.

'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு'

என்னும் குறளில் ஆன்றகுடியிற் பிறத்தல் பண்புடைமை யென்கின்றார். ஆகலின் திருக்குறளாசிரியர் பழிதீர் குடியிற் பிறந்தாரென்றே துணிக.

திருக்குறளில் ஆசிரியர் குறித்த அரியபொருட்காட்சி

யானைப்போர், யானை புலியொடு பொரும்போர், குதிரைப்போர், தகர்ப்போர், யானையை யானையாற் பிணித்தல் முதலியன.

'குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை.'

'பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெருவரும் புலிதாக் குறின்.'

'சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப் பாடேன்றும் களிறு.'

'காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு.'

முன்னைய முற்றும் என்பது நீக்கப்படும்.

'ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து.'

இவற்றுள் யானைப்போரும் தகர்ப்பேரும் சேரமான் பெருமாள் புராணத்துக் கூறப்படுதல் காண்க. யானை புலியொடு பொருதற்கண் ஒருகால் யானை புலியைக்கொல்வதும் உண்டு; புலி யானையைக்கொல்வதும் உண்டு. இதனைப் 'புலி கொல்யானை' யென்றும் வேற்றுமை மயக்க வுதாரண விளக்கத்தானும் உணர்க.

யானையை யானையாற் பிணித்தல்.

'வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.'

யானை முகபடாம்.

'கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
படாஅ முலைமேற் றுகில்.'

குதிரைப்போரில் குதிரை ஆற்றறுத்தல். (இடக்கு)

'அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னர்
தமரிற் றனிமை தலை.'

கவரிமானின் இயல்பு—வாலின் மயிர் பறிக்கப்படின் இறக்கும் என்றது

'மயிர் நீப்பின் வாழாக்கவரிமா அன்னர்
உயிர் நீப்பர் மானம்வரின்.'

திருக்குறளின் மாண்பு

அனிச்சமலர்.

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.'

'நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம் வீழ்பவள்.'

'அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.'

'அனிச்சப் பூங்கால் களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.'

இவ்வனிச்சமலர் இன்னதெனப்பலரும் அறியார். நீர்ப்பூவென் பாரும் புதற்பூவென்பாரும் உளர். அது கோட்டுப் பூவே. வேதாரணியத்தை அடுத்த ஊர் (Railway Station) ஆகிய குறவப்புலம் என்பதன் மேல்பால் ஐயனார்கோயில் தோட்டத்தில் நிறைய உள்ளன; கிளையும் இலையும் சிறுசண்பகம்போல்வது. மாசி பங்குனியில் நீர்க்கடம்புபோல் கொத்துக்கொத்தாக (சரமாக) பூக்கும். மாலையில் மலரும். விடியற்காலத்தில் மலர்கள் பொடியாய் உதிர்ந்து கிடக்கும். காய் முற்றில் வங்குஸ் தான் காய்போல் வலிதாயிருக்கும். மலர்கள் வெண்கடம்புபோல் நறுமணம் உள்ளதாக இருக்கும். செவந்த கோடுகள் படர்ந்த வெள்ளைப் பூக்கள். கோயிலில் சிறுதேருக்கு (சப்பரத்துக்கு) அணியப்படும். அரசர் கோயிலில் அணையில் பரப்பப்படும். இம்மலரை நேரில் பார்த்தறிதல் வேண்டும்.

மரப்பாவையாட்டம் (பொம்மலாட்டம்)

'நாணகத்தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று.'

'இரப்பாரையில்லாத ஈர்ங்கண் மாஞாலம்
மரப்பாவை சென்றுவந்தற்று.'

இதனாலெல்லாம் திருவள்ளுவதேவர் அரசர் அரண்மனையின் இயல்பு நன்குதெரிந்தவர் என்பது புலப்படும். அதுபற்றி அவர் 'வள்ளுவர்' என்பது அரசர்கருமம் பார்ப்போர்க்குப் பெயர் என்று கூறுவர். ஆயினும் அவர் தெய்வப்புலவர் என்பதே துணிபு.

ஆகவே திருக்குறள் ஆகியநூல் ஒன்றனையே கற்றால் எல்லா நூலையும் கற்றாராவர் என்பதும், இந்நூலைப்போல வேறெந்த மொழியினும் ஒரு நூல் இல்லையென்பதும் இவ்வாசிரியர்போல ஒரு புலவர் இல்லை யென்பதும் சங்கத்துச் சான்றோர் துணிபு.

சாற்றிய பல்கலுயும் தப்பா அருமறையும்
போற்றியுரைத்த பொருளெல்லாம் தேற்றவே
முப்பால் மொழிந்த முதற்பாவலர் ஒப்பார்
எப்பாவலரினும்இல்.'

ஆசிரியர் நல்லந்துவனார்.

திருக்குறளின் மாண்பு

வாழி 'விருத்தம்.'

வாழி முத்தமிழ் மாதவன் சரகநீர்ப்பொன்னி
வளவன் மண்டலம் மன்னெயிற் றஞ்சைவாய்க்கரந்தை
வாழியாங்கமை வாணுறை சோலை சூழ்கழக
மண் மாளிகையது வளனுறஉதவிய பெரியார்
வாழி செந்தமிழ்ப் புரவலன் உமாமகேச்சுரன்சொல்
வல்லவன் கந்தசாமி யென்றேத்துறு மமைச்சன்
வாழி வேங்கடாசலன்முதல் வளரிசைப் புலவர்
வாழி மாணவர் போதகாசிரியர் மாமறையோர்.

மு. நா. சோமசுந்தரம்பிள்ளை.

(முற்றும்)

பிற்காலச் சோழரும்
அவர்காலத்துப் புலவரும்

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை
திரு. சோமசுந்தர தேசிகர் அவர்கள்

உலகிலேயுள்ள தேசங்களிலெல்லாம் அந்தந்த நாட்டிலுள்ள பாஷைகளிற் காணப்படும் நூல்களும் அவற்றை யியற்றின ஆசிரியன்மாருடைய சரிதங்களும் செவ்வனே விளக்கப் பட்டுள்ளன. அவ்வாறு விளக்கப்பட்டமையான் மொழியின் வளர்ச்சி வரலாறு முதலியன அறிவது எளிதாகின்றது. இந்த நமது இந்திய நாட்டிலோ சிறந்த பாஷைகள் என்று சொல்லப்படும் வடமொழி, தென் மொழி, யிரண்டிலும் அந்தந்த மொழியில் நூல்கள் இயற்றிய கல்வி மான்களது உண்மைச்சரிதமும் காலமும் இன்னதெனத் திட்டமாக இன்றுவரையில் எழுதப்படவில்லை. வடமொழியில் மிக்க சிறப்பும் பெருமையும் வாய்ந்த காளிதாச மகாகவியை எடுத்துக்கொள்வோம். அவரது காலம், பூர்வோத்தரம், சரிதம் முதலாயவை ஆராய்ச்சிமிக்க இந்தக்காலத்திலும் இதுவெனத்திட்டமாக அறிவதற்கில்லை. தமிழ் மொழியிலும் கல்வியிற் பெரியராய கம்பரது காலமும் உண்மைச் சரிதமும் பலபடக் கூறப்படுகின்றது.

புலவர்பெருமக்களுடைய காலங்கள் இவையெனத் தெரியவேண்டு மாயின் தேசசரித்திரம் நன்கு தெரியவேண்டும். தேசசரித்திரம் செவ்வனே அறிந்தாலன்றி அந்தந்தக் காலங்களில் வாழ்ந்த புலவர்கள் சரிதம் அறிவதும் இயலாத காரியமாகும். ஆகவே அந்தக் குறையை ஒருவாறு நீக்க விரும்பி இங்கு கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை தமிழ்நாடு முழுவதையும் கைக் கொண்டு அரசாண்ட சோழர்களையும் அவர்களுடைய காலத்தில் வாழ்ந்த புலவர்களையும் ஒருவாறு சுட்டுவாம்.

இங்குக் கூறியதே நிலையான செய்தி என்று நான் சொல்ல முன் வரவில்லை. ஈண்டு எழுதப்படும் காரணங்களைச் சீர்தூக்கி ஆராய்ந்து அறிஞர் ஏற்றபெற்றி கொள்ளவேண்டுமென்பதோடு அவ்வாறு கொள் ளத் தகுதியில்லாமைக்குரிய காரணங்களை வெளியிடவேண்டுமென்றும் வேண்டிக்கொள்வேன். அதனோடு விதண்டாவாதமாகப் பேசாது நமக் குரிய இலட்சியம் என்னவென்பதை மனத்திற்கொண்டு ஆராய்தல் வேண்டும் என்றும் வேண்டிக்கொள்வேன். அவ்வாறு வெளியிடப் படின் தமிழ்ப் புலவர்களது காலம் இதுவென வரையறுத்துக் கூறப் பெருஞ் சாதனமாகும்.

பிற்காலச் சோழரும் அவர்காலத்துப் புலவரும்

புலவரைக் குறித்த முன்னூல்கள்

பண்டைக்காலப் புலவரைக் குறித்தும் புரவலரைக் குறித்தும் பல நூல்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றைப்பற்றிய குறிப்புக்களை முதலிற் குறிக்கின்றேன். காலத்தால் முற்பட்டது தமிழ் நாவலர் சரிதை.

தமிழ் நாவலர் சரிதை

இது சங்க காலத்திலிருந்த சில புலவர்களது வரலாற்றோடு 14—15-ம் நூற்றாண்டுவரையில் வாழ்ந்த ஒரு சில புலவர்களது சரிதங்களையும் அவர்களுடைய சமயோசிதப் பாடல்களையும் முன்பின்னாகக் குறிப்பது. ஆயினும் இந்த நூல் கொண்டே ஒரு புலவருடைய சரிதமேனும் முழுமையும் அறிவது அருமை; அஃதன்றி, சில செய்திகள் பிறழ்ச்சிபடவும் காணப்படுகின்றன. இந்த நூல் 1916-ல் கோவை சி. கு. நாராயணசாமி முதலியாராலும், 1921-ம் ஆண்டில் தி. த. கனகசுந்தரம் பிள்ளையாலும் அச்சிடப்பட்டுளது.

தமிழ் புளூடார்க் என்ற பேருடைய நூலொன்று உண்டு. இது சிலோன் கஜட்டீர் எழுதிய ஸைமோன் காசிசிட்டி என்பவரால்

Tamil Plutarch

தமிழ் புளூடார்க்

ஆங்கிலத்தில் எழுதி 1859-ல் பிரசுரிக்கப்பட்டது. இதனில் அகத்தியமுனிவர் முதல் இலக்கண விளக்கம் இயற்றிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர் இறுதியாகப் பல புலவர்களது சரிதங்கள் கன்னபரம்பரையில் வழங்குங் கதைகளோடு கூறப்பட்டுள்ளன. இது டெம்மி 119 பக்கங்கொண்ட சிறு புத்தகம்; இப்பொழுது கிடைப்பது அருமை.

காலஞ்சென்ற சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் வீரசோழியம் பதிப்புரையிலே நூல்களின் காலத்தை, (1) அபேதகாலம், (2) அமர

தமிழ் நூல்களின் காலம்

காலம், (3) இலக்கணகாலம், (4) சமுதாயகாலம், (5) அநாதரகாலம், (6) சமணகாலம், (7) இதிகாசகாலம். (8) ஆதீனகாலம் எனப்பிரித்துக்கொண்டு சில கூறினார். அதுவும் முற்றுப்பெற்றதன்று. இதன் காலம் 1881.

பாவலர் சரித்திர தீபகம். ஆர்னால்டு என்ற சதாசிவம் பிள்ளையால் 1886-ம் ஆண்டு அச்சிடப்பட்டது. இதனில் 300-க்கு மேற்பட்ட பல

பாவலர் சரித்திர தீபகம்

புலவர்களுடைய சரிதங்கள் அகராதி வரிசையாகக் கூறப்பட்டிருக்கின்றன. அஃதன்றி தமிழ்நாட்டில் வழங்கி வரும் பல கதைகளையும் அவற்றினுண்மையை யாராயாது இந்நூல் கூறுகின்றது.

திராவிடப்பிரகாசிகை. கோபாய் சபாபதி நாவலரால் 1889-ல்

திராவிடப் பிரகாசிகை

தாமோதரம் பிள்ளையின் காலவரலாற்றுக்கு மறுப்பாக எழுதப்பட்டது. ஆயினும் காலவரையை யொட்டியுள்ளதொரு நூலன்று.

பிற்காலச் சோழரும் அவர்காலத்துப் புலவரும்

'புலவர்புராணம்' தண்டபாணிசுவாமிகள் என்னும் முருக தாசரால் செய்யுள் வடிவில் இயற்றப்பட்டதொரு பெரிய நூல். ஆசிரியர், காட்டில் வழங்கிய பலகதைகளையும், புதியன சிலவற்றையும் புகுத்திக் கூறியுள்ளார். காலவரையறைகளை நிதானிக்க உதவுவ தொன்றன்று.

புலவர் புராணம்

'தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்பது வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியால் 1902-க்குமுன் விவேகசிந்தாமணி போன்ற பத்திரிகைகளில் ஒரு சில புலவரைக் குறித்து எழுதிய சரிதப்பகுதிகளாகும். அவற்றைத் திரட்டி அவரது மகனார் தமிழ்ப்புலவர் சரித்திரம் எனப் பெயர் தந்து வெளியிட்டுள்ளார். நாம் எடுத்துக்கொண்ட விஷயத்துக்குற்ற பயனென்றும் அளிக்கவல்லதன்று. இது 1934-ல் வெளியிடப்பட்டது.

தமிழ்ப்புலவர் சரித்திரம்

தமிழ் என்ற நூலிலுள்ள சரிதங்கள் திருமணம் செல்வகேசராய முதலியாரால் முதன் முதலாகச் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு எழுதப் பட்டன. பின்னர் அவற்றைத் திரட்டிப் புத்தகமாக 1904-ல் அவர் வெளியிட்டார். அதனில் இணைக்கையாக அகராதி வரிசையில் புலவர் பெயர்களும் அவர்கள் இயற்றிய நூல்களும் அவர் கொடுத்திருக்கின்றார். சில புலவர்களது காலங்களையும் குறித்திருக்கின்றார்.

தமிழ்

'தமிழ் இலக்கியம்' என்ற நூல் M. S. பூர்ணலிங்கம் பிள்ளையால் முதன்முதலில் 1904-ல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. 1929-ம் ஆண்டுக் கடைசியில் அவரே அதனைத் திருத்தி இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுள்ளார். அதனில் (1) சங்க காலம், (2) புத்த ஜயின காலம், (3) மத எழுச்சி காலம், (4) இலக்கிய எழுச்சிகாலம், (5) மட எழுச்சி காலம், (6) ஐரோப்பிய சரித காலம் எனப்பிரித்துக்கொண்டு பல புலவர்களையுங் குறித்து எழுதியுள்ளார். அவர் கூறியுள்ள காலவரையறை பல ஐயங்கட் கிடமானது.

தமிழ் இலக்கியம்

Tamil Literature

'தமிழ் ஸ்டடீஸ்' என்ற ஒரு நூலை எம். சீனிவாச ஐயங்கார் என்பவர் 1914-ம் ஆண்டில் ஆங்கிலத்தில் எழுதிவெளியிட்டார். இதனில் தமிழ் நூல்களைக்குறித்தும் தமிழ்ப் புலவர்களைக் குறித்தும் எழுதியிருக்கின்றார். இந்த நூல் எழுதுவதற்கு இவர் தமிழரைக் குறித்துச் சொல்லிய அறுபது ஆங்கில நூல்களைக் கவனித்துப் படித்துள்ளார். இந்த நூல் 13 உரைப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டுளது. காலக்குறிப்புக்களும் காணப்படுகின்றனவாயினும் அவர் கூறியன யாவும் மாறுபட்ட கொள்கைகளை யுடையன. சரித்திர ஆராய்ச்சிக்குச் சிறிதளவே பயன்படுதற் குரியதாகும்.

தமிழ் ஆராய்ச்சி உரைகள்

Tamil Studies

'சுன்னாகம்' அ. குமரசாமிப்புலவர் தமிழ்ப் புலவர் வரலாறு எனப்பேர் தந்து 1917-ம் ஆண்டில் ஒரு நூல் வெளியிட்டார். இந்த நூல் அகராதி வரிசையில் சில புலவர்களின் சரிதங்களைச் சுருக்கமாகக் கூறுகின்றது. காலக்குறிப்பும் கூறுவர். ஆயினும் அவை உறுதிபெறக் கூறப்பட்டவையன்று.

தமிழ்ப் புலவர் வரலாறு

யாழ்ப்பாணத்தைச் சார்ந்த மட்டக்களப்பு ச. பூபாலபிள்ளை என்பார் 1920-ம் ஆண்டில் தமிழ் வரலாறு எனப்பேர் தந்து ஒருநூல் வெளியிட்டிருக்கின்றார். இந்த நூல் பாடையியல், இலக்கணவியல், இலக்கியவியல், ஒழிபியல் என நான்கு பிரிவினையுடையதாய்ப் பலநூல்களையும் குறிப்பதாகும். இது சீனிவாச பிள்ளை எழுதிய தமிழ் வரலாறு என்பதற்கு மாறாக ஒன்றையும் தெளிவுபடக் கூறுவதன்று. தமிழ் மொழியிலுள்ள நூல்கள் இவையாகுமென ஒருவாறு தெரிந்துகொள்ளச் சாதனமுடையது.

தமிழ் வரலாறு

தஞ்சையில் பிரபல நியாயவாதியாகவிருந்த கே. எஸ். சீனிவாச பிள்ளை தமிழ்வரலாறு எனப் பேர்கொடுத்து 1922-ம் ஆண்டில் ஒரு நூல் வெளியிட்டார். அது முழுவதும் எழுதப்பட்டிருக்குமாயின் தமிழுக்கே ஒரு பேரணிகலமாக இருந்திருக்கும். ஆசிரியர் அந்த நூலைத் தமது முதுமைப்பருவத்தில் எழுதத் தொடங்கியதால் அது முற்றுப்பெறாமற் போயிற்று. அந்த நூல் சோழர் காலத் தொடக்கத்தோடு நின்றுவிட்டது.

தமிழ் வரலாறு

தமிழ் இலக்கியம் என்ற நூல் G. S. துரைசாமிப்பிள்ளையால் எழுதப்பட்டது. அது சங்ககால நூல்களை மட்டுமே குறிப்பது. அதனால் எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு யாதொரு பயனுமில்லை.

தமிழ் இலக்கியம்

தமிழிலக்கியவரலாறு என்ற நூலின் ஆசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை யாவர். இதனை 1932-ல் அவர் வெளியிட்டார். இந்த நூல் ஆறு அதிகாரங்களையுடையது. முதலதிகாரத்தில் தமிழ் மக்கள் வரலாறும், இரண்டாவது அதிகாரத்தில் முச்சங்கங்களின் காலமும், மூன்றாமதிகாரத்தில் முற்கூறிய காலங்களில் வாழ்ந்த புலவர் வரலாறும், நான்காமதிகாரத்தில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலாய நூல்களையும் அவற்றில் காணப்படும் புலவர், புரவலர் முதல், 18-ம் நூற்றாண்டு முடிய இருந்த புலவர்கள் பலரது வரலாறும், ஐந்தாமதிகாரத்தில் 19-ம் நூற்றாண்டு முதல் நாளிதுவரையுள்ள புலவர்களுள் தமக்கு மேலானவர் என்று தோற்றியவர்களைக் குறிக்கும் வரலாறுகளையும் எழுதியிருக்கின்றார். ஆயினும் நாம் எடுத்துக்கொண்ட உரைக்கு வேண்டுவன இதனிற் காணப்படவில்லை.

தமிழ் இலக்கிய வரலாறு

தமிழ் இலக்கிய ஆராய்ச்சி என்ற நூலை 1930-ம் ஆண்டில் ஆங்கிலத்தில் Studies in Tamil Literature என்று பேரிட்டு இராமச்சந்திர

தீக்ஷிதர் எழுதி வெளியிட்டார். அதனில் சில சங்கப் புலவர்களையும் திருஞான சம்பந்தர், அப்பர், நம்மாழ்வார், திருமங்கை மன்னன் போன்ற சில பெரியோர் சரிதங்களையும் குறிப்பிட்டு விட்டு, காலவியல்புகளைப்பற்றி மிகுதியும் விரித்துள்ளார்.

தமிழ் இலக்கிய ஆராய்ச்சி

தமிழகம் என்ற நூலின் ஆசிரியர் கந்தையா பிள்ளை என்பாராவர். இது 1935-ல் சென்னையினின்றும் வெளிவந்தது. இதனாசிரியர் முன்னோர் கூறியவற்றையே பெரிதும் பின்பற்றி எழுதியிருக்கின்றார். நமது விஷயத்துக்கு உதவிசெய்யக்கூடியதன்று. ஆகவே இதுகாறும் கூறியனகொண்டு உறுதியான வழியில் புலவர்களது சரிதங்களும், காலங்களும், நூல்களும் தெரிவதற்கில்லை என்பது இனிது பெறப்படும். எனினும் நான் எடுத்துக்கொண்ட விஷயத்திற் புகுமுன், அக்காலத்துக்கு முற்பட்ட இலக்கண இலக்கியங்களைக் குறித்து மிகச் சுருக்கமாக வரைவேன்[1].

தமிழகம்

பிற்காலச்சோழர் காலத்துக்கு முந்திய நூல்களும் புலவர்களும்

சங்க இலக்கியங்களென்று கூறப்படும் கற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற எட்டுத்தொகையும், திருமுருகாற்றுப்படை முதல் மலைபடுகடாம் இறுவாய பத்துப்பாட்டும், நான்கடியான் பெரும்பாலும் இயன்றுள்ள நான்மணிக்கடிகை முதலாய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும், திருக்குறள், நாகநீர் யாத்திரை ஆசிரியமாலை போன்ற நூல்களும் சங்ககாலத்தைச் சேர்ந்தவை. இவற்றைப் பாடிய புலவரும் பல்லோராவர். தொல்காப்பியமே அக்காலத்து இலக்கணமாகும்.

சங்ககாலத்தின் பின்னர் பிற்காலச்சோழர் காலத்துக்கு முன்னதாய இடைப்பட்ட காலம் பல்லவர் காலமாகும். இத்தக்காலத்திலே தேவாரம் பாடிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் போன்ற நாயன்மார்களும், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் போன்ற ஆழ்வார்களும் வாழ்ந்து சமய நூல்களை வெளியிட்டனர். மாணிக்கவாசக சுவாமிகள் வாழ்ந்த காலமும் இவர்களுக்குப் பிற்பட்டதுவே. அவர் இயற்றியன திருவாசகமும், திருக்கோவையாருமாகும். புறப்பொருள் வெண்பாமாலை என்ற இலக்கண நூல் ஐயனரிதனாரால் இயற்றப்பட்டது. இது எட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்கலாமென்பது சீனிவாச பிள்ளையிடைய கருத்து. களவியலுரையும் இந்த நடுக்காலப்பகுதியுள் எழுதப்பட்டதாகும். இதனில் பாண்டிக்கோவை என்றொரு நூல் உதாரண

---

1. இக்கட்டுரை எழுதியபின்னர் சென்னையுனிவர்ஸிட்டியினின்றும் Tamil Literature under the later Cholas என்ற சிறு நூலும், சோழர் என்ற புத்தகத்தில் Literature under the Cholas என ஒரு அதிகாரமும் வெளிப்பட்டிருக்கின்றன. அண்மையில் திரு. இராகவையங்கார் சாஸனத் தமிழ்க் கவிசரிதம் என்றொரு நூலும் வெளியிட்டிருக்கின்றனர்.

மாகக் குறிப்பிடப்படுவதிலிருந்து இது இக்தக் கல்லப்பகுதியைச் சார்ந்ததே என்பது உறுதிப்படும். சிலப்பதிகாரம் இடைக் காலத்தைச் சார்ந்தநூலென்று சிலரும் சங்ககாலத்து நூலென்று பலரும் வாதிப்பர். அஃதெவ்வாறாயினும் இந்த நூல் ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதன்று. மணிமேகலையோ சிலப்பதிகாரத்துக்குப்பின் எழுந்த நூலாகும். அதனிலுள்ள நியாயம் முதலியவற்றின் காலம் ஆராய்ச்சியிலிருக்கிறது. அது வெளிப்போக்தபின் அதனுண்மை காணலாம். ஆயினும் அது ஆறாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகாது. இந்தக் காலத்தைச் சார்ந்ததே கொங்குவேண் மாக்கதையும், அகப்பொருட் பகுதியான களவியலைக் குறித்துக் காணப்படும் சிதைந்த நூலும் இக்காலத்ததே. இந்த நூலின் பெயர் தெரியாமையாலே இதனை வெளியிட்டார் இதற்குக் களவியற்காரிகை என்று பெயர் தந்துளார்.

பிற்காலச் சோழரும் புலவர்களும்

இனி, பிற்காலச் சோழர் என்பார் யாவரென ஆராய்வோம். இவர்கள் பல்லவ அரசர்கட்குப்பின் தமிழ் காட்டிலே ஆண்ட அரசர்களாவர். இந்தச் சோழர்கள் சங்ககாலத்திலாண்ட கரிகாலன், கலங்கின்னி, கிள்ளிவளவன் பரம்பரையினர் போலும். இவர்கள் கடுக்காலப்பகுதியில் ஆண்டதால் இவர்களை மத்தியகாலச் சோழரென்று கூறுவது மரபு. இவர்கள் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டுவரையில் தமிழ் காட்டையாண்டவர்களாவர். கிள்ளிவளவன், கோச்செங்கணான் இவர்களுக்குப்பின்னர் சோழவரசகுடும்பத்தினர் பலர் வாழ்ந்திருக்கக் கூடுமாயினும், அவர்கள் பெயர்களோ, வமிசாவளியோ நமக்குக் கிடைத்தில ; நாம் முதன் முதலாகக் கேட்கும் சோழவரசனுடைய பெயர் விஜயாலயன் என்பதாகும். விஜயாலயன் எனப்பெயரிய இச்சோழவரசன் கி. பி. 850 முதல் 880 வரையில் அரசாண்டதாகக்கூறுவர். இவனுடைய பெயருடையதான கல்வெட்டுக்கள் ஒன்றேனும் இதுவரையிற் காணப்படவில்லை. ஆயினும் பரகேசரி என்ற பட்டத்தோடு கூடிய கல்வெட்டுக்கள் பல பலவிடங்களிற் காணப்படுகின்றன.

இவனுடைய காலத்திலேதான் மணிவாசகப் பெருமான் இருந்திருக்கவேண்டுமென்பது பலருடையதுணிபு. வாதவூரடிகள் வரகுணபாண்டியனைப் பலபடியாகப் பாராட்டிக் கூறியிருத்தலால் வாதவூரடிகள் அந்த வரகுணபாண்டியனுடைய காலத்தவராவார் என முடிவுகட்டியிருக்கின்றனர்[1]. இந்த வரகுணபாண்டியன் கி. பி. 862—863-ல் அரசுகட்டிலேறினனென்பர் சரித்திர ஆசிரியர். ஆகவே நமது சுவாமிகள் விஜயாலயன் காலத்தில் இருந்தவராவார் என்பது பெறப்படும்.

மாணிக்கவாசகசுவாமிகள் இயற்றியன திருவாசகமும் திருக்கோவையாரும் ; சிலர் திருக்கோவையார் சுவாமிகள் இயற்றியதன்று

1. சீனிவாசபிள்ளையின் தமிழ்வரலாறு, பக்கம் 103, 113.

என்பர். ஆனால் மாணிக்கவாசகரது படிமங்கள் சிலவற்றின் கைகளுள் ஒன்றில் ஏடும், ஒன்றில் 'திருவளர் தாமரை காவிகளீசர்' என்று இரு வரிகளில் எழுதிய எழுத்தும் காணப்படுகின்றன. அந்தப்படிமங்களைப் பரிசோதித்தோர் அவை 10, 11-ம் நூற்றாண்டில் வார்க்கப்பட்டிருக்க வேண்டுமென்று கருதுகின்றனர்[1]. ஆகவே திருச்சிற்றம்பலக் கோவையார் மாணிக்கவாசகர் பாடியதே என்ற கொள்கை வெகு பழமையுடையதென்பது விளங்கும்.

விஜயாலனுக்குப் பின்னர் ஆதித்தன் என்பவன் சோழவரசனானான். இவன் கி. பி. 880-ல் பட்டத்துக்கு வந்து இருபத்தேழு ஆண்டுகள் அரசாட்சி செய்தான். ஆதித்தன் என்ற பேரோடு பின்னருஞ் சில சோழவரசர்களின் பெயர் காணப்படுதலினாலே இவனை முதலாம் ஆதித்தனென்பர் சரித்திர ஆசிரியர். இவன் இராஜகேசரி என்ற பட்டந்தரித்தவன். இவனுடைய காலத்திலேதான் தமிழ் நாட்டில் சோழவரசு வேரூன்ற ஆரம்பித்தது. இவனே பல்லவருடைய ஆதிக்கத்தை வேரறக் களைந்தவன்[2].

இவனுடைய காலத்திலேயே கம்பர் இருந்திருக்கவேண்டும். கம்பரை யாதரித்த சடையவள்ளல் வாழ்ந்தகாலமும் இதுவேயாகும். சடையனிடம் உக்கல் கிராமத்தார் ஆயிரக்காடி நெல் கடன்வாங்கியதாகக் கல்வெட்டுக்கள்[3] காணப்படுகின்றன. அப்போது அரசாண்டவன் கம்பவர்மன் என்ற பல்லவ அரசன். இவனுடைய காலமும் கி. பி. 900-க்கு முற்பட்டதே.

இதனையன்றி, கம்பர் தாம்பாடிய இராமாயணத்துள் பத்திடங்களில் சடையவள்ளலைப் புகழ்ந்து கூறியிருக்க, ஓரிடத்திலாவது சோழவரசன் பெயரைக் கூறவில்லை. சோழவரசனை உவமை முகத்தான் கூறவந்த இடத்திலுங்கூட பெயரைக்கூறாது பொதுப்படக் கூறிச்சென்றார்.

அப்பாக்கள் இரண்டையும் கீழே தருகின்றேன்.

(1) புவிபுகழ் சென்னிபே ரமலன் றோள்புகழ்
கவிகடம் மனையெனக் கனக ராசியுஞ்
சவியுடைத் தரசுமென் சாந்தும் மாலையு
மவிரிழைக் குப்பையு மளவி லாதது.
(கிட்கிந்தை. பிலநீங்கு ௩௫.)

(2) சென்னிநாட் டெரியல்வீரன் றியாகமா விநோதன்
றெய்வப்
பொன்னிநாட்டுவமை வைப்பைப் புலன்கொள
நோக்கிப்போனான். (யுத்த. மருத்துமலை.)

---

1. Report of the Arch. Society of South India, 1935.
2. M. E. R. சோழவமிச சரித்திரச் சுருக்கம்.
3. S. I. I. iii. Nos. 5 and 8.

பின்னும், விடைகொடுத்தபடலத்திலே வாழ்த்துக் கூறிய விடத்தும் சடையவள்ளலைக் கூறினரேயன்றி சோழவரசனைக் கூறினரில்லை.

அச்செய்யுளைக் காண்க :—

மறையவர் வாழி வேதமனுநெறி வாழி கன்னான்
முறைசெயு மரசர் திங்கண் மும்மழை வாழி மெய்ம்மை
யிறையவனிராமன் வாழி யிக்கதை கேட்போர் வாழி
யறைபுகழ்ச் சயங்கொண்டான் வாழி யரும்புகழ்ஞமன் வாழி

ஆகவே கம்பர் அரசனது பெயரைக்கூறுதது கொண்டு அக்காலத்திலே தருதிப்பட கூறக்கூடிய அரசனொருவனுமில்லை யென்றே கொள்ளவேண்டியிருக்கிறது. இதுவன்றி வீரசொழிய ஏட்டுப்பிரதிகளிலே கம்பனரசரிடைப் பெருமையுமுண்டு என்று காணப்படும் வாக்கியத்தாலும் 'எண்ணிய சாகாத்தம் எண்ணூற்றேழின்மேற் சடையன் வாழ்வு' என்ற செய்யுளாலும் இச்செய்தி உறுதிப்படும்.

கம்பர் இயற்றிய வேறு நூல்கள் சரசுவதியந்தாதி, சடகோபரந்தாதி, ஏரெழுபது, திருக்கை வழக்கம் முதலியன. பின்சொன்ன இரண்டும் அவர் இயற்றியனவல்ல எனக் கூறுவாருமுண்டு. கம்பர் காலத்தில் தாதன் என்றொரு புலவன் இருந்ததாகத் தமிழ் நாவலர் சரிதையால் தெரிகிறது[1]. இந்தத் தாதன் என்ற புலவனும் வாணியன் தாதனும் வேறு எனத் தோற்றுகிறது.

ஆதித்தனுக்குப்பின் அரசுகட்டிலேறியவன் அவனுடைய மகனான பராந்தகன் ஆவான். இவன் கி. பி. 907 முதல் 947 வரை 41 யாண்டு அரசாண்டான். சிலர் இவன் நாற்பத்தியாறு ஆண்டு அரசாண்டானெனக் கூறுவர். அதற்குப்போதிய ஆதாரமில்லை[2]. இவனுக்குச் சங்கிராம ராகவன், உத்தமன், வீரநாராயணன், வீரசோழன், குலோத்துங்கன் எனப்பல பேர்களுண்டு. இவன் பாண்டிய நாட்டை வென்றதால், தன்னை மதுரை கொண்ட கோபரகேசரி என்று கூறிக்கொள்வான்.

பராந்தகன் I
907—947

இவனுடைய காலத்திலேதான் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்ற யாப்பிலக்கண நூல்களை யியற்றிய அமிதசாகரர் வாழ்ந்தவராவார். இவருடைய மதம் சைனம். இவர் பாடிய காரிகையின் பொருட்டுக் களத்தூர் என்ற ஊர் முட்டூற்றுக விடப்பட்டது. அதனைப்பிற்காலத்தார் காரிகைக்குளத்தூர்[3] என்றே வழங்குவர். இந்த ஊர் செங்கற்பட்டு ஜில்லாவில் ஆமூர்க்கோட்டத்துச் சிறுகுன்ற நாட்டைச்சார்ந்தது.

வீரநாராயணச்சேரி என்னும் மன்னர்கோயிலில் ஸ்ரீமக்காதமுனிகள் என்ற வைணவப்பெரியார் வாழ்ந்த காலமும் மிதுவேயாகும்.

---

1. தமிழ் நாவலர் சரிதை, பக். 36. 2. M. E. R. 1926, 99.
3. M. E. R. 1924, 103.

இவர் காலாயிரத் திவ்யப் பிரபந்தத்தை வெளிப்படுத்தியதாகக் குருபரம் பரை கூறும். இந்தக் காலத்திலேயே திருவிசைப்பா பாடிய ஆசிரியன் மாருள் சிலர் வாழ்ந்திருத்தல் கூடும்.

மதுரைகொண்ட கோபரகேசரிவன்மரான பராந்தகனுக்குப்பின் அவனுடைய மூத்த மகனை இராஜாதித்தியன் அரசு கட்டிலேறினன். ஆயினும் அச்சமயம் இரட்ட அரசனை மூன்றாம் கன்னரதேவன் சோழநாட்டினுட் புகவே இருவருக்கும் தக்கோலம் என்ற இடத்தில் போர் நடந்தது. அந்தப் போரில் சோழவரசன் வென்றுளையினும் பூதுகன் என்பவனால் வஞ்சனை யாகக் கொல்லப்பட்டான்[1]. உடனே இராஜாதித்தியனுடைய இளவ லான கண்டாதித்தியதேவர் அரசு கட்டிலேறினர். இவர் எட் டாண்டு அரசாண்டார்[2]. எனினும் சோழநாட்டைச் சார்ந்த தொண் டைமண்டலம் கன்னரதேவன் வசமாயிற்று. இவர் சிவபத்தியில் ஈடு பட்டிருந்ததால் இராச்சிய விஷயங்களை கன்கு கவனித்ததாகத் தோன்ற வில்லை. இவர் பாடிய செய்யுள்கள் திருவிசைப்பாவிற் சேரும் பெருமை வாய்ந்தனவாயின.

கண்டாதித்தர் பாண்டியனோடு போருக்குச் சென்று உயிர் துறந் தார். இளமையிலே அவருடைய மூத்தமனைவி யிறந்துபடவே, மழவரையன் மகளார் பராந்தகன்பிராட்டியாரை மணந்துகொண்டார். தேவர் விண்ணுட்டுக்கேகுங்கால் இவருடைய பிள்ளை பச்சிளங் குழந்தை. அதனாலே கண்டாதித்தருடைய தம்பி அரிஞ்சயன் அரசரானார். ஆயினும் அவர் அந்த ஆண்டிலேயே இறந்துபட்டார். அப்பொழுது அரிஞ்செயனுடைய மகனை சுந்தரசோழன் அரசனானன். இவனை இரண்டாம் பராந்தகன் என்பர் சரித்திரக்காரர்.

இவனுடைய காலத்திலே புலவர் பலர் வாழ்ந்தனர் என்று தெரி கிறது. ஒருவர் 'மேதகுசுத்திபுரி மன்னர் மன்னராம் சுந்தரச்சோழர் வண்மையும் வனப்புந் திண்மையு முலகிற் சிறந்து வாழ்கெனவே' என்று பாடுகின்றார்[3]. மற்றொருவர் 'இந்திரனேறக்கரியளித்தார்..... .....சுந்தரச் சோழரை யாவரே யொப்பாரித்தொன்னிலத்தே' என்று பாடுகின்றார்[3]. மாதவபட்டர் முதலான வடமொழி வாணரும்[4] இவனுடைய காலத்திலே வாழ்ந்தவராவார்.

சுந்தர சோழனை இரண்டாம் பராந்தகன் சிவபதமடையவே, இவ னுடைய மகனை ஆதித்தன் அரசனானன். இவனை ஆதித்திய கரிகாலன் என்றுங்கூறுவர். இவனைக் கி. பி. 970-ல் சில துரோகிகள் வஞ்சனையாகக் கொன்றுவிட்டனர். இவன் பொன்னம்பலமான சிதம் பரத்திலே உயிர் நீத்தான்.

கண்டாதித்தர் கி.பி. 947-954

---

1. Epigraphia Indica xii, 51. 2. M. E. R. 1920; தொகுதி; 25.
3. வீரசோழியம். 4. அன்பில் செப்பேடுகள், செந்தமிழ்த்தொகுதி 25.

இவன் பொன்னம்பலமான பொன்மாளிகையிலே இறந்ததால் இவனைப் பொன்மாளிகைத்துஞ்சியதேவர் என்பர்[1]. இவனது தகப்பனான இரண்டாம் பராந்தக தேவனைச் சிலர் பொன்மாளிகைத்துஞ்சினதேவர் என்று கூறுப. அது உண்மைக்கும் கல்வெட்டுக்கும் மாறான செய்தி.

இவனுடைய காலத்திலேதான் நம்பியாண்டார் நம்பி வாழ்ந்தார்[2]. அவர் மூவர் முதலிகள் பாடிய தேவாரப்பதிகங்களைக் கண்டு பிடித்து, அவற்றை 7 திருமுறைகளாக வகுத்தார். இந்தப் பெரியார் ஆதித்த கரிகாலனது இளவலான இராஜராஜனது காலத்தில் வாழ்ந்ததாகக் கூறுவர். அதற்குப்போதிய ஆதாரமின்மை நம்பியாண்டார் நம்பி சரிதத்தில் காட்டப்பட்டது. நம்பிகள் இயற்றிய நூல்களாவன :— (1) விநாயகர் திருவிரட்டை மணி மாலை, (2) கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம், (3) திருத்தொண்டர் திருவந்தாதி, (4) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, (5) திருச்சண்பை விருத்தம், (6) திருமும்மணிக்கோவை, (7) திருவுலாமாலை, (8) திருக்கலம்பகம், (9) திருத்தொகை, (10) திருநாவுக்கரசர் திரு ஏகாதசமாலை முதலியனவாம். இவருடைய சரித்திர விரிவை நம்பியாண்டார் நம்பி சரிதம், சைவசிகாமணிகள் சரிதம், திருமுறை கண்ட வரலாறு முதலிய நூல்களிற் காண்க.

ஆதித்த கரிகாலனுக்குப் பின் கண்டராதித்த தேவரது மகனான மதுராந்தக உத்தம சோழன் கி. பி. 970-ல் அரசு கட்டிலேறினான். இவன் பல சிவாலயங்களைக் கட்டினான். இவனுடைய காலத்தில் பல வடமொழி தென்மொழிவாணர் இருந்தனர்.

உத்தம சோழனுக்குப்பின் கி. பி. 985-ல் அரசு கட்டிலேறியவன் உத்தம சோழனுடைய சிற்றப்பன் பேரனும் இரண்டாம் பராந்தகனுடைய இரண்டாவது மகனும் ஆதித்த கரிகாலனுடைய இளவலுமான இராஜராஜனாவன். இவனது இயற் பெயர் அருண்மொழி யென்பர். இவன் சென்னை இராஜதானியில் பெரும் பகுதியைத் தன்கீழடக்கியாண்டுவந்தான். தஞ்சையைத் தலைநகராகச் செய்தான். இப்பொழுதும் நாம் அதிசயத்தோடு காணும் பிரகதீசுரம் என்னும் பெரியாவுடையார் கோயிலைக்கட்டி வேண்டும் நிவந்தங்களை ஏற்படுத்தினான். இவன் கி. பி. 1012 வரை மிக்க கீர்த்தியோடு அரசாட்சி செய்தான். இவனைக்குறித்து இராஜராஜேசுர நாடகமும் ராஜராஜவிஜயமும் எழுதப்பட்டன.

இவனுடைய காலத்திலும் இவனுக்குப்பின்னும் கருவூர்த்தேவர் வாழ்ந்தவர். இவர் இயற்றியன திருவிசைப்பா என்ற தொகுதியுள் சேர்க்கப்பட்டுள்ளன. இவருடைய சரிதம் சுப்பிரமணிய முதலியாரால் வரையப்பட்டுளது. இந்தப் பத்தாம் நூற்றாண்டில் பட்டினத்தடிகள்

1. Q. J. M. S. XX, 23—25.
2. Indian Historical Quarterly, iv, PP. 447 & Sec.

என்ற திருவெண்காடர் வாழ்ந்திருக்கவேண்டுமென்பது பலரது கருத்து[1]. இவர் பாடிய நூல்கள் (1) கோயில் கான்மணி மாலை, (2) திருக்கழுமல மும்மணிக்கோவை, (3) திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, (4) திருவேகம்பமுடையார் திருவந்தாதி, (5) திருவொற்றியூர் ஒருபாஒருபஃது என்பன. பட்டணத்துப்பிள்ளையார் பாடற் றிரட்டு என வழங்கும் பாடற்றொகுதி எளிய நடையில் இயற்றப்பட்டிருப்பது கொண்டும், பதினோராந் திருமுறையில் கோக்கப்பட்டவைகளோடு ஒத்ததன்மையில்லாமைகொண்டும் இந்த நூற்றிரட்டு அவரது அன்று என்பது பெரியோரது கருத்து. பட்டினத்தடிகளைக்குறித்து (1) பட்டணத்துப்பிள்ளையார் புராணம், (2) திருவெண்காட்டடிகள் சரித்திரம், (3) புலவர் புராணம், (4) தமிழ்ப் பெருமக்கள் வரலாறு என்ற நூல்களிற் பரக்கக்காணலாம்.

திருமந்திரம் என்ற தத்துவநூலை யியற்றிய பெரியாரும் இக்தக் காலத்திலேதான் வாழ்ந்திருக்கவேண்டுமென்பது பலரது கருத்து. இந்த நூலை அறுபான்மும்மை நாயன்மாருள் ஒருவரான திருமூலர் இயற்றியதாக வழக்கு உண்டு. ஆசிரியர் சேக்கிழாரடிகளும் திருமூலர் திருமந்திரமாலை இயற்றினரென்றே கூறுவர்[2]. ஆகவே அவரது காலத்திலேயே இந்த மரபுச்செய்தி உண்டென்பது உறுதிப்படுகின்றது.

தொல்காப்பியம் முழுவதற்கும் உரையெழுதிய இளம்பூரண அடிகளும் இந்த நூற்றாண்டினராகவிருத்தல் வேண்டும் என்பது பலரது துணிபு[3]. இவர் மதத்தராற் சைனர். துறவொழுக்கமுடையவர். தொல்காப்பியத்திற்குக் கண்ட உரைகளில் தலையாயது இவருடையதே யாம். அதனாலேயே இவரை உரையாசிரியர் என்றே பிற உரையாசிரியன்மார் கூறுவர். இவருரை முழுவதும் அச்சாகியிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இராஜராஜனுக்குப்பின் சோழசக்கரவர்த்தியாக ஆண்டவன் ராஜராஜனுடைய மகனான இராஜேந்திர சோழதேவன். இவன் கி. பி. 1012-ல் முடிசூடி 1032 வரையிலாண்டான். இவன் இந்தியாவின் பெரும்பகுதியை அடிப்படுத்தி யரசாண்டதோடு அலைகடலிற் பலகலஞ் செலுத்திச் சீயம், மலேயா, சாவகம் முதலிய தீவுகளைத் தன் வசப்படுத்தியிருந்தான். சீனசக்கரவர்த்திக்குத் தூது ஒன்றும் அனுப்பினன்[4]. அங்கெல்லாம் தமிழ் வழங்கிவந்தது. தேவாரம், திவ்யப் பிரபந்தம் முதலாயினவும் வழங்கலாயின. சீய நாட்டில் அந்நாட்டிறை முடிசூடும்போது பல தேவாரப்பாடல்களும் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களும் இன்றும் ஓதப்படுகின்றன[5]. இவனுடைய காலத்திலேதான்

---

1. தமிழ்ப் பெருமக்கள் வரலாறு.
2. பெரியபுராணம், திருமூல. 26.
3. செந்தமிழ் iii.
4. Journal Asiatique.
5. Hindu, Ed. Supplement, 3rd July 1929.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்ற மூவர் முதலிகளுடைய படிமங்களும் 'தத்தாகமரேகாண்' என்ற மெய்ப்பொருணாயனர் படிமமும் தஞ்சையிராசராசேச்சரத்தில் வைக்கப்பட்டன[1]. இவனே முதன் முதலாகப் பெரியபுராணத்துக்குப் பதிகமான திருத்தொண்டத்தொகையைக் கோயில்களில் ஓத ஏற்பாடு செய்தவன்[2]. இவனுக்குப் பண்டித சோழன், குலோத்துங்கன் போன்ற பல பெயர்களுண்டு.

தண்டியார் என்பார் இத்தவரசனுடைய அவையிலே வீற்றிருந்தவர் என்பது நிலைபெறுஞ்செய்தி, தண்டியார் காவ்யாதர்சம் என்னும் வடமொழி அலங்கார நூலைப் பின்பற்றித் தண்டியலங்கார மெனப் பெயர்தந்து அலங்கார நூலொன்று இயற்றியுள்ளார். இந்த நூலாசிரியருடைய பெயர் தண்டியார் என்பது, வீரசோழியவுரைகாரர் 'இச் செய்யுள் தண்டியாரிலக்கியப்படி பொருளெனக்கொள்க', 'இதனைத் தண்டியார் சமாசமென்பர்', 'இதனைத் தண்டியார் அதிசயவுவமையென்பர்' என்பது போன்ற சொற்றொடர்களால் விளக்குகின்றார். இந்த அலங்கார நூல் இயற்றிய தண்டியார் கல்வியிற் பெரியராய கம்பரது தனயன் அம்பிகாபதியின் பின்னை என்பது கர்ணபரம்பரைச்செய்தி. அது காலத்தோடும் ஒக்கும்.

ஆயினும் இவ்வலங்கார நூற்கண்ணே

* * * *

'திருந்திய மணிமுடிச் செம்பிய னவயத்து
அரும்பொருள் யாப்பின் வகுத்தனன்
ஆடக மன்றத்து நாடக நவிற்றும்
வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன்
பூவிரி தண்பொழிற் காவிரி நாட்டு
வம்பவிழ் தெரிய லம்பிகாபதி
மேவருந் தவத்தினிற் பயந்த
தாவருஞ் சீர்த்தித் தண்டியென்பவனே'

என்ற பாயிரச் செய்யுள் காணப்படுகின்றது. இதனால் ஆடகமன்றமான சிதம்பரத்தின்கண்ணே எழுந்தருளியிருக்கும் சிவபிரான் திருமுன்னர் நடிக்கும் நடிகட்கு உதவிசெய்தற்றொழிலையுடையான், அம்பிகாபதியின் புதல்வன் தண்டி என்பது பெறுகின்றமாயினும் கம்பருடைய பேரனே இவர் என்பது ஆராய்தற்குரியது. கம்பர் உவச்சர் குலத்தினரென்பதும் கவனிக்கத் தக்கது.

இனி, தண்டியலங்காரமென்னும் அலங்காரநூலும் உதாரணமும் இவரே இயற்றியவராவார். இது பிற்காலத்து வந்த புலவரும் ஒப்புக்கொண்ட செய்தி. சுப்பிரமணிய தீக்கிதர் தமது பிரயோக விவேக

---

1. S. I. I. ii. பக். 155. இராஜராஜனுடைய 29-ம் ஆண்டில் படிமங்கள் வைக்கப்பட்டனவாயினும் இராஜேந்திரதேவனே அவற்றிற்குக் காரணனுவான்.

2. S. I. I. iv. 28.

நூலிலே 'தண்டியாசிரியர் மூலோதாரணமுங் காட்டினுற்போல யாமும் உரை யெழுதியதல்லது மூலோதாரணமுங் காட்டினும்' என்றெழுது வதுகொண்டு தெளியலாம். அலங்கார நூலிலுள்ள உதாரணங் களுட்பல அக்காலத்திருந்த சோழ அரசனைக் குறித்தவை; அவற்றி லொன்று அவன் கங்கை கொண்ட சோழபுரத்திருந்து அரசு செய் தமையைக் குறிக்கும். கங்கைகொண்ட சோழபுரத்தைக் கட்டுவித்த சோழன் இராசேந்திர சோழதேவன் என்பது மலிவிளக்கு.

இஃதன்றி வீரசோழிய உரையிலே அலங்காரப் படலத்திற் காணப்படும் உதாரணங்களுட்பல தண்டியலங்காரத்துக் காணப்படு பவை. வீரசோழிய நூலாசிரியரும் தான் 'தரைமலி மாளிடர் தம் மலங்காரங்க டண்டிசொன்ன கரைமலி நூலின்படியே யுரைப்பன்' என்று கூறுகிறார். ஆகவே வீரசோழியம் இயற்றுவதற்கு முன்னரே அவை இயற்றப்பட்டிருந்தாலெழிய அவை வீரசோழியத்திற் புகுந் திரா. இக்காரணங்களால் தண்டியார் காலம் இராசேந்திர சோழ தேவன் காலமென்பது இனிது பெறப்படும்.

இந்தக் காலத்திலேயே இருந்தவராவார் சேக்கிழாரடிகளும். இவர் சுட்டுகின்ற சென்னி அகபாயன் குலோத்துங்கன் என்ற பெயர் இந்த அரசனுக்கே உரியது என்பது தண்டியலங்கார நூலே ஊன்றி நோக்கு வார்க்குப் புலனும். சேக்கிழார்பெருமான் இரண்டாங்குலோத்துங்கன் காலத்தவரென்று சாதிப்பாருமுண்டு. அதனைப்பற்றி அங்கு கூறப் படும். சேக்கிழாரடிகள் இயற்றியது திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிய பெரிய புராணமாகும். நந்தநாராயணன்[1], நாராயணபண்டிதன்[2] முதலிய வடமொழி வாணரும் இந்தக் காலத்திலே வாழ்ந்தவராவர். இவர்களையன்றி இந்த அரசனுடைய காலத்திலே பல வடமொழி வாணரும் இருந்தனர். ஆனைமங்கலம் செப்பேடு, திருவாலங்காட்டுச் செப்பேடு இவைகளிற் காணப்படும் ஆசிரியர்களால் இது இனிது பெறப்படும்.

இராஜேந்திர சோழதேவனுக்குப்பின் சோழ சிங்காதனமேறிய வன் இராஜாதிராஜன். இவன் கி. பி. 1044 முதல் 1052 வரையில் அரசாண்டான். இவனே கம்பிலியில் சயத்தம்பம் நட்டவன். இவன் 'கன்னடகர் விடுகடகரி புரளத் தன்னுடையிற் றமிழ்ப்பரணி கொண் டான்[3].' இவனுடைய வெற்றி குறித்துப் பரணி பாடிய புலவரின்பெயர் விளங்கவில்லை.

இராஜாதிராஜனுக்குப் பிறகு அவனது இளவலான இராஜேந் திரன் சோழ சக்கரவர்த்தியானான். இவன் கி. பி. 1052 முதல் 1061 வரை அரசாண்டான். இவன் துங்கபத்திரையாற்றின் கரையிலுள்ள கொப்பம் என்ற ஊரில் குந்தளரைவென்று பரணியொன்று கொண்

1. Leyden grant.
2. Tiruvalangadu Plates.
3. S. I. I. iv. 14; v. 465.

டான். அது கொப்பத்துப்பரணி என வழங்கும்[1]. நூலாசிரியர் பெயர் முதலியன புலப்படவில்லை. நூலும் அகப்படவில்லை.

இவனுக்குப்பின் இவனுடைய இளவலான மும்மடிச் சோழன் இராஜமகேந்திரன் என்ற பட்டந்தாங்கி மூன்றாண்டு (1061—1063) ஆண்டான். இவன் கி. பி. 1063ல் விண்ணுலகடையவே, இவனது தம்பி வீரராஜேந்திரன் என்ற பட்டந்தாங்கி முடிசூடினான். இவன் கி. பி. 1070 வரையில் அரசாண்டான். இவனுடைய காலத்திலும் இராஜேந்திரசோழதேவன் காலத்திலிருந்த நிலப்பரப்பே இருந்து வந்தது. இந்த வீரராஜேந்திரன் குந்தளர் என்னும் மேலைச்சளுக்கரை அறவே முறியடித்தான்: இது கூடல் சங்கமம் (கிருஷ்ண துங்கபத்திரையோடு கூடுமிடம்) என்ற ஊரில் நடந்தது. இந்த வெற்றியைக் குறித்துப் பரணியொன்று கொண்டான். சளுக்கருடைய நாட்டைவென்று சளுக்கருள் ஒருவனான விக்கியண்ணன் என்பவனை விக்கிரமாதித்தன் என்ற பேர்கொடுத்து அரசனாக்கினான். அவனுக்குத் தன் பெண்ணையும் கொடுத்தான். இவனுக்கு வீரசோழன், விக்கிரமசோழன், வளவநாராயணன், கரிகாலன் எனப் பல பட்டங்களுண்டு.

வீரராஜேந்திரன்மேற் பாடிய பரணி யொன்றுண்டு. அது கூடல் சங்கமத்துப் பரணி எனப்படும். பின் வந்த புலவரொருவர் அதனைக் குறித்து 'காப்பரணக்-கூடலார் சங்கமத்துக் குஞ்சரம் பல்கோடியாடலம் பொற்பரணிக் கட்டோன்' எனக் கூறுவர்[2]. கூடல் சங்கமத்துப் பரணி இயற்றிய ஆசிரியருடைய பெயர் முதலியன விளங்கவில்லை. நூலும் அகப்பட்டிலது.

வீரராஜேந்திரனுடைய சிற்றரசர்களில் ஒருவனான சேந்தன் என்னும் இயற்பெயரினையுடைய புத்தமித்திரன் பொன்பற்றி காவலன் வடமொழியிலுள்ள இலக்கண விதிகளைத் திரட்டித் தமிழில் வீரசோழியம் என அரசனுடைய பெயர் தந்து நூலொன்று இயற்றினான். இதனை

'ஆவி யனைத்துங் கசதநப மவ்வரியும் வவ்வி
லேவிய வெட்டும்யவ் வாறுஞந் நான்குமெல் லாவுலகு
மேவிய வெண்குடைச் செம்பியன் வீரரா சேந்திரன்றன்
நாவியல் செந்தமிட் சொல்லின் மொழிமுத னன்னுதலே'
தடமார் தருபொழிற் பொன்பற்றி காவலன் றான்மொழிந்த
படிவீர சோழியக் காரிகை நூற்றெண்பஃ தோடொன்றின்[3]

என்னும் அடிகள் இனிது விளக்கும். இந்த நூற்கு உரைகண்ட பெருந்தேவனாரும் இந்த அரசனுடைய காலத்தவரே யாவர். இவர் பொழிப்புரையும் உரைச்சூத்திரமுமாக இயற்றியுள்ளார். அன்றியும்

1. S. I. I. iv. சங்கரசோழனுலா, 20.
2. சங்கர சோழனுலா, 22.
3. வீரசோழியம் உரை இறுதி.

புத்தமித்திரனது சீடருமாவர். இதனை

தடமார்தரு.....டொன்றின்
நிடமார் பொழிப்புரையைப் பெருந்தேவன் செகம்பழிச்சக்
கடலுக வேநவின் ரூன்றமிழ்க் காதலிற் கற்பவர்க்கே

என்ற செய்யுள் காட்டும்.

வீரசோழியம் எதிர் நூலென்பதை

'ஆரவார விலக்கண நூ லெந்துமுழங்க வதற்கெதிர் நூல்
பாரின்மீது தமிழ்க்கூத்தன் பாடியமைத்தான் பயனேர்க்தே
வீரசோழ னுடனிருந்து வியந்தவீர சோழியனூல்
வரமேற வரங்கேற்றி வைத்தார்சோழ மண்டலமே'

என்ற சோழமண்டல சதகச் செய்யுள்[1] வலியுறுத்தும். இவனுடைய காலத்திலே கன்னியாகுமரிக் கல்வெட்டிற் காணப்படும் பலவற்றைப் பிரசஸ்திகளை யியற்றிய வடமொழி வித்தகர் பலர் வாழ்ந்திருந்தனர்.

வீரராஜேந்திரனுக்குப்பின் 1070-ல் அரசுகட்டிலேறியவன் வீரராஜேந்திரனுடைய மகனான அதிராஜேந்திரனுவான். இவன் காலரண்டு அரசாளுவதற்குமுன் இவனுடைய அத்தை மகனும் இராஜராஜனென்னும் வேங்கியரசனுடைய மகனுமான இராஜேந்திரன் என்பான் கட்டிற் கலகத்தை யுண்டாக்கி இவனைக் கொலைசெய்யும்படி தூண்டியிருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. இவ்வாறு அதிராஜேந்திரன் 1074-ல் இறக்கவே, இராஜேந்திரன் சோழவரசைக்கைப் பற்றிக்கொண்டு உரிமையுங் கொண்டாடினான்[2]. அவன் தன்னுடைய இராச்சியபார ஆண்டுகளைப் பின்னர் 1070 முதற்கொண்டே 1118 வரையில் வெளியிட்டு குலோத்துங்கன் என்ற பட்டமுஞ் சூட்டிக்கொண்டான்.

இவனுடைய காலத்திலேதான் ஒட்டக்கூத்தரால் கவிச்சக்கரவர்த்தியென்று பாராட்டப்பட்ட[3] செய்கொண்டார் வாழ்ந்து வந்தார். இவர் இயற்றியதாகக் காணப்படுவது கலிங்கத்துப்பரணி என்னும் பரணி நூல். இந்த நூலினுடைய பெருமையை யாவரும் அறிவர். கவிகுமுதபண்டிதர் என்பவர் குலோத்துங்கனைக் குறித்து குலோத்துங்கன் சரிதை எனப் பெயரிய ஒரு நூலை யெழுதிச் சன்மானம் பெற்றார்[4]. குலோத்துங்கனுடைய சேனபதியான கருணகரத்தொண்டைமானும் பெரும் புலவனுவான் என்பது அவனுடைய பாடல்களால் விளங்கும். இவனையன்றி மணவிற்கூத்தன் என்ற பேருடைய படைத் தலைவன்

1. செய்யுள் 95.
2. கலிங்கத்துப்பரணி.
3. குலோ. பிள்ளைத்தமிழ், செய்யுள் 14.
4. Inscriptions of the Madras Presidency, 198 of 1919.

ஒருவன் உண்டு. அவனையொரு பெரும் புலவர் பாடியுள்ளார். அவர் இயற்றிய செய்யுட்கள் சிதம்பரத்திலும் திருவதிகையிலும் கல்லில் வெட்டப்பட்டுள்ளன. கமலாலய பட்டனென்பவரால் கன்னிவன புராணமும், பூம்புலியூர் நாடகமும் இயற்றப்பட்டன.

குலோத்துங்கனுக்குப்பின் அரசு கட்டிலேறியவன் குலோத்துங் கனுடைய இரண்டாவது குமாரனை விக்கிரமசோழனுவான். இவன் கி. பி. 1118 முதல் 1135 வரையில் அரசாண்டான். இவனுடைய காலத்திலே தமிழ் நாடு முழுமையும் இவனுடைய அரசாட்சிக்குட் பட்டதாகவேயிருந்தது

இவனுடைய ஆஸ்தான வித்வானாக இருந்தவர் ஒட்டக்கூத்தர். இவரைக் கௌடப்புலவர் என்றுங் கவிச்சக்கரவர்த்தி என்றுங்கூறுவர். இவர் விக்கிரமசோழன்மேல் உலா பாடியுள்ளார். அது விக்கிரமசோழ னுலா எனப்படும். அந்த நூல் மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் முதன் முதலாக அச்சிடப்பட்டுள்ளது. இவன் மேல் கலிங்கவெற்றியைக் குறித்துப் பரணியொன்று பாடினர். அது தெய்வப்பரணி[1] எனப்படும்.

விக்கிரமசோழனுக்குப்பின் அரசாண்டவன் குலோத்துங்கன் எனப் படுவான். இவனைச் சரித்திரக்காரர்கள் இரண்டாங் குலோத்துங்க னென்பர். இவன் கி. பி. 1133 முதல் 1146 வரையில் அரசாண்டான். இவனுடைய இயற்பெயர் எதிரிலிப்பெருமாள்[2]. இவனது கல்லாசிரியர் ஒட்டக் கூத்தராவார். இதனை இவனே.....'கித்த நவம்பாடுங் கவிப்பெருமனைட்டக் கூத்தன் பதாம் புயத்தைச் சூடுங் குலோத் துங்க சோழனென்றே யென்னைச் சொல்லுவரே'[3] என்று கூறுவது கொண்டு அறியலாம். இவன்மேல் ஒட்டக்கூத்தர் பிள்ளைத்தமிழும் உலா வும் பாடியுள்ளார். இதனை

'பாடிய—வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றேனும்' என்ற

அடிகள்[4] வலியுறுத்தும். இந்நூல்கள் இரண்டும் அச்சிடப்பட்டுள்ளன. கூத்தர் கவிச் சக்கரவர்த்தி என்று பெயர் பெற்றது, இவனிடத்தான் போலும்.

இந்த அரசன் காலத்திலேயே புகழேந்திப் புலவரும் வாழ்ந்தவ ராவார். இவர் பாடியன நளவெண்பா, இரத்தினச் சுருக்கம், செஞ்சிக் கலம்பகம் முதலியனவாம். கி. பி. 1146-ல் மருதத்தூருடையான் பையூர் வேதவனமுடையான்மேற் கவி பாடி பரிசில் பெற்றான்.

---

1. தக்கயாகப்பரணி, 776.
2. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் 2, 8.
3. தமிழ் நாவலர் சரிதை.
4. சங்கர சோழனுலா.

பிற்காலச் சோழரும் அவர்காலத்துப் புலவரும்

இரண்டாங் குலோத்துங்கனுக்குப்பின் அரசாட்சிக்கு வந்தவன் இராஜராஜனுவான். இவனுடைய இயற்பெயர் விக்கிரமனென்பர். இவனைச் சரித்திரக்காரர் இரண்டாம் இராஜராஜனென்பர். இவன் கி. பி. 1146 முதல் 1162 வரை அரசாண்டான். இவனுக்கு ஆண் சக்ததியில்லாமையாலே[1] விக்கிரம சோழனின் பேரனை நல்லமன் என்பான் அரசாட்சிக்கு வந்தான்.[2] அவனைக் குறித்துப் பின்னர்க் கூறுவாம்.

இரண்டாம் இராஜராஜன் காலத்திலும் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் இருந்தவராவார். ஒட்டக்கூத்தர் இராஜராஜன்மேல் உலாப் பாடியுள்ளார். அது இராஜராஜனுலா எனப்படும். இந்த உலாவின் கண்ணியொன்றுக்கு ஆயிரம் பொன் கொடுத்ததாகக் கதையுண்டு. இவன் காலத்திலேயே கூத்தர் தக்கயாகப்பரணியும், ஈட்டியெழுபது, இரா மாயணம்—உத்தரகாண்டமும் மற்றவையும் பாடினர். சிலர் உத்தர காண்டம் கூத்தர் பாடியதன்றென்றும், வாணியன் தாதன் பாடிய தென்றும் கூறுவர். சற்றேறக்குறைய இருநூருண்டுகட்கு முந்திய தான சோழமண்டல சதகத்திலே 'கழலபயன் சபையிற் பயிலுத்தர காண்டம்—வாணிதாசனரங்கேற்ற வைத்தார் சோழமண்டலமே'[3] என்று காணப்படுவது கொண்டு அடிப்பட்ட சான்றோர் வழக்கு அவர் செய்ததாகவே வழங்குகின்றது.

ஒட்டக்கூத்தருடைய காலத்தவர் சேக்கிழார் என்பது சிலரது கருத்து. அதற்கு மாறுகவுள்ள பல காரணங்களுள் கூத்தர் கூறும் பல நூல்களிலும் இச்செய்தி கூறப்படாமை ஒன்று. சென்னி, அரு பாயன் என்ற பெயர்கள் இராஜேந்திரசோழதேவனுக்கு உண்மை மற்றொன்று; அவனே குலோத்துங்கப்பெயர் கொண்டது பிறிதொன்று. அவன் திருத்தொண்டத் தொகைப் பதிகத்தைக் கோயிலில் பாட ஏற்பாடு செய்ததோடு நாயன்மார் படிமங்களுட் சிலவற்றை வைக்க ஏற்பாடு செய்தது முதலியனவாம். பெரியபுராணத்தில் திருவாரூரைத் தலைநகராகக்கொண்டு சிறப்புக்கூறியது பெருந்தடையாக நிற்கிறது. முதல் இராஜராஜனுக்குமுன் வரையிலேதான் திருவாரூர் சிறப்புடைய தாக இருந்தது. இராஜேந்திரசோழதேவனோடு திருவாரூரின் கிளைவே சோழ அரசர்களுக்கு அற்றுவிட்டது. ஆகவே இரண்டாங் குலோத்துங்கன் இராஜராஜன் காலத்தில் சேக்கிழார் பெருமான் இருந்தவரல்லர் என்பது தெளிவு.

இனி, கம்பர் இவர்கள் காலத்தவரா அன்றி மூன்றாங்குலோத் துங்கன் காலத்தவரா வென்பதையும் ஈண்டே ஆராய்வோம். இக் காலத்தவர் என்பார் கூற்றுக்கு ஆதாரமாகவிருப்பவை, (1) ஓரங்கலர

1. Q. J. M. S. 1927. செந்தமிழ் 2. சங்கர சோழனுலா.
3. செய்யுள் 80

சனிடம் சென்று பரிசு பெற்றமை, (2) ஆவின் கொடைச் சகரர் என்ற பாட்டு, (3) சீரங்கத்தில் அரங்கேற்றியது, (4) காதமுனிகள் அவைத் தலைமை வகித்தது, (5) சீவகசிந்தாமணியின் காலம் என்பனவாம். இவைகளுள் ஓரங்கலரசனிடம் கம்பர் சென்றுரென்பது தெலுங்க சரித்திரங்களிற் காணப்படாமையும் பிரதாபருத்திரன் தமிழ் அறியாமையும் பெருந்தடையாக நிற்கின்றன. ஆவின் கொடைச்சகரர் என்ற பாட்டு பலபிரதிகளிலும் காணப்படாமையும் ஒப்புக்கொள்ளப் படாமையும் கவனிக்கற்பாலன. சீரங்கத்தில் அரங்கேற்றப் பட்டதென்பது ஒரு அபூதக்கற்பனை. கண்ணியவரங்கமுன்னே[1] என்ற செய்யுளை அரங்கர் முன்னே எனத்திருத்திக் கொண்டுகதையும் கற்பித்துவிட்டனர். ஆதலினாலே நான்காவதற்கு விடை வேண்டுவதன்று. சிந்தாமணி ஆசிரியர்காலம் கம்பருடைய காலத்துக்கு முற்பட்டதென்பதாற் போந்த இழுக்கு ஒன்றுமில்லை.

இனி, கம்பர்காலம் ஒன்பதாம் நூற்றாண்டென்பார் கூற்றுக்கு ஆதாரமாக விருப்பவை, (1) எண்ணிய சாகாத்த மெண்ணூற்றேழு என்ற செய்யுள், (2) கம்பரையாதரித்த சடையவள்ளலுடைய காலத்தில் தகுதியான சோழவரசன் இல்லையென்பது, (3) சடையன் என்பார், உக்கல்கிராமத்தார்க்கு முறையே 1000,400 காடி நெல் கொடுத்தாக கல் வெட்டுக்களிற் காணப்படுவது, (4) இந்தக்காலத்திலரசாண்டவன் பலவீனனான கம்பவர்மன் என்ற பல்லவ அரசன், (5) கம்பர் தாம் பாடிய இராமாயணத்தில் ஆதரித்த வள்ளலைப் பல்லிடத்தும் புகழ சோழ அரசனைக்கூறுமை ; கூறவந்த இரண்டிடத்தும் பொதுப்படக் கூறிச்செல்லுகை, (6) கம்பனூரினிடை, கம்பனூர் பிறந்த ஊரிடைப் பெருமையுளது என்று வீரசோழிய ஏடுகளிற் காணப்படுதல், (7) கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இருக்கும்போது கம்பனைக் கவிச்சக்கரவர்த்தியாக்குதல் இயலாததென்றல், (8) புகழேந்தியினுடைய நள வெண்பாவிலும், கூத்தருடைய உத்தர காண்டத்திலும் கம்பருடைய கருத்துக்கள் பல காணப்படுதல், (9) புலவர் பெருமக்கள் பலரும் கம்பர் ஒன்பதாம் நூற்றாண்டினராகவே கொள்ளுதல், (10) சீவக சிந்தாமணியின் காலமும் ஒன்பதாம் நூற்றாண்டாக விருந்தாலும் கம்பர் இராமாயணம் பாடியதாலுண்டாம் இழுக்கொன்றுமில்லை யென்பது, (11) கூத்தர் ஓரிடத்திலாவது கம்பரையாவது இராமாயணத்தையாவது, அவரைப்பாடச்சொன்ன செய்தியையாவது குறிக்காமை, (12) முதன் முதலிலெழுந்த மழவை மகாலிங்கஐயர் அச்சிட்ட அச்சுப்பிரதியில் ஆவின்கொடைச்சகரர் என்றசெய்யுள் காணப்படாமை முதலிய காரணங்களால் கம்பர் ஒன்பதாம் நூற்றாண்டினரே என்பது பெறப்படும்.

இனி, இரண்டாம் இராஜராஜனுக்குப்பின் சோழ அரசுக்கு வந்தவன் நல்லமன் என்றோம். இரண்டாம் இராஜராஜன் நோய்

1. பாலகாண்டம். மழவை மகாலிங்கஐயர் பதிப்பு, ஏடுகள்

வாய்ப் பட்டிருந்தபோது அவனுக்கு ஆண்பிள்ளையின்மையாலே முன்னிருந்த திருவடியில் கல்லமன் என்பவரைத் தெரிந்து அவருக்கு இராஜாதிராஜன் என்று பட்டஞ்சூட்டித் திரு அபிடேகம் செய்வித்தான்[1]. ராஜாதிராஜன் 1162 முதல் 1178 வரை 16 ஆண்டு அரசு புரிந்தான். அவனுக்கு அவனுடைய இளவல்கள் பெருந்துணையாய் நின்றனர்.

இவ்வரசனுடைய காலத்திலே திருஒற்றியூரிலே சுந்தரமூர்த்தி சங்கிலியாரை மணந்த கதை வாசிக்கப் பட்டு சரித நிகழ்ச்சியும் கடத்தப் பட்டது. அது இன்றும் மகிழடிசேவை என்னும் பெயரால் கடை பெற்று வருகின்றது.

இரண்டாம் இராஜாதிராஜனுக்குப்பின் அவனுடைய இளவலான குலோத்துங்கன் அரசனானன். இவன் மூன்றாங்குலோத்துங்கன் என்ற பட்டந்தரித்தான். இவன் கன்னியாகுமரிமுதல் வடக்கே வேங்கடம் நெல்லூர் வரையில் தமிழ்வழங்கும் நாடுகள் முழுவதையும் கிழடக்கி கி. பி. 1216 வரையில் ஆண்டான். இவனுக்கு வீரராஜேந்திர திரிபுவனவீரதேவன் என்ற மறுபெயர்களுமுண்டு.

இவனுடைய தலைவர்களில் ஒருவனான அமராபரணன் சீயகங்கன் என்பவனுடைய வேண்டுகோட்கிணங்கி பவணந்திமுனிவர் நன்னூல் என்ற இலக்கணநூலை இயற்றினர். குணவீரபண்டிதர் என்பவர் நேமி நாதம் என்ற பெயருடைய இலக்கணத்தை எழுத்ததிகாரத்துக்கும் சொல்லதிகாரத்துக்கும் இயற்றினர். வேண்பாப்பாட்டியல் என்ற பாட்டியல் இலக்கணத்தையும் அவரே செய்தார். வீராண்டப்பல்ல வரையன் என்பவன் அரசனுக்கு வேண்டிய ஒரு புலவன் என்பது திருக்கடவூர்[2] கல்வெட்டொன்றால் விளங்குகிறது.

குலோத்துங்கன்கோவை என்பது மூன்றாங் குலோத்துங்கன்மேல் பாடப்பட்டதொருநூல். இந்த நூலின் ஆசிரியர் பெயர் முதலியன விளங்கவில்லை. இஃதே போன்று சங்கரசோழனுலா என்பது மற்றொரு நூல். இது மூன்றாங் குலோத்துங்கனது இளவலான சங்கரசோழன் மேற் பாடப்பட்டது.

சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமமுடைய மெய்கண்டார் என்னும் சைவப்பெரியார் இக்காலத்திலே வாழ்ந்தவராதல் வேண்டும். இவர் இயற்றியதாக நமக்குக் கிடைத்துள்ளது, சிவஞானபோதம் என்ற சைவசித்தாந்தநூல் ஒன்றேயாம். இவருடைய மாணாக்கர்களாகிய அருணந்தி சிவாசாரியாரும், மனவாசகங்கடந்தாரும் இக்காலத்தினரேயாவர். முன்னவர் இயற்றியன சிவஞான சித்தியாரும்

---

1. பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டு 433 of 24.
செந்தமிழ், 33, 293, 327. 2. 255 of 25.

இருபா இருபஃது மாகும். மனவாசகங்கடந்தார் இயற்றியது உண்மை விளக்கமாகும். 1210-ல் அரும்பாக்கத்து அறநிலை விசாகன் திரை லோக்கியமல்லன் வத்ஸராஜனென்பான் மஹாபாரதத்தைத் இனிய தமிழில் இயற்றினன்.

மூன்றாங் குலோத்துங்கனுக்குப்பின் அவனுடைய பிள்ளை இராஜ ராஜன் என்ற பட்டஞ்சூடி 1216-ல் அரசுகட்டிலேறினன். இவன் மிக்க பலவீனனாக விருந்ததால் இவனுடைய தண்டத்தலைவர்களே இவனைத்துன்புறுத்தலாயினர். பாண்டியனும் படையெடுத்துச் சோழ ராச்சியத்திற் புகுந்தான். இந்த பாண்டியனைப் போசளர் விரட்டினர். பின்னும் தண்டத்தலைவர்களுள் ஒருவனான சிங்கணதண்ட நாயகன் இராஜராஜனைச் சேந்தமங்கலத்திற் சிறையிட்டான். சிறைப்பட்ட இராஜராஜனைப் போசள நரசிம்மதேவன் வந்து சிறை மீட்டான். இவனுடைய காலமுதல் சோழராச்சியம் நிலைகுலையத்தலைப்பட்டுவிட்டது. சிலகாலம் பாண்டியவரசர்களும் சிலகாலம் தண்டத்தலைவர்களும் அரசாண்டுவந்தனர். மூன்றாங் குலோத்துங்கனுக்குப் பின்னர் சோழராச்சியம் தனது பெருமையை யிழந்ததென்றே கூறலாம்.

பன்னிரண்டு பதின்மூன்றும் நூற்றாண்டுகளில் தமிழ் உன்னத நிலையிலேயே யிருந்ததென்று கூறவேண்டும். உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியன் மார் வாழ்ந்த காலமுமிதுவேயாம். தமிழ்மொழிவாணரும் வடமொழி வித்தகரும் பல்கிப் பெருகிய காலமுமிதுவேயாகும். இந்த உரை நடை யில் முன்பின் நானூறு வருடங்களுக்குள் வாழ்ந்த புலவர்களுடைய பெயர்களெல்லாம் எழுதப்படவில்லை. அதற்குரிய காரணங்கள் இரண்டு. ஒன்று அப்புலவர்கள் எல்லோரும் சிறப்புடையவர்களன் றென்பது. உரைநடையும் மிகுதியாக விரியுமென்பது மற்றொன் றாகும்.

தமிழின் உண்மைப்பொருள் அமைப்பு

திரு. G. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்,
வழக்கறிஞர், கோயமுத்தூர்.

உலகில் மக்கள் கருதிய பொருள்களை அறிந்துகொள்ள உதவும் மொழிகள் பலப்பல. அவற்றுள் தமிழ்மொழியும் ஒன்று என எண்ணுவோர் பலர். அவற்றுள் தமிழ் சிறந்தது என்போர் சிலர். இவ்விருவரையும் மறுத்துத் தமிழின் உண்மைப் பொருள் அமைப்பு வேறெம் மொழிக்கும் இல்லை என்று காண்போர் மிகச்சிலர். இதுபற்றி ஒரு சில பேச்சுக்கள் பேசுவது இங்கு நான் கருதியது.

தமிழ், மண்ணிடைச் சிலவிலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப் படக்கிடந்ததா வெண்ணவும் படுமோ ?''

என்றது பெரியார் பாட்டு. தமிழின் இலக்கண வரம்பையும், பெரு மொழியாய் எண்ணப்படும் வடமொழியினும் காணப்படாது தமிழிற் காணப்படும் சிறப்பியல்புகளையும்பற்றி எமது மாதவச் சிவஞான சுவாமிகள் எடுத்துக் காட்டியிருப்பது இங்கு நினைவு கூர்வது பயனுடைத்தாம். எழுத்தும், சொல்லும், பொருளும், என்ற மூவகையானும் தமிழ் அமைப்பு, இலக்கணம், பற்பல சிறப்பியல்புகளையுடையதாய் வடமொழியினும் பலவகையிற் சிறந்து விளங்குவதனை இருமொழியும் நிலைகண்டுணர்ந்த அந்தச் சுவாமிகள் அங்கு விளக்கியருளிய உண்மை எவரும் மறுக்கற்பால தன்று.

இங்கு நான் வெளியிட எண்ணியவை வேறுசில கருத்துக்கள்.

உலகம் இன்ன உண்மை யியல்புடையதென்று தனது அமைப்பிலே அறிவிக்கும் மொழி ஒன்றுண்டாயின் அது தமிழ் மொழியேயாம். உலகத்தை அளக்கின்ற மேன்மையுடையது தமிழ் என்று ஆசிரியர் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் அருளினர். ''ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்'' என்பது அவர் திருவாக்கு. இதனைப் பின்பற்றியே இக்கருத்தை ''நீண்ட தமிழா லுலகை நேமியினளந்தான்'' என்று

பாடினர் கம்பரும். இவைகட்கென்ன கருத்து என்பதைச் சிறிது ஆராய்வோம்: உலகத்தின் பிறப்பிருப்புக்களின் உண்மையை உணர்த்தும் நூல்கள் தமிழில் சிறப்பாக உண்டு என்பதுமட்டும் இவற்றின் பொருளோ? அன்று! உலக உண்மையை அளந்து முடிவுகட்டி அவ்வுண்மைகளைத் தன் அமைப்பிலே அளந்துகாட்டுகின்ற மொழி என்பது இவற்றின் உட்கருத்து என்பேன்.

சொல்லும் பொருளும்.

பொருளைக் குறிக்க அமைவது சொல். "உரையின் வரையும் பொருளின் அளவும் இருவகைப்பட்ட எல்லை" என்றருளினர் பட்டினத்தடிகள். வாழைக் கனி என்ற சொல் அந்தப் பழமாகிய பொருளைக் கேட்போர் மனத்தின்முன் கொண்டுவரும். சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் என இரண்டு வகையாக நூல்கள் வகுப்பது காண்க. எனவே, சொல்லும் பொருளும் ஒத்து இயல்வதே இயல்பு. இது தமிழ்மொழியின் உண்மையியல்புகளில் ஒன்றும். ஆண்பால் விகுதிப் பெயர் ஆண்பாற் பொருளையே குறிக்கும். இங்ஙனமன்றி ஆண்பாற் பெயர் ஒரு பெண்பாற் பொருளையும், பெண் விகுதிபெற்ற பெயர் ஒரு ஆணையும் குறிக்கின்றபடி அமைவன சில மொழிகள். அவை உண்மைப் பொருளியல்புக்கு மாறுவனவாம்.

தமிழ் எழுத்தியல்பு.

கண்ணுற் காண்பது உருவம். காதாற் கேட்பது சத்தம். இவ்விரண்டும் ஒன்றனிடத்தே அமைவன, கிராமபோன் (Gramophone) என்ற ஒலிப்பதிவுக் கருவித்தகடுகளில்; ஈண்டு காதாற்கேட்கும் ஒலிகள் காணும் உருவம் பெறுகின்றன. பேசும் படக் காட்சிகள் மலிந்து மக்களைப் பலவகையாலுங் கவர்ந்து சீர்குலைத்துவரும் இக்காலில் பேசுவோனது ஒலியும் உருவமும் ஒரேபடத்தில் பதிவு செய்யப்படும் உண்மை விளங்காமற் போகாது. சிவம், சத்தி, நாதம், விந்து என்று முறைப்படுத்தி உண்மைப் பொருணூல்கள் பேசும். இவ்வுண்மைப் பொருளியல்பையே தமிழ் எழுத்திலக்கணம் தமிழ் எழுத்துக்களாகிய ஓரே பொருளுக்கு ஒலிவடிவம், வரிவடிவம் என வகுக்கின்றது.

உயிரும் உடம்பும்.

இனி அவ்வெழுத்துக்கள் உயிர் எனவும் மெய் எனவும் இரு வகைப்படும். உயிர் என்பது ஆன்மாக்கள். மெய் என்பது அவ்வான்மாக்கள் பொருந்தி நிகழும் உடம்புகள். உடம்பினுள் உயிர் வந்து சேரும் என்பது உண்மை நூல்கள் கண்ட முடிபுகளில் ஒன்று. "உடன்மேல் உயிர்வந்து ஒன்றுவ தியல்பே" என்பது தமிழ் இலக்கணம்.

தமிழின் உண்மைப்பொருள் அமைப்பு

" கால்கொடுத் திருகை ஏற்றிக் கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீரோற் சுவரெடுத் திரண்டு வாசல்
எல்வுடைத் தாவ மைத்திங் கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார் மாமறைக் காட னூரே "

என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு.

மெய்.

இவ்வாறு உயிர்கள் தங்குவதற்கிடமாக வரும் உடம்புகள் மூவகைப்படும் என்பது தமிழ் இலக்கணம். வல் இனம், மெல் இனம், இடையினம் என இந்த மெய்களை மூன்றினமாக வகுப்பர் தமிழ் நூலோர். உயிர்களுக்கு அவ்வவற்றின் மலங்காரணமாக உடம்புகள் தரப்படும். ஆணவம், மாயை, கன்மம் என மலங்கள் மூன்றுவகை யாம். இவ்வகை ஒருமலத்தார் உடம்பு, இருமலத்தார் உடம்பு, மும் மலத்தார் உடம்பு என மூன்றுவகை உடம்புகள் உண்மை நூல்கள் பேசும். மூன்று மலத்தால் வரும் உடம்புகள் மிக்க வலிமையுடையன. ஆகையால் அவைகள் வல்லினமெய்களாம். இவ்வாறே ஒருமலத்தான் வருவன மெல்லினமெய்கள் எனவும், இருமலத்தார்பெறுவன இடை யினம் எனவும்பெறும் அமைப்பினைக் காண்பது பயனுடைத்தாம்.

சொல் அமைப்பு

இனி தமிழ்ச் சொற்களினமைப்பைக் காண்போமானால் சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நால்வகைப்படும். இவற்றுள் இடையும் உரியும் பிறசொற்களைச் சார்ந்து நிற்றலன்றித் தனித்து வழங்காவாதலின் அவற்றை நீக்கிப் பெயரும் வினையும் ஆகிய இரண்டுமே சொல் என்னலாம். இவற்றுள் பெயர்கள் வினைகொண்டு முடியும். வினைகள், வினைஎச்சம், வினைமுற்று என இரண்டு முடிபுகளுடையன. வினைஎச்சம் நின்றவிடத்திற் பொருள் முடிவு பெறுகின்றதில்லை. வினை முற்றுப் பெற்றபோது பொருள் முடிவுறுகின்றது. பெயர் என்பது உயிர்ப் பொருள். சிவர்கள் பெயர் பெறுவர். கடவுள் பெயரில்லாத வராதலின் பெரும் பெயர் எனப் பெறுவர். " பெரும் பெயரியவுள் ", " அரும் பெறன் மரபிற் பெரும் பேயர் முருக ", " பெரும் பேயர்க் கடவுளிற்கண்டு " என்றவை காண்க. சிவர்கள் வினைமுற்றியபோது பொருள் முடிவும் பெறுகின்றனர். வினைகள் மூன்று காலத்து வருகின் றன. உரியபக்குவ காலத்திலே வினையும் பொருந்துவன. ஆனல் வேற்றுமை கொள்ளாது என்பது உண்மை நூல்.

" வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது தினையுங்காலைக் காலமோடு தோன்றும் ". இனி இவ்வாறே வினைகள் உயர்திணைக் குரிமையும் அஃறிணைக்குரிமையும், ஆயிருதிணைக்கு மோரன்ன உரிமை யும் அம்மூவுருபின தோன்றலாறே " என்ற தமிழ் இலக்கண விதிப்படி

இரு திணைக்கும் உரியன. உண்மை நூற்படியும் மக்கள், தேவர், நரகர் என்ற உயர்திணைப் பொருள்களுக்கும் மற்று உயிர் உள்ள அஃறிணைப் பொருள்களுக்கும் வினைகள் உரியனவாம். இவர் யாவரும் வினை கொள்வர்.

இனி, பெயர்கள் வேற்றுமை யேற்கும். வேற்றுமைகள் ஏழு என்பதே ஆசிரியர் தொல்காப்பியர்க் குடன்பாடு. "வேற்றுமை தாமே யேழென மொழிப" என்பது சூத்திரம். "விளி கொள்வதன் கண் விளியோடெட்டே" என்பது மற்றொருநிலை. பெயரை வேறு படுத்தி வேற்றுமை செய்யும் பிறவிகளும் ஏழே யென்பது உண்மை நூற்றுணிபு.

வேற்றுமை யேற்பன பெயரே. வினைகள் வேற்றுமை கொள்ளா. "வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது" என்பது சூத்திரம். ஆம்! அஃதே உண்மைப் பொருளியல்பு! பெயர் என்ற உயிர்தாம், தாந்தாங்கொண்ட வினைக்குத் தக்கபடி ஏழுவகைப் பிறப்பிலும் வேற்று மைப்பட்டுப் பிறக்கும். வினைகளோ எனின் அவ்வாறன்றி "பல்லா வுள் உய்த்து விடினும் குழக்கன்று, வல்லதாம் தாய் நாடிக்கோடல்" என்றபடி வேறு பெயர்களைச் சேராது செய்தவனையே சேரும்.

இனி, ஒரு வாக்கியத்தில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற பகுதிகளும் இவ்வாறே உண்மை நூற் பொருளைக்காட்டி நிற்கின் றன. ஒரு உயிர் தான் ஆழ்ந்து கிடந்த இடத்தினின்றும் "எழுவாயாக" என்று இறைவன் கருணையினால் எடுத்து எழுவித்தபோது, இறைவ னால்களில் இவையிவை செயத்தக்கவை என்று விதித்தபடிக்குள்ள செயப்படு பொருள்களைச் செய்யின், உறுதிப் பயனிலே கிலைபெறும் என்ற கருத்துத் தமிழ் வாக்கிய அமைப்பிலே உள்ளுற அமைதல் காண்க.

பொருள் அமைப்பு

இனித் தமிழின் பொருளிலக்கண அமைப்பும் உண்மைப்பொருள் அமைப்பும் ஒன்றே என்பது வெளிப்படையாம். பொருள்கள் அகம். புறம் என இருவகையாம். அகப்பொருள் இலக்கணம், புறப்பொருள் இலக்கணம் என்பன தமிழ் மொழிக்கே சிறப்பாயுரியன. இவ் வமைப்பும் வரையறையும் வேறெந்த மொழியினுமில்லை. உண்மைப் பொருளியல்பும் இதுவே. அகமும் புறமும் என்ற இருவகையிலே உலகம் அடங்கும். பெயர்கள் கொள்ளும் வேற்றுமை-பிறவி ஏழென் பதுபோலவே பொருட்பகுதியிலும் வரும் அகத்திணைகளும் கைக்கிளை முதலாகப் பெருந்திணையீறாக ஏழாம். அகத்திணைக்குரியவாறே புறத் திணைகளையும் தமிழ் இலக்கணம் வகுக்கும்.

தமிழின் உண்மைப்பொருள் அமைப்பு

எழுவகையான் வேற்றுமைப்பட்ட பிறவியிற் பிறந்து அங்காங்கும் ஒவ்வோர் பெயர் பெறும் உயிர், பொருள் வகையாலே முதலில் காலம், இடம், என்னும் இவற்றிற்குட்பட்டு நடக்கும். இதனையே நிலம்— பொழுது என முதற்பொருள் என்று பொருள் இலக்கணம் வகுத்தது. அவ்வாறு பிறந்து நிலம் என்ற உரிய புவனங்களிலே கால தத்துவத்தினுள் அமைந்து செல்லும் உயிர், அங்கங்கும் புணர்தல் முதலாகச் சொல்லப்பட்ட தனக்குரிய தொழில்களைச் செய்துகொண்டு, ஆண்டாண்டு சேரும் தெய்வம், உணு முதலிய போகங்களைத் துய்த்துக் கொண்டும் சென்று கொண்டேயிருக்கும். இவற்றையே தமிழ்ப் பொருள் இலக்கணம், உரிப்பொருள், கருப்பொருள் எனப்பேசும்.

தமிழ்ப் பொருளிலக்கணம் உலகத்தில் அகம்புறமாகிய பொருள்களின் உண்மையியலையே பாகுபாடு படுத்துவதாம்.

களவும், கற்பும் என்ற இருபகுதிக்கும் இன்பமும் அறனும் பொருளும் என்ற உறுதிப் பொருள்களே குறிக்கோளாவன. தனு, கரணம், புவனம், போகம் என்ற பொருள்களை வரையறுத்தலால் தமிழ் இலக்கணத்துள்ளே பொருள் இலக்கணமே சிறந்ததாய் எண்ணப்படுகின்றது. எழுத்தும் சொல்லும் வல்லாரைப் பெற்றும் பொருள் வல்லாரைப் பெறுதபோது பாண்டியன் "எழுத்துஞ் சொல்லும் பெறுதல் பொருள் பற்றியன்றே" என்று கவன்று இறைவனிடம் பொருளிலக்கணம்பெற வேண்டினன் என்பது இறையனர் அகப்பொருள் வரலாற்றிற் கண்டது. தமிழ் இலக்கணம் பொருளையே சிறப்பாகக்கொண்டது. இங்குப் பொருள் என்றது உண்மைப்பொருளை. இதுபற்றியே பொருளிலக்கணத்தை தலைச் சங்கப் புலவனாகிய திருவாலவாய் இறைவனே பின்னரும் எழுந்தருளித் தந்தனன் என்பர்.

"நூலின்கட் பொருள்பாடி நீலறிவார்க் கிந்தானை", "செழும் பொருணூல் தருவானை", "தலைச்சங்கப் புலவனர்" என்று பற்பல வாறும் திருவாலவாய்ப் பெருமானைப் பாடுந்தோறும் ஆசிரியர் சேக்கிழார் பெருமான் அந்த இறைவனைப் பொருள்தரும் இந்த இயல்பொடு புணர்த்தியே குறித்துக் காட்டுகின்றார்.

அகப்பொருணூல்களிலே தலை சிறந்து விளங்குவது மணிவாசகப் பெருமான் அருளிய திருக்கோவையாராகும். அதற்குரை வகுத்த பேராசிரியர், "திருவாதவூரடிகள் இத்திருக்கோவையை என்னுதலியெடுத்துக் கொண்டாரோவெனின்," என்று மேற்கொண்டு சொல்வாராய், "தில்லை மூதூர்ப் பொதுவினிற் றோன்றி, யெல்லையி லானந்த கடம்புரிகின்ற, பரமகாரணன் றிருவருளதனைப், றிருவாதவூர் மகிழ்செழு மறைமுனிவர், ஐம்பொறி கையிகந்தறி வாயறியாச், செம்புலச்செல்வ ராயினராதலி, னறிவனூற் பொருளுமூலகநூல் வழக்குமென, இரு பொருள் முதலியெடுத்துக் கொண்டனர்," எனக் காட்டிச் சென்றனர்.

தமிழின் உண்மைப்பொருள் அமைப்பு

பொருளமைதியிலே புறப்பொருள் அகப்பொருளைப்பற்றி நிற்க, அகம் தலைவன் தலைவியர்க்குள்ளே நின்ற அகவொழுக்கம்பற்றி நிற்கின்றதாம். இறைவனே ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தலைவன். "தனக்குவமை யில்லாதான்," "தன்னேரில்லோன்," "ஒப்புடையனல்லன்—ஓர் உவமனில்லி" என்று அவனைப் பற்பலவாறும் பெரியோர் பேசுதல் காணலாம். அவ்வாறே தலைவியும் ஆவள். உயிர் எனப்படும் ஆன்மாவை அரசகுமாரனாக வைத்து எடுத்தாண்டிருப்பது உண்மை நூல்வழக்கு.

"ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தென" என்ற சிவஞான போதம் என்னும் மெய்கண்ட சாத்திரச் சூத்திரத்தினுள்ளே "மன்னவ குமாரனாகிய நீ ஐம்பொறிகளாகிய வேடருட் பட்டுவளர்ந்து நின் பெருந் தன்மை யறியாது மயங்கி யிடர்ப்பட்டாய்" என்று இறைவன் குருவாகி வந்து அறிவிக்குமுறை கூறப்பட்டது. "முதல்வனது பேரானந்தப் பெருஞ்செல்வ முழுதும் தனதேயாகக் கொண்டநுபவிக்குஞ் சுதந்திரமுடைமையும் சித்தெனப்படுஞ் சாதியொருமையும்பற்றி ஆன்மாவை மன்னவ குமாரனாக" உருவகம் செய்யப்பட்டதென்பது பொருள். அகப்பொருளிலக்கணத்தே சொல்லப்பெறும் அகப்பொருட் டுறைகளிலே உலகில் ஒருவன் ஒருத்திபால் நிகழும் சிறிதாகிய காம இன்பத்தை முன்னிலையாக வைத்துக்கொண்டு இறைவனை உயிர்கள் கூடி அனுபவிக்கும் பேரின்பத்தை உள்ளுறையாகக்கொண்டு கூறுவது மரபு. இவ்வாறு அறியாதார் தமிழ் அகப்பொருணூல்களைக் காமநூல் என்றுகொண்டு இடர்ப்பட்டொழிவர்.

"முன்னமவனுடைய நாமங்கேட்டாள்
மூர்த்தியவனிருக்கும் வண்ணங்கேட்டாள்
பின்னை யவனுடையவாரூர் கேட்டாள்
பெயர்த்துமவனுக்கே பிச்சியானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றுள் அகலிடத்தா ராசாரத்தைத்
தன்னைமறந்தாடன்னுமங் கேட்டாள்
தலைப்பட்டாணங்கை தலைவன்றாளே"

என்று அப்பர்சுவாமிகள் அகத்தமிழின் உண்மைப்பொருளியல்பை அருமையாக அருளியிருக்கின்றனர். "காமஞ்சான்ற ஞானப்பனுவற்குப் பொருளெனச் சுட்டியவொரு பெருஞ்செல்வ" என்பது குமரகுருபரசுவாமிகள் திருவாக்கு.

களவு, கற்பு என்ற அகப்பொருட் பிரிவுகளையும், அவற்றினிலக்கணங்களையும், மெய்ப்பாட்டியலில் எண்வகை மெய்ப்பாடுகளையும், மரபு, முதலிய பிற அமைப்புக்களையும் இவ்வாறே உண்மை நூற்றுணிபுகளாகிய பொருளியல்பினைக் குறிப்பனவாக உயர்த்துணர்ந்து கொள்க.

தமிழின் உண்மைப்பொருள் அமைப்பு

தமிழின் ஐந்திலக்கணங்களிலே உவமம் என்ற அணியியலும், செய்யுள் என்ற யாப்பியலும், (எழுத்தும் சொல்லும்போலப்) பொருள் தரும் வாயில்களேயாதலின் பொருளிலக்கணத்தே யடக்கிவைத்தோதினர் ஆசிரியர் தொல்காப்பியனர்.

தமிழ் இலக்கண அமைப்பு உண்மைப் பொருளியல்பின் அமைப்பையே உட்கொண்டு விளங்குவது என்னும் மெய்கண்டஞான நூல்களின் முடிபுகளே தமிழ்மொழியமைப்பாம் என்றும், இச்சிறப்பு வேறெந்த மொழியமைப்பிலும் காணமுடியாத தொன்றென்றும் காட்ட இங்கு மங்குமாக ஒருசில கருத்துக்களேயே இங்குக் குறித்துள்ளேன்.

தமிழ் இலக்கணநூலினும் நான் பெரிதும் கற்றவனல்லேன். கணக்காயர்பாற் சிறுபிராயத்திற் கற்ற சிலவும் மறப்பெனும் பகைவன் வாரிக்கொள்ள கின்ற முதுமைப் பருவமுற்றவன். இஃதன்றி உண்மை நூல்களிற் கண்ட பொருளியல்புகளையும் கற்றவனல்லேன். இவ்விரண்டினும் வல்ல பெரியோர்பால் அங்கங்கே அவ்வப்போது கேட்ட சில கருத்துக்களை ஒன்றுசேர்த்து ஒப்புப் பார்க்கத் தமிழ் மொழிக்கு வேறெம்மொழியமைப்புக்கு மில்லாச் சிறப்பு இயல் ஒன்றிருப்பதாகக் கண்டதொரு உண்மையை ஒரு சிறிது கூறலாம் என்ற ஆசையே இதனை எழுதுவித்தது. பிழையுளன பொறுத்திடுதல் பெரியோர் கடன்.

கர்னடக சங்கீதம்

திரு. இசைத்தமிழ்ச்செல்வர். தி. இலக்குமணபிள்ளை அவர்கள் B.A.,
இசைத்தமிழாசிரியர், திருவனந்தபுரம்.

இசை, அல்லது, சங்கீதம் என்று குறிக்கப்படும் நுட்பக்கலை ஒரு குலத்தாருக்கோ, ஒருசமயத்தாருக்கோ மட்டும் சார்புடையதன்று. அது எல்லா மனிதரையும், எல்லா உயிர்ப்பிறவிகளையும் பொதுவாக உள்ளியக்க வல்ல ஓர் உணர்ச்சி மொழி (Language of Feeling) ஆகும். தம்முள் மாறுபட்டு நிற்கும் நாட்டினரையோ, சமுதாயத்தாரையோ, மதத்தாரையோ, ஒன்றுபடச் செய்யும் வன்மையில் இதினும் மேம்பட்ட ஓர் கலை உலகத்தில் இதுகாறும் தோன்றவில்லை யென்று உறுதியாகக் கூறலாம். இக்கட்டுரையிற் குறிப்பிடுவது கர்னடக சங்கீதம், அல்லது, தென்னிந்தியாவில் நடைபெறும் சங்கீதமாம்.

இந்தியாவில் முற்காலத்தில் எழுந்து விளங்கிய எவ்வித இயற்கை நூல்பகுதிகளும் (Material Sciences) இப்போது மேற்கத்திய நாட்டார் வெளிப்படுத்தி வருகின்ற இயற்கை நூற்பகுதிகளுடன் ஒப்பிடத் தகுந்த பெருமையுடையன வல்ல. உதாரணமாக, நம்முடைய வில்வித்தையை எடுத்துக்கொள்வோம். அதிபயங்கரமான பீரங்கி முதலிய யுத்தப் பொறிகள் வழங்கி வருகின்ற இக்காலத்தில், நமது பண்டைய வில்வித்தையினால் என்ன பயன் உண்டாகப்போகின்றது? 'ஜியாமெற்றி' (Geometry), 'ஆல்ஜிப்ரா' (Algebra) என்று ஆங்கிலத்தில் வழங்கிவருகின்ற எண்வகை நூல்கள் நம்நாட்டில் பண்டைக்காலத்தில் ஒரு புராதன முறையில் இருந்திருக்குமேயன்றி, அவ்வகையில் இப்போதுள்ள மேற்கத்திய நூல்களோடு ஒப்புக்கூறுந் தரத்தனவாயிருந்ததில்லை. பண்டை நாள்தொட்டு இந்தியாவில் உபயோகித்துவரும் படகுகளும், சிறிய கப்பல் முதலிய கலங்களும், இக்காலத்தில் கடலோடும் பதினாயிரம் 'டண்' வரைக் கனமுள்ள நீராவிக் கப்பல்களுக்கு நிகராவன்வோ?

இவையெல்லாம் உண்மையே யாயினும், இந்தியாவிலுள்ள சங்கீதக் கலையானது எந்த நாட்டினுமுள்ள சங்கீத ஏற்பாட்டினோடும் ஒப்பிடத் தகுந்த மாட்சியுடையதா யிருக்கின்றது. அதுமட்டுமோ? சில அம்சங்களில் அது மற்றெல்லா ஏற்பாட்டினும் மேம்பட்டதென்றும் கூறலாம். இந்திய நாட்டுச் சங்கீதத்திலுள்ள 'ஜனக ஜன்னிய' ராக ஏற்பாடுபோல், உலகத்தில் எந்த நாட்டுச் சங்கீதக் கலையினும் இல்லை யென்று முடிவுகட்டி யுரைக்கலாம். அமெரிக்காவில் நியூயார்க் (New York) என்னும் பெரிய நகரத்தில் ஆர்கன் (Organ) என்ற சிறந்த வாத்திய வாசிப்பில் உலகமுழுதும் புகழ் பெற்ற டிக்கின்ஸன் (Dickinson) என்னும் பெரியார், "இந்திய இராகங்களுக்கு ஆத்மீக உணர்ச்சியுண்டு" என்று கூறுகின்றார். இம்மாட்சி அமெரிக்க சங்கீத ஏற்பாட்டிற்கோ, அல்லது ஐரோப்பிய சங்கீத ஏற்பாட்டிற்கோ (இந்த அளவில்) உள்ள தாக அவர் குறிக்கவில்லை. ஏனைய நாட்டுச் சிறந்த இசைவல்லார் ஒருவர் நமது சங்கீதத்தைப்பற்றி இவ்வளவு உயர்த்திக் கூறிய அபிப்பி ராயத்தை வாதம் யாதொன்று மின்றியே நாம் ஏற்றுக்கொள்ளலாம். சங்கீதத்தைப்பற்றி ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்ற மகாகவி பின் வருமாறு கூறுகின்றார்:—

> தன்னுள்ளே இசையிலாதான் றனியொலி யினைபி னூறுக்
> கன்னலுண் டுருகான், வஞ்சங் கடுஞ்சதி கேடு செய்யப்
> பின்னிடான், அவன் பிராணன் இசைவுறு திரவுபோலக்
> கொன்னர கிருளே வாய்ந்த குணத்தினன் நம்பொறாதே.

நமது நாட்டுக் கவியொருவர்,

> ஓடுங் கொடிய விடப்பாம்பு, பேயும் இசைகேட்டுள்ளுருகி
> யாடுங், கருங்கல் லசைந்துவிடும், அழுதகுழவி குரலடங்கும்,
> மாடும் இசைகேட்டுழுதுவரும், வந்த பசுவும் பால் சுரக்கும்;
> பாடும் இசைகேட்டுருகாரை என்னென் றுரைப்பேன், பாவலரே?

என்று சாற்றுகின்றார்.

ஆயின், உலகத்தில் எல்லாருக்கும் சங்கீதத்தில் இயற்கையான ஞானம், அல்லது, வாசனை யிருக்குமோ என்பதைப்பற்றி ஐயம் நிகழ லாம். இவ்விடம் ஒன்று துணியலாம். இயற்கையிலே ஞானமுள் ளார்க்கு, சங்கீதக் கேள்வி கிடைத்துக் கொள்ளாமையாலும், கிடைத் தும் அதில் கவனம் செலுத்தப்படாமையாலும், அந்த ஞானம் உண்டோ இலையோ என்று உறுதிப்படுத்த முடியாம லிருக்கலாம். அந்தரங்கத்தில் ஒருவருக்கு இயற்கை ஞானம் இருந்தபோதிலும், பயிற்சியில்லாக் குறையால் அது வெளியிற் பிரகாசிக்க மாட்டாமலிருக் கலாம். ஞானமில்லையென்று நாம் ஒருக்கால் முடிவுகட்டிய ஒருவருக் குப் பிறகு கேள்வி வாய்க்கப்பெற்று ஞானம் வெளிப்படையாய் விளங் கக் கண்டிருக்கிறோம். ஆதலால், இந்தக் கலையில் புலமை வேண்டு மாகில், பயிற்சி, அல்லது, கேள்வி, இன்றியமையாததென்று திட்ட மாய்க் கூறலாம்.

கர்னாடக சங்கீதம்

சங்கீதம் மனிதருடைய கவலைகளையும் துன்பங்களையும் துயரங்களையும் ஒருவாறு தீர்க்குமென்பதும், தற்போதுக்காவது அவற்றையெல்லாம் மறப்பித்து, ஆனந்தத்தை கல்குமென்பதும், உலகத்தில் அறிவாளிகளும் அறிவிலிகளும், அறிந்திருக்கக்கூடிய உண்மைகளே. ஏனெனில், சங்கீதம் ''கல்லார்க்குங் கற்றவர்க்குங், களிப்பருளுங் களிப்பே'' அடங்கிய ஓர் கலை. ஆயின், கேவலம் ஆனந்தத்தை விளைப்பது மட்டுமல்ல சங்கீதத்தின் உண்மையான பயன். அதைவிட மேலான நலப்பாடுகளையும் அது பயக்கின்றது. அவற்றுள், மனிதரின் நெஞ்சத்தைத் தூய்மையாக்குதல், இரக்கத்தை, அல்லது, சகதாபத்தை யுண்டாக்குதல், இவையிரண்டும் அமைவன. உடனுணர்ச்சி, அல்லது, சகதாபம் (Sympathy) உண்டாக்குவதற்கு, சங்கீதம் மிகப் பொருந்திய கலையென்னுங் கொள்கையை ஆங்கிலத்தில் தலைசிறந்த தத்துவஞானியென்று உலகமுழுதும் புகழ்வாய்ந்த ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) என்னும் பெரியார் வெளியிடுகின்றனர். உலகத்தில் மக்களிடையில் பலதரத்தாய துன்பங்களும், நோய்களும், துயரங்களும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அவற்றை நிவர்த்திக்கவல்ல முதன்மையான மனப்பாங்கு உடனுணர்ச்சி அல்லது, சகதாபமே யாகும். இந்த மனப்பாங்கை யுண்டுபண்ணக்கூடிய யாதொரு சாதனத்தையும் கழுவ விடாமல், நெஞ்சார ஆதரிப்பது நமது பெருங்கடமையாமென்பது சொல்லாமலே யமையும். ஆராய்ந்து நோக்குங்கால் அன்பு என்பதும், உடனுணர்ச்சி யென்பதும், முடிவில் ஒன்றே. அவை ஒரு நாணயத்தின் இருபுறங்கள் போலவாம். அன்பு இருந்தாற்றான் உடனுணர்ச்சி பிறக்கும். எவ்விடத்தில் உடனுணர்ச்சி யிருக்கின்றதோ அவ்விடத்தில் அன்பும் இருக்குமென்று அநுமானிக்கலாவதே. கர்னாடக சங்கீத ஏற்பாட்டில் எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்கள் உண்டாயிருப்பன, எழுபத்திரண்டு வகையான அன்பின் திறப்பாடுகள் (Aspects), அல்லது, மெய்ப்பாடுகள் (Expressions) என்பது குறிப்பிடத்தக்கது. ஆயின், கர்னாடக சங்கீதம் எல்லாவித நல்ல மனப்பாங்குகளுக்கும் விளைநிலமாயிருப்பினும், பகை, அல்லது, இகல், என்னும் உணர்ச்சிக்கு அது இடந்தருவதன்று. மேற்கத்திய சங்கீதம் வீர ரசத்தின் கொடிய மிகையான யுத்த உணர்ச்சிக்கு இடந்தருகின்றது. இதற்குதாரணமாக, ட்ரைடன் (Dryden) என்னும் ஆங்கில கவிஎழுதிய ''அலெக்ஸான்றரின் விருந்து'' (Alexander's Feast) என்னும் பாவினைப் பார்க்க வீரம் என்னும் உணர்ச்சியொழிய, யுத்தத்திற்கு உந்துகின்ற சங்கீதரசம் நமக்குள் இயல்பாகவே இல்லை யென்னலாம். யுத்தமும், அன்பும் ஒன்றுக் கொன்று மாறுபட்ட கோளுடையன. வீரரசம் தற்காப்புக்கும், கொடுமையை யொழிப்பதற்கும் உதவுவதே யன்றி; வலுவில் போர் செய்வதற்கு உதவாது. இவ்வொரு காரணம் பற்றியே, இந்து சங்கீதம் மனிதரின் ஆன்மீக முற்போக்குக்கு (Spiritual Progress) உதவியாய் நிற்கின்றதென்று ஐயந் திரிபறக் கூறலாம். டிக்கின்ஸன் (Dickinson) என்னும் பெரியார், இந்து சங்கீதத்தைப்பற்றிக் கூறியிருத்தல் உண்மையானதென்று இதனால் உய்த்துணரற்பாலது.

கர்னாடக சங்கீதம்

சாதியினாலும், மதத்தினாலும், மொழியினாலும் வேறுபட்டிருக்கின்ற சமுதாயங்களை ஒருவாறு ஒற்றுமைப்படுத்தல் இந்தியாவின் தற்கால அரசியல் நிலைமைக்கு இன்றியமையாத காரியமாமென்பது இப்போது காட்டன்பர் யாவரும் அறிந்திருக்கக் கூடியதே. அந்த ஒற்றுமைக்கு ஒரு துணைக்கருவியாக விளங்கவல்ல ஆற்றலும், மாட்சியுமுடைய சாதனம் சங்கீதக் கலையென்று திட்டமாய்ச் சொல்லலாம். ஓர் சங்கீதக் கச்சேரியில் ஒருவருக்கொருவர் வேற்றுமையுடைய பலதிறத்தாரும் ஒன்றுகூடியிருந்து கேட்டு ஆனந்திக்க இயலுவதாகும். இசை கய மறிந்து இன்புறுவதற்கு, சங்கீதத்திற் சற்றே பயிற்சியும் ஏற்படுமாயின், அது மிகப்பயன் படுவதாகும். இப்போது ஒரு சங்கீதக் கச்சேரி கேட்பதற்கு சங்கீதத்திற் சற்றும் பழக்கமில்லாத ஒருவர் வந்து சேர்ந்தால், ஏதோ காதுக்கினிமையான சில சப்தங்கள்மட்டும் கேட்கலாமே யொழிய, சங்கீத வித்வான் என்ன இராகம் பாடுகின்றார் என்றறிவதற்கு வழியில்லாமல், அடுத்திருக்கும் ஓர் கண்பரிடம் உசாவ வேண்டிவருகிறது. அக்கண்பரும் இராகம் இன்னதென்று அறியமாட்டாதவராயிருக்க, தனக்குத் தெரியாதென்று சொல்வது குறைவென்றெண்ணிப் பிசகாக ஒரு இராகத்தின் பெயரைச் சொல்லலாம். அல்லது, அவர் மற்றொரு கண்பரிடத்திற் கேட்க, அவரும் தெரியாதவராயிருந்தால், அக்காடகத்தையே பின்பும் நடித்துக் காட்டலாம். ஆகவே, உண்மை யுணருவது பலருக்கும் பெரும்பாடாய் முடியலாம்.

இதற்கெல்லாம் காரணம் மனிதர் இளமையில் தங்கள் தங்களுக்கே நேரிற் சங்கீதப் பயிற்சி செய்து கொள்ளாமையும், கேள்வி முயலாமையுமே யாம். சங்கீதத்தில் பெரும்பயிற்சி ஒருவர் செய்து கொள்ளாவிடினும், இராகங்கள் தம்மிலுள்ள வேறுபாடுகளை யுணரத்தகுந்த அறிவையாவது பெற்றுக்கொள்வது அகத்தியம் என்பது வெளிப்படையாம். ஆதலால், ஆண்குழந்தைகளுக்கும் பெண்குழந்தைகளுக்கும் சங்கீதப் பயிற்சி செய்விப்பது தாய்தந்தையரின் முதற்கடமையாகும். அப்படிச் செய்யாவிடின், அது ஒரு பாவமென்றே கூறிவிடலாம். ஏனெனில், கடவுளே குழந்தைகளுக்கு இயல்பாகக் கொடுத்திருக்கும் சங்கீத வாசனை, தாய்தந்தையரின் அசட்டையால், அவர்களுக்குப் பயன்படாமற் போகின்றது. உலகத்தில் பூசொத்து எப்படியோ, அப்படியே சங்கீதஞானமும் ஒரு அழியா உடைமையாகக் கணிக்கப்படவேண்டும். நாம் பூசொத்தினால் வரக்கூடிய ஆதாயத்தை வருந்திப் பாடுபட்டுக் கண்டுபிடித்துச் செலவுசெய்து, பிறகு பல முகமாக இன்பத்தைத் தேடிக்கொள்ளுகிறோம். அவ்வளவு பாடுபடாமல், இருந்த இடத்திலிருந்துகொண்டே ஆனந்திக்கும்படி சங்கீதம் நமக்கு வசதியளிக்கின்றது. அது மழையிலும் வெய்யலிலும், வாழ்விலும் தாழ்விலும், ஒரே தன்மைத்தாய இன்பமும், அமைதியும் ஈயவல்ல சிறந்த கலையாம். அது தரும் பரமானந்தத்திற்கு ஈடு சொல்லக்கூடிய இன்பம் மற்றொன்றில்லை. இது சங்கீதத்தில் ஈடுபட்டவர்க்கே முற்றிலும் தெரியவரும். உயர்குலத்திற்கும்,

கர்னாடக சங்கீதம்

இழிகுலத்திற்கும், அரசனுக்கும், ஆண்டிக்கும், இன்னும் ஊர்வன, நடப்பன, பறப்பன, நீந்துவனவாகிய எல்லா உயிர்ப் பிறவிகளுக்கும் அது அலகிலா ஆனந்தத்தை யளிக்கவல்லது. இந்தியர்கள் இயல்பாய் ஏழை நிலைமையிலிருப்பினும், பெருமிதத்தில் (Luxury) இருப்பவர்களைக் காட்டிலும் அதிக சுகத்தை இந்திய சங்கீதம் ஒன்றினால் அடையலாகும். சங்கீதம் பாட அதிகச் செலவும் வேண்டாம். பத்து ரூபாய்க்குக் கிடைக்கக் கூடிய ஒரு தம்பூரின் உதவிமட்டுமே போதுமானது. தம்பூரில்லாவிடில், ஒரு சுருதிப்பெட்டியை வைத்தாவது பாடலாம். அதுவும் இல்லையென்றால், ஒரு தந்தியின் இரண்டுமூன்று கம்பியும் இறுகக்கட்டி ஒலிப்பித்தும் பாடலாம். அல்லது, ஒருவனைப் பக்கத்தில் சுருதி மூளச்சொல்லிக் கேட்டுக்கொண்டும் பாடலாம். ஏழை இந்தியருக்கு இத்தக் கலை கருணைக் கடலாகிய இறைவனே அவர்களுடைய ஏழைமையை அறிந்து பரிகாரமாய்க் கொடுத்திருக்கின்ற ஓர் இன்பக் களஞ்சியம் போலும்! ஆதலால், நமது சிறுவர் சிறுமிகளுக்கு இசைப்பயிற்சி செய்விக்க வேண்டியவரும் சொற்பச் செலவைச் செலவாகப் பாராட்டாமல், அவர்கள் வாழ்நாள் முழுதும் நுகரக்கூடிய ஆன்மவின்பம் ஒன்றையே கருதி, அவர்களுக்கு அப்பயிற்சியைக் கொடுக்கவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். பிற ஆதாயங்களால் கிடைக்கக் கூடிய சுகத்திலும் எத்தனையோ மடங்கு அதிக சுகம் சங்கீத மூலமாய்ச் சுலுவாய்க் கிடைக்குமென்றால் அதிற் பயிற்சி யளிக்காமலிருப்பது பேதைமையன்றோ? அளித்தால், அது இசைவல்லாருக்கு நியாயமான தொழிலாதாயமும், சிறுவர்சிறுமிகளுக்குத் தாமே இன்புற்று வாழ ஓர் மூலதனமும், நமது சங்கீதக் கலைக்குப் புத்துயிரளிப்பும், ஆகுமன்றோ? இப்போது கல்யாணம் முதலிய சடங்குகளில் சிலர் சிறுவாடகை கொடுத்தாவது, இலவசமாகவாவது, கிராமபோன வாங்கிவைத்து இசையரங்கு நடத்துவதால், சங்கீத வித்வான்களின் வாயில் மண்ணேற்றப்பட்டு வருகின்றது. சங்கீத வித்வான்களின் குரல்முகாந்திரம் உணர்ச்சி கலந்துவரக்கூடிய இன்பமும் இல்லாமற் போகின்றது. இயந்திரச் சங்கீதம் சிறுவர்களைக் கேட்கவையாமல் இருக்கவேண்டுமென்று ஜான் கியூபெலிக் (Jan Kubelik) என்னும் உலகமுழுதும் பெயர்பெற்ற பிட்டில் வாத்தியப் பேரிசைவல்லார் எடுத்துக் கூறுகின்றார். சடங்குகளில் கிராமபோன வாங்கிவைத்தல் சங்கீத வித்வான்கள் தங்கள் குழந்தைகளுக்கு சங்கீதத் தொழிலை விட்டு வேறுதொழில் எடுத்துக்கொள்ள உபதேசிக்கும்படி அவ்வளவு வெறுப்பையும் துன்பத்தையும் உண்டாக்குகின்றது. அது நமது தெய்வத் தன்மை வாய்ந்த இசைக்கலைக்கே உலைவைப்பது போலவாம். அவ்வாறு ஒருக்காலும் செய்யலாகாது. இசை வல்லாரை ஆதரிக்கப் போதுமான செலவு செய்வது நமது உற்ற கடமையென்றே எண்ணவேண்டும். அந்தச் செலவு இசைக் கலையை உலகத்தில் நின்று நிலவச் செய்வதற்கு அடிப்படையான, மறுக்கலாகாத செலவென்றே நாம் கருதவேண்டும்.

கர்னாடக சங்கீதம்

எல்லாக் குழந்தைகளுக்கும் இசைப்பயிற்சி கொடுக்கவேண்டு மென்று நான் சொன்னதால், எல்லாரையும் சங்கீத வித்வான்களாக்கி விட வேண்டுமென்ற கருத்துடையேனல்ல. அவ்வாறு ஆக்க ஒருவ ராலும் இயலுவதுமல்ல. சாமான்னிய சங்கீதப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கு மளவில், அப்பயிற்சி பெறுவோன் சங்கீத வித்வானுகத் தலைசிறந்து வருவானென்ற முற்குறிகள் எழுமென்றால், அதில் உயர் தரப் பயிற்சி அவனுக்குக் கொடுப்பதால் உலகிற்கு இன்பமே கை கூடும். பெரும்பாலும், இத்தன்மையான குறிகள் எழா. மற்று, ஒரு குழந்தைக்கு இசையில் இயற்கை ஞானம் உண்டோ இல்லையோ என்று முதற்படியிலே தெரிந்துகொள்ளலும் இயலாததாயிருக்கலாம். எந்தக் குழந்தைக்கும் ஏறக்குறைய ஆறுமாத காலமேனும் பயிற்சி யளித்துச் சோதித்த பின்தான் அதைப்பற்றி ஓர் முடிவுகட்ட முடிய லாம். இசையின்பம் நுகர்தலுக்குவேண்டிய அறிவாவது ஒருவருக்குப் பயிற்சியாற் கிடையாமலிராது. பின் கேள்விமுயல்வதால், அந்த அறிவு வளர்ச்சியுற்று, வற்பும் வளமும் பெறலாம். ஆகவே, சாதாரணமான சங்கீதப் பயிற்சி பெற்றோர் நல்ல சங்கீதம் கேட்டால், சற்று விவரத்தோடு ஆத்மானந்தம் நுகர்தலும், பிறர்க்கின்னு செய்யாது, தமக்குத்தாமே இன்பவாழ்க்கை நடாத்திக்கொள்ளலும் இயலுவதாம்.

சிலர் சங்கீதம் சிற்றின்ப வுணர்ச்சியை எழுப்பி, ஒருவனுடைய சன்மார்க்க நடையைப் பிறழச் செய்யும் என்று கினைப்பதுண்டு. இதைவிடப் பிசகான ஓர் கோட்பாடு உலகத்தில் மற்றொன்றில்லை யென்று சொல்லலாம். எவ்வாறெனில், சங்கீதம் என்பது வானத்தி னின்று விழும் மழை நீர் போலவாம். அதற்கு எவ்வகையான சுவை யும் இயற்கையிலில்லை. வானநீர் மண்ணில் விழுந்தால், அது எவ்வாறு தான் அடையும் நிலத்தின் நீர்மையைப் பெற்றுக்கொள்ளுமோ, அவ்வாறே சங்கீதம் எந்த விடயத்திற்காக உபயோகிக்கப்படுமோ, அந்த விடயத்தை அணைந்து அதன் சுவையைத் தந்துநிற்கும். பக்தி விஷயத்திற்கு இதினும் பெரியதோர் துணைக்கருவி வேறொன்றில்லை. சிற்றின்பத்திற்கும் அது துணைநிற்குமென்றாலும், அதனால் கேடு வராது. உயர்ந்த காதலுக்கே துணையாகும்; காமத்திற்காகாது. அவரவர் வீடுகளுக்குள்ளேயே நல்ல சங்கீதம் பெறப்படுமென்றால், அயலாரை அணைந்து அதைப் பெறவேண்டிய அகத்தியம் ஒருபோதும் தோன்றாது. உலகத்தில் சங்கீதப் பழக்கமுடைய சிறுபான்மையோர் சிற்றின்பவழியிற் கெட்டுப்போவார் என்றால், அவர் எப்படியும் கெட் டுப்போகக் கூடியவரே. அதாவது, அவருக்குச் சங்கீதப் பயிற்சி அளிக்கப்படினும், படாவிடினும், கெடுபவரே. அது சங்கீதத்தால் வரும் கேடன்று; இயற்கையில் தீயகுண முனைப்பால் வருங்கேடே. அதை கினைத்து, ஒருவருக்கு சங்கீதப் பயிற்சி கொடுக்கலாகாதெனக் கொள்வது, சிலகாற் பெருமழை பெய்வதால் பெரு வெள்ள முண்டாய் ஆடுமாடுகளையும், சிறு குடிசைகளையும் இழுத்துக்கொண்டுபோய் அழித்துவிடுவதால், மழையே வேண்டாமென்று கினைப்பதுபோலவாம்.

இனி, சங்கீதத்தால் வரும் பெருநலங்களைப்பற்றிச் சிறிது சிந்திப் போம். அந்நலங்கள் (1) உடற் சார்பாகவும், (Body) (2) மனச் சார் பாகவும், (Mind) (3) இதயச்சார்பாகவும் (Heart) (4) ஆன்மச் சார்பாகவும், (Soul) இப்படி நான்கு வகைகளினும் உள்ளனவாம்.

உடற் சார்பு

பாட்டுப் பாடுவதால் இயற்கையாயுள்ள குரல் உரமுற்று நன்மூவ தோடு, நமது மார்பினுள்ள தசைகளுக்கும் சுவாச ஈரலினுள்ள (Lungs) தசைகளுக்கும் அசைவுண்டாய், அதனால் அவ்விடங்கள் உரப்படவே, காசம், இருமல், கபை முதலிய நோய்கள் உடலில் இடம்பெறுமல் போய்விடும். "நோய்க்கிடங் கொடேல்" என்பது ஆன்றோர் வாக்கு. இசை வல்லாருக்கு இந்நோய்கள் சாதாரணமாய்ப் பிடிபடாமலே இருப்பதோடு, அருகியவழி பிடிபட்டாலும், அவர் உயிருக்கு இடையூறு வராமலிருப்பதற்கும் சங்கீதம் துணைக்காரணமாய் நின்றுதவியதாக அநுபவத்தால் வெளிப்பட்டிருக்கின்றது. மருத்துவநூற் சார்பாக ஆங்கில டாக்டர்கள் உபதேசிக்கின்ற நீண்ட மூச்சுவிடுதல் (Long breath) முதலிய பயிற்சிகள் வாய்ப்பாட்டில் இயல்பாகவே அமைந்து கிடக்கின்றன.

மனச்சார்பு

நமது கவலைகளுக்கு ஓய்வும், துயரங்களுக்கு ஆறுதலும் சங்கீதத் தால் கிடைக்கலாகும். இதைத்தவிர, சங்கீதக்கலையின் தனிச்சுவையால், ஆனந்தமும் உண்டாகின்றது. இசை கேட்கும்போது நம்முடைய அயற்பாடுகளிலுள்ள விசார காரணங்களைத் தற்காலமேனும் நாம் மறக்கின்றோம். மனதுக்குள்ள ஆனந்தத்தால் மற்றொருவழியினும் நமக்கு உடனலம் கிடைக்கின்றது.

இதயச்சார்பு, அல்லது, உணர்ச்சிச் (Feeling) சார்பு

முதலாவது, சங்கீதம் இதய சுத்தியை யுண்டாக்குகின்றது; அதாவது இதயத்திலுள்ள அழுக்காறு, காடு, கறைகளை நீக்க அது துணைக்கருவியாய் நிற்கின்றது. எவ்வாறென்றால், இராகங்களுடைய அழகிய சுரச்சேர்க்கைகள் (Beautiful combinations of Musical Notes) இதயத்தில் அழகிய உணர்ச்சிகளை எழுப்புகின்றன. அழகிய உணர்ச்சிகள் ஏராளமாய் உள்ளத்தில் நிகழும்பொழுது, அழகலாதன வாகிய அழுக்காறு, அவா, வெகுளி, பொல்லாங்கு முதலிய தீய உணர்ச்சிகள் இருப்பிடங்கிடையாமல் வெளிக்கிளம்பிவிடும். அழகிய உணர்ச்சிகள் இதயத்தில் பெருகும்போது, அழகலாதனவாகிய செயல்களும் இல்லாமற் போகின்றன. ஏனெனில் உணர்ச்சியும், செயலும் ஒன்றுக்கொன்று பெரும் இயைபும் புணர்ச்சியுமுள்ளன. ஒரு மனிதனுடைய உள்ளத்தில் அழகிய உணர்ச்சிகள் பெருக்கமுற்று, அவற்றால் அழகிய செயல்களும் வெளிப்படுமாயின், அதுவே அவனுக்கு அறத்தாறெனப் (Virtue)படும். இதெல்லாம், உண்மையான சங்கீதத்தால் உண்மையான ஞானமுடையவரின் உள்ளத்தில் உண்டாகும் நிகழ்ச்சிகள்

என்று கொள்ளவேண்டும். எல்லாப் பாட்டும் உண்மையான சங்கீத மாகாது. அன்றியும், சங்கீதத்தால் வரும் நற்பயன்கள் வேறு காரணங் களால் சிதைவும் படலாம். இவ்வாறு அறத்திற்கும் இசைக்கும் எவ்வளவு நெருங்கிய உறவுண்டென்பது சிந்திப்போருக்கே தெரியவரும். இப்படி நினைத்தே, பழய க்ரீஸ் (Greece) நாட்டார் குழந்தைகளின் கல்விப்பயிற்சியின் முதற்படியில் சங்கீதத்தைக் கட்டாயப் பாடமாய் வைத்திருந்தார் போலும்! க்ரீஸிலிருந்த ப்ளேற்றோ (Plato) என்னும் பெரிய ஞானி சங்கீதத்தைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு உரைக்கின்றார்:—

"சங்கீதம் இப்பிரபஞ்சத்திற்கு ஓர் ஆன்மாவையும், மனதுக்குக் களர்ச்சியையும், கற்பனாசக்திக்கு (Imagination) உயர்வையும், துயரத் துக்கு ஓர் வனப்பையும் எல்லாவற்றிற்கும் களிப்பையும், உயிரையும் அளிக்கின்றது. அது ஒழுங்கின் உள்மயமாயிருந்து, நல்லதும், நடு நிலையும், அழகும், ஆகிய எவ்வெவைக்கும் ஓர் வழிகாட்டியாயிருப்ப துடன், அவற்றில் மறைந்துகிடக்கின்ற சிறந்த, அழுந்திய, என்றும் அழிவுரு, வடிவமுமாகும்."

ஆன்மச்சார்பு

ஆன்மீகமாய் நோக்குங்கால், சங்கீதம் இந்த உலக வியாபாரங்களைத் தற்காலம் மறப்பித்து, மறுமையின் உண்மையை நேரிட்டுத் தெளிவித் துக்காட்டி, பரம்பொருளின் நித்யசுக நிலையின்பால் மனதைத்திருப்பி, வாக்குக் கதீதமான ஓர் ஆன்மீக உணர்ச்சியை எழுப்புகின்றது. இன்னும், எல்லாச் சங்கீதத்தைப் பார்க்கினும், தெய்வத்தைக் குறித் துள்ள சங்கீதத்தின் உதவியால் அதாவது, பக்தியுணர்ச்சியோடுகூடிய கீர்த்தனங்கள், சங்கீர்த்தனங்கள், பாடல்கள் முதலியவற்றால், தெய்வ பக்தி, தெய்வத்தியானம், ஆன்மஞானம் இவற்றைத் தன்படியே பிறப் பிக்கின்றது. தெய்வபக்தி யென்பது உலகத்தில் நல்லொழுக்க நிலை பேற்றிற்கு அடிப்படையாய்க் கிடக்கின்ற ஓர் தன்மையே.

இவ்வாறு, நான்கு வழியாகவும் இயலும் நன்மைகளால், சங்கீதம் உலகத்திற்கு எவ்வளவு இன்றியமையாததென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

ஆன்மீகமாகிய ஓர் ஒற்றுமையை உள்ளே பிறப்பிக்கும்போழ்து, மக்களிடையில் அந்தமட்டுக்கும் அழுக்காறு, பகை முதலிய தீய உணர்ச்சிகளை சங்கீதம் அகற்றும் என்பது நியாயமாக உய்த்துணரக் கிடக்கின்றது. முன்கூறியவாறு, மதவைராக்கியம் என்பது மக்களி டையில் கடுமையான பிளவுகளையுண்டாக்கி வருகின்றது. இப்பிளவு களை ஒருவாறு தீர்க்கவல்ல ஒரு சாதனம் உலகத்திற்கு எப்போதும், எவ்வளவும் தேவையாயிருக்கின்றது. மக்களிடையில் சகோதர உணர்ச்சியைப் பிறப்பித்து, ஒற்றுமையுண்டாக்குவதே சமயத்தின் முதன்மையான கடமையாகும். இவ்வுண்மைக்கு நேரெதிராக, இப்போது நிலவும் பலசமயங்களும் நாட்டுப் போரையும், தீராப் பொறுமையையும் நீங்காப் பகைமையையும், ஊட்டி வளர்த்து

வருவதைக் காண்கின்றோம். தெய்வம் ஒன்றே. கிறிஸ்தவருக்கு ஒரு தெய்வம்; மகம்மதியருக்கு ஒரு தெய்வம்; இந்துக்களுக்கு ஒரு தெய்வம்; வெவ்வேறு தெய்வங்களில்லை. தெய்வத்தின் உண்மையான உருவைக் கண்டறிந்தவருமில்லை. ஆயினும், கண்டறியக்கூடிய சடப் பொருளுடைமையைப் பற்றிய வழக்கையும் தீராப் பகையையும் விடக் கடிய கேட்டைச் சிலசமயங்கள் விளைக்கின்றன. இங்கிலைமைக்குக் காரணம் என்ன? சமயங்களெல்லாம் அடிப்படையாகக் கூறும் உண்மைகள் மிக்கவாறும் ஒத்தேயிருக்கின்றன. ஆயின், உண்மைச் சமயவுணர்ச்சிக்கு அவசியமல்லாத சில வெளியாசாரங்களின் வேறு பாட்டால், பகைமை முதலிய வேற்றுணர்ச்சிகள் எழுகின்றன. தத்தம் மதக்கோட்பாடுகளே பெரியன; தத்தம் மதக்குருக்களே பெரியவர்; ஏனைய கோட்பாடுகள் பொய் நிரம்பியன; ஏனைய குருக்கள்மார் புரட்டர்கள்; என்று கொண்டு, அகந்தையும் மதவெறியும் பிடித்துந்த, பலவிதமான கலகங்களும் கேடுகளும் உண்டாகின்றன. இக்கலவரத் தினிடையில், இதயசுத்திசெய்து, ஒற்றுமையை காட்டவல்ல ஒரு விடயமும் தலைநீட்டக் காண்கிலோம். மக்களிடையில், உண்மையான ஆன்மீக வாழ்வு மருந்துக்கும் கிடையாது.

இக்கிலைமையில் எல்லாகாட்டாருக்கும், எல்லாச் சமயத்தாருக்கும் ஆன்மீக உணர்ச்சியையும், ஒற்றுமையையும் ஒருவாறெனினும் தரவல்ல ஓர் கலையுண்டெனில், அது சங்கீதமேயாகும். அத்தகைய சங்கீதமே நமது கர்னாடக சங்கீதம்.

அது எவ்வகை வகுப்பாளரும், எல்லாவகுப்பாளரும் ஒருங்கிருந்து ஒற்றுமையாய் ஒழுகக்கூடிய ஓர் அரங்கினை உண்டாக்குகின்றது. சாதி வேறுபாட்டுக்கு அடிப்படையாக, உணவுவேறுபாடு முதலிய ஒழிக்கலா காத காரணங்கள் இருப்பினும், அதனிடையில் அவ்வேறுபாட்டுணர்ச் சியை மறக்கவைத்து மக்களிடையில் ஒருவாறு ஒற்றுமை விளைக்கக்கூடிய சாதனங்கள் யாதேனும் உண்டெனில், அவை நுட்பக்கலைகளே (The Fine Arts). ஆயின், நுட்பக்கலைகளில் அதிநுட்பமானது சங்கீதம் (Music is the finest of the fine arts) என்று எர்பர்ட் ச்பென்சர் (Herbert Spencer) என்னும் பெரிய ஆங்கிலத் தத்துவஞானி உரைக்கின்றார். ஆதலால், சங்கீதம் சாதிவேறுபாட்டையும், மதவேறுபாடுமுதலிய மற்றைய வேறு பாடுகளையும் பாராட்டாமல், எல்லாராலும் போற்றத்தகுந்த கலையென் பதை நாம் மனதார உணர்ந்து நடந்துகொள்வோமாக!

சான் கியூபெலிக் (Jan Kubelik) என்னும் உலகப்புகழ் வாய்ந்த ஐரோப்பிய பிட்டில் வாத்திய மகாவித்வான், கீழ்க்கண்டவாறு கூறு கின்றார்:—

"சங்கீதம் ஒரு பெருமித போகம் (Luxury) அன்று; ஒவ்வொருவருடைய தினசரி வாழ்க்கையில் ஓர் பகுதியாயிருக்கின்றது, அல்லது இருக்கவேண்டியது, என்றே கொள்ளவேண்டும்."

"Music is, or should be, not a luxury, but a part of every one's daily life."

Jan Kubelik.

நரலோக வீரன்

திரு. க. அ. நீலகண்டசாஸ்திரி அவர்கள் M.A.,
இந்தியசரித்திர விரிவுரையாளர், பல்கலைக்கழகம் சென்னை.

தமிழ்நாடு சோழ அரசர்கள் காலத்தில் மிகவும் மேன்மைபெற்று நாகரிகத்தில் சிறந்து விளங்கி நின்றது என்பது யாவரும் அறிந்த செய்தியாகும். இவ்வரசர்களின் ஆதிக்கம் கி. பி. பத்தாம் நூற்றாண்டுமுதல் பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை சுமார் 300 வருஷங்களுக்குமேல் நிலைத்து நின்றதாகச் சொல்லலாம். அந்தச் சமயத்தில் தமிழ்நாடு முற்றிலும் சோழர்களின் புலியாணை நடந்துவந்தது. இலங்கைத் தீவும் சிலகாலம் சோழ இராச்சியத்தின் பகுதியாயிற்று. நாட்டு எல்லைகளில், விசேடமாகத் துங்கபத்திரை நதியின் கரைகளில், பெரும் போர்கள் நடந்தபோதிலும், உள்நாடுகளில் கலகங்களும் சச்சரவுகளும் அடங்கி, விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலியன செழிப்புற்று விளங்கின. கிராமங்கள்தோறும் பள்ளிக்கூடங்களும் கோயில்களும் நிறுவப்பட்டன. அரசாங்கத்தில் நிர்வாகமுறைகள் புதிதாக வகுக்கப்பட்டன. இதனால் படிப்பாளிகள் அநேகருக்கு உத்தியோகங்கள் கிடைக்க இடம் உண்டாயிற்று; இப்போது நாம் பார்ப்பதுபோல் அக்காலத்திலும் உத்தியோகம் பெற வேண்டி மக்களும் அதிகமாகப் படிக்கத் தொடங்கினர்கள். சைன்யத்திலும் கப்பற்படையிலும் போர்வீரர்களுக்கும் மாலுமிகளுக்கும் வேலைகள் கிடைத்தன. தமிழ்நாட்டு வியாபாரிகள் கடல் கடந்து அயல் நாடுகளுக்குச் செல்வதும் அயல்நாட்டு வணிகர்கள் தமிழ்நாட்டுக்கு வியாபாரத்திற்காக வருவதும் வழக்கமாக ஏற்பட்டது. இம்மாதிரி சோழநாடு மேன்மையடைந்து விளங்கிக்கொண்டிருக்கும் சமயத்தில், நாட்டின் கலத்திற்காகவும் அரசனுடைய உயர்ச்சிக்காகவும் எப்பொழுதும் பாடுபட்டுக்கொண்டிருந்த அரசாங்கப் பணியாளர்கள் பலர் இருந்திருக்கவேண்டும். அவர்களில் சிலருடைய சரிதங்கள்மட்டுமே நமக்கு இப்போது சாசனங்கள் வாயிலாகவும் இலக்கியங்களின் உதவியாலும் அகப்படக்கூடியன. இச்சரிதங்களில் ஒன்று நாம் இங்கு ஆராயப்புகும் 'நரகலோகவீரன்' என்ற புகழ்நாமம் பெற்ற வீரனின் சரிதம்.

நரலோக வீரன்

இவனைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் சுமார் பதினைந்து ஆகும். ஆனால் அவைகளுக்குள் மிகவும் கல்ல கடையில் இசைந்த வெண்பாக் களா லமைந்து சரித்திரப் பொருள் பொதிந்து கிடப்பன இரண்டே ; இவை சிதம்பரத்திலும் திருவதிகையிலும் காணப்படுகிற கல்வெட் டுக்கள். இவை திரு. மு. இராகவய்யங்காரவர்களால் தொகுக்கப்பட்ட 'பெருந்தொகை'யில் 1059—1119 எண்கள்பெற்ற பாடல்களாக அமைந் திருக்கின்றன. சிதம்பரம் சாசனத்திற்கு ஒரு வடமொழிப் பகுதியும் உண்டு ; அது கிரந்த எழுத்துக்களில் செதுக்கப்பெற்றது ; 'தென் இந்திய சாசனங்கள்' என்ற தலைப்பின்கீழ் அரசாங்கக் கல்வெட்டு இலாகா அங்கத்தினரால் பதிப்பிக்கப்பட்ட தொகுதிகளில் கான்கரம் தொகுதியில் வெளிவந்திருக்கிறது. கல்வெட்டுக்களில் மட்டுமின்றி, விக்கிரமசோழனுலாவிலும் நரலோக வீரன் இரண்டு கண்ணிகளால் புகழப்பட்டிருக்கிறான்.

சாசனங்களில் இவன் பல பெயர்களால் குறிக்கப்படுகிறான். அவை யாவன : கூத்தன், மணவிற்கூத்தன், அரும்பாக்கிழான், பொன்னம் பலக்கூத்தன், காலிங்கர்கோன், காலிங்கராயன், தொண்டைமான், அருளாகரன், நரலோகவீரன், மானவதாரன் என்பனவும் பிறவும். சிதம்பரம்கோயிலைச் சுற்றி இவன் கட்டின மதிலுக்கு நரலோகவீரன் என்று பெயரிட்டான். இதே பெயரை இவன் இன்னும் பலவிடங் களில் கட்டின மாடங்களுக்கும் மண்டபங்களுக்கு மிட்டபடியால் காரும் இவனை அதே பெயரால் வழங்குவது சரியென்று நினைக்கலாம்.

இந்நரலோகவீரனைக் குறிக்கும் சாசனங்கள் முதற் குலோத்துங்க னுடைய ஆட்சியில் 28-ம் வருடம்முதல் அவன் மகன் விக்கிரம சோழன் ஆட்சியில் 6-ஆம் வருடம்வரை அகப்படுகின்றன ; அதாவது சுமார் கி. பி. 1098முதல் 1124வரை பொதுவாகத் தமிழ்நாட்டுக் கல் வெட்டுக்களின் தன்மை, இந்நாட்டு அரசர்கள், சிற்றரசர்கள், வியா பாரிகள், வீரர்கள் முதலியோரால் இயற்றப்பட்ட தானங்களையும் தர்மங் களையும் சந்திரனும் சூரியனும் உள்ளவரை நிலைநிறுத்துவதாகக் குறித் தனவாயிருக்கும். நரலோகவீரனைக் குறித்த முதற்சாசனமும் அதே மாதிரிதான். அதாவது கி. பி. 1098-ல் நெய்வனை அல்லது திருநல் வெண்ணை என்ற கிராமத்தில் 'உள்ள பொற்குடங் கொடுத்தருளிய நாயனார்' கோயிலுக்கு, நரலோகவீரனை அரும்பாக்கிழான் அரையன் பொன்னம்பலக் கூத்தன் பொற்கோயில் தொண்டைமானுடைய வேண்டு கோளுக் கிணங்கி, சோழவரசன் குலோத்துங்கன் சில விலைநிலங்களைச் சுங்கந்தவிர்த்த சோழநல்லூர் என்று பெயரிட்டுத் தேவதானமாகக் கொடுத்தான். இதனால் கி. பி. 1098-ல் நரலோகவீரன் ஓர் உயர்ந்த வேலையில் அமர்ந்து அரசனிடத்தில் நல்ல செல்வாக்குள்ளவனாக விருந் தான் என்று நாம் ஊகிக்கலாம்.

இவனுடைய பெற்றோரைக் குறித்தாவது பிறந்த ஊர் வருஷம் முதலியவற்றைக் குறித்தாவது இவன் சிறுபிராயத்தில் செய்த காரியங்களைக் குறித்தாவது நாம் ஏதேனும் அறிய வேண்டியதற்குத் தக்க ஆதாரங்கள் ஒன்றும் இல்லை. ஆனால் இவன் வேளாளர்மரபின னென்பது நிச்சயம்; திருவதிகைச் சாசனத்தில் 'வெளாண் குடிமுதலான்' என்று புகழப்படுகின்றான். அரும்பாக்கிழான், மணவிலார்ஏறு, மணவில்வாழ்கூத்தன் என்று பலஇடங்களில் இவன் குறிக்கப்படுகிறான்; அதனால் இவனுக்கு அரும்பை, மணவில் என்ற இரண்டு ஊர்களுடன் நெருங்கிய பழக்கம் இருந்திருக்கவேண்டும். இவ்விரண்டு ஊர்களும் தற்காலம் வடஆர்க்காடு சில்லாவைச் சேர்ந்த செய்யாறு வாலாசா பேட்டைத் தாலூக்காக்களில் பாலாற்றுக்குத் தெற்கே சுமார் ஐந்து மைல் தூரத்தில் இருக்கும் அரும்பாக்கம், மணப்பாக்கம் என்ற ஊர்களே. இவ்வூர்களடங்கிய ஒருநாட்டுப் பகுதியை நரலோகவீரன் தன் மானியமாகப் பெற்றிருந்தான் என்று கொள்வது மிகைஆகாது.

இனி, இவன் வீரமும் ஆற்றலும் இராசபக்தியும் எத்தகையன வென்று சாசனங்களைக் கொண்டே விளக்கலாம்.

* * * * பேரொலி நீர்மோதா
அலைகின்ற வெல்லை யபயனுக்கே யாக
மலைகின்ற தொண்டையார் மன் என்றும்

* * * * தொல்லை நீர்
மண்மகளைத் தங்கோன் மதிக்குடைக்கீழ வீற்றிருத்தி
உண்மகிழுந் தொண்டையர் கோன் என்றும்

கூறுவது சிதம்பரச் சாசனம். திருவதிகையிலும் இதேமாதிரி,

* * * * மண்முழுதுந்
தங்கோன் குடைநிழற்கீழ்த் தங்குவித்த வேற்கூத்தன்
எங்கோன் மணவிலா ரேறு

என்று சிறப்பிக்கப்படுகிறான் நரலோகவீரன். ஆகையால் இவன் தன் அரசனுக்குச் செய்த உபகாரம் மிகச் சிறந்ததென்பது தெளிவாகிறது.

இனி, இவன் எந்த நாடுகளில் என்ன சமயங்களில் போர் புரிந்தான் என்பது விக்கிரம சோழனுலாவின் இரண்டு கண்ணிகளால் விளங்கும்:

* * * * வேங்கையினுங்
கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்து
மோடா விரட்டத்து மொட்டத்து—நாடா
தடியெடுத்து வெவ்வேற ரசிரியவீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோன்

அறுபது வெண்பாக்களுக்கு மேற்பட்ட சிதம்பரம் திருவதிகை ஆகிய இரண்டு சாசனங்களினின்றும் நமக்குக் கிடைக்கும் சரித்திர சமாசாரங்களைவிட அதிகமானசெய்திகளை நாம் இந்நான்குவரிகளிலிருந்துதெரிந்து கொள்ளுகிறோம். இவ்வடிகளில் கூறப்பட்ட நாடுகளில் வேங்கை யென்பது வேங்கியென்னுமூரை இராசதானியாய்ப்பெற்று வெகுகாலம் சாளுக்கிய அரசரால் ஆண்டுவரப்பட்ட தெலுங்குநாடு. இந்நாட்டின் அரசர்குலத்துக்கும் சோழகுலத்திற்கும் முதலாம் இராசராசன் காலந் தொட்டுக் கலியாண சம்பந்தங்கள் ஏற்பட்டன. கடைசியாக கி. பி. 1070-ல் இராசராசன் மகளாகிய இராசேந்திரனுடையபேரனும் அபயனு மாகிய முதற்குலோத்துங்கன் சந்திரவமிசமான சாளுக்கியகுலத்துக்கும் சூரியவமிசமான சோழகுலத்துக்கும் அணியாகவிளங்கி உபயகுலோத்த மனாய் இரண்டு இராச்சியங்களுக்கும் அரசனானன். ஒட்டமென்பது வேங்கைநாட்டுக்கு வடக்கேயுள்ளது; தற்காலம் ஓரிசாவென்று வழங் கப்படுகிறது. வேங்கைநாட்டிலும் ஒட்டத்திலும் நரலோகவீரன் எந்தக் காலத்தில் யாருடன் போர்புரிந்தான் என்பதை விளக்கத் தகுந்த சாத னங்கள் இல்லை. ஆயினும் கலிங்கத்துப்பரணியில் சயங்கொண்டாரால் பாடப்பட்ட கலிங்கப்போரைப்போன்ற சிலபோர்கள் வேங்கை நாட்டுச் சிற்றரசர்களாக ஆண்ட குலோத்துங்கனுடைய மக்களுக்கும் இந்நாட் டுக்கு வடக்கேயுள்ள கலிங்கஓட்ட அரசர்களுக்கும் நடந்ததாகத் தெரி கிறது. இம்மாதிரி நடந்த போர்களில் நரலோகவீரனும் கலந்திருக்க லாம். இன்னும், இரட்டமென்பது ஒருகாலத்தில் இராட்டிரகூட அரசர்களால் ஆளப்பட்டு இரட்டபாடி ஏழரையிலக்கமென்று சோழ சாசனங்களில் குறிக்கப்பட்ட மகாராட்டிரதேசம். அந்நாட்டில் குலோத் துங்கன் காலத்தில் ஆண்டுவந்த அரசன் சாளுக்கியவிக்கிரமாதித்தன். அவனுக்கும் குலோத்துங்கனுக்கும் தீராப்பகை ஏற்பட்டு வெகு இடங் களில் போர்கள் நிகழ்ந்தன. இவைகளில் நரலோகவீரன் சம்பந்தப் பட்டிருக்கலாம். ஆனால் இவையெல்லாம் உலாவின் வார்த்தைகளை வாசிக்கும்போது நம்மனதில் தோன்றும் எண்ணங்களேதவிர வேறில்லை. சிதம்பரம் சாசனத்தில்

* * * * எல்லை

'வடவேங்தர் செல்வமெல்லாம் வாங்கவேல் வாங்கும்
குடவேந்தன் றொண்டையர்கோ'

என்றுவரும் பகுதியினாலும் இவன் வடநாடுகளில் போர் புரிந்திருக்க வேண்டுமென்பது மாத்திரம் தெளிவு.

விழிஞமும் கொல்லமும் திருவாங்கூர் இராச்சியத்தில் மேற்குக் கடற்கரையிலுள்ள ஊர்கள். விழிஞத்தில் ஓர் வலிய அரண் அக்காலத் தில் உண்டு. இந்த இடங்களில் நடந்த போர்களைப் பற்றியும் அவை களில் நரலோகவீரன் பெற்ற வெற்றிகளைப் பற்றியும் சாசனங்கள் வெகு விரிவாய்க் கூறுகின்றன. முதலில் இந்தப் போர்கள் ஏற்படவேண்டிய

காரணமென்னவென்று சுருங்கக் கூறுவோம். குலோத்துங்கன் சோழ நாட்டின் அரசனாக ஏற்பட்டதற்குச் சற்றுமுன் இந்நாட்டில் கலகமும் குழப்பமும் ஏற்பட்டது ; சாளுக்கிய விக்கிரமாதித்தன் மைத்துனனும் அவனால் சோழநாட்டுச் சிங்காதனத்தில் ஏற்றப்பட்டவனுமான அதி ராசேந்திரன் அவன் குடிகளின் கோபத்திற்கு ஆளாகி மாண்டான். நாடு நிலைகுலைந்தது. இந்தச் சமயத்தில் வெகுகாலமாய்ச் சோழர் களுக்குக் கீழ்ப்பட்டிருந்த பாண்டிய சேரவரசர்கள் தங்கள் சுதந் திரத்தை மீட்டுக்கொண்டனர். குலோத்துங்கன் அரசனாய் வந்ததும் முதல் முதல் விக்கிரமாதித்தனுடைய பகையை அடக்கச் சென்றான். துங்கபத்திரைநதிவரையுள்ள நாட்டை முன்போல் சோழநாட்டுடன் சேர்த்தான். அதன்பிறகு பாண்டிநாட்டையும் சேரநாட்டையும் மறுபடி சோழ ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர எத்தனித்தான். அந்த எத்தனம் சரிவரமுடிந்தது. முன்போல் கன்னியாகுமரிவரை சோழ இராச்சியம் பரவிற்று. இந்த சமயத்தில் குலோத்துங்கன் புரிந்த போர்களில் தான் நரலோகவீரனுடைய வீரம் விசேடமாக வெளிவந்தது என்பது பின்வரும் சாசனப் பகுதிகளால் நன்றாக அறியலாம்.

(1) * * * * தென்னவர்தம்
பூவேறு வார்குழலாரோடும் பொருப்பேற
மாவேறு தொண்டையார் மன்

(2) * * * * தென்னர்
குடமலை நாடெரிந்து கொண்ட வேற்கூத்தன்

(3) * * தென்னுடன் சாவேற்றின் றிண்செருக்கை
யன்றமைத்தான் தொண்டையர் கோனுக்கு

(4) * * * * பூசல்
விளைவித்த வேணாடும் வெற்பனைத்துஞ் சென்றே
வளைவித்தான் தொண்டையார்மன்

என்பனவும் பிறவும். தென்னாட்டில் நரலோகவீரன் தன் மன்னனுக் காகப் போர்புரிந்ததுமன்றிச் சிலகாலம் இந்நாட்டை அவனுடைய பிரதிநிதியாக ஆண்டானென்பது சில பாண்டிய சாசனங்களால் தெளிவாகிறது.

இம்மகான் சிதம்பரத்திலும் திருவதிகையிலும் கட்டின மண்ட பங்களும் மாடங்களும் பல ; இவன் செய்த தர்மங்களும் அப்படியே. இவைகளெல்லாம் இவ்விரண்டு ஊர்களிலும் செதுக்கப்பெற்ற கல் வெட்டுக்களில் விரிவாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. இன்னும் சித்தலிங்கமடம், நெய்வேலி, திருப்புலிவனம், திருப்புவனி, காஞ்சீபுரம்,

நரலோக வீரன்

ஆற்றூர் (திருநெல்வேலி) முதலிய இடங்களிலுள்ள சாசனங்களும் இவனுல் ஆங்காங்கு ஏற்பட்ட தர்மங்களைக் குறிக்கின்றன. இவைகளையெல்லாம் ஒன்றொன்றாய் இங்கு எடுத்துரைத்தால் கட்டுரை பெருகும். இவனுக்குச் சிதம்பரத்திலுள்ள பெரும்பற்றைக் காட்டும் பட்டப்பெயர்கள்—நர்த்தகன், சபாநர்த்தகன், பொற்கோயில் தொண்டைமான் என்பன. இவனுடைய சிதம்பர சாசனம் அழகிய வெண்பாக்களாலியன்றதென்பது மேலே எடுத்துக் காட்டப்பட்ட பாகங்களால் விளங்கும். அதே சாசனத்திலிருந்து இன்னும் இரண்டு வெண்பாக்களைத் தந்து இச்சிறு வியாசத்தை முடிப்போம்.

ஆடுந் தெளிதேனு யாயிரநாழி நெய்யால்
ஆடும் படிகண்டா னன்றினர்க—ளோடும்
திறங் கண்டதாளன் சினக்களிற்றூன் ஞாலம்
அறங்கண்ட தொண்டையர்கோ னுங்கு.

எவ்வுலகு மெவ்வுயிரு மீன்று மெழிலழியாச்
செவ்வியாள் கோயிற் றிருச்சுற்றறப்—பவ்வஞ்சூழ்
எல்லைவட்டந் தன்கோற் கியலவிட்ட வாட்கூத்தன்
தில்லைவட்டத் தேயமைத்தான் சென்று.

"பெண்மைநலமும் புலமையறமும்"

திரு. வி.ஸ். வி.ஸ். பாரதியார் அவர்கள் M.A., B.L.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்.

பெண்மை பிழையாமற் பேணும் அறம்வளர்க்கும்
வண்மை தமிழ் மெய்ப்புலமை வாய்ப்பு



ஆண்மை யறம்பிழைத்து அலையும், பூரியரின் பைசாசம் இராக்கதம்போன்ற புரைநிரம்பும் புன்மையொழுக்கங்களை மணமெனல் மறுத்து வெறுப்பதுமட்டுமன்றி, இருதலை—ஒருநிலை ஒத்துயரும்—அன்பற்ற கூட்டங்களை விரும்பொணப் பெருந்திணையெனவும் பெயரிட்டுப் பழிப்பதே பண்டைத் தமிழ்ப்புலவர் கொண்டுபாராட்டிய கொள்கையாகும். திணையென்பது ஒழுக்கம். சுடுகாட்டை கன்காடெனவும், தாலியறுத்தலைத் தாலிபெருகுதலெனவும் நல்ல சொற்களாற் பொல்லாப் புன்மைகளைச் சொல்லுமாபோலவே, கழிபெருங் காமப் பழிதருங் கூட்டம் குறிக்கும் இழிவொழுக்கைப் பெருந்திணையென மங்கலவழக்கால் தமிழகத்தில் மூதறிவாளர் ஓதிப்போந்தார்.

அகத்திணையியல்களை அகற்றுதும் அறமேற்கொண்ட கம்பரும், வான்மீகர் கதைப்போக்கைத் தமிழறம்பிழைக்கும் இடங்களிலெல்லாம் ஏற்றபடி மாற்றித் தீய விலக்கித் தூய துலக்கிச் செல்வாரானர். ஒருவரையொருவர் முன்காணுமலும், காதலறந் தேர்ந்து தெளியும் அன்பறம் பேணுமலும், வில்லிறுக்கு மல்லுடைமை யொன்றே தக்க நல்லுரிமை பெண்மணக்கப் போதுமெனுந் தொல்லை வடவழக்கை விலக்கிச் சீதையும் இராமனும் ஒருவரை யொருவர் இயலடைவிற் கண்டு இருவருள்ளத்தும் மலர்ந்த காதலின் மண்டு மணவினை வாய்ப்பின் அவ்விருவரையு மணக்கவைத்தார்.

வான்மீகர், குரங்கொழுக்கே கொடுத்தமைத்த தாரை, நிறையரசு காத்துச் சிவபாதசேகரனுய், அறிவு, திரு, ஆற்றலெல்லாம் செறிவுடைய சான்றாண்மை நிரம்பிய ஒருவனென நின்ற வாலியின்

அறமனைவியாதலால், அவளை, அந்நிலைமைக்குரிய கற்பறங் காழ்த்த பொற்புடையளாக்கிப் புலமை யறங் காத்தார் கம்பர். இவர் இவ்வாறே தமது காவிய முழுதும் குடிப் பெண்டிர் தகவொழுக்கங் குறையாமற் குறிக்கொண்டு நிறைவித்துக் கதைத்துச் செல்லும் நல்ல முறை காணுகின்றோம். சமண் கொள்கை தழையும் பிற்காலப் புலவர் சிலர், ஊரெல்லாம், "மாளிகைமேற் காரிகையார் கண்ணே, விலங்குவன மெய்ந்நெறியை விட்டு" எனப் பெண்மையுலகைப் பழித்துப் புலமை யறம் பிழைத்த இழிதகவை வெறுப்பவர்போல்,

"ஆச லம்புரி யைம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பு நெறியின் புறஞ்செலாக்
கோசலம்" (பால-ஆற்-க.)

என்று ஊர் ஒன்றிரண்டன்றிக் கோசலநாடு முழுவதுமே தம் கண் நெறியின் புறஞ்செலா நேர்மையுடைய பெருந்தகைப் பெண்டிர் வாழும் பீடுடைத்தென விம்மிதக்கவி பாடிச் செம்மாக்கும் இயல்புடையார் கம்பர்.

இன்னும், தான் பாடப்புகும் கோசலநாட்டுப் பெண்டிரின் பெருமையையும் நேரிய நீர்மையையும் நினைந்து கூறும் மற்றொரு பாட்டும் ஈண்டைக் கியைபுடைத்து :—

"பொற்பி னின்றன பொலிவு பொய்யிலா
நிற்பி னின்றன நீதி மாதரார்
அற்பி னின்றன அறங்க ளன்னவர்
கற்பி னின்றன கால மாரியே" (பால-நாட். ௫௰௯.)

எனக் கோசலநாட்டின் பல பெருமைகளுக்குங் காரணமாக, மாதராரை நடுநிலை விளக்காக இப்பாட்டில் அமைத்து அம்மாதர்களின் பல சால்புகளானே எல்லா எழில் வளமும், நீதியும், அறங்களும், மழையும் நிலைப்பவாயினவென விளக்கிய புலமைச் செவ்வி வியக்கற்பாலது.

இனிக் கோசலநாட்டுப் பெண்டிர்மட்டுமே யன்றி, மண்ணுலகிற் பெண்பாலார் எல்லாரும் கற்பென்னுந் திண்மையுடன் மனத் தூய்மையுடைய ரென்று பாராட்டி, ஓர் தவவனத்தின் தூய்மைக்கு ஒப்புமை காட்டிக் கம்பர் தரும் அடிகள் அவருளப் பாங்கை யுணர்த்திநிற்கும். அஃது,

"தங்கணாயகரிற் றெய்வம் தவம்பிறி திலவென் றெண்ணும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது" என்பதாம்.

இவ்வாறு யாண்டும் பெண்மைநலம் பேணும் இத்தமிழ்ப் பெரும் புலவர், "முக்கணான் அனைய ஆற்றல் முனிவ"னான கோதமன்

பெண்மைநலமும் புலமையறமும்

இற்கிழத்தி அகலிகை கற்பிழந்து, பிறன்பாற் காமங்களித்து, மனையற மாண்பை யழித்தவளென்று பாடிவைத்தாரென்பர் பலர். இங்கு இதற்கு இவர் காட்டும் கம்பர் கவி வருமாறு :—

> "புக்கவ ளோடுங் காமப் புதுமண மதுவின் றேறல்
> ஒக்கவுண் டிருத்த லோடும் உணர்ந்தனள் உணர்ந்த பின்னும்
> தக்கதன் றென்ன வோராள் தாழ்ந்தன ளிருப்பப் தாழா
> முக்கணு னனைய வாற்றல் முனிவனு முடுகி வந்தான்."

"தீவினை யஞ்சு செய்த தேவர் கோன்றனக்கு(ம்) செங்கண், ஆயிரம் அளித்தோன் பன்னி அகலிகை," தன் பெண்மைச் செவ்வி பிழைத்து, தேவர்கோன் விரும்பித் தந்த "புதுமண மதுவின்தேறல் ஒக்கவுண்டு," அதனால் தன்னைக் கூடுபவன் அயலானென் றுணர்ந்த பின்னும் அவன் கூட்டம் "தக்கதன் றென்னவோரா"த் தகையளாய், அவன் தரும் இன்ப வெள்ளத்துத் "தாழ்ந்தனளா"யிருந்தனள்; அப் போது, மீண்டுஉட்புகுந்து அவள் தவறு கண்கூடாகக் கண்டு வெகுண்ட முனிவன், அவளையும், அவள் பொருட்டுத் தன்இற்புகுந்து ஆண்மையற மிறந்த இந்திரனையும் கொந்து சபித்தான் என்பதே கம்பரின் இக்கவிப் பொருள் என்ப ரிக்கொள்கையுடையார் பலர்.

இவ்விடத்தில் வான்மீகரும், "அகலிகை, தன்னைக் கூடுபவன் தேவர்கோன் எனத் தேர்ந்து, தான் அவனைக் கூடப்பெற்றது ஓர் பேறெனத் தருக்கிக் குதுகலித்தாளா"கவே கூறுவதை மேற்கோள் காட்டி, அக்கதை சொல்லுங் கம்பரும் அக்கருத்தையே யிங்கு விரித்தா ரென இயைபு கூட்டித் தங்கூற்றை வலியுறுத்தி மகிழ்வர் சிலர்.

பெண்மைநலம் பேணும் பேராண்மை புலமையற மென்னும் தமிழ் மரபைத் தம்பெருங் காப்பியத்திற் பலவிடத்து மறவாமற் காக்குங் கம்பர், இம்முனிவர்கோன் வாழ்க்கைத் துணையாகும் அறமனையாள் அகலிகைபால் அவ்வறத்தை நெகிழவிட்டாரென்பது பொருந்தாது. முதனூலில் உள்ளபடி யுரைப்பது தவறுகாதெனில், பிற பல குடிப் பெண்டிர் கதைகளை வான்மீகர் கூறியாங்குக் கொள்ளாமல் மாற்றித் "தற்கொண்டாற் பேணி" நிறைகாக்கு நேர்மை யுடையராக்கிப் பெண் களுக்கு உயிரிற் சிறந்த காணினும் இறப்பச் சிறப்பது "செயிர்தீர் காட்சிக் கற்"பெனுஞ் செந்தமிழ் மரபோம்புங் கம்பர், அகலிகை கதையைமட்டும் அதற்கு விலக்காக்க வேண்டற்குரிய காரணங்கள் காண்டற் கரியவராகும்.

அதுவேயுமன்றி, இவ்வகலிகை கதையிலேயே அவளைக் கற்பறம் பிழையாப் பொற்புடைப் பெரியளாகக் கருதும் தம் உளக் கிடையைக் கம்பர் பலபடியாக விளக்கியுள்ளார்.

பெண்மைநலமும் புலமையறமும்

(1) முதலில், அகலிகையின் நடப்பறிந்த விசுவாமித்திர முனிவர், பெண்ணுருவம் பெற்று எதிருற்றுள் யாரென வியந்துநின்ற இராமனுக்கு அவள் வரலாறு கூறத் தொடங்குபவர், "தேவர்கோன் றனக்குச் செங்கண், ஆயிரம் அளித்தோன் பன்னி யகலிகையாகும்" இவள் என்பர். அன்றியும், இராமனோடு தன் முன் வரலாறுணர்ந்த முனிவனையும் உடன்கண்ட அகலிகை, "மேயின வுவகையோடு மின்னென வொதுங்கி நின்றுள்" எனவுங் கம்பர் கூறுகின்றார். தன் நெஞ்சறியக் கற்பைக் கைவிட்டு, காமத்தால் பிறன் கூட்டங் களித்தாளொருத்தி, பின் தன் இழிவொழுக்கை நாணி வருந்தாமல், அதைப் பேணி மகிழும் பெற்றியைப் பிறர்முன் வெளிப்படுத்த விரும்பி விம்மிதங் கொள்ளுவளா? கல்லுருவங் கழிய நல்ல பெண்ணுருப் பெற்றெழுந்த அகலிகை நாணமல் உவகை பூத்ததோடு, அவளுவகை விரும்பப்படுவது எனுங் குறிப்புங் கூட்டி "மேயின வுவகை யோடும்" எனக் கம்பர், உயர்வள்ளும் உரனுடைய விசுவாமித்திரன் வாயாற் சொல்லவைத்தார். புணர்ந்தான் பிறனென்று உணர்ந்தபின்னும் அது தக்கதன்றென்று கருதாமற் காமங் காழ்த்த களிப்புடையளாய் முன்னிருந்ததோடு, பின் தன் தவற்றொழுக்கந் தந்த கல்லுருவம் கல்லாழாற் கழியப்பெற்ற பின்னும் அவள் வருந்தாமல் நாணிலியாய்ப் பிறர்முன்னே நகைப்பவளோ, அவ்வாறு நகைக்கு நிலையில் "அறஞற்றி மூத்தஅறி" வுடைய முனிவன், தன்னனைய தவமுதிர்ந்து சாபானுக்ரக சக்தி வாய்ந்த பெரியோன் கௌதமனுக்குரிய பத்தினி யிவளெனப் பேசுவானு? முன் கோதமனுக்கு மனைவியாயிருந்து, பின்தன் கற்பிழந்த காரிகையென அவள் தன்மையைத் தக்கவா றுரைப்பதன்றோ அமைவதாகும். அதற்கு மாறுகக் கற்பிழந்த காமினியைச் சிவனனைய அறமாற்றுந் தவமுனிக்குப் பத்தினியென் றுரைப்பது எத்துணைப் பொருத்தமாகும்?

(2) இனி, அவள் முன்னைய வரலாறு முழுதுங்கூறி முடித்த பின்னர், இறுதியில், காதி செம்மலான முனிபுங்கவன், புனித மாதவனை கோதமனுக்கு, அகலிகை "நெஞ்சினும் பிழைப்பிலாதாள்" ஆதலால் நின் வாழ்க்கைத் துணையாக அவளை மீண்டும் "நீ யழைத்திடுக" என எடுத்துக் கூறினன். அதுகேட்ட "கஞ்சமா முனிவனன்ன (கோதம) முனிவனும்" பொய்யிலா விசுவாமித்திரன் பொருளுரையோர்ந்து, குற்றமற்ற தன் மனையாளைக் கோபத்தால் முன் சபித்த தன் பிழைக்கிரங்கி, மீட்டும் அவளை வீட்டிற்கூட்டி இல்லறமாற்றும் நல்லறம் போற்றலைக் கருத்துட்கொண்டான். அவளை உள்ளத்தாற் காமம் பேணிக் கற்பிழந்தவளெனக் காட்டுவதே கம்பர் கருத்தாமேல், அவ்வாறு அவள் கற்பிழந்த வரலாறு அறிந்துகூறிய தவமுனி வாயால் அவமாக அவளை "நெஞ்சினும் பிழைப்பிலாதாள்" என, அவளால் வஞ்சிக்கப்பட்டு உண்மை யுணர்ந்த அவள் கணவனிடம் விசுவாமித்திரனைக் கம்பர் பேசவைப்பரா? தானே மேற்கவியில் அவள் தவறுகூறிப் பின் தன் நெஞ்சறிவது பொய்த்து, விசுவாமித்திர முனிவன் அவளை 'நெஞ்சினும் பிழைப்பிலாதா'வெனப் பேசுவனேல், அவன் பிழையறிந்த கம்பர் அது

கூறுமிடத்து அவனைக் "கோதிலாக் குணத்தா" னென்று பாராட்டு வரோ? அன்றியும், அதைக் கேட்ட கோதமன், உடனே அப்படிற் றுரையை யேற்றுத் தான் அவளை மீண்டுங் கூட்டிவாழக் கருதுவனு? அவ்வாறு செய்யின், அவனைப் புனிதமாதவனென்று புலவர் போற்று வாரா? இது, இவ்விரு தவமுனிவர் தகவொடு பொருந்தாத் தவரு மன்றிப் போற்றத் தகும் புலமையற மாகாதே!

(3) இன்னும், இவ்வரலாறு கேட்டறிந்த இராமன் செய்தியும் இங்குச் சிந்திக்கற் பாற்றும். முதலில், இராமன், அகலிகை வரலாறு கூறிய முனிவன் சொற்களைமட்டு மல்ல, முனிவன் கருதிச் சொன்ன பொருளெலா மனத்திற்கொண்டான் என்று கம்பர் தெளியக் கூறினர். எனவே, முனிவன் கூற்றுய முன் கவிகளுக்கு அகலிகையைக் கற்பிறந்து காமங் களிக்கு மனத்தளெனக் கருதுவதே பொருளாமேல், அப்பொரு ளெலாம் இராமன் உளத்துட் கொண்டவனுவன். அவ்வாறு உண்மை யறிந்தபின், இராமன் அத்தவறுடைய அகலிகையை நோக்கி, "மாத வன் அருளுண்டாகில் வழிபடு, படருறுதே, போதுநீ அன்னையென்று (அவள்) பொன்னடி வணங்கின"தாகவும், உடனே அவளும் முன் தவறிலாக் காலத்தே தன்னோடு வாழ்ந்த தன்கணவனிடம் "போனுள்" எனவும், அவளொடு இராமனும் பிறருமாகக் கோதமனை "அருந் தவன் உறையுள் தன்னை அனைவரும் அணுகினரெ" னவும் கூறின தோடும் அமையாமல், பிறகு கோதமனுறையுட் புகுந்த "குணங்களா லுயர்ந்த அண்ணல் (இராமன்) கோதமன் கமலத் தாள்கள், வணங்கி னன் வலங்கொண்டேத்தி, மாசறு கற்பின் மிக்க அணங்கினை (அகலிகை யை) அவன் (கோதமன்) கையிந்து.....நீங்கி"னன், எனப் பாடி முடிக்கின்றார். இப்பாவடிகளில், கடவு ளவதாரமான இராமனே அகலிகையைத் தனக்கு அன்னைபோல்வாளெனப் பாராட்டித் தான் அவளடி வீழ்ந்து வணங்கினதாகக் கேட்கின்றோம். "கோதிலா முனி வனு"ன விசுவாமித்திரன் தனக்கு விளக்கிக் கூறிய முன்வரலாற்றுக் கவியால், அகலிகை அகமறிய அயலவனைக் கலந்து களித்துக் காமத் தாற் கற்பிழந்த கணிகைபோல்வளென அறிந்துவைத்தும், அவளை இராமன் "அன்னை" யென்றழைத்து, அவளடியினும் வணங்குவ னேல், அவன் "குணங்களா லுயர்ந்த அண்ண"லாவனு? அன்றியும், கழிகாமத்தாற் கற்பிழந்து "நிரந்தர முலகில்நிற்கும் நெடும்பழி பூண்டு நின்றா" ளைப் புனித மாதவனுன கோதமனிடம் கூசாமல், "மாசறு கற்பின் மிக்க அணங்கெனக்கூறி, அவன் கையில் நெஞ்சறி குற்றமுடைய அகலிகையை" அடைக்கலமாகவும் ஈந்து நீங்கினன் இராமன், என்று கம்பர் கூறுவது எனைத்தளவும் ஏலாத பொய்யுரையாகவன்றோ முடியும்? இவ்வாறு முன்னுக்குப்பின் முரணுவதாய்ப் பாடி, கம்பர் அறத்தையும் அறிவையும் அறத் துறந்தாரென்பது கொள்ளற்பாற் றன்றே.

இங்கு எடுத்துக்காட்டிய பல பாவடிகளிலும் கம்பர், அகலிகையை "நெஞ்சிறும் பிழைப் பிலாளா"யும், இராமனும் அடிவணங்கும்

''மாசறு கற்பின்மிக்க அணங்காய'' ம் தெளிப்பது வெளிப்படை. இச்சான்றுகளாலும், ''புகழமைந்த கற்புடை மகளை (மட்டுமே) மக்களேயன்றித் தேவரு முனிவருஞ் சென்றேத்துதல் இயல்பாக லானும்'', அகலிகையை இராமன்போன்ற ''உயர்ந்தோரேத்தும் உரைசால் பத்தினி''யாகப் பாராட்டுவதே கம்பர் கருத்தாதல் வேண்டுமெனக் காணுகின்றோம். இவ்வாறு முன்னும் பின்னும் பல பாக்களில், அவளைப் பொல்லாங்கற்ற நல்லாளாய்க் கம்பர் தெளிப்பதால், இவற்றிடையேவரும் ஒரு பாட்டுமட்டும் அவள் மாசறு கற்பொடு இலேசமும் அமையாப் புன்பழியை அவளுக்கு ஏற்றும் பொருளுடைய தெனக் கொள்ளுதல் பொருந்தாமையும் புலனும். ஆகவே, அவ்வொரு பாட்டும் அவள் மனமாசற்ற கற்பின் பொற்பொடு பொருந்தும் பொரு ளுடைத்தாதல் வேண்டுமென்பதும், அப்பொருளமைதி ஆராய்ந்தறி தல் நம் கடனென்பதும் தெளிகின்றோம். இனி, அதனை ஒருவாறு கண்டு தெளியு முயற்சி மேற்கொள்ளுவோம்.

வான்மீகர் கூறியபடியே கம்பரும் அகலிகையின் பழிபாடே இங்குக் கூறுவரெனக் கொள்ளுவதைவிட்டு, அவள் கற்பிழந்த செய்தி கூறும் கம்பர் கவிக்கு முன்னும் பின்னும் அவள் தூய்மையை வாயாரப் பல படப் பராராட்டிப் பாடுங் கம்பர் புகழுரைகளோடு பொருந்த மிகவுந் தகவுடைப் பொருளிருத்தல் கூடுமென நினைத்து, கம்பர் நோக்கையும், அவர்பாட்டின் போக்கையும், அப்பாட்டின் சொல்லமைவுகளையும் உற்று நோக்கி, அதனுண்மைப் பொருள் காண முயலுவோம்.

கோதமனைப் பேதுறுத்தி வெளியேறச் செய்து, பின் தான் அம் முனிவனுருவந் தாங்கி, ''தவமறைத் தல்லவை செய்ய'' விரும்பிய இந்திரன் அகலிகையின் அறைபுகுந்தான். புகுந்தபின் நிகழ்ந்த செய்தி கூறும் இப்பாட்டில், முதலில், ''புக்கு அவளோடும் காமப் புதுமண மதுவின்றேறல், ஒக்க வுண்டிருத்தலோடும் உணர்ந்தனன்,'' என்னுஞ் சொற்றொடரை யுற்றுநோக்குவோம். இந்திரன் அகலிகையின் கணவ னுருத்தாங்கி அவளருகே நள்ளிரவிற் புகுந்தானென்பது, இதற்கு முன்பாட்டில் தெற்றெனக் கூறப்படுகிறது. கள்ளமற்ற வுள்ளமுடைய அவள், அவனை அப்போது வெளியே சென்று மீண்ட தன் கணவ னெனவே கருதுவது இயல்பாகும். அந்நிலையில், தன்னை யணுகித் தழுவுபவன் தனிமணந்த மகிழ்நனெனவே கொண்ட அகலிகை, அவன் விருப்பிற் கிசைந்து குழைந்து ஒக்கவிழைந்து அவனைக் கூடுவதும் தவ றன்று. பிறகு தன் கொழுநன் இயலறியு மவள், விதுப்புற்று மருவு பவன் புதுப்புணர்வின் வேறுபாட்டால், அணைந்தவன் அயலானென்றும், தான் ஏமாறிப் பிறன் கூட்டம்பெற நேர்ந்த பெற்றியும் உணர்வதாளல், என்பதே இங்கு இத்தொடர் சுட்டும் பொருளாகும்.

இனி, இதையடுத்து, அவள் அவ்வாறு உண்மையுணர்ந்த பின்னும் ''தக்கதன்றென்ன வோராள், தாழ்ந்தனள் இருப்ப,''—என்பது கம்பர் கவியிற் காணப்படு மற்றொருதொடர். இதுவே அகலிகையைப் பழி

தூற்றுவார்க்கு ஏற்ற ஊற்றுக்கோலாகச் சாற்றப்படுகிறது. ஆகவே, இத்தொடரில் பொருட்பொலிவையும் கம்பர் கருத்தையும் ஆழ்ந்து சூழ்ந் தறிதல் அவசியமாகும். இங்கு, வான்மீகர் அகலிகையின் பெருமிதச் செருக்குக்கு அடிப்படையாகக் காட்டுங் குறிப்பு இதிலில்லை யென்பது செவ்வனே சிந்திக்கத் தக்கது. தன்னை விரும்பி வந்து மருவியவன், தன்போன்ற ஏழை முனிவர் மனைப்பெண்டிர் நினைத்தற்கும் அரிய தேவர்கோனை பெரியான்; அவனைத் தான் கூடப்பெற்ற பெருமிதத் தால் அகலிகை களிமீக்கூர்ந்தாளென வான்மீகர் விதந்து கூறவும், கம்பரோ, தன்னை மருவுபவன் புதுமணமுறைகளால் அவன் தன் கணவன் அன்மையை ஆங்கு அவள் உணர்ந்தாள் என்ற அளவே சுட்டினரன்றி, அவனை இன்னனென்று அவளறிந்த குறிப்பெதுவுங் கூறுமைக்குக் காரணம் ஆராயற்பாற்று.

இன்னும், காதன்மைகந்தாக உருக்கரந்து வந்து தன்னை வஞ்சித் தானின் ஏதின்மை எதுவுங் காணுணு கள்ளிரவில், கள்ளமற்ற வுள்ளத் தாள் தான் பிறன் கூட்டம் பெற்றமை தன்னைப் பேதுறுத்தானின் கலவிச் செயல்கொண்டு புலனளவில் உணர்ந்தாளன்றி, ஆண்டு அவ னுக்கு அறிவு நிகழ்ச்சி நிடையாதென்பதைத் தெள்ளத்தெளிக்கு நோக் குடைய கம்பர், ஈண்டு அவள் தன்னைத் தழுவியவன் அயன்மையை "உணர்ந்தா" லென்றும், உணர்ந்த பின்னும் அந்நிகழ்ச்சியின் தகவு தகவின்மைகளை அளந்தறிய நில்லாலென்பதைச் சுட்டி "தக்க தன் றென்ன வோராள்" எனவும் தன் கருத்துணர்த்தப் பொருத்தமான வெவ் வேறு சொற்பெய்து விளக்கியுள்ளார். "உணர்தல்" பொறியான்வரும் புலனுணர்ச்சி. "ஓர்தல்" ஆராய்ந்து துணியும் அறிவு. இவ்வேறுபாடு நன்கு புலப்படுத்திப் புணர்ந்தவன் புதுமணச் செயலால் அவன் அயன் மையைப் புலனுணர்ந்த அகலிகை, அவ்வுணர்வூட்டும் கழுவாய் காணு ணுத் தன் கற்பிழவின் இன்னல் அவளுள்ளத்திலூன்றி உளைவித்து உர னழிக்க, யாதும் ஓர்ந்தறியவொல்லாத அகமழிக்கும் அல்லல் மிகையால் அவசநிலை யெய்திச் சாய்ந்து வீழ்ந்தாள், என்று அத்தீதறியா வளத் தாட்கு உற்ற ஏதப்பாட்டியல் தெளிக்க ஏய்ந்த இத்தொடரைக் கம்பர் ஆய்ந்துகொண்டு அமையப்பெய்தார்.

இங்கு, "தாழ்தல்" எனுஞ்சொல், அமிழ்தல், சரிதல், சீர்கெட் டழிதல், வீழ்தல் எனப் பொருள்படுதலை "இருநிலந் தாழ்ந்து" (இராமா-சடாயு-கூ), "தாழுங் காலத்துந் தாழ்வில்" (ஷிமராமா-க), "சங்கர மாறவம் மோதழலினீதாழ்வாயல்லை" (சேதுபு-சங்கர-எங), எனப் பெரும்புலவர் தரும் கவிகளில் பயின்றுவரும் வழக்குகள் வலியுறுத்தும்.

இனி, "தக்கதன்று—என்னவோராள்" எனப்பிரித்து, 'தக்க தன்று" என்பதை ஒரு சொன்னீர்மைத்தாக்கிக் கவியின் கருத்தழிய மூன்பின் பொருத்தமற்ற பொருள் கொள்ளுதலைவிட்டு, "தக்கது-அன்று-என்ன-ஓராள்" என்று இத்தொடர்ச் சொற்களைத் தனித்தனி

பிரித்துக் கண்ணழித்துக் காணின், கம்பர் கருத்தும் கவினுயரும் செம்பொருளும் தெளியக் கிடைக்கும். கூடினவனின் அயன்மையை அவன் கலவிப் புதுமுறையாற் புலனுணர்ந்த பின்னும், அவ்வுணர்வாற் ரூன் கற்பிழந்தமை கண்டு, தன் தூயவுளந் துயரட, அறிவழிந்து தன்னைமறந்து மயங்கிக் கையறவு பூண்டு வீழ்ந்தாள். ஆகவே, அக் கிலேயில், அங்கு அவ்வயலான் கூட்டம் தக்கதா ? அன்ரு ? என்பதை மாய்ந்த தன் அறிவினுல் ஆய்ந்து துணிய வொல்லாளாய்ச் சாய்ந்து வீழ்ந்தாளென்பதன்றே அவள் பெண்மைநிலை விளக்கும் உண்மையுரை யாகும். இனி, இக்கருத்தை விளக்க, "உணர்ந்தபின், ஓராள்"-என் பதே அமையுமாதலின், "உணர்ந்தபின்னும்"—என்று "உம்"மை பெய்திருப்பதன் குறிப்பென்னை ? யென்பதும் ஆராயத் தக்கதே. இஃது இறந்ததுதழீஇய உச்ச வும்மையாம். தன்னைத் தழுவியவன் அயலானென் றுணர்தற்குமுன்னும் அக்கூட்டம் நல்லதா ? அல்லதா ? என்ரூராய்ந் தறியாள் ; அவ்வாறுணர்ந்தபிறகும் தான் அதை ஆராய்ந்தறிந்திலள் என்பது இவ்வும்மையாற் பெறும் பொருள். ஈரிடத்தும் கூட்டம் சரி, தவறு என்ற ஆராய்ச்சி அவள்கண் நிகழ வில்லை. முன்னே, கூடுபவனைத் தன் கணவனெனவே கருதினளாத லின், அத்தகைய ஆராய்ச்சி நிகழ்தற்கில்லை. முன்னிலையில் அறியுந் திறனிருந்தும், கணவனெடு புணர்வின் தகவுபற்றிய ஆராய்ச்சி வேண்டாமையால் அது நிகழாமையு மியல்பாயிற்று. பின்னிலையில் தான் அறிவிழந்த காரணத்தால் அவ்வகை யாராய்ச்சி கூடாமையால் அதுநிகழாமை இயல்பாயிற்று. காரணங்கள் வேரூயினும், இருதலை யும் ஒருநிலையே அத்தகைய ஆராய்ச்சி அவட்கில்லை, யென்பதை நன்கு புலப்படுத்தும்பொருட்டுப் புலவர் இங்கே செம்மையாக உம்மைபெய்த செவ்வியே சிறந்ததாகும்.

இவ்வாறு தீயவன் வஞ்சத்தாலே தோயத் தன்னுடல் மாசுற்ற அகலிகையின் தூயவுளத்திற் கற்புமாய்கிலா மாண்பை இங்கு இத் தொடரில் கம்பர் ஏற்றபெற்றி கூறினதாய்க் கொண்டாலன்றி, பின் அவர் இவளை "நெஞ்சிலுற் பிழைப்பிலாதாள்" என்று விசுவாமித் திரன் வாயாற் கூறவும், இராமனே அவளை, மாசறு கற்பின்மிக்க அணங்கென" வணங்கி வாழ்த்தவும் வைத்தது வாய்மையற்ற வம்புரை யாகவும், அவ்வாறு பொருள்தீர்ந்த சொல்லும் புலவனைப் "பயனில் சொற்பாராட்டும் "மக்கட்பதடி"யாகவும் காட்டி, புலமையறம் வீட்டிப் பழிவளர்க்கும் பாதகத்தை மேதகவாய்ப் பாராட்டித்தீரகேரும். இவ்விழிதகவை யொழியவிட்டு பழுதற்ற விழுப்பொருளைக் கொள்ளு வதே அறநெறியும் அறிவுமாகும்.

அன்றியும், இங்கு மருவிய இருவருள், இந்திரனொருவனே "தேறுத லொழிந்த காமத்து மிகுதி"யால், தன்னை அகலிகை கணவனென கம்பச்செய்து, அப்"பிறன் பொருளா"ளைத் தன்வஞ்சத்தாற் கற்பழித்த தவறுடையான் ; ஏமாந்து கற்பிழந்த அகலிகையோ, மாசூர்ந்து மாயாத

தூய மனமாண்புடையளாய்த் தவறெதுவுந் தாணிழையாத தக்கவளாவள்; எனுந்தன் உட்கோளை வலியுறுத்த வேண்டியன்றே, இக்கதையில் தவறுடைய இந்திரனை ''தீவினை நயந்துசெய்த தேவர்கோன்'' எனப் பழிக்குங் கம்பர், அகமறியத் தவறியற்ற அகலிகையை ''நெஞ்சினுற் பிழைப்பிலாத'' ''மாசறு கற்பின் மிக்க அணங்கு'' — எனப் புகழலானார்.

இனி, இத்தகையாளைக் கம்பர், ''நிரந்தரம் உலகில் நிற்கும் நெடும் பழி பூண்டாள் நின்றாள்'' என்று பேசினதென்னெனில், சொல்லுவன்: அகலிகை யெனைத்தளவும் பழிபுரியும் இழிதகவுடையள் அல்லள்-எனக் காட்டுங் கடனைப் புலமையறமாகக் கம்பர் கடைப் பிடித்தார்; எனில் உண்மையோராது உலகம் வீண்வசை அவட்குச் சூட்டப்பூண்டு அதை அகலிகை சுமந்து நின்றாளல்லாமல், அவள் புரிந்ததோர் தவறிலாத புனித நெஞ்சுடைய கற்பின் பொற்பினால் புகழ்தற்பாலள், என்று வலியுறுத்த விரும்பியபுலவர், அவள்பால் உலகு கூறும் ''நெடும்பழி பூண்டு நின்றாள்,'' என்று முதலிற் கூறி, பிறகு அவள் வரலாற்றின் முடிவில், தன் உண்மை உளக்கோள் விளங்க, அவளை ''மாசறு கற்பின் மிக்க அணங்கென இராமனைக்கொண்டு தன் வாயார வாழ்த்த வைத்தார். இதனால், அகலிகை, பழியெதுவும் புரிந்தவளல்லள்; பேயுலகம் ஆயாது சூட்டிய மாயா வசையை அவள் சுமந்து, தன் குறையா நிறையேபோல் பொறையும் நிறையப்பெற்ற பெருந்தகையளாவள், என்று அவளைக் காட்டுவதே தன் கருத்து என்பதைக் கம்பர் தன் பாக்களில் பசுமரத் தாணிபோற் பதியவைத்தார். நடுநிலையில் ஆராய்வார் அனைவர்க்கும் இது நன்கு புலப்படுவதாகும்.

ஆகவே, வடமொழியில் வழங்கும் அகலிகை கதையை மாற்றிக் கம்பர் தரும் புது வரலாற்றை அவர் கவிகளைக்கொண்டு அறிந்தபடி சுருங்கச் சொல்வாம்:

''தீவினை நயந்த தேவர்கோன் தனக்குச் செங்கண் ஆயிரம் அளித்தோன் பன்னி யகலிகை''யின் ''நயன வேலும், மன்மதன் சரமும்பாய'' (தனக்கு) 'உய்யலா முறுதிகாடி யுழல்பவன், ஒருநாளுற்ற மையலால் அறிவு நீங்கி, மாமுனி' (கோதமனை) அற்றம் (வஞ்சத்தால் வீட்டினின் றகலச்) செய்து, (அவன் படுக்கையறையுள் அப்)''பொய்யிலா வுள்ளத்தான் (கோதமன்) தன் உருவமே (தான்) கொண்டுபுக்கான்.'' முனி பத்தினியை வஞ்சித்துக் கூடும் கூடாவொழுக்கத்தை நயந்து, கோதமனின் தவவேடந் தாங்கி, வஞ்சமற்ற நெஞ்சினளாய்த் தனித்திருக்கும் அகலிகையை அவளறையில் நள்ளிரவில் நணுகுகின்றான். ஆண்டு, அவனை மீண்டுவரும் தன் கணவனென்று கருதிய அகலிகை அவன் விருப்பிற்கிணங்கி, அவனை மருவுகின்றாள். மருவுமிடையே, அவன் தரும் புதுமண முறையால், அன்னன் அயலானென் றறிகின்றாள். அவ்வுணர்வு பிறந்தவும், அயர்ந்து, மணியிழந்த நாகம்போல, உயிரினு

மோம்பற்குரிய தன் கற்புக் கருவூலத்தை யிழந்தேன் எனு "மின்னல் அவள் உள்ளத்திலுன்ற, ஒன்றும் உணர்வுற்றிலளாய்," கன்று தீதோர்க் தறியவொல்லாமல் அல்லாந்து, துயர்க் கடலுளாழ்ந்து தாழ்ந்தாள். அது சமயம் அவள் கணவன் வந்து, தன் மனைவியொடு படுக்கையிற் பிறனிருக்கும் பெற்றிகண்டு, அவரிருவரையும் வெறுத்து வைது சாபத்தா லொறுக்கின்றான். பிறகு, அகலிகை, கொஞ்சமும் நெஞ்சிறற் பிழை யிலாளாய்ப் பிறன் வஞ்சத்தால் வாழ்விழந்து வருந்தும் பெருந்தகைய ளாய், அன்னையென்று அவளடி வணங்கித் தேவனுகிய இராமனும், முனிவனுகிய விசுவாமித்திரனும் முறையே "நெஞ்சிறற் பிழைப்பிலா தாள்"—"மாசறு கற்பின்மிக்க அணங்கு"—எனப் பாராட்டிப் போற்றப் படும் பெருமையோர்ந்து, அவள் சால்பினருமை தேர்ந்து, தன்வெகுளி யால் விளைந்த தீதுநீக்கி, அக்கோதிலாளைக் கோதமன் மீண்டும் தன் தவமனையில் அறமாற்றத் தனக்குரிய வாழ்க்கைத் துணைவியா யேற்ற பேற்றையே, கம்பர் ஏற்றபெற்றியா லிங்குப் பாடியுள்ளாரெனத் தெளியலாகும்.



குறுந்தொகை

திரு. S. வையாபுரிப்பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள்,
(சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்).

I

இவ்யாண்டு தமிழன்னையின் திருவுள்ளத்தை மகிழ்வித்த ஓர் கல்யாண்டாகும். அவளுடைய பேருடைமைகளுள் ஒன்றாகிய குறுந்தொகை நூற்றுக்கணக்கான வருடங்களாக ஏறி யிருந்த துருமுதலிய மலினங்கள் போகப் பரிசோதிக்கப்பெற்று இரண்டு திங்கட்கு முன்னர்த்தான் அவள்பால் உய்க்கப்பெற்றது. இப்பொழுது அவள் மிக்க ஒளியுடனும் பெருமிதத்துடனும் விளங்குகின்றாள். நவ மணிகளும் இழைக்கப்பெற்ற அவளது திருமுடியும், பலவகை யணி களும் மிளிரும் அவளது தெய்வத்திருமேனியும், நமக்குக் கண் கொள் ளாத காட்சியாயுள்ளன.

தமிழ்மொழிக்கு இத்துணைச் சிறப்புத் தரத்தக்க பேரிலக்கியத்தை ஆராய்ந்து அதன் நயங்களை உணரவேண்டுவது அவசியமாகும். இந்த அவசியம்பற்றியே இந்நூலைக் குறித்து யான் பேச முன்வந்தது.

இந்நூல் தொகைநூல்களைச் சார்ந்ததாகும்.

தொகை யென்ற வழக்கு உரைகாரர்கள் பலராலும் கூறப்பட்டதே யாகும். 'தொகைகளினுங் கீழ்க்கணக்குக்களினும் இம்முறை மயங்கி வரக் கோத்தவாறு காண்க' என்றார் நச்சினார்க்கினியர் (தொல். அகத். 6, பக்-19.) அவர் தாமே 'தொகைகளினுங் கீழ்க்கணக்கினும் உள்ள கடவுள் வாழ்த் தெல்லாம் இதன்கண் அடக்குக' என்று பிறிதோரிடத்துங்கூறினர் (தொல். புறத் 26 பக்-321). இவ்விரண் டாவது இடம் பிறிதொரு அரிய செய்தியையும் நமக்குப் புலப்படுத்து கின்றது. பதிற்றுப்பத்து என்ற தொகை நூலில் முதற்பத்தும் இறுதிப்பத்தும் இப்பொழுது அகப்படவில்லை யென்பது யாவரும் அறிவர். அந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுள் முழுமையும் இங்கே தரப்பட்டுள்ளதெனக் கருத இடமுளது. அது 'எரியெள்ளுவன்ன' என்ற உதாரணச் செய்யுளாம். பேராசிரியர் 'பாட்டுந் தொகையும் அல்லாதன சில காட்டிக்கொண்டு' என்பர். (தொல். மரபி. 94 பக்-1355) பாட்டு என்றது பத்துப்பாட்டினை. நன்னூற்கு உரை

குறுந்தொகை

யெழுதிய மயிலைநாதர் என்னும் ஜைனமுனிவர் இத்தொகை நூல்கள் எட்டாவன என்பதை 'ஐம்பெருங்காப்பியம், எண்பெருந்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் இவ்விலக்கியங்களுள் ளும் விரிந்த உரிச்சொற் பனுவல்களுள்ளும் உரைத்தவாறு அறிந்து வழங்குக' (பக்-265) என்ற உரைவாக்கியத்தால் நமக்கு அறிவுறுத்து கின்றார். இவ்வெட்டு நூல்களும் இன்ன வென்பதை

'நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியே அகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை'

என்ற பழைய செய்யுள் நமக்கு உணர்த்துகின்றது. எனவே தொகை நூல் எட்டனுள் இரண்டாவதாகக் கூறப்படுவது இக்குறுந்தொகை.

தொகைநூல்களுள்ளே வேறெந்நூற்கு மில்லாத பெருமை குறுந் தொகை பெற்றுள்ளது. இதன்கணுள்ள செய்யுளொன்று இறை வனாலே இயற்றப்பட்ட தென்னும்படி அத்துணை யழகுவாய்ந்து சங்கீர் சரித்தோடு பிணைப்புண்டு கிடக்கின்றது. இச்செய்தி தமிழ்மக்கள் யாவரும் அறிந்ததே. யான் குறிப்பிடுஞ் செய்யுள்,

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீ யறியும் பூவே.

என்பது. இதனை யியற்றியவர் இறையனார் என்று பெயர் சிறந்த ஒரு தமிழ்ப்புலவர். இவரே இறையனார் களவியல் என்னும் அகப் பொருள் நூலை யியற்றிய ராவரென நாம் கொள்ளுதலும் தக்கதே யாகும். இவ்வாறு கொள்ளுதலால், நமது தெய்வபக்திக்கு யாதோ ரிழுக்குமின்று மென்பதை நாம் நன்றாக மனங்கொள்ளுதல் வேண்டும்.

மேலே சுட்டிய குறுந்தொகைச் செய்யுள்பற்றி யெழுந்த சரித்தத்தை விரிவாகக் கூறவேண்டும் ஆவசியகம் இல்லை. ஆனால் அச்சரித்தத்தின் உட்கிடையைக் குறித்துச் சில சொல்லவேண்டுவது இன்றியமையாதென நினைக்கின்றேன். செய்யுளானது இயற்கையிற் சிறிதும் வழாதிருக்க வேண்டுமென்பது ஒரு கொள்கை ; செய்யுள் சாமான்யவியற்கையில் வழுவாதிருக்க வேண்டுமென்பது தக்கதொரு நியமமாகாது ; மனோ பாவனையாலும் கவித்வசக்தியினாலும் நெறிப்பட்டுச் சென்று கவித்வ வுண்மையினை வெளிப்படுக்க வேண்டுமென்பது பிறிதொரு கொள்கை. இவ்விருகொள்கைகள்பற்றிய விவாதமே மேற்குறித்த சரித்தத்தின் உட்கிடை. உண்மைக்கவிதை இக்கொள்கைகளால் பாதிக்கப்படாது சிறந்துவிளங்குமென்பது முடிவாக நாம் உணரத்தக்கது.

குறுந்தொகை

இச்சரித்திரத்தோடு மட்டும் இந்நூலின் பெருமை அமைந்துவிடவில்லை. உரைகாரர்கள் பலரும் சங்கநூல்களிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கின்றார்கள். 'அங்ஙனம் காட்டும் நூல்களுள் ஏனைய தொகைநூல்களைக் காட்டிலும் குறுந்தொகையே மிகுதியாக எடுத்தாளப்படுகின்றது' எனக் குறுந்தொகைப் பதிப்பாசிரியராகிய ஸ்ரீ சாமிநாதையரவர்கள் எழுதியிருக்கின்றார்கள். இந்நூலினின்றும் சுமார் 1000 மேற்கோள்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் இந்நூல் முற்காலத்தே மிகுதியாய்ப் பயிலப்பட்டுவந்த தென்பது தெளிவாம்.

நூலின்பெருமை நோக்கியும், அது மிகுதியாய்ப் பயிலப்பட்டு வந்தமை நோக்கியும், இதற்குப் பேராசிரியர் உரையெழுதினர். உரையெழுதினாரென்பது கேவலம் கன்ன பரம்பரைச் செய்திமட்டும் அன்று. நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப் பாயிரச் செய்யுளொன்றில்

'நல்லறிவுடைய தொல் பேராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
கிதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்'

எனக் காணப்படுகின்றது. இதனால் பேராசான் தமது கல்விப் பரப்பும் அறிவுத் திறனும் விளங்கும்படி மிகச்செவ்விய வுரையொன்று இயற்றினாரென்பதும், அவர் 20 செய்யுட்களுக்கு உரை யெழுதவில்லை யென்பதும் புலனாம். விடப்பட்ட இருபது செய்யுட்களுக்கும் நச்சினார்க்கினியர் உரையியற்றினார் என்பது மேலைப் பகுதியின் இறுதியடி தெரிவிக்கின்றது.. இச்செய்தி,

பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்கும்-சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே

என்ற வெண்பாவினாலும் வற்புறுத்தப் படுகின்றது. மேலே காட்டிய உரைச் சிறப்புப் பாயிரத்தில் 'பேராசான்' என்று கூறப்பட்டுள்ளதே யன்றித் தொல்காப்பிய வுரை முதலியன இயற்றிப் பெயர் சிறந்து விளங்கிய பேராசிரியரென்பது தெளியப்படவில்லை. இப்பேராசான் என்பவர் பேராசிரியரே யென்பது நச்சினார்க்கினியர் அவரது உரைக் கருத்தைத் தழுவியெழுதிய வுரைப்பகுதி யொன்று நன்கு தெரிவிக்கின்றது. அகத்திணையியல் 46-ம் சூத்திரவுரையில் 'பேராசிரியரும் இப்பாட்டில் (யானே யீண்டையேனே : குறுந். 54) மீனெறி தூண்டிலென்பதனை ஏனையுவம மென்றார்' என வருகின்றது. எனவே குறுந்தொகைக்குப் பேருரை கண்டவர் பேராசிரியரே யென்பது ஐயமின்றித் தெளியலாம்.

குறுந்தொகை

இனி, 'தோல் பேராசான்' என்று மேலைச் சிறப்புப்பாயிரச் செய்யுள் கூறுதலின், நச்சினர்க்கினியருக்கு மிக முற்பட்டவ ரென்பது தெரியவருகின்றது. இருவருக்கும் இடைப்பட்ட காலம் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளாகக் கொள்ளின், அது மிகவும் பொருந்துவதே யாம். நச்சினர்க்கினியர் 15-வது நூற்றாண்டில் வாழ்ந்தவரென ஒருவாறு அறுதியிடப்படுகின்றது. ஆகலின், குறுந் தொகை யுரைகாரராகிய பேராசிரியர் 12 அல்லது 13-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனக் கொள்ளுதல் வேண்டும். இக்கால வரையறை தொல்காப்பிய வுரைகாரராகிய பேராசிரியருக்கும் பொருந்துவதாகலின், இரண்டு நூல்களுக்கும் உரையியற்றியவர் ஒருவரே யெனத் துணியத் தகும்.

வேறொரு செய்தி இங்கே மனங்கொள்ளுதற்குரியது. தொல்காப் பியச் செய்யுளியலுரையிற் பலவிடங்களிற் பேராசிரியரது கருத்தைப் பின்பற்றி நச்சினர்க்கினியர் எழுதிச் செல்கின்றார். ஆகவே பேராசிரிய ரிடத்துப் பெருமதிப்பு உடையவர் இவரென்பது போதரும். இங்ஙனம் தம்மால் மதிக்கப்பட்டா ரொருவரது உரையை நச்சினர்க்கினியர் முற்று வித்தாரென்றல் பெரிதும் ஏற்புடையதாதல் காணலாம்.

பேராசிரியர் 20 செய்யுட்களுக்கு ஏன் பொருளெழுதாதுவிடுத்தனர் என்ற கேள்வி நமக்கு எழுதல் இயல்பே. அதற்குரிய விடையை நாம் ஆராய்ந்து தெரிவதில் பயன் யாதுமில்லை. குறுந்தொகைப் பதிப் பாசிரியராகிய ஸ்ரீஐயரவர்கள் ஒரு காரணத்தைத் தம் பதிப்புரையிற் காட்டியிருக்கின்றார்கள். அக்காரணத்தை யொப்புக்கொள்ளுதலில் எவ்வகைத் தடையுந் தோன்றவில்லை. அதைப்போன்ற ஒத்த தகுதி யுடைய வேறொரு காரணமும் கூறுதல் கூடும். உரைகாரர்கள் பொருள் வெளிப்படையெனத் தாம் கருதுஞ் செய்யுட்களுக்கு உரை யெழுதாது விடுதல் மரபு. ஐங்குறுநூற்றிற் பல செய்யுட்களுக்கு உரை யின்மையும் ஈண்டு நோக்கத்தக்கது. இங்ஙனம் தாம் வெளிப்படை யெனக் கருதிய 20 செய்யுட்களுக்கு உரைவரையாது பேராசிரியர் விடுத்திருப்ப, அவற்றின் அருமைப் பாட்டினை யுணர்ந்து நச்சினர்க்கினி யர் தமது புலமையெல்லாந் தோன்ற வுரை யெழுதினரெனக் கொள்ளு தலும் அமையும். காரணம் எதுவாயினும் இரண்டு பேருரைகாரர்கள் குறுந்தொகைக்கு உரையியற்றினர் என்றல் உண்மை. இவ்வுரை யிப் பொழுது அகப்படவில்லை. அதனைக் கற்று இன்புறும் பேறு நமக்கு இல்லை யென்று வருந்துவதோடு நாம் அமைந்துவிட வேண்டுவதே.

இங்ஙனம் சரித்தத்தாலும், பயிற்சி மிகுதியாலும், உரைச் சிறப் பாலும் பெருமையுற்று விளங்கிய குறுந்தொகை இப்பொழுதுதான் கன்கு பரிசோதிக்கப் பெற்று வெளிவந்துள்ளது. இதற்குமுன் ஒருசில பதிப்புக்கள் வெளிவந்துள்ளமையை நான் மறந்துவிடவில்லை. முதன் முதலாக இந்நூற் பதிப்பில் ஈடுபட்டு வெளியிட்ட பெருமை சௌரிப் பெருமாள் அரங்கன் என்றவருக் குரியது. அவர் எத்துணையோ

முட்டுப்பாடுகளுக் கிடையில் 1915-ம் வருடத்தில் குறுந்தொகைப் பதிப்பொன்று வெளியிட்டனர். இந்நூலைப் பதிப்பித்தற்குப் பெருந் தகுதி வேண்டு மென்பதைத் தாமே நன்குணர்ந்தவர். ஆனால் தமக்கு இயல்பாக வுரிய தமிழார்வத்தினால் யாதானுமொரு பதிப்பு வெளிவருமாயின், பின்னர் அது திருத்தமடையக் கூடுமென் றெண்ணி இப்பதிப்பிடு முயற்சியிற் புகுந்தவர். அவர் பதிப்பில் பதிப்பாளர்க்கு நேர்ந்த இடுக்கண்கள், கிடைத்த ஓலைச்சுவடிகள் இருந்த அலங்கோலங் கள், அச்சுவடிகளோடு போராடிய போராட்டங்கள், நேரியவாயுள்ள செய்யுட்களிலும்தம் இளங்கண்ணுக்குத் தோன்றிய நூதனவடிவங்கள், உரைகாணுதற்கு முயன்ற பயனின் முயற்சிகள் முதலியவனைத்தும் நன்கு வெளியாகின்றன. ஒரு சில வுதாரணங்கள் காட்டுகின்றேன்.

'யாரினு மினியன் போன பின்னே' (குறுந். 85)

என்று பதிப்பித்துள்ளார். இது

யாரினு மினியன் பேரன் பின்னே

என்று பதிப்பிக்கப் பெறல் வேண்டும்.

குல்லைக் கண்ணி வடுகர் முனையது
வல்வேற் காட்டி னன்னாட் டும்பர் (குறுந். 11)

என்று பதிப்பித்துள்ளார். இதில் இரண்டாமடி

வல்வேற் கட்டி நன்னாட் டும்பர்

என்று பதிப்பிக்கப் பெறல் வேண்டும்.

சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்
கிவளுயிர் தவச்சிறிது காமமோ பெரிதே (குறுந். 18)

என்று பதிப்பித்தனர். இதன்கண் முதலடி நான்கு சீர்களையுடைய தாதல் உரைகாரர்கள் பலர்க்குங் கருத்தாம். எனவே

சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே

என்று அடிவரையறை செய்தல் வேண்டும்.

முனாஅது, யானையுண் குருகின் கானலம் பெருந்தோ
டட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉம் (குறுந் 34)

என்றிருக்க வேண்டுவது

முனாஅ தியானையுண் குறுகின் கானலம்
பெருந்தோட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉம்

எனப் பதிப்பிக்கப்பெற்றுளது.

வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர் (குறுந் 75)

என்றிருக்க வெண்டும் அடிகள்

வெண்கோட் டியானை பூஞ்சுனை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்

என்று காணப்படுகின்றது.

ஏந்துகோட் டியானைச் சேந்தன் றந்தை
அழிசி யார்க்கா டன்ன விவள்

என்றிருக்கற்பாலது

ஏந்துகோட் டியானைச் சேந்த னுறந்தை

எனப் பதிப்பிக்கப்பட்டது.

பதிப்பிலுள்ள பிழைகள் இவ்வாறுள்ளன. இவர் உரை வகுக்குந் திறத்திற்கு ஒருதாரணம் காட்டுகின்றேன்:

முந்தூழ் வேலிய மலிகிழவோற்கே' (குறுந். 239) என்ற அடிக்கு 'முந்தும் முறைமையாகிய காவலையுடைய மலைக்குரியான் றிறத்து' என்று உரை வகுத்தனர். முந்தூழ் உன்பது மூங்கிலின் பெயராகும்.

இங்ஙனமாக எத்தனையோ பெரும்பிழைகள் காணப்படினும் சௌ. அரங்கனரை நாம் போற்ற வேண்டியவர்களாகவுள்ளோம். முதலாவது அவர்க்குக் கிடைத்த பிரதிகளின் நிலைமையே பிழைகள் பலவற்றிற்குக் காரணமாயுள்ளது. இரண்டாவது குறுந்தொகையின் நயத்தைத் தமிழ் மக்கள் ஒருவாறு உணரும்படியாகச் செய்தனர். மூன்றாவது தமிழறிஞர்களுடைய உள்ளத்தைக் குறுந்தொகைத் திருத்தத்தில் ஈடுபடும்படியாகச் செய்தனர். நான்காவது குறுந்தொகைக்கு கல்லபதிப்பு வெளிவர வேண்டுமென்ற அவா தமிழ்நாடெங்கும் உண்டாகும்படிசெய்தனர். ஒரு சில பதிப்புக்கள் சிற்சிலவிடங்களில் திருத்தம்பெற்று வெளிவருதற்கும் காரணமாயிருந்தனர். இவ்வாறு பெருநன்மைகள் பல உண்டாவதற்கு அரங்கனர் காரணமாயிருந்தன ரென்பதை யெண்ணுந்தோறும் அவர் பாற் கௌரவம்பெருகித் தோன்றுகிறது. இப்பொழுதுகூட, அரங்கனர் பதிப்பு ஒருவாறு பயன்படுகிறதென்றே சொல்லவேண்டும். பதிப்பாளர் கடமையை நன்குணர்ந்தவரானமையினாலே ஏட்டுப் பிரதிகளின் நிலைமைகளையெல்லாம் அங்கங்கே கூறிச்செல்வர். இவ்வாறு எழுதுவதனாலுண்டாம் நன்மையைப் பதிப்பாளர் தொழிலில் ஈடுபட்டவர்கள் நன்குணர்வார்கள். ஒருதாரணத்தால் எனது கருத்தை விளக்குகின்றேன். குறுந்தொகை 266-வது செய்யுளை யெடுத்துக்கொள்க. இச்செய்யுளைக் குறித்து 'இப்பாட்டு ஆறடியினதாதல் உணர ஒரு பிரதியில் 4, 5 அடிகளுக்கு இடம் விடப்பட்டிருக்கிறது' என்று அரங்கனர் எழுதுகின்றார். பின்னர், 1930-ல் கலாநிலயத்தில் குறுந்தொகையைத் தாம் நூதனமாயெழுதிய வுரையுடன் ஓர் அறிஞர் பதிப்பித்தனர். அப்பதிப்பில் அரங்கனரது குறிப்பை அறவே மறந்துவிட்டனர். செய்யுளிற் குறையுள்ள தென்பதனை ஓராற்றானும் குறித்தல் செய்யாது உரையெழுதிச் சென்றனர். சிலகாலத்திற்குமுன் குறுந்தொகையை

யான் ஆராய்ந்தபொழுது, அச்செய்யுளில் ஓரடி குறைந்துவிட்ட தென்றும், அவ்வடி,

'மறப்பருஞ் பணைத்தோள் மரீஇ'

என்பதாகு மென்றுந் தெளிந்து கொண்டேன். எனவே மேலிச்செய்யுள்,

நமக்கொன் றுரையா ராயினுந் தமக்கொன்
றின்னு விரவி னின்றுணை யாகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
மறப்பருஞ் பணைத்தோள் மரீஇத்
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே.

என்றிருத்தல் வேண்டுமென்று அறிந்தேன்.

இங்ஙனமாக அரங்கனுரையை யெப்பொழுதும் போற்றுங் கடப் பாடுடையோம்.

இப்பதிப்பிற்குப்பின் எனது நண்பர் திருவாளர். கா. நமச்சிவாய முதலியாரவர்களால் மூலப்பதிப்பு ஒன்று அச்சிடப்பட்டது. அப் பதிப்பு வெளிவந்ததாகத் தெரியவில்லை. பின்னர் 1930-ல், புரசை பாக்கத்திலிருந்து எனது நண்பர் திரு. டி. என். சேஷாசல ஐயரவர் களால் வெளியிடப்பட்ட கலாநிலயத்தில், திரு. இராமரத்னமையரவர்கள் தாம் எழுதிய புத்துரையுடன் ஒருபதிப்பு வெளியிட்டனர். இது தனிப்புத்தகமாக வெளிவரவில்லை. இப்பதிப்பிற்குப் பின்னர் 1933.ல் வித்வான். சோ. அருணாசலதேசிகரவர்களால் மூலமாத்திரம் பதிப்பிக்கப் பட்டது.

இப்பதிப்புக்களனைத்தினும் அங்கங்கே ஒருசில பிழைகள் திருந் தினவென்பது உண்மை. ஆனால் இன்னும் பல பிழைகள் பொதிந்தன வாகவே அவை இருந்தன. இப் பிழைமலிந்த பதிப்புக்களும் மிகுதியாக வாங்கிக் கற்கப்பட்டன. அரங்கனர் பதிப்பு வெளிவந்த பின்னர் 20 ஆண்டுகட்குள் 3 பதிப்புக்கள் தோன்றினவெனின், எத்துணை யள வாகத் தமிழ்மக்கள் இந்நூலை அவாவின ரென்பது புலனும். ஆங்கில நூற்பதிப்புக்கள்போலத் தமிழ்நூற் பதிப்புக்களை யெண்ணுதல் தவறு. இந்நாட்டில் வெளிவரும் பதிப்புக்களை யெண்ணின், மேற்குறித்த 3 பதிப்புக்களும் வெகுவிரைவில் வெளிவந்தனவென்றே சொல்லவேண்டும். ஓலைச்சுவடிகள் பெற்று ஆராய்ச்சிசெய்து இவை வெளியிடப்பட்டன வல்ல. ஆகவே ஐயரவர்களுடைய பதிப்பு தமிழ்மக்களுடைய பேராவலை யெதிர்நோக்கியே வெளிவந்ததென்று கூறவேண்டும். சென்னை பல்கலைக் கழகத்தார் இப்பதிப்பிற்கு வேண்டும் பொருளுதவி செய்தது மிகவும் பாராட்டத் தக்கது.

நன்று: அச்சின்வாய்த் தோன்றிய வரலாற்றினை இதுகாறுங் கூறி னேன். இனி முதன்முதலாகத் தொகுக்கப்பட்டு, குறுந்தொகையெனப் பெயர்கொண்டு வெளிவந்த வரலாற்றினைப்பற்றி ஒரு சிறிது கூறலா

மென் றெண் ணுகிறேன். பிரதிகளின் இறுதியின் ‘ இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர்; இத்தொகை காலடிச் சிற்றெல்லையாகவும் எட்டடிப் பேரெல்லையாகவும் தொகுக்கப்பட்டது ’ என்று காணப்படு கின்றது. அகநானூறு என்ற தொகைநூற் பிரதிகளின் இறுதியில் தொகுத்தான் மதுரை உப்பூரி குடிகிழார் மகனுவான் உருத்திரசன்மன் எனவும், தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி யெனவும் காணப்படுகின்றது. நற்றிணைப் பிரதிகளின் இறுதியில் ‘ இத்தொகை தொகுப்பித்தான் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ’ எனக் காணப்படுகின்றது. குறுந்தொகைப் பிரதியின் இறுதியிலுள்ள ‘ முடித் தான் ’ என்பது தொகுத்தான் என்று பொருள்படுமெனக் கோடலே நேரிது. இஃது உண்மையொடு பட்டதாயின், பூரிக்கோவும் உப்பூரி குடி கிழாரும் ஒருவரே யாதல் சாலும். ஆகவே குறுந்தொகைபும் அக நானூறும் முறையே தந்தையும் மகனுரும்தொகுத்தனராதல் வேண்டும். இவர்கள் அந்தணராஅல்லது வேளாளரா என்ற வினாவிற்கு விடையிறுத் தல் எளிதன்று. கிழார் என்பதனை நோக்கினால் வேளாளரென்று கொள்ளுதல் வேண்டும்; சன்மன் என்பதனை நோக்கினால் அந்தண ரென்று கொள்ளுதல் வேண்டும். ஆனால் ‘சன்மன்’ என்பது ‘ஜன்மன்’ என்றதன் தமிழ் வடிவென்று கொள்ளின், இவர்கள் வேளாளராகவே இருத்தல் கூடும்.

அகநானூற்றுக்கு நெடுந்தொகையெனப் பெயருண்மை கற்றோரறிவர். தந்தை தொகுத்ததனைக் குறுந்தொகை யெனவும் மகனர் தொகுத்த தனை நெடுந்தொகை யெனவும் வழங்கினு ரென்றல் ஒருவகையாற் பொருத்தமுடையதே யாம். இரண்டு ஆசிரியர்கட்கும் உள்ள தொடர்பு அவர்கள் தொகுத்துள்ள நூற்பெயர்களிலும் விளங்குதல் அமைதி யுடையதே. சமகாலத்திலேனும் அல்லது மிக அண்ணிய காலத்திலே னும் இருநூல்களும் தொகுக்கப்பட்டமை மேலைத்தொடர்பும் விளக்கு கின்றது.

இவ்விரண்டு நூல்களில் காலடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லை யும் உடையது குறுந்தொகை; ஐந அடிச் சிற்றெல்லையும் கக அடிப் பேரெல்லையும் உடையது நெடுந்தொகை. கூ அடிச் சிற்றெல்லையும் ஐஉ அடிப் பேரெல்லையும் உடையது நற்றிணை. இந்நூல் தொகுக்கப் பெற்றது குறுந்தொகைக்கு முன்னே பின்னே வென்று தெளிதற்குரிய பிரமாணங்கள் கிடைக்கவில்லை. இவ் வகப்பொருள் நூலும் குறுந் தொகைக் காலத்தினை யடுத்தே தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

தொகைநூல்களுட் பெரும்பாலன பாண்டியர்களால் தொகுப்பிக்கப் பட்டன வெனத் தோன்றுகிறது. ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், சேரர்களாலே தொகுப்பிக்கப்பட்டன. சோழவரசர்களால் தொகுப் பிக்கப் பட்டனவாகவும் ஒன்றிரண்டு நூல்கள் இருக்கலாம். ஆனால் வரையறுத்துச் சொல்லுதற்குரிய ஆதார மொன்றும் நமக்குக் கிடைக்க வில்லை.

குறுந்தொகை

II

குறுந்தொகையின் காலத்தை இனி ஆராய்ந்து கூறலாமென்று எண்ணுகிறேன். குறுந்தொகையின் காலமென்பதில் இரண்டு வேறு வேறு கருத்துக்கள் உள்ளன. ஒன்று இந்நூல் தொகுக்கப்பட்ட காலம்; பிறிதொன்று இந்நூற் செய்யுட்கள் இயற்றப்பட்ட காலம். இரண்டற்கும் யாதோரியைபும் இல்லை. எனது கருத்தினை ஒருதாரணத்தால் விளக்குகிறேன். பன்னூற்றிரட்டு என்னுந் தொகைநூலைப் பற்றித் தமிழ் கற்ற ரனைவரும் அறிவர். இது சிலவருடங்கட்கு முன்னர் ஸ்ரீபாண்டித்துரைத் தேவரவர்களால் தொகுக்கப்பட்டது. ஆனால் இதன்கண் அடங்கிய செய்யுட்களோ வெனின், வெவ்வேறு காலத்திருந்த பல்வேறு ஆசிரியர்களால் இயற்றப்பட்டன. இதனையொத்து, இரண்டு வெவ்வேறு ஆராய்ச்சிகள் தொகைநூல்களின் காலவரையறை குறித்துச் செய்யவேண்டுவனவா யுள்ளன வென்பதை நாம் நன்குக மனங்கொள்ளுதல் வேண்டும். ஒன்றனைப் பிறிதென்றெண்ணி மயங்கவைத்தல் கூடாது. தொகுத்தது குறிப்பிட்ட வொரு காலத்தாதல் வேண்டும்; செய்யுட்கள் இயற்றியதோவெனின் பற்பல காலங்களிலாதல் வேண்டும்.

இக்காலத்துப் பதிப்பாளரொருவர் ஒரு பொருள்பற்றிப் பல ஆசிரியர்கள் பல நோக்குப்பற்றி ஆராய்ந் தெழுதிய கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுதலைக் காண்கின்றோம். இத்தொகையை 'Symposium' என ஆங்கிலத்தில் வழங்குவர். இதுபோன்றதொரு நூலாக, ஏக காலத்திலே இயற்றித் தொகுக்கப்பட்டனவாக, கடைச் சங்கத்துத் தொகைநூல்கள் இருத்தல்கூடாவோ வென்று சிலர் ஆசங்கித்தல் கூடும். ஆனால் உற்றுநோக்கின், இவ்வையுறவிற்கு இடமில்லையென்பது தெளிவாம். இவ்வகை நூல்கள் தோன்றுதற்குரிய நிலைமையுண்டாதல் முற்காலத்து அருமையாம். ஏககாலத்தில் சங்கத் தொகைநூற் புலவர்கள் இருந்தனரென்று கொண்டாலும், அவர்கள் பலவிடங்களில் வாழ்ந்துவந்தவர்கள். அவர்கள் முயற்சிகளை ஒருமுகப்படுத்துதற்குரிய சௌகரியங்கள் முற்காலத்தில் இல்லை. உண்மையில் அவர்கள் ஏககாலத்து வாழ்ந்தவர்களுமல்லர். ஒரு சில புலவர்கள் தம் காலத்திற்கு முன்புவாழ்ந்த புலவர்களையும் அவர்கள் சரித்திரங்களையும் குறித்துப் பாடியிருக்கின்றனர்.

வெள்ளிவீதி போல நன்றும்
செலவயர்ந் திசினால் யானே (அகம். 147)

இச்செய்யுளைப்பாடிய ஔவையார் வெள்ளிவீதியாரது சரித்திரம் பற்றிப் பாடியமை கவனிக்கத் தக்கது. இவ்விரு புலவர்களும் இயற்றிய செய்யுட்கள் சில நாம் ஆராய்ந்துவரும் குறுந்தொகையிலும் காணப்படுகின்றன.

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே (குறுந். 44)

இவ்வழகிய செய்யுளைப் பாடியவர் வெள்ளிவீதியே.

உள்ளி னுள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்றே காமம்
சான்றோ ரல்லர்யா மரீஇ யோரே (குறுந். 102)

காதலென்னுங் கடுந்தீயின் பொறுக்கலாற்றாமையை இத்துணை வேகத்தோடு கூறுகின்றவர் ஔவையாரே. இவ்விருவரும் வேறுவேறு காலத்தினராதல் வெளிப்படை. வேறொரு உதாரணம் புறநானூற்றினின்றும் தருகின்றேன்.

மோசி பாடிய ஆயும்.....எனவாங்
கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
யிரந்தோ ரற்றந் தீர்க்கென (புறம். 158)

என்று குமணனென்னும் வள்ளலைப் பெருஞ்சித்திரனா ரென்னும் புலவர் பாடினர். இங்குக் குறித்த மோசியார் பாடிய செய்யுட்கள் பல புறநானூற்றின்கண்ணேயே வருகின்றன. அவற்று ளொன்று கீழ் வருவது :

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிசு னாஅ யல்லன்
சான்றோர் சென்ற நெறிபென
ஆங்குப்பட் டன்றவன் கைவண் மையே (புறம். 134)

இவ்விருவரும் வேறுவேறு காலத்தினர்; எனினும் ஒரு தொகைநூலின் கண்ணே இருவரது செய்யுட்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

மேற்காட்டியன போன்று பல வுதாரணங்கள் காட்டுதல் கூடும். எனவே சமகாலத்தினரது செய்யுட்களைத் தொகுத்த தொகைகளல்ல சங்க விலக்கியங்கள். உண்மை யிவ்வாறிருப்பவும், காலவரையறை செய்யப் புகுந்தார் ஒருசிலர் தொகுத்த காலமும் இயற்றிய காலமும் ஒன்றெனக்கொண்டு பெரிதும் மயக்கத்தை விளைவித்தனர். புறநானூற்று முதற்பதிப்பின் முகவுரையில், ‘ இந்நூற் செய்யுட்களாற் பாடப்பட்டவர்கள் ஒருகாலத்தா ரல்லர்; ஒரு குலத்தா ரல்லர்; ஒரு சாதியா ரல்லர்; ஓரிடத்தாரு மல்லர். பாடியவர்களும் இத்தன்மையரே ’ என்ற பொருள் பொதிந்த வாக்கியம் வரையப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

தொகை நூல்களின் காலவரையறைபற்றிப் பொதுப்படப் பேசும் இந்தச் சந்தர்ப்பத்திலே ஆராய்ச்சியாளர் கொண்டிருக்கும் பிறிதொரு கொள்கையையுஞ் சிறிது ஆராய்தல் நலம். நற்றிணை, குறுந்தொகை,

ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு என்ற ஐந்து தொகைநூல் களிலும் வருங் கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் பாரதம் பாடிய பெருந் தேவனாரியற்றியன. எனவே இப்பெருந்தேவனாரே இவற்றைத் தொகுத் தவராதல்வேண்டும் என்பர். பெருந்தேவனாரை 9-ம் நூற்றாண்டினராகக் கொண்டு, தொகைநூல்களும் அக்காலத்தில் தொகுக்கப்பெற்றன வென்றுங் கொள்ளுவர். இது சிறிதும் பொருந்தாமை யெளிதி னுணர லாம். ஒருவர் இப்பொழுது சில தொகைநூல்கள் தொகுப்பதாக வைத் துக்கொள்வோம். ஒவ்வொரு தொகைநூலுக்கும் கடவுள் வாழ்த் தாக அப்பர் திருப்பாட்டுக்களினின்றும் ஒவ்வொரு செய்யுளை எடுத்துச் சேர்த்திருப்பதாகவும் கருதிக்கொள்க. கடவுள் வாழ்த் துக்கள் அப்பர் சுவாமிகள் செய்தருளியன என்ற ஒரு காரணம்பற்றி இத்தொகைநூல்கள் யாவும் அச்சுவாமிகள் தொகுத்தனவென்று கூறு தல் பொருந்துமா? இது போன்றதொரு கூற்றே பெருந்தேவனார் தொகுத்தாரென்று கூறுவதும். ஐந்து தொகைநூல்களிலும் அப்பெருந் தேவனாரது செய்யுட்கள் காணப்படுதல்பற்றி இம்முடிபுக்கு வருதல் ஒரு சிறிதும் தகாது. கபிலர் என்னும் புலவரது செய்யுட்கள் பரிபாடலொழிய ஏனைத் தொகைநூல்களனைத்தினும் வந்துள்ளன. இதுபற்றிக் கபிலர் இத்தொகைகளைத் தொகுத்தாரென்று கூறுதல் பொருந்துமா? அன்றியும் முழுவதும் கிடைத்துள்ள தொகைநூல்களிற் காணப்படும் இறுதிக் குறிப்பிற் தொகுத்தாரும் தொகுப்பித்தாரும் கொடுக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிவர். இவ் இறுதிக்குறிப்பினைக் கற்பிதமென்று தள்ளுதற்குக் காரணம் யாதும் இல்லை. இக்கூறிய காரணங்களால் பெருந்தேவனார் தொகைநூல் தொகுத்தா ரென்னுங் கொள்கை அறவே விலக்குண்டொழிகின்றது.

இனி, குறுந்தொகை தொகுக்கப் பெற்றுள்ள காலத்தை நோக்கு வோம். இந்நூலுக்கு உரைவகுத்தார் பேராசிரியர் என்பது முன்னே கூறப்பட்டது. பேராசிரியர் ஓட்டக்கூத்தர் காலத்தினராதல் 'ஓட்டக் கூத்தர் உலாப்பாடியபோது பேராசிரியர் கேமிநாதர் பட்டோலை பிடிக் கப்பாடியது' என்று தமிழ்நாவலர் சரிதையிற் குறிக்கப்பெறும் செய்தி யால் விளங்கும். ஓட்டக்கூத்தர் 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென் பது சரித்திர மொப்பியதோ ருண்மை. எனவே பேராசிரியர் காலமும் அதுவேயாக, குறுந்தொகை 12-ம் நூற்றாண்டிற்கு முன்பே தொகுக்கப் பெற்றுள்ளமை தெளிவாம். இனித் தொல்காப்பியத்திற்கு முதல் உரை காரராகிய இளம்பூரணவடிகள் தமது பொருளதிகார வுரையிலே (கள வியல், 12, உரை) 'ஓம்புமதி வாழியோ' என்னுக் குறுந்தொகைச் செய்யுளைத் தந்து (235) 'இக்குறுந்தோகைப் பாட்டு தலைவன் வரைவிடை வைத்துச் சேறுவான் கூறியது' என்றெழுதினர். எனவே இளம் பூரணர் காலத்திற்கு முன்பே குறுந்தொகை தொகுக்கப்பட்டிருந்தமை நன்கு விளங்குகின்றது. இவ்வுரைகாரர் காலம் 11-வது நூற்றாண் டெனக் கொள்ளுதல் தகும். எனவே நாம் ஆராயும் நூல் 11-வது நூற்றாண்டிற்கும் முன்னரே தொகுக்கப் பெற்றதாம்.

இனி, வீரசோழிய வுரையிலே 'அளவாற் பெருக்கது குறுந் தொகை' (அலங். 36, உரை) என்று கூறப்பட்டுள்ளது. இவ்வுரையும் வீரசோழியம் என்னும் இலக்கணமும் வீரசோழனென்னும் வீரராசேந் திரன் காலத்து எழுதப்பட்டனவாம். இவ்வரசன் கி. பி. 1062-ல் பட்ட மெய்தினன். எனவே இக்காலத்திற்கு முன்னரே குறுந்தொகை தொகுக்கப்பெற்றதென்றுள்ள மேலெழுடிபு பிறிதொரு வகையாலும் உறுதியடைகின்றது.

இனி, இறையனு ரகப்பொரு ளுரையிலே கடைச்சங்க வரலாறு கூறுமிடத்து 'அவர்களாற் (கடைச்சங்கத்துப் புலவர்களாற்) பாடப் பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும் கற்றிணை நானூறும்... என்றித் தொடக்கத்தன' என்று வருகின்றது. இவ்வுரை யிலே கி.பி. 7-ம்நூற்றாண்டில் வாழ்ந்தஅரிகேசரியென்றும் கின்றசீர் நெடு மாற நாயனார் என்றும் பெயர்சிறந்த பாண்டியப் பேரரசர்மீது இயற்றிய பாண்டிக்கோவைச் செய்யுள்கள் பல காணப்படுகின்றன. எனவே இவ்வுரை கி. பி. 7-ம் நூற்றாண்டில் எழுதப்பெற்றதாதல் வேண்டும். எழுதப்பெற்ற காலம் எதுவாயினும், உரை தோன்றிய காலம் பத்துத் தலைமுறைக்கு முன்னென்பது உரைவரலாறு கூறும் பகுதியால் உணர லாகும். எனவே உரை தோன்றிய காலம் 5-ம் நூற்றாண்டின் முற் பகுதியா மென்பது அனுமானித்துக்கொள்ளக் கிடக்கின்றது. எனவே குறுந்தொகை தொகுக்கப்பெற்ற காலம் 5-ம் நூற்றாண்டிற்கும் முன் னென்பது போதரும். பாண்டிக்கோவையிற் குறுந்தொகைச் செய்யுட் களின் கருத்துக்கள் பலவிடங்களிற் காணப்படுதலும் இங்கே நோக்கத் தக்கது. உதாரணம்:—

செல்வா ரல்லரென் றியாணிகழ்ந் தனனே
ஒல்வா ளல்லளென் றவரிகழ்ந் தனரே
ஆயிடை, இருபே ராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்கென்
அல்ல னெஞ்ச மலமலக் குறுமே (குறுந். 43)

என்ற செய்யுளோடு

செல்வா ரவரென்றி யாணிகழ்ந் தேன்சுரஞ் செல்லத்தன்கண்
ஒல்லா ளவளென் றவரிகழ்ந் தார்மற் றுரையிரண்டும்
கொல்லா ரயிற்படைக் கோனெடு மாறன் குளந்தைவென்ற
வில்லான் பகைபோ லெனதுள்ளந் தன்னெமெலிவிக்குமே

என்ற பாண்டிக்கோவைச் செய்யுளோ ஒப்பிடுக.

இனி, களவியலுரைகண்ட வரலாறு இன்னும் உறுதியாகக் குறுந்தொகை தொகுக்கப்பட்ட காலத்தை அறுதியிடுதற்கு உதவு கின்றது. 'உப்பூரி குடிகிழார் மகனுவான் உருத்திர சன்மனுவான் செய்தது இந்நூற்கு உரையென்பாரும் உளர்; அவர் செய்திலர், மெய் யுரை கேட்டார் என்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு, குமாரசுவாமியாற்

கேட்கப்பட்ட தென்க' என்பது அகப்பொருளுரைப்பகுதி. இப்பகுதியிலுள்ள பிற்பட்ட வாக்கியத்தில் நமது கவனம் இப்பொழுது செல்ல வேண்டுவதில்லை. முற்பட்ட வாக்கியமே மிக முக்கியமானது. அதன்கண் வரும் உருத்திரசன்மன் அகநானூறு தொகுத்தவனென்பது அந்நூலின் இறுதிக்குறிப்பாற் புலனும். எனவே அகப்பொருளுரைகண்ட காலமும் அகநானூறு தொகுக்கப்பட்ட காலமும் 5-ம் நூற்றாண்டின் முற்பகுதியென்பது ஒருவகையாற் புலனாகின்றது. குறுந்தொகை நூலினைத் தொகுத்தவன் பூரிக்கோ வாதலாலும் இப்பூரிக்கோ என்பான் உப்பூரிகுடிகிழானாக இருத்தல் கூடுமாதலாலும், இத்தொகைநூல் உருத்திரசன்மனது தந்தையால் நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொகுக்கப்பெற்றதெனக் கொள்ளுதல் தக்கதாகின்றது.

நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களனைத்தும் இம்முடிபினையே வலியுறுத்துவனவாம். தமிழிலக்கியச் சரிதப்போக்கும் நிச்சயமாய்த் தெரிகின்ற சரித்திர விஷயங்கள் முதலியனவும் இம்முடிபினையே கொள்ளும்படி வற்புறுத்துகின்றன. இதனோடு ஒருபுடை யொத்துச் சென்று வேறுவகையான முடிபிற்கு நம்மை யுய்க்கின்ற ஒருசில பிரமாணங்களும் இல்லாமற் போகவில்லை. மேற்காட்டிய களவியலுரையின் பிற்பகுதி இத்தகைய பிரமாணங்களுள் ஒன்றும். அதனை ஆதாரமாகக் கொள்ளின், கடைச்சங்கப் புலவராகிய நக்கீரரும் இக்காலத்து வாழ்ந்தவரென்று கொள்ளப்படுதல் வேண்டும். இவ்வாறு கொண்டு கடைச்சங்க காலமும் 5-ம் நூற்றாண்டின் தொடக்கமென முடிபுகட்டிய அறிஞருமுளர். ஆனால் இதற்குக் காட்டும் பிரமாண வாக்கியம்பற்றிப் பற்பல ஆசங்கைகள் தோன்றுகின்றன. வாக்கியம் கோக்கியவளவில் மக்கள் செயலில் தெய்வங்கள் கலந்துறவாடிய செய்தி கூறப்படுகின்றமை காணலாம். இதுபோன்ற ஆதாரங்களை உண்மையெனக் கொள்ளுவார் இக்காலத்து அரியர். ஒருவகையான ஆட்சேபத்திற்கு மிடமின்றிப் பொருத்தமுற்றுகிற்பது யான் குறித்த முடிவேயாகும். ஆகவே குறுந்தொகை தொகுக்கப் பெற்ற காலம் 4-ம் நூற்றாண்டின் பிற்பகுதியென்றே கொள்ளற்பாலது.

இனி, நூலிலுள்ள செய்யுட்கள் இயற்றப்பட்ட காலத்தை வரையறுக்க முயலுவோம். பாடினோர் பலகாலத்தவரும் பலதேயத்தவருமாவர். ஆதலால் செய்யுட்களியற்றியது குறித்த ஒருகாலத்தன்றென்பது வெளிப்படை. குறுந்தொகையிலுள்ள செய்யுளொவ்வொன்றும் தோன்றிய காலத்தை வரையறுத்தலும் இயலாததொருகாரியம். செய்யுட்களின் ஆசிரியர்களுடைய பெயர்களே மறைந்துவிட்டன. 18 செய்யுட்களை இயற்றியோர்க்கு அவரவரது செய்யுட்களில் வந்துள்ள அருந்தொடர்களே பெயராக அமைந்துள்ளன. எஞ்சிய செய்யுட்களினும் காலவரையறை செய்தற்குப் பயன்படும் ஆதாரங்களையுடையன மிகமிகச் சிலவேயாம். அவற்றுளொன்றை யெடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்து காலத்தை அறுதியிட்டு அக்காலத்திற்கு முன்னுகப்

பின்னாக இந்நூற் செய்யுட்கள் இயற்றப் பெற்றன வென்றுகோடலே இயலுவதாம். இந்நெறியையே பின்பற்றி மேல்வரும் ஆராய்ச்சியை நிகழ்த்துகின்றேன்.

முந்திய பிரசங்கத்தில்,

நீகண் டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையின மொழிமோ
வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே (குறுந். 75)

என்ற செய்யுளைக் குறித்து ஒருசில கூறும்படி நேர்ந்தது. குறுந்தொகையை முதலிற் பதிப்பித்தவராகிய சௌரிப் பெருமா ளரங்கனார் 'வெண்கோட்டியானை பூஞ்சுனைபடியும், பொன்மலி பாடிலி பெறீஇயர்' என்று பதிப்பித்தனரென்றும் உண்மையான பாடம் மேலே தந்துள்ளதே யென்றும் பலமுகத்தா லாராய்ந்து தமிழிலும் (கலைமகள்) ஆங்கிலத்திலும் (டாக்டர் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் நினைவுமலர் வெளியீடு) சில வருடங்கட்கு முன்னரே யென்னால் எழுதப்பட்டது. டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களும் தனிப்பட வாராய்ந்து உண்மைப் பாடத்தை அவர்களது பதிப்பில் வெளியிட்டிருக்கின்றார்கள். எனது முடிபும் அவர்களது பாடமும் ஒன்றாதல் கண்டு பெரிதும் மகிழ்கின்றேன்.

இன்று இச்செய்யுளின் பாடபேத விசாரணையிற் புகும் அவசியம் இல்லை. இதன்கண் காணப்படும் சரித்திரச் செய்தியே நாம் ஆராய்தற்குரியது. சோணைநதிக் கரையிலே பொன்மிகுதியாற் சிறப்புற்று விளங்கும் பாடலியென்னும் வளமிக்க நகரத்தை நீ பெறுவாயாக வென்று தலைமகன் வரவுணர்த்திய பாணனை நோக்கித் தலைமகள் கூறுகின்றாள். எனவே இச்செய்யு ளியற்றப்பெற்ற காலத்தே பாடலிபுத்திரம் வளஞ்சிறந்த பெருநகரமாய் விளங்கிய தென்பது புலனாம். எக்காலத்து இவ்வாறு விளங்கியது ?

இதனை நிச்சயித்தற்குப் பாடலிபுத்திர நகரத்தின் சரிதத்தை நாம் ஆராய்தல் வேண்டும்.

பாடலி யென்பது முதலிற் பெயர்விளக்க மற்ற ஒரு சிற்றூராக இருந்தது. இதற்குக் குஸுமபுரமென்ற பெயர் வழங்கியதாகவும் சொல்லப்படுகிறது. லிச்சவி என்னு மரபினர்கள் படையெடுத்துவர வொட்டாது தடுப்பதன்பொருட்டு, அஜாதசத்ரு என்னும் அரசனால் கோட்டையொன்று கட்டப்பெற்றது. இவ்வரசன் கி. மு. 500 முதல் கி. மு. 475 வரை ஆட்சிபுரிந்தான். இவனது பெயரனாகிய உதயன் (உதயண னென்றும் இவனை வழங்கினர்) இச்சிற்றூரை ஒரு நகரமாக்குவதற்கு கி. மு. 450-ல் அடிகோலின னென்று கூறப்படுகின்றது. பின்னர் சந்திரகுப்த னென்னும் மௌரியவரசன் இதன்கண் சிலகாலங்

களில் வசித்துவந்தான். இவன் கி. மு. 322 முதல் 298 வரை அரசாட்சி செய்துவந்தான். இவ்வரசாட்சிக் காலத்திலே கி.மு. 302.ல் மெகாஸ்தினீஸ் என்னும் கிரேக்க ரொருவர் ஸெல்யூக்கஸ் என்னும் அரசனல் தூதாக அனுப்பப்பெற்று, பாடலிபுத்திரத்திலே வெகுகாலம் வாழ்ந்துவந்தார். இவர் இந்நகரத்தை விஸ்தாரமாக வருணித்திருக்கின் றனர். இதன் பின்னர் அசோக சக்ரவர்த்தியால் அரசாங்கத் தலை நகராகக் கொள்ளப்பட்டது. இச்சக்ரவர்த்தி கி. மு. 273 முதல் 233 வரை அரசாண்டனர். இவர்தாம் தமிழ்த் தேசங்கள் முதலியவற்றிற்கு முதன்முதல் பௌத்த தரிசனத்தைப் பரவச்செய்யும் பொருட்டுத் தூதர் களை அனுப்பி, அங்கங்கே பௌத்தப் பள்ளிகளை நிருமித்தவர். இவர் ஆட்சிபுரிந்து 50 வருஷங்களுக்குப் பின்னர், சுமார் கி. மு. 185.ல் மௌரியவமிசம் அழிவுற்றுச் சுங்கவம்சத்தினர் கையில் மகதராஜ்யமும் அதன் தலைநகராகிய பாடலிபுத்திரமும் சென்றன. இவ்வமிசத்தின் முதலரசன் புஷ்யமித்திரனென்பவன். இவன் காலத்தில் பாக்டீரியா அரசனன இயூக்ரேட்டிஸ் என்பவனது சுற்றத்தானும் காபூல்தேசத்து அரசனுமாகிய மினாண்டர் என்பவன் வடஇந்தியாவிற் படையெடுத்து வந்து பாடலி புத்திரத்தையே முற்றுகை செய்வான்போல நெருங்கினன். எனினும் கி. மு. 75வரை அரசாண்ட சுங்கவமிசத்தினரது தலை நகராகவே பாடலிபுத்ரம் இருந்துவந்தது. இவ்வமிசத்திற்குப் பின் காண்வ வமிசத்தினர் கி. மு. 27வரை மகதத்தில் அரசுபுரிந்தனர். இவ் வமிசத்திற்குப்பின் மகததேசம் அதன் தலைநகராகிய பாடலியுடன் ஆந்திரவம்சத்தினர் கைப்பட்டது. இவ்வமிசத்தினர் கி. பி. 225வரை ஆட்சிபுரிந்தனர். இதற்கப்புறம் பாடலிபுத்ரம் லிச்சவிமரபினரால் கொள்ளப்பட்டதாயிருத்தல் வேண்டும். கி. பி. 320.ம் வருஷம் முதற் கொண்டு ஆண்டுவந்த குப்த அரசனுக்குப் பாடலி லிச்சவிகளிட மிருந்தே கிடைத்தது. குப்தஅரசனன சந்திரகுப்தன் (320-360) பாடலியைத் தலைநகராகக்கொண்டு அரசுபுரிந்துவந்தான். இவனுக்குப் பின் சமுத்திர குப்தனல் (360-375) பாடலி புறக்கணிக்கப்பட்டது. பின்னர் குப்தர்களுக்குரிய முக்கியமான நகரங்களுளொன்றாகப் பாடலி இருந்தபோதிலும், தலைநகரென்ற பதவியை அது இழந்துவிட்டது.

பின்னர் கி. பி. 405-411 வரை இந்தியாவிலிருந்த சீனயாத்திரிகன் பாடலி நல்ல நிலைமையி லிருந்ததாகவே கூறுகின்றான்.

கி. பி. 640.ல் இந்தியாவிற்கு வந்த (Hiouen Thsang) பாடலிமுற்றும் அழிந்துவிட்டதாகக் கூறுகின்றான்.

இச்சரித்திரத்தால் அசோக சக்ரவர்த்தி காலத்திற்குப் பின்பு கிறிஸ்துவப்தத்தின் ஆரம்ப காலங்களில் பாடலியிருந்த நிலைமையை மேலைச் செய்யுள் குறிப்பதாகக் கொள்ளலாம். கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டு குறுந்தொகைச் செய்யுட்கள் இயற்றப்பட்ட காலமெனக் கருதுதல் தவறாகாது.

இறைச்சிப்பொருள்

திரு. வே. வேங்கடராஜுலுரெட்டியார்

Junior Lecturer in Tamil,
Oriental Research Institute, University of Madras.

தமிழ்மொழியில் இக்காலத்தில் வழங்கும் நூல்களுள் மிக்க தொன்மையது தொல்காப்பிய மொன்றே. அந்நூலுள், முதலிரண்டதிகாரங்களில் மொழிக்கு வேண்டும் இலக்கணமும், மூன்றுவதாகிய இறுதியதிகாரத்தில் செய்யுட்களிற் கூறப்படும் புலனெறிவழக்கும், செய்யுளிலக்கணமும், மெய்ப்பாட்டியலும், பிறபலபொருள்களும் கூறப்பட்டுள்ளன. ஆகலின், செய்யுளின்பந்துய்ப்பார்க்கு அம் மூன்றுமதிகாரத்திற் கூறப்பட்டுள்ள பொருள்களே பெரிதும் பயனளிக்கும். அவ்வதிகாரத்தில்,

'உடனுறை யுவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே' (பொருளியல். 46)

என்னுஞ் சூத்திரத்தால், உள்ளுறையாகக் கூறப்படும் பொருள்—உடனுறை (1 இறைச்சி), உள்ளுறையுவமம், சுட்டு, நகை, சிறப்பு என்னும் ஐந்துவகைப்படும் என்று ஆசிரியர் கூறியுள்ளார். அவற்றுள் உள்ளுறையுவமமும், இறைச்சியுமே பயில்வன. ஆகலின், அவற்றைக் குறித்துச் சிறிது ஆராய்தும். முதற்கண் உள்ளுறையுவமத்தை நோக்குதும்:

உள்ளுறையுவமமாவது—ஒருவர், தாம் கூறக் கருதிய பொருள் 'இதனோடு ஒத்து முடிதல்வேண்டும்' என்று உட்கொண்டு அதற்கு வேண்டுபவற்றை (கருப்பொருளை) உள்ளுறுத்துக் கூறுவது. இஃது,

'உள்ளுறுத் திதனோ டொத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் துரைப்பதை உள்ளுறை யுவமம்'
(அகத்திணையியல். 51.)

என்னுஞ் சூத்திரத்தான் அறியப்படும். உள்ளுறையுவமம்—கருப்பொருள்களுள் தெய்வம் ஒழிந்த பிறபொருள் நிலமாக வரும் என்பது,

'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமெனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே' (அகத். 50.)

1. 'இறு' தங்கு என்பதன் அடியிற் பிறந்ததாகலின் இறைச்சி என்பதும் உடனுறை என்பதும் ஒருபொருள தாயிற்று.

என்னுஞ் சூத்திரத்தாற் போதரும். இனி உள்ளுறை—வினை, பயன், உறுப்பு, உரு, பிறப்பு என்னும் ஐந்தனுள் வருவன என்றும், அவற்றைக் கூறுங்கால் தலைவி முதலியோர் கூறும் முறை இவை என்றும் ஆசிரியர் உவமவியலில் விரித்துக் கூறியுள்ளார்.

மேற்கூறியவற்றுள், தலைவிமுதலியோர் தாம் கூறக் கருதிய பொருளை, ஆண்டைக்கு வேண்டுத லில்லாத கருப்பொருட்செய்தியைக் கூறிப் பெறவைப்பர் என்பது அறியப்படுமன்றே?

> 1'வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
> ஞாங்கர் மலர்சூழ்தந் தூர்புகுந்த வரிவண்
> டோங்குய செழில்யானைக் கணைகடாங் கமழ்நாற்றம்
> ஆங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
> வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
> தேங்கமழ் கதுப்பினுள் அரும்பவிழ் நறுமுல்லை
> பாய்ந்துதிப் படர்தீர்ந்து பண்டுதா மரீஇய
> பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர.'

என்னும் இவ்வடிகளில், வண்டினைக்குறித்துக் கூறியிருப்பனவெல்லாம் ஈண்டைக்கு வேண்டுதலின்மையும், தலைவி தான் கூறக் கருதிய பொருளை இவ்வாறு உள்ளுறையாகக் கூறினமையும் அறிக. இவற்றுள், வெளிப் படையாகக் கூறியுள்ள பொருள் ஆண்டைக்கு வேண்டுதலின்றி, அதனோடு ஒப்பாகக் கொள்ளப்படும் உட்பொருளே இயைபுடையதா யிருக்குமாறு கூறப்படுவது உள்ளுறையுவமமாகும் என்பது தெளிவாகும். ஆசிரியர், 'இதனே டொத்துப் பொருள் முடிகென, உள்ளுறுத் துரைப்பது' என்றதனுன், உள்ளுறையா னன்றி ஆண்டைப்பொருள் முற்றுப்பெறாது என்பது அறியப்படுமன்றே? இனி இறைச்சிப்பொருளை நோக்குதும்:

இறைச்சிப்பொருளின் இலக்கணம்,

'இறைச்சி தானே பொருட்புறத் ததுவே' (பொருளியல். 33.)

என்னுஞ் சூத்திரத்தான் அறியப்படும். ஈண்டு, இச்சூத்திரத்தின் உரைகளை முதற்கண் நோக்குதும்.

இளம்பூரணஅடிகள் இச்சூத்திரத்தை,

'இறைச்சி தானே உரிப்புறத் ததுவே'

என்று பாடங்கொண்டு, 'இறைச்சிப்பொருள் என்பது உரிப்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருள்' என்று உரை கூறி,

> 'சாரற்
> கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
> பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே'

1. கலித்தொகை. 66.

என்றவழி, 'நாட்டிற்கு அடையாகிவந்த குறிஞ்சிப்பூவும் தேனும் இறைச்சிப்பொருள் என்றுகொள்க' என்று விளக்கம் எழுதியுள்ளார்.

அவர் இச்சூத்திரத்திற்கு உரை கூறியவிடத்து, 'உரிப்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருள்' என்று உரைகூறி, 'குறிஞ்சிப்பூவும் தேனும் இறைச்சிப் பொருள் என்று கொள்க' என்று எழுதிய விளக்கம் அமைவுடையதாகத் தோன்றவில்லை. என்னெனின், குறிஞ்சிப் பூவும் தேனும் கருப்பொருளாதலேயன்றி, உரிப்பொருளின் புறத்தாய பொருளன்மையின் என்க; அன்றியும், இப்பொருளே ஆசிரியர் கருதினராயின், 'இறைச்சி தானே கருப்பொருளென்ப' என்று சூத்திரஞ் செய்திருப்பரன்றே? அங்ஙனஞ் செய்யாமையானும், முன்னர், 'உடனுறை யுவமம்.....ஐந்தே' என்னுஞ் சூத்திரத்தில் உள்ளுறையாகக் கூறப்படும் பொருள் ஐந்தனுள் இறைச்சியை முதலதாக வைத்துக் கூறினராகலின் இறைச்சியாவது உள்ளுறையாகக் கூறும் பொருள்களுட் சிறந்ததொன் றென்று அறியப் படுமாகலானும், அவர்தாமும் (உரையாசிரியர்) 'உடனுறை.....ஐந்தே' என்னுஞ் சூத்திரத்தின் உரையில், 'உடனுறையாவது—உடனுறைவதொன்றைச் சொல்ல, அதனானே பிறிதோருபொருள் விளங்குவது' என்று உரைகூறி 'விளையாட்டாயமொடு' என்னும் நற்றிணைச் செய்யுளை உதாரணந் தந்து, 'இதனுள், புன்னைக்கு நாணுதும் எனவே, அவ்வழித் தான் வளர்த்த புன்னை என்று பலகாலும் அன்னை வருவள் என்று உடனுறை கூறி விளக்கியவாறு' என்று விளக்கம் எழுதினராகலானும் அது பொருந்தாதெனக் கொள்க

இனி, 'நாட்டிற்கு அடையாகிவந்த குறிஞ்சிப்பூவுந் தேனும் இறைச்சிப்பொருள் என்று கொள்க' என்றதற்கு, குறிஞ்சிப்பூவினனும் தேனனுங் கொள்ளப்படும் பொருள் இறைச்சிப்பொருளாகும் என்பது கருத்தாகக் கொள்ளலாம் போலும். அங்ஙனங் கொள்ளினும், அதுவும் உள்ளுறையுவமமாதலன்றி இறைச்சியாகா தென்று விடுக்க.

ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'இது தலைவிக்குத் தோழிக்கும் உரியதோர் வழு அமைக்கின்றது' என்று கருத்துக் கூறி, 'கருப்பொருட்கு நேயத்தான் கூறவேண்டுவதோர் பொருளின் புறத்தே புலப்பட்டு அதற்கு உபகாரப்படும் பொருட்டன்மை யுடையதாம்' என்று உரை எழுதி,

> 'இலங்கு மருவித் திலங்கு மருவித்து
> வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
> சூள்பேணன் பொய்த்தான் மலை'

என்னும் அடிகளை உதாரணந் தந்து, 'சூளைப் பொய்த்தான் என்பதே கூறவேண்டும் பொருள். அதன்புறத்தே இங்ஙனம் பொய்த்தான் மலையகத்து நீர்திகழ்வா னென்? என இறைச்சிப் பொருள் தோன்றிய வாறு காண்க' என்று விளக்கம் எழுதியுள்ளார்.

இவர் கூறுமாறு இச்சூத்திரத்தினால் வழுவமைப்பதே ஆசிரியர் கருத்தாயின், மேற்சூத்திரத்தில் 'புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே'

என்றுகூறி அமைத்தாற்போல, ஈண்டும், ‘இறைச்சியிற் கூறுதலும் வரையார்’ என்பதுபோலக் கூறி அமைத்திருப்பர். இறைச்சிபற்றிக் கூறுகின்ற மூன்று சூத்திரத்திலும் அங்கனம் கூறினுரல்லராகலானும், முன்னர் உள்ளுறையுவமம் கூறும்வழி அதனையும் வழுவன்றென்று கூறி அமைத்திலராகலானும் அஃது ஆசிரியர்கருத்தன்று எனக் கொள்க. அன்றியும், நச்சினர்க்கினியர், ‘இறைச்சி’ என்பதற்குக் கருப்பொருள் (இஃது, ‘இறைச்சியிற் பிறக்கும்’ என்னுஞ் சூத்திரத்திற்கு அவருரைத்த வுரையால் நன்கு விளங்கும்) என்று பொருள்கொண்டது பொருந்தாதென்பது மேற் கூறியவற்றுன் அறியப்படும். அவர், ‘பொருட்புறத்ததுவே’ என்பதற்கு, ‘பொருளின் புறத்தே புலப்பட்டு, அதற்குபகாரப்படும் பொருட்டன்மை யுடையதாம்’ என்று பொருளுரைத்தார். ‘பொருட்புறத்ததுவே’ என்பதற்கு, ‘பொருளின் புறத்தே தோன்றுவது’ என்பதுவே பொருளாகும். அது பொருட்கு உபகாரப்படுந் தன்மையுடையது என்பது அமைவுடையதன்று. என்னெனின், உபகாரப்படுதலும் உண்டு, படாமையும் உண்டு என்க. உரையாசிரியர், ‘இறைச்சிப்பொருள் பிறிதுமோர் பொருள்கொள்ளக் கிடப்பனவும் கிடவாதனவும் என இருவகைப்படும்’ என்றுர். அவ்வாறன்றி, இறைச்சிப்பொருள் சொற் பொருட்கு உபகாரப்படுதலும் படாமையும் என இருவகைப்படும் எனின் அமைதியாகும். அது, முன்னர் அறியப்படும். இனி,

‘இறைச்சி தானே பொருட்புறத் ததுவே’

என்னுஞ் சூத்திரத்தின் நேர்பொருள் யாது என்று நோக்குதும். இஃது, இறைச்சிப்பொருளுக்கு இலக்கணம் கூறுவது. இறைச்சியாவது —சொற்பொருளுக்குப் புறத்ததா யிருக்கும் பொருள் என்பது இச் சூத்திரத்தின் நேர்பொருள். அஃதாவது, சொற்பொருளுக்குப்புறத்தே தோன்றுங் குறிப்புப்பொருள் (வ்யங்க்யம்) இறைச்சி எனப்படும் என்பதாம்.

ஆயின், இளம்பூரணஅடிகள், ‘இறைச்சி தானே உரிப்புறத்ததுவே’ என்று பாடங்கொண்டாராகலின், சொற்பொருட்குப்புறத்தே தோன்றுவது என்றல் பொருந்தாதால் எனின், உரிப்பொருள் என்பது அகப்பொருள் புறப்பொருள் இரண்டனையுங் குறிக்குமாகலானும், செய்யுட்களிற் கூறப்படும் பொருள் இவ்விரண்டன்றி வேறில்லையாகலானும் இளம்பூரணர்கொண்ட பாடத்திற்கும் ஓராற்றுற் பொருந்தும் என்க. அஃதேல், உரிப்பொருள் என்பது புணர்தல் பிரிதல் முதலிய அகப்பொருளை யுணர்த்துமேயன்றிப் புறப்பொருளை உணர்த்தாதால் எனின், அற்றன்று. [1]உரிப்பொருளாவது—மக்கட்கு உரியபொருள். அஃது அகம் புறம் என இருவகைப்படும். அகமாவது—புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனவும், கைக்கிளை பெருந்திணை எனவும் எழுவகைப்படும். * * * புறமாவது—நிரைகோடற் பகுதியும், பகைவயிற்சேறலும், எயில்வளைத்தலும், இருபெருவேந்தரும்

1. அகத்திணையியல் தொடக்கம்.

ஒருகளத்துப் பொருதலும், வென்றிவகையும், கிலேயாமைவகையும், புகழ்ச்சிவகையும் என எழுவகைப்படும். அஃதேல், புறப்பொருளே உரிப்பொருள் என ஓதிற்றிலரால் எனின், ''வெட்சி தானே குறிஞ்சியது புறனே'' எனவும், பிறவும் இவ்வாறு மாட்டேறு பெற ஓதலின், அவையும் உரிப்பொருளாம் என்க'' என்று இளம்பூரணர் எழுதியிருத்தலைக் காண்க. இவ்வாறு அமைத்துக்கோடலினும் நச்சினர்க்கினியர் கொண்ட பாடமே பெரிதும் இயைபுடையதாகும்.

இனி, சொற்பொருட்குப் புறத்தே பின்னும் ஒருபொருள் தோன்றுதல் யாங்ஙனம் கூடும் எனின், மணியடித்தால் அம் மணியோசையின் பின் நுட்பமாகியதோ ரோசை உண்டாதல்போல, கூடும் என்க. அன்றியும், [1]'சொற்பொருள் வேறே, குறிப்புப்பொருள் வேறே. பொருளைக் காண்டற்கு விளக்கு உபாயமாதல்போல, குறிப்புப்பொருளை யறிதற்குச் சொற்பொருள் உபாயமாகின்றதித்தனையே. ஆகலின், குறிப்புப்பொருள் சொற்பொருளாகாது. சொல்லினது பொருளின் வழியாகச் சொற்றொடரின் பொருள் தோன்றுதல்போல, சொற்பொருளின் வாச அடியாகக் குறிப்புப்பொருள் தோன்றுவதாகும். சொல்லின் பொருள் தன் ஆற்றலால் சொற்றொடரின் பொருளை வெளிப்படுத்தினும் பலசாதனையில் (வாக்கியார்த்த பூர்த்தியில்) இல்லாதொழிதல் போல, சொற்பொருளும் குறிப்புப் பொருளைத் தோற்றி, மறைந்துவிடும்.' [2]பெரும்புலவர் தம்வாக்கில் சிறப்புடைக் குறிப்புப்பொருள் தோன்றும்' என்று, பேராசிரியர் ஆனந்தவர்த்தனாசாரியர் கூறியிருப்பவை ஈண்டு அறியத்தக்கன.

இனி, ஆகுபெயர்ப்பொருளும் சொற்பொருளின் வேறுதலால், குறிப்புப்பொருள் அதனுள் அடங்கும் எனின், அவ்வாறு அடக்கினும், குறிப்புப்பொருளென்பதொன்று உளது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டதே யாகும். அன்றியும், [3]ஆகுபெயர்ப்பொருள் (இலக்கணை) சொல்லாற்றலைச் சார்ந்திருக்கும்; குறிப்புப்பொருள் அவ்வாறு சார்ந்திருப்பதன்று; விளக்கினால் பிறபொருள் தோன்றுதல்போலச் சொற்பொருளால் தோன்றுவது. இக்கூறியவற்றால், ஆகுபெயர்ப்பொருளும் குறிப்புப்பொருளும் வேறு வேறே யாதல் விளக்கமுறும்.

மேற்காட்டிய இறைச்சிப்பொருட் சூத்திரத்தின் பொருளை உணராது, அகப்பொருள் விளக்கமுடையார்,

'கருப்பொருட் பிறக்கும் இறைச்சிப் பொருளே'

(நம்பியகப். ஒழிபியல். 31.)

என்று சூத்திரஞ்செய்து இறைச்சிப்பொருளின் இயல்பினை அறவே கெடுத்தொழிந்தார்.

---

1. த்வன்யாலோகம். சூ. 9—11.
2. ஷி ,, 6
3. ஷி ,, 21

'உள்ளுறை யுவமம் உய்த்துணர் வகைத்தாய்ப்
புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும்'

(நம்பியகப். ஒழிபு. 29)

என்று உள்ளுறையுவமத்திற்கு இலக்கணங்கூறிய இவர், 'இறைச்சிப் பொருள் கருப்பொருளிற் பிறக்கும்' என்று கூறியதனை நோக்கின், உள்ளுறையுவமத்திற்கும் இறைச்சிப்பொருட்கும் வேறுபாடு விளங்க வுணர்ந்திலர் என்பது தெளிவாகப் போதருமன்றே?

மாறனலங்காரமுடையார், இறைச்சிப்பொருளை 'இறைச்சிப்பொரு ளலங்காரம்' என ஓரணியாகக் கொண்டு,

கருப்பொருள் களனுங் கட்டுரை பயின்ற
பொருட்புறத் தனவாம் இறைச்சிப் பொருளணி'[1]

என்று அதற் கிலக்கணங் கூறினர். அதன் உரையாசிரியர் நச்சினர்க் கினியரையே பின்பற்றி உதாரணங் கொடுத்து, 'இப்பொருள்கோள் கருப்பொருளே தனக்கு நிலைக்களனாக வரும் என்பது, இதற்கு முத னூல் செய்த ஒல்காப் புலமைத் தொல்காப்பியனாரும் பொருளியலுள் ''இறைச்சி தானே பொருட்புறத் ததுவே'' என்பதனாலுங் கண்டு கொள்க' என்று விளக்கமும் எழுதினர். கருப்பொருளே தனக்கு நிலைக்களனாக இறைச்சிப்பொருள், வரும் என்பது தொல்காப்பியனார் கருத்து என்றது பொருந்தாமை மேற்கூறியவற்றான் அறியப்படும். இதுகிற்க.

இனி, இறைச்சிப்பொருளுக்கு உதாரணம் நோக்குதும்:

'..... யாமத்
தீங்கும் வருபவோ ஓங்கல் வெற்ப
..... எம்படப்பைக்
கொடுந்தே னிழைத்த கோடுயர் நெடுவரைப்
பழந்தூங்கு நளிப்பிற் காந்தளம் பொதும்பிற்
பகனீ வரினும் புணர்குவை .....
..... தடமென் றோளே,' (அகம். 18)

இச் செய்யுளில், தோழி தலைவனை இரவுக்குறி விலக்கி, பகற்குறிக்கண் வருமாறு கூறினாள். ஈண்டு, 'எம்படப்பை...காந்தளம் பொதும்பில்' என்றதனால், 'தேனழித்தற்கும் பழமெடுத்தற்கும் பூப்பறித்தற்கும் வருவார் பலராகலின், பகற்குறிக்கண்ணும் வாராதி; வரைந்து கொண்டு செல்' என்பது குறிப்பு. இதுவே இறைச்சிப்பொருள் (வ்யங்க்யம்) எனப்படுவது. இது, சொற்பொருளினுஞ் சிறந்திருத்தலின் 'த்வநி' எனப்படும்.

---

1. மாறனலங்காரம், 176.

இவ்வாறு [1]விதியினுல் விலக்கல் தோன்றுதலேயன்றி, விலக்கினுல் விதிதோன்றுதலும், விதியினுல் இரண்டும் இன்மையும், விலக்கினுல் இரண்டும் இன்மையும் உண்டு.

இன்னும் [2]பலவாறு விரித்துக்கூறுவாரும் உளர். இது நிற்க.

'யாரு மில்லை தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
நினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்குங்
குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே' (குறுந். 25)

என்னுந் தலைவிகூற்றில், 'தானது.....செய்கோ?' என்றது, 'அவன் மணந்திலன் என்று பொய்கூறுவானுயின் உண்மையை நிருபித்தற்குத் தக்கசான்று இல்லையே' என்றவாறும். ஆயின், குருகு உண்டன்றே; அது கூறுதோ எனின், அதுவும் ஒழுகும் நீரில் ஆரலைப் பார்த்துக் கொண்டே யிருந்ததனுல், அவன் மணந்ததனை அறியாதாகலின் சான்று கூறுதே என்றுள். ஈண்டு, 'ஒழுகுநீர்.....குருகு' என்பது, (குருகு தனக்கு இரைதேர்தலில் நோக்கமுடையதா யிருந்ததனுல்) அங்கு நிகழ்ந்த பிற செயல்களைக் குருகு அறியாது என்னும் உள்ளுறைப் பொருளைப் பயந்தது. இவ்வுள்ளுறைப் பொருள், 'யாருமில்லை.....தானது பொய்ப் பின் யானெவன் செய்கோ' என்பதன் சொற்பொருட்பேற்றிற்கே உப காரப்பட்டுநின்றது. ஆகலின், இது த்வநி யாயிற்றின்று. இவ்வாறு சொற்பொருட்கு உபகாரப்பட்டு நிற்பதனை வடநூலார் [3]'குணீபூத வ்யங்க்யம்' என்று கொள்வர்.

ஆயின், மேற்காட்டிய செய்யுளுள், 'ஒழுகுநீ ராரல் பார்க்கும்' என்றது கருத்துடையடைமொழியணி யன்றே எனின், அவ் வடை மொழியால் தன்கருமமே நோக்குங் குருகு என்பதுவே பெறப்படும். ஈண்டு, தன் கருமமே நோக்கிக்கொண்டிருந்த குருகு பிறநிகழ்ச்சிகளை யறியாதாகலின், சான்றுகூறுது என்பதே குறிப்புப்பொருள். அப் பொருள், 'யாருமில்லை' என்றதனை வலியுறுத்துகின்றது. ஆகலின், ஈண்டுக் கருத்துடையடைமொழியணி யாதலின்று. இனி, அவ் வணி யுளதாயினும், அஃது உள்ளுறைப்பொருளாதற்கு இழுக்கில்லை என்க. நுவலாநுவற்சி, ஒட்டுமுதலியனவெல்லாம் உள்ளுறைப்பொருளாவே யாதல் அறிக.

இனி,

'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கிற் றெளியு மோர்க்கே' (பொருவியல். 34.)

என்னுஞ் சூத்திரத்தின் பொருளை நோக்குதும்:

---

1. த்வந்யாலோகம் 4-ஆம் சுலோகத்தின் விருத்தி பார்க்க.
2. காவ்யாநுஸாஸனம் பார்க்க.
3. குணீபூதவ்யங்க்யமாவது—வ்யங்க்யம் கௌணமாயிருப்பது; சிறப்பின்றியிருப்பது.

இறைச்சிப்பொருள்

இச்சூத்திரத்திற்கு இளம்பூரணஅடிகள் 'இறைச்சிப்பொருள்வமின் தோன்றும் பொருளும் உள, பொருட்டிறத் தியலும் பக்கத்து ஆராய் வார்க்கு' என்று பொருள்கூறி, 'இறைச்சிப்பொருள் பிறிதுமோர் பொருள் கொள்ளக் கிடப்பனவும் கிடவாதனவும் என இருவகைப்படும். அவற்றிற் பிறிதோர் பொருள்பட வருமாறு' என்று எழுதி,

'ஒன்றே னல்லென் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த கெரிதாழ் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ப்மார்
நின்றுகொய மலரும் நாடனெ
டொன்றேன் தோழி ஒன்றி னனே'

என்னுஞ் செய்யுளை உதாரணங்காட்டி, உள்ளுறை எழுதினர்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்கு, 'கருப்பொருள் பிறிதோர் பொருட்கு உபகாரப்படும் பொருட்டாதலேயன்றி, அக் கருப் பொருடன்னுள்ளே தோன்றும் பொருளும் உள ; அஃது உள்ளுறை யுவமத்தின் கூற்றிலே அடங்குமாறுபோல நடக்குமிடத்து, அவ் வுள் ளுறையுவமமன்று, இஃது இறைச்சி என்று ஆராய்ந்துணரும் நல்லறி வுடையோர்க்கு' என்று உரைகூறி,

'கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னுட
கெட்டிடத்து வந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தனை யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்ன இவ
ளொலிமென் கூந்தல் உரியவா நினக்கே'

என்னுஞ் செய்யுளை உதாரணம் காட்டி, விளக்கம் எழுதினர். இனி, இவ் விருவர் காட்டிய உதாரணங்களையும் ஆராய்தும்:

இளம்பூரண அடிகள் உதாரணமாகக் காட்டிய 'ஒன்றே னல்லேன்' என்னுஞ் செய்யுள் உள்ளுறையுவமம் உடையதேயன்றி இறைச்சிப் பொருள் உடையதன்று. இச்செய்யுளையே நச்சினார்க்கினியர்,

'உள்ளுறை தெய்வ மொழிந்ததை நிலனெனக்
கொள்ளு மென்ப குறியறிந் தோரே' (அகத். 50)

என்னுஞ் சூத்திரத்தின் உரையில், உள்ளுறையுவமத்திற்கு உதாரணங் காட்டி விளக்கம் எழுதியுள்ளார். அதுவே அமைவுடையதாகும்.

நச்சினார்க்கினியர், தாம் காட்டிய உதாரணச் செய்யுளில்,

'கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னுட'

என்பது உள்ளுறையுவமம் அன்றென்றும், 'முலைமாந்த' என்றது, 'தன்கருமஞ் சிதையாமற் பார்த்து என்னுந்துணை' என்றும் கூறினர்.

இறைச்சிப்பொருள்

'கன்று.....நாட' என்பது உவமங்கோடற்கே இயைபுடைத்தாயிருத்தலானும், அவரும், (நச்சினார்க்கினியரும்) 'தன்கன்றிற்குப் பயன்பட்டுப் பிறர்க்கு உயிரைக் கொடுக்கின்ற நிலையைத் தான் உண்டு அழிவுசெய்கின்றாற்போல நீ நின் கருமஞ் சிதையாமற் பார்த்து எமக் குயிராகிய இவளைத் துயருறுத்தி எம்மை இறந்துபடுவித்தல் ஆகாது என்று உவமை எய்திற்றேனும்' என்றாராகலின், உவமங்கோடற்கு இயைபுண்மை உடன்பட்டாராகலானும், இவ்வடிகள் உள்ளுறையுவம முடையனவே எனக் கொள்க. ஆயின் அவர், 'உள்ளுறையுவமப் பொருளை முற்ற உணர்த்தாமை உணர்க' என்றார்ால் எனின், 'நின் கருமஞ் சிதையாமல் நோக்கி, இவளையுடையவர் (பெற்றோர்) அறியாமே அவர்க் குயிர்போன்ற இவளது இன்பத்தைத் துய்க்கும் நாட, கெட்ட விடத்து ஒருவர் செய்த வுதவியை அரசுபெற்று மறந்த மன்னன்போல யான் முன்னர் நினக்குச் செய்த நன்றியை மறந்தாயாயின் இவள்கூந்தல் நினக்குரியவாம்? ஆகாது. (யான் செய்த நன்றியை நினைத்து, இவ் வாறு களவிலொழுகாது வரைந்துகொண்டுசெல்)' என்று பொருள் அமைவுறுதல் காண்க. 'நின்கருமஞ்.....துய்க்கும்நாட' என்ற பொருள், 'கன்றுதன்.....கன்னுட' என்ற உள்ளுறையுவமத்தாற் போந்தது. மேற்காட்டிய இச்செய்யுள், 'வரைவிடை வைத்துப் பிரியுந் தலைவனை நோக்கித் தோழிகூறியது' என்னுந் துறையதாதல் அறியத்தகும். இக்கூறியவற்றால், நச்சினார்க்கினியர் காட்டிய அடிகளும் பொருந்துவன அல்ல என்பது அறியப்படும். அன்றியும், அவர் கூறிய பொருளும் பொருந்துவதன்று.

இனி,

'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கிற் றெளியு மோர்க்கே'

என்னுஞ் சூத்திரத்தின் நேர்பொருளை நோக்குதும். இதற்கு இளம் பூரண அடிகள் கூறிய பொருளே நேர்பொருள். இறைச்சிப்பொருளாவது சொற்பொருட்குப் புறத்தே தோன்றும் பொருள் என்பது மேலே கூறப்பட்டது. ஆகலின், 'சொற்பொருட்குப் புறத்தே தோன்றுவதாகிய இறைச்சிப்பொருளினின்று தோன்றும் பொருளும் [1] உள' என்பதுவே இச்சூத்திரத்திற் கூறப்பட்டதெனக் கொள்க. அஃதாவது, குறிப்புப்பொருளினின்று தோன்றுங் குறிப்புப்பொருளும் உள என்பதாம். ஆயின், சொற்பொருட்குப் புறத்தே தோன்றுங் குறிப்புப் பொருளினின்று பின்னும் ஒருபொருள் தோன்றுதல் கூடுமோ எனின், [2]'வீசிதரங்க நியாயத்'தால் கூடும் என்க. இச்சூத்திரத்தில், 'பொருளுமா ருளவே' என்றதனால் இவ்வாறு தோன்றும் பொருள் சிறுவரவிற்று

1. இதனை 'அனுரணனத்வனி' என்பர் வடநூலார்.

2. வீசிதரங்க நியாயமாவது—ஒரு பொய்கையின் நடுவில் ஒரு கல்லை எறியின் அதனால் ஓர் அலைதோன்ற, அதினின்று பிறிதொன்று தோன்றும்; அவ்வாறே ஒன்றனி லொன்று தோன்றிக் கரைவரைக்கும் வரும்.

என்பதும், 'திறத்தியல் மருங்கிற் றெளியு மோர்க்கே' என்றதனால், இப்பொருளை யுணரு மாற்றலுடையோர் சிலரே என்பதும் போதரும். [1]வடநூலார், குறிப்புப்பொருளை யறிதலே அருமை என்பர். 'இலக்கணம் மீமாம்ஸை என்னுஞ் சாஸ்த்ரங்களின் அறிவினால்மட்டுமே (குறிப்புப் பொருள்) அறியப்படுவதன்று ; செய்யுட்பொருளை உணரும் மெய்யுணர்வினரானே அறியப்படும்' என்றும், [2]சொற்பொருளில் விருப்பில்லாதவராயும், காப்பியச் சுவையினை அறிபவராயுமுள்ள நல்லுணர்வினோருணர்வில் ஒல்லை உணரப்படும் என்றும், [3]'சொற்பொருள் வ்யாகரண மீமாம்ஸாதி சாஸ்த்ரஞானத்தால்மட்டும் அறிதல்கூடும். குறிப்புப்பொருளோ அதனால்மட்டும் அறியப்படுதல் இன்று ; சந்தர்ப்பம், கூறுபவர், கூறப்படும் பொருள் இவற்றின் துணையோடு கூடிய மெய்யுணர்வினாலும், வ்யாகரணம் முதலிய சாஸ்திரங்களின் ஞானத்தாலும் அறியப்படும்' என்றும் கூறப்பட்டிருத்தலை அறிக. இக்கூறியவற்றால், குறிப்புப்பொருள் இலக்கணம் முதலியவற்றின் அறிவினால்மட்டும் அறியப்படுவதன் றென்பதும், செய்யுட்சுவை யுணரும் நல்லுணர்வுடையோரானே அறியப்படுவதென்பதும் போதரும்.

இனி, 'இறைச்சியிற் பிறக்கும்.....மோர்க்கே' என்னுஞ் சூத்திரத்திற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரையையும் உதாரணத்தையுமே பின்பற்றி, மாறனலங்காரவுரையாசிரியர் எழுதியுள்ள உரையும் காட்டியுள்ள உதாரணமும் பொருந்தாமை தானே போதரும். நிற்க.

இறைச்சிப்பொருளினின்று பிறிதுமொருபொருள் தோன்றுவதற்கு உதாரணம் வருமாறு:

'எல்லா உதுக்காண் எழில்நீர்ப் பொய்கைப்
பரந்த தாமரைப் பாசடைக் குருகு
துளக்கமி லுடல தாகிப் பசுங்கலத்து
வளையொளிர்ந் தாஅங் கொளிசெய் வதுவே'

என்னும் 'பொய்கை வருணனை'ச்செய்யுளில், 'துளக்கமிலுடலதாகி' என்றதனால், அசைவின்றி இருக்கின்றது என்பது சொற்பொருளாகும். அதனால், 'அவ்விடம் மக்கள்வழக்கு இல்லாதது' என்னுங் குறிப்புப்பொருள் தோன்றும். அக் குறிப்புப்பொருளினின்று 'அவ்விடமே குறியிடத்திற்கு இயைபுடையது' என்னுங் குறிப்பும், அதனால், புணர்ச்சி நெடிதுநிகழ்தல், கூடும் என்னுங் குறிப்பும் தோன்றுதல் அறிக.

இதுகாறும் கூறியவற்றால், குறிப்புப்பொருளின் சிறப்பும் அதனருமையும் அறியப்படும். குறிப்புப்பொருள் சொற்பொருளினுஞ் சிறப்புடையதாயவழி, த்வநி எனப்படும். அது—வஸ்துத்வநி, அலங்காரத்வநி, ரஸத்வநி என மூன்று வகைப்படும் என்று வகுத்து,

1. த்வந்யாலோகம். 1 ; 7.
2. ஷை 1; 12.
3. காவ்யப்ரகாஸம்—சக்ரவர்த்தி வ்யாக்யானம்.

அவற்றைப் பலவாக விரித்துக்காட்டியுள்ளனர் வடநூலார். அவ்வாறிருப்பினும், அம்மொழியில் அலங்காரநூலாருள் முற்பட்டவர், குறிப்புப்பொருள் (வ்யங்க்யம்), சுவை (ரஸம்) முதலியவற்றை அணிகளினுட்படுத்தியே கூறியுள்ளனர். கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த பேரறிஞராகிய ஆனந்தவர்த்தனாசாரியர் என்பவரே குறிப்புப்பொருளின் சிறப்பினை யுணர்ந்து, 'த்வன்யாலோகம்' என்னும் நூலொன்றினை எழுதி, உலகிற்கு அறிவித்தார். அதன்பின், அவர்கொள்கையைப் பின்பற்றி மம்மடபட்டர், ஹேமசந்திரர் முதலியோர் காவ்யப்ரகாஸம், காவ்யாநுஸாஸனம் முதலிய நூல்களை இயற்றினர்.

தமிழ்மொழியில் நெடுங்காலத்திற்கு முன்னரே—வடமொழியில் த்வன்யாலோகம் முதலிய நூல்கள் தோன்றுதற்குப் பலநூற்றாண்டுகட்கு முன்னரே—ஆசிரியர் தொல்காப்பியனார் இறைச்சிப்பொருள், மெய்ப்பாடு இவற்றைக் கூறியுள்ளார். ஆயின், அவை சிறப்பாகவும் விரிவாகவும் கூறப்படவில்லை. பின்வந்த ஆசிரியரெவருமே இவற்றைக் கூறப் புகுந்திலர். ஆகலின், இக்காலத்தில் இவற்றை நன்கு அறிந்து கொள்ள விரும்பினும், விரித்துக்கூற வேண்டினும் வடமொழி நூல்களின் உதவி இன்றியமையாததாகும். நிற்க.

மேற்கூறியவற்றுள், இறைச்சிப்பொருளாவது—சொற்பொருட்குப் புறத்தே தோன்றுங் குறிப்புப்பொருள் (வ்யங்க்யம்) என்பது நன்கு விளங்கும். சொற்பொருளும் ஆண்டைக்கு இயைபுடையதாயிருக்கும் என்பது அறியத்தக்கது.

குற்றாலத் தமிழ்

திரு. பி. ஸ்ரீ. ஆசாரியார், விட்டலபுரம்.

இமயமலைக் காட்சிகளைப்போல் மேற்குத் தொடர்ச்சிமலையின் காட்சிகளும் மிக்க அழகானவை. இம்மலைத்தொடரின் ஒரு பகுதியைத் தான் 'பொதியமலை' யென்றும், 'பொதியில்' என்றும், 'அகஸ்தியமலை' யென்றும் சொல்லுகிறோம். இந்த மலையைக்குறித்து ஒரு புலவர்,

திங்கள்முடி சூடுமலை தென்றல்வீசி யாடுமலை
தங்குமுகில் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை யென்மலையே!

என்று பாடியுள்ளார். இம்மலையிலேதான் தண்பொருநை என்ற தாமிரவருணியோடு 'அமிழ்தினுஞ் சிறந்த தமிழ்மொழி' பிறந்ததென்று கூறுவோரும், இங்கேதான் தமிழ் வளர்ந்ததென்று கருதுவோரும் உண்டு. தமிழ் நாகரிகத்தின் பிறப்பகமென்று கருதத்தக்க இத்திருமலையைச் சார்ந்ததுதான் அழகு நிலயமாகவும் ஆரோக்கியநிலயமாகவும் திகழும் திருக்குற்றாலமலையும்.

திருக்குற்றாலமலையைத் தமிழ்நாட்டின் இயற்கைக் கோயில்களில் ஒன்றென்று சொல்லலாம். இயற்கையழகு நிறைந்துள்ள இடங்களிலெல்லாம் இறையொளி கண்ட நம்முன்னோர் திருக்குற்றாலத்தை இறைவனது திருக்கோயில்களில் ஒன்றாகக் கருதுவாராயினர். சுமார் 1200 ஆண்டுகட்குமுன், சைவசமயத்திற்குத் தமிழ்நாட்டிலே புத்துயிரளித்த திருஞானசம்பந்தப் பெருந்தகையார் தமது பண்சுமந்த பாடல்களில் தாம் நேரில் கண்ட குற்றாலத்தின் இயற்கைப் பேரழகினைப் படம் பிடித்துள்ளார்.

வம்பார் குன்றந் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செய் குற்றாலம்
அம்பா னெய்யோ டாடல் அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்

என்று தொடங்கும் பதிகத்தைப் பாடிப் பாருங்கள். உங்களை அறியாமலே நீங்கள் பழைய குற்றாலத்தில் பிரவேசித்து விட்டதாக ஆச்சரியப் படுவீர்கள். இயற்கையழகிலும் இயற்கை வளத்திலும் ஈடில்லாத பெருஞ் சிறப்புவாய்ந்த திருப்பதி, திருஞானசம்பந்தர் பருகியனுபவித்த காட்சியின்பங்களோடு எப்படியோ கண்முன் வந்துவிடுகிறது.

இயற்கைமணம் சொரியும் மலைச்சாரல் கட்புலனாகிறது; நீண்டுயர்ந்த பெருங்குன்றம் கம்பீரமாக நிமிர்கிறது. தெவிட்டாத இயற்கையின்பம் பொழியும் பசுஞ்சோலை, யாழ்போல்முரலும் நீலவண்டுகளோடு, வளர்ந்தோங்குகிறது

"செல்வம் மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும் பீனும் குற்றாலம்."

என்று பாடும்போதே, பெருமக்களைச் சென்றடைந்து நற்பயன்தரும் பொருள்போலச் செண்பகம் முதலிய மரங்களைத் தழுவிப்படர்ந்து மெல்லிய அரும்புகளை ஈனும் முல்லைக்கொடியும்,

"பக்கம் வாழைப் பாய்கனி யோடு பலவின் தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றாலம்."

என்று பாடும்போது, மாம்பழம் முதலான கனிகளும்,

"மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்."

என்னு பாடும்போது, மலைச்சாரலிலுள்ள வாழைப்பழக் குலைகளும், அக்குலைகளைக் கயர்ந்து குட்டிக்குக் கொடுத்துத் தாமும்தின்று மகிழும் தாய்க் குரங்குகளும் சம்பந்தருக்குத் தோன்றியதுபோல் நமக்கும் கண்ணெதிரே தோன்றுகின்றன.

"நீல நெய்தல் தண்சுனை சூழ்ந்த நீள்சோலைக்
கோல மஞ்ஞை பேடையொ டாடும் குற்றாலம்."

என்று பாடும்போது, நீலமலர் முதலியமலர்கள் நிறைந்தசுனைகளும் பெரியசோலைகளில் தோகை விரித்தாடும் மயில்களும் கண்முன் வருகின்றன.

"மைம்மா நீலக் கண்ணியர் சாரல் மணிவாரிக்
கொய்ம்மா ஏனல் உண்கிளி யோப்பும் குற்றாலம்."

என்று பாடும்போது இயற்கைநலம் வாய்ந்த மலைமகளிர் தினையை யுண்ணவந்த கிளிகளை ஓட்டும் காட்சிதோன்றுகிறது.

"போதும் பொன்னும் உந்தி யருவி புடைசூழக்
கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்."

என்று பாடும்போது குற்றாலத்தின் அருவி பளிங்கு மழைபோல விழும் நுண்துளிகளோடு கட்புலனாகிறது. இத்தகைய இணையிலா அழகு வாய்ந்த தலத்தை,—கண்ணையும் கருத்தையும் ஒருங்கே குளிர்விக்கும் இன்பநிலயத்தைச் சிவபெருமான் உகந்தருளும் திருப்பதிகளில் ஒன்றாக நம்மவர் கருதுவதில் வியப்பொன்றுமில்லை.

சம்பந்தர் இறைவனைப் பாடுவதோடு இயற்கையழகுகளையும் வருணித்துப் பாடுவதுண்டு. இவர் இயற்கையழகுகளிலே இறையழகு கண்டாரென்று சொல்லலாம். இது சம்பந்தர் பாடல்களின் சிறப்பியல்பு. இவ்வியல்பு திருக்குற்றாலப் பதிகத்தில் விசேஷமாகக் காணப்

படுகிறது. இப்பதிகத்திலே திருஞான சம்பந்தர் தாம் ஆர்வத்தோடு பருகியனுபவித்த இயற்கைப் பொருட்காட்சியின்பத்தையும் பக்தியின்பத்தையும் தமிழின்பத்தையும் பாட்டின்பத்தையும் இசையின்பத்தையும் பஞ்சாமிர்தமாகக் கலந்து தந்தருளினர் என்று சைவர்கள் பெருமை கொள்ளலாம். பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் சம்பந்தர் கண்டெழுதிய குற்றாலப்படம் இன்றும் அழியாது இப்பாடல்களின் வாயிலாக நம் மனக்கண்ணுக்கு இலக்காகிறது.

அப்பரும் மணிவாசகரும்

கற்றார்க்கும் கல்லார்க்கும், வலிமைவாய்ந்தவர்களுக்கும் கோய்வாய்ப்பட்டவர்களுக்கும், பொழுது போக்கச் செல்வோர்க்கும் தமிழாராயும் இரசிகர்களுக்கும், சைவர்க்கும் சைவரல்லாதார்க்கும் ஒருங்கே இன்பசுகம் அருளும் இயற்கைத் தெய்வமே சம்பந்தருக்குத் திருக்குற்றாலத்தில் சிவமென்னும் செம்பொருளாகக் காட்சியளித்தது. இந்த இயற்கைத் தெய்வம் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கும் மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் ஆத்ம எழுச்சி அளித்திருக்கக்கூடுமென்றும் ஊகிக்கலாம்.

> "குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்(கு)
> உற்றார் ஆருளரோ"

என்று அப்பர் சுவாமிகளும்,

> "உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
> கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையும்
> குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாவுன் குரைகழற்கே
> கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே."

என்று மணிவாசகப் பெருமானும் அருளிச் செய்வதுகாண்க.

குற்றாலமும் குறவஞ்சியும்

பிற்காலத்திலே திருக்குற்றாலத்தின் மகிமையால் ஆத்மஎழுச்சியும் கவிதாசன்னதமும் பெற்றவர் திரிகூடராசப்பக்கவிராயமூர்த்தி யென்பவர். திருஞானசம்பந்தர் காலத்திற்குச் சற்றேறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குபின்—அதாவது, இற்றைக்குச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குமுன்—திருக்குற்றாலத்திற்கருகேயுள்ள கிராமம் ஒன்றில் வாழ்ந்தவர் இவர். திருக்குற்றாலத்தைக் குறித்துப் பதினைந்து பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். அவற்றுள், திருக்குற்றாலத் தலபுராணமும் திருக்குற்றாலக் குறவஞ்சியுமே பிரசித்தமாக வழங்குகின்றன. தலபுராணத்தில் புலமைத்திறமையும் பக்திச்சுவையும் காணப்படுகின்றனவெனின், குறவஞ்சியென்னும் குறத்திப்பாட்டிலே கவிச்சுவை விசேஷமாகக் காணப்படுகிறதென்று சொல்லலாம்.

குறவஞ்சித் தமிழ் குற்றாலவாசத்தின் இன்பசுகத்தை நினைப்பூட்டுகிறது. இத்தமிழ்நூலில் காட்சிதரும் திருக்குற்றாலத்திலே, காவெலாம்

குற்றாலத் தமிழ்

சிவமணம் ; கனியெலாம் சிவலிங்கம்; பூவெலாம் சிவசொரூபம் ; பச்சிலை யெலாம் சிவக்கொழுந்து. இம்மலையில் பூர்ண அழகோடும் மாட்சி யோடும் கொலுவீற்றிருக்கும் இயற்கையன்னை உலகம் பூத்த அருட் கொடியாகிய மகாசக்திதான். இத்தகைய சக்தியைப் பாகமாகக் கொண்டு விளங்கும் இறைவன் திருக்குற்றாலநாதன் இப்பெருமானே இச்சிறு நாடகநூலுக்குத் தலைவனாக அமைகிறான்.

தலைவன் பவனிவரும்போது தலைவியாகிய வசந்தவல்லி ஓய்யார மாகப் பந்தடித்துக் கொண்டிருக்கிறாள்.

> " இருண்ட மேகஞ்சுற்றிச் சுருண்டு சுழியெறியும்
> கொண்டையாள் "

என்று தொடங்கும் வசந்தவல்லியின் வருணனையிலும்,

> " செங்கையில் வண்டு கலின்கலி னென்று செபஞ்செய
> மென்றாட "

என்று தொடங்கும் பந்துவிளையாட்டின் வருணனையிலுமே, குற்றால மலையின் மோகனசக்தியை உணரத்தொடங்குகிறோம்.

பந்துபயிலும் வசந்த மோகினி திருக்குற்றால நாதராகிய திரிகூட ராசரது அருட்பார்வைக்குத் தன் உள்ளத்தைத் திறைகொடுக்கிறாள் ; பாங்கியைத் தூதனுப்புகிறாள். திருக்குற்றால மலையைச்சார்ந்த ஒரு குறத்தி தன் மறவெஞ்சே துணையாக நமது பாரத நாடெங்கும்போய்க் குறிசொல்லிக்கொண்டு ' தென்னவர் தமிழால் செயத்தம்பம் நாட்டி ' வருபவள்,—தலைவியைச் சந்திக்கிறாள்.

> " சைவமுத் திரைபை வானின்மேற் றிரிக்கும்
> தெய்வமுத் தலைசேர் திரிகூட மலையான்
> ....
> வரிநீர் செழிக்க வாரிநீர் கொழிக்கும்
> மாரிநீர் வளர்தென் னரிய நாட்டான்
> கன்னிமாப் பழுத்துக் கதலிதேன் கொழித்துச்
> செந்நெல்காத் தளிக்கு நன்னகர்ப் பதியான்
> ....
> அண்டகோ டிகளீ யாணையா லடக்கிக்
> கொண்டல்போற் கவிக்குங் கொற்றவெண் குடையான்
> வாலசுந் தரிகுழல் வாய்மொழி யருட்கட்
> கோலவண் டிணங்குங் கொன்றைமா லிகையான்
> பூவளர் செண்பகக் காவளர் தம்பிரான்
> தேவர்கள் தம்பிரான் திருவருள் பாடி "

வரும் குறப்பெண் இயற்கை யழகினிடையே ஒளிரும் இறையழகினை யல்லவா பாடிவருகிறாள் ?

குற்றாலத் தமிழ்

மரத்திரைக்கோல் ஏந்திக் கூடைதாங்கிப் பாசிமணியும் குன்றி மணியும் அணிந்து, நடைக்கொருகுலுக்கும் 'வெளிக்கொரு பகட்டு' மாய் வரும் குறத்தி, 'விழிக்கொரு சிமிட்டும்' 'மொழிக்கொரு பசப்பு' மாய்க் குறிசொல்லி வருகிறாள். கல்வி மணம் வீசப்பெறாத இவளது இயற்கையறிவு நெடுந்தூரப் பிரயாணங்களால் விசாலித்திருக்கிறது. கைபார்ப்பதுபோல முகக்குறி விழிக்குறி மொழிக்குறி முதலானவற் றையும் பார்த்து விடுவாள். கான்பூத்த மலர்க்கொடிபோல் இலங்கும் இக்குறப்பெண் மின்னற் கொடிபோலத் துடித்துக் கொண்டிருக்கும் வசந்தவல்லி முன்போய் மலைவளம் பாடுவதைக் கேளுங்கள் :—

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி வினைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே"

தேனெழுகும் தீங்குரலில் குறப்பெண் பாடிய பாட்டு வறண்டயர்ந்த தலைவியுள்ளத்திலே குற்றாலத்தருவியின் நுண்துளிகளைப்போல விழு கிறது. 'வானின்வழியொழுகும்' தேனருவி இவ்வுலகினையும் வானுல கினையும் தலைவியின் மனக்கண்ணில் ஒன்றுபட இணைத்துக்காட்டுகிறது.

அப்பெண் பின்னும் குற்றாலமலையின் வளங்களைக் கொஞ்சும் குரலில் வருணித்துப்பாடி, அம்மலைமீது இயற்கையோடிசைந்துவாழும் குறவரது வாழ்க்கை நலத்தினையும் எடுத்துரைக்கிறாள் :—

"முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண்டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை யிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவி லீசர்
வளம்பெருகுந் திரிகூட மலையெங்கள் மலையே"

வீணைக்குரலில் எழுந்து பொங்கிய இசைவெள்ளம் வசந்தமோகினியின் உள்ளத்தில்பாய்ந்து பரவுகிறது. நாகரிகவாழ்க்கையின் ஆடம்பரங் களைப் பார்க்கிலும் கைபுனைந்தியற்றாத இயற்கைப் பேரழகுவாய்ந்த மலைவாழ்க்கை அதிக அளவில் இன்பமளிக்குமென்று தோன்றுகிறது. தீஞ்சொற் கவிதையில் இந்தவாழ்க்கை பேரின்ப வாழ்க்கையாகவே பரிணமிக்கிறது. கிழங்குகிள்ளித் தேனெடுத்தும், யானைத்தந்தத்தை

ஓடித்துத் தினையை இடித்தும், மலைவளம்பாடி கடித்தும் வாழ்வு கடத்தும் குன்றவர்நிலை, பெருஞ்செல்வத்தையும் துச்சமாகக் காட்டுகிறது. அரசர் செருக்கினுக்குத் தினைத்துணையும் குறைவுபடாத இக்குற மகளின் செருக்கு ஓர் ஆச்சரியமான உலகத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

குறப்பெண் புன்னகவராளி ராகத்தில் மீண்டும் பாடுகிறாள் :—

" ....
வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தையகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்
காடுதொறு மோடிவரை யாடுகுதி பாயுங்
காகமணு காமலையில் மேகநிரை சாயும்
நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
நீலதங்குந் திருகூட மலையெங்கள் மலையே."

'காகம் அணுகா'த—'மேகநிரை சாயும்'—மலை, இப்போது 'பண்ணேறி விண்ணுயர்ந்துலவும்' கவிதை வாயிலாக ஒரு பூலோக சொர்க்கமாய்க் காண்கிறது. மட்டுப்படாது கொட்டிக் கிடக்கும் இவ்வியற்கைச் செல்வமெல்லாம் இறைவனது அருள் விளக்கமாகிய வள்ளன்மையே யென்பதையும் பாட்டு ஞாபகப்படுத்துகிறது.

பிறகு குறத்தி பெருமையோடு பனிமலை முதல் குமரி முனைவரையிலும் சிதறிக் கிடக்கும் தன் உறவினர்களை ஞாபகப்படுத்தி, தமிழ்ப் பலர் தற்காலத்தில் மறந்திருக்கும் இந்தியாவின் ஒருமை நிலையையும் உய்த்துணர வைக்கிறாள் :—

" கொல்லிமலை யெனக்கிளைய செல்லிமலை யம்மே
கொழுகனுக்குக் காணிமலை பழனிமலை யம்மே
எல்லுலவும் விந்தைமலை யெந்தைமலை யம்மே
இமயமலை யென்னுடைய தமயன்மலை யம்மே
சொல்லரிய சாமிமலை மாமிமலை யம்மே
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை யம்மே
சொல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்களாடும்
திருகூட மலையெங்கள் செல்வமலை யம்மே "

மலைவளம் பாடிய குறப்பெண் வசந்தவல்லியின் உள்ளத்தை அப்படியே பகட்டி வசீகரித்து விடுகிறாள். பாட்டு முடிந்தும், கன்னியின் காதுகளில் கீதநாதம் ஓய்வின்றி ஒலிசெய்து கொண்டிருக்கிறது. அவள் அத்தகைய பாடல்களை மீண்டும் மீண்டும் கேட்க ஆசைப்படுகிறாள். அக்குறிப்பினை உணர்ந்த குறவஞ்சியும் சன்னதங்கொண்டு,

" நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சுழலக் காண்பது பூந்தயிர் மத்து

குற்ருலத் தமிழ்

வீங்கக் காண்பது மங்கையர் கொங்கை
வெடிக்கக் காண்பது கொல்லியின் முல்லை
ஏங்கக் காண்பது மங்கல பேரிகை
ஈச ராரிய நாடெங்கள் நாடே."

என்று மங்கலபேரிகை போலத் தொனிக்கும் கம்பீரமான குரலில் பாடு கிருள். முடிவில் அவள் உச்சஸ்வரத்தில்,

"ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஓடுங்கக் காண்பது யோகிய ருள்ளம்
வாடக் காண்பது மின்னர் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளே சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறங் கீர்த்தி
திருக்குற் ருலர்தென் ருரிய நாடே."

என்று கானஞ் செய்கிருள்.

இக்குறவஞ்சி, 'கூழையுண்ட வாயால் குறியை விண்டு' காட்டு வதும், தலைவி மகிழ்ந்து பரிசில் உதவுவதும், அந்தச் சிங்கியைத் தேடிக் குறச்சிங்கன் வருவதும், அவன் அவளிடம் புதிய அணிகளைக்கண்டு ஐயுற்று விளுவுவதும், அனுபவ அறிவால் அவனைக் காட்டிலும் எவ் வளவோ புத்திசாலியாக விளங்கும் அவள் அலட்சியமாக விடை கூறு வதும் மறக்கமுடியாத 'குற்ருலத் தமிழ்'கொண்டு சித்திரிக்கப் படுகின் றன. இத்தகைய பலவேறு அழகுகளையும் ஆசிரியரது உள்ளத்தின் சௌந்தரியத்தோடு வாசகர்கள் தாமே மனமாரப் பருகி நல்லின்பம் துய்ப்பார்களாக. இச்சிறுநூல்

"சிற்ருற்றங் கரையாளைத் திரிகூட வரையாளைக்
குற்ருலத் துறைவாளைக் குருபரனே வாழ்த்துகிறேன்"

என்பது போன்ற வாழ்த்துக் கண்ணிகளோடு முற்றுப் பெறுகின்றது.

குற்ருலமும் முக்கூடற்பள்ளும்

இச்சிற்ருருகப் பெருகிவருவது குற்ருலத்திலுள்ள மலையருவிதான். இது தாமிரவருணியில் சங்கமமாகிறது. தமிழில் 'சிற்ருறு' என்றே அழைக்கப்பெறும் இந்த உபநதி வடமொழியில் சித்திராநதியென்றும், சித்திரகங்கையென்றும் பெயர் பெறுகிறது. 'சித்திராநதி' யென்ற பதத்திற்கு 'அழகானநதி' யென்று பொருள். வெள்ளம் வரும்போது 'சிற்ருறு' உண்மையாகவே 'சித்திராநதி' யாகிவிடும். அப்போது இந்நதியின் தோற்றம், பார்வைக்குச் சிறுமையும் விசேஷ மனப் பெருமையுமுள்ள ஒரு மகாத்மாவின் தோற்றத்தை ஒத்திருக்கிறதென்று ஒரு கவிராயர் பாடியுள்ளார். அந்தப்பாட்டு வருமாறு :—

குற்றாலத் தமிழ்

"குற்ற லத்திரி கூட மால்வரை உற்றே மேகம் பொழிந்தநீர்
கூடிப் பொருநை நாடித் திருமுக் கூடற் பதியை
வலங்கொண்டே
வற்ற மடுவில் பறவை குறவை வாளை கோளை கேளிமீன்
மயிந்தி உளுவை பயிந்தி கூனி மணலி ஆரல் ஓராமீன்
பற்ற ஆயிரை கெண்டை கெளிறு பருவ ராலும் அணையிலே
பாயக் காலில் பாயக் குளத்தில் பய வயலில் பாய்ந்தசே
சிற்ற றென்பது பெற்ற லும்ஒரு சிறிய வர்மனப்
பெருமைபோல்
சித்ரா நன்னதி பெருகி வார சிறப்பைப் பாரும் பள்ளியரே"
—முக்கூடற்பள்ளு.

• பாட்டின் ஜீவவேகம் சித்திராநதியின் வேகத்தையும், பண்ணழகு அந்தக்காட்சியழகையும் எவ்வளவு நன்றாக கிணைப்பூட்டுகின்றன!

முடிவுரை

இந்தக் கட்டுரையில் உதாரணமாகக் காட்டப் பெற்றுள்ள குற்றாலப் பாடல்களெல்லாம் அயர்ந்த உள்ளத்திற்கு 'அருவி ஸ்நானம்' போலிருக்கின்றன. பாடல்களின் இசையின்பமும், அருவியிலே மொத்துண்டுவரும் மலைக்காற்றைப்போலவந்து உணர்வைக் குளிர்விக்கின்றது. குற்றாலத் திருப்பதிகத்திலும் குறவஞ்சிப் பாடல்களிலும், குற்றாலத்தின் பசுமையும் பொலிவும் அன்புருவாகிய இறையழகோடும் அருளோடும் கலந்து புலனாகின்றன. இயற்கை மணத்தோடு சிவமணமும் தமிழ் மணமும் அபேதமாக வீசுகின்றன; இயற்கை யின்பத்தோடு பக்தி யின்பமும் கவியின்பமும் சங்கமமாகி ஓடுகின்றன. காதலாகிக் கசிந்து பாடும்போதுதான், நவில்தொறும் நயம்கொழிக்கும் இப்பாடல்களின் பெருமையை உள்ளவாறு உணர்ந்து கொள்ளலாம். இப்பாடல்களைப் பாலிவனத்திலிருந்து பாடிய போதிலும், அங்கே பாலிவனம் மறைந்து திருக்குற்றாலம் வந்துவிடும்.

சோழ பாண்டிய மன்னர்கள் காலத்தில் வழக்கத்திலிருந்த நிலவரியும், நிலஉரிமை மாற்றுதலும்.

அண்ணாமலைச் சர்வகலாசாலை, பிரதமசரித்திராசிரியர்
இராவ்சாகேப் C. S. ஸ்ரீனிவாஸாச்சாரியார் M.A., எழுதியது.

ஸ்தாவர சொத்துக்களின்மேல் விதிக்கப்படும் வரிகள் நாணயமாக வேனும், பண்டங்களாகவேனும் வாங்கப்பட்டன. நிலத்திலிருந்து நேர் முகமாகவாவது, அல்லது மறைமுகமாக வாவது ஏற்படக்கூடிய வரிகளையும் கிஸ்துக்களையும் பெற்றுக்கொள்ள மாமூலாக அரசரங்கத்திற்கு உரிமை இருந்தது. நிலத்தின் ஒரு பாகத்தை அரசன் அதன் அநுபவ உரிமைகளோடு மற்றொருவனுக்குக் கொடுத்துவிடுதல் குறிக்க, சாசனங்களில், 'எவ்வெவற்றை அரசன் உபயோகித்து அநுபவிக்கலாமோ அவையே' என்று குறிக்கப்படுகிறது. 'குடிமை' (அதாவது குடித்தன சம்பந்தமான கடமைகள்) என்பது இவ்வநுபவ உரிமைகளுள் அடங்கும்; 'குடிமை'யும், நிலவரியான 'கடமை' போன்று வற்புறுத்தி வேண்டப்பட்டிருக்கிறது. அந்தணர் அக்ரஹாரங்களுக்கும், ஆலயங்களுக்கும், மற்ற தர்மகார்யார்த்தமாகவும், நிலம் கொடுக்கப்பட்டிருந்தால், அந்நிலத்தை முன்பு அனுபவித்த வனைக் குடிமை வகையினின்றும் முழுதுமே விடுவித்து அவனுக்கு ஈடு செய்வது வழக்கமாயிருந்தது. இதினின்றும், குடிமையுரிமையுள்ள ஒருவனுக்குத்தான் சாகுபடிசெய்துவந்த நிலத்திற்கு நியாயமாக ஒரு பாத்தியதையுண்டு என்றும், இதற்கு ஈடாக அவன் 'கடமை' 'குடிமை'களைக் கொடுத்து வந்தாற் போதும் என்றும் தெரிகிறது. இதையே 'குடித்தனக்காரன் தரவேண்டிய குடிமை, கிராமத்தார் தரவேண்டிய வரிப்பாடு, ஆயவைகட்குட்பட்டே' என்றே சாசனங்கள் குறிக்கின்றன.

2. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் சில மிகச் செழிப்பான நிலப்பாகங்களிலிருந்து கணக்கிட்டால், மொத்தமாக நில சம்பந்தமாகச் செலுத்தப்பட்டவரி சுமார் ஒருவேலிக்கு நூறுகலம் நெல்லாகும். (அக்காலத்தில் முதல் ராஜராஜனுலேற்படுத்தப் பட்ட 'ஆடவல்லான்' என்னும் அளவையே முகத்தலளவையாயிருந்தது). சோழநாட்டினுட்பட்ட மற்றப்பாகங்களில் இதேயன்றி இதுபோன்ற 'அறுமொழிதேவன்' 'ராஜகேசரி' என்னும் அளவைகளும் கை

யாளப்பட்டுவந்தன. 11-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், 'காணிக் கடன்' என்பது வேலிக்கு 100 கலமாகும்; [ஒருவேலி சுமார் $6\frac{2}{3}$ ஏகராக்கள்; ஒருகலம் என்பது சுமார் 3 மணங்கு]. சோழநாட்டின் மற்றப்பாகங்களில், நிலம் செழிமை குறைவுபட்டமையின் வேலிக்கு 50-லிருந்து 80 கலம்வரை கொடுக்கப்பட்டு வந்தன. நெல் ஒரு (பொன்) காசுக்கு இரண்டுகலம் வீதம் விற்கப்பட்டதென்பர். (காசாவது ஒரு சிறு தங்க நாணயம்). ஒரு காசுக்கு 3 ஆடுகள் வாங்கலாம். ஈதன்றி, பருப்பும் நெல்லும் 1:3 என்னும் வீதத்தில் பண்டமாற்றுதல் செய்யப்பட்டது. ஒரு வேலி நிலத்தான் ஏற்படும் வரிப்பகுதியை நாணயரூபமாய்க்கொடுத்தால் 4-ல்இருந்து 9 கழஞ்சுகள்வரை கொடுக்க வேண்டிவரும் (1 கழஞ்சு = 20 மஞ்சாடி).

3. கிராமசபையோர் நிலவரியைச் சற்று ஏற்றத்தாழ்வாகவே வசூல் செய்துவந்தார்கள். முதல் முதலாக வெற்று நிலம் பயிரிடப் படுங்காலங்களில், முதலில் ஒரு சிறுதொகையே அதனின் வரியாக வசூலிக்கப்பட்டது. ஆண்டுகள் ஆகஆக பயிர்ச் செம்மையும் அதிகமாயிற்று; நிலவரியும் சிறிதுசிறிதாக அதிகப்படுத்தப்பட்டே வந்தது. வெள்ளப்பாழ், பஞ்சம், மற்றும் பலவிதமான நாட்டினைவாட்டும் கொடிய சேதம் நேரிட்டால், வரியினைத் தள்ளித்தருமாறு குடிகள் விரும்புவதும், வரி அரசனால் தள்ளப்படுவதும், குறைக்கப் படுவதும் வழக்கமாயிருந்தன. வெள்ளத்தினால் சாகுபடி சேதப்பட்ட காலத்திலும் வரிதள்ளப்படாது, குடிகளின் பட்டய மூடைத்தான நிலங்களை கிராமசபையோர் பொது ஏலத்திற்கு விட்டுவிட்டதும் ஒருகாலத்தில் நடந்ததென்று விக்ரமசோழன் சாசனம் ஒன்றால் அறிகிறோம்.

4. மைசூரிலுள்ள கோலார் ஜில்லாவைச் சேர்ந்த முள்பகல் என்னும் ஊரிலிருந்து அகப்பட்ட, முதற்குலோத்துங்கனது 3-ம் ஆண்டுச் சாசனம் ஒன்று Lewis Rice அவர்களது Epigraphia Carnatica, வாலியூம் 10, முள்பகல் நெ. 492), வரிகளுக்கும், மாசூலுக்கும் உள்ள வீதத்தைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. அச்சாசனத்தில் நாம் காண்பதாவது:—புஞ்சைநிலமாயின் வருவாயின் ஐந்திலொரு பாகம் கொடுக்கவேண்டியது; இதுவே நிலத்தின் சொந்தக்காரனைச் சேரும், இணறு, குளம் முதலியவற்றின் பாசனத்தால் சாகுபடி செய்யப்படும் நஞ்சையாயின் மூன்றிலொரு பாகம் மேல்வாரம் கொடுக்கவேண்டியது. பிற்காலங்களிற்கூட இவ்விகிதங்களே கையாளப்பட்டுவந்தன என்றே கூறலாம். முதல் ராஜாதிராஜனது 33-ம் ஆண்டுச் சாசனம் ஒன்று 'நஞ்சை நிலங்களில் மேல்வாரம் மாசூலில் ஐந்தில் இரண்டு பங்குகளென்றும், புஞ்சையில் நாலிலொரு பங்கென்றும்' கூறுகிறது. மற்றுமொரு சாசனத்திலிருந்து நஞ்சையில் மேல்வாரமும் கீழ்வாரமும் [அதாவது சாகுபடிசெய்வானைச் சார்வது] ஒன்றிற்கு ஒன்றரையாகவும், புஞ்சை நிலங்களில் விகிதம் ஒன்றிற்கு மூன்றுகவும் இருந்திருக்கலாம் என்று தெரியவருகிறது. கே. வி. சுப்பிரமணிய ஐயர் கூறுமாறு

('Historical Sketches of Ancient Deccan' 352-3-ம் பக்கங்களிற் காண்க): இவ்வாறு நிலத்தினின்று கிடைக்கும் மாசூலை, நிலத்தின் சொந்தக் காரனுக்கு இவ்வளவு என்றும், குத்தகையாகச் சாகுபடி செய்வானுக்கு இவ்வளவு என்றும் வீதமாய்க் கூறுதல் 'அரசாங்கத்துக்கும் குடித் தனக்காரர்களுக்கும் உள்ள வீதத்தையே குறிப்பிடுவதாகவேண்டும். இவ்வறிஞர் நிலவரிகளைப் பற்றி அவை எத்தகைத்தென்றும், எவ்வகைத் தென்றும் மேலும் கூறுவதாவது:—

(1) சாகுபடி செய்கிறவர்கள் கொடுக்கிற 'வாரம்' போன்று அரசாங்கத்துக்கும் ஒருதொகை யளிக்கப்பட்டு வந்தது. மேல்வாரம், கீழ்வாரம் என்னும் பதங்கள் இன்றைக்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருவதனின்று, அரசாங்கத்தாரைச் சேரவேண்டிய கட்டாயப்பகுதி யொன்று உண்டு என்று விளங்குகிறது. (2) இவ்வாறு மேற்கூறிய வீதங்கள் எல்லாம் எப்பொழுதும் ஒரே சீராக இருந்திருக்கவேண்டும். சொந்தக்காரனே, குடியானவனே, அல்லது அரசனே ஏற்பட்ட இவ்வீதத்தை மாற்ற வல்லவனல்லன். இவ்விதங்களால் நிலஉரிமைக் காரருக்காவது, குத்தகைக் காருக்காவது எவ்வித தொந்தரவும் இருந்திருக்க முடியாது. ஆயினும் நிலக்கடமைகளின் பாரத்தை யளவிட, பயிரிடுவானைச் சேரும் மற்றச் செலவுகளையும் நாம் நோக்கி யெடுத்துக்கொள்ள வேண்டும். (3) நிலவரி சாதாரணமாகப் பண்டங் கள் ரூபமாகவே வசூலிக்கப்பட்டுவந்தது; ஆதலின் அநேக இடங்களில் தானியத்தை இவ்வாறு சேகரித்து வைக்கப் பெரிய களஞ்சியங்கள் கட்டிவைக்கப் பட்டிருந்திருக்கவேண்டும். (4) சாகுபடி செய்யப் பட்ட நிலங்களுக்கே அரசாங்கத்திலிருந்து வரி விதிக்கப்பட்டது. மற்றும் விளைந்த நிலத்திற்கு மாத்திரமே கடமை ஏற்பட்டது என்று ஒரு சாசனம் கூறுகிறது. (5) 'சாகுபடி செய்பவர்களிடமிருந்து குறிப்பிட்ட ஓர் அளவு தாண்டாமல் அரசாங்கத்தார் தங்களுக்குச் சேரவேண்டிய வாரத்தை வசூலித்து வந்தார்கள். ஆனல் இந்த அளவு, நிலம் புஞ்சையோ அல்லது நஞ்சையோ அல்லது காடடர்ந்த நிலமோ அதைப் பொறுத்துச் சற்று வித்தியாசப் பட்டிருந்தது. நீர்ப்பாய்ச்சல் வசதி சாகுபடி செய்பவன் செலவு முதலியவற்றைக் கருதியே இவ்வித்தி யாசங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கவேண்டும்.

5. இரண்டாம் ராஜாதிராஜனது 14-ம் ஆண்டுச் சாசனங்கள் இரண்டு, 'கோவில் நிலத்திலிருந்து குத்தகையாகப் பெற்று வரிசைப் பற்று, வாரப்பற்று நிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய வாரவிகி தங்கள் சிறிது தாழ்த்தப்பட்டதைக் குறிப்பிடுகின்றன; கொடுக்க வேண்டிய வாரத்தில் எவ்வளவு குறைக்கப்பட்டதென்பதையும் பின் வருமாறு குறிக்கின்றன. உயர்ந்த நிலங்களானல் சுமார் பத்துக் கலமும், சிறிது தாழ்மையான நிலங்களானல் இரண்டிலிருந்து ஐந்து கலம் வரையும் குறைக்கப்பட்டது. புஞ்சை நிலமானல் வரியில் நூற்றுக்குப்பதினைந்து வீதம் தள்ளப்பட்டது; மற்றப்படி வரியில்,

வேறு நிலங்களுக்குத் தள்ளிக் கொடுக்கப்படும் வீதங்களும், மற்றும் ஏற்பட்டிருந்த பல சீர்திருத்தங்களும் நமக்குத் தெரியவருகின்றன. கடமைக்கடன்களில் பொதுவாகக் கொஞ்சம் குறைக்கப்பட்டிருந்தது; ஆனால் இவற்றை வசூல் செய்யும் உத்தியோகஸ்தர்கள் ஒருவர் வீட்டிற்குள் வசூல்செய்வதற்கென்று பிரவேசிக்கக்கூடாதென்றும், அபராதங்கள் விதிக்கக்கூடாதென்றும் கண்டிப்பான உத்திரவு பெற்றிருந்தார்கள். பின்னும் அச்சாசனங்களே, ஒரு குடியானவன் கொடுக்கவேண்டிய பாக்கிப்பணத்திற்காக மற்றொருவனைப் பாத்தியப்படுத்தக் கூடாதென்றும் கூறுகின்றன.

6. ஒவ்வொரு கிராமத்து வரி வசூல் உத்தியோகஸ்தனுக்கும் 'காணியாளன்' என்பது உத்தியோகப் பெயராகும். இவனே, அரசாங்கத்துக்கும், கிராமசபைக்கும், சாகுபடிசெய்பவர்களுக்கும் பொதுச் சார்பாக நின்று எல்லாக் காரியமும் செய்பவன். இவனே, அரசனுக்குச்சேரவேண்டிய வரிப்பகுதியை வசூலிப்பதற்கும், சாகுபடி நன்றாக நடக்கிறதா என்று கவனித்துக்கொள்வதற்கும், வரி சரிவரச் செலுத்தாத குடிக்காரர்களையப்புறப்படுத்துவதற்கும், அவ்வாறு ஏற்பட்ட நிலங்களை ஏலத்திற்குக் கொண்டுவரவும் அதிகாரம் பெற்றிருந்தான்.

7. நிலவரிசம்பந்தமாக, 'ஆயம்' என்ற அதிகப்படியாக விதிக்கப்படும் தீர்வைகள் இருவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தனவென்று அறிகிறோம். அவை முறையே அந்தராயம் என்றும், புறம்பான ஆயம் என்றும் பெயர்கள் கொண்டன. புறம்பானவரிகள் பெரும்பாலும் சுங்கவரிகளைப் போன்றே இருந்திருக்கவேண்டும். அந்தராயம் என்பது பொதுவாக நிலத்திற்குமட்டுமே வசூலிக்கப்பட்டிருந்திருக்கவேண்டும். கைத்தொழிலாளர்களுக்கும்,மற்றும் வேறுவிதமாகத் தொழில்செய்து ஜீவனம்செய்பவர்களுக்கும்அவ்வவர் வேலைக்காக நிலங்களே கொடுக்கப்பட்டுவந்தன. அந்த நிலங்களுக்கே அவர்கள் ஆயம் செலுத்தி வந்தார்கள். இவ்விதவரிகள் சோழர்கள் காலத்தில் மிகுதியாக வசூலிக்கப்பட்டுவந்த விவரம் திரிபுவனச் சக்ரவர்த்தி கோனேரின்மை கொண்டானது, (குலோத்துங்கன்?) 35-ம் ஆண்டுச் சாசனம் ஒன்றினின்று நாம் அறிகிறோம். அச்சாசனத்தில் பின்வரும் வரிகள் குறிக்கப்பட்டுள்ளன: பலவகை கடமை, குடிமை, எல்லாவித ஆயமும் (காசுக்கடமை உட்பட), ஓடுக்கும்பாடி, உறைஈரி, பாடிக்காவல், கர்ணத்தைச் சேரும் பாகம், கார்த்திகையிலளிக்கப்படும் செங்காய், தறியிறை, செக்குஇறை, செட்டியிறை, தட்டொலி, தட்டார் பாட்டம், மாவடை, குளவடை, ஓழுக்கு நீர்பாட்டம், வரியாயம், இனவரி, இடைவரி, அழுகல் சரக்குக்காக ஏற்பட்ட அபராதம், அங்காடிப் பாட்டம், உப்பாயம் முதலியன; பஞ்சுபிலி, மாதப்பாடி, நாட்டுப்பாடி, ஆனைக்கூடம், குதிரைப்பண்டி என்பனவற்றைச் சார்ந்தவரிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

8. நில இனம்தார்கள் குடியானவர்களிடமிருந்து வார உரிமையையும், நிலங்களிலிருந்து வேறுவிதமான வருமானங்களையும், இன்னும்

இதுபோன்ற பல்வேறு உரிமைகளையும் அநுபவித்து வந்தார்கள் என்றும் அறிகிறோம். இறுத்தார்கள் இப்படி அநுபவித்துவந்த உரிமை களுட் சிலவாவன :—நாடாட்சிக்கும், ஊராட்சிக்கும் அளிக்கப்படும் சம்பளம் ; குயவன் கொடுக்கவேண்டியவரி (குசக்காணம்); கலியாணக் காலத்தில் கொடுக்கப்படும் பணம் (கண்ணுளக்காணம்); வண்ணாரப் பாறைக்குள்ளவரி ; இடையர்கள் கொடுக்கவேண்டியவரி ; காடு காவ லுக்கானவரி ; படகோட்டிகள், சாணார்கள், சுங்கம் வாங்குபவர்கள் ஆகிய இவர்கள் செலுத்தவேண்டிய வரிகள் ; சபாவிநியோகம் ; பிரா மணர்கள் செலுத்தவேண்டியவரி ; நெய் விற்பவர்கள் செலுத்தவேண் டியவரி ; மாட்டுக் கொட்டகைக்காகவரி ; புதுக்குதிரைக்காகவரி ; வேலைக்காரர்களை வைத்திருப்பவர்கள் செலுத்தவேண்டியவரி ; பாக்கு வரி ; பெரியோர்கள் செல்வமுள்ளோர் செலுத்தவேண்டியவரி முதலி யன. அரசாங்கத்திற்கோ, அல்லது நிலத்தின் அநுபவ பாத்தியதை களைப் பெற்றவர்களுக்கோ முக்கியமாகக் கிடைக்கக் கூடியவரி நிலவரி தான். ராய்பகதூர் வி. வெங்கய்யாவும், டாக்டர் S. K அய்யங்காரும் நிலவரி இத்தகைத்து என்று கணக்கிட முயற்சித்து இருக்கின்றனர். S. K. அய்யங்கார், முக்கியமாக சாசனங்களின் உதவியிலேயே, நில வரியானது மொத்தத்தில் நிலத்திலிருந்து கிடைக்கக்கூடிய மாசூலில் 15ல் கான்குபங்கு என்று கணக்கிட்டிருக்கிறார். முன்பு கூறியபடி, காவிரியாற்றின் பாசன நிலங்களில் அது வேலிக்கு ஆடவல்லான் அள வைப்படி நூறுகலம் கொண்டது. அதாவது தற்காலத்தில் அளவைப் படி ஒருவேலிக்கு 80 கலம் நெல்வரியாகக் கொடுக்கவேண்டியது. ஒரு வேலியில் மொத்தத்தில் வரக்கூடிய மாசூல் சராசரி 300 கலமிருக்கும் என்றும் கூறுவர்.

9. முதல் ராஜராஜசோழன்காலத்தில் ஏற்படுத்தின நிலவரிக் கணக்கு முதலியவற்றின் சேர்மை தஞ்சை சாசனங்கள் சிலவற்றி னின்றும் நமக்குத் தெரியவருகிறது. அளத்தற்கரிய மிகவும் நுண்ணிய சதுரத்தையும், அதாவது ஒருவேலியில் 5,24,288,00,000-ல் ஒருபாகத் தையும் கூட அளவிட்டு அதனின்று வரவேண்டியவரி கணக்கிடப் பட்டது. ராஜராஜனது 24-ம் ஆண்டு வெளிப்போந்த ஒரு சாசனம் (இது தஞ்சை ஜில்லாவிலுள்ள திருவிசாலூரிலுள்ளது), சில வருஷ காலம் முன்பு ஏற்படுத்தப்பட்ட நிலவரிக் கணக்கைப் பற்றிக் கூறுகிறது. கணக்கிடும் உத்தியோகஸ்தர்களில் முக்கியஸ்தன் 'குறவன் உலகளா தான்' எனும் நாமம் பூண்டவன். விக்ரமசோழன் ஆட்சியில் வெளி யாய ஒரு சாசனம் (1900, 97ம்-சாசனம்—இதுசோழன் திரிபுவனச் சக்ரவர்த்தி விக்ரமசோழன் காலத்தியது, திருவொட்டூர் வேதபுரீச்வரர் கோவில் தெற்குப் பிரகாரச் சுவரிற் காணப்படுவது) வெளிப்படுவ தற்கு முன்பே (அதாவது ஆட்சியின் ஆறுவது ஆண்டு) நில அளவை களும், வரிக்கணக்குகளும், செவ்வனே பார்க்க வசதியிருந்தது என்று குறிக்கிறது. சோழ அரசனது ஸ்ரீபாதம் நிலம் அளப்பதற்கு அளவை யாக இருந்ததென்றும் தெரிகிறது. கி. பி. 1086-ல் (அதாவது முதற்

குலோத்துங்கனது ஆட்சியின் 16-ம் ஆண்டில்) வழக்கத்திலிருந்த நில அளவை ஏற்பாடுகளைப் பற்றிச் சீகாழியிற் காணப்படும் 3-ம் குலோத்துங்கனது 9-ம் ஆண்டுச் சாசனம் ஒன்றும், கோனேரின்மை கொண்டானது திருநாகேச்வரம் சாசனம் என்றும் கூறுகின்றன. அளவையாகக் கையாளப்பட்ட ஸ்ரீபாதமாவது முதல் குலோத்துங்கனது அடியேயாகும் என்று நமக்குச்சாசனங்களினின்றும் தெரியவருகிறது. இவ்விதமாக நில அளவு கணக்கெடுக்கப்படும்பொழுது காட்டின் விஸ்தீரணம், ஒவ்வொருகிராமத்தின் மொத்தப் பரப்படி, ஒவ்வொருகிராமத்திலும்வரி கொடாநிலம் எவ்வளவு, வரியோ வாரமோ கொடுத்து வந்த நிலமெவ்வளவு, பயிரிடப்பட்ட நிலங்களிலிருந்து வரவேண்டிய நெல்அல்லதுமற்ற தானியங்கள் எவ்வளவு, அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டியது எம்மட்டு, இவையெல்லாம் ஜாக்கிருதையாகக் கணக்கிடப் பட்டு, புத்தகங்களிற் பதிவு செய்யப்பட்டன. முதல் ராஜாதிராஜன் காலத்திற்கு முன்புகூட கிராமங்களில் ஆண்டாண்டுதோறும் சாகுபடிசெய்யப்படும் நிலம் இவ்வளவு என்று அதிகாரிகள் அறிந்திருந்தனர். இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழன் காலத்திலேற்பட்ட சில முக்கிய வித்தியாசங்களால் குலோத்துங்கன் மறுமுறை கி. பி. 1086-ல் கணக்கெடுக்கவேண்டிவந்தது; மூன்றும் குலோத்துங்கனது 38-ம் ஆண்டில் ஒரு கணக்கெடுக்கப் பட்டதாக, மூன்றும் ராஜராஜனுடையவும், மூன்றும் ராஜேந்திரனுடையவும் சாசனங்களிலிருந்து நமக்குத் தெரிகிறது.

10. கிராமமுன்னேற்றத்திற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட கிராம நிலங்களிற் சிலபகுதிகள் கிராமத்திற்கென்றே சொந்தமாகக் கருதப்பட்டமையின் வரிவிதிக்கப்படாமலிருந்தன. இதுபோன்றன பொதுத் தொழிலாளர்களும் பறையர்களும் உபயோகிக்கும்நிலங்கள்; இடுகாடு; பாசனத்திற்கான கால்வாய்கள்; கோயில்கள்; பூந்தோட்டங்கள்; வாய்க்கால்கள்; பெரியரஸ்தாக்கள்; ஆறுகள்: பறையர்களுக்கான குளம் குட்டைகள்; மாட்டுக்கொட்டில்கள்; கிராமக்களம்; கன்றுகள் மேய்க்கப்படும் இடம்; கிணறுகள்; வண்ணர்களும், சாணர்களும் குடியிருக்கும் பாகங்கள்; எல்லைகள் குறிக்கும் பெரிய மரங்கள்; ஆற்றுவெள்ளங்கொண்ட நிலங்கள்; மீன்பிடிக்கப்படும் சேற்று நிலங்கள்; தேன் எடுக்கப்படும் காட்டுநிலங்கள்;—இதுபோன்ற மற்றும்பல பாகங்கள் இறையிலியாகக் கருதப்பட்டன. இப்படியாக ஒவ்வொரு கிராமத்திலும், அந்த கிராமத்திலுள்ள நிலத்தின் மொத்த விஸ்தீரணத்தையும், அதில் சாகுபடி செய்யக்கூடியனவாயிருந்தும் பயிரிடப்படாத நிலங்களின் விஸ்தீரணமும், கிராமகாரியங்களுக்கென்று ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் சாகுபடி செய்யப்படாத நிலங்களின் விஸ்தீரணமும், சாகுபடி செய்யவேமுடியாத நிலங்களின் விஸ்தீரணமும் குறிக்கப்பட்ட கணக்குக்கள் இருந்தன. நிலவரித்திட்டம், ராஜாங்கத்தார் பெறும்வாரத்தைப் பொறுத்ததாயிருந்ததோடு, சாகுபடி செய்யும் செலவு; மாசூல், பாசனத்திற்குரியவசதிகள், இவைகளை யொட்டியும்

இருந்தது. ஒற்றையடிப் பாதைகளும், நிலத்தினின்றும் நிலத்தைப் பிரிக்கக்கூடிய கரைகளும் குறித்துவைக்கப்பட்டிருந்தன. இதனால், ஒருநிலத்தின் எல்லைகளையும், அது எந்தக்கால்வாயினால் பாசனம் செய்யப்படுகிறதென்பதையும், அது யாருக்குச் சொந்தமானது என்பதையும், கூறுமுன்னரே, நில உத்தியோகஸ்தர்கள் அந்நிலம் எங்கேயிருக்கிறதென்று சரியாகக் குறிப்பிட்டுச் சொல்லுவதற்கு வசதியாயிருந்தது.

11. அநேகசாசனங்களிலிருந்து நிலம் வெளிப்படையாகவும், சகலவிதமான உரிமைகளுடனும் விற்கப்பட்டதென்றும் தெரிகிறது. நிலவரி செலுத்தாததற்காக கிராமசபையோர் வரிசெலுத்தாதவனது நிலங்களை ஏலம் போடுவது வழக்கமாயிருந்தது என்று முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம். நிலக்கள் தானஞ்செய்யப்பட்டபோதும், விற்கப்பட்டபோதும், மற்றும் வேறுவிதமாகப் பட்டயம் மாற்றப்பட்ட போதும், அந்நிலங்களின் எல்லைகள் தெளிவாகக் குறிக்கப்பட்டதன்றி, நிலப்பிரிவினைக்காக அதன் எல்லைப்பாகங்களிற் கற்கள் வைக்கப்பட்டன. ரஸ்தாக்கள், கரைகள், ஒற்றையடிப் பாதைகள், பாசனத்திற்குரிய கால்வாய்கள் முதலியவற்றின் எல்லைகளும் செவ்வனே குறிக்கப்பட்டன. நிலமாற்றுதலினுடைய குறிப்புக்களும், நிலவரி ரசீதுகளும், ஜாக்கிரதையாக வைக்கப்பட்டிருந்தன. நிலங்கள் விற்கப்பட்டபோதும், குத்தகைக்கு விடப்பட்ட போதும், மாற்றப்பட்ட போதும், தானஞ் செய்யப்பட்டபோதும், இம்மாதிரி எல்லா மாற்றல் விவரங்களும் எவ்வித ஐயமுமறச் செஞ்சொற்களால் விரிவாக எழுதப்பட்டன. நிலம் விற்பவனுக்கு விற்கப்படும் நிலத்திற்குள்ள உரிமையைக் குறிக்க, 'என் இறையிலிநிலம்,' 'என்னுல் அநுபவிக்கப்பட்டது,' 'நான் அனுபவித்ததையே நான் கொடுக்கிறேன்' என்ற தொடர்மொழிகள் நிலவுரிமை மாற்றும் பத்திரங்களில் வழங்கப்பட்டன.

12. நிலங்கள் ஏலமாகவோ, விலைக்கோ, இனமாகவோ, ஸ்திரீதனமாகவோ, அல்லது மற்றெவ்விதத்தாலோ, அடையப்பட்டாலும், அந்தந்த நிலங்களின் முன் கொடுக்கல் வாங்கல்களோடு எல்லா விபரங்களும் பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டன. ஒரு நில விற்பனைப் பத்திரத்தின் உதாரணம் வருமாறு : 'கம்மிருவருக்குள்ளும் (கொடுப்பவன், வாங்குபவன் இருவருக்குள்ளும்) ஒப்புக்கொள்ளப்பட்ட விலைப்பணம் முழுவதையும் வாங்கிக்கொண்டு நான் இதை விற்கிறேன். இத்தப் பத்திரமே சாசனமாகவும் பணத்திற்கு ரசீதாகவும் இருக்கக்கடவது என்றும், இதைத்தவிர வேறு எந்தப் பத்திரங்களும், நிலம் வாங்கி இருப்பவனுடைய உரிமையை நிலை நிறுத்த அவசியமில்லை எனவும் நான் இருகாலும், முக்காலும், கூறுகிறேன். சந்திராதித்யர்கள் இருக்கும் வரை, பூவுலகும் காவிரியும் இருக்கும்வரை, நெல்லும் புல்லும் விளையும் வரை வாங்குபவர்களாலும், அவர்களுடைய புத்திர பௌத்திரர் யாவராலும் இப்பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ள நிலங்கள் எண்வகையான உரிமைகளோடும் வெட்டப்பட்ட இணறுகளையும், வளரும் மரங்களையும்,

அங்நிலத்தில் வசிக்கும் ஜந்துக்களையும், மரங்களில் வசிக்கும் பறவைகளை யும், பூரண உரிமைகளோடு அநுபவித்து வருவார்களாக. நிலம் வாங்குபவர்கள், இப்பத்திரத்தைச் செப்புத் தகட்டிலும், கல்லிலும் பொறித்து வைப்பார்களாக.' அவ்வெல்லைகட்குட்பட்ட நஞ்சை நிலங் கள், புஞ்சை நிலங்கள், கிணறுகள், பழந்தரு மரங்கள், தென்னை மரங் கள், மாமரங்கள், சாகுபடி செய்யா நிலங்கள், முதலிய யாவும் இத னுடன் மாற்றுதல் செய்யப்பட்டவையாகக் கருதப்பட்டன ; இவ்வித மாறுதல் பத்திரத்தில் விற்பவன் கையொப்பமும், மற்றும் ஊரிலுள்ள முக்கிய குடிகள், மத்தியஸ்தர்கள், கையொப்பமும், பெறப்பட்டன.

13. விற்றவனே, அதை வாங்கினவனே தற்குறியாயிருந்தால் பத்திரத்தை வேண்டிய வேறொருவன் எழுதிக் கையொப்ப மிடுவது வழக்கம். பெண்களுக்கும் தங்களுடைய சார்பிலேயே நிலம் விற்பதற்கு உரிமையிருந்தாலும், பொதுவாக ஒரு முதியன் மூலமாகவே விற்றல் வாங்கல் செய்து வந்தார்கள். நிலங்கள் ஏலம் போடப்படும்பொழுது விளம்பரம் குறைந்தது மூன்று தடவையாவது செய்யப்படவேண்டும் ; விற்பதற்குக் காரணமும் கூறப்படவேண்டும். அப்படி ஏலம் போடப் படும் நிலம் அதிகமாக விலை கேட்பவனுக்கே கொடுக்கப்பட்டு வந்தது. விற்பனையைப் பதிவு செய்வதற்கென்றே கூட்டப்பட்ட ஒரு சபையின் முன்னர் நிலம் விற்கப்படும் விலை ஒப்புக்கொள்ளப்பட்டது. விற்கப்படும் நிலம் கிராமசபைக்குச் சொந்தமாயிருந்தால் சபையோர் உத்தரவிட்டால் ஒழிய விற்பனை செய்ய முடியாது ; இவ்வாறு விற்பனை முடிவடையச் செய்ய சில அங்கத்தினர்கள் பிரத்தியேகமாய் நியமிக்கப்படுவார்கள். இவ்வித விற்பனைப் பத்திரங்கள் வெகு ஜாக்கிரதையாக எழுதப்படு வதுடன் சில கோயிற் கணக்கர்களுக்கும் மத்தியஸ்தர்களுக்குமே இவ் வேலையை ஒப்படைத்து வந்தார்கள்.

14. சாசனங்கள் கூறும் அநேக நிலமாறுதல்களும், கோயில் களுக்கோ, பிராம்மணர்களுக்கோ, மற்றும் வைதிக அல்லது சமண மதத்தைச் சார்ந்த சில தர்ம ஸ்தாபனங்களுக்கோ இனமாக அளிக்கப் பட்டதாகவே புலப்படுகின்றன. இவ்வாறு கொடுக்கப்பட்ட நிலத்தைச் சிலகாலங்களில், பழங்காலத்தில் வழங்கின பாத்தியதை அனுபவங் களுடன் வாங்கிவிடுவது உண்டு. விற்பனைப்பணத்தைத் தங்கப்பாள மாகவும், அப்பொழுது புழக்கத்திலிருந்த நாணயமாகவும் செலுத்து வதுண்டு. தங்கப்பாளமாயின் 'நெருப்புப்போன்ற நிறம் மாறுத தங்கமாய்க் கொடுக்கவேண்டும்' என்பார்கள். விற்பனைப்பத்திரங்கள் முதலில் பனை ஏடுகளிலும், பிற்பாடு செப்புத்தகட்டிலும் பொறிக்கப் படுவதும் உண்டு.

15. நிலம் மாறுதல்கள், வரிவாங்கி பட்டுவாடா செய்தல் முத லியனவற்றை இதற்கென்றே ஏற்பட்ட நிணைக்களத்தார்கள் கவனித்து வந்தார்கள். வாரம், நிலம் மாறுதல், கள்விகிதம், வரி இவற்றை மேற் பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள் தர்மகார்யங்களின் பொருட்டுப்

பிரத்தியேகப் படுத்தப்பட்ட பொருள்களைப் பற்றியும், பணத்தைப் பற்றியும் சரிவரக் கணக்கு வைத்து வந்தார்கள். தர்மஸ்தாபனம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ஒரு கணக்குப் புத்தகம் இருந்தது. அரசாங்கத்தின் பிரத்யேக கணக்கன் (Special accountant) வந்து இப்புத்தகங்களை மேற்பார்வையிடுவது உண்டு. தேவஸ்தானங்கள் சம்பந்தமான கணக்கர்கள் வரவு செலவு கணக்குகளைச் சரிவரப் பார்வையிடாவிட்டால் அரசனது தனி அஜ்ஞைப்படி கணக்கர்களை வரவழைப்பது வழக்கம். இதற்கு உதாரணம்: முதற் பராந்தகசோழன் தனது 25-ம் ஆட்சி ஆண்டின் தஞ்சை ஜில்லாவைச் சார்ந்த திருநெய்த்தானம் என்னும் கோவில் கணக்குகளை மறுமுறை பார்வையிடத் தனது சொந்தக் கணக்கர்களுக்கு உத்தரவிட்டு, முன்பு அதிகக் குறைவு கணக்கை ஒழுங்காகப் பார்வையிடாதவர்கள் நகர சபையின் முன்பு கொணர்ந்து விசாரிக்கப்பட்டு தண்டனையும் பெறுமாறு உத்தரவிட்டான். நியாயமாகக் கணக்குப் பார்ப்பவர்களுக்குச் சம்பளம் ஈவதுண்டு.

16. கிராமங்களையும் நிலங்களையும் பிராமணர்களுக்கோ (பிரம்மதேசங்கள்), வைதிகக்கோவில்களுக்கோ (தேவஸ்தானங்கள்) சமணப் பள்ளிகளுக்கோ, அந்தணர்முதலியோர்க்குபோஜனவசதிசெய்வதற்கோ, பள்ளிச்சாலை நடாத்துதற்கோ தானமாகக் கொடுக்கப்பட்டால், அது உடனே வரிகளினின்றும் மற்ற கடன்களினின்றும் விலக்கப்படும் என்பது பொருளல்ல; ஆனால் அதுவரை அரசனுக்கு உரிமையாயிருந்த வரி முதலானவை இனி அவனைச் சாராது நிலத்தை இனமாகப் பெற்றுரைச் சேரும்; இப்படி இனம் அடைந்தவர்கள்கூடத் தங்களிஷ்டப்படி வரி முதலானவற்றை வசூலிக்க முடியாது. தர்மம் ஈந்தவன் அரசனன்றிக் குடிகளில் ஒருவனுயின் தர்மம் பெற்றுரை வரிமுதலானவை அரசனுக்குக் கொடுக்கவேண்டிய அவசியத்தினின்றும் விடுவித்து, ஒன்று தானே இனம் நிலங்களின் வரிகளைச் செலுத்தியோ, அன்றி, நிலவரிக்குச் சமமான தொகையை வட்டியாகக் கொடுக்கும் ஒரு தொகையைக் கொடுத்தோ வரவேண்டும். ஆனால் இவ்வழக்கம் அதிகமாகச் சாசனத்திலும் காணப்படவில்லை. 1193-ம் ஆண்டுச் சாசனம் ஒன்று கிராமத்தை தேவதானமாக அளித்தபின்பு தானந் தந்தவன் எவ்வாறு இராஜாங்கத்திற்குத்தான் வரியளிக்க ஒப்புக்கொண்டானென்று தெரியவருகிறது. அவனே எல்லா வரிக்கடன்களையும் தரவேண்டுமென்று மற்றொரு சாசனம் கூறுகிறது. சிற்சில சமயங்களில் கிராமசபையார் இவர்கள் தரும் வரிக்கடன்களையெல்லாம் ஒன்றுதிரட்டி வட்டிக்கு விட்டுவரும் பணத்தை அரசனுக்கு இறையாக அளிப்பார்கள். பிரம்மதேசமாகவும், தேவதானமாகவும் கொடுக்கப்பட்ட நிலங்கள் சில கட்டுப்பாடுகட்குட்பட்டே தானம் பெறுவாரைச் சாரும்; அவர்கள் அந்நிலங்களையொழுங்காகப் பாதுகாத்து வருவதாக இருந்தால்தான் அவர்கள் வரி வசூலிக்கலாம். இவ்வாறன்றி, குடித்தனக்காரர்களிடமிந்து நிலவரிமுதலானவற்றைப் பெற அவர்களுக்குப் பாத்தியம் ஏற்படாது. நாம் மேற்கூறிய படி, நிலம் பெற்றுரைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாடுகளிற் சில முக்கிய

மானவை பின்வருமாறு :—நிலம் பெற்றூர் நிலம் பெற்றதனாலேயே அந் நிலத்தை ஈந்தவர்க்கு ஒரு பாத்தியதையுமின்றிச் செய்துவிடமுடியாது. வண்ணூர், தட்டார், தறிபோடுபவர், குயவர் முதலியவர் தாம் தரவேண் டிய கடமைகளை மாத்திரம் செவ்வனே தந்துவிட்டால் அவரவர் குடி, தொழில், முதலானவற்றில் நிலம் பெற்றூர் தலையிடமுடியாது. முன்பு குடியிருந்தவர்களை அக்குடித்தனத்தினின்றும் மாற்றும் அதிகாரமும் அவர்களுக்கில்லை.

17. தர்மமாக நிலம் பெற்றூர் செய்ய வேண்டிய கடமைகளில் சில பின் வருமாறு : (1) குடிப்பதற்கும், பாசனத்திற்கும் நீர் வசதியேற் படுமாறு கால்வாய்கள் வெட்டிவிடும்படி செய்து அதற்குரிய பகுதிகளைப் பெறுதல் ; (2) வாய்க்கால் நீர், இளைவாய்க்கால் முதலியவற்றில் வீணு கப்போகாமல் பார்த்து, அவ்வாறு வீணுக்குபவர்களுக்கு அபராதம் விதிக்கச்செய்தல் ; (3) செங்கற் கட்டடங்களையும், ஓட்டுக்கோப்பு வீடுகளையும் கட்டுவிக்கச்செய்தல் ; பெரும் கிணறுகள் தோண்டுவிக்கச் செய்தல்; அதேக இடங்களில் பெரிய எண்ணெய்ஆடும் செக்குக்களை ஏற் படுத்தச்செய்தல் (4) தோட்டங்களில் தென்னை, பனை, மா முதலிய மரங் களும், வாசனை மிகுந்த தமனகம், மருவு, இருவேளி, செண்பகம், செங் கழுநீர், முதலிய புஷ்பச்செடிவர்க்கங்களையும் செழிக்க ஏற்பாடு செய்தல் கிராமத்திலுள்ள தென்னை, பனை மரங்களைக் கள்ளிறக்குபவர் உபயோ கித்துக் கெடுக்காது பாதுகாக்கச்செய்தல். யாம் கடைசியாய்க் கூறிய தனின்றும், பிரம்மதேச தேவதான நிலங்களைப் பெற்றவர் ஜனங்களுள் மதுபானப் பழக்கமேற்படாது மதுவை விலக்கி வெறுக்கச் செய்வது தமது கடமைகளுள் ஒன்றாய்க் கொண்டார் என்பது புலனாகும்.

18. பாசனவசதிகளை நாட்டினை ஆண்ட கல்லரயர் பாதுகாத்து வந்தனர். காவிரியின் இருகரையும் வெள்ளம் புரண்டோடாது இருப் பான் கருதிக் கரிகாலசோழ மன்னன் பண்டைக்காலத்திலேயே கரை கட்டியது யாவருமறிந்தது. இக்காலமும் காவிரியினின்றும் பாயும் வாய்க்கால்களுள் பல, சோழர்கள் காலத்திற்கும் முற்பட்டன என்று கூற இடமுண்டு. பழங்காவிரியும் கொள்ளிடமும் சமயகுரவரான திருஞானசம்பந்த மூர்த்திகள் அருளிச் செய்த செந்தமிழ்ப் பாக்களிற் கூற அறிவோம். விண்ணாறும், அரசிலாறும் முன்னுள் தொட்டே இருப்பனவாகும். 'வீரசோழன்' எனும் பெயர் பூண்ட வாய்க்கால் வெட்டியவன் முதற் பராந்தகனே. வீரமார்த்தாண்டம், உய்யக் கொண்டான், முடிகொண்டான், என்னும் வாய்க்கால்கள் 10-ம், 11-ம் நூற்றாண்டுகளில் அரசுசெய்த இப்பராந்தகன் மரபில் வந்த பல மன்னர் களால் வெட்டப்பட்டு இன்னும் இலங்குவனவாகும். இவ்வாறுயின் சோழமன்னர்களும் தமக்குமுன் தமிழ் நாடாண்ட பல்லவ அரயர் பெருந்தகையினைக் கைக்கொண்டவரேயன்றி வேறன்று. நாடெங்கும், பாசனச் சுனைகளும், கிணறுகளும், வெகுகருத்துடன் காப்பாற்றப்பட்டு வந்தன; இயற்கையிலேயே பயன்படக்கூடிய நீரூற்று ஒன்றும் வீணுக்கப்

படவில்லை. இவ்வித மேற்பார்வைக்காகவே ஒவ்வொரு கிராம சபையிலும் ஒருசாரார் தனியேயிருந்து இக்கருமத்தையே செய்து வந்தனர். வாய்க்கால்கள், நீர்வழிகள் முதலியனவற்றைப்பற்றி அநேக சாசனங்களிலுல் அறிவோம். இவை, அக்காலத்து நீர்ப்பாய்ச்சல் ஏற்பாடு எத்தகைத்து என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. நஞ்சை நிலங்கள், நீர்ப்பாய்ச்சல்களுக்காகவும், பிற்பாடு நிலவரி ஏற்பாடுகளுக்காகவும் கிணறு, சத்திரம், சிறகு, சதுக்கம், பதாகை என்று பல்வேறுகப் பிரிக்கப் பட்டிருந்தன. நிலங்கள் பெரியவாய்க்கால்களுக்கு எந்தப் பக்கத்திலிருந்தாலும், நீர்ப்பாசனம், நீர்வரும் வழியேயிருத்தல் வேண்டும். அதாவது பிற நிலங்களுக்குக் கெடுதி உண்டாகாதவாறும், முன்னுல் அடைத்து நீர்ப்பாய்ச்சிக் கொள்ளாதவாறும் இருத்தல்வேண்டும். இப்படி விதிக்கு மாறுசெய்பவர் அபராதத்திற்குள்ளாவார். 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்த பாண்டிய அரசன் ஜடாவர்மன் ஸ்ரீவல்லபன் காலத்துக் 'குருவித்துறை'ச்சாசனங்கள் அக்காலத்திலிருந்த வாய்க்கால்களையும் நீர்க்கால்களையும் பற்றித் தெரிவிக்கின்றன. அவைகளுள், ஒன்று ஒரு பெரிய கால்வாயிலிருந்து தனியாக வெட்டப்பட்டதான பராக்ரம பாண்டியன்கால் என்னும் வாய்க்காலை, பிறர் தடை செய்ததன் காரணமாக, அடைத்துவிட்டதாகக் கூறுகிறது. குளங்கள், கால்வாய்கள், வெட்டுவதனுல் ஜனசமூகங்களுக்கு நன்மை செய்பவர்களை அவர்களுடைய நிலங்கள் இறையிலியாக்கப்படுவதனுலும், இன்னும் மற்ற விதங்களினுலும், கௌரவிக்கப்பட்டு வந்தார்கள். ஹொஸ்கோட்டை என்னுமூரிலிருந்து கிடைத்திருக்கும் சாசனமொன்றில் புதிதாக வெட்டப்பட்டதான குளத்திலிருந்து பாசனம் செய்யப்படும் எல்லா நிலங்களும் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டபின் முதல் இரண்டு வருஷங்களுக்குச் சர்வமானியமாகவும் (அதாவது இறையிலியாகவும்), பின்னரே வரி செலுத்தவேண்டும் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. கி. பி. 1331-ம் ஆண்டு மைசூர் காட்டையாண்ட ஹொய்ஸல மன்னனின் சாசனம் ஒன்று அப்பொழுதுதான் வெட்டப்பட்டதொரு குளத்திலிருந்து பாசனம் செய்யப்படும் நிலங்கள் எப்பொழுதும் சர்வமானியங்களாகவே அநுபவிக்கப்படலாமென்று குறிக்கிறது. இம்மாதிரிப் பாசன வசதிகளைப்பற்றி ஜனசமூகத்தாரும், அரசாங்கத்தாரும் அதிகமாகக் கவலை யெடுத்துக் கொண்டார்கள் என்பதற்குப் பல உதாரணங்கள் சாசனங்களிலிருந்து கிடைத்திருக்கின்றன.

மணிமேகலை

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்,
விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மணிமேகலை யென்பது தமிழிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களி லொன்று. நல்லிசைப்புலவராகிய மதுரைக் கூலவாணி கன் சாத்தனாரால் இயற்றப்பெற்றது. தொல்லியுரை யாசிரியர்கள் பலராலும் எடுத்தாளப்பெற்ற பெருமையுடையது. "மணிமேகலை நூல்நுட்பங்கொள்வதெங்ஙன்" என்று திருவெங்கைக் கோவையில் கவிஞர் பெருமானுகிய சிவப்பிரகாசவடிகளாற் சிலேடை யில் வைத்துப் பாராட்டப்பெற்றது. காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த வணிகர் குலத்தோன்றலாகிய கோவலனுக்கு மாதவியென்னும் நாடகக் கணிகை வயிற்றுதித்த மணிமேகலை யென்பாளது வரலாற்றை யுரைத் தலின் இந்நூல், மணிமேகலை யெனவும், மணிமேகலைதுறவு எனவும் பேர்பெறுவதாயிற்று. இதனையியற்றிய சீத்தலைச் சாத்தனரோ பல் கலைக்குரிசில், சகலகலாவல்லவர், எனக்கூறத்தக்க பெருமையுடையார். முத்தமிழ்ப்புலமையும் நிரம்பிய வித்தகராகிய இளங்கோவடிகளாலும் "தண்டமிழாசான் சாத்தன்" என இவர் சிறப்பித்தோதப்பட்டி ருப்பதே இவரது பெருமைக்கு உறுசான்றாகும். சங்கத்துச் சான்றோ ராகிய சாத்தனர், தாம் அறிந்துள்ள கலைகளையும், கொள்கைகளையும் வெளிப்படுப்பதற்கு இந்நூலைக் கருவியாகக் கொண்டனராதல் வேண்டும்.

காப்பியவியல்புகள் இந்நூலின்கண் எங்ஙனம் அமைந்துள்ளன என்பதையும், சில வரலாற்றுண்மைகளையும், புத்தமதத்தின் கொள்கை அல்லது முடிபுகளையும் ஆசிரியர் இதன்கண் எவ்வாறு புலப்படுத்து கின்றார் என்பதையும் ஆராய்தற்கெழுந்ததே இக்கட்டுரையாகும். பெருங்காப்பிய இலக்கணத்தைப் பற்றித் தண்டியலங்காரம் கூறும் நூற்பா,

"பெருங்காப்பியநிலை பேசுங்காலை
வாழ்த்துவணக்கம் வருபொருளிவற்றினொன்
றேற்புடைத்தாகி முன்னவரியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித்தாகித்
தன்னிகரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகட லூரு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென்றிவனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடிகவித்தல்

மணிமேகலை

பூம்பொழி னுகர்தல் புனல்விளையாடல்
தேம்பிழி மதக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்
பரிச்சேதமென் னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப ''

என்பது. இவ்விலக்கணங்களைத் தொகுத்து நோக்கின், பலதிறப்பட்ட மக்கட் பண்புகளும், இயற்கைவருணனைகளும் செறிந்து காணப்படுவதும், உறுதிப்பொருள் நான்கும் பயக்கும் இயல்பினதாய் அதற்கேற்ற பெருமக்களைத் தலைவராகவுடைத்தாயிருப்பதும், ஒன்பான்சுவையும், பாவமும்கற்போர் உள்ளத்தைக் கவர்வனவாக அமைந்திருப்பதும் காப்பியத்திற்கு இன்றியமையாத இலக்கணங்களாமென்பது பெறப்படும். காப்பிய இலக்கணங்களிற் பிறவெல்லாம் அமைந்துகிடப்பினும், சுவையும் மெய்ப்பாடும் துதைந்திராவிடில் அது புலவர்களால் மதிக்கத் தக்க காப்பியம் ஆமாறில்லை. அவை நிறையப்பெற்றுப் புலவருள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பெற்றியதாயினும், உறுதிப்பொருள்களுளொன்றும் பயவாதாயின் அதனுலெய்தலாகும் ஊதியம் ஒன்றுமில்லை.

மணிமேகலையானது நாற்பொருளும் பயக்கும் குறைபாடில்லாப் பெருங்காப்பியம் ஆகுமா என்பது ஆராயற்பாலது. சிலப்பதிகாரப் பதிகவுரைத் தொடக்கத்திலும், இறுதியிலும் அக்காப்பியத்தைப் பற்றி அடியார்க்கு நல்லார் கூறியிருக்கும் கருத்துக்கள் இதற்குத் துணைபுரிவனவாம். அவை ''உலகத்துக் காப்பியஞ் செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடுங் கூறல்வேண்டுமன்றே, இக்நாடகக் காப்பியத்தினுள் அறனும் பொருளும் இன்பமும் சிறிதாயினுங்கூறி, வீடு கூறிற்றிலர்; என்னெனின், 'யானறி குவனது பட்டது' என்று உரைத்த சாத்தனுர் நாற்பொருளும் பயப்பப் பெருங்காப்பியமாகச் செய்யக்கருதியிருக்கின்றுர்க்கு, அடிகள் 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுன்' என உளப்பாட்டுத் தன்மையாற்கூறச், சாத்தனுர், இவர் ஏனையிருவேந்தரையும் புகழ்ந்துரையாரென்பது கருதி, 'மூவேந்தர்க்கும் உரியதாகலின் நீரே யருளுக' என்று ஏகாரவினுப் பொருண்மையான் அவர் கருத்து நிகழ்ச்சி விளங்குவான்கூற, அவர் அதனையே துணிந்து, தமது முத்தமிழ்க் கல்வியும், வித்தகக் கவியும் காட்டுதற்குத், தாம் வகுத்துக்கொண்ட மூவகையுள்ளுறையின் விளைவு தோன்ற, மங்கலவாழ்த்துப் பாடல் மூதல் வரந்தருகாதையிறுதி முப்பது வகைத்தாக வரையறுத்து, அதனை அதிகாரமாகப் பொதிந்து வைத்துப், பின்னர், அறனும் பொருளும் இன்பமுங் கூறி, அடைக்கலக் காதை யிறுதிக்கண் 'போதியறவோன்றன் மூன், மணிமேகலையை மாதவியளிப்பவும்' எனக் கோவலன் முன் கண்ட கனவின் கண்

நிகழ்ந்ததை எதிர்கால நிமித்தமாக மாடலற்குக் கூறுதலானும்,..... வாழ்த்தின்கண் ‘மாதவி தன்றுறவுங் கேட்டாயோதோழி, மணி மேகலை துறவுங்கேட்டாயோதோழி’ எனத் தேவந்தி கூறுதலானும், ...(பிறவற்றானும்) மணிமேகலை துறந்தாளென்பதுணர்ந்து, அத்துறவினைப்பின்வைத்து அதனோடு நாற்பொருளும் பூரித்துப் பெருங் காப்பியமாக முடித்தலிக்கருதி, அடிகள் சாத்தனுர்க்கு இவ்வுரையை யுரைத்துழி, அவர் மணிமேகலை பெயரான் அவள் துறவே துறவாக அறனும் வீடும் பயப்ப ஓர் காப்பியஞ் செய்தமைத்தனனெனக்கேட்டு, அவ்வடிகள் விரும்பி இவ்விரண்டினையும் ஒரு காப்பிய மாக்கி உலகின் கண் நடாத்துவான் வேண்டவும், இருவர் செய்தலின் இரண்டாக நடந்தனவென்க’’ என்பதும், “இது நாற்பொருளுள்ளும் அகத் தினைக் கண்ணது இன்பமாகலானும், புறத்தினைக் கண்ணது பொரு ளும் அறனுமாகலானும் வீடொழிந்த முடிபு கூறி நின்றது. அதனு னன்றே ‘மணிமேகலை மேலுரைப் பொருண் முற்றிய சிலப்பதிகாரம்’ என்பாரானதுவுமென்க’’ என்பதும் ஆம்.

சிலப்பதிகாரம் அறம் பொருளின்பமென்னும் மூன்றும் பயப்ப தென்பதும், மணிமேகலை அறமும் வீடும் பயப்பதென்பதும் அடியார்க்கு நல்லார் கருத்தாதல் பெறப்படும். சிலப்பதிகாரத்தில் வீடு விரித் துரைக்கப்படாமையின் அங்ஙனம் கருதினர்போலும். அக்காப்பிய மானது தமிழியன்மரபு பிறழாமற் செல்வது.

> “அந்நிலை மருங்கின் அறமுதலாகிய
> மும்முதற் பொருட்கு முரியவென்ப”— என்னும்

தொல்காப்பியச் சூத்திரத்தையும், “உலகியற்பொருள் மூன்றனையும் கூறுவான் அவற்றை மும்முதற் பொருளென்றுன், அவையின்றி வீடு பெறுமாறு வேறின்மையின் வீடும் ஆண்டுக் கூறினனென்பது’’ எனப் பேராசிரியரும், “உலகியற் பொருள் மூன்றனையும் கூறி, அவற்றை விடுமாறுங் கூறவே வீடுங்கூறிற்றும்’’ என நச்சினர்க்கினியரும் உரைத் திருப்பவற்றையும் நோக்குழி, சிலப்பதிகாரத்தில் வீடும் கூறப்பட்டுள தென்பதே தேற்றமாம். எனினும் மும்முதற் பொருள்களின் நிலையாமை யுணர்ந்து, அவற்றைப் பற்றறத் துறந்து, மெய்யுணர்தலே வீடு பேற்றிற்கு நிமித்தமென்பது எல்லா ஆசிரியர்க்கும் ஒப்பமுடிந்த தொன்றுகலானும், சிலப்பதிகாரக் காப்பியத் தலைவனுகிய கோவலன் கொலையுண்டிறந்தமையானும், தலைவியாகிய கண்ணகியும் அவனெடு துறக்கம் புக்கமையானும், துறவுமெய்யுணர்வுகளை அவர்கள் வாயிலாக வெளிப்படுத்தற்கு இடனின்றிப் போயினமையின், இளங்கோவடிகள் வீட்டின் நிமித்தத்தை விரித்துரைக்க மாட்டாராய், அதனை ஓராற்று ணுணருமாறு மணிமேகலை துறவைக் குறிப்பிட்டுச் சென்றனர் என்க. பண்டை ஆசிரியன்மார்கள் நிலையாமை, துறவு, மெய்யுணர்வு, அவா வறுத்தல் என்பவற்றுள் ஒன்றை வீட்டிற்கு நிமித்தமாகக் கூறும் பொழுது பிறவற்றையும் அதனுளடக்கியே கூறிப் போதருவாராயினர்.

வள்ளுவனார் துறவறம் என்ற பகுதியில் இந்நான்கனையும் சேரவைத்துக் கூறியிருத்தலும், அவர் நீத்தார்பெருமை கூறுகின்றுழி ஐந்தவித்தல், யோகப்பயிற்சி, தத்துவவுணர்வு என்பவற்றை யெடுத்தியம்பலும் உணர்தற் பாலன. இனி, மணிமேகலை அறமும் வீடும் பயப்பதாம் என்ற அடியார்க்குநல்லார் கூற்று, முற்றிலும் பொருந்துவதே. இக் கதைக்கு நாயகியான மணிமேகலையும், ஆபுத்திரன் என்பானும் அமுத சுரபியென்னும் வற்றாது சுரக்கும் பாத்திரங்கொண்டு,

"காணார் கேளார் கான்முட மானோர்
பேணாமாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பிகள் பசிநோயுற்றோர்"

'யாவரும் வருக வென்றிசைத்து' அவர்களுக்கு அமுதூட்டி உயிர்களின் பசிப்பிணியைப் போக்கியதும், மணிமேகலை வேற்றுருக்கொண்டு தெரிவித்தவாறு, அரசனாகிய மாவண்கிள்ளி, சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக்கியதும் முதலிய அறச்செயல்கள் இதன்கண் கூறப் பட்டிருத்தலின் இஃது அறத்தினைப் பயப்பதென்பது தேற்றமே. இரு வினையும் பிறவிக்கேது வாகலின் துறவுபூண்டு வீடெய்தும் நெறியில் நிற்கும் மணிமேகலை அறஞ்செய்தல் பொருந்துமோவெனின், ஞான வேதுவாய அறவினைகள் துறந்தோரானும் செய்யப்படுமென்பதே ஆன்றோர் துணிபாம்.

"அற்காவியல் பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்"

என்னும் தமிழ் மறையும், "அதனாற் செய்யப்படும் அறங்களாவன:— பயனோக்காது செய்யப்படும் கடவுட் பூசையும், தானமும் முதலாயின. அவை ஞான வேதுவாய் வீடுபயத்தலின் அவற்றை 'அற்குப' என்றும், 'செய்க' என்றும் கூறினார்" என்னும் பரிமேலழகர் கூற்றும் அதனை வலியுறுத்துமாறு காண்க. மணிமேகலை துறவுபூண்டு தவ வொழுக்கத்தை மேற்கொண்டிருந்ததும், மெய்ப்பொருளை யுணர்தற் பொருட்டு ப்பல்வேறு சமயங்களின் கொள்கைகளைக் கேட்டுணர்ந்ததும், அறவணவடிகளை யடைந்து தவத்திறம்பூண்டு தருமங்கேட்டதும், பவத்திற மறுகென நோற்றதும் முதலியவற்றால், இந்நூல் வீடு பயப்ப தென்பது போதரும்.

பண்டைச் சான்றோர்கள் துறவினை வீட்டிற்கு நிமித்தமாகக் கூறு மிடத்துச் சமயவேறுபாடுகளைக் கருதினாரல்லர். எச்சமயத்தாராயினும் பற்றற்றவர் துறந்தோராவரென்பதும், அவர் வீடுபேறெய்தற்குரியர் என்பதும், அன்னார் கொள்கையாம். மெய்யுணர்தல் என்பது ஆசிரியன்பால் மெய்ந்நூற் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிதல் என்று கொண்டனரேயன்றி, இன்ன சமயநெறியில் நின்று மெய்ப் பொருளையுணர்வது மெய்யுணர்வாம் எனக்கருதினாரல்லர். துறவு மெய் யுணர்வுகளைப் பற்றித் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் கூறியுள்ளன வும், ஆண்டாண்டுப் பரிமேலழகர் வரைந்திருக்கும் உரைகளும் இவ்

வுண்மையைத் தெளிவுறுத்தல் காணற்பாற்று. சிலப்பதிகாரத்தில், கோவலன், கண்ணகி யென்பவர்கள் சமண்சமய நெறியில் ஒழுகினராகக் கூறப்பட்டிருக்கவும், கோவலன் மகளாகிய மணிமேகலை புத்தசமய நெறியில் ஒழுகினளாக இந்நூல் கூறுவதும், இளங்கோவடிகளும், சாத்தனாரும் ஒருவர்முன் ஒருவர் தாம்தாமியற்றிய இக்காப்பியங்களைக் கூறிக்கேட்பித்ததும், இவ்விருகாப்பியங்களையும் அவர்கள் ஒன்றாக நோக்கினமையும், யாம் முற்கூறியாங்கு அவர்கள் சமயவேறுபாடு கருதிற்றிலர் என்பதனை விளக்கும். சாத்தனார் சமயக்கணக்கர் தந்திறங்கேட்டகாதையில் அக்காலத்து வழங்கிய சைவம், வைணவம், பிரமவாதம், வேதவாதம் என்பனவும், சமண்மதத்தின் பிரிவுகளாகிய ஆசீவகம், நிகண்டம் என்பனவும், சாங்கியம், வைசேடிகம், பூதவாதம் என்பனவும், அளவைவாதம் என்பதனுள்ளே உலோகாயதம், மையாயிகம், மீமாஞ்சகம் முதலாயினவும் ஆகிய பல்வேறுசமயங்களின் இயல்புகளையும் தொகுத்து உணர்த்தியிருப்பதும், தவத்திறம்பூண்டு தருமங்கேட்ட காதையில், பிரத்தியக்கம், அநுமானம் என்னும் அளவைகளினியல்பைக் கூறப்புக்கு, அநுமானத்தை மிக விரித்துரைத்திருப்பதும், பவத்திறமறுகெனப் பாவைநோற்ற காதையில் புத்தசமயத்தின் தத்துவங்கள், கொள்கைகளனைத்தையும் தெளிவுற விளக்கியிருப்பதும் பல சமய நூல்களினும், தருக்கம் முதலியவற்றினும் அவருக்கிருந்த பரந்த புலமையை வெளிப்படுப்பனவாகும். அதனாற்றான் "தண்டமிழாசான்" என்று இவரை இளங்கோவடிகள் புகழ்ந்துரைத்தாராவர். ஆசிரியர் என்னும் சிறப்புப்பெயரை இங்ஙனம் பலகலைகளினும் வல்லுநராயுள்ளோர்க்கே முற்காலத்தறிஞராயோர் கொடுத்து வழங்கினர் என்பது, "ஆசிரியர் நல்லந்துவனார்" என்பது முதலிய வழக்குகளால் அறியலாகும். பலசமயவுண்மைகளையும், அளவைகளினியல்புகளையும் அவற்றினிலக்கணங்கூறும் முறையால் முதல்முதலாகத் தமிழில் வெளியிட்டருளிய பெருமை சாத்தனாருக்கே யுரியதாகும்.

மணிமேகலையானது காப்பியவியல்புகளனைத்தும் வாய்ந்த பெருங்காப்பியமாகுமா என்னும் ஆராய்ச்சியில் அஃது உறுதிப் பொருள் நான்கனுள் அறமும் வீடுமே பயப்பதாகும் என்பது இதுகாறும் கூறப்பெற்றது. இனி, தன்னிகரில்லாத் தலைவனையோ தலைவியையோ இஃதுடையதோ என்று நோக்குழி, இக்காப்பியத் தலைவியாகிய மணிமேகலை தவநெறியிலொழுகி அறம்புரிந்து குரவர்பால் உறுதிமொழிகளைக்கேட்டதவமாது என்பதன்றி, வேறு உலகியல் நெறியாற் கூறப்படுதற்குரிய பெருமை யொன்றும் காணப்படவில்லை. மற்று, காப்பியத்திற்கு இன்றியமையாத சுவையும், பாவமும் இதன்கண் எங்ஙனம் விளங்குகின்றன என்பதனை நோக்குதல்வேண்டும். காப்பியங்களில் இராமாயணம்போன்ற சில, சுவைமிக்க கதையமைதியினாலேயே கற்போருள்ளத்தை ஈர்க்குமியல்பின. அதன்மேற் பாவேந்தர்களின் பாடற்றிறமும் சேரும்பொழுது அவற்றின் சுவைகள் அளவில்லாதனவாய் விஞ்சுகின்றன. இந்நூலிலோ கதையமைப்பில் அத்தகைய சுவை

யொன்றும் தோன்றுதற்கு இடனில்லை. மற்றும், பலசமய உண்மை களையும், அளவைகளையுங் கூறுமிடத்துச் சுவையென்பது சிறிதும் காணப்படுமாறில்லை. அவ்விடங்களில் ஆசிரியர் சமயநூற் பொருண்மைகளைச் செய்யுள்வடிவில் யாத்தமைத்தது அருமைப்பாடே யெனினும், கவிதையால் முகரப்படும் சுவை மெய்ப்பாடுகளும், சொற் பொருளின்பங்களும் ஆண்டுச்சிறிதும் பெறப்பட்டில. காப்பியத்தின் இறுதிப்பகுதி இவ்வியல்பிற்றாய் முடியினும் இக்கதையுள்ளும் ஏனைப் பகுதிகளிலே பாவலர் விருந்தாம் நீஞ்சுவைச் செஞ்சொற்கவியின்பம் செறிந்து திகழுமாறு பாட்டியற்றிய சாத்தனாரது புலமைமாண்பு எத்துணையும் பாராட்டற் குரியதாம். அத்தகைய இன்பகுதியுள் ஒரோ சில இறுதிக்கட் காட்டப்படும்.

இனி, இவ்வாசிரியரால் இதன்கண் வெளிப் படுத்தப்பெறும் உண்மைகள் யாவையென நோக்குதும். காப்பியத்தலைவியான மணி மேகலை முதலானோரின் வரலாறுகளே ஓர் உள்ளுறையை உடையன போலத் தோன்றுகின்றன. பரதகண்டத்தின் வடகோடியிலே காந் தாரநாட்டின் கீழ்பாலுள்ள தேயங்களில் இரவிவன்மன் என்னும் வேந்தனுக்குப் புதல்வியராய்த் தோன்றி, இரண்டு அரசிளந் தோன்றல் களுக்கு வாழ்க்கைத்துணைவியராய்ப்புக்க தாரை, வீரை, இலக்குமி என்னும் மகளிர் மூவரில், மூத்தவளாகிய தாரையும், இளையளாகிய இலக்குமியும் மறுபிறப்பிலே சோணாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்தில் மாதவி என்னும் நாடகக்கணிகையாகவும், அவள் மக ளாகிய மணிமேகலையாகவும் பிறந்திருக்கின்றனர். வீரை என்பவளோ சண்பைநகரத்தில் ஓர் அந்தணனுக்கு மகளாய்த்தோன்றி, விஞ்சைய னொருவனால் வௌவிக்கொண்டு வந்து புகார் நகரில் விடப்பட்டு, மாதவிக்குத் தோழியாகின்றாள். இலக்குமிக்குக் கணவனையிருந்து திட்டிவிடம் என்னும் பாம்பால் உயிர்துறந்த இராகுலன் என்னும் ஏந்தல் காவிரிப்பூம்பட்டினத்தில் நெடுமுடிக்கிள்ளி யென்னும் சோழ மன்னனுக்குப் புதல்வனாய் உதயகுமரன் என்னும் பெயருடன் தோன்றி மணிமேகலையைக் காதலிக்கின்றான். இங்ஙனம் வடாது நாட்டிலே ஒருங்கு பிறந்து வாழ்ந்துவந்த சிலர் தமிழ் நாட்டிலே ஒருசேர மறுபிறப் புற்று வாழ்தலாகிய இவ்வரலாறு, புத்தமதமானது முதற்கண் வட நாட்டிற்றோன்றிப் பின் தமிழ் நாட்டில் இடம் பெற்ற உண்மையைக் குறிப்பின் உணர்த்துவதுபோலும்? மணிமேகலையானவள் மணிபல்ல வம் என்னுந்தீவையடைந்து, ஆங்குள்ள புத்த பீடிகைக் காட்சியால் தனது பழம் பிறப்பின் வரலாற்றையறிவது தமிழ் நாட்டிற் புத்தமதம் பரவுதற்கு முன்னரே இலங்கையில் அது வேரூன்றியதனைப் புலப் படுத்தற்குரியது. இரத்தினத்தீவஞ்சென்று அறவாழியுருட்டிவந்த சாதுசக்கரன் என்னும் பௌத்தசாரணமுனிவனை மணிமேகலையின் மூற்பிறப்பினளாகிய இலக்குமி வழிபட்டாள் என்னும் செய்தியும் இதனை வலியுறுத்துவதாகும். இன்னும் இவ்வரலாறுகளிலிருந்து, பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும் பிறழா உண்மையா

மென்பதும், இறந்தவுயிர்கள் மறுமைக்கண் பற்றின்வழியே தொடர் புடைய பிறவிகளை யடையும் என்பதும், ஊழ்வினை பயனூட்டுதல் ஒருதலை யென்பதும், மற்றும் இவை போல்வனவுமாகிய சமயக்கோட் பாடுகள் வெளிப்படுத்தப் படுதலும் காண்க.

உயிர்கட்கு ஒரு பிறப்பிலுள்ள கெழுதகைமை அல்லது சம்பந்தம் பல பிறப்பினும் தொடர்ந்து வருவதுண்டு என்பது, காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள உலகவறவி எனும் அம்பலத்தில் உதயகுமரன் காஞ்சனன் என்னும் விஞ்சையனால் வெட்டுண்டபொழுது வருந்திப் புலம்பிக்கொண்டு அவனருகே சென்ற மணிமேகலையை நோக்கி, ஆண்டு ஓர் தூணின்கண் உறைந்த கந்திற்பாவை யென்னுந்தெய்வம்

> "நினக்கிவன் மகனுத் தோன்றிய தூஉம்
> மனக்கினியாற்கு நீ மகளாய தூஉம்
> பண்டும் பண்டும் பலபிறப்புளவால்
> கண்ட பிறவியே யல்ல காரிகை"

என்றுரைத்து அவளை அவனருகே செல்லாது தடுத்தது என்னும் வரலாற்றால் வலியுறுத்தப்படுமாறும் ஓர்க.

இங்ஙனம் எத்தனையோ பல பிறவிகளிற் கணவனும் மனைவியு மாயிருந்து வந்த வரலாற்றை இத்தெய்வம் அறிந்து கூறியது பெரிதும் இறும்பூது விளைக்கின்றது. கந்திற்பாவை மணிமேகலைக்குக் கூறியது இதுமட்டுமோ! அவள் இப்பிறப்பில் இனிச் செய்யவிருக்குங் காரியங் களை நிரலேயுரைத்து வந்து, முடிவிலே அவள் காஞ்சி நகரத்தை யடைந்து அறவணவடிகள்பால் அறவுரைகேட்டு அறங்கள் பலவற்றை யும் புரிந்து உயிர்நீத்து மேல்வரும் பிறப்புக்களெல்லாம் உத்தரமகத நாட்டில் எய்துவள் என்றும், அவை யெல்லாம் ஆண் பிறப்பாகவே நிகழுமென்றும், அப்பிறப்புக்களொவ்வொன்றிலும் அருளறத்தின் வழுவாதொழுகி இறுதியிற் புத்ததேவனுக்கு முதல் மாணாக்கனாகும் பெரும்பேறுற்றுப் பற்றற்று முத்தியடைவள் என்றும் உரைத்தருளியது. இற்றைநாளினும் ஊர்களினும், வனமாதிய வற்றினும் உறையும் இரு பாலவாய தெய்வங்கள் பலவும்

> "புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்
> பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து"

தம்மை வழிபடுவார்க்கு மேல்நிகழ்ச்சிகளை ஓரோவழி அறிவித்துதவல் காண்டுமெனினும், அவை இத்துணைப் பேரறிவு விளக்கம் உடையவாதல் கண்டிலம். "மறுவில்செய்தி மூவகைக் காலமும், நெறியினுற்றிய அறிவர்" ஆகும் அமரமுனிவர்களும் இன்னணம் இடையிட்ட பல பிறவிகளுக்கப்பால் நிகழுஞ் செய்திகளையும் அறிந்து கூறினராகக் கேட்டதோ இலம். புகாரிலிருந்த மணிமேகலா தெய்வமென்பதொன் றும் முன்பு மணிமேகலையை உதயகுமரன் கையில் அகப்படாவாறு எடுத்துச்சென்று மணிபல்லவ மெனுந் தீவினுய்த்து, புத்த பீடிகைக் காட்சியால் அவள் பழம் பிறப்பின் வரலாறுகளை யுணரும்படிச் செய்தது.

இங்ஙனம் பல்வேறு தெய்வங்கள் முக்கால நிகழ்ச்சிகளையும் முற்ற வறியும் உணர்வுடையவாய் அரும்பெருஞ் செயல்கள் பலவற்றைச் செய்து போதருதல் பெருவியப்பே. மணிமேகலையிற் கூறப்பட்டுள்ள இத்தெய்வங்கள் புத்தசமயத்தின் மேம்பாட்டை யுணர்ந்து அச்சமய நெறியிலே மக்கள் ஒழுகுமாறு போதனை செய்வது இன்னும் பெருவியப்பாகவுள்ளது. தமிழ் நாட்டிலே புத்தமதம் பரவுதற்கு முன்னரே இத்தெய்வங்கள் அதன் உண்மைகளை நன்கு அறிந்திருந்தன போலும்! இத்தொடர் நிலைச்செய்யுளோ பிறிதொருமொழியினின்று மொழிபெயர்க்கப்பட்டதன்று. தமிழ் நாட்டிலே பிறந்து வாழ்ந் தோரின் வரலாறுகிய இதனை அக்காலத்தே விளங்கிய தமிழ்ப் புலவ ராகிய கூலவாணிகன் சாத்தனர் தமிழிலேயே முதன் முதலாக வெளிப் படுத்துள்ளார். அவர் மணிமேகலை முதலானவர்களின் முற்பிறப்பின் வரலாற்றையும், பின் பல பிறவிகளில் நிகழவிருக்கும் செய்திகளையும் இதிலே கூறியுள்ளார். பழம்பிறப்பையுணர்ந்த மணிமேகலை முதலாயி னோர் வாயிலாகவே இவ்வுண்மைகள் சாத்தனரால் அறியப்பெற் றனவோ, அன்றி அன்னோர்க்கு அவற்றை யறிவுறுத்த தெய்வங்கள் தாம் அவருக்கு முணர்த்தினவோ அறிகிலம்!

இனி, கடைச்சங்கத்து இறுதிநாளிலேயே சமண புத்தமதங்கள் தமிழ நாட்டிலும் புகார், மதுரை, வஞ்சி முதலிய நகரங்களிலேயே அவற்றைப்பரப்பும் முயற்சிகள் நிகழ்ந்து வந்தனவென்பதும், நகருக்கு வெளியே எயிலின்புறத்தேயே அருகர் புத்தர் பள்ளிகளும், கோட்டங் களும் இருந்தனவென்பதும் சிலப்பதிகாரத்தாலும், இந்நூலாலும் அறியப்படுவனவாம். அந்நகரங்களிலே பலசமயங்களையும் உணர்ந்த பாசண்டிகளும், சொற்போராளரும் இருந்துவந்தனர் என்னும் உண்மையைப் புகாரில் இந்திரவிழாவைத் தெரிவித்து முரசறைபவன்,

"ஓட்டிய சமயத்துறுபொருள் வாதிகள்
பட்டிமண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்"

எனவுரைத்தாங்கே கூறியிருப்பதும், வஞ்சிமாநகரிலே சமயவாதி களிடத்தே பலசமயக் கோட்பாடுகளையும் மணிமேகலை கேட்ட செய்தி யும் உணர்த்தாநிற்கும். அந்நாளிலே பல சமயத்தவரும் சமயப்பூசல் என்பதின்றியே கலந்து வாழ்ந்து வந்தனர் என்பதும், அவர்களில் யாரும் எச்சமயத்தையும் இகழ்ந்துரைத்திலர் என்பதும் சிலப்பதிகாரத் தானும் ஏனைச் சங்கச் செய்யுட்களானும் புலனுகின்ற வுண்மைகளாம். எனினும் இக்காப்பியத்திலேதான் புத்தசமயத்தை மேன்மைப்படுத்தும் பொருட்டுப் பிறசமயத்தை இகழ்ந்துரைத்தலாகிய சமயவெறுப்புச் சிறிதே அரும்பியுள்ளமை காணப்படுகின்றது. சுதமதியின் தந்தை யாகிய கௌசிகனென்னும் அந்தணன் புகார்நகரிலே தன்மகளைக் கண்டு அவளுடன் பிச்சையெடுத்ததற்குச் செல்லும்பொழுது ஓர் புனிற்று வானது பாய்ந்து வயிற்றைக் கிழித்துவிட, அதனுற்சரிந்த குடரைக் கையிலேந்திக்கொண்டு, சுதமதி முன்பிருந்த சமணப்பள்ளியை யடைந்து அங்கிருந்த முனிவர்கள்பால் அடைக்கலம் புகாநிற்கவும்,

அவர்கள் சினத்துடன் அவனையும் சுதமதியையும் புறத்தே தள்ளி விட்டனரென்றும், பின்பு அவ்விருவரும் 'எம்மைப் பாதுகாக்கும் அறவோருண்டோ' என்று புலம்பிக்கொண்டு சென்றபொழுது சங்க தருமன் என்னும் புத்தமுனிவன் பேரிரக்கத்துடன் அவ்வந்தணனைத் தழுவி யெடுத்துச்சென்று பௌத்த சங்கத்தார் இருப்பிடத்தையடை வித்து, அவனது இறப்புத்துன்பத்தைப் போக்கியதுடன் சுதமதிக்குப் புத்ததேவனுடைய பெருமைகளை அறிவுறுத்தினனென்றும் கூறப் பட்டுள்ள செய்தி, சமணராவார் இரக்கமற்றவர் என்றும், பௌத்தர் கள் அருளிற்சிறந்தோர் என்றும் கருதச்செய்யும் எடுத்துக்காட்டாகத் தோன்றுகிறது. மற்றும், மணிமேகலை பலசமய வுண்மைகளையுங் கேட்டு, முடிவில் புத்தசமயமே சிறந்ததாகக் கொண்டு அக்நெறியில் ஒழுகினளாக இந்நூல் கூறுவதும் பிறசமயங்களையெல்லாம் குறிப்பின் எள்ளுவதாகவே தோன்றுகிறது.

இனி, இக்கதையில் வந்துள்ள தெய்வங்களைப்போலவே இதிற் கூறப்பட்டுள்ள புத்தசமயத்தறவோரும் அளவிடப்படாத பெருமை யுடையராய்த் திகழ்கின்றனர். மணிமேகலைக்கு அறத்தினை யறிவுறுத் தும் ஆசிரியராகிய அறவண அடிகள் என்பார் எத்தனையோ பல பிறவிகளின் பின்னிகழும் நிகழ்ச்சியையும் முன்னறிந்து கூறுகின்றார். மற்றும் பீடிகைக் காட்சியாலும், மந்திரங்களாலும் பழம்பிறப்புணர் தலும், வேற்றுருவெய்தலும், வான்வழிச்சேறலும் முதலிய பேறுகள் இச்சமயத்தார்க்கு எளிதில் வாய்க்கின்றன. இவற்றையெல்லாம் நோக்கின் புத்தசமயத்தைப் பரப்புதற்குரிய முயற்சி அந்நாளில் எவ் வளவு சதுரப்பாட்டுடன் மேற்கொள்ளப் பெற்றுளதென்பதும், சாத்த னர் அச்சமய வளர்ச்சிக்குப் புரிந்தபணி எத்தகைத்தென்பதும் புலனும்.

மற்றும், காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வாணிகத்தின் பொருட் டுக்கடலிற் சென்று கப்பல் கவிழப்பெற்ற சாதுவன் என்னும் வணிகன், நாகர்மலையையடைந்து அங்கிருந்த உடையில்லாதோரும், மக்கள் ஊனை யுண்ணுமியல்பினரும் ஆகிய நாகர்களுக்குக்கள்ளுண்டல், உயிர்க்கொலை என்னும் பாவங்களை ஒழிக்குமாறும், அறஞ்செய்யுமாறும் அறிவுறுத்தி நல்வழிப்படுத்தினன் என்னும் வரலாறுனது புத்த சமயத்தினர் எங்க ணும் தமது சமயத்தை நிலை நிறுத்துதற்கு எவ்வாறு முயன்றார் என்ப தனையே அறிவுறுத்துவதாகும். நாகர் என்பார் பண்டை காளிலே பரத கண்டத்தின் வடக்குப் பகுதியிலும், கிழக்கிலுந் தெற்கிலுமுள்ள தீவுகளிலும் வதிந்து வந்தோரென்றும், நாகரிகத்திலும் தெய்வபக்தி யிலும் மேம்பட்டவர்களென்றும் புராண இதிகாசங்களாலும் பிறவற்று லும் அறியப்படுகின்றது. மிக இழிந்த நிலையிலுள்ளோரையும் பௌத் தர்கள் தங்கள் சமயத்திற்சேர்த்து நல்வழிப்படுத்தினர் என்று காட்டு வது கருதியோ, அன்றி, உண்மையாகவே நாகரில் ஒருசாரார் ஒரோ வழி இங்ஙனம் தாழ்ந்த நிலையில் இருந்தமையாற்றானே நாகர்மலையி லிருந்த நாகர்கள் இங்ஙனம் இழித்துரைக்கப்பட்டுள்ளார் ? எனினும், முதுமையுற்று இறந்த விலங்குகளின் ஊனை உண்ணுமாறு நாகர் தலை

வனுக்கு அவன்போதிப்பது, கொலையே பாவம், ஊனுண்டல் பாவமன்று என்னும் புத்த மதக்கொள்கை அப்பொழுதே இருந்ததுபோலும் எனக் கருதுதற்கேதுவாயுளது. இக்கொள்கை புத்தமதத்திற்குப் பெரியதோ ரிழுக்காகும் என்பதில் ஐயமில்லை.

இனி, பல்லாற்றானும் புத்த சமயத்தின் மேம்பாட்டைக் கிளப்பதற் கென்றெழுந்தது இக்காப்பியமாகலின் இதிற் கூறப்படும் அச்சமயக் கொள்கைகளிற் சிலவேனும் ஈண்டு எடுத்துக் காட்டப்படுதல் பொருத்த மாம். ஆடவரேயன்றி மகளிரும் துறவுபூண்டு தவவொழுக்கத்தை மேற்கொள்ளுதற்கும், வீடடைதற்கும் உரியர் என்பது புத்தர்கொள்கை. அது மணிமேகலையின் துறவு கூறுமுகத்தால் இந்நூலின்கண் உடம் பொடு புணர்த்து அறிவுறுத்தப் பெற்றுள்ளது. பிறப்புத் துன்பமென்ப தும், பிறவாமையே இன்பமென்பதும், பிறவியானது பற்றினாலுண்டா கின்றதென்பதும், பிறவாமையானது பற்றறுதியினாலுளதாவ தென் பதும் அச்சமயத்தின் கொள்கைகள். இவை நான்கும் நால்வகை வாய் மையென்று கூறப்படும்.

> "துன்பம் தோற்றம் பற்றே காரணம்
> இன்பம் வீடே பற்றிலி காரணம்
> ஒன்றிய வுரையே வாய்மை நான்காவது"

என்றும்

> "பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
> பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
> பற்றின் வருவது முன்னது பின்னது
> அற்றோ ருறுவது"

என்றும் இந்நூலில் வாய்மை நான்கும் கூறப்பட்டுள்ளமை காண்க. பிறப்பாகிய துன்பத்தையும், அதன் காரணத்தையும் விளக்குதற்குக் காரண காரிய முறைமையால் ஒன்றொன்றைச் சார்ந்து தோன்றுவன வாகிய பன்னிரு நிதானங்களென்னும் பெயருடைய பன்னிரண்டு தத்து வங்கள் இந்நூலிற் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன் என்பனவாம். இவற்றில் பேதைமையென்பது அறியாமையாகும். செய்கையாவது கன்மம். உணர்வு என்பது உள்ளம் அல்லது விஞ்ஞானம். அருவுரு என்பது உயிருள்ள உடம்பு. வாயில் எனப்படுவன ஐம்பொறிகளும் மனமும். ஊறு என்பது பொறிகள் புலன்களை உறுவது. நுகர்வு என்பது சுக துக்க அனுபவம். வேட்கையாவது இன்பத்தையடையவேண்டும் என்றும் துன்பத்தையொழிக்க வேண்டுமென்றும் உளதாகும் அவா. பற்று இன்பத்தைக் கொடுக்கும் பொருள்களை இறுகப்பற்றி நிற்பது. பவம் என்பது மறுபிறப்புக்கு மூலமாகிய கன்ம ஈட்டம். தோற்ற மென்பது கன்மங்களுடன் பொருந்திய உள்ளம் பல்வகைக் கதிகளிற்

பிறக்கும் பிறப்பு. பிணி மூப்புச் சாக்காடு முதலியன விளைப்பயனாகும். இவை ஒன்றையொன்று சார்ந்து உண்டாகும் முறைமை,

"பேதமைசார்வாச் செய்கையாகும்
செய்கை சார்வா வுணர்ச்சியாகும்
உணர்ச்சி சார்வா அருவுருவாகும்
அருவுருச் சார்வாவாயிலாகும்
வாயில் சார்வா ஊறுகும்மே
ஊறு சார்ந்து நுகர்ச்சியாகும்
நுகர்ச்சி சார்ந்து வேட்கையாகும்
வேட்கை சார்ந்து பற்றுகும்மே
பற்றிற் றோன்றுங் கருமத்தொகுதி
கருமத்தொகுதி காரணமாக
வருமே யேனை வழிமுறைத்தோற்றம்
தோற்றஞ் சார்பின் மூப்புப்பிணி சாக்கா
டவல மரற்றுக் கவலை கையாறெனத்
தவலில் துன்பந் தலை வருமென்ப"

என இந்நூலில் விளக்கப் பெற்றுள்ளது. இப்பன்னிரண்டில், உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, பிறப்பு என்பனவும், பிணிமூப்புச் சாக்காடு, அவலம், அரற்று, கவலை, கையாறு என்னும் விளைப் பயனும் ஆகிய ஏழும் தோற்றமெனப் படுந்துன்பமும், பேதைமை, செய்கை, வேட்கை, பற்று, பவம் என்னும் ஐந்தும் அதன்காரணமும் ஆகும். இனி,

"பேதைமை மீளச் செய்கை மீளும்
செய்கை மீள வுணர்ச்சி மீளும்
உணர்ச் சிமீள அருவுரு மீளும்
அருவுரு மீள வாயின் மீளும்
வாயின் மீள ஊறு மீளும்
ஊறு மீள நுகர்ச்சி மீளும்
நுகர்ச்சி மீள வேட்கை மீளும்
வேட்கை மீளப்பற்று மீளும்
பற்று மீளக் கருமத்தொகுதி
மீளும் கருமத்தொகுதி மீளத்
தோற்ற மீளுந் தோற்ற மீளப்
பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச்
சாக்காடவல மரற்றுக் கவலை
கையா றென்றிக் கடையி றுன்பம்
எல்லா மீளும்"

எனத்துன்ப நீக்கம் கூறப்பெற்றுளது. துன்ப நீக்கத்திற்குரியநெறி நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன் முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு என்னும் எட்டு மாம் என்பர். பிறவித்துன்பத்தினின்றும் நீங்குதற்கு இவற்றை

யடைந்து கடைப்பிடித்தலோடு தானமுஞ் சீலமும் உடையராதல் வேண்டும். "தானந்தாங்கிச் சீலந்தலை நின்று" எனவும் "ஐவகைச் சீலத்து அமைதியுங்காட்டி" எனவும் இந்நூலுட் கூறப்படுதலுங் காண்க. ஐவகைச் சீலமாவன காமம், கொலை, கள், பொய், களவு என்னும் இவ்வைந்தையும் முற்றத்துறத்தல்.

"கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும்
உள்ளக் களவு மென்றுரவோர் துறந்தவை"

என்று இந்நூல் கூறுகின்றது. இவ்வைந்தனோடுவேறு மூன்றும் ஐந்தும் கூட்டிச் சீலம் எட்டென்றலும் பத்து என்றலும் உண்டு.

இனி, உயிர்கள் எய்தும் பிறப்பு மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய் என அறுவகைப்படுமென்பதும், நல்வினைசெய்த உயிர்கள் மக்கள், தேவர், பிரமர் ஆகிய கதிகளிற் பிறந்து இன்புறுமென்பதும், தீவினைசெய்த உயிர்கள் நரகர், விலங்கு, பேய் என்னும் கதிகளிற் பிறந்து துன்புறுமென்பதும், தீவினையாவன—கொலை, களவு, காமம், என உடம்பிற்றோன்றுவன மூன்றும், பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என உரையிற்றோன்றுவன நான்கும், வெஃகல் வெகுளல் மயக்கம் என உளத்திற்றோன்றுவன மூன்றும்—ஆகிய பத்துமாம் என்பதும், நல்வினையாவன சொல்லப்பட்ட பத்துவகைத் தீவினையினும் நீங்கிச் சீலந்தாங்கித் தானந் தலைநிற்றலாம், என்பதும் புத்தநூற் றுணிபு. இவை,

"தீவினை யென்ப தியாதெனை வினவின்
ஆய்தொடி நல்லாய் ஆங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழை
வுலையா வுடம்பிற் றோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொற் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
றுள்ளந் தன்னி னுருப்பன மூன்றுமெனப்
பத்து வகையாற் பயன்றெரி புலவர்
இத்திறம் படரார் படர்குவ ராயின்
விலங்கும் பேயும் நரகரு மாகிக்
கலங்கிய வுள்ளக் கவலையிற் றோன்றுவர்
நல்வினை யென்பதி யாதென வினவிற்
சொல்லிய பத்தின் றொகுதியி னீங்கிச்
சீலந்தாங்கித் தானந் தலை நின்று
மேலென வகுத்த வொருமூன்று திறத்துத்
தேவரும் மக்களும் பிரமரு மாகி
மேலிய மகிழ்ச்சி விளைப்பய னுண்குவர்"

என இந்நூலுட் கூறப்படுதல் காண்க. மற்றும், துன்பத்திற்கெல்லாம் காரணமாகிய மூக்குற்றங்களில் காமத்தை, உடம்பு நிலையில்லது,

துன்பத்திற் குறைவிடமானது, உயிரின் வேறுயது, அருவருக்கத் தக்க அழுக்கு நிறைந்தது என்று பாவிக்கும் அசுப பாவனையாலும், வெகுளியை, எல்லா வுயிர்களிடத்தும் அன்பு செய்தலும், இரக்கங் கொள்ளுதலும், அவற்றின் ஆக்கத்திற்கு மகிழ்தலும் ஆகிய மைத் திரி, கருணை, முதிதை என்னும் பாவனைகளாலும், மயக்கத்தைக் கேள்வி விமரிசம் பாவனையென்னும் உபாயங்களாலும் ஒழிக்கவேண்டு மென்றும் இதிற் கூறப்பட்டுளது. காணப்படுகின்ற எல்லாப்பொரு ளும் உயிரும் உருவம், நுகர்ச்சி, குறி, பாவனை உணர்வு என்னும் ஐந்தின் ஈட்டமேயென்பதும், இவையெல்லாம் கணந்தோறும் தோன்றி யழியும் என்பதும் பௌத்த நூற்கொள்கை. இவற்றுள் உருவமென் பதில் நிலம், நீர், தீ, வளி என்னும் நான்கு பூதங்களும், உடம்பும், புலன்களும் அடங்கும். நுகர்ச்சியாவது இன்ப துன்ப அனுபவம். இது வேதனையென்றும் கூறப்படும். ஐம்பொறிகளும் மனமும் குறி யென்று கூறப்படும். மனமொழி மெய்களால் உண்டாகும் நல்வினை தீவினைகள் பாவனையாகும். இது செய்கையெனவும் வாசனையென வும் கூறவும்படும். உணர்வாவது விஞ்ஞானம் ஆகும். உருவ முத லியவற்றோடு கூடிய விஞ்ஞானமே ஆன்மாவாமெனவும், அது நீரோட் டம்போலச் சந்தானமாய்க் கணந்தோறும் தோன்றியழியும் எனவும், அங்ஙனம் அழியுமேனும் முற்கணத்தின் அழிவெய்தும் ஞானத்திற் றோன்றிய வாசனை பிற்கணத்திற்றோன்றும் ஞானத்திற் பற்றுதலால் அறிவு முதலாயின நிகழும் எனவும், இவ்வைந்தும் சந்தானமாகத் தோன்றியழிதலே பந்தம் எனவும், இவை அறக்கெடுதலே முத்தி யாம் எனவும் கூறுப. இவ்வைந்தவுங் குறித்து,

> "உருவு நுகர்ச்சி குறிப்பே பாவனை
> உள்ள அறிவுஇவை ஐக்கந்த மாவன"

என மணிமேகலை கூறுகின்றது.

இந்துக்களின் புராணங்களில் பிரமாண்டத்தில் அடங்கியுள்ள உலகங்களைப் பற்றியும், மகாமேரு, குலகிரிகள், எழுகடல், தீவங்கள், பெரும்புறக்கடல் என்பவற்றைப் பற்றியும், தேவகணங்கள் முதலாயின வற்றைப் பற்றியும் கூறியிருப்பதுபோன்றே பௌத்த நூல்களிலும் சிறிது வேறுபடக் கூறப்பெற்றுள்ளன. பிரமாண்டமென்பது சக்கர வாளம் என்னும் பெயரால் இவற்றில் வழங்கப்பெறும்.

> "நால்வகை மரபின ரூபப் பிரமரும்
> நாலுல் வகையி னுரூபப் பிரமரும்
> இருவகைச் சுடரும் இருமூவ கையிற்
> பெருவனப் பெய்திய தெய்வத கணங்களும்
> பல்வகை யசுரரும் படுதுய ருறூஉம்
> எண்வகை நரகரும் இருவிசும்பியங்கும்

பன்மீனீட்டமும் நாளுங் கோளும்
தன்னிடத் தடக்கிய சக்கரவாளம்”

எனவருதல் காண்க.

இதுகாறும் எடுத்துக்காட்டிய புத்தமதக் கொள்கைகளிலும், தத்துவங்களிலும் பெரும்பாலன ஏனைய சமயக்கொள்கைகளுக்கும் உண்மைகளுக்கும் மாறுபட்டன அல்ல. பழையமத சித்தாந்தங்களே ஆராய்ந்தவர்களின் கருத்துப்படி இவையெல்லாம் பழமையான இந்து மதக் கோட்பாடுகளிலிருந்து எடுத்துத் தொகுக்கப் பெற்றனவேயாகும். இதிற் கூறப்பட்ட சீலமுதலிய நல்வினைகளும், பத்துவகைத்தீவினைகளும், உயிர்கள் அவற்றின் பயன்களை நுகர்தலும், மறுபிறப்பும் முதலாயின இந்துசமயத்திற்கும், சமண்சமயத்திற்கும் பொதுவாவனவே. இதிற் கூறப்பட்டுள்ள பிறப்புத்துன்பமென்பது முதலிய நால்வகை வாய்மைகளும் யாவர்க்கும் பொதுவானவையே; ஆனல் பன்னிரு நிதானங்களில் ஒன்றாய்ப் பிறப்புக்குக்காரணமாய்க் கூறப்பட்டுள்ள பேதைமை என்பது அனுதியே உயிர்களைப்பற்றி நிற்கும் ஆணவம் அல்லது அவிச்சை எனப்படும் அறியாமையாகத் தோன்றவில்லை. இப்பன்னிரண்டுமே தம் கண் தோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலும், தமக்கு முதலானவற்றை நோக்க விகுதியாதலும் உடையனவாகின்றன. எனவே பகுதிமாத்திரமேயாகவுள்ள, அல்லது, பகுதியும் விகுதியும் அல்லாத முதற்பொருளொன்று கூறப்படவில்லை. நித்தமாயுள்ள ஆன்மாவைப் பற்றியோ, கடவுளைப்பற்றியோ யாதொன்றும் கூறப்பட்டிலது. ஆன்மா என்றே தனித்தொருபொருள் இன்று என்பதும், ஐங்கந்தங்களின் சேர்க்கையே ஆன்மாவாமென்பதும், அதுவும் கணந்தோறும் அழிவதாய் முடிவிலே பொன்றக்கெட்டொழியுமென்பதும் இம்மதத்திற்கே யுரிய கொள்கைகளாம். இது பற்றியே பௌத்தர்களைக் கணபங்கவாதிகள் என்றும், கணிக விஞ்ஞான வாதிகள் என்றும், சூனிய வாதிகள் என்றும் கூறுவர். ஆன்மாவென்றே ஓர்பொருளில்லாவிடத்து இம்மை மறுமைகளும், இருவினைப் பயன்களும், பந்த முத்தியும் யாருக்கோ அறிகிலம். ஐந்து கந்தமும் அறக்கெடுதலே முத்தியெனின் முத்தியையடைவார் யாருமில்லை யாகின்றது. இல்லையாகவே முத்தியென்பதும் பொய்யாம். கந்தங்களைந்திற்றேன்றும் அறிவிற்கு முத்தியின்பம் உண்டு எனில், அவ்வறிவுகெடாதிருக்குமாயின் உருவமுதலிய கந்தங்களும் உண்டாதல் வேண்டும்; அவை உண்டாகவே முத்தியிடத்திலும் பந்தமுண்டாகித் துன்பத்தையுந் தரும்.

“ஐந்து கந்தம் சந்தானத்தழிதல் பந்தத்துக்கம்
அறக்கெடுகைமுத்தியின்பம் என்றறைந்தாய் கந்தம்
ஐந்து மழிந்தால் முத்தியணைபவர் யார் என்ன
அணைபவர்வேறில்லையென்றுய் ஆர்க்குமுத்தியின்பம்
ஐந்தினணர்வினுக்கென்னில் அழியாதவுணர்வுண்
டாகவே அவ்விடத்தும் உருவாதிகந்தம்

ஐந்துமுளவாமதுவும் பந்தமாகி
அரந்தைதரும் முத்தியின்பம் அறிந்திலை காண்மீயே''

என்று சிவஞானசித்தியார் பரபக்கத்தில் புத்தமதத்தினரின் முத்தி நிலையை மறுத்திருப்பதும் காண்க.

இனி, இக்காப்பியம் இயற்றிய சாத்தனாரது கவிதை மாண்பினைச் சிறிது நோக்குதும். காப்பியம் இயற்றும் கவிகளின் உட்கோள் தாம் கூறுங் கதைவாயிலாக உலகத்தார்க்கு உறுதிபயக்கும் அறங்களை வெளிப்படுத்தலேயாகும். இதனையே காப்பியப் பண்பு என்றும், பாவிகம் என்றும் கூறுவர். அங்ஙனமே இவ்வாசிரியரும் இக்கதையை நடத்திச் செல்வுழி இயலுமிடங்களிலெல்லாம் மக்கள் அறியவேண்டிய நீதிகளையும், அறங்களையும் திட்பமுறக்கூறிச் செல்கின்றார். மணிமேகலையைக் காதலித்து அவளைக் கைப்பற்றுதற் பொருட்டு மலர்வனத்தையடைந்த உதயகுமரனை நோக்கிச் சுதமதி நீதிகூறுங் கூற்றில் வைத்து,

'' இளமை நாணி முதுமை யெய்தி
உரைமுடிவு காட்டிய வுரைவான் மருகற்
கறிவுஞ் சால்பும் அரசியல் வழக்குஞ்
செறிவளை மகளிர் செப்பலு முண்டோ
அனைய தாயினும் யானென்று கிளப்பல்
வினைவிளங்கு தடக்கை விறலோய் கேட்டி
வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது
மூப்பு விளிவுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்''

எனவுரைத்திருப்பது எவ்வளவுதிட்பமும் நுட்பமும் சொல்லழகும் பொருளழகும் கொண்டு விளங்குகின்றது. அரசகுமரனுக்கு அவனது குலத்திற் சிறந்தானொருவனது பெருமையை எடுத்துக்காட்டி, அவனது வழித்தோன்றலாகிய நீ பிறர்க்கெல்லாம் அறிவும் சால்பும் அரசியன் முறையும் கூறுதற்கு உரியையாயிருப்பவும், அத்தகைய நினக்கு அவற்றை மகளிராளுநர் செப்பலும் பொருந்துமோ? என்ற கூற்று அவனுள்ளத்தில் எத்துணைநாணினையும் உணர்ச்சியையும் விளைத்திருத்தல் வேண்டும். பிறப்பும் வினையும் காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருவனவென்னும் உண்மையை '' வினையின்வந்தது

வினைக்கு விளைவாயது" என்னும் ஓரடியாற் சுருங்கவுரைத்திருப்பது பாராட்டற்குரியது. மற்றும், இதில் யாக்கையின் இழிவை எடுத்துரைப்பது கேட்போருளத்திற் பசுமரத்தாணிபோற் பதியத்தக்கதாக வுள்ளது. இதிலுள்ள தொடர்களெல்லாம் தீவிய இனிய செந்தமிழ்ச் சொற்களால் அமைந்து, மோனையெதுகை முதலிய தொடை விகற்பங்களாற் சிறப்பெய்தி, வலியும் தெளிவும் என்னுங் குணவணிகளுடைய வாய்த்திகழுதல் காண்க.

அவனுக்கு மணிமேகலா தெய்வங்கூறிய

".....மன்னவன் மகனை
கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரி வறங்கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதியின் ஈதும்
தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த
அவத்திறம் ஒழிக"

என்னும் பகுதி, அரசன் செங்கோன்மைதிரிதல் எத்தகைய பெருங் கேட்டிற்குப் பரம்பரையின் ஏதுவாகின்றதென்பதனை அளவை நான் முறையான் அறிவுறுத்துவதோடு, அந்தாதி மடக்கு என்னுஞ் சொல்லணியானும் பொலிந்து நிகழ்கின்றது.

ஆபுத்திரன் என்பான் ஈயுந்தொறும் தேயாது சுரக்கும் தெய்வக் கடிஞையொன்றுகொண்டு மாயிருஞாலத்து மன்னுயிர்களை ஓம்பிவருகாளில் ஆண்டுப் போந்த இந்திரன் அவனைநோக்கி 'நினக்குவேண்டுவ நல்குவல், என் பெருந்தானத்தின் உறுபயன் கொள்க' என்றனன, அதனைக்கேட்ட ஆருயிர் முதல்வன் விலாவிறச் சிரித்திட்டு அவனை எள்ளிப் 'போம்' என்றுரைப்பவன் 'ஈண்டுச்செய் நல்வினையின் பயனை ஆண்டு நுகர்ந்திருக்கும் நும் கடவுளரையன்றி,

"அறஞ்செய்மாக்கள் புறங்காத்தோம் புரி
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர் நன்னாட்டுக்
கிறைவனுகிய பெருவிறல் வேந்தே"

எனவிளித்து, 'வருந்திவந்தோரின் அரும்பசியைப் போக்கி அவரது இனியமுகத்தை யான் காணுமாறு செய்யும் என் தெய்வக்கடிஞையிருக்க, நின்னுல் அளிக்கப்பெறுவன யாவுள' என்கின்றனன். இதன்கண் கொடை பொருளாய பெருமிதம் தோன்றுமாறு காண்க. தேவர் நன்னாட்டுக் கிறைவனுகிய பெருவிறல் வேந்தே யென்பது புகழ்வது போலப் பழித்திறம் புனைவதோரணிநலமுடைத்து. ஈண்டு எள்ளல் பொருளாய நகைதோன்றுவதும் உள்ளற்பாலது.

உதயகுமரன் விஞ்சையனொருவனால் வெட்டுண்டிறந்ததற் காற்றாது இராசமாதேவி மணிமேகலைக்குப் பல இன்னல்களை விளைக்க, அவள் அவற்றினெல்லாம் இடுக்கணின்றி யிருந்தமை கண்டு அஞ்சி, 'மகளை யிழந்த துயரினைப் பொறுக்கலாற்றாது யான் நினக்குச் செய்த பிழைகளைப் பொறுத்தருள்க' என வேண்டினள். வேண்டவே மணிமேகலை அவளை நோக்கி, 'சென்ற பிறப்பிலே நீலபதி வயிற்றிற்றோன்றிய இராகுலனை அழற்கண்ணாகம் ஆருயிருண்டகாலை யான் அதனைப் பொறாது தீயிற்பாய்ந் துயிரை விட்டேன்; அப்பொழுது நீ,

"யாங்கிருந் தழுதனை யிளங்கோன் றனக்குப்
பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
உடற் கழுதனையோ உயிர்க் கழுதனையோ
உடற் கழுதனையே லுன்மகன் றன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
உயிர்க் கழுதனையே லுயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையாற் றெரிந்துணர் வரியது
அவ்வுயிர்க் கன்பினை யாயினுய் தொடி
எவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டும்".

என்றறிவுறுத்துகின்றனள். ஈண்டு இறந்தோர் பொருட்டு அழுங்குதல் தகவன்று என்பதனை உடலுயிர்களையும் அவற்றினியல்பினையும் வேறு பிரித்துணர்த்தித் தெருட்டும் திறப்பாடு போற்றற்குரியதாம். மற்றும், அவ்வுயிர்க் கன்பினையாயின் எவ்வுயிர்க்காயினும் இரங்கல்வேண்டும் என்பதன் பொருணுட்பம் நுண்ணுணர்வோர்க்கு இன்பம் பயப்ப தொன்றாம்.

இனி, இக்காப்பியத்தின் முற்கூற்றில் மலர்வனம் புக்கது, பளிக்கறை புக்கது, மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியது, சக்கரவாளக் கோட்டம் முரைத்தது என்னும் நான்கு காதையுள்ளும் கற்போர் கவிதையின் பத்திற் றினைக்குமாறு இவ்வாசிரியர் தமது புனைந்துரையாற்றலைப் புலப்படுத்தியுள்ளார்.

மாதவி வயந்தமாலைக்குக் கூறியசொற்களால் மாமலர் காற்றம் போல் ஏது நிகழ்ச்சியுண்டாகப்பெற்ற மணிமேகலை கோவலனும் கண்ணகியு முற்ற துன்பம் தன் செவியகம் வெதுப்ப நெஞ்சங்கலங்கிக் கண்ணீருகுத்து மாலையை நினைக்க, மாதவி அவள் துயரைப் போக்குவாளாய்த் தாமரை தண்மதி சேர்ந்ததுபோலத் தன் செங்கையால் அவள் கண்ணீரைமாற்றி, தூயநீர்மை யுடையமாலை தூய்மையிழந்த தாகலின் வேறு நன்மலரை நீயே கொணர்வாய் என்றனள். அப்பொழுது அவளுடன் மலர்தொடுக்குஞ் சுதமதியானவள் அதனைக் கேட்டு, மணிமேகலை தனித்தேகுதலால் உளதாம் தீங்கினை எடுத்துரைப்பவள்,

"மணிமேகலை தன் மதிமுகந் தன்னுள்
அணிதிகழ் நீலத் தாய்மல ரோட்டிய
கடை மணியுகு நீர் கண்டனளுயிற்
படையிட்டு நடுங்குங் காமன், பாவையை
ஆடவர்கண்டால் அகறலுமுண்டோ"

என அவளது எழிலின் சிறப்பைப் புலப்படுத்துகின்றனள். செஞ் சொற்கவியின்பம் நுகர்வார்க்கு இப்பகுதி கல்விருந்தாதல் தேற்றம். எனினும், ஆடவர் கண்டாலகறலுமுண்டோ என்றியம்பியவள் அவ் வளவில் நில்லாது "பேடியரன்ரே பெற்றியினின்றிடின்" என்று கூறுவது வரம்பிகந்த கூற்றேயாகும். இது சுதமதி கூற்றுகலின் இப் பழி தம்மைச் சாராதென்று கவிகருதினர்போலும்! இவ்வாறுகூறி, 'மணிமேகலையொடும் மலர்கொய்ய யானும். போவல்' என்றுரைத்துச் சுதமதி அவளுடன் மணித்தேர்வீதியிற் செல்வுழி, உண்ணு நோன்பி யாகிய ஓர் சமணமுனிவனை வழிமறித்துக் கள்ளுண்ணுமாறு இரக்கும் களிமகனையும், பித்தனொருவனையும், பேடிக்கோலத்துடன் ஆடும் பேடு என்னும் கூத்தினையும், நெடுநிலைமனைதொறும் வித்தகரியற்றிய கண்கவர் ஓவியங்களையும், பொற்றொடிமகளிர் சிலர் தம் இளம் புதல் வரைப் பொற்றேரின் மீதுள்ள யானையிலேற்றி, முருகன் விழாக்கால் கோள் என்று பாராட்டுவதனையும் ஆண்டாண்டுத் திரள்திரளாகக் கண்டு நிற்போரெல்லாம் விராடன் பேரூரில் விசயனும் பேடியைக் காணுமாறு சூழ்ந்த கம்பலைமாக்கள்போல மணிமேகலையை வந்துபுறஞ் சுற்றி, அவளது அழகைப் பலபடியாகப் புனைந்துரைத்தனர்; என்னும் இப்பகுதியிற் சாத்தனர் பாத்திறம் மிக்க இன்பம் பயக்கின்றது. ஒரு நகரத்தின் பெருவீதியில் மாலைப் பொழுதிற் செல்வோர் இடையிடையே பற்பல காட்சிகளைக் காண்டல் கண்கூடாகலின் இவ்வாசிரியர் இங்ஙனம் கூறியது இயற்கையோடுபொருந்தியதாகும். இங்ஙனம் நகரநிகழ்ச்சிகள் பலவற்றைக் கண்டறிந்த ஓர் பாவலரே பல்வேறு உறுப்புக்களமையத் தொடக்கத்திற் கலம்பகம் பாடினராவர்; பின்னர்க்கலம்பகம் இயற்று வோர் அவற்றை அதற்கிலக்கணமாகக் கொண்டு விட்டனர்.

"வந்தீரடிகள் நும் மலரடி தொழுதேன்
எந்தம் அடிகள் எம்முரை கேண்மோ
அழுக்குடை யாக்கையிற் புகுந்தநும் மூயிர்
புழுக்கறைப் பட்டோர் போன்றுளம் வருந்தாது
இம்மையும் மறுமையும் இறுதியிலின்பமும்
தன்வயிற்றருஉம் என் தலைமகன் உரைத்தது
கொலையு முண்டோ கொழுமடற் றெங்கின்
வீளைபூந் தேறலின் மெய்த்தவத் தீரே
உண்டு தெளிந்திவ் யோகத் துறுபயன்
கண்டா லெம்மையுங் கையுதிர்க் கொண்மென
உண்ணு நோன்பி தன்னொடுஞ் சூளுற்று
உண்மென இரக்கும் ஓர் களிமகன்"

என்று களியினியல்பு கூறியிருப்பதில் நகைச்சுவை ததும்புகின்றது. 'வந்தீரடிகள் நும்மலரடி தொழுதேன் எந்தம் அடிகள்' என்பது அகத்தே எள்ளிப் புறத்தே போற்றுதலாகிய வஞ்சப்புகழ்ச்சியாய்க் களியினது தருக்கினியல்பைத் தெள்ளிதிற் புலப்படுத்துகின்றது. அமண் முனிவன் மண்ணாமேனியனாகலின் அவனுடம்பை அழுக்குடை யாக்கை என்று கூறி, அதனைப் புழுக்கறையோடு ஒப்பிடுகின்றான். மும்மை யின்பமும் தானே தரவல்லதென்றும், தலைமகன் உரைத்தது என்றும், கொலைவினை யில்லதென்றும் கள்ளினது பெருமையைப் பாராட்டு கின்றான்.

"ஆனாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வர்
அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்"

என்றபடி அறிவான், அறிவு, அறிபொருள் என்னும் வேற்றுமை தோன்றா த இன்பத்த தாகலின் அதனை அறிவுறுத்த பெருமகனை என் தலைமகன்—குரவன் என்று கூறுவதில் இழுக்கென்னை! கொழுமடற் றெங்கு என்றும், விளைபூந்தேறல் என்றும் கொடுத்துள்ள அடைகளின் சிறப்பையும் ஓர்க. உண்டுதெளிந்து இந்தயோகத்தின் உறுபயனைக் காண்க என்பது இதற்கோர் மகுடம்போல் விளங்குகிறது. யோகம் என்றது அதன் முடிவாகிய சமாதி போலும்! அதினின்று உணர்ந்த பின்பு தானே அதனது பயன்புலனாகும்!! முனிவனோ உண்ணாநோன்பி, அவனை உண்ணுமாறு இரக்கின்றான்! அதிலும் கள்ளுண்ணுமாறு இரக்கின்றான்! சூளுற்று இரக்கின்றான்!! அவனது பரிவிருந்தவாறு என்னே!!! சுருங்கவுரைக்கின், இச்செய்யுளின்பமும் அதனை உண்டு தெளிந்த வழியே புலனாம் என்க.

இனி, மையலுற்றானொருவன் அலரிமாலையையும், எருக்கம்பூ மாலையையும் தோளிலும் மார்பிலும் அணிந்து, கந்தைத் துணியுடன் மரக்கிளைகளிலுள்ள சுள்ளிகளையும் உடையாகக் கட்டி, உடல் முழுதும் சாம்பலைப் பூசிப் பலரொடும் இயைபில்லாத சொற்களைப் பேசி,

"அழூஉம் விழூஉம் அரற்றும் கூஉம்
தொழூஉம் எழூஉம் சுழலலுஞ் சுழலும்
ஓடலும் ஓடும் ஒருசிறை யொதுங்கி
நீடலு நீடும் நிழலொடு மறலும்"

என்று கூறியிருப்பது பித்தனியல்பினை உள்ளவாறு விளக்கித் தன்மை நவிற்சி யென்னும் அணியுடைத்தாய்த் திகழ்கின்றது.

இனி, உவவனத்தின் இயல்பு கூறும் ஆசிரியர்,

"குரவமு மரவமுங் குருந்துங் கொன்றையும்
திலகமும் வகுளமுஞ் செங்கால் வெட்சியும்
நரந்தமு நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமுந் தளவமு முடமுட் டாழையுங்
குடசமும் வெதிரமுங் கொழுங்கா லசோகமுஞ்
செருந்தியும் வேங்கையும் பெருஞ் சண்பகமும்

எரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய வுலவனம்''

என்றுரைத்து, அவரே உவமங்கூறிய சித்திரச் செய்கைப் படாத்தினை நம் கண்ணெதிரே தோன்றச் செய்கிறார். மற்றும் ஞாயிற்றின் கதிர்களாகிய தானைக்கு இருள் வளைப்புண்டிருப்பதென அப்பொழிலின் இருட்சியைக் கூறுகின்றார்.

பின்னும்: அப்பொழிலின் இயற்கை வளங்களைக் கூறுபவர்,

''குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்
மயிலா டரங்கின் மந்திகான் பனகாண்;''

என்றும்,

''மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்
பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைதின்
ருருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
யாச வன்ன மாங்கினி திருப்பக்
கரைநின் றூலு மொருமயி றனக்குக்
கம்புட் சேவற் கணைகுரன் முழவாக்
கொம்ப ரிருங்குயில் விளிப்பது காணாய்''

என்றும் இசைக் கருவியுடனும், பாட்டுடனும் கூடிக் கதை தழுவாது வரும் இரண்டு கூத்தினைக் கண்டு களிக்கும்படிச் செய்கின்றார்.

இனி, புகார்நகரிலுள்ள புறங்காட்டின் இயல்பு கூறிவருமிடத்தே,

''சுடுவோ ரிடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போர்
இரவும் பகலும் இளிவுடன் றரியாது
வருவோர் பெயர்வோர் மாறுச் சும்மையும்
எஞ்சியோர் மருங்கி னீமஞ் சாற்றி
கெஞ்சு நடுக்குறூஉ நெய்த லோசையுந்
துறவோ ரிறந்த தொழுவினிப் பூசலும்
பிறவோ ரிறந்த வழுவினிப் பூசலும்
நீண்முக நரியின் றீவினிக் கூவுஞ்
சாவோர்ப் பயிரும் கூகையின் குரலும்
புலவூண் பொருந்திய குராலின் குரலும்
ஊண்டலை துற்றிய வாண்டலைக் குரலும்
நன்னீர்ப் புணரி நளிகடலோதையின்
இன்னு மிசை யொலி யென்று கின்றது''

என அங்கு நிகழும் ஓசைகளை எடுத்துரைப்பது எவ்வகைப் பொருளையும்

செவ்விதினறிந்து வழுவின்றுரைக்கும் ஆசிரியரது புலமை மாண்பினைப் புலப்படுத்துகின்றது. மற்றும், அவர் அம்முதுகாட்டியல்பினைத்தையும் எஞ்சாதெடுத்துரைத்து, முடிவின்கண்,

> "தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
> ஈற்றிளப்பெண்டிர் ஆற்றுப்பாலகர்
> மூதியோரென்னு னிளையோரென்னுன்
> கொடுந்தொழிலாளன் கொன்றனன் குவிப்பவிவ்
> வழல்வாய்ச் சுடலை தின்னக்கண்டுங்
> கழிபெருஞ் செல்வக் கள்ளாட்டயர்ந்து
> மிக்கசல்லறம் விருப்பாதுவாழும்
> மக்களிற் சிறந்த மடவோருண்டோ"

என, அதுவே வாயிலாக மக்களுள்ளத்தை அறநெறியிற்றிருப்புவது அவரது குறிக்கோள் இது வென்பதனை இனிது தெரிப்பதாம்.

இனி, நிறையுவாகாளின் மாலைப்பொழுதிலே கூணதிசையில் உதிக்கும் மதியமும், குடதிசையில் மறையலுறும் ஞாயிறும் ஒருங்குதோன்றுங் காட்சியை உரைப்பான் புக்க ஆசிரியர், பன்மலரும் புள்ளொலியுமுடைய அகழியாகிய சிலம்படியையும், மதிலாகிய மேகலையையும், தோரணகம்பங்களாகிய தோள்களையும், தருகிலைக் கோட்டம் வச்சிரக்கோட்டம் என்னும் கொங்கைகளையும், சோழ மன்னனுடைய கோயிலாகிய திருமுகத்தையும் உடைய புகார் நகராகிய நங்கை திங்களையும், ஞாயிற்றையும் முறையே வெள்ளிவெண்டோடும் பொற்றோடுமாகத் திருமுகம் பொலிவுற அணிந்து கொண்டாள் எனக் கூறிய புனைந்துரைநயம் பெரிதும் பாராட்டற்பாலது. மற்றும், அந்திக்கால நிகழ்ச்சிகளாக அவர் கூறியிருப்பனவெல்லாம் படித்தின் புறற்பாலன.

இனி, இக்காப்பியத்திலே புத்ததேவரைப் பாராட்டியுள்ள பகுதிகளிலிருந்து, மக்கள் அறிந்து கடைப்பிடித்து மேன்மை யெய்துதற்குரிய பொருண்மொழிகள் பத்தினை எடுத்துக் காட்டுதல் இக்கட்டுரைக்குப் பொருந்திய இறுவாயாகும் என்க.

க. அருளும் அன்பும் ஆருயிரோம்பலும் ஒழியா நோன்பினன்.
உ. அருளறம் பூண்டோன்.
ங. அறவாழியாள்வோன்.
ச. பிறர்க்கற முயலும் பெரியோன்.
ஞ. தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளன்.
ஊ. தன்னுயிர்க்கிரங்கான் பிறவுயிரோம்புவோன்.
எ. மாரனைவென்ற வீரன்.
அ. தீநெறிக்கடும்பகை கடிந்தோன்.
கூ. தீமொழிக்கடைத்த செவியோன்.
ஔ. வாய்மொழி சிறந்த நாவோன்.

வித்துவான்
அழகியசொக்கநாதபிள்ளை

இராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்,
திருநெல்வேலி.

பிறப்பும் கல்வியும்

இவர் திருநெல்வேலிக்கு அடுத்து வடக்கேயுள்ள தச்சனல்லூரிலே, சுத்த சைவ வேளாள மரபிலே, வன்னியப்பிள்ளை குமாரராக, ஏறக்குறையத் தொண்ணூறு வருடங்களுக்கு முன்னே பிறந்தவர். இவர் தந்தையார் விளையக உபாசகரென்பதும் இவர் அவரிடம் கல்வி பயின்றவரென்பதும், இவர் இயற்றிய காந்திமதியம்மை பிள்ளைத்தமிழில், குருவணக்கத்தில்,

கனி தரு பெருங்கருணை மருவு பதி னெருக்கரக்
கணபதியை யகவ ரதமுங்
கருதலிற் பெறுபய னனந்தத்து ளொன்றெனக்
கடையனேன் றனையு மகவென்
றினிதுபெற் றருமையின் வளர்த்துப் படிப்பித்
திகத் தொடு பரத்து மின்ப
மெய் தவரு ளுபதேச முதவுசற் குருவான
வெந்தை தாள் சிந்தை செய்வாம்

என வருவதனால் அறியலாம்.

கணபதி வாத்தியார்

அக்காலத்துத் தமிழ்ப் பள்ளிக்கூடத்து வாத்தியார்களுள்ளே சிறந்த கல்வி யறிவும் போதிக்கும் திறமையும் உடையவரும் தமது பள்ளிச் சிறுவர்களுக்குக் கல்விப் பயிற்சியும் கடவுட் பத்தியும் நல்லொழுக்கமும் உண்டாகச் செய்தலில் அத்தியந்த சிரத்தை யுடையவரும் தமது வாத்திமைத் தொழிற்றிறமையினால் பெருஞ் செல்வக் திரட்டியவருமாக இருந்த கணபதி வாத்தியார், இவருடைய சிறிய தந்தையார். ஏடெழுத்தாணி யிறக் தொழிந்த இக்காலத்தில் வழங்குகின்ற, பெரும் பாலும் பிழையற்ற அச்சுப் பாடப்புத்தகங்கள் ஏற்படாத அக்காலத்தில், ரகர றகர, ழகர ளகர பேதங் களறியாதா ரெழுதிய ஓலைச்சுவடிகளைக் கொண்டு பிள்ளைகள் கல்வி கற்பது வழக்கமாயிருந்தது. அக்காலத்து

வாத்தியார்களுள்ளே, யானறிந்தவரை, கணபதி வாத்தியா ரொரு வரே, இலக்கண இலக்கியப் பிழைகளெதுவு மில்லாமல், தாமேனும் தம்மிடம் கற்றுத் தேர்ந்த சட்டம் பிள்ளைகளேனும் எழுதிய ஓலைச் சுவடிகளைக்கொண்டு பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பவரா யிருந்தார். இவ் வாத்தியார் எனக்குப் பாலப் பருவக் கல்வி பயிற்றிய வராவர்.

முதற் பழக்கம்

சுவாபு ராசாங்கக் காலத்தில் சேஞதிபத்தியத்துடன் தென் சீமை யதிகாரத்தை இடை யீடின்றிப் பல தலைமுறை வகித்துவந்த தளவாய்* குடும்பத்தினராகவும் நல்ல கல்வியும் ஞான சாத்திரப் பயிற்சியும் உடையவராகவும் திருநெல்வேலியில் வாழ்ந்த தளவாய் இராமசுவாமி முதலியார் அரண்மனையில் முதல் முதலாக இவரை யான் பார்க்கும்படி வாய்த்தது. செந்நிற மேனியும் சிறிது நீண்ட வட்ட முகமும் சற்றுக் குறைய ஐந்தரையடி யுயரமும் நடுத்தரமான உடற் பருமையு முடைய வராகக் காணப்பட்டார். சி. வை. தாமோதரம் பிள்ளையின் தொல் காப்பியப் பதிப்புக்கு உதவியாக, மேற்கூறிய இராமசுவாமி தளவாயின் ஆணைப்படி, திருநெல்வேலிக் கவிராயர் வீட்டுத் தொல்காப்பிய ஓலைச் சுவடியைப் பார்த்துக் காகிதத்தில் பிரதி யெழுதிக் கொண்டிருந்தார். இவரெதிரே, சிலர் இவர் முகத்தைப் பார்த்த வண்ணமாயிருந்தனர். இவர், பிரதி செய்து கொண்டும் இடையிடையே எதிரிருந்தார் கேள்வி களுக்கு விடை பகர்ந்துகொண்டு மிருந்தார். இவர் பேச்சு அவ்வவ் வமயத்துக் கேற்றதாகவும் சுவையாகவு மிருந்ததனால், முதலில் நின்று கேட்டுக் கொண்டிருந்த யான், இருந்து கேட்கலானேன். அது முதல், இவர், காலை ஏழுமணிக்கு வந்து பிரதி செய்யும் வேலையிலமர்ந்து பத்துமணிக்கு வீட்டுக்குப் புறப்படும் வரை இவர் பேச்சைக் கேட்டு இன்புறுதற்கு வரும் பலரோடு யானும்கூட இருந்துவரலானேன். அன்றி, மாலையில் இவரில்லஞ் சென்று இவரோடு சல்லாபித்து இன் புற்று வந்தேன்.

சைவக் கவிராயர்

ஒருநாள், செம்பொற் சிலை போன்ற சிவந்த மேனியராய், நீர்க் காவியேறிக் காஷாயம் போலச் சிவந்த தூய ஆடையும் பட்டை பட்டை யாகத் தீட்டிய துய்ய வெண்ணீற்றுப் பூச்சும் குங்குமம் அப்பிய பெரிய சந்தனப் பொட்டும் அணிந்தவராய், இரத்தினமிழைத்துச் செவ்விய செதுக்கு வேலை தீர்ந்த பொற்கவசம் புனைந்த கவரி சங்கர மென்ற இரட்டை யுருத்திராக்க நடு நாயகமும் தங்க வில்லைகளும் பொலியும் உருத்திராக்கக் கண்டிகை பூண்டவராய், பழுத்த சைவமே வடிவெடுத் தாற் போன்று பேட்டைக் கவிராயரெனப் பேர்பெற்ற ஒருவர், மேற் கூறிய தளவாய் அரண்மனைக்கு வந்தார். அவர், அங்கே யிருந் தோரால் வரவேற்கப்பட்டு இருக்கையில் அமர்ந்தனர். வரவேற்றருள்

* படைத்தலைவன் (தமிழகராதி)

வித்துவான் அழகிய சொக்கநாதபிள்ளை

ஒருவர் அவரை ஒரு பாட்டுக்குப் பொருள் வினவ, அவர், தாம் அப் பாட்டின் பொருளறியாமையை வெளியிடாமல், பொருள்கூறும் பாவனை புரிந்தார். அவர் புறப்பட்டுப் போனபின், அங்கிருந்தவர்கள், பாட்டுக் கருத்தை அவர் அறியாமையைப் பற்றிப் பலபல பகர்ந்து பரிகசிப்பா ராயினர். அப்போது, அவர் உள்ளபடி பொருள் கூறாமல், பொருள் கூறியது போலக் காட்டிய பாவனை, திருவிளையாடற் புராணத்தில் 'கல்லாலின் கீழிருந்து' என்ற கவியில் 'இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி' ய பாவனையை ஞாபக மூட்ட, யான், 'அவர், இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டினர்' என்றேன். எனவே, அன்று வரை என்றும் என் முகம் நோக்கி யாதுங் கூறாதவர் (அழகிய சொக்கநாத பிள்ளை), என்னை எறிட்டு பார்த்துப், புன்னகை புரிந்து 'பொருத்தமாயிருக்கிறது' என்றார். இதன் பின், அவர் கூறுபவை களை அவரிடம் வருவா ரெல்லாரினும் இளைஞையிருந்த* என்னை நோக்கியும் கூறுவார்.

வறுமை

இவர், தாம் மேற்கொண்ட பிரதி எழுதும் வேலையைப் பகல் பத்து மணிக்குப் பின் செய்யாமைக்குக் காரணம், திருநெல்வேலி முன்சீபுக் கோர்ட்டில் இவர் பத்து ரூபாய்ச் சம்பளமுள்ள எழுத்தாளர் (காப் பீஸ்டு) வேலையிலமர்ந்திருந்ததாம். 'தங்கள் வருமானம் எவ்வளவு?' என்று வினவுவார்க்கு 'எனக்கு மாசம் பத்து வந்துகொண்டிருக் கிறது' என்று, மாசம் பத்து ரூபா யென்றும் மகா சம்பத்து என்றும் ஒன்றுக் கொன் றெதிரிடையான இருபொருள்பட, வறுமையுடைமை செல்வமுடைமை போலத் தொனிக்க, விநோதமாக விடைகூறுவார்.

குடும்பம்

இவருக்கு மனைவியார் இருவர். முதல்மனைவி இறந்த பின், இரண்டாமுறை மணஞ் செய்தார். முதல்மனைவிக்கு ஒருமகனும் ஒரு மகளும் பிறந்தார்கள். மகன் பெயர் நெல்லைநாயகம் பிள்ளை. அவர், பருவமடைந்தபின் இவரைவிட்டுப் பிரிந்து போய் விட்டார். இவர் முதல் மனைவி, இறுதிக் காலத்தில் தீராத நோயுற்று நடக்கமாட்டாது நெடுங்காலம் படுக்கையிற் கிடந்து பிறர் உதவியின்றி எதுவுஞ் செய்ய இயலாதவளா யிருந்தாள். இவரே அவளுக்குச் செய்ய வேண்டுவன யாவற்றையும் குழந்தைக்குத் தாய் செய்வது போலச் செய்துவந்ததைப் பலமுறை யான் பார்த்து இவருடைய ஆழ்ந்த அன்புடைமையையும் கடமையுணர்ச்சியையும் தெரிந்து வியந்திருக்கின்றேன். தம் உத்தி யோக வேலையுடன் நோயும் பாயுமாய்க் கிடந்த மனைவிக்கு வேண்டுவன யாவும் குறைவு படாமல் செய்து 'வறுமையிற் செம்மை'க்கு மேற் கோளாக விளங்கிய இவர் பெருந்தகைமை பெரிதும் பாராட்டத்தக்க தாயிருந்தது.

---

*அக்காலத்தில் எனக்கு வயது பதினேந்தாகலாம்.

தாம் துன்புறுகையிலும் பிறர் இன்புறச்செய்தல்.

மேற்கூறிய கவலைகளோடு, இவர் தமது கவி யொன்றிற் கூறுமாறு, 'பாழ்த்த வறுமையுங் கடனும் படுத்துகின்ற...துக்கம்' உடைய வராயிருந்ததனைத் தெரிந்திருந்த யான் ஆச்சரியமடையும்படி, இவர், தம்மிடம் வந்தவர்க்குப் புன்னகைபூத்த இன்முகங்காட்டி, இனிமையும் விநோதமுமாகப் பேசி, இன்ப மூட்டும் இயல்பினராயிருந்தார். தாம் நோயுற்றுத் துன்புழந்து கொண்டிருந்த காலத்தும் சாகுஞ்சமயத்துங் கூடத், தம்மைக் காண வந்தோரைச் சந்தோஷ முகத்துடன் வர வேற்று, இன்சொற்கூறி இன்புறுத்தும் இயல்பினை யிழந்தாரில்லை.

சுருக்கெழுத்துச் சோதனை.

இவர் எழுத்தாளராயிருந்த முன்சீபு கோர்ட்டில், ஒரு குமஸ்தா வேலையை வேண்டி, ஒருவன், முன்சீபிடம் விண்ணப்ப மெழுதிக் கொடுத்தான். அவர், அவன் வேலைத் திறமையைச் சோதிக்கக் கருதி, தம்மிடம் வந்திருந்த வேறொரு விண்ணப்பத்தை யெடுத்து, 'இதைச் சுருக்கி யெழுதிக் கொண்டுவா' என்று கொடுத்தார். அவன் அவரிடம் விண்ணப்பம் கொடுத்த விவரமும் அவர் தனக்குக் கொடுத்த உத்தரவு விவரமும் விரிவாக முன்னுரையாக எழுதித் தன்னிடம் சுருக்கி யெழுதக் கொடுத்த விண்ணப்பத்தைத் தனக்குத் தோன்றிய வாறு பெயர்த்தெழுதியதைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தான். அவர் அதனை வாங்கிப் பார்த்து 'இது சுருக்கக் கொடுத்த விண்ணப் பத்தினும் பெருக்கமா யிருக்கிறதே. ஏன் இப்படி யெழுதினாய்?' என்று கேட்டபோது, பக்கத்தில் நின்ற அழகிய சொக்கநாத பிள்ளை, 'கோர்ட்டார் உத்தரவுப்படிதானே செய்திருக்கிறார்' என, முன்சீபு 'எப்படி' என, 'இவர் எழுதியிருப்பதனோடு ஒப்பிட்டால், சுருக்கக் கொடுத்த விண்ணப்பம் சுருக்கமாயிருப்பதனால், உத்தரவுப்படி அதைச் சுருக்கிவிட்டார்' என்றார். முன்சீபு, அவன் மதியீனத்துக்காக அவனை இகழ்ந்து இவர் சமத்காரத்துக்காக இவரைப் புகழ்ந்து அவனிடம் அருவருப்பும் இவரிடம் பெருவிருப்பும் உற்றார்.

பொடிவைத்து நகை செய்தல்.

இவர், ஒரு சமயத்தில், தம்முடனிருந்த இரண்டு நண்பருள் ஒருவர் மற்றொருவருடைய பொடிப்பட்டையை ஒளித்து வைத்துப் பட்டைக் குடையவர் தேடியபோது சிரிக்க, இவர் சிரித்தவரை நோக்கிப் 'பொடி வைத்துத்தான் நகை செய்யவேண்டும்' *என்று இரட்டுற மொழிந்து உண்மையை வெளிப்படுத்திக் களவு கொண்டவர் கொடுத்தவர் இரு வரையும் உவப்பித்தார்.

---

* பொடி—மூக்குப்பொடி; வெள்ளி, செம்புகலந்த தங்கப்பொடி.
நகை—ஆபரணம்; சிரித்தல்.

வித்துவான் அழகியசொக்கநாதபிள்ளை

புலவர் கூடுமிடம்

திருநெல்வேலியில் பல தலைமுறையாகக் கல்வியும் செல்வமும் ஒருங்கு நிரம்பி எந்தச் சபையிலும் அக்கிராசனமும் பிரதம தாம்பூலமும் பெற்றுவந்த கவிராச குடும்பத்தில் சேட்டராய், சிறந்த இலக்கண இலக்கியப் பயிற்சியும் இனிய கவி யியற்றுந் திறமையும் சங்கீத ஞானமும் உடையராய், கற்றோர்க்கு உணவும் உறைவிடமும் உதவிவந்த கவிராச நெல்லையப்ப பிள்ளை, தெற்குப் புதுத்தெருவில் தனித்தனியான பல கட்டடங்களும் கடுவே கால்வாய் நீரோட்டமும் பின்னே பூந்தோட்டமும் உடைய வாசஸ்தலத்தில் வாழ்ந்து வந்தார். அப்பூந்தோட்டத்தில் கால்வா யருகே பூசை மடமும் மடைப்பள்ளியும் இவைகளுக்குச் சிறிது தூரமான இடத்திலே ஒரு சவுக்கையுமிருந்தன. இந்தச் சவுக்கை தமிழறியும் பெருமாளாய் வித்துவான்களுக்கு வேண்டும் பொருளுதவி புரிந்து ஆதரித்துவந்த வள்ளல் இராசவல்லிபுரம் முத்துசாமியா பிள்ளை நெடுங்காலம் வசித்த இடமாகவும், அவரைக் காணத் திருநெல்வேலி இராமநாதபுரம் மதுரையாகிய மூன்று ஜில்லாக் களிலுமிருந்து வந்த வித்துவான்கள், புலவர்கள், கவிராயர்கள் ஆகியவர்கள் கூடுமிடமாகவும் இருந்தது.

அக்காலத்தில் புலவர்கள் ஒவ்வொரு வருடமும் தம்மூர் விட்டுப் புறப் பட்டு, அங்கங்கேயுள்ள ஜமீன்தார்களையும் பிரபுக்களையும் கண்டு, அவரவர்மீது சிலசில கவிகள் புனைந்து வருஷாசன மென்னும் ஆண்டு தன்கொடையாகப் பெற்ற வருவாயைக் கொண்டு காலங்கழித்து வந்தனர். அவர்கள், சிலரோ பலரோ ஏறக்குறைய எக்காலத்தும் கூடித் தாம்தாம் முத்துசாமியா பிள்ளை மீது பாடிய பாட்டுக்களையும் நூல்களையும் படித்துப் பொருள் கூறுவதையும் ஒருவர் மற்றொரு வருடைய கவிகளின் குணங்களை இன்புற எடுத்துக் கூறுவதையும் முத்துசாமியா பிள்ளையுடன் கவிராச நெல்லையப்பபிள்ளையும் அழகிய சொக்கநாத பிள்ளையும் யாணும் கேட்டு மகிழ்வதற்கும் அப்போதப் போது கூடிய வித்துவான்கள் பழைய புதிய பெருநூல் சிறுநூல்களைப் படித்து அவற்றின் நயங்களை எடுத்துக்கூறி இன்புறுதற்கும் அந்தச் சவுக்கை இடமாயிருந்தது.

புலவர்கள்

வேம்பத்தூர்ப் பிச்சுவையர், கல்போது புன்னைவனக் கவிராயர், முகவூர்க் கந்தசாமிக் கவிராயர் அவர் புதல்வர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை* முகவூர் இராமசாமிக் கவிராயர், அவர் குமாரர்கள் அருணாசலக் கவிராயர் சுப்பிரமணிய கவிராயர், சின்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார், முத்துவீரப் புலவர் ‡ கந்தசாமிப் புலவர் ‡, கந்தசாமிக் கவிராயர் ‡ திருநெல்வேலி முத்துப்புலவர் ஆகியோரும் வேறு சிலரும்

*எட்டயாபுரம் ஸமஸ்தான வித்துவான்.
‡ ஊற்றுமலை சமஸ்தான வித்துவான்கள்.

வித்துவான் அழகியசொக்கநாதபிள்ளை

முத்துசாமி பிள்ளையைக் காண வந்துகொண்டிருந்த வித்துவான் களாவர்.

பிரபந்தங்கள்

அழகிய சொக்கநாத பிள்ளை காதற் பிரபந்தமும் சிங்காரக் கவிதா மஞ்சரியும், மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை பயோதரப்பத்தும் வண்டு விடுதூதும், முத்துப்புலவர் சுரதாரச மஞ்சரியும், முத்துசாமியா பிள்ளை பேரிற் பாடிய நூல்களாய் மேற்கூறிய சவுக்கையில் அரங்கேற்றப் பட்டவைகளாம்.

அழகிய சொக்கநாத பிள்ளையும் முத்துசாமியா பிள்ளையும்

அழகிய சொக்கநாத பிள்ளையும் முத்துசாமியா பிள்ளையும் சடையப்ப வள்ளலும் கம்பரும் போல, ஒற்றுமைமிக்க நண்பராயிருந்தனர். முத்துசாமியா பிள்ளை தம்மீது அழகியசொக்கநாதபிள்ளை பாடிய நூல்களுக்குப் பெரும் பொருளுதவியதன்றி எப்போதும் உற்றுழியுதவும் கற்றுணையாயிருந்தார், இவர்களிருவரையும் ஒருவராகக் கொண்டு வித்துவான்கள் பாராட்டிவந்தார்கள். இது, இருவரையும் ஒருசேர முன்னிலைப்படுத்தி எட்டயபுரம் சமஸ்தான வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை,

செழுந்திருக்க மலர்நிகரு முமது பதம்
திசை நோக்கிச் சேவித் தேன் பின்
எழுந்திருக்க மலர் வாயுத் தரவு பெறுப்
பிழை பொறுப்பீர்

என்றும், யான்,

பூமகளு நாமகளு மாதரெனப் புகல்குறைவு
போத லன்றி
மாமிமரு மகளாத லாற்பகைளு ரெனும் வசையு
மாற வேண்டித்
தாழுயரா டவராநன் னேயரா வுலகின் முத்து
சாமி யென்றும்
தோமிலழ கிய சொக்க நாதனென் றும் பெயர்பெற்றுத்
தோன்றி னரால்
என வெவரு மெடுத்துரைப்ப விருஞ்செல்வம் பெருங்கல்வி
யினிது மேவித்
தனையன்றித் தனக்குநிக ரின்றியவாண் மையினுக்கும்
தணத்த லின்றித்
தின நவிலு மனியோனிய நண்பினுக்கும் மேற்கோளாய்த்
திகழ்வோ ரேயென்
மன வசை மலரினிலு நிதமகிழ்வோ டினிதுறையும்
வள்ளி யோரே

என்றும் எழுதிய நிருப கவிகளால் விளங்கும்.

அழகிய சோக்கநாதபிள்ளை இயற்றிய நூல்களாவன:

1. காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்
2. பத சாகித்தியங்கள்
3. சிங்காரப்பதம்
4. அனவரத தான காதர் பதிகம்
5. காந்திமதியம்மாள் பதிகம்
6. காந்தியம்மை பேரிற் கலித்துறையந்தாதி
7. கெல்லிகாயகமாலை
8. முத்துசாமியாபிள்ளை பேரிற் காதற் பிரபந்தம்
9. முத்துசாமியாபிள்ளை பேரிற் சிங்காரக் கவிதாமஞ்சரி

[இவை அச்சானவவை]

10. சங்கரநயினார் கோயிற் கோமதி யந்தாதி (அல்லது மாலை)
11. ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோதை யந்தாதி
12. தாணுமால் பதிகம் (முழுதும் சிவனுக்கும் திருமாலுக்கும் சிலேடையாகச் செய்தது)

[இவை அச்சாகாதவை]

பின்வருவது என் ஞாபகத்திலுள்ள கோமதி யந்தாதி யல்லது மாலைப் பாட்டு:—

கேடா வரு நமனைக் கிட்டவரா தேதூரப்
போடாவென் றோட்டியுன் றன் பொற்கமலத் தாழ்மழற்கீழ்
வாடா வெனவழைத்து வாழ்வித்தா லம்மவுனைக்
கூடா தென் றார்தடுப்பார் கோமதித்தா யீஸ் வரியே

காதற் பிரபந்தக் கண்ணி

இவர் காதற் பிரபந்தத்தில் உள்ள பின்வரும் கண்ணி, சென்னை மாநகரமுதற் கன்னியா குமரிவரை உள்ள தமிழ் விற்பன்னர் பலர் மிகவும் வியந்து நயந்து அருமையினும் அருமையான தெனப் பாராட்டுவது :—

கிளவி வேட்டலாகத் தலைவன் தலைவியை நோக்கிக் கூறுவது:

வெள்ளரிக் காயா விரும்பு மவ ரைக்காயா
உள்ள மிளகாயா ஒருபேச் சுரைக்காயா

(இதன் பொருள்)...வெள் அரிக்கு ஆயா—வெண்ணிறமுடைய திருமாலுக்கு (அவர் கரசிங்கமாக அவதரித்த தூணை) தாயா? (ஸ்தம்பம்போலப் பேசாதிருக்கின்றாயே. நீ ஸ்தம்பமா? என்றபடி); விரும்பும் அவரைக் காயா உள்ளம் இளகாயா (உன்னை) விரும்புவோரை (இயல்பாகக்) கோபியாத மனம் (என்பால்) இளக

மாட்டாயா? ஒரு பேச்சு உரைக்காயா—ஒரு வார்த்தை சொல்ல மாட்டாயா? (என்பதாம்)

பேச்சுரைக்காய், பேய்ச் சுரைக்காயின் மரூஉ: விட்டுணு முன் வெண்மையாயிருந்து பின் கருமையானது பின் வரும் பாட்டுக்களினால் தெளிவாம்:

கடல்க டைந்திடச் செல்லுமூஉம் வெள்ளைமால் கடுப்பப்
படலை வெண்முகில் பரவைநீ ருழக்கிவாய் மடுத்து
விடமெ முந்தென் மீண்டவம் மாயனை விழைய
உடல்க றுத்து விண் ணெறிப் படர்ந்தெ்ய் யெனமீண்டு

(காஞ்சிப்புராணம்)

பாரோடும் விண்ணோர்கள் பரந்தோடப்
புரந்தரனார் பதிவிட் டோடத்
தேரோடும் கதிரோட மதி யோட
விதியோடத் திருமால் மேனி
காரோடத் தொடர்ந்தோடும் கடல்விடத்தைப்
பரமனுண்டு காவா விட்டால்
ஆரோடு நீரிருப்பீ ரெங்கோடி
யுயிர்ப்பிழைப்பீ ரறிவி லீர்காள்.

(குற்றாலத்தலபுராணம்)

சிங்காரக் கவிதா மஞ்சரியிற் சிறந்த கவி.

ஒரு சமயத்தில் வித்துவான்கள் பலரிருந்த சபையில், இவர் தாமியற்றிய சிங்காரக் கவிதா மஞ்சரிப் பாட்டுக்களில் 'தாயுடுத்த' என்ற கவியை எடுத்துப் படித்துப் பொருள் விரித்துணர்த்தியபோது, எல்லாரும் மிகவும் வியந்து நயந்து 'இது போன்ற சாதுரியமும் மாதுரியமுமான கவியை எங்குங் கண்டதில்லை. இது புதுமையினும் புதுமையாய் அருமையினு மருமையாயிருக்கிறது' என்று பலபடப் புகழ்ந்து பாராட்டினார்கள். அந்தக் கவியையும் அதன் முக்கியமான பகுதிகளின் பொருளையும் அடியிலே தருகின்றேன்:

மன்மதனைப் பழித்தல்.

தாயுடுத்த சேலையையுங் கவர்ந்தடித்த பாவி
தமையனது குடியிருப்பைத் தான்பறித்த பாவி
தேயுடற்றன் மாமனைத்தன் னினைகுளிப் பாட்டச்
சிவனைத்தன் குடைசுமக்கச் செய்த கொடும் பாவி
பேயிடத்து முலைகுடித்த பிதாவின் பேர் விளக்கும்
பெரும் பாவி எனைக்குதிரை பிடிக்கவைத்த பாவி
காயடத்தா லேயடித்தான் கணைக சங்கக் கீர்த்தி
கமழுமுத்து சாமிமன்னு அமளியிற்சேர்ந்தனையே.

வித்துவான் அழகியசொக்கநாதபிள்ளை

தாயுடைத்த சேலையையும் கவர்ந்து அடித்த பாவி.

தன் தாய் உடுத்தியிருந்த சேலையை உரிந்து கவர்ந்து அவளை மானங் கெட அம்மணமாக்கியதனை டமையாமல் சண்டாளத்தனமாக அடிக்கவும் செய்த பாவி.

மன்மதனுக்குத் திருமால் தகப்பன். திருமாலுக்குப் பூமி தேவி மனைவி; ஆகவே, பூமி மன்மதனுக்குத் தாய். பூமியைப் பெண்ணுகவும் அந்தப் பெண்ணுக்குப் பூமியைச் சுற்றியுள்ள கடலைச் சேலையாகவும் கூறுதல் கவிமரபு. கடலை மன்மதனுக்கு முரசாகக் கூறுவதும் கவிமரபு.

மன்மதன், தனது முரசாகிய கடல் ஒலித்தல் காரணமாகக் காம மூட்டித் துன்புறுத்தும் துட்டனையிருக்கிறானென்று தலைவி மன்மதனை நிந்தித்தாளென்பது கருத்து.

தமையனது குடியிருப்பைத் தான்பறித்த பாவி.

மன்மதன் விட்டுணுவின் இரண்டாம் மகன்; பிரமன் மூதலாம் மகன். ஆகவே மன்மதனுக்குப் பிரமன் தமையனுவன்; பிரமன் வீற்றிருப்பது தாமரை மலர். அது மன்மதனுடைய அஞ்சு அம்பு களில் ஒன்று. மன்மதன் அம்பாக எய்தற்குத் தாமரை மலரைப் பறிப்பது நித்த நிகழ்ச்சி.

அன்னியர் வீட்டைப் பறிப்பதே அநியாயமாம்.

மன்மதன் தன் தமையனுக்கு வேறு வீடுகளிருந்து பறித்தாலுமே, அது பெருத்த அநியாயமாம். அப்படியிருக்க அவன் தமயன் குடியிருக்கும் வீட்டையே பறித்துக்கொண்டு அவனைத் தெருவிலே விட்ட தியோனு யிருக்கின்று னென்பது கருத்து.

தேய் உடல் (உடைய) தன் மாமனைத் தன் ஆனை குளிப்பாட்டச் செய்த கொடும் பாவி:

மன்மதன், எலும்புந் தோலுமாக மெலிந்த தன் மாமனைத் திண்ணியருஞ் செய்தற்கருமையான ஆனை குளிப்பாட்டும் கடின வேலையைச் செய்யச்செய்த கொடும்பாவியா யிருக்கின்றான்.

மன்மதன் தாய் இலக்குமி. அவள், அமுதமதன காலத்தில், கடலிற் பிறந்தவள். சந்திரனும் அக்காலத்தில் அவளோடு பிறந்தவன். ஆதலால், மன்மதனுக்குச் சந்திரன் தாய் மாமன். சந்திரன் திதிதோறுந் தேயும் தேகத்தினனுதலால், 'தேயுடற்றன் மாமன்' என்றாள்; மன்மதனுக்கு யானை இராத்திரி யென்பது கவிமரபு. சந்திரன் இருண்ட இரவை நிலவால் வெளுக்கச் செய்தலை அரிய பாவனைசக்தி யினால் யானையை அழுக்குப் போகக் குளிப்பாட்டலாகக் கூறினர்.

வித்துவான் அழகியசொக்கநாதபிள்ளை

வணங்குதற்குரிய மாமனை ஏவல் கொள்ளல் கொடுமையாம்: அவன் மெலிந்திருக்கும்போது வேலை செய்வித்தல் கொடுமையினும் கொடுமையாம். அதனினும், அதி கடின வேலையான யானை குளிப் பாட்டலைச் செய்யச் செய்தல் கொடுமையினும் கொடுமையினும் கொடுமையாம். அப்படிப்பட்ட பரம கொடுமையைச் செய்த கொடும் பாவி மன்மத னென்றவாறு.

சிவனைத் தன் குடை சுமக்கச் செய்த கொடும் பாவி.

மன்மதன் குடை சந்திரனென்பது, கவிமரபு. மன்மதன், சிவனைத் தன் குடைசுமக்கச் செய்த கொடும்பாவி யென்றது, சிவன் சந்திரனைத் தலைமீது தரித்திருத்தல்பற்றி.

பேயிடத்து முலைகுடித்த பிதாவின் பேர் விளக்கும் பெரும்பாவி.

மன்மதன் விட்டுணுவுக்கு மகனென்பது மேலே கூறப்பட்டது. பேயிடத்து முலைகுடித்த கிருட்டினன் விட்டுணுவின் அவதார மாதலால், அவன் மன்மதனுக்குப் பிதாவெனப் பட்டான்.

எனைக்குதிரை பிடிக்கவைத்த பாவி.

மன்மதனுக்குக் குதிரை கிளி யென்பது கவிமரபு. தலைவிதற் சமயத்தில் கிளி யேந்தியிருக்கின்ரு ளென்பது குறிப்பு.

எசமானர் தம் குதிரைகளைப் பிடித்துக் கொண்டு போகும்படி ஆடவரை ஏவுவாரே யன்றிப் பெண்டிரை ஏவார்.

இந்த மன்மத பாதகன் தன் குதிரையைப் பிடிக்கும்படி பெண் பாலான என்னைச் செய்திருக்கின்ரூன். இவனது தகாத செயலை என்னென்பே னென்றபடி.

இக்கவியின் பொருள் கூறக்கேட்ட புலவரு ளொருவர் 'மாதர் சந்தோஷமாயிருக்குங் காலத்திலன்ரோ, கிளி யேந்துவார். விரக வேதனையுற்ற தலைவி கிளி யேந்துவானேன்?' என, ஆசிரியர் 'தூதனுப்புதற்கு' என்ரூர். இந்தச் சாதுரியமான சமாதானம் எல்லாரையும் மகிழ்வித்தது.

வேரொருவர், கிளிபிடித்ததற்குச் சமாதானம் சொல்லிவிட்டீர்கள். மன்மதன் குடை பூரண சந்திரனுகவும் சிவன் முடித்திருப்பது பிறைச் சந்திரனுகவுமிருக்க, 'சிவனைத் தன் குடை சுமக்கச் செய்த கொடும் பாவி' என்றதற்கும் சமாதான முண்டோ?' என, 'குடை சுமப்பவன் விரித்தா சுமப்பான்? சுருக்கித்தானே சுமப்பான்' என்ரூர். எனவே, எல்லாரும் இவர்பாற் கொண்ட மதிப்புக்கும் மகிழ்ச்சிக்கும் எல்லை யில்லை யென்று சொல்லவேண்டுமோ?

காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் அரங்கேற்றம்

இவர் தாமியற்றிய காந்திமதியம்மை பிள்ளைத்தமிழை க0ருரு-ம் ஆண்டு தைமீ உஎஉ ஞாயிற்றுக்கிழமை இராத்திரியில் காந்தியம்மை சன்னதியில் ஊஞ்சல் மண்டபத்தில் அரங்கேற்றினார். அப்போது இராசவல்லிபுரம் முத்துசாமியாபிள்ளை இவருக்கு வயிரக்கடுக்க னணிந்து கவுரவப்படுத்தினார்*

பதசாகித்திய வரலாறு

மிக இனிய குரலும் மிக நயமாகப் பாடும் இயல்பும் உடையவரான சிங்கக்குட்டி யென்ற சீனிவாசராயரென்பவர், மேற்கூறிய புலவர் கூடும் சவுக்கைக்கு அடிக்கடி வந்து, தெலுங்கு, இந்துஸ்தானி, மகா ராட்டிரம் முதலிய மொழிகளிலுள்ள பதங்களைப் பாடி அச் சவுக்கை யிற் கூடியிருப்போரெல்லாரையும் இசை வெள்ளத்திலழுந்தச் செய்து இன்புறுத்தி வந்தார். அவர், அவ்வப்போது, புதியன புதியனவாகப் பாடிய பதங்களுட் சிறந்தவைகளை இவர், கவனமாகக் காதுகொடுத்துக் கேட்டு, அந்தப் பதங்களின் இசைப் போக்கை இம்மியும் விடாது பின்பற்றி, மூலப்பதங்களினும் சாலச் சிறந்த பொருள் நயமுடைய தமிழ்ப் பதங்களைப் பாடிவந்தார். அவைகளை, இராயர், மனப்பாடம் பண்ணிக்கொண்டு, கேட்போர், தேனோடு கலந்த பாலாகிய வாயுணவு தாழ்வடையும்படி இசையுடனியைந்து சிறந்த பொருளாகிய செவி யுணவை மனவயிறு நிறைந்து தேக்கெறிய இனிது நுகர்ந்து இன்ப மடையும்படி பாடுவார். ஏனைய பாடகர்போல, எழுத்துக்கள் சொற் களன்றிச் சொற்றொடர்களையுமே விழுங்கிவிடாமல் 'அட்சரபட்சண மின்றி' ஒவ்வொரு சொல்லும் செவ்விது தொனிக்கப் பாடுதலின் தலைமைச்சிறப்புடையவராயிருந்தார். மேற்கூறிய பதங்களின் திரட்டே, 'பதசாகித்தியங்கள்' என்னும் நூலாம்.

சித்திரம் எழுதும் திறமை

இவர் சித்திரம் எழுதுதலிலும் வல்லவராயிருந்தார். இவருடைய கையெழுத்துப் பிரதியான காந்தியம்மை பிள்ளைத் தமிழ்ப் புத்தகத்தின் தொடக்கத்தில் இவர் காந்திமதியம்மை விக்கிரகத்தின் வடிவத்தைத் திருவாசிகையுடன் செவ்வையாகச் சித்திரித்திருந்ததை நான் பார்த்து வியப்பும் நயப்பும் எய்தியிருக்கின்றேன். இவர் தமிழ்க் கையெழுத்துத் திருத்தமாகவும் ஆங்கிலக் கையெழுத்து மிகவும் அழகாகவும் இருந்தன.

இவர் என் பாட்டுக்களைத் திருத்திய முறை.

யான் பாடும் பாட்டுக்களை எனக்குத் தெரிந்த கவிஞர்களிடம் படித்துக் காட்டிச் சீர்திருத்தஞ் செய்யப்பெறுதல் எனது வழக்கம். அப்படிச் சீர்திருத்தியோருட் பெரும்பாலாருடைய சீர்திருத்தத்தினால்

*காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்ச் சிறப்புப்பாயிரத்தைப் பார்க்க

என் பாட்டுக்கள் தம் சொரூபம் மாறி அவர்கள் பாட்டுக்களென்று சொல்லும்படி யாகிவிடுவது சகசம். அதனல், கவிஞர்கள் மாற்றுத லின்றி யேற்றுக் கொள்ளும்படி பாடும் திறமையை யாம் என்றேனும் அடைவோமோ என்ற ஏக்கம் எனக்கு உண்டாகியிருந்த துண்டு. என் பாட்டுக்கள் என் பாட்டுக்களாகவேயிருந்து சிறந்திடும்வண்ணம் திருத்தஞ் செய்து மேற்கூறிய ஏக்கத்தை நீக்கி ஊக்கத்தை ஊட்டிய வருள் இவரே முதல்வராவர்.

கலையில் அகத்தியர்.

சீவில்லிபுத்தூரில் இவருக்குப் பழக்கமாயிருந்த தனவானும் கல்வி மானுமான பொன்னுச் செட்டியாரென்பவருக்கு, அந்த ஊரில் அக் காலத்தில் நெய்யப்பட்டுப் பிரபலமாயிருந்த 'சண்முகம் பிள்ளை கட்டு வாக்கம்' என்று பெயர் வழங்கப் பெற்ற வேட்டி ஒரு சோடி வாங்கி யனுப்பும்படி இவர் ஒரு கவியெழுதி விடுத்திருந்தார். அவர் அவ் வேட்டி வாங்கியனுப்பிய போது, இவருக்கு எழுதி விடுத்த கவியில் ஓர் அடிமட்டும் ஞாபகத்துக்கு வருகின்றது. இவர் கவிகள் பலவற்றைப் பல சமயங்களிற் அவர் கேட்டு மகிழ்வுற்று இவரைக் கலையில் (-கல்வியில்) அகத்தியரென மதித்திருந்ததையும் இப்போது வேட்டி வேண்டி விடுத்த கவியினல், இவர் கலையில் (—வேட்டியில்) அகத்தியர் (—தேவையுடையவர்—விருப்பமுடையவர்) என்று அறிந்து கொண்ட தையும் அந்த ஓர் அடி புலப்படுத்துகின்றது. அவ்வடி வருமாறு:

கலையில் அகத் தியரெனவே இப்போதும்
முன்னுமியாம் கவியாற் கண்டோம்

இவருக்குக் காந்திமதி யம்பிகை கைச் செண்டீந்தது

பாவநாசம் நமசிவாயக் கவிராயர் விக்கிரமசிங்கபுரத்து உலகம்மை மீது ஓர் அந்தாதி பாடி அரங்கேற்றியபோது அந்தத்தேவி தன் கையிலிருந்த பூச்செண்டை அவருக்குக் கொடுத்தாளென்பது கர்ண பரம்பரைச் செய்தி. அது போலக் காந்திமதி தேவி இவருக்குக் கைச் செண்டீந்தாளென்று கருதும்படியுள்ளது, இவர் இயற்றிய இதனடியில் எழுதப்பட்ட கவி.

இணங்கொடுக்க நெறிகிறிது மில்லா நாயேன்
இசைத்த பிள்ளைக் கவிமாலை யெத்திக் கும்போய்
மணங்கொடுக்க நயந்தினிது வணைந்து கொண்ட
வண்கருணை நினைந்துருகி வழுத்து மோர்நாள்
பணங்கொடுக்க துளதேதலும் பாம்பும் போலப்
பாழ்த்தவறு மையுங் கடனும் படுத்து கின்ற
கணங்கொடுக்க* மொழியும் வண்ணங் கைச்செண்டீந்த
காந்திமதித் தாயென்னைக் கைவி டாளே

*கணம் கொள்துக்கம்—திரண்டதுன்பம்

இவர் இப்பாட்டை யென்னிடம் கூறியபோது இதனைப் பாடுதற் குற்ற சந்தர்ப்பத்தையும் கூறினர். அது வருமாறு:

இவர், ஒருநாள் காந்திமதியம்பிகை கோவிலுக்குப் போய்த் தெரிசனஞ் செய்தபின், அந்தத்தேவி சந்நிதியிலே, கொடிக் கம்பத் துக்குப் பக்கத்திலே அமர்ந்து, தியான பரராய்க் கண்மூடிக் கைக ளிரண்டையும் வரம் வேண்டும் பாவனையாக மலர ஏந்திக் கொண்டிருந் தார். அப்போது, கோவிலுக்குள்ளே சென்று சேவை செய்து அர்ச் சகர் கொடுத்த, அம்பிகை கையிற் சாத்தியிருந்த பூச்செண்டைப் பெற்ற ஒருவர் அதனை ஒரு சுமையாகக் கருதி யாரிடத்தில் கொடுக்க லாமென்ற கருத்துடன் வெளியே வந்தார். இவர் கையேந்தி யிருந் ததை அவர் கண்டு, அந்தச் செண்டை இவர் கையில் வைத்துவிட்டுப் போனர்.

இவ்வாறு, தற்செயலாகக் கிடைத்த செண்டைத் தெய்வச்செயலாய்க் காந்திமதியம்பிகையே கருணை கூர்ந்து அருளியதாகக் கொண்டு இவர் மேற்கூறிய பாட்டைப் பாடினரென்பது கூறவேண்டியதில்லை.

இவர் 1885-ஆம் வருடத்தில் இறந்தார். அக்காலத்தில், யான், இவரை ஆதரித்த வள்ளலும் இணைபிரியா நண்பரும் எனக்கு மாமன் முறையினராக உறவு கொண்டாடிப் பேரன்பு புரிந்து வந்தவருமான இராசவல்லிபுரம் முத்துசாமியாபிள்ளைக்கு யான் இரங்கற்பாக்களாக எழுதிய நிருப கவிகள் சிலவற்றையும் இவர் பாடல்களிற் சிறந்த சில பாடல்களையும் இதனடியிலே தந்து இவர் வரலாற்றை ஒருவாறு முற்றுப் பெறச் செய்கின்றேன்

அழகிய சொக்கநாத பிள்ளை காலஞ்சென்றபோது இராசவல்லிபுரம் முத்துசாமியா பிள்ளைக்கு வே. ப. சுப்பிரமணிய முதலியார் எழுதிய நிருப கவிகள்.

ஆந்திரப் பதம்[1]போற் பதமின்றென் பவர் வாயடைபடச் செந்தமிழ்ப்
[பதம்போல்
ஆந்திரப் பத[2]மின் றெனப்புரிந் திட்ட வழகிய சொக்கநா தக்கோ
மாந்திர சத்தென் மொழிக்குரின்று வடமொழி யிதுதெரியாதே,
மாந்திர மமரர்களே வுரைத்திடற்கு வானநா டடைந்தனன் கொல்லோ.

மண்ணினிற் சிங்கக் குட்டியாஞ் சீனி வாசனு தியவிசை வாண
ருண்ணிய[3] வாக்கு -மமுதெனப் பாட வொப்பில்பல் பதந்தந்தோமினி
[மேல்
விண்ணினுரதன் றும் புருமுத லோர்க்கவ் விதம்பதந் தருதுமென் றேவிண்
ணண்ணினன் மிக்க வழகிய சொக்கநாதநா வலரினு யகனே.

1—தெலுக்குப் பதம், 2—ஆகிய உறுதியான பதம், 3—உண்ணுதற்கு

வித்துவான் அழகியசொக்கநாதபிள்ளை

சிலரிசைச் சந்தத் தினிற்சிலர் திரிபிற் சிற்சிலர் சிலேடைகற் பனையில்
வலரெனப் படுவரவ்வண மின்றி வழங்குமெப் பாவினும் வல்ல
புலவனு மொருவன் போதுமென் றெண்ணிப் புலவர்தம் புலத்துமுத் தமிழு
நலமுறத் தேர்ந்த வழகிய சொக்க நாதனை யழைத்தனர் போலும்.

மாயிரு ஞாலத் தொளிர்தரு புலமை மருவழ கியசொக்க நாத
ஞாயிறு தோன்றிக் காலையாம் பால நற்பரு வத்திலங் கினது
சேயிள வொளிகான் மாலையாம் விருத்தத் திருப்பரு வமுமிராதந்தோ
பாயிரு ளொழிந்த மதியமாங்குமரப் பருவத்தி லத்தமித் ததுவே.

வேறு

நவவாயி[4] லொருகூட்டி லுற்றவழ கியசொக்க நாதக்கிள்ளை
சிவவாநின் றொளிர்வாயின் மழலைபெற்று வளர்த்தவர்தஞ் செவிக்கு நல்கிக்
குவவான கொங்கை மினு ரிதழ்க்கோவை இரசமுண்டு குகன் சுகம்[5]போற்
றவவானந் தம்பயக்கும் பாடல்பல சொலியுயர்விண் டனிலே கிற்றே.

காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்ப் பாட்டுக்கள்.

கலையை வளைத்த பிறைக் கோட்டைங் கரத்தோன் றுணைவன்றனை
[நோக்கிக்
கவின்றோய் முகமா றுன்னுருவிற் காணு நிமித்தங் கழறுகெனக்—
கொலையை வளைத்த நெடுங் கதிர்வேற் குகவே ணமையீன்றவருவகை
கொழிப்ப வொருமித் தென்னைமுத்தங் கொண்டு விளையா டுதற்கெனலு
மலையை வளைத்த கணவரொடு மகிழ்கூர்ந் திளைய மதலை தனை
வாரி யெடுத்து மடியில் வைத்திவ் வாறின் றுணர்ந்தே மெனப் பேசித்—
தலையை வளைத்து முத்தமிடுஞ் சயிலக் குயிலே வருகவே
சாலிப் பதிவாழ் காந்திமதித் தாயே வருக வருகவே.

வாரா திருந்தா லினிநானுன் வடிவேல் விழிக்கு மையெழுதேன்
மதிவா ணுதற்குத் திலகமிடேன் மணியா லிழைத்த பணிபுனையேன்
பேரா தரத்தி னொடுபழக்கம் பேசேன் சிறிது முகம் பாரேன்
பிறங்கு முலைப்பா லினிதூட்டேன் பிரிய முடனொக் கலையில் வைத்துத்
தேரார் வீதி வளங்காட்டேன் செய்ய கனிவாய் முத்தமிடேன்
றிகழு மணித் தொட்டிலிலேற்றித் திருக்கண் வளரச் சீராட்டேன்
றாரா ரிமவான் றடமார்பிற் றவழுங் குழந்தாய் வருகவே,
சாலிப்பதிவாழ் காந்தி மதித் தாயே வருக வருகவே,

எண் குலவு மமரர்மலர் மழைகொட்ட நனி கொட்ட
மிடுதுட்ட மயிடன் முதலோ
ரிகலுளம் பறைகொட்ட வென்றிநம தென்றுசசி
யின்பமிகு கொம்மை கொட்டக்

4—கண் காது முதலிய ஒன்பது துவாரம், 5—முருகக்கடவுள் கையிலிருக்கும் அருணகிரிநாதராகிய கிளி.

வித்துவான் அழகியசொக்கநாதபிள்ளை

கண்குலவு மெய்யன் புயங்கொட்ட வவுணமக்
கையர் செங்கை கொங்கை கொட்டக்
கனதெய்வ மறையோ ரகந்தொறு மகஞ் செயுங்
கனலிலா குதிகள் கொட்டத்
திண்குலவு மாசிரியர் பூசைமட மெங்கணுஞ் சேமக் கலங்கள் கொட்டத்
தேவா லயங்களி லணங்கினர் பொன் மணிகளிற்
றிருவிழாப்பேரி கொட்டத்
தண்குலவு நின் கடைக் கண்கருணை கொட்டவொரு
சப்பாணி கொட்டியருளே
சாலிவா டீசர்த மிடத்தினி தமர்ந்தகொடி சப்பாணி கொட்டியருளே.

திருநெல்வேலிச் சீதாராமபிள்ளைமீது பாடியது

[எட்டுக் கண்ணிகளின் முதலாவது]

தீதா னந்தவி
ணைதா விங்கொரு
மாதா லுன்னிடம்
தூதாய் வந்தனன்
நீதா மா அன்ன
தாதா வாகிய
சீதா ராம மன்னு

கோபியர் முறையீடு

(கும்மி*)

மாதே யசோதையே உன்மகன் செய்நியை
ஏதென்று சொல்லுவே மம்மா—சுத்த
வம்பனென் றஞ்சியோ துங்கிணலும் வந்து
வாசரி கேட்கிறன் சும்மா—இவன்
மாயத்தொழி லாலேமிக வேயெத்துகிறனேயினி
மருவார்குழல் வளர் கோபியர் தெருவீதியில் வர
நீதமோ (மாதே)

பட்டிக் கதவைத் திறந்துவிட் டேகன்றுக்
குட்டிகள் பாலூட்டு தென்றன்—எங்கள்
பர்த்தாக்கள் ஓடிப் போய்ப் பார்க்கையி லெங்களை
முத்தமிட் டோடிப் போகின்றன்—சிறு
பாலான்செயு மாவிந்திர ஜாலங்களி லேமுங்கிய
பதினாயிரம் மடவார்களில் எவள்தான் நிலை
தவறுதவள் ஓர் நாள் (மாதே)

---

*கொம்பை யென்பதன் மரூஉ

வித்துவான் அழகியசொக்கநாதபிள்ளை

சொப்பன சுரத சுகானந்தலகரி

(இதனைப்பாடவேண்டிய மெட்டுகள் எட்டு, முடிவில் விவரிக்கப் பட்டிருக்கின்றன)

சுந்தரஞ்சேர் கண்மயிலே
அந்தரங்கப் பெண்மயிலே
தோழியே நான் உண்மையிலே
சொல்லும் நல்ல செய்தியைக்கேள் (1)

செண்பகப்பூஞ் சோலையிலே
பெண்களுடன் மாலையிலே
சென்றுலவும் காலையிலே
நின்றனடி நான் தனியே (2)

இங்கிதவை போகத்திலே
அங்கொருவன் வேகத்திலே
என்முன்வந்து மோகத்திலே
சொன்னதெல்லாம் கேளடியோ (3)

மலர் சொருகும் கொண்டையிலே
கலக விழிக் கெண்டையிலே
மனம்மயிக்கும் அண்டையிலே
வந்தனடி சென்றதனை (4)

பந்தடிக்கும் மேடையிலே
வந்துவிளை யாடையிலே
பார்த்து நின்ற ஓடையிலே
பறிகொடுத்தேன் என்மனசை (5)

மாங்குயிலின் ஓசையிலே
பாங்கியுடன் பேசையிலே
மான்விழி உன் ஆசையிலே
நான் முழுகிப் போனனடி (6)

என்றனது செங்கையிலே
குன்றை நிகர் கொங்கையிலே
இஷ்டமாய்நெ ருங்கையிலே
கிட்டவரக் கூடாதென்றேன் (7)

தலங்கிடும்உன் மூக்கினிலே
இலங்கிடும்புல் லாக்கினிலே
தூக்கின தன் வாக்கினிலே
சொன்னுல் அதே போதும் என்றன் (8)

மெத்த வெகு ளித்தனமாய்
மூத்து என்றேன் மெத்தனமாய்
மின்னே கப டத்தனமாய்
என்னே முத்தம் இட்டானடி (9)

தோள் அணிமேல் தட்டவிழ்த்தான்
வாளரவிக்கைக் கட்டவிழ்த்தான்
தோணும் அரைப் பட்டவிழ்த்தான்
நாணிக் கண்ணைப் பொத்திக்கொண்டேன் (10)

நலவு சொல்லிக் கெஞ்சினதும்
கலவியினில் மிஞ்சினதும்
நன்னயமாய்க் கொஞ்சினதும்
என்னவிதம் என்று சொல்வேன் (11)

சார்ந்தனை முன் சூதினிலே
சேர்ந்தவன் அப் போதினிலே
தங்கமயில் மீதினிலே
ஷண்முகமாய் நின்றனடி (12)

சீர்பெருகும் காலழகும்
மார்பினில்முக் தூலழகும்
செங்கைவடி வேலழகும்
கண்குளிரப் பார்த்தேனடி (13)

சத்துரு வாய் நஞ்சகியாள்
நித்திரை யெ ஞஞ்சகியாள்
தனைக்கலைக்க வுஞ்சகியாள்
எனைப்பிரிந்தாள் சாமியுடன் (14)

மனமகிழ்வேன் எவ்வேளை
கனவில் அணைந் திவ்வேளை
மறைந்துகொண்ட செவ்வேளை
மறக்க மனங்கூடுதில்லை (15)

அழகிய சொக்கநாதன்
தொழ அருளும் பக்கநாதன்
அன்னை வள்ளி பக்கநாதன்
தன்னை அழைத்தோடி வாடி (16)

இராகம்	தாளம்	சேரவேண்டிய சொல்
ஆனந்த பைரவி	அடதாள சரப்பு	
காபி	ஏகதாளம்	குயிலே
நாதநாமக்கிரியை		
ஆனந்த பைரவி		
காபி	ஏகதாளம்	அன்னமே
சஹானா	ஏகதாளம்	
நாதநாமக்கிரியை	ஆதிதாளம்	
ரீதிகவுளை	ஏகதாளம்	என்கண்மணீ

தென்னிந்திய வணிகம்

[ஒன்பதாம் நூற்றாண்டுமுதல் பதினைந்தாம் நூற்றாண்டுவரை]

திரு. S. K. கோவிந்தசாமிபிள்ளை அவர்கள், M. A.,
அண்ணாமலைப் பல்கலைக்கழக சரித்திரநூல் விரிவுரையாளர்,
திருவல்லிக்கேணி.

1. தோற்றுவாய்

இக்கட்டுரை, பழந்தமிழ் நாட்டின் வாணிபத்தைப் பற்றி ஆராய எழுந்தது. 'தென்னிந்தியா' என்ற சொற்றொடர், வடுக கன்னட நாடுகளையும் தன்னகத்தேயுடையதாயினும், இவண் அதன்கண் ணடங்கிய தமிழக மொன்றனையே குறிக்கும். இம்மூன்றுமொழிந்த மலையாளத்தை, சொல்லாதுவிடுத்தது, பண்டைக்காலத்தில் மலையாளம் தமிழகத்துக்குப் புறம்பல்லவென்பது கொண்டேயாகும்.

தமிழகத்தின் வணிக வரலாறு மிகப்பழமை உடைத்து. இந்தியப் பெருங்கடலில் கலஞ் செலுத்தி எகிப்து, பாபிலான், சால்டியா முத லான நாகரிக முயர்ந்த நாடுகளோடு பல்லாயிர மாண்டுகட்கு முன்னரே தமிழர் பண்டம் மாற்றிவந்தனர்[1]. அதற்கறிகுறியாக எகிப்து நாட்டி லும், சிற்றாசியாவிலும் (Asia minor) மெசபடோமியாவிலும் மண்ணி னுள் புதைந்திருந்தெடுக்கப்பட்ட பலசான்றுகள் இப்பொழுது நமக்குக் கிடைக்கின்றன. கி. பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து நான்காம் நூற்றாண்டுவரை, தமிழர் உரோமப்பேரரசோடு வர்த்தகம் செய்து வந்தனர்[2]. அதனால் தமிழர் அடைந்த செல்வம் கணக்கிடமுடியாது. கிரேக்கரும், உரோமரும் பண்டைத்தமிழ் நூல்களில் யவனர் எனப் படுவர். அவர்களுடைய வணிகத்தைப் பற்றி யெழுந்த நூல்கள் மூன்றுள. அவையாவன, ஒரு கிரேக்க வர்த்தகன் எழுதிய "செங் கடற் செலவும்[3]" டாலிமி என்பான் எழுதிய "உலக நூலும்"[4]. பிளினி என்பான் எழுதின "இயற்கை நூல்"மாம்[5]. இவ்வர்த்த கத்தைப் பற்றிய குறிப்புகளைச் சங்க இலக்கியங்களில் நாம் காணலாம்.

1. P. T. S. Ayyangar's "History of the Tamils."
2. See Warmington's account of the Roman trade with India and Rawlinson's "Intercourse of India with the Western World."
3. "Periplus of the Erythrean Sea" ed, Schoff.
4. Ptolemy was an Alexandrian geographer.
5. Pliny's "Natural History."

யவனருக்குப்பின்னர் இந்தியப் பெருங்கடல்வர்த்தகம் அராபி நாட்டார்க்குச் சொந்தமாயிற்று. நாம் இவண் எடுத்துக் கொண்ட கால வரைக்கு முன்னர் பல்லவர் என்ற ஓர் அரச குடியினர் தமிழகத்தை ஆண்டனர். அவர்கள் அரசாட்சியில் தமிழர் கீழ்த்திசையில் பர்மா, மலையம், சாவகம், சுமத்ரா, சியம் முதலிய நாடுகளோடு வணிகஞ் செய்துவந்தனர். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில், தமிழரின் பெருங்கலங்களும், அராபியரின் காற்றைப்போல் வேக முடைய கப்பல்களும், சீனர்களின் "சங்க்" என்ற பெயரிய குன்ற மன்ன நாவாய்களும் இந்தியப் பெருங்கடலிற் கூட்டங் கூட்டமாகக் கீழ்மேற்றிசைகளிற் பாய்களை விரித்து அங்குமிங்கும் சென்றுகொண் டிருந்தன.

2. இக்கட்டுரையின் மூலங்கள்

இனி, நாம் எடுத்துக்கொண்ட ஐஞ்ஞூறு ஆண்டுகளில் தமிழர் நடத்திய வர்த்தகத்தைப்பற்றி எழுதுமுன், அதை யறிதற்கு இன்றி யமையாத மூலங்களை நாம் ஆராய வேண்டும். தமிழகத்தாரோடு வாணிகஞ்செய்த பல நாட்டாருள், அராபியரும் சீனரும் அவ்வணிகத் தைப்பற்றி நூல்கள் பல எழுதியுள்ளார். மற்றும், தென்னிந்தியாவில் யாத்திரை செய்த இருவர் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தொகுத்து சிறந்த நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றை யொத்த நூல்கள் தமிழகத்தில் இதுகாறும் கிடைக்காதுபோயினும், அக் குறையைத் தீர்க்க சிறந்த கல்வெட்டுகளும், செப்புப்பட்டயங்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவைகளைப்பற்றி கீழே விளக்கமாகக் கண்டுகொள்க.

க. அராபிய நூல்கள்

(1) சுலைமான் என்ற ஓர் அராபிய வணிகன் எழுதிவைத்த சில வர்த்தகக் குறிப்புக்கள்.[1] இந்நூல் கி. பி. 850-ல் எழுதப்பட்டது. தென்னிந்திய வாணிகத்தைப்பற்றிச் சிறிதளவே கூறுகிறது.

(2) மேற்சொன்ன நூலை அபுசையித்து என்பான் வெளியிடும் போது தான் வர்த்தகர்களிடம் கேட்டறிந்த சில செய்திகளையும் சேர்த்து வெளியிட்டான். இந்நூல் பத்தாம் நூற்றாண்டின் தொடக் கத்தில் எழுதப்பட்டது.[2]

(3) பத்தாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இபன் குர்தத்பா என்ற அராபியன் எழுதிவைத்த குறிப்புக்கள்[3].

(4) மேற்கூறிய எல்லாவற்றிலுஞ் சிறந்தநூல் அல் மசூதி என்பான் பத்தாம் நூற்றாண்டில் எழுதின நூல். மேற்கே ஸ்பெயின்

1. "History of India" Vol. I. Edited by Elliot and Dowsen.
2. Ibid.
3. Ibid.

நாட்டிலிருந்து கிழக்கே சீனம்வரைச் சுற்றினவன் அல்மசூதி என்ற அராபிநாட்டான்.[1].

(5) அல்பீரூனி என்ற ஓர் அராபியப் பேரறிஞன் இந்தியாவைப் பற்றி பதினொன்றும் நூற்றாண்டில் எழுதின நூலே முதல் நூலாகக் கொண்டு பதினொன்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இரஷீடுடீன் என்பான் எழுதின நூல்[2].

(6) பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியிலும் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தென்னிந்தியாவின் நிலைமையையும், பாண்டிநாட்டரசர் அராபியரோடு நடத்திவந்த குதிரை வர்த்தகத்தைப் பற்றிய இனிய விவரங்கள் அப்டேல்லா வாஸாப் என்பான் எழுதின நூலில் பார்க்கக் காணலாம்[3].

உ. சீன நூல்கள்

(1) "தங்—குவோ—சி—பு", "பிங்—செள—கோ—மன்" "சுங்—சி", "செள—கோ—பெய்"[4] முதலான நூல்கள் சீன மொழியில் எழுதப்பட்டிருப்பினும், அவை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படாததால் எம்போன்ற சீனமொழியறியாதார்க்கு அவை இருந்தும் இல்லாதனவாயின. ஆனால், மேற்கூறியவைக் கெல்லாம் பின்னெழுந்த 'சு—வான்—சி" என்ற நூலே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஹர்த், ராக்ஹில் என்பார், மேலே காணப்பட்ட நூல்களிலிருந்து சில பகுதிகளையும் மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் தென்னிந்திய வர்த்தகத்துக்கு இன்றியமையாத தொன்றும்[5].

ஊ. யாத்திரை நூல்கள்

(1) பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் வேனிஸ் நகரத் தாரான மார்க்கோ போலோ என்பார் சீனம் முதலிய நாடுகளைச் சுற்றிக்கொண்டு தென்னிந்தியாவைச் சுற்றிக் கப்பல் யாத்திரை செய்யுங்கால், பல துறைமுகங்களில் ஏற்றுமதி இறக்குமதியாகும் பொருள்களை நன்கு விசாரித்தறிந்து உயர்ந்த அறிவியல் நூலொன்று எழுதியுள்ளார்[6].

(2) இபன் பதூதா என்ற மூர்சாதிய முகமதியன் வட ஆப்பிரிக்காவிலுள்ள தாங்கியர் என்ற ஊரிலிருந்து புறப்பட்டு இந்தியாவுக்குப் போந்து, டெல்லி அரசன் முகமது டோக்ளக்கினிடம் உயர்ந்த

1. "History of India" Vol. I. Ellict and Dowsen.
2. ibid.
3. ibid. Vol. III.
4. "Chaw-Jw-kua" Translated by Hirth and Rockhill-Intro. pp. 9, 16, f. n. 1, 19 f. n. 1, 21, 22.
5. Op. cit.
6. 'Marco Polo's Travels' Edited by Yule and Cordier.

அரசியல் பதவியில் அமர்ந்து, பின் அவனால் அனுப்பப்பட்டு, சீன தேயத்துக்குச் செல்லக் கோழிக்கோட்டில் (கள்ளிக்கோட்டையில்) கப்பல் ஏறி யாத்திரை செய்யும்போது கப்பல் கவிழ, அதிலிருந்து தப்பி காகப்பட்டினத்தில் கரையேறி, ஆர்க்காடு, மதுரை முதலான இடங்களில் தங்கியிருந்து பிறகு சீனம் சென்று, சில ஆண்டுகள் கழித்துத் தன்னூரடைந்து ஒரு சிறந்த நூல் எழுதினன்[1]. அதில் தென்னிந்திய வாணித்தைப்பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

ச. கல்வெட்டுகளும் செப்புப் பட்டயங்களும்

(1) சேர அரசன் தாணுரவி கிருத்துவ வர்த்தகனை சாபீர் இசோ என்பானுக்குக் கொடுத்த கோட்டயம் பட்டயங்கள்[2].

(2) முதலாம் இராசராச சோழனும் முதலாம் குலோத்துங்கச் சோழனும் நாகப்பட்டினத்துப் புத்தப் பள்ளிக்குக் கொடுத்த லெயிடன் பட்டயங்கள் என்ற ஆணைமங்கலம் செப்பேடுகள்[3].

(3) சேரமான் வீரராகவச் சக்கரவர்த்தி இரவிகொற்றன் என்ற வர்த்தகனுக் களித்த கோட்டயம் பட்டயம்[4].

(4) சோழர்கள் காலத்திய கல்வெட்டுகள் சிலவும், மைசூர் சமஸ்தானத்தில் கிடைத்த கன்னடக் கல்வெட்டு ஒன்றும்[5].

(5) பர்மா நாட்டில் பகான் என்ற ஊரில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டொன்றும், சுமத்திரா தீவில் லோபோ—டாவா என்றவிடத்தில் கிடைத்த தமிழ்க்கல்வெட்டு ஒன்றும், சியத்திலுள்ள தக்குவா—பா என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டொன்றும் இக்கட்டுரைக்கு இன்றியமையாதவை[6].

3. தமிழகத்தின் வர்த்தகக் குழுக்கள்

நாம் இவண் எடுத்துக்கொண்ட காலவரையில் வர்த்தகம் எவ்வண்ணம் நடந்தது; அது யார் கையில் இருந்தது என்ற வினாக்கள் ஒருவருக்கு எழலாம். அக்காலத்தில் ஒவ்வொரு வர்த்தகனும் தனித்த முறையில் தன் தொழிலை நடத்திவரவில்லை. வெளிநாட்டு வர்த்தகத்துக்கு முக்கியமாக விளங்கிய முதலும், ஆட் கூட்டமும், இன்றியமையாதவை. வர்த்தகம் ஒருவரோ, இருவரோ, பெரும் பொருளைச் செலவிட்டுச் செய்யக்கூடிய வினையன்று. அராபியா முதல் சீனம் வரை

1. 'Ibu-Batuta' in "Broadway Travellers Series."
2. Travancore Archaeological Series Vol. II p. 9988.
3. "South Indian Archaeology" Vol. IV.
4. Epigraphia Indica, Vol. IV. pp 294, 295.
5. "Overgedrukt" Vol. LXXII pt. 2; "Pudukottah Inscriptions" No. 61; Epigraphia carnatica Vol. VII. Sk. etc.
6. Journal of Oriental Research Vol. VI; Over gedruk Vol. LXXII pt. 2, and Ep. Indica Vol. VII.

வித்துவான் அழகியசொக்கநாதபிள்ளை

இவர் இப்பாட்டை யென்னிடம் கூறியபோது இதனைப் பாடுதற் குற்ற சந்தர்ப்பத்தையும் கூறினர். அது வருமாறு:

இவர், ஒருநாள் காந்திமதியம்பிகை கோவிலுக்குப் போய்த் தெரிசனஞ் செய்தபின், அந்தத்தேவி சந்நிதியிலே, கொடிக் கம்பத் துக்குப் பக்கத்திலே அமர்ந்து, நியான பரராய்க் கண்மூடிக் கைக ளிரண்டையும் வரம் வேண்டும் பாவனையாக மலர ஏந்திக் கொண்டிருந் தார். அப்போது, கோவிலுக்குள்ளே சென்று சேவை செய்து அர்ச் சகர் கொடுத்த, அம்பிகை கையிற் சாத்தியிருந்த பூச்செண்டைப் பெற்ற ஒருவர் அதனை ஒரு சுமையாகக் கருதி யாரிடத்தில் கொடுக்க லாமென்ற கருத்துடன் வெளியே வந்தார். இவர் கையேந்தி யிருந் ததை அவர் கண்டு, அந்தச் செண்டை இவர் கையில் வைத்துவிட்டுப் போனர்.

இவ்வாறு, தற்செயலாகக் கிடைத்த செண்டைத் தெய்வச்செயலாய்க் காந்திமதியம்பிகையே கருணை கூர்ந்து அருளியதாகக் கொண்டு இவர் மேற்கூறிய பாட்டைப் பாடினர் என்பது கூறவேண்டியதில்லை.

இவர் 1885-ஆம் வருடத்தில் இறந்தார். அக்காலத்தில், யான், இவரை ஆதரித்த வள்ளலும் இணைபிரியா நண்பரும் எனக்கு மாமன் முறையினராக உறவு கொண்டாடிப் பேரன்பு புரிந்து வந்தவருமான இராசவல்லிபுரம் முத்துசாமியாபிள்ளைக்கு யான் இரங்கற்பாக்களாக எழுதிய நிருப கவிகள் சிலவற்றையும் இவர் பாடல்களிற் சிறந்த சில பாடல்களையும் இதனடியிலே தந்து இவர் வரலாற்றை ஒருவாறு முற்றுப் பெறச் செய்கின்றேன்

அழகிய சொக்கநாத பிள்ளை காலஞ்சென்றபோது இராசவல்லிபுரம் முத்துசாமியா பிள்ளைக்கு வே. ப. சுப்பிரமணிய முதலியார் எழுதிய நிருப கவிகள்.

ஆந்திரப் பதம்[1]போற் பதமின்றென் பவர் வாயடைபடச் சந்தமிழ்ப்
[பதம்போல்
ஆந்திரப் பத[2]மின் றெனப்புரிந் திட்ட வழகிய சொக்கநா தக்கோ
மாந்திர சத்தென் மொழிக்குநேரின்று வடமொழி யிதுதெரியாதே,
மாந்திர மமரர்களே வுரைத்திடற்கு வானநா டடைந்தனன் கொல்லோ.

மண்ணினிற் சிங்கக் குட்டியாஞ் சீனி வாசனு நியவிசை வாண
ருண்ணிய[3] வாக்கு -மமுதெனப் பாட வொப்பில்பல் பதந்தந்தோமினி
[மேல்
விண்ணினுரதன் றும் புருமுத லோர்க்கவ் விதம்பதந் தருதுமென் றேவிண்
ணண்ணினன் மிக்க வழகிய சொக்கநாதநா வலரினு யகனே.

1—தெலுங்குப் பதம், 2—ஆகிய உறுதியான பதம், 3—உண்ணுதற்கு

(3) "திருவெள்ளறை திருவாஜைக்கல் பெருமானடிகள் உச்சம் போது அமுது செய்தருளும்போது ஒரு பிராமணனை ஊட்டுவிதாக உறையூர் மணிக்கிராமத்து நாராயணன் ஆச்சன் இவ்வூர் கல்லால் வைத்த பொன் ஐம்பதின் கழஞ்சு"[1].

(4) "நங்கூருடையான் தொட்டகுளம். பேர் அவனி நாரணம் மணிக்கிராமத்தார்க்கும் சேனமுகத்தார்க்கும்.....பதார்க்கும் அடைக்கலம்"[2].

(5) "சாவாளரேப்போல நீ அகல போவும் சண்ணதம் வேணும் பெரிகெய்ப்போல் கோவாதலச்செட்டி அஞ்சுவண்ணம் கூட்டம் மணிக்கிராமத்தார் மக்கள்"[3].

மணிக்கிராமம் அஞ்சுவண்ணம் என்ற சொற்களின் பொருளைப்பற்றி வேறுபட்ட கருத்துக்களை அறிஞர் பலர் வெளியிட்டுள்ளார். டாக்டர் பர்னல் என்ற ஆங்கில அறிஞர், அஞ்சுவண்ணம் என்பது யூதர்களின் குழுவென்றும், மணிக்கிராமம் என்பது கிருத்துவ வர்த்தகக் குழுவென்றும் நினைக்கின்றனர்"[4]. மணிக்கிராமத்தார், மணிவாசகரால் கிருத்தசமயத்தினின்றும் சைவத்துக்குத் திருப்பப்பட்டாரின் கூட்டம் என்பது ரெவரண்டு பீட் என்பாரின் கருத்து[5]. டெயிலர் என்பார், மணிக்கியர் என்ற ஒரு கிருத்துவப் பிரிவினரின் கூட்டம், மணிக்கிராமம் என்று தமிழில் திரிந்ததோ என்று ஐயுறுகிறார்[6]. அஞ்சுவண்ணம் என்ற சொல்லை 'அஞ்சுமான்' என்ற அராபியச் சொல்லின் மாறுபாடென்று நினைத்து அஃதோர் அராபிய வர்த்தகக்குழுவோ என்றிடர்ப்படுவாரும் உளர்[7]. இவ்விரு வர்த்தகக் குழுக்களும் கிருத்துவ, யூத, முகமதியாரால் ஆக்கப்பட்ட கூட்டங்கள் அல்லவென்பதற்குத் திருவெள்ளறைக் கல்வெட்டும் தகுவா-பா கல்வெட்டும் சான்றும். திருவெள்ளறைக் கல்வெட்டில் உறையூர் மணிக்கிராமத்தான் நாராயணன் என்ற பெயரினையும் இருத்தலும், அவன், வேதம்வல்ல பார்ப்பனன் ஒருவனை உண்பிப்பதற்கு பொன்வைத்த செயலும்[8], தகுவா-பா கல்வெட்டில் அவனிநாரணம் எனப் பெயரிய குளத்தை மணிக்கிராமம் அஞ்சுவண்ணத்தார் பாதுகாப்பில் வைத்த செயலும் இவண் நோக்கத் தக்கன[9]. ஆகையால், அவ்விரு சொற்றொடர்களும் மதவேறுபாட்டை உணர்த்துவன அல்லவென்று நாம் அறியலாம். பொதுவாகக் கூறுமிடத்து, திரைகடலோடித் திரவியம் தேடுகின்ற வர்த்தகர்களுக்கு மதப்

1 Epigraphia Indica Vol 18, p 70
2 Journal of Oriental research Vol VI, p. 304
3 Epigraphia Indica Vol 18, p. 69
4 ibid p. 70
5 and 6 Op. cit. p. 70.
7 Overgedrukt vol LXXII, p. 4
8 see supra
9 see supra

பித்து என்பதே கிடையாது எனலாம். தன் மதத்தைத் தன்னுள்ளத் தளவில் நிறுத்தி, பிறர் மதங்களையும் மதிக்கும் தன்மையராய் இருந்தா லல்லது பிறநாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்து பயனடைதல் இயலாததாகும். மதத்தால் பிணிப்புறுத பலவர்த்தகக் குழாங்கள் தென்னாட்டிற்குக் கிருத்துவர், முகமதியர், யூதர் முதலானோர் வருதற்கு முன்னமே இருந்தன. அவைகளைப்போலவே இங்கே குடியேறின வெளிநாட்டு வர்த்தகர்களும் தமிழகத்தின் அரசர்களின் உதவியைக் கொண்டு மணிக்கிராமம் அஞ்சுவண்ணம் என்ற குழுக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம் என்று நினைக்க இடமிருக்கிறது.

5. இக்குழுக்களைப்பற்றிய சில செய்திகள்

மைசூர் சமத்தானத்தில் கிடைத்த கன்னட கல்வெட்டொன்றில்[1] தென்னிந்திய வர்த்தகக் குழுக்களைப் பற்றிய விவரங்கள் நன்கு புலப் படுகின்றன. "ஐஞ்ஞூற்றுவர் மெய்க்கீர்த்தி" என்று அக்கல் வெட்டுக்குப் பெயர். இவ்வர்த்தகக் குழுக்களின் அங்கத்தினர் வாசு தேவன், கந்தழி, மூலபத்திரர்களின் குலத்துதித்தோர் என்றும், பகவதியிடம் வரம்பெற்றோர் என்றும், கவரை, காத்திரிகை, செட்டி, செட்டிபுத்திரர், அங்ககாரர், வீரர், வீரவணிகர், கண்டிகர், கவுண்டர் கவுண்டசாமி, என்ற பட்டங்கள் பெற்றோர் என்றும், அக்கல்வெட்டு அறிவுறுத்துகிறது. அவர்கள், பதினெட்டு பட்டணங்களும், முப்பத் திரண்டு விளார்புறமும், ஐஞ்ஞூறு வீரசாசனங்களும் பெற்றவர்கள். அப்பட்டணங்களிலெல்லாம் வர்த்தகக் குழுவினர் தன்னரசு செலுத் தினர். அத்தகைய தன்னரசு நிலவிய நகரங்களுக்கு 'எறிவீரப் பட்டணங்கள்' என்ற பெயர் உண்டு என்பது கீழ்வரும் கல்வெட்டுக் களால் அறியலாம். பசனிதொண்டாவில் கிடைத்த முதலாம் இராசாதி ராசன் கல்வெட்டொன்றில், ஐஞ்ஞூற்றுவர் கூடி அவ்வூருக்கு "நாஞ் தேசிய தசமடி எறிவீரப் பட்டிணம்" என்று பெயரிட்டனர் என்று காண்கின்றோம்[2]. மயிலாப்பூரில் பதினென்றும் நூற்றாண்டில் இருந்த வர்த்தகக் குழுவினர் அய்யப்புழல் காட்டூர் என்ற ஊரை வீரபட்டிண மாகச் செய்துகொண்டனர் என்று நாம் அறிகிறோம்[3]. அக்காலத்திய அரசர்களும் வர்த்தகக்குழுவினர் வதிந்த பட்டிணங்களின் ஆட்சியை அவர்களுக்கே கொடுத்து அவர்களுடைய தனி அரசில் தலையிடாமல் இருந்தனர்.

தென்னிந்திய வர்த்தகக் குழுவினர் பலவகை விலையுயர்ந்த பொருள் களைத் திரட்டிக்கொண்டு பல நாடுகட்குச் சென்று வாணிபஞ் செய்த வரலாற்றை மேற்கூறிய கன்னடக் கல்வெட்டுக் கீழ்வருமாறு உரைக் கின்றது. "சேர, சோழ, பாண்டிய, மலைய, மகத, கோசல,

1 Epigraphia carnatica vol VII Sk. 101
2 ARE 342 of 1912
3 ARE 256 of 1912

சௌராட்டிர, தஞ்சுட்ர, குறும்ப, காம்போச, கௌள, லாள, பர்வ்வர, பாரசீக, நேபாள, ஏகபாத, லம்பகர்ண, ஸ்திரீராச்சிய, முதலிய நாடுகளுக்கு நிலவழியாகவும், நீர்வழியாகவும் சென்று, தேர்ந்தெடுத்த யானைகளையும், உயர்ந்த குதிரைகளையும், இந்திரநீலம், சந்திரகாந்தம், முத்து, ஆணிக்யம், வயிரம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம், பத்மராகம், பவளம், மரகதம், கார்க்கேதம் முதலிய மணிகளையும், ஏலம், இலவங்கம், மலகசா, அகில், சந்தனம், கற்பூரம், கத்தூரி, குங்குமம்'' முதலிய விரைப்பொருள்களையும் விற்று, வாங்குவன வாங்கி மீண்டும் அவர்கள் தென்னிந்தியாவை அடைவது வழக்கம். தமிழ் வணிகர் இந்தியப் பெருங்கடலைச் சுற்றியுள்ள பல நாடுகளோடு வர்த்தகம் செய்தனர் என்பதற்கு ஆதாரமாக, பர்மா, சீயம், சுமத்ரா என்ற நாடுகளில் தமிழ்மொழியில் எழுதப்பட்ட சில கல்வெட்டுகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. சீயத்தில், தகுவா-பா என்ற விடத்தில் அகப்பட்ட கல்வெட்டினின்றும் சில வரிகளை முன்னமே இக்கட்டுரையில் எடுத்தாண்டுள்ளோம். அஃதொழிந்த மற்றைய இரண்டுள், சுமத்ரா தீவில் லோபா-டோவா என்ற விடத்தில் கிடைத்த கல்வெட்டைப்பற்றி திருவாளர் வெங்கையா அவர்கள் சில குறிப்புகள் எழுதியுள்ளார். அக்கல்வெட்டு சக ஆண்டு 1010-க்கு நேரான கி. பி. 1088-ல் வெட்டப் பட்டது. அதிலிருந்து ''ஆயிரத்தைஞ்ஞூற்றுவர்'' என்ற வர்த்தகக் குழுவினர் அக்காலத்தில் சுமத்ராவில் தங்கி வர்த்தகம் புரிந்தனர் என்று நாம் அறியலாம். பர்மாவில் பகான் என்ற ஊரில் கிடைத்த கல்வெட்டு மேற்கூறிய இரண்டையும்விட காலத்தால் பழமையுடையது. இக் கல்வெட்டு சேரமான் குலசேகர ஆழ்வாரின் ''முகுந்தமாலா'' என்ற வடமொழி நூலிலுள்ள சில வரிகளோடு தொடங்கி, கீழ்க்கண்ட தமிழ்ப் பகுதியோடு முடிகின்றது. ''திருச்செல்வம் பெருக! புக்கம் ஆன அரிவர்த்தனப்புரத்து (அரிமர்த்தனப்புரம்) நாணதேசி விண்ணகர் ஆழ்வார் கோயில் திருமண்டபமுஞ் செய்து திருக்கதவும் இட்டேன், மலைமண்டலன்னுந்தாய மகோதையார் பட்டணத்து ஈராயிரன் சிறியனை சீகுலசேகர நம்பியேன்''[1].

சீயத்தில் கிடைத்த கல்வெட்டில் ''சேனமுகம்'' என்றொரு சொற்றொடர் இருக்கின்றது. சேனமுகம் படையின் முன்னணியென்ற பொருளைக் கொடுப்பதாய் இருப்பினும், படைவீரர் தங்கியிருக்கும் இடத்திற்கும் அப்பெயர் பொருத்த முடையதே. இதினின்று நாம் அறிந்துகொள்வது என்னெனின் வர்த்தகக்குழுக்கள் வெளிநாடு செல்லும்போது, படைத்துணையோடு சென்றுசென்பதே. பசனிகுண்டா கல்வெட்டில் காணும் ''நான்கு திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவப் பெருஞ் சமையமும், இச்சமையத்து திருவடிக்குப் பணிசெய்யும் எறிவீரரும், கொங்கவாளாரும்'' என்ற சொற்கள் அதையே வலியுறுத்துவனவாம். அக்காலத்தில் நிலவழிகளும் நீர் வழிகளும்

1 Ephigraphia Indica vol VII, pp 197 ff

கொள்ளைக்காரர்களால் சூழப்பட்டிருந்தன. அராபிக்கடலிலும், சீனத்துக்குச் செல்லும் வழியிலுள்ள சில கடல்களிலும் கப்பற் கொள்ளைக்காரர்களால் வர்த்தகர்களுக்குப் பெருந்துன்பம் ஏற்பட்ட தென்று இரண்டாம் நூற்றாண்டிலிருந்த டாலிமி தன் "உலக நூலின்" கண் எழுதியுள்ளார்.

6. வர்த்தகக் குழுக்களும் பொதுமக்கள் சேவையும்

வர்த்தகமே பெருந்தனம் ஈட்டுதற்குத் தக்கவழியென்பதும், என்றைட்டிலும் வர்த்தகரே பெருந்தன மக்கள் என்பதும் யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதோர் உண்மை. பொருளைத்தேடி வறிதே புதைத்து வைக்காமலும் பயனற்ற தன்னலத் துறைகளில் செலவிடாமலும், பொதுமக்களின் நன்மைக்கே அவர்கள் செலவிடுவதை ஐரோப்பா, அமெரிக்கா தேயங்களில் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அதுவே போல் தென்னிந்தியாவில் அன்றும், சிறிதளவு இன்றும் பெரும்பணக்காரரான வர்த்தகர்கள் தாம் அரிதில் ஈட்டிய செல்வத்தைப் பொது நன்மைக்கே பயன்படுத்தினர், பயன்படுத்துகின்றனர். நாம் மேலே அடிக்கடி யெடுத்தாண்ட கன்னடக் கல்வெட்டினின்றும் நாம் அறிவது என்னவெனின், அவர்கள் பலயோக பீடங்கள் சமைத்ததும், நான்கு சமயமும் ஆறு தர்சனங்களும் அறிந்த "முனிஜனங்களுக்கு" உதவினதுமே. நாடாள்கோவுக்குப் பொன்னும் மணியும் குவியல்குவியலாய் ஈந்து அவர்கள் ஏழைமக்களின் வரிச்சுமையைத் தணித்தனர். பிறநாடுகளிலும் இந்துசமய முறைப்படிக் கடவுளை வணங்குதற்கு ஏதுவாக பர்மா, சீயம் முதலான நாடுகளில் திருமாலுக்குக் கோயிலும் எடுத்து, குளமுந் தொட்டு தென்னிந்திய நாகரிகத்தைச் சென்றவிடமெல்லாம் பரவச்செய்தனர். அவர்களுக்கு எல்லா சமயங்களும் ஒன்றே என்பது தாணுரவி பட்டயத்தில் சபீர் இசோ எடுத்த தெரசா பள்ளியைப் பாதுகாக்கும் தொழிலை மணிக்கிராமத்தார் மேற்கொண்டதிலிருந்து நாம் அறியலாம்[1].

7. அரசர்களும் வர்த்தகக் குழுக்களும்.

தம் நாட்டு வர்த்தகர்கள் பிறநாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசனின் பாதுகாப்பில் வர்த்தகஞ் செய்யவேண்டுமானால், தாமும் அயல் நாட்டிலிருந்து தம் நாட்டைச்சேர்ந்து வர்த்தகஞ் செய்வோர்க்கு அடைக்கலம் அளித்தல்வேண்டும். அவ்விதம் வந்தடைந்த வர்த்தகர்கள் தத்தம் சமய நெறிபிறழாது ஒழுகுதற்கு, அரசர்களின் ஆதரவு வேண்டும். இத்தகைய உரிமைகளை நந்தமிழ் நாட்டரசர்கள் அவர்கட்குக் குறையாது கொடுத்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தாணுரவி சபீர் இசோவுக்கு திருத்துவப்பள்ளி ஒன்றை கொல்லத்தில் எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுத்ததுமன்றி, பல இந்து

1 See supra

தொழிலாளர்களின் குடும்பங்களையும் அப்பள்ளிக்குப் பணிசெய்யக் கொடுத்ததுவும் இவண் கூறத்தக்கது. கொச்சின் பட்டயத்தில் காணப் படும் சோசப் ரப்பான் என்ற யூதனுக்கு சேரமான் பாஸ்கர ரவிவர்மன் கொடுத்த சலுகையும் இங்கே நோக்கத்தக்கது. இபன்—பதூதாவின் யாத்திரை நூலிலிருந்து, கோழிக்கோடு, கொல்லம் முதலான இடங் களில் முகமதியர்களின் மசூதிகள் இருந்தனவென்று நாம் அறி கிறோம்[1]. ஸ்ரீவிஷயம், ஸ்ரீவிஜயம், பாலம்பங்க் என்ற வேறுபட்ட பெயர்களையுடைய பேரரசு[2] ஒன்று, மலையம், சுமத்ரா, சாவகம் முதலான நாடுகளில் நிலவிய காலத்தில் அப்பேராசில் தலைமை வகித்த சைலேந்திர குலத்தினரில் ஒருவனன மாறவிசயோத்துங்கவர்மன். சோழநாட்டுத் துறைமுகமாகிய நாகப்பட்டினத்தில் தன்னாட்டு வர்த்தகர்களுக்காக புத்தப்பள்ளி யொன்று கட்டுவதற்கு வயங்குபுகழ் வளவன், முதலாம் இராசராசனை வேண்டிக்கொள்ள, அவ்வேண்டு கோளுக்கு இணங்கினதும் அன்றி, இராசராசன் ஆனைமங்கலம் என்ற ஊரின் பெரிய வருவாயையும் அப்பள்ளிக்கு அளித்தனன்[3].

இனி, வெளிநாட்டாரில் சிலருக்கு நம் நாட்டரசர் தம் அரசியலின் உயர்ந்த பதவிகளை அளித்து, அவர்கள்பால் மாறு நம்பிக்கையுடைய ராயும் இருந்தனர். முதலாம் இராசேந்திர சோழனின் கோலார் கல்வெட்டொன்றில் செதுக்கப்பட்ட கீழ்வரும் வரிகள் இங்கே பொருத்த முடையன. "திருமந்திர ஓலைநாயகம் கங்கைகொண்ட சோழபுரத்து ராஜவித்தியாதரப் பெருந்தெருவில் சோநகன், சாவூர் பரஞ்சோதி[4]." இங்கே, சோநகன் என்றசொல் கிரேக்கமொழியில் 'ஐயோனியன்' என்ற சொல்லின் திரிபென்று அறிஞர் எண்ணுகிறார்கள். ஐயோனியன் என்றால் பண்டைக் காலத்தில் ஆசியாகண்டத்திலிருந்த கிரேக்கர்களைக் குறிக்குமெனினும் மேல் எடுத்தாண்ட கல்வெட்டின் காலத்தில் அச் சொல் தென்னிந்தியாவில் அராபியரையே சுட்டிற்று. பதினன்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரையை ஆண்டுவந்த குலசேகர பாண்டியனிடத்தில் தகியுடன் என்ற பிள்ளைப்பட்டம் தாங்கிய முக மதியன் ஒருத்தன் உதவியமைச்சனாய் இருந்தான் என்று அப்துல் வாசாப் கூறுகிறார்[5].

இனி, தமிழகத்துக்குப் புறம்பிருந்து போந்தாரைப் போற்றுத லோடு அமையாது, நம் அரசர்கள் தம்நாட்டு வர்த்தகர்களில் சிறந்தி லங்குவோரையும் ஓம்பினர் என்பதைக் கீழ்வரும் பட்டயம் வலி யுறுத்தும். "மகோதையார் பட்டணத்து இரவிகொற்றனை

1 'Ibu-Batuta' (Broadway Travellers) pp 234, 235, 236
2 "The Greater India Society Journal" vol I pp 15 ff
3 South Indian Archaeology vol IV for Larger and Smaller Leiden grants edited by Burgess and Natesa Sastry
4 Epigraphia carnatic Vol X Kolar Inscription No III
5 Elliot and Dowsan's History of India, Vol. III, p. 32

சேரமான் உலோகப் பெருஞ்செட்டிக்கு மணிக்கிராமப் பட்டம் கொடுத்தோம்.....வலஞ்சியமும், வலஞ்சியத்தில் தனிச்செட்டும், ஊர்ச் சொல்லும், முன்னடையும், அத்தோளமும், நாலு சேரிக்கும் தனிச் செட்டுங் கொடுத்தோம்.....'' இவ்விரவிக் கொற்றன், இவைபோன்ற இன்னும் பல உரிமைகளைப் பெற்று, மகோதையார் பட்டினத்துக்குத் தலைவனாகவும், சுங்கம் வாங்குவோனுமாய் விளங்கினன்[1].

பிறநாடுகளுக்கு வர்த்தகத்தின் பொருட்டுச் சென்ற வணிகர்க்கு, அவற்றின் அரசரால் துன்பம் விளைந்தகாலத்து அவர்களையும், அவர்கள் தொழிலையும் நிலைநிறுத்துவதற்காக நம் நாட்டரசர்கள் படையெடுத்துச் செல்லுதல் உண்டு. முதலாம் இராசேந்திரன் ஸ்ரீ விஷயநாட்டையாண்ட சங்க்ராம விசயோத்துங்கன் மேல் போரெடுத்தது, இடர்ப்படும் தன்னாட்டு வணிகரைக் காப்பாற்றுதற்கே என்று எண்ண இடமிருக்கிறது[2].

தம் நாட்டின் வர்த்தகத்தைப் பரப்புதற்கு நந்தமிழ் அரசர் பிற நாடுகளுக்குத் தூதனுப்புதல் உண்டு. கி. பி. முதல் நூற்றாண்டிலேயே பாண்டிய மன்னன் ஒருவன் உரோம பேரரசனை அகஸ்டஸ் என்பானுக்குத் தூது அனுப்பினதாக கிரேக்க நூலொன்று உரைக்கின்றது. அதுவேபோல் சோழர்கள் பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் சீனத்துக்குத் தூதுவிடுத்தனர் என்று சீன நூல்கள் புகலும். கி.பி. 1015, 1020, 1033, 1077-ஆம் ஆண்டுகளில் சோழர்கள் தூதர்கள் மூலம் விலையுயர்ந்த பரிசுகளைச் சீன அரசவைக்கு அனுப்பினர்[3]. இதிலிருந்து சோழர்கள் சீனப்பேரரசுக்குக் கட்டுப்பட்டவர் என்று முடிவுசெய்தல் பொருந்தாத உரையாகும்; ஏனெனில், வர்த்தகப் பெருட்டும் தூதர்களை விடுத்தல் உண்டு.

8. தென்னிந்திய வர்த்தகமும் அராபியரும்

இந்தியப் பெருங்கடலில் வாணிபம் செய்தவர்களில் தலைசிறந்தவர் அராபியராம். அவர்களுடைய விரிந்த வர்த்தகத்திற்கு ஏற்றவண்ணம் அவர்கள் நாடும் இரண்டு பெரும் பூப்பகுதிகளுக்கு இடையே இயற்கையாக அமைந்திருக்கின்றது[4]. யவனர் தமிழகத்தோடு வர்த்தகம் செய்யத் தொடங்குமுன்னரே, அராபியர் நம்நாட்டொடு வர்த்தகம் செய்துவந்தனர். பருவக்காற்றுகளின் பயனை உலகில் முதல்முதல் அறிந்தவர்கள் அராபியரே. தென்மேற்குப் பருவக்காற்று வீசும்போது அராபியாவில் இருந்து புறப்பட்டுத் தென்னிந்தியாவை யடைந்து வர்த்தகம் செய்து பின் வடகிழக்குப் பருவக்காற்றோடு அவர்கள் தம் நாடுபோய்ச் சேர்வர். முகமதுநபி பிறக்குமுன்னரே அராபிய வர்த்தகம்

1. See Supra.
2. See Professor, K. A. N. Sastri's "Colas" Vol. I.
3. "Chaw-Jw-kua" pp. 96 and f. n. 12 of p. 101.
4. "An Arab Account of India in the 14th Century" by Otto. Spies, p. 1.

தென்னிந்திய வணிகம்

மேற்கே ஸ்பெயினிலிருந்து கிழக்கே சீனம்வரை விரிந்தது. கி.பி. 300-ல் அராபியர்கள் காண்டன் என்ற சீனத்தலைகரில் குடியேறி இருந்தனர் என்று சீன நூல்களிலிருந்து நாம் அறிகிறோம்[1].

முகமது நபி நிறுவின மதத்தைப் பரப்பின பின்னர் அராபிய வர்த்தகம் முன்னினும் பன்மடங்கு தழைத்தோங்கிற்று. சர்-டி-ஆர்னல்டு என்பார், அராபியரின் வர்த்தக முன்னேற்றத்திற்குக் கீழ்க் கண்ட காரணங்களைச் சொல்லுகின்றனர்[2]:—

(1) முகமதுக்குப் பின்தோன்றின கலீப் என்ற பட்டம்பெற்ற அரசர்களின் கீழ் அராபியரின் ஆட்சி கிழக்கே சிந்து நதிக்கரையிலிருந்து மேற்கே அட்லான்டிக் பெருங்கடலின் கரைவரை அகன்றிருந்தது. அரசியல் பொருட்டு அதிகாரிகள் அவ்விரிந்த நிலப்பகுதியில் அடிக்கடிச் சுற்றுப் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அதனால் அராபிய வர்த்தகம் கடல்போல் பரந்தது. "வர்த்தகம் கொடியைப் பின்பற்றுகிறது" என்ற ஆங்கிலப் பழமொழியின் உண்மை இவண் காணலாம்.

(2) முகமதிய மதமும் இவ்விதச் சிறப்புக்கும் விரிவுக்கும் தூண்டுகோலாய் இருந்தது. அம்மதத்திற்கு அதன் புறம்பாய் உள்ளோரைக் கொண்டுவரவேண்டும் என்ற கட்டளையை முகமது பிறப்பித்தவுடன், முகமதிய அரசர்களும், சாதாரண மக்களும் தம் மதத்தைக் கத்தி முனையில் பரப்பினர். மதம் விரிந்ததினால் வர்த்தகமும் விரிந்தது.

(3) மேற்சொன்ன இரண்டிலும் சிறந்த காரணமாவது முகமதிய மக்களிடத்து வர்த்தகர்களுக்கு இருக்கும் சீரும் செல்வாக்குமே. "தலைசிறந்த மதாசாரியர்க்கு ஒப்பானவர் வர்த்தகர்கள்" என்றும், "அல்லாவின் உண்மைத் தொண்டர்" என்றும் முகமது நபியே கூறியுள்ளார். "ஒருவன் கல்ல நெறியுடையனா அல்லவா என்றறிதற்கு வர்த்தகமே உண்மையான சோதனை. கொண்டு கொடுக்கும் போதே ஒருவனின் அன்பும், சமயதிட்பமும் வெளியாகும்", என்றும், "நான் இறக்கவேண்டி இருந்தால், அங்காடித் தெருவில் உவகையுடன் இறப்பேன்", என்றும் காலிப் ஓமார் கூறுமிடத்து, அரசர்கட்கும் வர்த்தகத்தில் பெருமதிப்பு இருந்தது என்று நாம் சொல்லாமலே விளங்கும்.

இவையன்றி, அராபியர்நாடு பாலையாய், இயற்கையில் அமைக்கப் பட்டிருந்ததும் இவ்வர்த்தக மேன்மைக்குத் தக்க காரணமாகும்.

---

1. "Chaw-Jw-kua" p. 4
2. pp 90—93 of Arnold's chapter on "Arab Travellers and Merchants" in "Travel and Travellers of the Middle Ages" edited by A. F. Newton.

அராபியரின் முக்கிய துறைமுகப் பட்டினம், செங்கடலுள் நுழையும் வாயிலில் அமைக்கப்பட்டிருந்த ஏடன்; அவ்வூரில் பலநாட்டினர் குழுமி இருந்தனர் என்றும், தென்னிந்திய வர்த்தகர்களும் அவண் இருந்தனர் என்றும் அறியக்கிடக்கின்றது[1]. அராபியர் அங்கிருந்து புறப்பட்டு, சிற்ருசியா, பாக்டாடு, மோசல், டமாஸ்கஸ், பாஸ்ரா, சோமாலி முதலிய இடங்களில் கிடைக்கும், பொன்னிழையால் புனைந்த விலையுயர்ந்த ஆடைகள், டமாஸ்கஸ் நகரத்தில் செய்யும் புகழ்பெற்ற பட்டுத்துணி, வேலைப்பாடமைந்த கண்ணாடிப் பொருள்கள் ரோசாப் பூவிலிருந்து எடுத்த பனிநீர் அத்தர் போன்ற நறுமணப் பொருள்கள், நறுநாற்றம் பொருந்திய மரப்பிசின்கள், பெருங்காயம், காண்டாமிருகத்தின் கொம்பு, இவைபோன்ற மற்ற விலையுயர்ந்த பொருள்களையும் தம் கலங்களில் ஏற்றிக்கொண்டு, "மிளகுநாடு"[2] என்று அராபிய நூலாசிரியர்கள் எல்லோராலும் புகழ்ந்து கூறப்பட்ட சேர நாட்டுக் கடற்கரைப் பட்டினங்களான கொல்லம், கோழிக்கோடு, முதலியவைகளை அடைந்து, பின் பாண்டி நாட்டுத் துறைமுகமாகிய காயலுக்குச்சென்று, அவணிருந்து சோழநாட்டுத் துறைமுகங்களான தொண்டி, பாசி, நாகப்பட்டினம், காரைக்கால், காவிரிப்பூம்பட்டினம் முதலியவற்றைச் சேர்வார்கள். பின், வடகிழக்குப் பருவக்காற்று வீசுகின்ற காலத்து, மலைபடு பொருள்களான மிளகு, ஏலம், இலவங்கம், இஞ்சி, சந்தனம், அகில், சப்பான் மரம், தேக்குமரம் முதலியவைகளாலும், கடல்படு பொருள்களான முத்து, 'பூனைக்கண்' என்ற மணிகளாலும், சோழநாட்டில் செய்த நூலும் பட்டும் விரவிய பூந்துகில்களாலும்[3] தம் கலங்களை நிரப்பிக்கொண்டு, அராபியாவை அடைந்து, அவணிருந்து, எகிப்து நாட்டில் சிறந்து விளங்கிய அலக்சாண்டிரியா துறைமுகத்துக்கும், பாஸ்ரா, மோசல், இராக், பாக்டாட், சிற்ருசியா முதலான இடங்களுக்கும் அப்பொருள்களை அனுப்புவர்.

9. தென்னிந்தியாவோடு அராபியர் நடத்திய குதிரை வர்த்தகம்

அராபியர் நம் முன்னோருடன் நடத்திய வர்த்தகத்தில், அவர் கட்குப் பெரிய வருவாயைக் கொடுத்தது குதிரை வர்த்தகமே. நம் நாட்டரசர்களான சேர, சோழ, பாண்டியர்கள் எக்காலத்தும் போர் மேற் செல்லுதலில் விருப்பமுடையராய் இருந்ததால், படைக்குக் குதிரைகள் வாங்கவேண்டியிருந்தது. இக்குதிரை வர்த்தகத்தைப்

1 'Ibu-Baputa" p. 110. Otto Spies says that there were large colonies of Indian merchants at Cairo and Alexandria (op-cit-p 5)

2 Sulaiman an Ialqashandi (History of India vol I p. 7 and Otto Spies, p. 35.

3 The second part of "Chaw-Ju-kua" Contains an excellent and useful account of various articles of commerce obtainable in different countries.

பற்றி மார்க்கோ போலோவும் அப்டுல் வாசாபும் தத்தம் நூல்களில் விரித்து எழுதியுள்ளார். அவர்கள் கூற்றுகளை அப்படியே இவண் எடுத்து எழுதுகிறேன்.

மார்க்கோ போலோ சொல்வதாவது[1]; "இந்நாட்டினர் குதிரை வளர்ப்பதில்லை; ஆகையால் ஆண்டுதோறும் குதிரைகளை இறக்குமதி செய்வதில் கணக்கில்லாத பொருளைச் செலவிடுகின்றனர். கிஷ், ஹார்முஸ், டோபிர், சோபிர், ஏடன் முதலான பட்டினங்களில் உள்ளார் பெருந்தொகையான குதிரைகளைத் தொகுத்து, சுந்தரபாண்டியனும், அவன் தம்பிகளும் ஆள்கின்ற நாட்டுக்கு அவைகளை அராபியர் கொணர்கின்றனர். அங்கு ஒரு குதிரைக்கு 500 'சாகி' பொன் கொடுத்து அதை (தென்னிந்தியர்) வாங்குகின்றனர். ஐந்து அரசர்களும் ஆளுக்கு 2000 குதிரைகள் ஆண்டுதோறும் வாங்குகின்றனர். அவ்வளவு குதிரைகள் அவர்கள் வாங்குதற்குக் காரணம் என்னவெனின் ஆண்டு முடிவுக்குள் நூறு குதிரைகள் கூட மீந்திருப்பதில்லை. அவையெல்லாம் இறந்துவிடுகின்றன. குதிரையை எவ்வண்ணம் நடத்துதல் என்று அவர்கள் அறியார்; அவர்கள் நாட்டில் இலாடம் அடிப்பார் கிடையா. அராபிய குதிரை வர்த்தகரும் தம் நாட்டு இலாடக்காரர் தென்னிந்தியா செல்லாமல் பார்த்துக்கொண்டனர்."

அப்புல் வாசாப் எழுதியதாவது[2]: "மல்லிக் இஸ்லாம் ஜலாலுடினுக்கும், அராபிய குதிரை வர்த்தகருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி ஆண்டுதோறும் கிழ்த் தீவிலிருந்து 1400 குதிரைகள் மாபாருக்கு கொணர்ந்து இறக்கவேண்டும். ஒரு குதிரையின் விலையாவது 220 செம் பொன் டினர் எனத் திட்டம்செய்துள்ளார். அபுபக்கர் அரசாண்ட காலத்தில் ஆண்டுதோறும் 10,000 குதிரைகள் மாபார், கம்பாயத் முதலான இடங்களுக்கு ஏற்றுமதியாயிற்றென்றும், அவற்றின் விலை 2,200,000 என்றும் அராபிய நூலாசிரியர்கள் கூறுகின்றனர்"

"குதிரைகள் அவண் அடைந்தவுடன், அவைகட்குப் பச்சையாய் உள்ள பார்லி அரிசியைக் அருத்தாமல் நெய்யளைந்த பார்லியையும், காய்ச்சின பசுவின் பாலையும் கொடுக்கின்றனர்"

'யாரே கண்ணிலைக் காக்கைக் களிப்பர்?
யாரே பிணந்தினைக் கிள்ளைக் களிப்பர்?
பிணத்தைக் காக்கைக் கிடல் வேண்டும்
கன்னிலைக் கிள்ளைக்கிடல் வேண்டும்.
யாரே கழுதைக் கணிகல னிடுவர்?
யாரே பசுவினுக்கு வாதுமை யளிப்பர்?'

"அவர்கள், குதிரைகளை நாற்பதுநாள் கொட்டிலில் கயிறுகளினால் கட்டி

1 "Marco Polo" vol II p. 385 ff.
2 Elliot and Dowsen, "History of India" vol III p 33 ff

கொழுக்கும்படிச் செய்கின்றனர். அதற்குப் பின்னல் அவற்றை வெளியிற் கொணர்ந்து பழக்காமலும், சேணமிடாமலும், தென்னிந்தியப் போர்வீரர்கள் பைசாசங்கள் போல் சவாரி செய்கின்றனர். சில காட்களில் வலியும், வேகமும், சுருசுருப்பும் உடைய குதிரைகள் மெலிவடைந்து, தளர்ந்து, பயனற்றனவாகின்றன.....ஆகையால், குதிரைகளை அடிக்கடி இறக்குமதி செய்யவேண்டிய காரணம் ஏற்படுகிறது".

10. சீன வர்த்தகம்

தென்னிந்தியாவுக்கும் சீன தேயத்துக்கும் இடையே நடந்த வர்த்தகம் பலநூற்றாண்டுகளாக அராபியரிடம் இருந்தது. ஏழாவது நூற்றாண்டின் தொடக்கத்திலே தான் சீனர் ஆண்டொரு முறையாவது தூரதேயங்களுக்குக் கப்பல்களை அனுப்ப ஆரம்பித்தனர்[1]. சீனர் புத்த சமயத்தினர் ஆனபடியாலும், அவர்கட்கு இந்தியா புண்ணிய பூமியானபடியாலும், அவர்களில் சிலர் அடிக்கடி இந்தியாவுக்குப் போந்து புத்தரின் பிறப்பிடம் முதலான தலங்களைக் கண்டு செல்வது வழக்கம். ஏழாவது நூற்றாண்டுக்குமுன் இந்தியாவுக்கு வந்தவர்கள் தரைவழியாய் வந்து கொண்டிருந்தாலும், அதற்குப்பின் வந்தவர்கள் நீர்வழியாய் வரத் தலைப்பட்டனர். அவர்கள், கான்டன் பட்டினத்திலிருந்து புறப்பட்டுச் சுமத்ராவை யடைந்து, அங்கிருந்து நேர் மேற்கே சென்று ஈழத்தீவை யடைந்து, அங்கிருந்து மலையாளத்திலுள்ள கொல்லத்துக்கும், வட இந்தியாவிலுள்ள தாம்ரலுக்குக்கும் செல்வது வழக்கம்[2]. சீனத்திலிருந்து இந்தியாவுக்கு நீர்வழியாய் வருதற்கு மூன்று திங்களாகும்.

சீனவர்த்தகம் தழைக்கத் தழைக்க கான்டன் பட்டினத்துக்குப் பல நாட்டுக் கலங்கள் வர ஆரம்பித்தன. அதனால் சீன அரசியலுக்குப் பெருத்த வருவாய் கிடைத்தது. இவ்வருவாயைப் பாதுகாக்கவும், சுங்கம் வாங்கவும், வெளிநாட்டு வர்த்தகரைக் கண்காணிக்கவும், கப்பல் வர்த்தகச் சோதனையாளர் என்ற ஓர் அதிகாரியை அரசாங்கத்தார் நியமித்தனர்[3].

சீனக்கப்பல்கள் "சங்க்" எனப்படும். அவை பிறநாட்டுக் கலங்களைக் காட்டிலும் உருவத்தில் பெரியவை. சீனவர்த்தகர், கான்டனிலிருந்தோ, செயிட்டனிலிருந்தோ புறப்படும்போது, அழகிய சித்திர வேலைப்பாடமைந்த சீனக் கோப்பைகளையும், விலையுயர்ந்த பட்டாடைகளையும் தம் கலங்களில் ஏற்றிக்கொண்டு, வரும்வழியிலுள்ள சம்பா, சீயம், மலையம், சுமத்ரா, சரவகம் முதலான இடங்களில் சிறப்

1 "Chaw-Ju-kua" p.8
2 Op-cit p. 9.
3 ibid p. 9.

பாகக் கிடைக்கக்கூடிய ஈயம், செம்பு, ஆமையோடு, பவளம், அகில், கரிக்கோடு, கறுமணங்கமழும் மரப்பிசின்கள் முதலிய பொருள்களையும் ஏற்றிக்கொண்டு, தென்னிந்தியாவிலுள்ள நாகப்பட்டினம், கொல்லம், கோழிக்கோடு, மங்களூர் முதலான துறைமுகங்களைச் சேர்வார்கள். வடகிழக்குப் பருவக்காற்று வீசுங்காலத்தில் சீனர் இந்தியாவுக்குப் போந்து, மழைகாலத்தைத் தமிழகத் துறைமுகங்களில் கழித்துப் பின் தென்மேற்குப் பருவக்காற்றுடன் தம் கலங்களைச் செலுத்திச் சீனத்தை யடைவர்.

சீனதேயத்துக்கு நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் முக்கியமானவை முத்தும் மிளகுமே. மிளகு ஏற்றுமதியைப் பற்றிச் சொல்லுமிடத்து, "அலக்சாண்டிரியா துறைமுகத்துக்கு ஒரு கப்பல் மிளகு போகுமானால், சீனத்துக்கு அதுபோல் நூறு மிளகு கப்பல்கள் சீனத்திலுள்ள செயிட்டன் துறைமுகத்துக்குச் செல்லும்" என்று ஓர் ஆசிரியர் கூறுகிறார்[1]. மேற்சொன்ன பொருள்களைத் தவிர மலையாளத்தின் விரைபொருளும், நீலமும்,[2] உரையூரில் செய்யப்பட்ட பூக்துகிலும், சோழநாட்டில் சில இடங்களில் செய்யப்பட்ட கண்ணாடிச் சாமான்களும், பாக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. "சோழ நாட்டுத் துறைமுகங்களில் இறக்குமதியாகும் பொருள்கள்மேல் அதிக மான சுங்கம் போடப்படுவதால் பிறநாட்டு வர்த்தகர்கள் அங்கே போவதில்லை" என்று சௌ-சு-குவா கூறுகிறார்[3]. பதின்மூன்றும் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சோழப் பேரரசு வீழ்ந்துபோனதினால், நாடு சீர்கேடுற்றகாலை பல்வேறு சிற்றரசர்கள் தலைக்குத்தலை அதிகாரம் செய்ய ஆரம்பித்ததினால் விளைந்த கேடாயிருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது.

சோழநாட்டுத் துறைமுகப் பட்டினங்களில் பண்டைகாலத்தில் தலை சிறந்து விளங்கிய புகார், கடல் வெள்ளங்களால் சிதைக்கப்பட்டு புகழ் குன்றி மங்கிக் கிடந்தது. ஆகையால், மார்க்கோ போலோ தன் நூலில் "பட்டினம்" என்று கூறுமிடத்தும், இபன் பதூதா "பட்டினம்" என்று சொல்லுமிடத்தும், அவர்கள் புகார் என்ற காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிப்பிடாமல், நாகப்பட்டினத்தையே குறிப்பிடுகின்றனர். நாகப்பட்டினம் சோழர் காலத்தில் சிறப்புற்றி ருந்தது என்பதற்கு, சேக்கிழார் பெரியபுராணத்திலிருந்தே அறிய

1 p 235 of "Marco Polo" vol II

2 p. 375 of "Marco Polo" vol II. Marco Polo observes, "They (the people of Malabar) have also abundance of very fine Indigo" On a foot-note on this on page 382, Yule says, "Indigo had been introduced by the Jews into Sicily in the early of the 12th century, The dye is often mentioned in Pegolottis book; the finest quality being termed 'Indigo Baccadeo", a corruption of Bagdadi. Probably it came from India by way of Bagdad."

3 "Chaw-Ju-kua", p. 95

லாகும். இயற்பகைநாயனார் புராணத்தைக் கூறுமிடத்து புகார் நகரின் சிறப்பைச் சுருக்கிச் சொல்லி, அதிபத்த நாயனார் புராணத்தில் நாகப் பட்டினத்தின் சிறப்பைக் கீழ்வருமாறு விதந்துரைக்கின்றார் :—

"பெருமை யிற்செறி பேரொலி பிறங்கலின் நிறைந்து
திரும கட்குவாழ் சேர்விட மாதலில் யாவும்
கருத லிற்கடல் தன்னினும் பெரிதெனத் திரைபோல்
கரி பரித்தொகை பணிதுகில் சொரிவதாங் கலத்தால்."

"நீடு தொல்புகழ் நிலம்பதி னெட்டினும் நிறைந்த
பீடுதங்கிய பலபொருள் மாந்தர்கள் பெருகிக்
கோடி நீடனக் குடியுடன் குவலயங் காணும்
ஆடி மண்டலம் போல்வதவ் வணிகளர் மூதூர்."

நாகப்பட்டினத்தில் சீனர்கள் வதிந்தனர் என்பதற்குப் பதினான்காம் நூற்றாண்டின் இடையில் எழுதப்பட்ட "தாவோ-யி-சிலியோ" என்ற சீன நூல், சீனமொழியில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று நாகப் பட்டினத்துப் புத்தப் பள்ளியில் இருந்ததாகக் கூறுவதே சான்றும். அக்கல்வெட்டுக் கீழ்வருமாறு:— "இந்தத்திருப்பணி, ஹியான் சுவானுடைய மூன்றாவது ஆண்டின் எட்டாவது திங்களில் முடிவு பெற்றது." [1] இன்னும், சீனநாட்டின் நாணயங்களும், சீன பீங்கானில் அழகுபெற அமைக்கப்பட்ட படிமங்களும் நாகப்பட்டினத்தில் கண் டெடுக்கப்பட்டிருத்தலும் இதையே வலியுறுத்தும்.

1 Additional Notes by Cordier to Yule's two volumes of "Marco Polo." p. 114.

திருவிருத்தம்

திரு. வித்துவான் பூவராகம்பிள்ளை அவர்கள்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்,
திருப்பூவணம்.

திருவிருத்தம் என்னும் இந்நூல் ஆழ்வார்கள் பன்னிருவருள் சிறப்பு வாய்ந்த நம்மாழ்வாரால் அருளிச் செய்யப்பெற்றது. நாலாயிரப் பிரபந்தத்தில் இவர் அருளிச் செய்தனவாக நான்கு நூல்கள் உள்ளன. அவை: திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்பன. இவை நான்கும் அந்தாதித் தொடையாகவே யுள்ளன. இவற்றை நான்கு வேதங்களின் கருத்துக்கள் அமையப் பெற்றவை எனவும், தமிழ் வேதமெனவும் வழங்குவது மரபு.

> 'மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள்
> நிற்கப்பாடி யென் நெஞ்சுள் நிறுத்தினன்"

என்பர் மதுரகவிகள். இவற்றுள் திருவிருத்தம் நூறு கட்டளைக் கலித்துறைகளாலானது. திருவாசிரியம் ஏழு ஆசிரியப் பாக்களையுடையது. பெரியதிருவந்தாதி எண்பத்தேழு வெண்பாக்களையுடையது. நாலாயிரப்பிரபந்தத்தில் வெண்பாக்களாலான அந்தாதிநூல்கள் ஐந்து உள்ளன. அவற்றுள் முதலாழ்வார்கள் மூவரும் அருளிச் செய்தன மூன்று. அவை 'முதல் திருவந்தாதி', 'இரண்டாந் திருவந்தாதி', 'மூன்றாந்திருவந்தாதி' எனப்பெயர் பெற்றுள்ளன. திருமழிசையாழ்வார் அருளிச் செய்தது 'நான்முகன்' என்று தொடங்குவதால் 'நான்முகன் திருவந்தாதி' எனப்படும். நம்மாழ்வார் அருளிச்செய்தது பெரிய திருவந்தாதி என்றே சிறப்பாகக் கூறப்பட்டு வருகின்றது. திருவாய்மொழி ஆயிரத்து நூற்றிரண்டு பாக்களையுடையது.

இத்திருவிருத்தம் சொற்சுவையும் பொருட் பொலிவும் மிக்கது. அகப் பொருட்டுறை யமைப்புடையது. அந்யாபதேசம், ஸ்வாபதேசம் என்னும் வெளிப்படைப் பொருள், உள்ளுறைப் பொருள் உடையது.

திருவிருத்தம்

கோவைகள் போலக் கிளவிகள் தொடர்ந்தியைந்து செல்லாமல் மாறி மாறியே யமைந்துள்ளன. சில பாசுரங்கள் பாட்டுடைத்தலைவன் வேறு கிளவித்தலைவன் வேறுகவும், மற்றவை கிளவித்தலைவனே பாட்டுடைத் தலைவனுகவும் அமையப் பெற்றுள்ளன. முதற்பாசுரமும் இறுதிப் பாசுர மும் நீங்கலாக ஏனையவற்றிற் சில மேரே தோத்திரவடிவாக விருப் பினும் அவற்றிற்கும் துறையமைத்துக் கூறப்படுகின்றன. அங்ஙனங் கூறுதல் மூன்பின் உள்ளவை அகப் பொருட்டுறையிலமைந்திருத்தலின் அத்தொடர்பு நோக்கிப் போலும். இப்பாசுரங்களில் தலைவன் பெயர் கூறப்படுதலின் இவற்றை அகனைந்திணையாகக் கொள்ளாது பெருந் திணையாகக் கொள்வதுமுண்டு.

ஒரு நூலின் தொடக்க முடிவுகளைக் கொண்டு அந்நூலின் கிரண்ட கருத்து இதுவெனக் கோடல் ஒருமுறையாகும். அம்முறைப்படி இந் நூலின் முதலில்,

> "பொய்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும்
> இந்நின்றநீர்மை இனியாமுறுமை.....
> .....இமையோர்தலைவா
> மெய்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே"

என்றும் இறுதியில் "இந்நூறும் வல்லார் அழுந்தார் பிறப்பாம், பொல்லா அருவினைமாய வன் சேற்றள்ளற் பொய்நிலத்தே" என்றும் கூறியிருத்தலின், 'இறைவனிடம் ஆழ்வார் பிறவி நீக்கத்தை வேண்டு கின்றார்' என இந்நூற்குத் திரண்ட கருத்துக் கூறப்பட்டுள்ளது.

நாலாயிரப் பிரபந்தத்திற்கு விரிவான உரைகளும், உரைகட்கு அரும்பத உரைகளும் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் இந்நூலுக்கு ஐந்து உரைகளும், மூன்று அரும்பத உரைகளும் உள்ளன. ஐந்து உரைகளும் நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, வாதிகேசரி, அழகிய மணவாளஜீயர், அப்பிள்ளை, பெரிய பரகாலசுவாமி என்னும் இவர்கள் செய்தனவாகக் காணப்படுகின்றன. இவற்றுள் இப்போது கிடைக்கும் பழைய அச்சுநூலில் முழுதுக்கும் பெரியவாச்சான்பிள்ளை யுரையும், மூன்று அரும்பத உரைகளும், முதல் பதினைந்து பாசுரங்கட்குமட்டும் அப்பிள்ளையுரையும் உள்ளன. மற்றையவை கிடைத்தில. அரும்பத உரைகளுள் ஒன்று 'அப்பு அரும்பதம் எனவும்' ஏனையவை பெயர் குறிப்பிடப்படாமலும் உள்ளன. இம்மூன்று அரும்பத உரைகளும் பெரியவாச்சான்பிள்ளை உரையையே விளக்குவன.

பெரியவாச்சான்பிள்ளை யுரையுள்ள அச்சுநூலேயிப்போது கிடைத் தலால் அவரைப்பற்றிமட்டும் சிறிது கூறுகின்றேன். இவர் நம்பிள்ளை யென்பவருடைய சிறந்த சிஷ்யர். வடமொழி தமிழ்மொழிகளிலும் வைணவ சமயநூல்களிலும் சிறந்த பயிற்சியுடையர். பாடல்களின் நயங்களை யெடுத்துவிளக்குவதில் மிக்க திறமை வாய்ந்தவர். இவர் நம் பிள்ளையின் அநுமதியால் திருவாய்மொழிக்கு ஓர்உரை எழுதியுள்ளார்.

அஃது இருபத்துநாலாயிரப்படிஎன வழங்கப்பட்டு வருகின்றது. நாலாயிரப்பிரபந்தத்தில் மற்றுமுள்ள மூவாயிரத்துக்கும் சிறந்த உரை யெழுதியவர் இவரே. (அம்மூவாயிரத்திற் சேர்ந்ததே இத்திரு விருத்தமுமாகும்.) ஆகவே இவர் உரை நாலாயிரத்துக்கும் உண்டு என்பது விளங்கும்.

இவருடைய உரைகளாலும் ஆங்காங்கு எடுத்தாளும் தமிழ் நூல் மேற்கோள்களாலும் இவரது தமிழ்ப்புலமை விளங்குவதாகும். இத்திருவிருத்தத்தில் வந்துள்ள மேற்கோள்களிற் சில பிழைபட்டுள் ளன. அவை பிற்காலத்தவரால் நேர்ந்த பிழைகளாக விருக்கலாம்.

இத்திருவிருத்த உரையில் வந்துள்ள மேற்கோள்கள்

11-வது பாசுரத்தில் "உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே' என்ற திவாகர மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. மற்றுமிதன்கண் பிரிவைப்பற்றிக் கூறுமிடத்து "ஓதல் காவல் பூசல் பரத்தைமாட்டு" என்று சிதைந்த நிலையில் ஒரு சூத்திரம் காட்டப்பட்டுள்ளது. இஃது இறையனர் களவியலிலுள்ள,

> "ஓதல் காவல் பகைதணிவினையே,
> வேந்தர்க்குற்றழி பொருட்பிணி பரத்தையென்,
> றுங்கவ்வாறே யவ்வயிற் பிரிவே"

என்ற சூத்திரத்தின் சிதைவாக விருக்கலாம்.

17-வது பாசுரத்தில் "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப்பு" எனவும், 62-வது பாசுரத்தில் "கறுப்புஞ் சிவப்பும் வெகுளி" எனவும் காட்டப் பட்டுள்ள சூத்திரம் "கருப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள்" என்ற தொல்காப்பியச் சூத்திரச் சிதைவாகும்.

65-வது பாசுரத்தில், "யானேக்குங் காலை நிலநோக்கும் நோக்காக் கால், தானேக்கி மெல்ல நகும்." என்ற திருக்குறள் காட்டப் பட்டுள்ளது.

23-வது பாசுரத்தில், 'சுகமாகத் திரிதல்' என்ற கருத்தில் 'கொண்டைமேற் காற்றடிக்கத் திரிதல்' என்றொரு வாக்கியம் கூறப் பட்டுள்ளது. "விரைவளர் கூந்தல் வரைவளியுளர" என்ற புற நானூற்றடியிலும் இவ்வழக்குக் காணப்படுகின்றது.

அரும்பத உரையிலும் சில திவாகரச் சூத்திரங்கள் காட்டப் பட்டுள்ளன.

5-வது பாசுரத்தில், "காமஞ்சாரா வெறியதனிளமை, காட்சி மகிழ்தல் நலம்பாராட்டு" என்றொரு சூத்திரம் காட்டப்பட்டுள்ளது. இஃது எதன் சிதைவென்று தெரிந்திலது. அரும்பத உரைகாரர் இம் மேற்கோள் இப்பாடலுக்குரிய தன்றெனக் கருதி, இது மேற்பாட்டுக்

குரிய தென்று குறிப்பிட்டுள்ளார். அடுத்த பாடல் நலம்பாராட்டு என்னும் துறையிலமைந்திருத்தலின் அங்ஙனங் குறிப்பிட்டுள்ளார். இங்ஙனம் பின்னுள்ளோரால் அடுத்த பாடலுக்குரியது தவறி இங் கெழுதப்பட்டதுபோலவே, பொருளறியப்படாமல் சூத்திரமும் சிதைத் தெழுதப்பட்டது போலும்.

காலாயிரப் பிரபந்தத்தில் ஒவ்வொரு நூலின் முன்னும், ஒன்றும் பலவுமாகப் பல சிறப்புப்பாயிரப் பாடல்கள் உள்ளன. அவ்வகையில் இத்திருவிருத்தத்தின் முன்னும் ஓர் பாடல் உள்ளது. இப்பாடல்கள் பெரும்பாலும் நூல் பாடிய ஆழ்வாரைச் சிறப்பித்தும், நூற்பொருளைச் சிறப்பித்தும் கூறப்பட்டிருக்கும். இவற்றைத் "தனியன்" என வழங்குவது மரபு. நூலுட் சேராமல் தனித்து நிற்றலின் "தனியன்" எனக் காரணப் பெயராக வழங்கியுள்ளனர். இப்பாடல்கள் எல்லா வற்றிற்கும் 'பிள்ளை லோகாசார்யஜீயர்' என்பவர் சிறந்த உரை யெழுதி யுள்ளார்.

ஆழ்வார் தலைவனைப் பெற்றதாக மகிழ்ந்து கூறும் பகுதிகளெல்லாம் இறைவனை அகக்கண்ணாற்கண்டு மகிழ்ந்து கூறுவனவென்றும், தலைவனைப் பிரிந்து பிரிவாற்றாது வருந்திக் கூறும் பகுதிகளெல்லாம் அங்ஙனம் அகக்கண்ணாற் கண்ட இறைவனைப் புறக்கண்ணாலும் காண விரும்பி, அங்ஙனம் காணப்பெறாது கலங்கி ஓர் தலைவி நிலையையடைந்து கூறுவனவென்றும், உரைத்துள்ளார்கள். அக்கருத்து இத்திரு விருத்தத்திற்கும் ஒக்கும். இக்கருத்தை இவ்வாழ்வார் பாடிய திருவாய் மொழியில் உள்ள

> "சக்கரத் தண்ணலே யென்று தாழ்ந்து கண்ணீர்துளும்ப
> பக்கம் நோக்கி நின்றலர்தேன் பாவியேன் காண்கின்றிலேன்
> மிக்கஞான மூர்த்தியாய வேதவிளக்கினையென்
> தக்க ஞானக் கண்களாலே கண்டுதழுவுவனே"

என்னும் பாசுரம் வெளியிடுவதாகவுள்ளது.

நம்மாழ்வார்

நம்மாழ்வாருடைய சரித்திரம் குருபரம்பரை, ஆழ்வார்கள் சரித் திரம் முதலிய நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆதலின் அஃதிங் கெழுதப்படவில்லை.

இவர் தூலிலிருந்து இவர் வரலாற்றுக் குறிப்புக்கள் ஒரு சில காணப் படுகின்றன. இவர் பாண்டிநாட்டுத் திருக்குருகூரிற் றோன்றியவர் என்பதும், இவர் தந்தையார் பெயர் காரி என்பதும், இவருக்கு மாறன், சடகோபன் என்னும் பெயர்கள் உண்டு என்பதும், மகிழமலர்மாலை இவர்க்குரித் தென்பதும் திருவிருத்தத்திறுதிப் பாசுரத்தாலும், திருவாய்மொழியில் பதிகந்தோறும் இறுதியில் வரும் பாசுரங்களா லும் அறியப்படுகின்றன. இவர் இறைவன் திருவருளாலேயே அவ

னிடத் தன்பும் மெய்யுணர்வும் பெற்றனர் என்பது "மயர்வறமதிநலம் அருளினன்' என்பது முதலிய அடிகளாலும், (மதி = அறிவு, நலம் = அவ்வறிவின்பயனுகிய பக்தி) அறிவுதோன்றப்பெறுத மிக்க இளம் பருவத்திலேயே அங்ஙனம் பெற்றனர் என்பது,

"அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து
அறிபாமாமாயத்து அடியேனை வைத்தாயால்"

என்னும் அடிகளாலும் அறியப்படுகின்றன. இவர்க்கு நம்மாழ்வார் என்னும் பெயர் இவரது பெருமை நோக்கிப் பின்னுள்ளோராற் கூறப் பெற்றதாகும்.

"கம்பெருமான் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பரவாவர் தம் ஏற்றத்தால்" என்பது—உபதேசரத்தினமாலை.

மதுரகவியாழ்வார் இவருடைய சிஷ்யராவார். இவரையே தெய்வமாகக் கொண்டு அன்பு பூண்டொழுகியவர். பதினேரு பாசுரங்களாலாகிய "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்னும் நூல் இவர்மீது மதுரகவிகள் பாடியதாகும். இங்ஙனம் மதுரகவிகள் நம்மாழ்வாரையே தெய்வமாகப் போற்றிப் பாடியிருப்பினும் இவரையும் சேர்த்தே ஆழ்வார்கள் பன்னிருவர் என வழங்குவது மரபு. இவர் நூலும் நாலாயிரப் பிரபந்தத்தில் சேர்க்கப்பெற்றுள்ளது.

நம்மாழ்வார் கடவுளருளாலேயே இன்ன அம்சமாகப் பிறந்தவர் என்பது குருபரம்பரைசளிற் கூறப்பட்டுள்ளது. ஆனல் திருவிருத்தத்திற்குச் சிறந்த உரையெழுதிய பெரியவாச்சான்பிள்ளை அங்ஙனங் கூறிலர். மக்களுள் ஒருவரே என்றும் பிறந்தபின் இறைவனுல் மெய்யுணர்வும் பக்தியும் அருளப் பெற்றவர் என்றும் கூறியுள்ளார். மற்றும் ஆழ்வாருடைய அவதாரத்தைப்பற்றிப் பிறர் பிறவாறு கூறுவன வெல்லாம் அவருடைய பெருமை நோக்கிக் கூறப்பட்டன வென்றும் "அராஜகமான தேசத்திலே ஆனையைக் கண்ணைக்கட்டி விட்டால் ஆன யெடுத்தவன் ராஜாவாமாப் போலே எம்பெருமான் கடாக்ஷித்தாரொருவரா மித்தனை" என்றும் கூறியுள்ளார்.

இனிப் பெரியவாச்சான்பிள்ளை உரையிலிருந்து சில சுயமான பகுதிகளைக் குறிப்பிடுகின்றேன். ஒப்புமையுள்ள பிற நூற்கருத்துக்களையும் ஆங்காங்கு குறிப்பிடுகின்றேன்.

1-வது பாசுரம் :—

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியாமுறுமை உயிரளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர்தலைவா
மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே.

இதன்கண் நிலையற்ற பொய்ப் பொருள்களை மெய்யென்றெண்ணும் பொய்யறிவும், அதற்கேற்ற தீய வொழுக்கங்களும், இவற்றிற்காதார

திருவிருத்தம்

மான அழுக்குடனும் பொருந்திய இப்பிறவித் துன்பத்தைப் போக்கி யருள வேண்டுமென்று இறைவனிடம் விண்ணப்பம் செய்கின்றார். விண்ணப்பம் செய்பவர் தாமொருவராயினும் பிறர் படும் துன்பம் கண்டு பொறாது, பயனை எல்லோரும் அடைய வேண்டுமென்னும் பேரருளால் "இனியாமுறுமை" என்றும் "அடியேன் செய்யும் விண்ணப்பம்" என்றும் கூறுகின்றார்.

"உயிரளிப்பான், எங்கின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமை யோர்தலைவா" என்னும் பகுதியால் இறைவன் பெருமைகளைக் கூறு கின்றார். அவர் இமையோர் தலைவனையினும் உயிர்களைக் காத்தற் பொருட்டே பல்வகைப் பிறப்புக்களையும் மேற்கொள்ளுகின்றாரெனவும், அவர் பிறப்பு ஏனையுயிர்களின் பிறப்புக்கள் போல இருவினை காரண மாக ஆவனவல்ல வெனவும் விளக்குகின்றார்.

"முதன்முறை இடைமுறை கடைமுறைத் தொழிலிற்
பிறவாப்பிறப்பிலை பிறத்தோரிலையே" —பரிபாடல் 3-71, 72

"பிறப்பில் பல்பிறவிப் பெருமானை" —திருவாய்மொழி 2-9-5

என்னும் பகுதிகள் இங்கு நோக்கத்தக்கன.

பொய்க்கின்ற ஞானமும், பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும் யாமுறுமை எனவே யமைவதாகவும் "இக்கின்ற நீர்மை" எனக் கூறியது, மனக்கண் முன்தோன்றிய இறைவன்முன் தம் துன்பங்களை நேரேகாட்டிக் கூறுகின்றாராதலின். இதற்கு உரையில் 'உறுப்புக்களை காட்டுகிறார்' எனவும், "இருடிகள் அரக்கரால் துன்புறுத்தப்பட்ட தங்கள் உடம்பை இராமபிரான் முன் காட்டியதுபோல் காட்டிக் கூறுகிறார், எனவும் இரு உதாரணங்கள் கூறப்பட்டுள்ளன.

2-வது பாசுரம்:—

"சேழுநீர்த்தடத்துக்கயல் மிளிர்ந்தா லொப்பச் சேயரிக்கண்
அழுநீர்துளும்ப அலமருகின்றனவாழியரோ
முழுநீர் முகில் வண்ணன் கண்ணன் விண்ணுட்டவர் முதுவராம்
தொழுநீர் இணையடிக்கே யன்புசூட்டிய சூழ்குழற்கே"

பிரிவாற்றாது வருந்தும் தலைவியது வேறுபாடுகண்டு தோழி கூறியது. சேயரிக் கண்கள், தலைவன் பிரிவையாற்றாது அழுதலால் உண்டாகும் நீர் ததும்பத் தடுமாறுகின்றன; இவள் தலைவனைக் கூடி இத்துன்பம் நீங்கி வாழ்க, என்பது இதன் கருத்து. 'வாழியரோ' என்பதற்குத் தோழி, தலைவிக்குத் தலைவன்பாலுள்ள அன்பு நிலையைக்கண்டு, இவ் வன்பு என்றும் நிலைபெற்று வாழ்க என்று வியந்து கூறுகின்றாளாகவு மாம். கூடியிருக்குங் காலத்தினும் பிரிந்த காலத்திலேயே அன்பின் நிலை நன்கு விளங்குமாதலின் அதனைக் கண்டு இங்ஙனங் கூறுகின்றாள்.

இங்ஙனம் பிரிவுக்காலத்தில் தன்னையே நினைந்து வருந்தியிருக்கும் தலைவியது நிலையைத் தலைவரும் காண விரும்புதல் உண்டு.

"நூனவின்றபாசு தேர் நொவ்விதார் சென்றீக
தேனவின்றகானத் தெழில் நோக்கித்—தானவின்ற
கற்புத்தாள் வீழ்த்துக் கவுண் மிசைக் கையூன்றி
நிற்பாள்நிலே யுணர்கம் யாம்" —ஐந்திணை யைம்பது-10.

இதன்கண் விணைமுற்றி மீளும் தலைவன் தலைவி, தன்னையே நினைத் திருக்கும் இருப்பைக் காண விழைதல் காண்க. இங்ஙனம் விரும்பினும் தலைவியின் இந்நிலையைத் தலைவன் காணப்பெறுன்; அவன் வருகின்ற தேரொலி கேட்டவுடனே தலைவி துன்பம் நீங்கப்பெறுவ ளாதலின்.

"மாண நோற்றீண்டிவள் இருந்த வாறெலாம்
காண நோற்றிலன் அவன் கமலக் கண்களால்"-இரா-சுர்-காட்-73

என அநுமான், சீதை இராமனையே நினைந்துருகிக் கொண்டிருக்கும் நிலையைக் கண்டு வியந்து, இராமன் தன் கமலக் கண்களால் இந்நிலையைக் காணப்பெற்றிலன்; அவன் கமலக் கண்கள் படைத்தும் யாது பயன்? எனக்கூறும் கருத்து இங்கு நோக்கத் தக்கது.

'இவ்விருப்பை அவனும் காணப்பெற்றதில்லை, அயலிட்டுக் கேட்கு மித்தனை' என்பது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான வாக்கியம்.

'விண்ணுட்டவர் மூதுவராம்' என்பதனை விண்ணுட்டவராம் மூதுவர் என மாற்றிக்கொள்ளுதல் பொருத்தம்.

'சூழ்குழற்கே' என்பதற்கு (1) அடர்ந்த கூந்தலையுடைய தலைவிக்கு என்றும், (2) கண்டார் மனத்தைச் சூழ்ந்து அகப்படுத்துக் கொள்ளும் கூந்தலையுடைய தலைவிக்கு என்றும் பொருள் கொள்ளலாம்.

'சேயரிக்கண்'— (1) செவ்விய அரிபரந்த கண் என்றும் (2) செம்மை பண்பாகுபெயராகத் தாமரை யெனக் கொண்டு தாமரை யின்கட் படிந்த வண்டுபோன்ற கண் என்றும் (3) அரி—அரித்தல் எனக் கொண்டு கண்டார் மனத்தை யரிக்கும் கண் என்றும் பொருள் கூறலாம்.

12-வது பாசுரம்:—

"போர்கின்றது மணிமாமை பிறங்கியள்ளற்பயலே
ஊர்கின்றது கங்குல் ஊழிகளே இதெல்லாமினவே
யீர்கின்ற சக்கரத்தெம்பெருமான் கண்ணன் தண்ணந்துழாய்
சார்கின்ற நன்னெஞ்சினர் தந்துபோன தனிவளமே"

பிரிவாற்றுத தலைவி தன் நிற வேறுபாடு முதலியவற்றைக் கூறி வருந்தியது.

அழகிய மாமை நிறம் நீங்குகின்றது. அது நீங்கிய இடம் பாழாகக் கிடவாவண்ணம் பசலை பரவுகின்றது. உரையில் மாமை நீங்குவதற்கும் பசலை பரவுதற்கும் பேரரசர் நீங்கியவழிக் குறும்பர் குடிபுகுவதை யுதாரணமாகக் கூறியிருப்பது மிகப் பொருத்தமாகவுள்ளது. பேரரசர்

வாழ்ந்தபோது மக்களும் மனமகிழ்ந்து வாழ்வர். அவர் நீங்க, குறும்பர் குடிபுகுந்தாலும் போது மக்கள் வருந்துவர். அதுபோல மாமை நிறம் இருப்பது தலைவன் கூடியிருக்கும் காலத்தாகலின் அப் போது தலைவி யின்புற்றிருப்பாள். மாமை நீங்கப் பசலை பரவுவது தலைவன் நீங்கியவழி யாதலின் அப்போது தலைவி துன்புற்றிருப்பாள்.

மணிமாமை என்றது தன் மாமையைத் தானே புகழ்ந்து கூறிய தன்று. தலைவன் இவளோடு கூடியிருக்குங் காலத்தில் இவளது நிற அழகைப் பாராட்டிக் கூற, அதனைக் கேட்டிருந்தவளாதலின் அங்ஙனங் கேட்டதைக் கூறுகின்றாள்.

மாமை = தலைவியின் நிற அழகு. தலைவன் பிரிவில் அம் மாமை நீங்கப் பசலை நிறம் தோன்றும்.

கங்குல் ஊழிகளே = ஓரிரவு பல ஊழிகளாக உள்ளன.

'இதெல்லாமினவே' என்றது மற்றும் பிரிவில் வருத்துகின்ற சிலவற்றைச் சுட்டிக் கூறியதாகும். அவை அன்றில் தென்றல் முதலியன. 'ஈர்கின்ற சக்கரத்தெம் பெருமான்' என்பதற்குக் கொடி யாரை வருத்துகின்ற சக்கரத்தையுடைய எமது தலைவன் என்று பொருள் கூறலாமாயினும், உரைகாரர் அங்ஙனங் கூறாது அன்பிலர் அவனிடத்து ஈடுபட்டவர்கள், அன்பின்றிப் பகைத்தவர்கள் இருதிறத் தாரையுமே வருத்துகின்ற சக்கரத்தை யுடையவன் என்று கூறுகின்றார். அன்புடையார் ஆழியேந்தி நிற்கும் அவனது தோற்றத்தைக் காண விரும்பி அது பெறாமல் வருந்துவதனால் அன்புடையாரை அழகாலே வருத்தும் என்றும், பகைவர்களை முன்னின்று பொருது அழிப்பதால் அதுகாரணமாக அவரை வருத்து மென்றும் கூறுகின்றார்.

"பிரதிகூலரை ஆண்மையாலே கொல்லும், அநுகூலரை அழகாலே கொல்லும்" என்பர் பெரியவாச்சான் பிள்ளை.

"உகவாதாரை அணுகிநின்று முடிக்கும், உகப்பாரை அகலநின்று முடிக்கும்" என்பர் நம்பிள்ளை.

> "கனியானைத் தென்னன் இளையா னெனென்றெள்ளிப்
> பணியாரே தம்பாரிழக்க — அணியாகம்
> கைதாழுதேனும் இழக்கோ நறுமாவின்
> கொய்தளிரன்ன நிறம்"
>
> —முத்தொள்ளாயிரம் 83.

இதன்கண் தென்னன் தன்பால் பகைமை பூண்டோர் அன்பு பூண்டோர் இருபாலாரையும் தம் பொருளிழந்து வருந்தச் செய்வதாகக் கூறியுள்ள குறிப்பு நோக்கத் தக்கது.

கல்நெஞ்சு — தலைவனிடத்து அன்பு முதிர்ந்துள்ளமையின் கல்நெஞ் சென்றார். இப் போது தன்னை வருந்தவிட்டுச் சென்றமையின், 'நெஞ்சினர்' என வெகுளி தோன்றக் கூறியதாகக் கொள்ளலாம்.

தனிவளம் = ஒப்பற்ற செல்வம். மாமையிழத்தல் முதலியவற்றைச் செல்வம் என்றது எதிர்மறை யிலக்கணை.

15-வது பாசுரம் :—

"கபலோ நுமகண்கள் என்று களிறு வினவி நிற்றீர்
அயலோ ரறியிலு மீதென்ன வார்த்தை கடல்கவர்ந்த
புயலோ டுலாங் கொண்டல் வண்ணன் புனவேங்கடத் தெம்மொடும்
பயலோவிலீர் கொல்லைகாக் கின்ற நாளும் பலபலவே"

இது, தலைவியுந் தோழியுந் திணைப்புனத்து ஒருங்கிருந்து வழிச் சென்று உரையாடிய தலைவற்குத் தோழி கூறுவதாகவுள்ளது. இதன் முதலடியின் உரை மிக நயமாகவுள்ளது.

தலைவன், தலைவியுந் தோழியும் ஒருங்கிருந்தவழிச் சென்று களிறு வினவும் வாயிலாக அவர்களோடு உரையாட எண்ணிவந்தான். வந்தவன் தலைவியின் கண்ணைக் கண்டவுடன் அதனழகில் ஈடுபட்டுத் தான் எண்ணிவந்த களிறு வினவுதலை மறந்து 'கயலோ நுமகண்கள்' என்றான். இதில் 'நும கண்கள்' எனப் பன்மையாகக் கூறியிருப்பதால் களிறு வினவுதலை மறந்து தலைவியின் கண்ணழகை வியந்து பேசியதுபோலவே, தலைவியின் கண்ணழகை மட்டும் பேசுவதைவிட்டு இருவர் கண்ணழகையும் வியந்து கூறுகின்றான். "காணப்புகுகிற தன்னை மறந்தது போலக் காண்கிறவர் தம்மையும் மறந்தபடி" என்ற வியாக்கியான வாக்கியம் காணத் தக்கது. இங்ஙனங் கண்ணைப் பற்றி வினவியவன் அதற்கு மறுமொழி பெறுமலே அடுத்துக் களிறு வினவுதலால் இவ்விரண்டிற்கும் உரைகாரர் தொடர்பு காட்டி விளக்குவது இனிமையாகவுள்ளது. 'கயலோ நுமகண்கள்' என்ற தலைவன் உரையைக்கேட்ட தலைவியுந் தோழியும் நாணத்தால் முகத்தைத் திருப்பிக் கொண்டனர். களிறு வினவ எண்ணிவந்து கண்ணழகில் ஈடுபட்டு அதனை மறந்து கண்ணைப்பற்றி வினவினுதலின் இப்பொழுது அவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டமையின் மீண்டும் களிற்றைப் பற்றி வினவினான். இங்ஙனம் வினவியதுதானும் தான் எண்ணிவந்த பழைய எண்ணத்தை நினைவுகூர்ந்து வினவினல்லன். எப்பொழுதும் யானை வேட்டைக்குச் செல்லும் பயிற்சியால் வினவினன். தலைவியின் நோக்குப் பெறுத போது தான் தரித்திருத்தல் இயலாமையின் அதனைப் பெறுதற்கு இங்ஙனம் வினவினன். ஆயின் இவன் இங்ஙனங் கூறியதைக்கேட்டு அவர்கள் முகந்திரும்பி நோக்குவார்களோ எனின் வருந்துகின்ற இவனை நோக்காவிடினும் யானையால் திணைப்புனம் அழியுமாதலின் அதனைக் கருதியேனும் நோக்குவார்கள் என்று கொண்டு வினவினன். அங்ஙனமே அவர்களும் திரும்பிப் பார்க்கத் தலைவியின் நோக்கில் ஈடுபட்டு மேலொன்றும் கூறவியலாதவனாகி நின்றுவிட்டான். அதனால் 'களிறு வினவி நிற்றீர்' என்றார் என விளக்கியுள்ளார்.

தீருவிருத்தம்

16-வது பாசுரம் :—

பலபல ஊழிகளாயிடும் அன்றி யோர் நாழிகைப்
பலபல கூறிட்ட கூறுபிடும் கண்ணன் விண்ணனையாய்
பலபல நாளன்பர் கூடிலும் நீங்கிலும் யாமெனிதும்
பலபல சூழலுடைத்தம்ம வாழியிப் பாயிருளே ''

இப்பாசுரம் பிரிவாற்றுத நிலையில் தலைவிகூற்றுகவும் தோழிகூற்றுகவும் கூறப்படுகின்றது.

தலைவன்பிரிந்தகாளில் ஓரிரவு பல ஊழிகளாக நீண்டும், கூடியிருக்கும் நாளில் ஓரிரவு மிகக்குறுகிய அளவாகக் கழிந்தும் விடுகின்றது. இவ்விருள் பொருந்திய இராக்காலம் பல வஞ்சகச் செயல்களையுடைய தாக விருக்கின்றது. இங்ஙனமிருத்தலால் அன்பர் கூடியிருக்கும் காலத்தும் பிரிந்த காலத்தும் வருந்துதலே யியல்பாகவுடையேமாயினேம், எனத்தலைவி கூறுகின்றாள். பிரிந்தகாலத்து நீண்டுதோன்றும் இரவு கூடிய காலத்துச் சுருங்கித் தோன்றுவது இயல்பு.

' கொடியார் கொடுமையிற் றுக்கொடிய இந்நாள்
நெடிய கழியுமிரா '

என்ற குறளுரையில் காதலரோடு காமின்புற்ற முன்னாள்களிற் குறியவாய், அவர் பிரிவாற்றேமாகின்ற விந்நாள்களிலே நெடியவாய்ச் செல்கின்ற கங்குல் எனக் கூறியிருப்பது காண்க.

இனி, இங்ஙனம் கூடிலும் நீங்கிலும் மெலிதற்குக் காரணம் இரவின் நீடல் குறுகலேயன்றி வேறு காரணமும் உரையாசிரியர் கூறி விளக்குகின்றார் (இதற்குப் '' பலபல நாளன்பர் கூடிலும் நீங்கிலும் யாமெலிதும்'' என்பதை மீண்டும் எடுத்துப் பொருள் கூறுவதாகக் கொள்ளலாம். தலைவர் பிரிந்த நாளில் பிரிவாற்றுது அவரை விரையப் பெறவேண்டுமென வருந்துவதும், கூடியிருக்கும் நாளில் இவர் பிரிந்துவிட்டால் என்செய்வது என்று பிரிவை நினைந்து வருந்துவதுமாக ஈரிடத்தும் வருந்துவதே யியல்பாயினேம் எனக் கூறுகின்றார். நன்னிலையில் இருக்குங் காலத்து அந்நன்மை நிங்கித் தீமைவந்துவிடின் என் செய்வது என நினைந்து வருந்துவது மக்கள் இயல்பு. இங்ஙனம் நினைந்து வருந்து தலை அதிசங்கை என்பர்,

'' வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
ஆரஞ ருற்றனகண்''

'' பெருஅமை அஞ்சும் பெறிற்பிரி அஞ்சும்
அருஅ விடும்பைத்தென் னெஞ்சு ''

என்ற திருக்குறள்களில் தலைவன் கூடியிருக்குங் காலத்தும் மேல் நிகழக்கூடிய பிரிவை நினைந்து வருந்துதல் காண்க.

''கண்ணன் விண்ணனையாய் '' என்பது விளி. பாட்டுடைத் தலைவனது நகரத்தைத் தலைவி தோழிகளுக்கு உவமை கூறுவதியல்பு. அம்

முறைப்படி கண்ணன்விண் ஈண்டு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வுவமைக்குத் தலைவி தோழி இருவர் கூற்றுக்கு மேற்பக் கருத்துக் கூறப்பெற்றுள்ளது. தலைவி கூற்றில் கண்ணன்விண் தோழிக்குவமை. கண்ணன்விண் = திருமாலின் வீட்டுலகம் (பரமபதம்) அதனையடைந்தவர்கள் அழிவின்றி வாழ்வார்கள். அதுபோலத் தலைவனைப் பிரிந்தும் கண்ணன்விண்ணையொத்த உன்னையடைந்திருத்தலால் யான் இறந்து படாது தரித்துள்ளேன் என்பது கருத்து. தோழி கூற்றில் கண்ணன் விண் தலைவிக்கு உவமை. வீட்டுலகை யடைந்தவர் அதனை விட்டு மீள்வதில்லை. அதுபோல உன்னையடைந்த தலைவர் உன்னைவிட்டு நீங்கார் ஆதலின் விரைவில் வந்து சேர்வார்; நீ யாற்றியிரு என்பது கருத்து. இங்ஙனமே தலைவன் நகரம் உவமை கூறப்படும் வேறு பாசுரங்களில் அவ்வவ்விடங்கட் கேற்பக் கருத்துக் கூறியுள்ளார். 55-வது பாசுரத்தில், "எனமொன்றாய், மண்துகளாடி வைகுந்தமன்னுள்" எனத் தலைவன் கூற்றாக வந்துள்ளது. இங்கு வைகுந்த மன்னுள் எனக்கூறப்பட்டவள் தலைவி. இதற்கு, வைகுந்தத்தை யடைந்தவர்கட்கு அப்பேரின்பமே நெஞ்சிற் றிகழ்வதன்றி வேறு எவ்வின்பமும் நெஞ்சிற் படாதவாறு போல, இத்தலைவியை யடைந்த தனக்கு இத்தலைவியிடத்து எல்லாவின்பமும் பொருந்தியிருத்தலின் வேறெவ்வின்பமும் தன் னெஞ்சிற் படுவதில்லை எனக் கூறுவதாக விளக்கி யுள்ளார்.

கண்டுதேட் டுண்டுபுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள.

என்ற திருக்குறள் காண்க. "தன் சந்நிதியில் வேறொன்றினுடைய போக்யதை நெஞ்சிற் படாதபடி யிருக்குமவள்" என்பது வியாக்கியான வாக்கியம்.

17-வது பாசுரம்:—

"இருள்விரிந்தா லன்னமாசீர்த் திரைகொண்டு வாழியரோ
இருள்பிரிந்தாரன்பர் தேர்வழி தூரல் அரவணைமேல்
இருள்விரி நீலக்கரு ஞாயிறுசுடர் கால்வதுபோல்
இருள்விரி சோதிப் பெருமானுறையு மெறிகடலே"

இது கடலை நோக்கித் தேர்வழி தூரல் என்றல்.

இதன்கண் தலைவி, கடலே! நினது திரையாகிய கையைக் கொண்டு அன்பர் சென்ற தேர்வழியை அழியா தொழிக எனக் கூறுகின்றாள். பிரிவாற்றாத தலைவி தலைவன் தேர்ச் சுவட்டை நோக்கிச் சிறிது ஆற்றியிருத்தலின் அதனை யழிக்குங் கடலை நோக்கி இங்ஙனங் கூறுகின்றாள். தேர்வழி யழிக்குங் கடலை "வாழியரோ" எனத், தன்னை நலியவந்தாரை வாழ்த்துமாறு போலக் கூறுகின்றாள். அதனையும் தேர்வழி தூரல் வாழியரோ என இறுதியிற் கூறாது இடையே கூறியது, அத்திரைக் கடல் தன் காரியஞ் சொல்லுமளவுங் கேளாது அழித்தலைக் கண்டு இடையே 'வாழியரோ' என வாழ்த்தியபடி.

திருவிருத்தம்

'இருள் பிரிந்தார் அன்பர்' என்பதற்கு உரைகாரர் பலகருத்துக்கள் கூறியுள்ளார். அவை :—(1)பகலிற் பிரிந்து சென்றாராகில் அவர் ஆற்றுமையால் தளர்ந்து செல்லும் நிலையைக் கண்டு, அதனைக் கருதியாயினும் தரித்திருக்கலாம்; அங்ஙனமின்றி யிருவரிற் சென்றார். (2) அவர்தாமும் பகல் போகில் இவள் முகத்தைக் கண்டுவைத்துப் பிரிந்து சேறல் அரிதெனக் கருதி இருளிற் சென்றார். (3) பிரிந்து சென்றவர்கள் மீண்டுவந்து கூடி மகிழ்தற்குரிய காலத்திலே இவர் பிரிந்து சென்றார். (4) பகற்காலமாயிற் பிறபொருள்களைக் காண்டல் முதலியவற்றாற் சிறிதாறியிருத்தலும் கூடும். அங்ஙனமின்றிச் சிறிதும் ஆறியிருக்க வொண்ணுத காலத்திலே பிரிந்து சென்றார் என்பன. பிரிந்த தலைவிக்குப் பகலினும் இரவில் ஆற்றுமை மிகும் என்பதைக் "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" என்னும் திருக்குறளாலு மறிக.

22-வது பாசுரம்:—

"கொம்பார்தழை கைகிறு நாணெறி விலம்வேட்டை கொண்டாட்
டம்பார் களிறு வினவுவதையர் புள்ளுறுப் கள்ளர்
தம்பா ரகத்தென்று மாடாதென தம்மிற் கூடாதன
வம்பார்வினைச் சொல்லுவோ வெம்மை வைத்தநிவ் வாம்புனத்தே"

இது தலைவியும் தோழியும் ஒருங்கிருந்தவழித் தலைவன் தழையேந்திச் சென்று தன் கருத்தறிவிக்கும் பொருளில் உள்ளது.

தலைவன் தழையேந்திச் சேறலுக்கு இவ் வுரைகாரர் கூறும் கருத்து நயமாக உள்ளது. கொம்பை யிழந்த தளிர் வாடுவது போலத் தலைவியைப் பிரிந்து யான் வாடுகின்றேன் எனத் தன் நிலைபைத் தழைவாயிலாக அறிவித்துக்கொண்டு செல்கின்றான் எனக் கூறியுள்ளார்.

26-வது பாசுரம்:—

"நானிலம் வாய்க்கொண்டு நன்னீரற மென்று கோதுகொண்ட
வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ் பாலை கடந்த பொன்னே
கானிலந் தோய்ந்து விண்ணோர் தொழுங்கண்ணன் வெஃகாவுகம்பூத்
தேனினஞ் சோலையப் பாலதைப்பாலைக்குஞ் சேமத்ததே"

இது புணர்ந்துடன் சென்ற தலைவன், தலைமகளுக்கு வழிநடை யினைப்புத் தோன்றுதிருக்குமாறு, தன் நகர் அணித்தாயினமை கூறல்.

இதில், நால்வகை நிலனும் ஞாயிற்றின் வெப்பமிகுதியால் திரிந்து உண்டான பாலை என்பார், ஞாயிறு நால்வகை நிலனையும் தன்வாயிற் கொண்டு நீரறமென்று உமிழ்ந்த கோதாகிய பாலை எனப்புனைந்து கூறியுள்ளார்.

"பருதிவானவ்வனிலம் பசையறப் பருகுவான்
விருது மேற் கொண்டுலாம் வேனிலேயல்லது."

என்ற கம்பர் கருத்தும் காண்க.

முல்லையும் குறிஞ்சியுமன்றி, நால்வகை நிலனும் திரிந்துண்டான பாலை என்றது உயர்வுநவிற்சியாகக் கூறப்பட்டது போலும்

'வேனிலஞ் செல்வன் சுவைத்துயிழ் பாலை' என்றதனால் இருவகை வேனிலாகிய பெரும்பொழுதும், ஞாயிறுகிய தெய்வமும் பாலைக்குரியன வென்னும் குறிப்பும் தோன்றும். பாலைகடந்த பொன்னே! என்றது கடக்கரும் பாலையைக் கடந்து வரும் துன்பத்தைக் கருதாது தலைவனுடன் வருதலையே இன்பமாகக் கொண்டு தலைவி வருதலாற் சுடச் சுடரும் பொன் போல் விளங்கும் அவள் தன்மையைக் கூறி விளித்தபடி உரைகாரர் வேறு சிறந்த கருத்தும் கூறுகிறார். அது:—"குன்றேறி யானைப் போர் கண்டற்றுறற் றன்கைத்தோன், றுண்டாகச் செய்வான் வினை" என்றபடி பொருளுடையான் தான் மேற்கொண்ட வினையை வருத்தமின்றிச் செய்தல் போலத், தலைவி உடன் வருதலாற் பிரிந்து வருந்தும் வருத்தம் தனக்கின்றிச் சேறலையும், பொருளுடையான் அப் பொருளை எப்பொழுதேனும் பிறர் கவர்ந்து செல்வரோ என அஞ்சுவது போல, இடைச்சுர மருங்கிற் றலைவியின் தமர் எய்தி அவளைக் கொண்டு செல்வரோ என ஒருபால் தான் அஞ்சுதலையும் குறித்துப் பாலை கடந்த பொன்னே! என விளித்தான் என்பதாம். "அஞ்சாதிருக்கைக்கும் அஸ்தத்தானே அபய சங்கை பண்ணுகைக்கும் பொன்னே" என்கிறது. உண்டென்ன உயிர் நிற்கும்படியும், அபஹரணத்தைக் குறித்துத் தஞ்சியிருக்கையும்' என்ற வியாக்கியான வாக்கியங்கள் காணத் தக்கன.

33-வது பாசுரம் :—

"அருளார் திருச் சக்கரத் தாலகல் விசும்பும் நிலனும்
இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர் ஈங்கொர் பெண்பால்
பொருளோவெனுமிகழ்வோ வியற்றின் புறத்தாளென் றெண்ணுதெருளோ மாவணியீர் இவள் மாமை சிதைக்கின்றதே"

இது தலைமகள் ஆற்றுமைகண்ட தோழி கூற்று.

இத்தலைவி இங்ஙனம் வருந்தியிருக்கவும் நீர் வந்து அருளாதிருப்பது, இவ்வொரு பெண்ணைக் காத்தல் ஒரு சிறந்த காரியமாகுமா என்ற புறக்கணிப்போ? அன்றி உம்முடைய விசும்பும் நிலனுமாகிய இரண்டிற்கும் இவள் புறம்பானவள் என்ற எண்ணமோ? நாங்கள் அறிகிலோம் எனத் தோழி கூறுகின்றாள். இவற்றுள் பிற் கருத்து.

"மன்னுயிர் காவல் தனதான வவ்வுயிருள்
என்னுயிரும் எண்ணப்படுமாயின்—என்னுயிர்க்கே
சீரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ
நீரொழுகப் பாலொழுகாவாறு"

என்ற முத்தொள்ளாயிரச்செய்யுட் கருத்தை யொத்திருத்தல் காண்க. (இவ்வெண்பாவின் ஈற்றடி பொருத்தமான பாடமாகத் தோன்றவில்லை.)

அருளார் திருச்சக்கரம் = அருள்கிரம்பிய அழகிய சக்கரம். அடைந்தவர்களைக் காத்தலேயன்றி அவர்கட்குத் தீங்கிழைப்போரை அழிப்பதும் செய்கின்ற சக்கரத்தை அருள்கிரம்பிய சக்கரம் எனல் எவ்வாறு பொருந்து மெனின், அவர்களை யழிப்பதற்கும் அவர்கள்பாற் கொண்ட அருளே காரணமாகையால் அருளார் திருச்சக்கரம் எனல் பொருந்தும். அவர்கள் மேன்மேலும் தீங்கிழைத்துப் பாவத்தை யீட்டிக் கொள்ளுதல் ஒழிகின்றமையின் அச்செயல் அவர்கட்கு நன்மையாகவே முடியும் என்பது கருத்து.

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்"

என்ற திருக்குறளிலும் இக்குறிப்புண்மை காண்க. புறங் கூற்றாளன் பிறர்க்குத் தீங்கிழைத்துத் தானும் மேன்மேலும் பாவத்தை யீட்டிக் கொண்டு உயிர் வாழ்ந்திருப்பதினும் சாதல் அவனுக்கு நன்மையே யாகும் என்பது கருத்து.

இருளார் வினை = அறியாமையாற் செய்யப்படும் தீவினைகள். அறியாமையை இருளென்றார் "அகம் குன்றிமூக்கிற் கரியாருடைத்து" என்பது போல.

இவள் படுக்கை பொருந்தாது கிடக்க நீர்மட்டும் அரவணை யினிருத்தல் தகுமோ என்பாள் 'அரவணையீர்' என்றாள்.

பிரிவில் மாமை தானே அழிவதாகவும்; தலைவன் சிதைப்பதாகக் கூறியது காக்கவேண்டிய அவன் காவாதொழிந்தமை கருதி.

34-வது பாசுரம் :—

"சிதைக்கின்ற தாழியென் முழியைச்சீறித் தன்சிறடியால்
உதைக்கின்ற நாயகந் தன்னுடு மாலை உனதுதண்டார்
தகைக்கின்ற தண்ணந் துழாயணிவான தலே மனமாய்ப்
பதைக்கின்ற மாதின்திறத் தறியேன்செயற் பாலதுவே"

இதுகூடலிழைத்து வருந்தும் தலைவியைக் குறித்துத் தோழி யிரங்கல். தலைவி கூடலிழைத்து, அது தலைவன் வராமைக் கறிகுறியாகவே, அதனைக் காலாற் சிதைத்து விட்டுத் தலைவன் தார் பெறுவதிலேயே கோக்க முடையவளாய், மனம் பதைக்கின்றாள். இவள் திறத்துச் செயற் பால தென்? எனத் தோழி கூறுகின்றாள்.

கூடலிழைத்தலாவது :—(1) மணலில் பெருவட்டமாக ஒன்று கீறி, அதனுள் சிறுசிறு வட்டமாகப் பலகீறி, அச்சிறியவற்றை இவ் விரண்டாக எண்ணிப் பார்த்து, இரட்டைப்பட்டு நின்றால் தலைவன் வருவானென்றும் ஒற்றைப்பட்டு நின்றால் தலைவன் வரானென்றும் அறிதல். (2) கண்ணை மூடிக்கொண்டு வட்டமாக ஒரு கோடு கீறிப் பின் கண்விழித்துப் பார்த்து அவ்வட்டத்தின் தொடக்கமும் முடிவும் கன்கு பொருந்தியிருந்தால் தலைவன் வருவான் என்றும், பொருந்தா

விடின் வாரான் என்றும் அறிதல் எனக் கூறுதலும் உண்டு. முற் கூறியதே நூல்களிற் காணப்படுகின்றது. "ஆழி திருத்திச் சுழிக் கணக்கோதி" எனத் திருக்கோவையாரிற் கூறப்பட்டுள்ளது. நாச்சி யார் திருமொழியுரையிலும் இங்ஙனமே கூறியுள்ளார்.

"கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறு வேனேற் கூடென்று—கூடல்
இழைப்பாள் போற்காட்டி இழையா திருக்கும்
பிழைப்பிற் பிழை பாக்கறிந்து"

என்னும் முத்தொள்ளாயிரச் செய்யுள் இருகருத்தும் கொள்ளுமாறு அமைந்துள்ளது.

இப்பாசுரத்தின் முற் பகுதிக்கு இருவகையாகப் பொருள் கூறப் பட்டுள்ளது. (1) ஆழி (கூடல்) தலைவன் வராமையைக் காட்டி வருவான் என்ற எண்ணத்தையும் சிதைத்தலின் சீறி அதனை அழிக் கின்றாள் என்பது.

(2) கடற்கரையில் தலைவி கூடலிழைக்கும் போது கடல் தன் அலையாகிய கரத்தால் அக்கூடலைச் சிதைக்க. அக்கடலைச் சீறி உதைக் கின்றாள் என்பது. இதில் ஆழியைச் சீறி=கடலைக் கோபித்து என்று பொருள். ஆழி என்ற இரண்டு சொற்களுக்கும் கடல் என்றே கொண்டு கூடல் என்பதை வருவித்தும் உரைக்கலாம். இது நம் பிள்ளை கருத்து என்பது அரும்பத உரையாற் றெரிகின்றது.

இனித்தலைவி கூடல்சிதைப்பதற்கும் இருவகைக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. (1) முன்புள்ளோர், கூடல் இழைத்து எண்ணிப் பார்த்து, ஒற்றைப் பட்டு நின்று தலைவன் வராமையை அறிவிக்கவே சீறி யதனை அழித்தாள் என்றனர். (முன்புள்ளார் இன்னார் எனச் சிறப்பாகத் தெரியவில்லை).

(2) பட்டர், கூடலிழைக்கத் தொடங்கி, அக்கூடல் இரட்டைப் பட்டு நின்று தலைவன் வருகைக்கும், ஒற்றைப்பட்டு நின்று தலைவன் வராமைக்கும் அறிகுறியாதல் கூடுமாகையால், ஒருகால் ஒற்றைப் பட்டு நின்று வராமைக்கு அறிகுறியாகி விட்டால் என் செய்வது, வருவான் என்றிருக்கிற எண்ணமும் போய்விடுமே எனக்கருதி முற்றும் இழைத்துப் பார்க்காமலே அழித்து விட்டாள் என்றனர். பட்டர் கூறி யருளிய இக்கருத்து மேலே குறித்த முத்தொள்ளாயிரச் செய்யுட் கருத்தோடு ஒத்து இணைமையுறுதல் காண்க. வியாக்கியானங்களில் முன்புள்ளோர் கூறிய கருத்துக்களைமாற்றி வேறுபட்ட கருத்துக் கூறுவன வெல்லாம் இங்ஙனம் சிறப்பாகவே இருக்கும்.

35-வது பாசுரம் :—

"பால்வாய்ப் பிறைப்பிள்ளை யொக்கலைக் கொண்டு பகலிழந்த
மேல் பாற்றிசைப் பெண் புலம்புறுமாலை உலகளந்த
மால் பாற்றுழாய்க்கு மனமுடையார்க்கு நல்கிற்றை யெல்லாம்
சோல்வான்புகுந்து இதுவோர் பனிவாடை தூழாகின்றதே"

இதன் முற்பகுதியில் மாலைக்கால வருணனை கூறப்பட்டுள்ளது. மேற்றிசையாகிய பெண் ஞாயிறுகிய கணவனை யிழந்து, பிறைத்திங்களாகிய பால் வாய்ப்பிள்ளையை மருங்கிற் கொண்டு புலம்புகின்ற மாலைக்காலம் என்று கூறியுள்ளார். ஈண்டு மாலைக் காலத்துப் புள்ளொலி கடலொலி முதலியவற்றை அப்பெண்ணின் புலம் பொலியாகக் கொள்ளவேண்டும். புலம்பும் போதும் ஒக்கலையினின்றும் விடத்தகாத மிக்க இளம்பிள்ளை என்பது தோன்ற பால்வாய்ப் பிறைப்பிள்ளை என்றார். பிரிவாற்றாது வருந்தும் தலைவிக்கு அவள் மனநிலைக் கேற்ப மாலைக்கால நிகழ்ச்சி தோன்றுதலின் இங்ஙனங் கூறினர். தலைவனோடு கூடியிருக்குந் தலைவிக்கு மாலைக் கால நிகழ்ச்சிகள் இன்பமுடையனவாகத் தோன்றும்.

மணிமேகலையில் வந்துள்ள ஓர் அந்திமாலை வருணனை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

அது "அமர மருங்கிற் கணவனை யிழந்து
தமரகம் புகுஉம் ஒருமகள் போல
சதிரா ற்றுப் படுத்த முதிராத் துன்பமொடு
அந்தி யென்னும் பசலை மெய்பாட்டி
வந்திறுத் தனளால் மாநகர் மருங்கென்"

என்பதாகும். ஆழ்வார் பாசுரத்தில் மேற்றிசை, கணவனை யிழந்த பெண்ணாகக் கூறப்பட்டுள்ளது, மணிமேகலையில் மாலைக் காலத்திற்குக் கணவனை யிழந்த பெண் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இவ்விரண்டிலும் சிறிது சிறிது வேறுபாடு காணப்படினும் கணவனை யிழந்த நிலையை வைத்து வருணித்திருத்தல் நோக்கத்தக்கதாகும்.

53-வது பாசுரம்:—

"வாசாயின முலையாளிவள் வானோர் தலைமகனும்
சீராயின தெய்வநல்நோயிது தெய்வத் தண்ணந்துழாய்த்
தாராயினும் தழையாயினும் தண் கொம்பதாயினும் கீழ்
வேராயினும் நின்ற மண்ணுயினும் கொண்டு வீசுமினே"

இது கட்டுவிச்சி கூறல். இதன் முற்பகுதிக்கு இருவகையாகக் கூட்டிப் பொருள் கூறலாம்.

(1) இத்தலைவிக்குத் தோன்றியுள்ள இந்நோய் வானோர் தலைவனுகிய சிறப்புக்களெல்லாம் பொருந்திய இறைவனுலுண்டான நல்நோயாகும் எனச், 'சீராயின தெய்வம்' என்னும் மொழிகளை வானோர் தலைமகனுக்கே யியைத்துரைத்தல்.

(2) வானோர் தலைமகனுலுண்டான சிறப்புப் பொருந்திய தெய்வத் தன்மையுடைய நல்ல நோய் எனச், 'சீராயின தெய்வம்' என்னும் மொழிகளை நோய்க்கியைத்துரைத்தல்.

இவ்விரண்டாவது பொருளில் நோய்க்குள்ள சீராயின, தெய்வம், நல் என்னும் அடைமொழிகளுக்குரைத்துள்ள கருத்துக்கள் இனிமையும்

சிறப்பும் உடையனவாக விளங்குகின்றன. சீராயின கோய், தெய்வ கோய், கன்னெய் என இயைத்துக் கொள்ளல்வேண்டும்.

சீராயினகோய்—பிறர் ஒருவராலும் பரிகரிக்க வியலாத நோய். தலைவன் பிரிவால் உண்டான நோயாதலின அவனையடைந்தால் நீங்குவ தல்லது வேறு எவ்வகையானும் நீங்காத கோய் என்றபடி. ''கணவனை யிழந்தார்க்குக் காட்டுவதில்'' என்ற சிலப்பதிகார அடிக் கருத்தும் இங்கு நோக்கத்தக்கது.

தெய்வகோய்—தெய்வத்தாலுண்டான கோய். அல்லது தெய்வத் தன்மை பொருந்திய நோயுமாம். உணவு செயல்களின் மிகுதி குறைவு களால் உடலுக்கு உண்டாகும் கோய்கள் போலன்றித் தெய்வத்தா லாகிய கோய் என்றபடி.

கல்நோய்—இது நோயாகவிருப்பினும் அன்பு காரணமாக உண்டானதாகலின் மற்றைய கோய்கள் போல் வெறுக்கத் தக்கதன்றி ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும் என்றபடி.

''ஒப்புரவினுன் வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக் கோட்டக்கதுடைத்து''

என்ற திருக்குறளிற் கூறப்பட்ட விரும்பத்தக்க கேடுபோல் இது வும் ஏற்றுக் கொள்ளத்தக்க கோய் எனக் கொள்க.

அத்தலைவனுடைய தண்ணந்துழாய்த் தாராயினும், அதன் தழை யாயினும், கொம்பாயினும், அச்செடியின் வேராயினும், அது நின்ற விடத்து மண்ணையினும் கொண்டுவந்து இந்நோயைப் பரிகரியுங்கள் என்று கட்டுவிச்சி கூறுகிறாள். இதனால் அப்பொருள்களிடத்துள்ள தலைவன் சம்பந்தமே நோய்க்குப் பரிகாரம்; பொருளில் நோக்கமில்லை என்பது போதரும்.

''விடாஅது சென்றுரைக் கண்ணிறுக்காணப்
படாஅதி வாழிமதி''

என்ற திருக்குறளில், பிரிந்து வேற்றூரிலுள்ள தலைவனைக் காணப்படும் சம்பந்தம் நோக்கிப், பிரிவுக்காலத்தில் துன்புறுத்தும் பொருளாகிய திங்களைத் தலைவிகாணவிழைதல் காண்க.

80-வது பாசுரம்:—

''சீரரசாண்டு செங்கோல் சிலநாள் செலீஇக்கழிந்த
பாரரசொத்து மறைந்தது ஞாயிறு பாரளந்த
பேரரசே யெம்விசும்பரசே யெம்மைநீத்துவஞ்சித்
தோரரசே யருளாய் இருளாய் வந்து றுகின்றதே''

இஃது இருக்காற்றூத தலைவிகூற்று. இதன் பிற்பகுதியிலுள்ள விளி களுக்கு நயமாகப் போருள் கூறப்பட்டுள்ளது. உலகமுழுதுமளந்து பெரிய காரியத்தைச் செய்து இவ்வுலகத்தை மாவலிபால் நின்றும்

மீட்டநீ அங்ஙனம் ஏதேனுமொரு காரியத்தைச் செய்து இருளைப் போக்கி ஞாயிற்றை மீட்கலாதா? இருளார் வினைகெடச் செங்கோல் நடாத்துபவரன்றே நீர் என்பார் 'பாரளந்த பேரரசே' என்றார்.

இறைவனை யடைந்தார்க்கு இவ்வுலகத் தொடர்பற்று வீட்டுலகத் தொடர்புண்டாக இவ்வுலகத்தினும் வீட்டுலகமே அணித்தாசத் தோன்றுமாதலின் 'எம்விசும்பரசே' என்றார்.

"ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியதுடைத்து"

என்ற திருக்குறட் கருத்தும் காண்க.

தன்னைக்காதலித்தாரைப் பிரிந்து வருத்துவதில் ஒப்பற்ற அரசகை வள்ளவனே என்பார் 'எம்மை நீத்து வஞ்சித் தோரரசே' என்றார். (வஞ்சித்த ஓரசே என்பது வஞ்சித்தோரரசே என நிற்கின்றது).

100-வது பாசுரம் :—

"கல்லார் நவில் குருகூர் நகரான் திருமால் திருப்பேர்
வல்லாரடிக் கண்ணி சூடிய மாறன் விண்ணப்பம் செய்த
சொல்லார் தொடையலிந் நூறும் வல்லா ரழுந்தார் பிறப்பாம்
பொல்லாவருவினை மாயவன் சேற்றள்ளற் பொய்ந்நிலத்தே"

இதில் 'கல்லார்நவில்' என்பதைக் குருகூர் நகருக்கியைத்து நல்லோர்களாற் புகழப்படுகின்ற குருகூர் நகரான் என்று பொருள் கூறலாம். இங்ஙனமன்றி இவ்வடைமொழித் தொடரைக் குருகூரராகிய சடகோபருக்கியைத்து உரைக்கும் போது தற்புகழ்ச்சியாய்த் 'திருமால் திருப்பேர் வல்லாரடிக் கண்ணி சூடியமாறன்' என்பதனோடு முரண்படும். அங்ஙனமாகாமல் சடகோபருக்கே யியைத்துப்பொருள் கூறியுள்ளார். நல்லார் இவரைக் கொண்டாட, இவர் திருமால் திருப்பேர் வல்லவர்களாகிய அவர்கள் திருவடிகளையே தம் முடிக்கணியாகச் சூடியுள்ளார் எனக் கூறியுள்ளார். கொண்டாடுதல் நல்லார் கருத்து; அவர் அடியை முடியிற் சூடுதல் இவர் கருத்து என்றபடி.

நல்லார் என்றது ஞானபக்திகளுடைய பெரியோர்களை.

பொழுதும் போதும்

திரு. வித்துவான் கி. வா. ஜகந்நாத ஐயர் அவர்கள்
சென்னை.

தமிழர், காலத்தைச் சிறு பொழுது பெரும் பொழுது என இருபிரி வாகப் பிரித்தனர். அவற்றுள் சிறுபொழுது ஆறு; பெரும் பொழுது ஆறு. சிறுபொழுது ஐந்தென்பது ஒருசாரார் கொள்கை. வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என்பன சிறு பொழுதுகளாம். இவை ஒவ்வொன்றும் பப்பத்து நாழிகைகளை உடையன. பெரும் பொழுதை இருது வென்று கூறுவர் வடநூலார். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன. இவை முறையே ஆவணி முதலாக இவ்விரண்டு மாதங்களை உடையன. தமிழ் அகப்பொருள் இலக்கணத்தில் இப்பொழுதுகளுள் இன்ன இன்னவை, இன்ன இன்னதிணையைச் சார்ந்தன என்ற வரையறை உண்டு. முதல், கரு, உரி என்னும் மூவகைப்பொருள்களுள் இவை முதற்பொருளைச் சாரும்.

பொழுதை அளந்தறிவதற்குப் பண்டைத் தமிழர்கள் 'கன்னல்' என்ற ஒரு கருவியைத் துணையாகக் கொண்டனர். நீர்நிறைந்த பாத்திரத்தின் அடியிலே சிறுதுவாரமிட்டு அதன் வழியே ஒருபெற்றிப் படத் துளிக்கும் நீரைக்கொண்டு நாழிகையை அறிந்தனர்; சிறு சிறு துளியாக வரும் அமைப்பையுடையதாதலின் அவ்வியந்திரம் 'குறுநீர்க் கன்னல்' என்றும் கூறப்படும்; நாழிகைவட்டில் என்னும் பெயரும் அதற்கு உண்டு. இக்கருவியைக்கொண்டு நாழிகையை அறிந்து கூறுவதற்கென்று அரசர்களுடைய அரண்மனையில் 'நாழிகைக்கணக்கர்' என்னும் ஒருவகை ஊழியர் இருந்து வந்தனர்;

'பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெளீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்ன லிணைத்தென் றிசைப்ப' —(முல்லைப்பாட்டு)

என்பதைக் காண்க.

நீர்க்கன்னலைப்போல மணல் இட்டுவைத்த வட்டிலாலும் காலத்தை அறியும் வழக்கம் இருந்தது. இவற்றை யன்றி வேறுவகையான

நுண்ணிய கருவிகளும் அக்காலத்தில் இருந்தனவென்று தெரிய வருகின்றது. பெருங்கதையில் காலேந்திரம், கடிகையாரம் என்னும் இரண்டு கருவிகள் சொல்லப்படுகின்றன. அவற்றுள், பின்னதாகிய கடிகையாரம் இக்காலத்துக் கடிகாரத்தைப் போன்ற தொரு கருவியாக இருத்தலும் கூடும்.

மேலே கூறியவையாவும் செயற்கைக் கருவிகள். காலத்தை அறிவதற்கு இயற்கையிலேயே பல கருவிகள் அமைந்துள்ளன. யாமந் தோறும் பொழுதை அறிவிக்கும் யாமக் கோழியும், விடியற்காலத்திற் கரையும் காக்கையும் ஒருவகையாகப் பொழுதைப் புலப்படுத்துகின்றன. இவை யாவற்றினும் சிறந்தவை மலர்கள். மலர்கள் தத்தமக்கு ஏற்ற போதிலே மலர்தலையும் குவிதலையும் உடையன; அதனாலன்றே,

'பொழுதின் முகமலர் வடையது பூவே'

என்ற சூத்திரம் எழுந்தது?

இயற்கைப் பூம்பொழில் எப்பொழுதும் மலர்ச்சியை யுடையது. பகலிலே சில மலர்கள் மலர்கின்றன; இரவில் அவை குவிந்துவிடின், வேறு பல மலர்கள் மலர்ந்து தம் மணத்தைப் பரப்புகின்றன. இவற்றால் எப்பொழுதும் நிலமகள் பூமகளாகவே விளங்குகின்றனள்.

மாநூல் (Botany) வல்ல கலைஞர், மலர்கள் தத்தமக்கென வரையறையுள்ள ஒருகாலத்தில் மலர்தலினும், அங்ஙனமே குவிதலினும் தவறுவதில்லையென்று கூறுகின்றனர்; ஒரு காளில் இன்ன இன்ன போதில் இன்ன இன்ன மலர் மலரு மென்ற கணக்கையும் அறிந்திருக்கின்றனர். இங்ஙனம் அறிந்த பல மலர்களின் தொகுதிகளைக்கொண்டு மேனாட்டுத்தாவர சாஸ்திர வல்லுநராகிய 'லின்னேயஸ்' (Linnaeus) என்பவர் ஒரு மலர்க்கடிகாரத்தை அறிவித்திருக்கிறார். அக்கடிகாரம் ஒவ்வொரு மணியிலும் மலரும் ஒவ்வொரு மலரை உடையது.

இத்துறையில் ஆராய்ந்த வேறோராறிஞர் நம்முடைய இந்திய நாட்டில் மலரும் மலர்களுள் ஒவ்வொரு மணியிலும் மலர்கின்ற பல மலர்களின் பெயர்களைத் தொகுத்து ஓர் ஆங்கிலப் பத்திரிகையில்* பல ஆண்டுகளுக்கு முன் எழுதியுள்ளார். அவர் குறித்த மலர்களுள் நாம் அறிந்த சில மலர்களும் அவற்றிற்குரிய காலமும் வருமாறு:—

	மலர்		மலரும் நேரம்
1.	தாமரை	...	சூரிய உதயம்.
2.	சண்பகம்	...	காலை 6—7 மணிக்கு இடையில்
3.	வாழைப்பூ	...	காலை 5—6 மணிக்கு இடையில்
4.	பவழமல்லிகை (Parijatha or Nectanthis Tristis)		காலை 6—7 மணிக்கு இடையில்
5.	மல்லிகை	...	இரவு 7—8 மணிக்கு இடையில்

* See 'The Floral Clock' by S. N. K. in the Benares Central Hindu College Magazine—December, 1908.

பொழுதும் போதும்

மேலேகண்ட உண்மையைத் தமிழர் பண்டைக்காலத்தில் மிக நுணுகி ஆராய்ந்தறிந்திருந்தனர். தமிழ் நூல்களை ஆராயும்போது மலர்களால் மக்கள் போதை அறிந்துகொண்டமைக்குச் சான்றுகப் பல செய்திகளைக் காணலாம். சிறுபொழுதுக்குரிய மலர்களைப்போலவே பெரும் பொழுதுக்கும் உரியமலர்கள் இன்னவையென்ற வரையறை உண்டு. இங்ஙனம் போதை அறிவித்தற்கு உரியதாதல் பற்றியே மலரும் பருவத்துள்ள பேரரும்பைப் போது என்று வழங்கினர்கள்; பெரும்பொழுதை அறிவிக்கும் காரணத்தால் மலருக்கு நாள் என்ற ஒரு பெயரும் உண்டாயிற்று. கதிரவனும் திங்களும் மேகம் முதலிய வற்றால் மறைந்த காலத்திலும், காழிகைக்கணக்கர் அயர்ந்த காலத் திலும் இப்போதுகள் போதைத் தம் மலர்ச்சியினால் அறிவிப்பதி னின்றும் பிறழ்வதில்லை.

ஐப்பசி கார்த்திகை மாதமாகிய கூதிர்ப்பருவத்தில் மழையும் குளிரும் மனிதனை வெளியிலே புறப்படவொட்டாமற் செய்கின்றன; வான முழுதும் மேகபடலங்கள் நிறைந்துள்ளன; சூரியனுடைய தரி சனம் கிடைப்பது மிக அரிதாக இருக்கிறது; வீட்டிலே உள்ள மகளிர் மாலைக்காலத்தில் விளக்கேற்றுதல் வழக்கம். திருமகள் விலாஸத்தைத் தருவதற்கேற்ற அக்கடமையை அவர்கள் குறைவின்றிச் செய்வார்கள். மாலைக்காலம் வந்ததும் வாராததும் அவர்களுக்கு எப்படித் தெரியும்? கடிகாரமா வீடுதோறும் இருக்கிறது? சிறிது நேரத்துக்குமுன் அவர் கள் தம் வீட்டிற்கு அயலிலுள்ள பிச்சியின் அரும்புகளைப் பறித்துப் பூந்தட்டிலே இட்டுவைத்திருக்கிறார்கள். அவை திடீரென்று மலர்ந்து மணங்கமழ்கின்றன! அதுகண்ட மகளிர், 'ஆ! மாலைக்காலம் வந்து விட்டது!' என்ற மகிழ்ச்சியுடன் திருவிளக்கேற்றித் தெய்வம் தொழு கின்றனர். இத்தக்காட்சியையே நெடுநல்வாடை,

> 'மடவரல் பகளிர் பிடகைப் பெய்த
> செவ்வி அருப்பின் பைங்காற் பித்திகத்
> தவ்வித்தழ் அவிழ்பதம் கமழப் பொழுதறிந்
> திருப்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
> நெல்லு மலரும் தூஉய்க்கை தொழுது
> மல்லல் ஆவணம் மாலை அயர'

என்ற பகுதியால் நமக்குக் காட்டுகின்றது. பிச்சிப்போது மாலைப் போதை அறிவிக்கும் கடிகாரமாக உதவுதலை இங்ஙகம்ச்சியால் அறி கின்றோம்.

> 'போதுதெரி யாமையிற் குமுதமொடு சதவிதழ்ப்
> போதுமே இருபோதையும்
> தெரிக்கும் தடம்பணை உடுத்ததமிழ் வேளூர'
>
> (முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்)

என்பதில் போது போதைத் தெரிக்குந்தன்மை எவ்வளவு அழகிதாகக் கூறப்படுகின்றது!

பொழுதும் போதும்

தமிழ் நூல்களிற்கண்ட மலர்க்கடிகாரத்தை ஆராய்கையில், தாமரை மலர் தன் காயகணுகிய கதிரவன் எழும்போது தன் இதழ்க் கதவம் திறப்பதைக் காண்கின்றோம். நெய்தற்பூ வைகறையிலே மலர்கின்றது; "வைகறை கட்கமழ் நெய்த லூதி" என்பது திரு முருகாற்றுப் படை. கதிரவன் செல்லும் திசையையே நோக்கிநிற்கும் சூரிய காந்தியை நாம் அறிவோம்; அதைப் போன்ற மற்றொரு சிறுமலரும் உண்மையைத் தமிழ் இலக்கியங்களிற் காணலாம். பலர் தினந்தோறும் கொருஞ்சி மலரைப் பார்க்கின்றனர்; காலால் மிதித்தும் செல்கின்றனர்; ஆனால், அது கதிரவன் உள்ள திசையை நோக்கியே தன் இதழ்களை விரித்து நிற்குமென்பதை அறிபவர் அரியர்;

'கொருஞ்சிப் பசலைவான் பூ
வர்தரு கூடரி னெதிர்தந் தாங்கு' —(புறநானூறு)
'சுடரொடு திரிதரும் கொருஞ்சி' —(அகநானூறு)

என்பவை இவ்வுண்மையை நமக்குத் தெரிவிக்கின்றன.

பகற்போது இவை, இராப்போது இவை யென்னும் வரையறையைத் தமிழ்ப்புலவர் நன்கறிந்து கூறியுள்ளனர். அந்திக் காலத்தில் மலரும் ஒருவகை மலர் அக்காரணம் பற்றியே அந்திமந்தாரை என்று வழங்கப்படுகின்றது; கள்ளிரவில் மலர்ந்து மணக்கும் இருவாட்சிப்பூ (இருள்வாசி) கள்ளிருணறி யென்னும் பெயர் பெற்றுள்ளது. கதிரவன் மறையும் பொழுதுக்கு முன்னதாகிய எற்பாட்டில் அந்திமந்தாரை மலர்வதை,

'வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப"

என்று அகநானூறு கூறுகின்றது.

மாலைப் பொழுதென்பது சூரியன் மறைந்த பின்னர் இரவின் நடு யாமத்திற்கு முன்னர் உள்ள சிறுபொழுது. அந்தப் பொழுதை வருணிக்கும் புலவர்கள் அக்காலத்தில் மலரும் மலர்களையும் வருணித்திருக்கின்றனர்.

'முல்லை மலரும் மாலை' (குறுந்தொகை)

என்னும் அடி மாலைப் போதை முல்லைப் போதின் அடையாளத்தாற் குறிக்கின்றது. அம்முல்லையோடு செங்காந்தளும் மாலையில் மலர்தலை ஒரு கல்லிசைப்புலவர்,

'பல்கதிர் மண்டிலம் பகல்செய் தாற்றிச்
சேயுயர் பெருவரைச் சென்றவண் மறையப்
பறவை பார்ப்புவயின் அடைய
....
முல்லை முகவாய் திறப்பப் பல்வயிற்
றேன்றி* தோன்றுபு புதல்விளக் குறுஅ
... ...
ஐதுவந் திசைக்கும் அருளில் மாலை' (நற்றிணை)

*தோன்றி—செங்காந்தள்.

என வெளியிடுகின்றனர். இவற்றையன்றி ஆம்பல், குருக்கத்தி, தளவம் (செம்முல்லை), பிடவு, புன்னை முதலியன மாலைப்போதைக் காட்டும் போதுகளாம். மாலைக் காலத்தில் தாமரை, நெய்தல் முதலிய மலர்கள் குவியும். கள்ளிருளில் கொச்சிப்பூ உதிரும்*

பகற்பொழுதிலே பெரும்பாலும் பலவகை நிறமுள்ள மலர்கள் மலருமென்பதும், இரவில் மணமுள்ள பேரதுக்கள் மலருமென்பதும் மரநூலார் கண்டறிந்த உண்மை. மரவினத்தின் வளர்ச்சிக்கு வண்டுகள் தாதுதுதல் இன்றியமையாதது. அவை ஊதி ஒருமலரிலுள்ள தாதை மற்றொரு மலருக்குக் கொண்டு சென்று வைத்தலால் அம்மலர் கருவுற்றுக் காய்த்துக் கனிகின்றது. அதனால் மரவினங்கள் பல்குகின்றன. மலர்களின் நிறமும் மணமும் வண்டுகளைக் கவரும்பொருட்டுக் கடவுளால் அமைக்கப்பட்டவை. வண்டுகள் மலரை நிறத்தாற்கண்டு அடையும் பொருட்டுப் பகற் போதுகள் பல நிறங்களை உடையனவாக உள்ளன; நிறத்தைக்காண இயலாத இரவில் மலர்களின் மணம் வண்டுகளை அழைக்கின்றது; அதனாலேதான் இரவில் மலரும் மலர்களிற் பெரும்பாலன வெண்ணிறமுடையனவாக இருக்கும்; அவை பல வகை நிறத்தைப் பெறுவதனால் ஒருபயனும் இல்லையல்லவா? இவ்வரிய உண்மையை, இராப்பொழுதை வருணிக்கும் வாயிலாகக் கம்பர் தம் இராமாயணத்திலே,

'விரிந்தன நரந்தமுதல் வெண்மலர்' (ஊர்தடுபடலம், 163)

என்று புலப்படுத்துதல் பெருவியப்பை உண்டாக்குகின்றது.

சிறுபொழுதுக்குரிய மலர்களைப் போலப் பெரும் பொழுதுகளுள் ஒவ்வொன்றற்கும் உரிய மலர்கள் இன்னவை என்று ஆராய்வதாயின் அவ்வாராய்ச்சி மிகவிரியும். அகப்பொருட் பனுவல்களிலே பருவங்களைப் பற்றிக் கூறப்படும் இடங்களிலுள்ள செய்திகளால் இதனை அறிந்துகொள்ளலாம்.

கார்காலத்தில் முல்லை, கொன்றை, கடம்பு, பிடவு, பிச்சி, குருந்து, தெறுழம்பூ முதலியன மலரும். கூதிர்ப் பருவத்தில் முசுண்டையும் பீர்க்கும் மலர்வதாக நெடு நல்வாடை உணர்த்துகின்றது. முன்பனிக் காலத்தில் அவரை, ஈங்கை, கருவிளை முதலியன மலரும்; பனிக் காலத்தில் பகன்றை மலரும். இளவேனிற் பொழுதில் அசோகு, கோங்கு, மா, பாதிரி முதலியனவும், இருவகை வேனிலிலும் இருப்பை, அதிரல் முதலியனவும் மலரும். இம்மலர்களிற் சிலவற்றை அவை மலரும் காலத்தைப் புலப்படுத்தும் அடையோடு சேர்த்து வழங்குவதும் சான்றோர் மரபு :—

'கார்நறுங் கடம்பு' (நற்றிணை)
'கார்நறுங் கொன்றை' (புறநானூறு)

*குறுந்தொகை, 138.

போழுதும் போதும்

'வேனிற் பாதிரி' (குறுந்தொகை)
'வேனில் எதிர்' (அகநானூறு)

முருக்கின் வகையைச் சேர்ந்த பலாசம் பங்குனியில் மலருமென்பர் கம்பர் ;

'பங்குனி மலர்ந்தொளிர் பலாவன மொப்பார்)
(ஊர்தேடுபடலம், 70)

மலைகளில்வாழும் குறவர் வேங்கைமலர் மலர்வதைக் கண்டு தாம் மணம் செய்தற்குரிய இளவேனிற் பருவம் வந்ததென்று அறிந்து மணம் புரிவர் ; மணகாளைப் புலப்படுத்தும் கணியின் (சோதிடனின்) தன்மை அவ்வேங்கைமரத்தின் பாலுண்மையின் அதனைக் கணிவேங்கை யென்று வழங்குவர். மலர்களைக் கொண்டு காலத்தையறியும் இம்மரபு நீலகிரியில் வாழும் தொதுவரிடத்திலும் உண்டு. மலையிலே வளரும் குறிஞ்சியின் மலர் பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை மலருமென்றும் அங்ஙனம் மலரும் காலத்தை யளவாகக் கொண்டு அத்தொதுவர் தம் ஆயுளைக் கணக்கிட்டுக்கொள்வரென்றும் கூறுவர்.

இங்ஙனம், மலர்கள் போதையும் காலையும் காட்டும் திறத்தைத் தமிழ் நூல்களின்வாயிலாக ஆராய ஆராய,பல அரிய செய்திகளும் அவற்றை நமக்கு வழங்கும் புலவர் பெருமக்களின் நுண்ணறிவும் மென்மேலும் புலனாகி இன்பத்தையும் வியப்பையும் விளைவிக்குமென்பதில் ஐயமில்லை.

கம்பர்

திருவாளர் A. C. பால்நாடார், அவர்கள் B. A., B. L.,
சௌந்திரவிலாஸ், தூத்துக்குடி.

ஹர்வீகக் கிரேக்கருக்கு ஹோமர் எப்படியோ, ரோமருக்கு வர்ஜில் எப்படியோ, இத்தாலியருக்கு டான்டி எப்படியோ, ஆங்கிலேயருக்கு ஷேக்ஸ்பியரும் மில்டனும் எப்படியோ, வடமொழிக்கு வால்மீகி எப்படியோ, அப்படியே தமிழருக்கும் தமிழுக்கும் கம்பர் பெருமை கொடுக்கிறார். இவர்களெல்லாரும் பெருங்காப்பியங்கள் செய்த தூலாசிரியர்கள். பெருங்காப்பியங்கள் அந்தந்தக் காலங்கள் தேசங்களுக்குரிய வழக்க பழக்கங்களையும், கருத்துக்கள் நோக்கங்களையும், அந்தந்த பாஷை நடைக்கு இயன்றனவாய் இயற்றப்பட்டவைகளாயினும், எக்காலத்தவருக்கும், எத்தேசத்தவருக்கும், எப்பாஷைக்காரருக்கும், எச்சாதியருக்கும், இன்பத்தையும் அறிவையும் கொடுக்கின்றன. அந்தந்த தேசங்களின் சரித்திரத்தின் சாராம்சத்தையும் அவர்களின் பெருமைகளையும் சிறுமைகளையும் அப் பெருங்காப்பியங்களில் பார்க்கிறோம்.

பண்டைக்காலத் தமிழருக்கு வீரமும் காதலுமே பொருள். ஏனைய வெல்லாம் அவர்கள் பொருளாகக் கருதவில்லை. அவர்கள் வீரம் மஹா பிரசித்திபெற்றது. கிரேக்கதேசத்து ஸ்பார்ட்டன் பட்டணத்தார் வீரமே அதற்கிணையானது :—

"கெடுக சிந்தை; கடிதிவள் துணிவே:
மூதின் மகளிர் ஆதல் தகுமே.
மேனாள் உற்ற செருவிற் கிவள் தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே:
நெருநல் உற்ற செருவிற் கிவள் கொழுநன்
பெரு நிரை விலங்கி ஆண்டுப் பட்டனனே:
இன்றும்
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடுப்
பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒரு மகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே' (புற 279)

ஸ்பார்ட்டன் பட்டணத்தார் வீரம் ஒன்றையே போற்றினர்; ஆனால்

நம்முன்னோரோ, வீரத்தையும் காதலையும் ஒருங்கே வளர்த்தனர். சமணமும் பௌத்தமும் பெரும்பாலும் ஒழுக்கத்தையே போதித்தன. 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார்கள். வீரமும் காதலும் ஒழுக்கத்தால் மேன்மைப்பட்டன.

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றே ஆன்ற ஒழுக்கு"

என்பது தமிழரின் இலக்காகிவிட்டது. ஆனால் ஆடல் பாடல்களில் தேர்ச்சியான கணிகை மாதர்களின் பெருக்காலும், திரைகடலோடித் தேடிய பொருள்களின் மிகுதியாலும் பல்லவரின் ஆட்சியாலும், களப்பிரரின் குழப்பத்தாலும், வீரமும் காதலும் ஒழுக்கமும் குன்றிப் போயின.

ஐரோப்பாக் கண்டத்தில் கிறிஸ்துவுக்குப் பின் பதினைந்தாம் பதினாறும் நூற்றாண்டுகளில் கிரேக்கு லத்தீன் பாஷைகளிலுள்ள நூற்களைப் படித்ததின் காரணமாக ஓர் பெரிய கிளர்ச்சியுண்டானது. அதன் பயனாக சகல கலைகளும் புத்துயிர் அடைந்தன. அதே காலத்தில் மார்க்க சீர்திருத்தங்கள் உண்டாயின. ஐரோப்பியருக்கு லத்தீன் பொது பாஷையானது. அதில் நூல்கள் எழுதினார்கள். அது கல்விமான்களின் பாஷையாயிற்று. பாமர ஜனங்களின் நன்மைக்காக கிரேக்கு லத்தீன் பாஷைகளிலுள்ள சிறந்த நூல்களை தேசிய மொழிகளில் மொழிபெயர்த்தார்கள்; அதன் பயனாக தேசிய மொழிகள் புத்துயிர் பெற்று எண்ணிறந்த நூல்களைக் கொட்டின. அக்காலங்களில் தான் இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின், உலாந்து முதலிய நாடுகளில் தேசிய இயக்கங்கள் உண்டாகி தேசிய அரசாட்சி பலப்பட்டது. சுயாதீன சுதந்தரங்களும் மார்க்க சீர்திருத்தங்களும் கலந்து பிரளயம் போன்ற ஓர் கிளர்ச்சியுண்டானது. அதுபோன்ற ஓர் கிளர்ச்சி (கி. பி.) ஏழாவது நூற்றாண்டு முதல் பத்தாவது நூற்றாண்டுவரை நமது தமிழ் நாட்டில் உண்டானது. கங்கை நதி தீரத்திலுண்டான வடமொழி நூற்களை மிகுந்த ஆர்வத்துடன் முதலில் காஞ்சிபுரத்திலும் பின்னல் காவேரி, வைகை தாமிரவருணி தீரங்களிலும் தமிழர் கற்றார்கள்; ஆராய்ச்சி செய்தார்கள்; வடமொழியில் நூற்கள் செய்தார்கள். வடமொழி நூற்களை தமிழில் மொழி பெயர்த்தார்கள். தமிழ் நூற்களை வடமொழியில் செய்தார்கள்.

அதே காலத்தில் வடவேங்கட முதல் தென்குமரி வரை ஒரு சமயக் கிளர்ச்சியும் உண்டானது. ஓர் பரபரப்பும் பரவசமும் தமிழரை ஆட்டினது. வீரமும் காதலுமே பொருளெனக் கருதிய தமிழர் ஒரே பரம்பொருளைக் கண்டார்கள். "இருள் கடிந்தெழுகின்ற ஞாயிறே" போல் அது தமிழரின் இதயத்தை உதயமானது. அது ஒன்றே அவர்கள் உள்ளத்தைக் குடிகொண்டது. வடமொழிக் கல்வியும் புதிய பரம்பொருள் ஞான உணர்ச்சியும் கலந்து ஓர் பிரளயத்

கம்பர்

தால் ஏறக்குறைய ஆயிரம் வருஷங்களாகத் தமிழ் நாட்டை ஆண்டு கொண்டிருந்த சமணமும் பௌத்தமும் ஓட்டம் பிடித்தன. அவர்கள் எழுதிய நூற்கள் தலைகாட்ட வழியில்லை. பழைய நூல்கள் மறக்தும் மறைந்தும் போயின. விண்ணும் மண்ணும் பாதலமும் ஒன்றுயின. மானிடர் தேவராஞர், தேவர் மானிடராஞர். நரகர் இருவருக்கும் மத்திபமாஞர். எங்கே கேட்டாலும் வேத கோஷ்டிகள், தேவாரப் பண்கள், திருவாய்மொழிகள். வடகாட்டுத் தேவதைகள் தென்னாட்டில் குடிபுகுந்தன. தென்னாட்டுப் பேர்கள் வடகாட்டு நாமங் களாயின. பேய்களும் பூதங்களும் ஆடின இடங்களில் நடராஜர் நடனம் கண்டார்கள். மருதநில ஊர்கள் புண்ணியஸ்தலங்களாயின. ஸ்தலங்கள் தோறும் புராணங்கள். குகைகள் எல்லாம் சித்திரங்கள்; அழகிய சிலைகள் உண்டாயின. வடமொழி தேவ பாஷையாவது. தமிழ் மொழி சிவபெருமான் தந்ததாயிற்று. ஒழுக்கத்தால் உயர்ந்த அந்தணர் உச்ச நிலையை அடைந்தார்கள். பிறப்பால் வந்த அந்தணரும் அப் பதவியை நாடினர். சதுர்வேத மங்கலங்களும், மாணிபங்களும் வேள் விச் சாலைகளும், வேள்விக் குடிகளும் ஏற்பட்டன. பிறப்பால் சாதி பேதம் ஏற்பட்டது. நிலமாக்களை நான்கு சாதிகளாகப் பிரிக்க முயன் றனர். எல்லா வகுப்பினும் போர் வீரரும் அரசரும் இருந்ததால் க்ஷத்திரியரென்று எவ்வகுப்பினரைச் சொல்வது என்று தான் தெரிய வில்லை. பெருங்குடி வேளாண் மரபினரை சூத்திரரென்று சொல்ல நாவெழவில்லை. ஆசாரத்தால், தொழிலால், தீண்டாமை தமிழ் நாட்டில் நுழைந்தது. யார் பரம் பொருளென்ற சமயக் கட்சியுண்டானது. அரனே பரம் பொருளென்றார் ஒருசாரார்; அரியே பரம் பொரு ளென்றார் இன்னொருசாரார். தமிழாசர்கள் பல்லவ அடிமைத்தனத்தி னின்று சுயாதீனமானார்கள். களப்பிரர் போன இடம் தெரியாமல் போயினர். சேர, சோழ, பாண்டியர்களுக்கு "கேள்வி அந்தணனர்" பூர்வோத்திரம் ஏற்படுத்தினர்கள். சோழர் சூரியகுலமும், பாண்டியர் சோம குலமும், சேரர் அக்கினி குலமுமானார்கள். மதுரையை சோம சுந்தரக் கடவுளே ஆண்டாரென்று புராணங்கள் உண்டாயின. சோழர் களுக்கு அயோத்தி சக்ரவர்த்திகள் மூதாதைகளானார்கள். மனுதர்ம சாஸ்திரம் தமிழாசர் சட்டமானது; இன்னும் சோழ சரம் ராஜ்யம் வரவில்லை. புகாரும் உறந்தையும் உறங்கிவிட்டன. தஞ்சையும் கங்கை கொண்டான் சோழபுரமும் இன்னும் சோழ ராஜதானிகளாகவில்லை. அப்படிப்பட்ட காலத்திலே கம்பர் தோன்றினர்.

ஒன்பதாவது நூற்றாண்டில் திருவழுந்தூரில் உவச்சர் குலத்தில் கம்பர் பிறந்தார். குழந்தைப் பிராயமுதல் திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப முதலியார் வீட்டில் வளர்ந்தார். "தேசங்கலந்த மறை வாணர், செஞ்சொல் அறிவாளர் என்றிம் முதலோர்" கூட்டத்தி லிருந்தார். இருமொழியுங் கற்று அவைகளிலுள்ள கலைகளை ஆராய்ந் தார். அவைகளைக் காட்டிலும் உலக இயல்பையும் மனுஷத்தன்மை

யுங் கிரகித்தார். தமிழர் காகரீகத்திற்கும் நவீன உணர்ச்சிக்கும் ராம காதை எவ்வளவு பொருத்தமென்று கண்டார்.

"உழக்கு மறை நாலினும் உயர்ந்து உலகம் ஓதும்
வழக்கினும் மதிக்கவியினும் மாபின் நாடி
.....
.....சுடர்க் கடவுள் தந்த தமிழ்"

"அளப்பருஞ்சலதி" அதை ஆழங்கண்டார்.

"தென் சொற்கடந்தான் வடசொற்கலைக் கெல்லை தேர்ந்தான்"

என்று கதாநாயகனுக்கு ஏற்றிச் சொல்வது கம்பருக்கே பொருந்தும்.

"வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி யென்பான்
தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான்."

அதை வடமொழி கற்றோர் மட்டும் அனுபவித்தார்கள்.

"பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக் கவி மாட்சி"

தமிழருக்கும் தெரிவிக்க

"ஆசைபற்றி அறையலுற்றார்."

வீரம், காதல், ஒழுக்கம், இவைகளில் சிறந்தோரான ராமனே கம்பரின் பரம் பொருள்

"விண்ணினில், நிலத்தினில், விகற்ப உலகில், பேர்
எண்ணினில், இருக்கினில், இருக்கும் என யாரும்
உள்நினை கருத்தினை உறப் பெறுவன் ஆல் என்
கண்ணினில் எனக் கொடு களிப்புறு மனத்தான்"

(அகத்தியர் படலம் 42)

ஆயினும்

"அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன் என்று
கைக்கும் அறிவி லோர்க்குப்
பரகதி சென்றடை வரிய" (நாடவிட்ட 24)

என்பது அவர் அபிப்பிராயம்.

"அறியார் சமணர்; அயர்த்தார் பவுத்தர்
சிறியார் சிவப்பட்டார்"

என்றார் திருமழிசை ஆழ்வார்.

கம்பர் சராயு நதியின் போக்கை வர்ணிக்கும் இடத்தில்,

"கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லென் மறைகளாலும் இயம்பரும் பொருளீதென்ன
தொல்லியின் ஒன்றேயாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும் போல் பரந்த
தன்றே"

என்றும்,

ராமன் மிதிலையில் உலாவும் போது பார்த்த மாதர் :—

" தோள் கண்டார் தோளே கண்டார்; தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் ; தடக்கைகண்டாருமஃதே
வாள்கொண்ட கண்ணுர்யாரே வடிவினை முடியக் கண்டார் ?
ஊழ்கொண்ட சமயத்தன்னுன் உருவு கண்டாரை யெத்தார்."

என்றுஞ் சொல்லுகிறார்.

கோதாவரியைக் கூறுமிடத்து அதனை கல்லிசைப் புலவர் பாவிற்கு ஒப்பிட்டார்.

" புவியினுக்கணியாய் ஆன்ற பொருள் தந்து, புலத்திற்றுகி,
அவியகத்துறைகள் தாங்கி, ஐந்திணை நெறியளாவிச்,
சுவையுறத் தெளிந்து, தண்ணென் றெழுக்கந் தழுவி ச்சான்றோர்
கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர்கண்டார் " (சூர்ப 1)

ராமனுடைய அம்புகளுக்கு உபமானமாக

" நல்லியற் கவிஞர் நாவிற் பொருள்குறித் தமர்ந்த நாமச்
சொல்லெனச் செய்யுள் கொண்ட தொடையென தொடையைநீக்கி
எல்லையில் செல்வந்தோ இசையெனப், பழுதிலாத
பல்லலங்காரப் பண்பே காகுத்தன் பகழி மாதோ!" (கும்ப 22)

என்றார்.

கம்பர் குறித்த பாவின் தன்மைகளனைத்தும் அவர் நூலகத்தே உள்ளன.

கம்பராமாயணத்தின் ஆன்ற பொருள் யாது ?

பாலகாண்டம் முதற் பாட்டிலேயே கம்பர் காவியத்தின் பொருளைக் குறிப்பிட்டு விட்டார். ஆடவரும் மகளிரும் மணந்த தமது கணவன் மனைவிமாரிடத்தே அன்பு செலுத்தி இன்பம் அனுபவிப்பதன்றி, பிறன்மனை நயத்தல், பரபுருஷரைச் சேர்தல் என்ற தீச்செயலிற் செல்லாதிருக்குமாறு தடுக்குந்தன்மையது கோசல நாடு என்றார். ராமனின் பேராண்மையும், சீதாதேவியின் கற்புநிலையும், சூர்ப்பநகை ராவணன் இவர்களின் நெறிதவறிய காமமும், அதனால் அவர்கள் குலத்திற் குண்டான நாசமும், காவியத்தின் முக்கிய பொருளாகும்.

விசுவாமித்திரர் வேள்வியைக் காக்க, ராமன் " கன்னிப்போர் " செய்து அம்முனிவரிடத்தில் படைக்கலமும் பெற்று, மிதிலை நகர்த் தெரு வீதியில் வருகிறான். ஜனகன் புத்திரி கன்னிமாடத்தில் மாதர் கூட்டத்தில் " மங்கையர்க்கினியதோர் மருந்துமாய் " நின்றாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுகிறார்கள்.

" எண்ணரும் நிலத்தினுள் இனைய நின்றுழி
கண்ணெறு கண்ணினைக் கவ்வி யொன்றை யொன்
றுண்ணவு நிலைபெறு துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினாள்" (மிதிலை 35)

"பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்
தொருவரை யொருவர் கம்முள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாள்க்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கிதயம் எய்தினர்." (மிதிலை 37)

ராமன் ஜனகன் கொடுத்த வில்லை ஒடித்து சீதையை மணக்கிறான். இருவரும் "பூமகளும் பொருளும்" போல வாழுகின்றனர். "ஒன்றிய போகமும் யோகமும்" ஒத்தனர்.

அயோத்திக்கு வருகிற வழியிலே கர்ச்சிக்கிற சிங்கம் போல் பரசு ராமன் வருகிறான் "ராமனும் எனதுயிரும் உனது அபயம்" என்று சொல்லி தசரதர் நடுங்குகிறார். ராமனை அவன் கொடுத்த வில்லை ஒடித்து "வேதவித்தாய மேலோன் மைத்தனை" மானபங்கப்படுத்து கிறான்.

"மழுவின் வாளினன் மன்னரை மூவெழு
பொழுதின் னூறிப் புலவுறு புண்ணின் நீர்
முழுகினன் தவம் மொய்ம்பொடு மூரியில்
தழுவும் மேன்மை" [காட்சி 27] யை

சீதாதேவி கண்களால் கண்டு களிக்கிறாள்.

ராமனுக்கு பட்டாபிஷேகமென்று எங்கும் பறையறைகிறார்கள்.

"தெய்வகீதங்கள் பாடத் தேவரும் மகிழ்ந்து வாழ்த்த,
தையலார் இரைத்து நோக்கத் தார் அணிதேரிற்சென்றான்."
(கைகேசி 82)

ராமன் மகிடம் சூடப் போகிறான். கைகேசியின் சூழ்ச்சியினால் காட் டுக்குப் போக மரவுரி தரித்துவரக் காண்கிறாள் சீதை.

"புனையும் சீரணிந்து புனைந்தனள்
நினைவில் வள்ளல் பின் வந்தயல் நின்றனள்
பனையின் நீள் கரம் பற்றிய கையினாள்"—(நகர் 228)

அப்பால் கங்கைப்புனலாடி, காடுகளும், ஆறுகளும், மலைகளும் கடந்து, கடைசியாக,

"ஓங்கு மரனேங்கி மலை யோங்கி மண லோங்கிப்
பூங்குலை குலாவு குளிர் சோலை புடை விம்மித்
தூங்குதிரை ஆறுதவழ் சூழல தொர் குன்றின்
பாங்கருள தாலுறையுள் பஞ்சவடி"..... (அகத்தி.57.)

ஆங்கு:—

"கன்னியிள வழை கனியீவ ; கதிர் வாலின்
சென்னெலுள, தேனெழுகுபோதுமுள ; தெய்வப்
பொன்னியெனலாய புனலாறுமுள, போதா
அன்னமுள ; பொன்னிவ ளொடன்பின் விளையாட" (மே.58.)

அப்பேர்ப்பட்ட இடத்திற்குச் சென்று இன்புற்றிருக்கும் காலில் ; ஏதேன் தோட்டத்தில் சாத்தான் புகுந்தாற்போல, ராவணன் தங்கை சூர்ப்பநகை புகுந்து விடுகிறாள்.

"ஆர் உழை அடங்கும்? அழகிற்கு அவதி உண்டோ!
நேரிழையர் யாவர் இவர் நேர்!"

என்று, ராமனும் கினைக்கும்படியான அழகுடன் தோன்றுகிறாள். ராமன் உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளப் பார்க்கிறாள்.

"இருமாதரை சிந்தையாலும் தொடேன் என்று செவ்வரந்தந்த வன்" இடத்தில் அவள் காரியம் பலிக்கவில்லை. சீதையை அகற்றினால் தான், தன் கோரிக்கை நிறைவேறுமென்று அவளைக் கொல்ல வகை தேடுகிறாள். ஆனால் இலக்குவன் அவளை மானபங்கப்படுத்திவிடுகிறான். அப்பாலும் விடாமுயற்சியால் தன் பேரில் இரக்கப்பட்டாவது தன்னை சேர்த்துக் கொள்ள மாட்டானா வென்று

"அந்தோ! உன் திருமேனிக்கு அன்பு இழைத்த வன்பிழையால்
எந்தாய்! யான் பட்டபடி இது காண்!"

என்றெதிர் வீழ்ந்தாள்.

அதுவும் பலிக்கவில்லை. சூர்ப்பநகை அண்ணன்மார் கரதூஷணரிடத்தில் முறையிட்டாள்.
என்ன நடந்தது?

"சொல் என்றென் வாயில் கேட்டார்; தொடர்ந்தெழு சேனையோடும்,
கல்லென்ற ஓலியிற் சென்றார், கரன்முதல் காளை வீரர்;
எல்லொன்று கமலச் செங்கண் இராமன் என்றிசைத்த ஏத்தல்
வில்லொன்றில் கடிகை மூன்றில் ஏறினர் விண்ணில் என்றான்
(மாரீசன் 94)

கரதூஷணர் கதியைப்பார்த்து, மனங்கசந்து சொல்லுவாள்;

"ஆக்கினேன் மனத்தாசை; அவ்வாசையென்
மூக்கினோடு முடிய முடிந்திலேன்!
வாக்கினால் உங்கள் வாழ்வையும் நாளையும்
போக்கினேன்; கொடியேன் என்று போயினாள் (கரன் 191)

அது கொஞ்சம் கோபத்திற்குத்தான். கரதூஷணர் இறந்ததனை மறந்தாள்.

....."ராமன் தங்க
வரைப் புயத்தினிடைக் கிடந்த பேராசை மனங்கவற்ற ஆற்றாளாகி"
(மாரீசன் 1)

சீதையின் அழகை ராவணனுக்குச் சொல்லி, அவள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ள இலங்கைக்கு செல்கிறாள். ராவணனுக்கு சீதைமேல் பைத்திய மூட்ட அவன் கபடமாய் சீதையைத் தூக்கிச் சென்று அசோக வனத்தில் சிறை வைக்கிறான். ராவணன் கோரிக்கையும் நிறைவேறவில்லை. ஐயோ! பாவம்!! அண்ணனும் தங்கையும் என்ன பாடு படுகிறார்கள்!!! ராவணனோ சாமானியமானவனல்லன்; வெறும் பத்துத்தலை ராக்ஷஸனுமல்லன். பிரமாவின் குலத்தவன். ஆயிரம் மறைப் பொருள் உணர்ந்தவன்; நுண்ணிய இயற்கை அறிவும்

கல்வி அறிவும் உடையவன். திக்கு யானைகளை யெல்லாம் வென்று கைலாசகிரியை அடியோடு தூக்கினவன். மூன்று உலகமும் காவல் கொள்ளும் படியான ஆற்றலை யுடையவன்.

"அந்தணன் உலகமூன்றும் ஆதியின் அறத்தின் ஆற்றல்
தந்தவன் அன்புக்கான்ற தவநெறி உணர்ந்த தக்கோன்"
(பிணிவீட்டு 112)

தேவர்களும் அவனைப் பார்த்து நடுங்குகிறார்கள்.

"இன்னபோதில் வழி நோக்கு மென்பதை
உன்னலர்; கரதலஞ் சுமந்த யுச்சியர்;
மின்னவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர் முறை முறை துறைபிற் சுற்றவே (மாரீசன் 8)

இவ்வள்வு பெருமை வாய்ந்தவன் சீதையின் முன்னால் தரையில் விழுந்து வணங்குகிறான். தன் அடிமைத் தன்மையை அங்கீகரிக்கக் கெஞ்சு கிறான்.

"குடிமை மூன்றுலகுஞ் செயுங் கொற்றத்தென்
அடிமை கோடி; யருளுதியால், எனை,
முடியின் மீது முகிழ்த்துயர் கையினன்
படியின்மேல் விழுந்தான், பழிபார்க்கலான் (கிட்கிந்தை 37)

கெஞ்சினாலும் மிஞ்சினாலும் சீதையிடத்தில் அவன் காரியம் பலிக்க வில்லை. அவன் "உயிரெனத் தகைய தேவியர்கள் அவன் மேல் ஒள் ளகை தரத்தர" அவர்களை அசட்டை பண்ணுகிறான். அவர்களோ "ஆசையும் தாமுமேயாய் ஒரு சிறையிலிருந்து (தங்கள் கணவரோடு) போன உள்ளத்தோடுவார்."

சீதாபிராட்டியாரின் நிலைமையோ வென்றால்:—

"அரக்கியரளவற்றார்கள், அலகையின் குழுவு மஞ்ச,
நெருக்கினர் காப்ப; நின்பால் நேயமே யச்ச மீக்க;
இரக்க மென்றொன்று தானே யேக்கிழை வடிவ மெய்தித்
தருக்கிய சிறையுற்றன்ன தகையளத் தமியளம்மா"
(சுந்தரகாண்டம் 69)

ராமன் பாலுள்ள அன்பினால் பயம் நீங்கி நம்பிக்கையோடிருக் கிறாள். ராமன் சீதையை எங்கும் தேடியும் காணாமல் சுக்கிரீவனை கட்டுக் கொள்ளுகிறான். வானரவீரர்கள் நாலுபக்கமும் தேடிப் போகி றார்கள்.

"செவிக்குத் தேனென ராகவன் புகழினைத் திருத்தும்
கவிக்கு நாயகன்"

அனுமன், இலங்கைவந்து சீதையைக் கண்டு அசோகவனத்தை அழித்து அக்ஷய குமாரன் முதலியோரையும் வதைத்து இலங்காபுரியை எரியூட்டுகிறான். ராவணனுக்குக் கோபம் ஒருபுறம்; நாணம் ஒருபுறம்.

"சுட்டது குரங்கு; எரி சூறையாடிடக்
கெட்டது கொடிநகர்; கிளையும் கண்பரும்
பட்டனர்; பரிபவம் பரந்த தெங்கணும்
இட்டதிவ் அரியணை யிருந்த தென் உடல்!" (மந்திர 12.)

மூன்றுலகம் கொண்டான் உடம்பு தான் சிம்மாசனத்திலிருக்கிறது; உயிரோ அசோகவனத்தில் ஊசலாடுகிறது! தன்னை வாலில் கட்டியடித்த வாலியை வென்ற வீரன் வானரசேனையோடு இன்னுங் கொஞ்ச நாளில் வந்து விடுவானென்ற பயபீதி பிடிக்கிறது. மந்திராலோசனை சபையைக் கேட்கிறான்.

இராவணன் இளைய தம்பி விபீஷணன் :—

"நீதியால் வந்த ஈடுஇல் தரும நெறியல்லாற்
சாதியால் வந்த சிறு நெறியறியாதவன்"

அவன் அரண்மனையில்

"கிட்கின நறவமும் நெறியில் ஊன்களும்
தந்தன கண்டிலென்; தரும தான்மமும்
வந்தன நீயும் பிறவும் மாண்பமைந்து
அந்தணர் எல் ஏனப் பொலிந்த தாமரோ (விபி அடைக் 112)

அவன் இராவணனுக்குச் சொல்லும் ஆலோசனை :—

"இசையுஞ் செய்கையும் உயர்குலத் தியற்கையும் எஞ்ச,
வசையும் கீழ்மையும் மீக்கொளக், கிளையொடுமடியா
தசைவில் கற்பின் அவ்வணங்கை விட்டருணதி; இதன்மேல்
விசையம் இல்லெனச் சொல்லினன்; அறிஞரில் மிக்கோன்."
(மந்திர. 99)

இவ்வாலோசனையைச் சொன்ன தம்பியை வெருட்டி விடுகிறான். அவன் ராமனிடத்தில் அடைக்கலம் புகுந்து தசரதனின் ஏழாவது புதல்வனாகி விடுகிறான். ராமன் விபீஷணனைப் பார்த்துச் சொல்லுகிறான் :—

"குகனொடும் ஐவரானேம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானேம்; எம் உழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவரானேம்;
புகலருங் கானந்தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை"
(விபீஷ 146)

இராவணனின் அடுத்த தம்பி கும்பகர்ணன், கம்பரின் விசேஷித்த சிருஷ்டி. கிரேக்க நூலாசிரியர் புளூட்டார்க்கின் வீரர்களில் ஒருவன் போலிருக்கிறான். தேசிய உணர்ச்சியுள்ள இக்காலத்திற்கு நிரம்பவும் பொருத்தமானவன். இம்மகா புருஷன் அண்ணனைப் பார்த்துச் சொல்லுகிறான் :—

" என்னொருவன் இல் உறை தவத்தினை யிராங்காய்
வன் தொழிலினுய்! மறைதுறந்து சிறைவைத்தாய்;
அன்று ஒழிவதாயினு மரக்கர்புகழ் ! ஐய !
புன் தொழிலினுல் இசை பொறுத்தல், புலமைத்தோ "
(மந்திரப்படலம் 51)

சீதையை சிறைவைத்த நாளே அரக்கர் புகழ் போய்விட்டது.

" ஆசில் பாதாரமவை யஞ்சிறை யடைப்பேம்!
மாசில் புகழ் காதல் உறுவேம்! வளமை கூரப்
பேசுவது மானம் ! இடைபேணுவது காமம்!
கூசுவது மாணுடரை! நன்று நம கொற்றம் " (மந்திர 52)

காமத்திற்கும் வீரத்திற்கும் வெகுதூரம்.

"சிட்டர் செயல் செய்திலை; குலச்சிறுமை செய்தாய்!
மட்டவிழ் மலர்க்குழலினுளே யினிமன்னு
விட்டிடுது மேல் இனியமாதுமவர் வெல்லப்
பட்டிடுதுமேலதுவு நன்று; பழியன்றுல் " (மந்திர. 53)

சீதையை விட்டுவிடுவதே இனியது ; அதனுற் தோற்றுலும் பழியில்லை.

" ஊறுபடை யூறுவதன் முன்னம் ஒரு நாளே
ஏறு கடலேறி நரர் வானரரை யெல்லாம்
வேறு பெயராதவகை வேரொடு மடங்க
நூறுவதுவே கருமம் என்பது நுவன்றுன் " (மந்திர 56)

இது அன்றே போர் வீரன் பேச்சு.

" இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து."

என்ற முதுமொழிக் கேற்ப ஆலோசனை சொல்லுகிருன். அண்ணனுக்கு ஒன்றும் ஏறவில்லை.

ராமனும் வானர சைன்யமும் இலங்கையைச் சூழ்ந்து கொள்கிருர்கள். முதல் நாள் போரிலே ராவணன் தோற்றுப் போகிருன்.

" இன்று போய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன், நாகிளங் கமுகின்
வாழை காவுறு கோசலை நாடுடை வள்ளல் "
(முதல் போர் 256)

" வாரணம் பொருத மார்பும், வரையினை யெடுத்ததோளும்,
நாரதமுனிவற் கேற்ப நயம்பட வுரைத்த நாவும்,
தாரணி மௌலிபத்தும், சங்கரன் கொடுத்த வாளும்,
வீரமும், களத்தே போட்டு வெறுங்கையோடிலங்கை
புக்கான்." (கும்ப 1.)

ராவணனுடைய வீரமும் மானமும் போயின. தலைகவிழ்து போகிற கோலம் பரிதாபம்!

"மாதிரம் எவையும் நோக்கான், வளநகர் நோக்கான்; வந்த
காதலர் தம்மை நோக்கான்; கடல்பெருஞ்சேனை நோக்கான்;
தாதவிழ் கூந்தன் மாதர் தனித்தனி நோக்கத், தானப்
பூதலமென்னு நங்கை தன்னையே நோக்கிப்புக்கான் – (கும்ப 3)

ஆயினும் யாரும் பரிகசிப்பார்களே யென்று அவன் காணவில்லை. சீதை சிரிப்பாளே என்றுதான் அவனுக்கு உயிர் போகிறது.

"வேல்நகு நெடுங்கண் செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்புகின்றான். (கும்ப 11)

தூங்கிக்கொண்டிருந்த கும்பகர்ணனை எழுப்பிப் போருக்குச் செல்லச் சொல்லுகிறார்கள். அதற்குக் கும்பகர்ணன் சொல்லுகிறான்.

"ஆனதோ வெம்சமம்? அலகில் கற்புடைச்
சானகி துயரினைத் தவிர்ந்த தில்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ புகுந்ததோ பொன்றுங் காலமே" (கும்ப 79)

"வென்றிவண் வருவென் என்றுரைக்கிலேன்; விதி
நின்றது பிடர்பிடித் தூந்த நின்றது;
பொன்றுவென் பொன்றினுல் பொலங்கொள் தோளியை
நன்றென, நாயக! விடுதி நன்றரோ" (கும்ப. 95.)

இவைகளைச் சொல்லிவிட்டு கும்பகர்ணன் போர்க் களத்திற்குப் போகிறான். விபீஷணன் கும்பகர்ணனை ராமனிடத்தில் வரும்படியாய் அழைக்கின்றான்; அதற்கு கும்பகர்ணன்:—

"நீர்க்கோல வாழ்வை நச்சிநெடிது நாள் வளர்த்துப் பின்னை
போர்க் கோலம் செய்து விட்டாற்குயிர் கொடாதங்குப்போகேன்
கார்க்கோல மேனிமைந்த! என்னுயர் தவிர்த்தியாயின்
கார்க்கோல மேனியானைக் கூடுதி கடிதின் என்றான்." (கும்ப 155)

பின்னுஞ் சொல்லுவான்:—

"உலகியலாத்தருமம் பூண்டாய், உலகுளதனையு முள்ளாய்;
தலைவன் நீ! உலகுக் கெல்லாம், உனக்கது தக்கதேயால்"
(கும்ப 156)

போர் செய்து சாவதே எனக்குத் தக்கது என்றான். விபீஷணன் கும்பகர்ணனைவிட்டுச் செல்கிறான்:—

"வணங்கினன், வணங்கிக் கண்ணும்வதனமும் மனமும் வாயும்
உணங்கினன்; உயிரோடி யாக்கை ஒடுங்கினன்; உரைசெய்தின்னும்
பிணங்கினு லாவதில்லைப் பெயர்வதென்றெழுந்து போந்தான்,
குணங்களால் உயர்ந்தான் சேனைக் கடலெலாம் கரங்கள் கூப்ப"
(கும்ப 198)

இது ராவணன் பேரில் சேனைகளின் நம்பிக்கையில்லாத் தீர்மானமும், விபீஷணன் பேரில் நம்பிக்கைத் தீர்மானமும் போலும்! கும்பகர்ணன் தான் சொன்னபடியே கொடியபோர் செய்து தன் உயிரைக் கொடுத்தான்; ராவணன் அப்புறமும் சீதையை விடவில்லை.

ராவணனின் சிரேஷ்ட புத்திரன் இந்திரஜித்து மகாவீரன். அவனுக்கு விபீஷணன் பேரில் வெகு கோபம். ராஜதுரோகி, தேசத் துரோகியென்று அவனைப் பகைக்கிறான். அவனுக்குக் கும்பகர்ணனின் நுண்ணிய அறிவு முதலிலில்லை. ஆனால் அனுபவத்தில் வருகிறது. இலக்குவனோடு சண்டை செய்து சலித்துப் போகிறான். அப்போது பிதாவைப் பார்த்து

"குலஞ்செய்த பாவத்தாலே கொடும்பழி தேடிக்கொண்டோம்!
சலஞ்செயின் உலகமூன்றும் இலக்குவன் முடிப்பன் தானே"
(இந்திர 4)

"ஆதலால் அஞ்சினேன் என்றருளலே; ஆசைதான் அச்
சீதைபால் விடுதியாயின், அனையவர் சீற்றந்தீர்வர்;
போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர்; உன் மேல்
காதலால் உரைத்தேன் என்றான், உலகெலாம் கலக்கி வென்றான்"
(இந்தி 6)

மில்டனர் சாத்தானுக்கு கொடுக்கிற கௌரவம் ராவணனுக்குண்டாகிறது.

"பேதமை உரைத்தாய், மைந்த! உலகெலாம் பெயரப் பேராக்
காதை யென் புகழினெடு நிலைபெற, அமரர்காண,
மீதழு மொக்குளன்ன, யாக்கையை விடுவதல்லால்
சீதையை விடுவதுண்டோ"
(இந்திர 9)

"வென்றிலன் என்ற போதும் வேதம் உள்ளளவும் யானும்
நின்றுளென், அன்றே! மற்றிவ்விராமன் பேர் நிற்குமாயில்
பொன்றுதல் ஒரு காலத்துந் தவிருமோ? பொதுமைத் தன்றே?
இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கும் இறுதியுண்டோ"
(இந்திர 10)

என்றான், ராவணன் கொடிய போர்செய்து சாகிறான்.

வெம்மடங்கல் வெகுண்டனைய கினம் அடங்க,
மனம் அடங்க, வினையம் வீயத்,
தெம்மடங்க, பொருதடக்கைச் செயல் அடங்க,
மயல் அடங்க, ஆற்றல் தேயத்,
தம்மடங்கு முனிவரையுந் தலையடங்கு, நிலை
அடங்கச் சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தன, அம்முறைதுறந்தான்
உயிர்துறந்த முகங்களம்மா! (இராவணவதை 201)

க்ரமம் அடங்கவும், புகழ்வரவும் முகக்களை மும்மடங்கு அதிகமாய்த் தோன்றினது.

"நடையில் நின்று
உயர் நாயகன்"

ராமன் முகமோ எப்போதும் பொலிவுற்றிருந்தது, அவன் முகம் :—

மெய்த்திருப்பதம் மேவென்ற போதினும்
இத்திருக்குறந்து ஏகுஎன்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருந்த முகம்"— (காட்சி 20)

பட்டம் பெற்றுக்கொள்ள வந்த ராமனைப் பார்த்து கைகேசி:—

"ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந்தவ மேற்கொண்டு
பூழிவெங்கான நண்ணிப் புண்ணியத் துறைகளாடி
ஏழிரண்டாண்டின் வா என்று இயம்பினன் அரசன்" என்றாள்
(கைகேசி சூழ் 107)

அதைக்கேட்டதும் ராமன் முகம் "மும்மடங்கு பொலிந்தது." "அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்ற தம்மா." ராமன் கைகேசியைப் பார்த்துச் சொல்லுவான் :—

"மன்னவன் பணியன்று ஆகினும் பணிமறுப்பேனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?
என்னினி உரைதி, அப்பால் இப்பணிதலை மேற்கொண்டேன்
மின்னெனிகானம் இன்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்
(கைகேசி 110)

என்று காட்டுக்குப் புறப்படுகிறான்.

....."கன்று பிரிந்துழிக்
கறவை ஒப்பக் கரைந்து கலங்கும்"

கோசலா தேவியைப் பார்த்து :—

"அருங்கற்பினாய்!
பொய்த்திறத்தினன் ஆக்குதியோ புகல்
மெய்த்திறத்து நம்வேந்தனை நீ" என்றும் (நகர் 15)

"சித்த, நீ, திகைக்கின்றதென் ? தேவரும்
ஒத்த மாதவஞ் செய்து உயர்ந்தார் அன்றே" (நகர் 22)

என்றுஞ் சொல்லுகிறான்.

கைகேசியின் சூழ்ச்சியைக் கேட்ட இலக்குவன் சீற்றங்கொண்டு, தாய் தந்தையரைப் பழிக்கிறான். ராமன் அவனைப்பார்த்து:—

"ஐய! நின்தன்
வாய் தந்தனை கூறுதியோ, மறைதந்த நாவால்" (நகர் 135)

என்று சொல்லி அவனைச் சாந்தப் படுத்துகிறான். இலக்குவன் தாயும் அவனைப்பார்த்துச் சொல்லுகிறாள்:—

"மகனே! இவன் பின் செல்; தம்பி
என்னும்படி அன்று; அடியாரினில் ஏவல் செய்தி;
மன்னன் நகர்க்கே, இவன் வந்திடில்வா! அதன்றேல்
முன்னம் முடி" (நகர் 151)

ஆனல் ராமனே இலக்குவனிடம் அயோத்தியில் இருக்கச் சொல்லு கிறான் :—

"என்னையும் பிரிந்தனர் இடர் உறுவகை
உன்னை நீ என் பொருட்டு உதவுவாய்" (நகர் 154)

இலக்குவனே,

"நீர் உள எனின், உள மீனும்; நீலமும்
பார் உள எனின் உள; யாவும் பார்ப்புறில்
நார் உள தனுவுளாய்! நானும் சீதையும்
ஆர் உளர் எனின், உளெம் ? அருளுவாயென்றான் (நகர் 156)

இருவரும் மாவுரி தரித்துப் போகிறார்கள். குலகுரு காண்கிறார். உணருந் தன்மையரான அவரும் தடுமாறுகிறார். ராமனைப் பார்த்து, நீ, கானகம் சென்றால் பிதாவின் பிராணன் போய்விடும் என்கிறார்.

அதற்கு ராமன்:—

"அன்னவன் பணிதலை ஏந்தி ஆற்றுதல்
என்னது கடன், அவன் இடரை நீக்குதல்
நின்னது கடன், இது நெறியு மென்றனன்" (நகர் 166)

ராமன் காட்டுக்குப்போவது தசரதனுக்குச் சித்தமில்லை யென்று வசிஷ்டர் சொல்லப் பார்க்கிறார்; ராமனே

"ஏன்றனன் எந்தை; இவ்வரங்களே விளைவு
ஈன்றவள்; யானது சென்னி ஏந்தினேன்
சான்று என நின்ற நீ தடுத்தியோ? என்றான் (நகர் 168)

குலகுரு ஒன்றும் பதில் சொல்லத்துணியாமல் கண்ணீர் சோர நிற்கிறார்.

"சுற்றிய சிரையன், தொடர்ந்த தம்பியன்
முற்றிய உவகையன், முளரிப் போதினும்
குற்றமின் முகத்தினன்" (நகர் 170)

மதில்வாயில் போகிறான்.

அந்தணர், அருந்தவர், அவனிகாவலர், நகருளார், காட்டுளார், இவர்களின் சிந்தை பதைக்கின்றது. விடுதலைக்காகக் காத்துக்கொண்டி ருக்கும் தேவர் உள்ளம் வேகிறது. அவ்வேளை,

"அருத்தி வேதியற்கு ஆன் குலம் ஈந்த அவர்
கருத்தின் ஆசைக்கரையின்மை கண்டு இறை"
(ராமன்) சிரிக்கிறான் (காட்சி 26)

"ஆழ நீர்க் கங்கை அம்பி கடாவிய ஏழை வேடன்" குகன், "தேனும், மீனும் அமுதினிக்கமைவதாகத் திருத்தி"க் கொண்டு வருகிறான். "கண்ணினைக் கண்ணின் நோக்கிக் கனிகிறான்." ராமன் அவனோடு தோழமை கொண்டு அளவளாவுங் காட்சி மிகவும் அருமையானது. குகனுக்கு ராமனோடு காட்டுக்கு போக ஆசை. அவனை நோக்கி ராமன் சொல்லுவான் :—

"என் உயிரனையாய் நீ, இளவல் உன் இனையான், இந்
நன்னுதலவள் நின் கேள்; நளிர் கடல் நிலமெல்லாம்
உன்னுடையது; நான் உன் தொழில் உரிமையினுள்ளேன்"
(கங்கை 68)

"துன்புளதெனின், அன்றே, சுகம் உளது; அது அன்றிப்
பின்புள திடைமன்றும்; பிரிவுளதென உன்னேல்,
முன்புளெம் ஒரு நால்வேம் முடிவுளதென உன்னு
அன்புள இனி நாம் ஓர் ஐவர்களுளரானேம்" (கங்கை 69)

கேகய நாட்டிலிருந்து பரதன் வருகிறான். அண்ணன் காட்டுக்குப் போனதும் தந்தை இறந்ததும் கேட்டு

"எந்தையும் ஆயும் எம்பிரானும் எம்முனும்
அந்தமில் பெருங் குணத்துராமன் ஆதலால்
வந்தனை அவன் கழல் வைத்த போதலால்
சிந்தைவெல் கொடுந்துயர் தீர்கலாது (பள்ளி 58)

என்று சொல்லி

"தாயுரை கொண்டு தாதை உதவிய தாரணி தன்னைத்
தீய்வினை யென்ன நீத்துச்சிந்தனை முகத்தில் தேக்கி" (குகன் 35)

"தாயரும், அருந்தவத்தவரும், தந்தையின்
ஆயமந்திரி யரும், அளவில் சுற்றமும்
தூய அந்தணர்களும், தொடர்ந்து சூழ்வர (ஆற்று 53)

ராமனைத் தேடி வருகிறான். ராமனை அயோத்திக்கு வந்து அரசாள வேண்டுமென்று கெஞ்சுகிறான்.

அதற்கு ராமன் :—

"முன்னர் வந்துதித்துலக மூன்றிலும்
நின்னை ஒப்பிலர்; நீ பிறந்த பார்
என்னதாகில், யான் இன்று தந்தேன்,
மன்ன, போந்து மகுடஞ் சூடினை (இரா 112)

பரதனை

"நந்தியம் பதியிடை நாதன் பாதுகம்
சென்னிக் கோன்முறை செலுத்தச் சிந்தையான்
இந்தியங்களை அவித்து இருத்தன் மேயினான்
அந்தியும் பகலும் நீர் அறுத்த கண்ணினான்" (இரா 140)

பரதன் பதினன்கு வருஷம் காத்திருக்கிறான். குறித்த காலத்திற்குள் அண்ணன் வரக் காணவில்லை; தன் உயிரை மாய்த்துக்கொள்ளத் தீர்மானிக்கிறான். தம்பி சத்துருக்கனை அரசாட்சியை ஒப்புக்கொள்ளச் சொல்லுகிறான்.

அதற்கு சத்துருக்கன் சொல்லுவான் :—

"காளை நிலமகளைக் கைவிட்டுப் போவானைக் காத்துப் பின்பு
போனனும் ஒரு தம்பி; போனவர்கள் வரும் அவதி போயிற்றென்ன
ஆனத உயிர்விட என்றமைவானும் ஒரு தம்பி, அயலே நாணது
யானும் ? இவ்வரசாள்வென் ? என்னே ! இவ்வரசாட்சி இனிதே?
அம்மா ?" (மீட்சி 223)

அப்பால், ராமலக்ஷ்மணரும், புதிய சகோதரர் மூவரும் வந்து பரதனையும் சத்துருக்கனையும் சந்தோஷிப்பிக்கிறார்கள். ராமனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கிறது. (சோழ நாட்டு ? "மங்கலத்துரிமை மாக்கள்" "அந்தணர், வணிகர், வேளாண் மரபினர், சடையனே யனையச் சான்றோர்" ராமன்கோயில் வருகிறார்கள். "விரை செறி கமலத்தாள் சேர் வெண்ணெய் மன்சடையன் தங்கண் மரபுளோர்" மகுடம் கொடுக்க வசிஷ்டர் ராமன் சிரசில் புனைகிறார் மூன்று லோகத் தாரும் தங்கள் தங்கள் சிரசில் மகுடம் வைத்ததாகச் சந்தோஷப் படுகிறார்கள்.



கலியாணிச் சளுக்கியர்கள்

(கி. பி. 973—1138)

(ஆராய்ச்சி)

கோவை. வித்வான். திரு. சி. து. நாராயணசாமி முதலியாரவர்கள்

கலியாணி என்பது—நைசாம் இராச்சியத்தில் 'பீடர்' சில்லாவில் உள்ளதோர் அழகிய நகரம். இந்நகரம் கி. பி. 978-ஆம் ஆண்டு முதல் 1127 ஆம் ஆண்டுவரை அரியாசனத்திருந்து அரசுபுரிந்த மேலைச் சளுங்கிய அரசர்களுக்கு இராசமாநகரமாயிருந்து கீர்த்தி சிறந்து விளங்கியது. இராசமாநகரமாகிய கலியாணி கி. பி. 1054 ஆம் ஆண்டின் 'கேம்பாவி' சாசனத்தில் "நெலவீடு" (பாசறை) என்று கூறப்பட்டிருக்கிறது. இதற்கு முந்திய சளுக்கிய—இராட்டிரகூட சாசனங்களில் இப்பெயரே காணப்படவில்லை. இதனால் இப்பட்டினம், 'தைலபன்' என்ற அரசனால் புதிதாக உண்டாக்கப்பட்டதா? அல்லது முன்னமே யிருந்து அவ்வரசனால் நெலவீடு ஆக்கப்பட்டதா? என்ற வினாவுக்கு இடமுண்டாகிறது. பில்ஹணரது 'விக்கிரமாங்கதேவ சரித்திரத்தில்' கூறப்பட்ட சுலோகத்திற்கு, இருவிதமாகவும் பொருள் படுகின்றன. ஆகையால், ஒரு தலையாகக் கூறுதற்கில்லை.

சரித்திர விளக்கம் பெற்ற இப்பட்டினத்தில் கி. பி. 973 ஆம் ஆண்டில் சளுக்கிய அரசர்களில் 'இரண்டாம் தைலபன்' என்னும் பெயரிய மன்னன், இராட்டிரகூட அரசனை 'இரண்டாம் கக்கனை''ப் போரில் வென்று மீண்டும் சளுக்கிய அரசுரிமையை நிலைநிறுத்தினன். தைலபன், பாதாமிசாளுக்கியர்களின் வழிவந்தவனு வென்பதைக் குறித்து வரலாற்று ஆசிரியர்களுள் மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. எனினும், மேலைச் சளுக்கியர்கள், கீழைச் சளுக்கியர்களுடன் சம்பந்தப்பட்டவர்களென்றே சொல்ல வேண்டும். மேலைச் சளுக்கியர்களை வரலாற்று ஆசிரியர்கள், "கலியாணிச் சளுக்கியர்" என்றே கூறியிருக்கின்றனர்.

இவ்விரண்டாம் தைலபன் மேலைச் சளுக்கிய அரியாசனத்தமர்ந்து 'செங்கோலேந்திச் சத்யாசிரயகுல திலகன்—(உண்மைக்குப் புகலிடமாய்க்

குலமேன்மையுடன் விளங்குபவன்) "சளுக்கிய ஆபரணன்"—(சாளுக்கிய மரபின் அணிகலமாகத் திகழ்பவன்) என்ற விருதுப் பெயர்களைப் புனைந்துகொண்டான். மற்றும், தைலபன், தனது மகத்தான வல்லமையினால் இராட்டிர கூடர்களின் ஆதிக்கத்தைக் குலைத்ததுடன் அமையாது, தனது நாட்டைச் சுற்றியுள்ள அரசர்களையும் தன்னடிப் படுத்தித் தனது உரிமையை மேலும் பலப்படுத்திக் கொண்டான். மற்றும், தனது தகுதிக் கேற்பத் தைலபன், பட்டத்து அரசியாக இராட்டிரகூட அரச குமாரியான "சக்கலதேவி" என்பவளையும் திருமணஞ் செய்து கொண்டான். "இரத்தர்கள்" என்னும் இராட்டிரகூடர்களைத் தன் அதிகாரத்துள்ளடக்கி "சவுந்தத்தி" என்ற இடத்தில் சிற்றரசர்களாக விருந்து அரசு நடாத்தச் செய்ததோடு "சிலாகாரர்கள்" என்னும் பெயரிய குறுநில மன்னர்களையும் தன்கீழ் அடங்குமாறு செய்துகொண்டான். இத்தகைய தலைமைத் தானத்தை வகித்ததும் "நிஜபுஜசக்கரவர்த்தி;" "கரஹடகொங்கண பயங்கரன்:" "இராட்டிரகூடர்களுக்கு நஞ்சுபோன்றவன்;" "கூர்ச்சரருக்குச் சுரம்போன்றவன்;" "மாளவதேச மன்னனுக்குக் காலக்கினி" யாகத் தைலபன் விளங்கினான். பின்னர், இவன் வடக்கு எல்லையில் திறமையாக அரசு செய்துகொண்டிருந்த மாளவதேசத்துப் பரமாரகுலத்து அரசனாகிய "வாக்பதி முஞ்சராச" னோடு போர்தொடுத்தான். போரில் வல்லானும், பெரும்படைகளுக்கு அதிபனுமான முஞ்சராசன், முன்னரேயே தைலபனை அறுமுறை போரில் முறியடித்திருந்ததனால், இம்முறையும் அவனைத்தோல்வியுறச் செய்தான். இவை, சில சான்றுகளால் உண்மையென்று உறுதிப் படுகின்றது. இறுதியாக முஞ்சன், மாளவத்தினின்றும் பெரும்படையுடன் போர்க்கோலமாகப் புறப்பட்டு, கோதாவரியாற்றைக் கடந்து கலியாணிநாட்டினுள் நுழைந்து தைலபனைப் போர்புரிய வருமாறு அறைகூவி அழைத்தான். வலுவில் தன் நாட்டிற் புகுந்து போர் செய்யவருமாறு தன்னை அறைகூவி அழைத்ததற்குப் பொறாத தைலபன், வஞ்சினங்கொண்டு பெரும் படைகளோடும், பின்னுதவிகொண்டும் தன்பகைவனை எதிர்த்துக் கடும்போர் விளைத்து முஞ்சனைத் தோல்வியடையச் செய்ததோடு, அவனைச் சிறைப் படுத்திக் காவற் கூடத்திலும் அடைத்தான். தைலபனது இப் பெரு வெற்றிக்கு யாதவர்களின் தலைவனான "இரண்டாம் பில்லன்" என்னும் பெரிய அரசனது பேருதவியே யாமென்று அறியப்படுகிறது. முஞ்சன் சிறைக் கோட்டத்தில் இருக்கும்போது தப்பியோட முயன்றதாகவும், அக்குற்றத்திற்குத் தண்டனையாகத் தைலபன், முஞ்சனை வீடுவீடாகச் சென்று இரப்புணவு கேட்கும்படி செய்ததாகவும், முடிவில் அவன் தலையைத் தனது உடைவாளால் வெட்டி வீழ்த்தியதாதவும் தெரிகிறது. இது கி. பி. 993—997-ம் ஆண்டில் நிகழ்ந்தது.

தைலபனுடைய ஆளுகையில் அவனுடைய நாடு, நீண்ட நிலப் பரப்பைக் கொண்டிருந்தது. மற்றும், 'சௌந்தத்தி' ராட்டிரகூடர்களும்; 'வனவாசி; சாந்தளிகே; சிசுக்காடு' ஆகிய ஊர்களில் சிற்றரசர்களும்;

'கோங்கண தேசச்'த்துச் சிலாகாரர்களும்; சேவுணதேசத்து யாதவர்களும்; சேதி—உத்கலம்—சோழம்—நேபாளம் ஆகிய நாடுகளின் அரசர்களும், தைலபனது நாட்டாண்மையின் கீழ் அடங்கியிருந்தனர். அம்மட்டோ! அவன் குந்தலதேசத்திலும், நடேக்ருடத்திலும்; "ஏழரைலக்கம் நாடு" என்று புகழ் நிலவிய 'ரத்தபதி'யிலும் நிலையான ஆதிக்கத்தைச் செலுத்திவந்தான். மேலும் லாட (கூர்ச்சரம்) தேசத்து இறைவனாகிய "பாரப்பன்;" 'அனகில்வாத்து' மரபின் தலைமை ஆண்மகனாகிய "மூலராசன்" என்பவனுக்குப் பகைவனாகப் போக்கியதனால், கூர்ச்சரமும் தைலபன் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. பின்னும், "மேருதுங்கன்" என்னும் பெயரிய மாபெரும் வடமொழி வாணருடைய "பிரபந்த சிந்தாமணி" என்னும் அரிய நூலில், "திரிலிங்க கருநடதேசங்களின் தலைவன் தைலபன்" என்று கூறப்பட்டிருப்பதால், அந்நாடுகளும் இவனது அரசுரிமையின் கீழ் அடங்கியிருந்தன வென்று அறியப்படுகிறது.

தைலபன் முஞ்சராசனைப் போரில் புறங்கண்டு சிறை செய்து அவமானப்படுத்திக் கொலை செய்த கொடுமைக்குத் தாழாது முஞ்சராசனது தம்பியின் மகன் "போசன்" என்னும் வேந்தன், தைலபனைப் பழிக்குப் பழிவாங்கும் எண்ணத்துடன் சமயத்தை எதிர்பார்த்திருந்தனன். சமயம் கிடைத்ததும் சிறிதும் தாமதியாமல் போர்ப் பறை முழக்கித் தைலபனை எதிர்த்துச் சண்டை தொடுத்து வென்று, சிறைப்படுத்தி, மானக்கேடு செய்து, கடைசியாகத் தைலபனை வாளால் இருகூறாக்கி உயிரைப் போக்கியதாகப் 'போசசரிதம்' கூறுகிறது. போசன், ஐம்பத்தைந்து ஆண்டுகள் அரசு செய்ததாக ஆதாரம் இருப்பதால், தனது பெரிய தந்தையைக் கொன்ற தைலபனைக் கொன்றிருக்கலாம்.

டாக்டர் R. G. பண்டாரகர், போசனுல் கொலையுண்டவன், தைலபனது தம்பிமகனாகிய "ஐந்தாம் விக்கிரமாதித்தன்" என்று எண்ணுகின்றனர். (Early History of Dekkan 1) போச சரித்திரத்தில், 'போசன், தைலபனைக் கொன்றான்' என்று வெளிப்படையாகக் கூறியிருப்பதை அவர் எக்காரணங்கொண்டு மறுக்கின்றனரென்பது விளங்கவில்லை.

இரண்டாம் தைலபனுக்குப் பிறகு கி. பி. 997-ஆம் ஆண்டில் அவனது குமாரன் சத்தியாசிரயன் அல்லது 'இரிவபெடங்கன்' என்னும் பெரிய அரசன், சாளுக்கிய அரியாசனத்தை அலங்கரித்தான். இவன் ஆட்சியின்கீழ் "இரட்டைபாடி ஏழரை இலக்கம் நாடு" முழுதும் அடங்கியிருந்தது. கல்வி யறிவும், மொழிப் பற்றுமிக்க இரிவபெடங்கன் "இரன்னன்" என்ற புகழ் சிறந்த புலவர் பெருமானைப் பெருமைப்பட ஆதரித்திருந்தான். முஞ்சன் சிறைக்கோட்டத்தில் வாளால் வெட்டுண்டதற்குப் பின்னர், நாட்டில் சிறிது குழப்பம் ஏற்பட்டது. இச்சமயத்தில் "இராசராச சோழன்" 'கங்காவதியை' எளிதாகக் கைப்பற்றிக் கொண்டான். இது காரணமாக இரிவபெடங்கன் சோழர்

களோடும் போர்புரிய வேண்டியது இன்றியமையாததாயிருந்தது. ஆகவே, இரிவபெடங்களனுக்கும், இராசராச சோழனுக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. அப் போரில் வெற்றிமங்கை இராசராசன் கழுத்தில் வர்கைமாலை சூடினள். அதனல், தனது இரட்டைபாடி, நுளம்பபாடி களை சத்யாசிரயன் இழக்க வேண்டியதாயிற்று. எனினும், அவன் விரைந்து படைதிரட்டி மீண்டும் போர் தொடுத்தான். அப்போர் கி. பி. 1007—1008-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தது. அதில் இராச ராசன் குமாரன் "தாவரேகட்டம்" என்ற இடத்தில் துரத்தியடிக்கப் பட்டான். கங்கர்கள், பாணர்கள், நுளம்டர்கள், கீழைச் சளுக்கியர்கள், முதலிய மன்னர்களைச் சோழ மன்னர்கள், தங்கள் அரசுரிமையின் கீழ் அடங்கும்படி செல்வாக்கும் திறமையும் கொண்டிருந்தார்கள். ஆனல், மேலைச்சாளுக்கியர்களை மட்டும், சோழர்கள், வெற்றி கொள்ளக் கூடா மல் இருந்தனர்.

கி. பி. 1009-ஆம் ஆண்டில் இரிவபெடங்களனுக்குப் பிள்ளைப் பேறு இல்லாததனல், அவனது உடன் பிறந்தான் "தசவர்மன்" புதல்வன் "ஐந்தாம் விக்கிரமாதித்தன்" அரசாட்சிக்குரிய பெரும் பீடத்தில் அமர்ந் தான். அவனுக்குத் "திரிபுவனமல்லன்" என்ற காரணச் சிறப்புப் பெயரிருந்தது. இத்திரிபுவனமல்லன் இராசராச சோழனது திருப் புதல்வன் இராசேந்திர சோழனுக்குச் சிங்கவேறு போன்றிருந்தான். இதற்குமேல் இவனைப்பற்றி யாதொன்றும் அறியக்கூடவில்லை.

இவனுக்குப் பின்னர் இரண்டாம் "சயசிங்கன்" அல்லது "சகதேக மல்லன்" என்ற அரசன் சளுக்கிய சிங்காதனத்திருந்து மிகவும் சிறப் பாகச் செங்கோலோச்சினன். இவன் வடதிசையிலிருந்த பாரமார மன்னர்களை வெற்றிகண்டு காட்டின் எல்லையை மிகவும் அகலப்படுத்தி னன். இவன் தனது காட்டை ஆண்டகாலம் இருபத்தியெட்டு ஆண்டு களே. (கி. பி. 1014-முதல் 1042-வரை) இக்காலத்தில் இவ்வேந்தன் சோழ மன்னர்களைப் புறமுதுகுகாட்டி ஓடும்படி வெற்றிகண்டது முதன்மையாகக் குறிப்பிடத்தக்க செய்தியாம். ஆனல், சோழர்கள் 'ரத்தபதி'யின் மீது படையெடுத்துச் சென்று, துங்கபத்திரக் கரையில் உள்ளதும்; பல்லாரி சில்லாவில் ஓசபேட் (புதுப்பேட்டை) தாலூ காவைச் சார்ந்ததுமான 'கம்பிலித்தோட்டத்தை' அழித்துவிட்டார்கள்.

சயசிங்கனுடைய கி. பி. 1019-ஆம் ஆண்டு சாசனத்தில் அவன் போசளுகிய தாமரைக்குத் தான் ஒரு தண்மதியம் என்றும், போச ராசனையும், அவன் துணையரசர்களையும் தேடித் துரத்திப் பொடியாக் கிய வலிமையுடையானென்றும் கூறப்பட்டிருக்கிறது.

சோழ மன்னர்கள் கம்பிலித் தோட்டத்தை எரியூட்டிய மகிழ்ச்சி யால் மெய்மறந்திருந்த சமயத்தில் இரண்டாம் சயசிங்கன் பெரும் படையுடன் திடீரென அங்குத் தோன்றி அவர்கள்மீது பெரும்போர் செய்து அவர்கள் அகந்தையைக் குலைத்து சோழர்களுள் பெருவீரனக

விளங்கிய இராசேந்திர சோழன் என்கிற மதுராந்தகனைத் தோல்வியுறச் செய்து அவனது சேனைகளை நாற்றிசையிலும் சிதறியோடும்படி வெற்றி கொண்டான். இப்போர் நிகழ்ச்சியின் காலம் கி.பி. 1309-ஆம் ஆண்டு. இப்பெரு வெற்றியால் "இடதுறைநாடு" என்ற ரேய்ச்சூர் நிலப்பரப்பு சயசிங்கன் வசப்பட்டது. சயசிங்கனது பட்டத்து அரசமாதேவியின் பெயர், "சுக்கலதேவி" குமாரனது பெயர் "சோமேச்சுரன் I." குமாரியின் பெயர்—"அவ்வலதேவி" இவ் அவ்வலதேவியை சயசிங்கன் யாதவ மன்னனான "மூன்றாம் பில்லமனு"க்குத் திருமணஞ் செய்து கொடுத்தான்.

இவனுக்குப் பின்னர் முதலாம் சோமேச்சுரன் அரசுரிமையைக் கைக் கொண்டான். இவனுக்கு 'ஆகவமல்லன்' என்ற பெயர் சிறப்புப் பெயராக வழங்கப்பட்டது. இப்பெயரின் பொருள் "பெருவீரன்" என்பது. தனது சிறப்புப் பெயருக் கேற்ப ஆகவமல்லன் தனது முன்னோர்களின் பகைவர்களான சோழர்களை எதிர்த்துச் சண்டையிடுவதிலேயே முனைந்திருந்தான். சோழர்களும், ஆகவமல்லனாகிய முதலாம் சோமேச்சுரனை வெற்றிகண்டு வாகைமாலை சூடுவதென்ற வீர வைராக்கியத்துடன் கறுவு கொண்டிருந்தனர். ஆகவமல்லனுக்குப் பகைவர்களா யிருந்த சோழர்கள் நால்வர். அவர்கள் பெயர்கள் முறையே, இராசாதிராசன். (கி. பி. 1078—1052) இராசேந்திரதேவன். (கி. பி. 1052—1062) இராசமகேந்திரன் (1062—1063) வீரராசேந்திரன் (1063—1070) என்பன. இந்நால்வரும், கங்கைகொண்ட சோழன் என்றுபெயர் சிறந்த முதலாம் இராசேந்திரசோழர் களுடைய மக்களாவர். இஃதிவ்வாறாக முதலாம் சோமேச்சுரன் தனது தந்தையின் அரசுரிமையைக் கைக்கொண்டதும், போச மன்னனது தலைமைப்பட்டினமாகிய தாராநகரத்தைத் தனது போர்வன்மையினால் முற்றுகையிட்டு வென்று, அவ்வரசனை நாட்டைவிட்டோட்டியும், 'தசாரண்யம்','தாகலா' என்ற பெயர்களை யுடையதும், நருமதிநதிக்கரையிலுள்ளதுமான சேதி நாட்டை அழித்து அதன் அரசனாகிய 'கர்ணனை' வெற்றிகொண்டும், திராவிடமன்னனைப் புறமுதுகு காட்டும்படி ஓட்டியும், சோழ மன்னர்களுக்கு அப்பொழுது அரசிருக்கைத்தானமாக விளங்கிய காஞ்சிபுரத்தைத் தாக்கியும், தனது வெற்றியையும், படைப்பெருக்கையும், தோளாண்மையையும் யாவரும் கண்டஞ்சுமாறு காட்டினன். இவற்றைச் சாசனங்களும், வேறுசில விவரங்களும் உண்மையென உறுதிப்படுத்துகின்றன. இவைகண்ட செம்பியர்கள், தங்கள் பழம் பகையை முடிக்கவும், வெற்றியை விளக்கிக் கீர்த்தியை நாட்டவும், நோக்கங்கொண்டு பேரமர் நிகழ்த்துதற்குரிய தானைகளுடன் பொருதற்கெழுந்து ஆகவமல்லனுக்குச் சொந்தமானதும், 'புலிகரை' யைச் சார்ந்ததும், கொப்பத்துக்கு அருகிலுள்ளதுமான "இலட்மீச்சுரம்" என்னும் பட்டினத்தைத் தாக்கி நெருப்பிட்டுக் கொளுத்தியும், நைசாம் இராச்சியத்துச் சிக்கந்தராபாத்துக்கு நாற்பத்திரண்டு மைல் தூரத்திலுள்ளதுமான "கொள்ளிப்பாகையை" எரியூட்டியும், கம்பிலித்தோட்

டத்தையும், அதிலுள்ள அரண்மனையையும் அழித்தும் அவ்வெற்றிகளின் அறிகுறியாக "வேற்றித்தூண்" ஒன்றை நிலைநாட்டினர்கள். இப்போர்களுக்கு முதல்வனாக முன்னின்று வெற்றிபெற்றவன், 'இராசாதிராசன்' என்னும் பெயரிய சோழ அரசனுவன். இவ்விவரங்கள், கி. பி. 1047-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் விளக்கப்பட்டிருக்கிறது. இவற்றுடன் அமையாது மேலும், இராசாதிராசனும், இளவரசனுகிய இராசேந்திரதேவனும் மேலைச் சளுக்கர்களது அரசிருக்கைத்தானமாகிய "இரட்டமண்டலம்" புகுந்து, அம்மண்டலத்தின் இராசமாகரமாகிய 'கலியாணபுறத்தை'ப் போரிற் கைப்பற்றி *கொல்லாபுரத்தையும் தமதாக்கி அங்கும் ஒரு வெற்றித்தூணை நிறுத்தினர்கள். மும்முறையும் சோழர்களால், தனக்குப் பெருந்தோல்வியே யுண்டானதற்கு ஆகவமல்லன் பொறுது பெரிதும் வருந்தி, அவமானத்தைச் சகிக்கலாற்றுது நான்காம் முறையாக விஜவாடைப் (பெஜவாடா) போராற்றங்கரையிலுள்ள (கிருட்டிணைதி) 'கோப்பத்தில்' போருக்குவரும்படி சோழர்களை அறைகூவி அழைத்தான். அச்சோழர்கள் இருவரும், அஞ்சா நெஞ்சினரும், படைகண்டு பின்னிடாத போராற்றலுடையவர்களும், ஒப்பற்ற வீரரும், சிங்கவேறு போன்ற பலசாலிகளுமாயிருந்ததேரடு ஆகவமல்லனை எவ்விதத்திலும் வெல்வதிலேயே கண்ணும், கருத்துமாயிருந்தனர். இத்தகைய உரத்தினர் ஆகவல்ல மல்லனுடைய அறைகூவலுக்கு அஞ்சுவரோ! ஒரு சிறிதும் அஞ்சாதவர்களாகிக் குறிப்பிட்ட கொப்பத்துக்குப் போர்க்கோலத்துடன் அளப்பரும் தானைகளை அணிவகுத்துச் செலுத்திச் சென்றனர். இப்போர்க்களம் கிருட்டிணைதியும், துங்கபத்திரையாறும் கலக்கும் பெருவெளியிலிருந்தது.

ஆகவமல்லன் தோல்வியென்பதை இன்னதென்றே அறியாத சுத்த வீரனுகவிருந்தும், சோழ மன்னர்களிடத்து மும்முறையும் போரில் தோல்வி அடைந்ததற்கு மிகவும் வருந்தி உள்ளம் வெதும்பினன். எனினும், போரில் விருப்பமுள்ள சுத்தவீரனுக்கு வெற்றியிலேயே கண்ணோட்டமானதாலும், "த்ரைலோக்கியமல்லன்" 'ஆகவமல்லன்' என்ற விருதுப் பெயர்கள், தான் போரில் ஒப்பற்ற வீரன் என்பவற்றை விளக்குவது கொண்டும், அவன் முன்னிலும் பலமான வீராவேசங் கொண்டு போருடைதரித்து, கவசமணிந்து படைகளேந்திப் பட்டத்து யானை மீதிவர்ந்து விரைந்து போர்க்களம் அடைந்து, பரந்து நின்ற பெரும்படைகளின் முன்னணியில் வந்து தனது பழம் பகைவர்களாகிய இராசாதிராசன், இராசேந்திரன் என்னும் இருபெரும் வீரர்களை எதிர்த்து நின்று அமர்வினைத்தான். ஆகவமல்லனது எண்ணிக்கையற்ற தானைகளும், அப்பொழுது மிகுதியான ஊக்கமும், வீரமும் கொண்டு மாற்றலர்களைப் பகைத்துப் போர்செய்தன. கடும்போர் நிகழ்ந்தது. தெலுங்குநாட்டில் இருபேராறுகள் கலக்கின்ற இடத்தில், கூமவெளியில் மண்மீது அதுகாறும் இவ்வளவு பெரியதோர் போர்

*கொல்லாபுறம்—கொல்காப்பூர்.

நடந்ததேயில்லை யென்று வியந்து கூறும்படி அவ்வளவு கொடுமையான சண்டை நிகழ்ந்தது. இறுதியாக மாபெரும் வீரனாகிய ஆகவமல்லன், கரியதொரு கன்மலை கான்கு கால்கள் கொண்டு எழுந்ததோ! என்று கூறும்படி மதமிக்க தனது பட்டத்துயானையின் மீது இருந்தபடியே மிகவும் நெருங்கி நீண்டதும், கூர்மைமிக்கதுமான பேரம்பால் இராசாதி ராசன் தலையை அறுத்து நிலத்தில் வீழ்த்தினன். இக்கொடியபோர் நிகழ்ந்தகாலம் கி. பி. 1053—1054-ஆம் ஆண்டு.

இதன் பின்னர் ஆகவமல்லன், தனது நாட்டைப் பகையொழித்துச் சமாதானம் நிலவுமாறு ஆட்சிபுரிவதில் கருத்தைச் செலுத்தினன். அங்கல் நாட்டுக் கதம்பர், சவுந்தத்திரத்தர்கள், யாதவர்கள், கங்கபாடி கங்கர்கள், ஓய்சளர்கள், சிலாகாரர்கள், ஆகிய அரசர்கள் ஆகவமல்லனுக்கு அடங்கித் திறைசெலுத்தும் சிற்றரசர்களாக விருந்தார்கள். இம்மண்டலீகர்களில் பெரும்பாலோர், இச்சோமேச்சுரனோடு கலியாண முதலிய சம்பந்தங்களில் உடன்பட்டிருந்தனர். இச்சோமேச்சுரன் தனது அத்தை, "அச்சுததேவி" என்பவளை, கதம்ப அரசனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்திருந்தான். அவன் அகால மரணத்திற்காளானதால், கணவனது அரசுரிமையை அச்சுததேவி யேற்று அரசு செய்தனள். அவள் அரசியலறிவும், நுண்ணுணர்வும், நூற்புலமையும்பெற்று வீரமாதாக விளங்கியதால், சுபமாகத்தானே "சிசுக்காடு" என்ற சிறிய தேர் நாட்டை ஆண்டுவந்தனள். இவள் தனது பேராற்றலால், "வைரி நிருபபைரவி," "குணதபிடங்கி;" "ஏகவாக்கியே" என்ற விருதுப் பெயர் களைப் பெற்றுப் பெரும்புகழ் சிறக்கத் திகழ்ந்தனள். முதலாம் சோமேச்சுரனுக்கு கான்கு மனைவியர்களும், கான்கு ஆண்பிள்ளைகளும் இருந்தனர். பிள்ளைகளது பெயர்கள், "இரண்டாம் சோமேச்சுரன்" விக்கிரமாதித்தன்; சயசிங்கன்; விட்ணுவர்த்தனன்" என்பன. இவர்களுள், சோமேச்சுரன் "பெல்கோலர்" "புலிகரை" ஆகிய நிலப் பரப்புகளுக்கும், விக்கிரமாதித்தன் எல்லைப்புற மாகாணங்களாகிய கங்கைவாடி, வனவாசி நிலப்பரப்புக்களுக்கும் இராசப் பிரதிநிதியாக ஆகவமல்லனால் நியமிக்கப்பட்டனர். விக்கிரமாதித்தன், அரசியலிலும், ஆழ்ந்தஆலோசனைகளிலும், மனத்துணிவிலும், போர்த்திறமையிலும், உடல் வலியிலும், வீரத்திலும், வித்தகத்திலும் தனது தமையன் இரண்டாம் சோமேச்சுரனுக்கு மேலாக விளங்கினன். இவையுணர்ந்த தந்தை ஆகவமல்லன், அவனையே இளவரசாக்க முயன்றான். அதனை அறிந்த விக்கிரமாதித்தன், அறிவு, அனுபவம், ஆற்றல் முதலியவைகளில் மிக்குயர்ந்த மூத்தோனிருக்க, தான் இளவரசு அதிகாரத்தை ஏற்பது தனக்கும், தந்தைக்கும், புகழ்பெருகிய மேலைச் சளுக்கிய குலத்துக்கும் அரசுக்கும் நீங்காத வசையுண்டாம். ஆதலால், அது கூடாதென்றும், இளவரசப்பட்டம் இன்றியே தான் தன்னால் இயன்ற தொண்டனைத்தையும் மனமாரச் செய்வதாகவும் வாக்களித்தான். இளவலது மூதறிவுக்கு மிக்க மகிழ்ந்து ஆகவமல்லன் தனது மூத்தமகன் இரண்டாம் சோமேச்சுரனுக்கே இளவரசுபட்டம் சூட்டினன்.

கலியாணிச் சளுக்கியர்கள்

பகைவர் பயங்கரனும் ஒப்பற்ற தனி வீரனுமாக விளங்கிய விக்கிர மாதித்தன் சோழர் கேரளர் முதலிய தென்னாட்டு அரசர்களுடன் மும்மரமாகப் போர் தொடுக்கத் தொடங்கினன். அப்பொழுது தென் னாட்டில் சோழவரசர்களில் ஆனேறுபோல் ஆண்மையுடன் விளங் கியவன், விசயராசேந்திர சோழனேயாவன். விக்கிரமாதித்தனது தென்னாட்டுப் போரில் வீரவேந்தனாக விளங்கிய மேற் குறித்த சோழன், கடுமையான போரில் போர்முனையில் விக்கிரமாதித்தனால் கொல்லப் பட்டதாக யூகிக்கவேண்டியிருக்கிறது. நமது யூகத்திற்கேற்ப விசய ராசேந்திர சோழனது கல்வெட்டொன்றில், 'கலியாணபுரமும், கொல்லாபுரமும் கொண்டருளி ஆனைமேல் துஞ்சியருளிய பெருமாள் விசயராசேந்திரதேவன்' என்று காணப்படுவது அதனை உறுதிப்படுத்து கின்றது.

இங்ஙிலையில் முதலாம் சோமேச்சுரனாகிய ஆகவமல்லன் விலக்க முடியாத கடுமையான சுரத்தால் பீடிக்கப்பட்டு மிகவும் வருந்தினன். அவன் தனக்குச் சாவு அண்மையில் நெருங்கியிருப்பதைக் கடுமையான நோயினாற் கண்டறிந்து தன்னைத் துங்கபத்திரை யாற்றுக்கரைக்குக் கொண்டுபோகும்படி பணித்து, புண்ணிய நிரம்பிய அக்கரையிலேயே மிகுதியான பொற்காசுகளை எளியவர்கட்குத் தருமம் செய்து மேலோர் வகுத்த விதிமுறைதவறி தானாகவே பெருக்கெடுத்தோடும் துங்க பத்திரை யாற்றின் பெருவெள்ளத்தில் இறங்கி உயிர்நீத்து ஆத்துமத் தணிவு அடைந்தான். இதனுடன் இவனது ஆட்சி முடிவு பெற்றது. இங்ஙனம் இவன் உயிர்நீத்தகாலம் கி. பி. 1068 ஆம் ஆண்டு.

ஆகவமல்லனது இறுதிச் செய்கை, வேறுவிதமாகவும் வழங்கப் படுகிறது; விரிக்கிற் பெருகும்.

இவனுக்குப் பிறகு அரசகுடும்பத்தில் தாயத்தார் பல இன்னல் விளைத்துத் துன்பத்தை அடைந்தனர்.

இரண்டாம் சோமேச்சுரன் முற்கூட்டி ஏற்பாடு செய்திருந்தபடி தனது தந்தையின் அரசுரிமையை ஏற்றான். இவனுக்குப் "புவனே கமல்லன்" என்ற சிறப்புப் பெயரும் வழக்கத்திலிருந்தது. தன்னுடன் பிறந்த தம்பி விக்கிரமாதித்தன் இளவரசனாகத் துணைபுரிந்தான். ஆற்றல் மிக்க வீரனும், அரசியல் வல்லானுமாகிய விக்கிரமாதித்தன், தனது நெடுநாட் பகைவர்களாகிய செம்பியர்களைப் போரிற் புறங்கண்டு காஞ்சிபுரம், கங்கை கொண்ட சோழபுரம் முதலிய பேரூர்களைக் கைப் பற்றி தனது ஆண்மையை விளக்கினன். தம்பியின் வீரச்செயலுக்கு வியந்து மகிழ்ந்து பாராட்டவேண்டிய இரண்டாம் சோமேச்சுரன், அவன்மீது பொறாமை கொண்டான். என்னே! அவன் இழிந்தகுணம்! அரியாசனத்திருந்து ஆணை செலுத்தும் புவனேகமல்லனை அவனது குடிகள்கூட வெறுத்து வந்தனர். காரணம்: அவனது நெறிகோணிய நடத்தையும், மிகுதியான பேராசையும், தனது எண்பேராயத்தினர்

மீது பல குறைகூறி அவர்கள் மனத்தைப் புண்படுத்தலும், அறிஞர் களையும், ஆன்றோர்களையும் மதியாதிருத்தலும், குடிகளுக்கு அளவுக் கதிகமான வரிகளை விதித்து இரக்கமின்றிக் கடுமையாக வசூலிக்கச் செய்த கொடுமையுமேயாம். அழுக்காறும், பேரவாவும் கொண்ட புவனேகமல்லன், தனது தம்பிக்கு மாறுக மறைவில் சூழ்ச்சிசெய்தான். வெங்கிநாட்டு அரசனை இராசிகளோடு சேர்ந்து தனது இன்னுயிர்த் தம்பியர்க்கும், வேறுபலர்க்கும் மாறுகத் தீங்குபல விளைவித்தான். இவற்றை ஒற்றர் மூலமாகவும், தானும் கண்ட விக்கிர மாதித்தன் மூத்தோனின் தீய குணத்திற்குப் பொருது அவ்விருவர் களையும் நேரில் போரில் எதிர்த்துத் தோற்றோடும்படி செய்து வெற்றி மாலை அணிந்தான். பின்னர் விக்கிரமாதித்தன் தனது தமையனது தகுதியற்ற கடைக்கும், குற்றமான செய்கைகளுக்கும் மனம்வெறுத்துத் தக்கார் பலருடன் கூடி ஆலோசித்து அவனை அரியணையினின்றும் நீக்கித் தானே, "ஆறும் விக்கிரமாதித்தன்," "திரிபுவனமல்லன்" என்ற விருதுப் பெயர்களுடன் கி. பி. 1076-ஆம் ஆண்டு கலியாணி சாளுக்கிய அரியணையிலிருந்து திருமுடிபுனைந்து செங்கோலோச்சினன். இச் செயல்களுக்குக் குடிகள் மிகமகிழ்ந்து கொண்டாடினர்.

இவ், ஆறும் விக்கிரமாதித்தன், கலியாணிச் சளுக்கியமரபிலேயே பெரும்புகழ் பெற்றவனென்று உறுதியாகக் கூறலாம். சோழர்கள், கேரளர்கள், கீழைச் சளுக்கியர்கள், பாரமாரர்கள் என்றின்ன அரசர் கள் ஆறும் விக்கிரமாதித்தனுடன் போர் செய்தற்கியலாது தோல்வி யுற்று அவனது ஆணைக்கடங்கித் திறை செலுத்திவந்தனர். பெயர் சிறந்த வேங்கிமண்டலமும்; சக்கரகோட்டமும் விக்கிரமனது ஆட்சியின் கீழ் அடங்கின. அவனது பேரவையில் கீர்த்திவாய்ந்த வித்துவான் களும், கவிகளும், நாவலர்களும் சிறக்க வீற்றிருந்தனர். அரசன் அவர்களை மிகுதியாகப் பாராட்டிப் போற்றிவந்தனன். 'பில்ஹணர்' என்ற வடமொழி மாபெரும்புலவர் விக்கிரமாதித்தனது கல்வியறிவை யும், கற்றோர்களைப் போன்புடன் ஆதரிப்பதையும், பெரும்புகழையும் பல்லோராலும் பலபட வுரைக்கக் கேட்டு, அவனைக் கண்டுமகிழ தெடுந் தூரத்திலுள்ள காச்மீரத்திலிருந்து கலியாணிக்கு வந்தனர். அவர் புதிதாகப் புனைந்து கொணர்ந்த "விக்கிரமாங்க தேவசரித்திரம்" என்ற இனிய நூலில் அவர், அவனது மெய்வைத்த வரலாற்றையும், அரச அவையின் சிறப்பையும், அருங்குண நலத்தையும் பலபடப்பாராட்டி இவை எண்மைச் செய்திகளேயாமென்று கேட்டாரனைவரும் ஒருங்கே கூறுமாறு விவரித்திருந்தனர். மற்றும் "மீதாட்சரம்" என்ற அறநூலை இயற்றியவரும், நீதி சாத்திரப்புலமையும், கீர்த்திமிக்காருமாகிய "விஞ்ஞானேச்சுரர்" (விசேட அறிவினர்) என்ற பெரியாரும் விக்கிர மனது பேரவையை அலங்கரித்திருந்தனர்.

கலியாணிசாம்பிராச்சியம், விக்கிரமனது காலத்தில் மேலான புகழிலும், உயரியகிலையிலும் ஓங்கியிருந்தது. இவ்விராச்சியம் பல

மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் மண்டலீகர் களாலும், குறுநிலமன்னர்களாலும் ஆளப்பட்டு வந்தன. இம்மண்டலங் களில் முதன்மையாக விளங்கியவைகள்—வனவாசி, பலாசிகை, ஐவே, கோங்கணம். காவடிதீப, சாந்தலிகே, கங்கைவாடி, நுளம்பவாடி, பசவு, சீதா பலதி, சவுந்தத்தி, தாடகுண்டி, கம்மரவாடி, சிந்தவாடி, பல்லகுண்டே, வசும்புலிகே என்பனவாம்.

ஆதித்தனது ஆளுகையின்கீழ் அடங்கியிருந்த சிற்றரசர்கள் பலராவர். அவர்கள்—கோவா அங்கல்நாட்டுக் கதம்பர்கள்; கங்கைவாடி ஓய்சளர்கள்; கங்கர்கள்; நுளம்பர்கள்; இரத்தர்கள்; கோங்கணம்—கொல்லா புரங்களின் சிலாகாரர்கள்; எல்பேர்கா சிந்தர்கள்; ஏ அயர்கள் என்பவர் களாம்.

விக்கிரமனது மனைவியர் நால்வராவர்; முறையே அவர்களது பெயர்கள்—தாராதேவி; இலட்சுமிதேவி; சண்டலதேவி; மல்லேயமாதேவி யார் என்பன. அவர்களும் விக்கிரமாதித்தனுக்கு உதவியாகச் சில மாகாணங்களை அரசு செய்தனர்.

விக்கிரமாங்கனது மனைவியர் எழுவர் என்றும் அவர்களது பெயர்கள்—மயிலாலதேவி; சவாலதேவி; இலட்சுமிதேவி; சக்கலதேவி; மலடமாதேவி; பிரியகேதளதேவி, சந்திரலேகா, என்பன வென்றும்; இவ் வெழுவருள் அரசனது பேரன்பிற்குவந்தவளும், பட்டத்துப்பேரரசி யாகவும் திகழ்ந்தவள் 'சந்திரலேகா' என்றும் "ஆரும் விக்கிரமாதித்தன் வரலாற்''றில் கூறப்பட்டுள்ளன.

இந்நால்வர், அல்லது எழுவர் மனைவியர்களிடத்து விக்கிரமாங் கனுக்கு இருவர் ஆண்மக்களும், பெண்ணொருத்தியும் பிறந்தனர். ஆண் மக்களில் மூத்தவன் பெயர் 'சயகர்ணன், இளையவன் பெயர் 'சோமேச் சுரன்;' பெண்மகளின் பெயர் 'மயிலாலதேவி;' இவர்கள் வளர்ந்து பெருகி வாலிபம் பெற்றது சயகர்ணன் கி. பி. 1102-ஆம் ஆண்டில் பிசபூர் மண்டலத்துக்குத் தலைவனாகவிருந்து தந்தை உயிருடன் இருக்கும் போதே அகால மரணத்தினால் அந்தகன் உலகடைந்தான். இளவல் சோமேச்சுரன்-III 'பூலோகமல்லன்' என்ற விருதுப்பெயரேற்றுத்தந்தை வானுலகடைந்த பின் கி. பி. 1127-ஆம் ஆண்டில் அரியாசனத்தமர்ந்து அரசு கைக்கொண்டான். இவன் தன் பெயருக்கேற்ப பெருவீரன் அல்லனெனினும், தனது தாய்மொழியில் மிகவும் பயிற்சியடைந்து ஒப்புவமையற்ற புலமை பெற்று பேரறிஞனாகப் பிறங்கி "அபிலசீதார்த்த சிந்தாமணி'' என்னும் பெயரிய அரியநூலை இயற்றிப் புகழ்சிறந்தான். பெண்மகள், கதம்பகுலத்து முதலாம் சயகேசியின் பேரனை 2-ஆம் சயகேசிக்கு வாழ்க்கைப்பட்டாள்.

விக்கிரமாங்கனது கல்வெட்டுகளில் அவனுடைய பரிவாரங்களின் பெயர்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. மற்றும், அவனதுபெருமை, உயர்வு, பேரரசு, அறிவு, ஆண்மை, செல்வம், படைப்பெருக்கு முதலிய

வற்றால், அவனது பேராட்சியில் கலியாணிநாடு மிகவும் சீரும், சிறப்பும் பெற்றிருந்தனவென்றும் கூறப்பட்டுள்ளன. விக்கிரமாதித்தன் தான் அரியாசனத்தமர்ந்து திருமுடி புனைந்து கொண்டதும், தன் பெயரால் "சளுக்கிய விக்கிரமாதித்த சகம்" (ஆண்டு) என்ற புதியதோர் ஆண்டை, கற்பித்தான். இப்புத்தாண்டை 'டாக்டர் வெங்கடசுப்பையர்' என்பவர் நன்றாக ஆராய்ந்து அது கி. பி. 1076-ஆம் ஆண்டு தொடக்கத்ததென்றும், 'வடகரை சாசனத்தில்' குறிப்பிட்டநாள் அவ் ஆங்கில ஆண்டு பிப்ரவரி மாதம் பதினோராந் தேதி வியாழக்கிழமை என்றும் முடிவுகட்டி யிருக்கின்றனர்.

மூன்றாம் சோமேச்சுரன் அரசுகாலத்தில் "விட்டுணு வர்த்தனன்" என்னும் பெயரிய அரசனின் தலைமையில் புதிதாகத்தோன்றிய ஒய்சளர்கள், உரிமை பெறமுயன்று "கன்னேகல" என்ற இடத்தில் போர் தொடங்கினர். அவ்வற்றம் நோக்கி கோவா நாட்டுக் கதம்பர்களும் நுளம்பவாடி கங்கர்களும், காராடு (கொங்கணம்) சிலகாரர்களும் குளப்பம் செய்தனர். அவைகளை அடக்கி அரசை நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பு, சோமேச்சுரனுக்கு இன்றியமையாததா யிருந்ததால், அவன் தன் திறமைக்கேற்ப அக்கலகங்கள் மேலோங்காத வாறு அடக்கித் தனது ஆண்மையை வீறுபெறச் செய்தான். இவன் பல துறையான கல்வியில் தேர்ந்து கூரிய அறிவு பெற்றிருந்ததனால், "சர்வக்ஞசக்கரவர்த்தி" என்ற விருதுப் பெயரையும் புனைந்து கொண்டிருந்தான்.

மூன்றாஞ் சோமேச்சுரனும் தனது முன்னோர்கள் கொண்டிருந்த அறிவு, ஆற்றல், சீர், சிறப்பு, புகழ் முதலியவற்றைத் தானும் ஒருவாறு கொண்டிருந்தான். இவன் தந்தை கி. பி. 1076-ஆம் ஆண்டு முதல் 1127-ஆம் ஆண்டுவரையும் அதாவது ஐம்பத்தோராண்டுகள் அரசு செய்திருந்தனன். இவனோ, கி.பி.1127-ஆம்ஆண்டுதொடங்கி1138-ஆம் ஆண்டுவரை பதினொரு ஆண்டுகள் அரசு செய்தான். இவனுக்குப் பின்னர் இவனது மகன் "பேர்மசகதேகமல்லன்" கி. பி. 1138-ஆம் ஆண்டு அரியாசனத்திருந்தான். இவனுடைய ஆட்சியில் ஒய்சளர்கள் மீண்டும் உரிமையை அடையப் பெரிதும் முயன்றனர். இதற்குமேல் இவனைப்பற்றிய செய்தி யாதும் அறியுமாறில்லை. சகதேகமல்லனுக்குப் பிறகு "மூன்றாம் தைலபன்" அரசுரிமை கைக்கொண்டான். இவன் ஆளுகையில் கலியாணிச் சளுக்கிய இராச்சிய லட்சுமி பிறர் அறியாத வாறு அந்நாட்டை விட்டகன்றாள். நுளம்பவாடியில் மண்டலாதி பதியான "கலசூரிய பிச்சளன்" என்பவன் வளர்பிறைபோல் நாளுக்கு நாள் தனது அரசின் கொற்றத்தை அதிகரிக்கச் செய்து வந்தான். அது கொண்டுதான் வனவாசி அவர்களுக்குத் தலைநகராயிற்றுப் போலும். இந்நிலையில் சளுக்கிய மூன்றாந் தைலபன் ஓரங்கல் நாட்டு அரசனான "காகதீயபுரோலனோடு" செய்தபோரில் அவனால் கொல்லப் பட்டான். அதன் பின்னர் மூன்றாம் தைலபன் புதல்வன், "நான்காம்

சோமேச்சுரன்'' அரசுக்கு வந்தான். அது சமயம் அவனது தாணைத் தலைவனுக விருந்த 'பிச்சளன்' என்னும் பெயரினன், தனது கலத்தின் பொருட்டு அரசனை வஞ்சித்து நாட்டைத் தனதாக்கிக்கொண்டு நான் காம் சோமேச்சுரனை அவன் நாட்டை விட்டுத் துரத்தித் தானே அரசுரிமையைக் கைக்கொண்டான். இவ்வளவே, கலியாணிச் சாளுக் கியர்களைப்பற்றி நமது ஆராய்ச்சிக்கு அகப்பட்டவை.

பொதுக் குறிப்புகள்

மிகுதியான சான்றுகளைக் கொண்டு, கலியாணிச் சளுக்கியர் ஆட்சிக் காலத்தில் அரசாங்கம் எவ்வாறு நிகழ்ந்த தென்பதை நாம் தெளிவாக அறியலாம். அவர்களது ஆளுகையில் அரசன் முதன்மை யான அதிகாரியாகவும், அரசனுக்குக் கீழ் சிற்றரசர்களும், மாகாணத் தலைவர்களும் 'கவர்னர்களாகவும், கவர்னர்ஜனரல்களாகவும்', அமர்ந்து அரசு செய்து வந்தனர். அவர்களது தாணைத் தலைவனுக்குத் '' தண்ட நாயகன் '' என்றும், மாகாணத்தலைவருக்கு '' மகாமண்டலேச்சுரன் '' என்றும், மண்டலாதிபதிக்கு '' மன்னேயன் '', '' நாலகவுண்டன், நூருகவுண்டன் '' எனவும், தலைமை அமைச்சருக்கு '' ரூபபட்டையர்'' என்றும், அரசதூதுவனுக்குச் '' சந்திவிக்கிரகி '' என்றும், மந்திர லோசனை அவைக்குத் தலைமை வகிப்பவருக்குச் '' சர்வாதிகாரி '' என்றும்; இராணுவ இஞ்சினீருக்கு '' யந்திரவாகதன் '' என்றும்; இராச அரண்மனைகளையும் அவற்றைச் சார்ந்த மாளிகைகளையும் கண்காணித்து வரும் எசமானனுக்குச் '' சூத்திரதாரிதணிக்கி '' என்றும், தலைமைப் பொக்கசாதிபதிக்கு '' இரியபண்டாரி'' என்றும் தங்கசாலை அதிபனுக்கு '' அச்சுபன்னயாத அதிர்ஷ்டாயகன் '' என்றும், பத்திரப்பதிவு செய்ப வருக்கு '' முத்திராதிகாரி '' என்றும்; கல்விமந்திரிக்குக் '' கடகோமாத் யாயன்'' என்றும், பிறநாட்டு அமைச்சருக்குத் '' தந்திரபாலன்'' என்றும் பண்டகசாலைத் தலைவனுக்கு '' ஆஸ்தானவத்துநாயகன் '' என்றும், அரசாங்கக் கணக்கனுக்கு '' ஸ்ரீ கர்ணன்'' என்றும், சுங்காதிகாரிக்குச் '' சுங்கமங்கைக்கொண்ட நிதேவர்'' என்றும், பிறவருமானங்களை வசூலிக்க மற்றும் பல அதிகாரிகளும் இருந்தனர். அவர்களுக்குக் 'கரணர்' என்றும், 'பிரமுக கரணர்' என்றும், 'வட்டவியவகாரிகள்' என்றும் பெயர்களிருந்தன. இத்தலைவர்களால் மத்திய (நடு) அரசாங்கம் எவ்வாறு முறையாகத் தாங்கப்பட்டுவந்ததென்பதை நமக்குத் தெளிவாக விளக்குகின்றது. இதே முறையில் மண்டலீகர்களும், தங்கள் ஆட்சி யைத் திறமையாக நடாத்திவந்தனர். அரசர்களும் பழைமையான நீதி முறைகளைக் கைக்கொண்டிருந்ததோடு, மக்களும் சமூகமத விடயங் களில் உரிமையுடையவர்களாயிருந்தனர். சாசனங்களிலிருந்து கிராமங் களிலும் கூடத் '' தலசுயாட்சி முறை'' மிகவும் உயர்ந்த நிலையில் இருந்து வந்ததாகத் தெரிகிறது.

சைனமதம் முக்கியத்தை இழந்து, வைணவமதமும், வீரசைவ மதமும் மக்களுள் மிகவும் பரவியிருந்தன. இந்தப்புதிய மதங்களால் ஏற்பட்ட மறுமலர்ச்சியை அவர்களுடைய இலக்கியங்களிலும், சிற்பம், சித்திரம் ஆகிய கலைகளிலும் காணலாம்.

சளுக்கிய மன்னர்கள் அக்காலத்தில் வழங்கிவந்த இலக்கியத்தை நன்முகப் போற்றி ஆதரித்து வந்தனர். "விட்டுணுவர்த்தனன்" "ஆறும் விக்கிரமாதித்தன்" ஆகிய இவர்களது பட்டி மண்டபத்தில் மிகுதியான புலவர் பெருமக்கள் வீற்றிருந்தனர். வடமொழி, கன்னடம் என்னும் இருமொழிகளிலும் பல்வேறு புலவர்களால் அரியதும் இனியதுமான நூல்கள் பல இயற்றப்பட்டுவந்தன. வடமொழியில் மாபெரும் வாணராகிய 'பில்கண' கவியும், "இரன்னன்", "சன்னன்" என்ற கன்னடப் புலவர் பெருமக்களும் தருமசாத்திரம் இயற்றிய புலவர் பெருமான் விஞ்ஞானேச்சுவரரும் தலைமைப்புலவர்களாக இடம் பெற்றிருந்தனர். வீரசைவமதம், கன்னட மொழியில் வசனநூல் எழுதுதற்குக் காரணமாயிருந்தது. கவிதையிலும், சாதுரியமான வகைகள் நிரம்பிய உரைநடையிலும், அரும்பெருநூல்கள் வெளியிடப் பெற்றன. கன்னட இலக்கியத்தில் இவைகள் மதிக்கத்தக்க தகுதி வாய்ந்திருந்தன.

இதே முறையில் சிற்பங்களும், சிற்பக்கலைகளும் அளவிலதிகம் மேம்பட்டிருந்தன. சளுக்கிய—ஓய்சள சிற்பங்களின் சாயல்களில் உயர்வான பல கோயில்களும், அரசமனைகளும் எழுப்பப்பட்டன. சிற்ப—சித்திரநூல் வல்லார்களும், சிற்றுளி செதுக்குவேலைக்காரர் களும், இக்காலத்தில் மதிக்க மாண்புடையவர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்களால் அழியாத அழகுடன் விளங்கும் ஆலயங்கள் பல இன்றும் கருநாடகநாட்டில் காட்சியின் அளவாகக் கண்கவர் வனப்பில் மின்னிக் கொண்டிருக்கின்றன. மிகுதியான சாசனங்களில் அவர்கள் சிற்ப சித்திர நுட்பங்களின், வல்லமை அழகு உணர்ந்து கொள்ளக்கூடிய வாறு பொறிக்கப்பட்டிருக்கின்றன. பனை ஓலைகளில் கூரிய எழுத்தாணி கொண்டு எழுதுவதுங்கூட மிகத்திறமையுடையதாக விளங்கியிருந்தது. சான்றுக்கு இதன் கீழ் ஒன்று குறிக்கின்றோம். அது—'சிற்பியொருவ னல், பனையோலை ஒன்றில் ஒருகாவியம் முழுதும் எழுதிமுடிக்கப்பட்ட தென்பது', வேறு பல்கலைகளையும் சளுக்கிய அரசர்கள் நன்முகவும், மிகுதியாகவும் போற்றிப் பாதுகாத்து வந்தார்கள். சுருங்கக்கூறின், சங்கீதம், கணிதம், வானநூல், முதலிய கலைகளும் அக்காலத்தில் அவர் களது ஆட்சியில் வளர்ச்சி அடைந்திருந்ததென்றே சொல்லவேண்டும்

தேவார ஆசிரியர்கள் மேற்கொண்டொழுகிய

சமயக்கொள்கை

திரு. வித்வான் வெள்ளைவாரண முதலியார் அவர்கள்,
அண்ணாமலைநகர்

உலகத்து அறிவுடைப் பெரியோர்கள் 'தம்பயிற்சி யுணர்ச்சியால் மக்களுக்கு நன்மை தரும் வழியாகக் கண்டமைத்த ஒழுக்கவழியே சமயமெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவதாம். இதனை ஒழுக்க நெறி, நன்னெறி, திருநெறி எனத்தமிழரும் சன்மார்க்கமென வடவரும் புகன்று புகழ்வர். ஒழுக்கமென்பது இன்பத்தை விழையுமுயிர்கள் அதனைப் பெறமுயன்று பல துறைகளிலும் முன்னேறிச் செல்லும் பொழுது ஒருவர் வாழ்க்கையில் வேறொருவர் சென்று விலங்குறுதபடி தாம் விழையும் நீண்ட பேரின்பத்தினை யடைவதற்கு நேரே செல்லும் தகைமைபெற்றதாகிய வாழ்க்கை வரையறையாம். அவையாவன: உண்மை, அன்பு, அருள், அறிவு, நடுவுநிலை என்பவைகளையும், பொய்யாமை, புறங்கூறுமை, கொல்லாமை, தீங்கியற்றுமை முதலியனவற்றையும் மேற்கொண்டு நடத்தல்.

இத்தகைய ஒழுக்கமே சிறந்த பேரின்பத்தினைத் தருமாதலால் அதனை மக்கள் தம்முயிரினுமுயர்வாகப் போற்றுதல் வேண்டுமென்பது "ஒழுக்க முயிரினு மோம்பப்படும்" என்னும் பொய்யாமொழியாற் புலனும். இவ்வொழுக்க நெறியினின்றும் வழுவாது மக்கள் தம் வாழ்க்கையை நடத்துதலே சமயவாழ்க்கையாகும். வள்ளுவனாரும் கடவுள் வழிபாட்டைப் 'பொய்தீரொழுக்கநெறி' எனப்போற்றிப் புகழ்ந்தார். எல்லாக் குற்றமும் அற்று ஒழுக்கநெறியில் நடத்தலே மிகச் சிறந்த கடவுள் வழிபாடாகுமென்பது,

"வசையறும் அதுவழிபாடே"

என்ற ஆனுடைய பிள்ளையார் வாய்மொழி யானும் வலியுறும்.

தேவார ஆசிரியர்கள் மூவரும் சிவனை வழிபடும் சைவசமயத்தினரென்பது உலகறிந்த செய்தி. இவர்கள் கொண்டொழுகிய சைவசமயம் அக்காலத்து வழங்கிய பிறசமயங்களுக்கு முற்றுமுன்றித் தொல்லைகாள் தொட்டுத் தமிழ் மக்கள் கொண்டொழுகிய சமயமென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. இதனை மேற்கொண்ட பிற்காலத்தவருள் பெரும் பாலோர் தாம் கடவுட்குக் கற்பித்துக்கொண்ட பண்புகாரணமாகவும்

கொள்கை காரணமாகவும் உறழ்வாராயினர். அவர்கள் எல்லாரும் தாம் புதிதாகக் கொண்ட கொள்கை காரணமாகச் சிவாத்துவிதசைவர், சிவசமவாதசைவர், காபாலிகர், பாசுபதர் என்றுங்குப் பல அடை மொழிகளால் அழைக்கப்பட்டனர். பண்டைய நிலையில் மாறுபடா திருந்த நாட்டவரிற் பலர் கொண்டொழுகிய சமயம், அதனின்றும் பிரிந்தவர்தம் மாறுபாட்டிற் படாமையால் சுத்த சைவம் என்றே வழங் கப்பட்டது.

சிவனை வழிபடும் கூட்டத்தார் யாவரும் சைவர் என அழைக்கப் பட்ட காலம் தேவார காலத்திற்குச் சிறிது முற்பட்டதாயிருக்கலாம். ஆயின் பண்டைத்தமிழர் வழிபட்ட செம்பொருளாஞ்சிவத்திற்குச் சங்க காலத்தும் அதற்கு முன்னரும் இறையோன், கடவுள், பெரியோன் என்ற பெயர்களே பல்கிவழங்கினவெனத் தெரிகிறது. 'நுதல்விழி நாட்டத்திறையோன்' என மணிமேகலையிலும், 'கடவுள்' எனப் புறத் திலும், 'பிறவாயாக்கைப் பெரியோன்' எனச் சிலப்பதிகாரத்தும் பயின்றுவருதல் நோக்கத்தக்கது. செம்மை—நடுவுநிலைமை, நேர்மை எனும் பொருள்தரும் செந்தமிழ்ச்சொல். இதனடியாகப் பிறந்த 'செம் பொருள்' என்னுஞ் சொல்லால் வள்ளுவனார் மெய்ப்பொருளாகிய இறை வனைக் குறித்தமையும் சிந்திக்கற்பாற்று.

"கரைந்து கைதொழுவாரையுங் காதலன்
வரைந்து வைதெழுவாரையும் வாடலன்"

எனத் தேவாரம் நுதலியாங்கு, தன்னைவழிபட்டோரையும் வைதெழு வோரையும் ஒப்பமதித் தின்னருள் புரியும் இறைவனை, அவரே 'வேண்டுதல் வேண்டாமையிலான்' எனப் போற்றினாதலின் விருப்பு வெறுப்பில்லா நிலைமைக்கேற்ப இறைவனைச் செம்பொருள் (நடுவுநிலை யுள்ளபொருள்) எனச் சிறப்பித்தமை பொருந்துவதேயாம். தமிழர்கள் இறைவனை ஒளியுருவினனாகப் போற்றினமை, காலையில் பொன்னை உருக்கி வார்த்தாலென வேலைமீதெழும் செஞ்ஞாயிற்றினை முருகன் சேயொளிக்கொப்பாக முருகாற்றுப்படை கூறுதலும், கதிரவன் தன் உருமவேளையின் வெய்ய ஒளியைவிட்டு உயிர்களின் உடலுக்கெல்லாம் நல்லொளி பரப்புங்காலமாகிய மாலைக்காலத்து வானமுழுவதும் பரவி மீதெழுந்த செக்கரொளியினைப் பண்டைத் தமிழ்க் கடவுளாகிய சிவ பிரானின் திருமேனியொளியோடு ஒப்பவைத்துரைக்கப் போந்த புலவ ரொருவர்,

"செவ்வானன்னமேனி..... அந்தணன்"

என உவமித்துப் போற்றுதலும் சிவந்த ஒளியில் இறைவன் திருமேனியொளியினை யெண்ணிப் போற்றும் அக்காலத் தார் தம் இயல்பினை நன்கு தெரிக்கும். தம்மால் வணங்கப்படுந் தலைவன் சிவந்த ஒளியினன் எனும் தம் கருத்திற்கேற்பத் தம் கடவுளை யும் செம்மேனியான் என்னும் பொருள்படச் 'சிவன்' எனும் பேரால்

அழைப்பாராயினர். இவ்வுண்மையினைச் 'சிவனெனு நாமந் தனக்கே யுடைய செம்மேனியம்மான்' என்ற அடியில் திருநாவுக்கரசடிகள் விளக்கிப்போந்தார். இதன் பொருள் செம்மேனியுடைமை காரண மாகச் சிவன் எனும் திருப்பெயரினைத் தனக்கே யுரித்தாகப் பெற்றவன் என்பதேயாம். எனவே இறைவனுக்கு வழங்குஞ் செம்பெயராஞ் சிவன் என்பது சிவப்பு என்பதன் அடியாகப் பிறந்த செந்தமிழ்ப் பெயரென்பது ஒப்பிலக்கண நூலாசிரியர்கள் கருத்து. இறைவனைச் 'சிவன்' என்ற பெயராற் போற்ற விரும்பிய காரைக்காலம்மையார் அதனை அவ்வாறே யுரையாது 'செம்மேனிப்பேராளன் வானோர் பிரான்' எனத்தெளியக் கூறினமை சிந்தித்தறியத் தக்கது. சிவப்பு என்னுஞ் சொல்லுக்கு வெகுளி, செம்மை நிறம் என இருவேறு பொருளுள வென்பது,

"சுறப்புஞ் சிவப்பும் வெகுளிப்பொருள"

"நிறத்துருவுணர்த்தற் குரியவுமாகும்"

என்ற தொல்காப்பியச் சூத்திரங்களால் நன்கு பெறப்படும். இவ்விரு பொருளில் செம்மேனியான் என்னும் நிறப்பொருளிலேயே தமிழர் தாம் போற்றும் இறைவனைச் சிவன் எனும் பேராற் சிறப்பித்துப் போற்றிவந்தார்கள். பிற்காலத்து இந்நாட்டில் வந்த ஆரியர்களிற் சிலர் தமிழர் வணங்கும் கடவுளின் பெயராகிய சிவன் என்பதன் முத னிலை யாகிய சிவப்பு என்னுஞ் சொல்லிற்குள்ள நிறப்பொருளை யொழித்து வெகுளிப் பொருளை மேற்கொண்டவராகி அதன் காரணத் தால் தமிழர் தம் கடவுளாகிய சிவபெருமானை 'வெகுளியான்' என்னும் பொருள்பட 'உருத்திரன்' எனத் தம்மொழியிலழைத்தார் கள். உலகில் தீமையெல்லாவறையுஞ் சினக்குந் தீவண்ணனை உருத் திரன் என அவர்கள் அழைத்தது மிகப் பொருத்தமுடையதே. என்றாலும் முதன்முதல் சிவ வழிபாட்டை மேற்கொண்ட தமிழர்கள் தம்மொழியால் தம்தலைவனைச் சிவன் எனப் போற்றியதன் உண்மைக் காரணம் செவ்வொளிவாய்ந்த திருமேனியுடைமைபற்றியும் செம்மை பற்றியுமே என்பது மேற்குறித்த காவரசர் தேவாரத்தானும் அற்புதத் திருவந்தாதியானும் நன்கு விளங்கும். மேற்காட்டிய சிவன் எனும் பெயர் ஆரியவேதத்துக் காணப்படாது; அதற்குப்பின்னர் அதைச் சார்ந்தெழுந்த உபநிடதங்களாய ஆரியநூல்களில் சிவம் என ஒரு சில இடங்களிற் கூறப்படுதலும் சிவம் என்ற அச்சொல்லுக்கு வடமொழி யில் நேரியமுறையில் முதனிலை (தாது) இல்லாமையும் கொண்டே அச்சொல் வடசொல்லன்றென்பதனை மொழிநூலாராய்ச்சியாளர் திட்ப முறக் கூறிப்போயினர். அன்றியும் சிவன் என்ற பெயர் குறிக்கப்பட வேண்டிய இடங்களெங்கும் ஆரிய நூல்களில் உருத்திரன் எனும் பெயரே பல்கிவழங்குகின்றமையும் இதனைவலியுறுத்தும். இதுகாறுங் கூறியவாற்றால் ஒருநாமம் ஒருருவமில்லானைய இறைவனைத் தமிழர்கள்

ஒளியுருவில் வைத்துச் சிவன் எனப் போற்றிவந்த வுண்மை தெளிவுறத் திகழ்தல் காணலாம். முருகனைச் சேயோன் எனப் போற்றுவதும் இது கருதியே.

மேற்காட்டிய சிவன் என்ற செந்தமிழ்ப் பெயரை அடிப்படையாகக் கொண்டே அதனோடு வணக்கச் சொல்லையுஞ் சேர்த்து ஐந்தெழுத்துச் சொல்லாகக் கொண்ட பெரியோர்கள் அதனை மந்திரமாகப் போற்றினர்கள். நிறைமொழிமாந்தர் மறைமொழியாகிய இம்மந்திரத்தினைத் தேவார ஆசிரியர் மூவரும் நமச்சிவாயத் திருப்பதிகம், பஞ்சாக்கரத் திருப்பதிகம் முதலிய பதிகங்களினும் தொடர்ந்து போற்றிப் புகழ்வர். இவ்வாறு சிவன் திருப்பெயரையே பல்காலும் எடுத்துக் கூறிப் போற்றும் இயல்பினர் தேவார ஆசிரியர்களாதலால் அவர்கள் தெளிந்த சிவ வழிபாட்டினர் என்பது புலனும்.

இனி இவர்களால் வழிபடப்பெறும் இறையியல்பினைத் தேவாரப் பாடல்கள் கொண்டே நோக்குதல் சிறந்ததாம். இறைவன், உருவுடையன் அல்லது உருவமற்றவன் அன்றி இருநிலையுமுடையோன் என்றுங்கு தம்முள் முரணி அவன்றன் இயல்புரைப்பதை விட்டு அவன் எல்லாமாய் அல்லதுமாய் நிற்கு மியல்புடையன் எனவும், அவன் நம்மனோர்க்கருள் செய்யும் பொருட்டு "மலைமகள்பாகமாக அருள் காரணத்தின் வருவார்" என்றபடி அருளே திருமேனியாகவுடையன் எனவும் தேவாரம் கூறும். நின்ற திருத்தாண்டக முதலிய பாடல்கள் இறைவனது எல்லாமாகிய நிலைமையையும், 'மண்ணல்லை' என்பது முதலிய பாடல்கள் அவன் அல்லனுய் நிற்குநிலையையும் உணர்த்துதல் நோக்கத்தக்கது. இறைவன் உருவம், அருவம், அருவுருவம் என்று சொல்லப்படும் முக்கூற்றுள் ஒரு கூற்றினும் படாதவனுய் வேறுபட்டு நிற்கும் இயல்பினனுதலின் அவனை அம்மூன்றனுள் அடக்கியுரைத்தல் முடியாதென்பர். ஞானசம்பந்தப் பிள்ளையாரும்,

"எந்தையாரவர் எவ்வகையார்கொலோ"

என்பதனுல் இறைவனியல் யாவர்க்கும் புலப்பட முறையினை வியந்துரைத்தார்.

மேற்கூறியவாறு தன்மைபிறரானறியாத தலைவனை நாம் எவ்வுருவால் வணங்குதல் கூடும் என்பார்க்கு அவன் நீதியுருவாக உலகில் நிலவுகின்றனன் என்பதுணர்த்துவார்.

"இன்னவுரு இன்னநிறம் என்றறிவுதேறரிது நீதிபலவும்
தன்னவுருவாமெனமிருத்தவன்"

என்பதனுல் பிள்ளையாரும் அவனியல்பினை விளக்கிப் போந்தார். இவ்வுண்மை,

"பங்கயத்தயனு மாலறியா நீதியே"

எனத் திருவாசகத்தும் விளக்கப் பெற்றுள்ளது. இறைவன் உருவு

நீதியாமெனினும் அவன் தன்னியல்பு தூயபேரறிவே யென்பது 'வாலறிவன்' எனும் வள்ளுவர் மொழியானும் "ஞானத்திரளாய் நின்ற பெருமான்" என்ற பிள்ளையார் திருவாக்கானும் "ஞானத்தாய்" என நாவுக்கரசர் விளித்தலானும் பெறப்படும். இறைவன் பேரறிவில் நிலைத்துள்ளவன் என்பதற்கறி குறியாகவே சைவர்கள், கல்லுணர்வினை ஆனேறாக வுருவகித்துத் தம் கடவுளாகிய சிவபெருமான் ஊர்தியாகக் கற்பித்துக்கொண்டார்கள்.

"உணர்வெனும் ஊர்வதுடையாய் போற்றி"

என்பது திருக்கயிலாயத் திருத்தாண்டகம்.

இங்ஙனம் அறிவியல்பினனாகிய இறைவன், உயிர்கட்கருள் செய வேண்டி அன்புருவினனாய் அம்மையப்பராகிய திருமேனிகொண்டு ஆட்கொள்வன் என்பது,

"தாயுந்தந்தை பல்லுயிர்க்குந் தாமேயாய தலைவனார்"

"ஆணும் பெண்ணுமாயடியார்க் கருள் நல்கி"

"மலைமகள் பாகமாக அருள்காரணத்தின் வருவார்"

எனவரும் திருஞானசம்பந்தர் பாடற்றொடர்களால் நன்கு புலனும்.

அன்புருவினனும் இறைவன் எவ்வுயிரினுள்ளும் நின்று அவ்வுயிர் கட்கு உடல் உலக முதலியவற்றைப் படைத்துக் கொடுத்துக்காத்து அழித்தருளு மியல்பினன் எனச் சைவநூல்கள் நுவலும். உலகமாவது கடவுளால் மாயையினின்றும் தோற்றுவிக்கப் பட்டு அவராருளின் துணையை ஆதாரமாகக்கொண்டு நிலைத்த பொருளென்பர் சைவ சித்தாந்திகள். சேற்றிலுள்ள கிழங்கினின்றும் முளைத்த தாமரையைக் கிழங்கினின்றுந் தோன்றியதெனக் கூறாமல், அக்கிழங்கிற் காதாரமான சேற்றினின்றும் தோன்றியதெனும் பொருள்படப் 'பங்கயம்' என்றாற் போல இறைவன் திருவருளாகிய திருவடியை ஆதாரமாகக் கொண்டுள்ள மாயையினின்றுந் தோற்றுவிக்கப்பட்ட உலகத்தை இறைவனிடத்துத் தோன்றியதெனக் கூறுதல் முறையென்பர். இவ்வாறு உலகு அவனுருவிற் றோன்றி யொடுங்கிடு முண்மையை,

"யாழ்கெழுமணிமிடற் றந்தணன்
காலில் தாணிழல் தலைந்தன்று லகே"

என வரும் நெடுந்தொகைக் கடவுள் வாழ்த்தா னறியலாம். இதனையே நாவுக்கரசர், 'அடி நீழலாணை கடவாதமாருலகே' என்பதில் விரித்துரைத்தார். உலகமுதலிய எல்லாப் பொருள்களும் தோன்றி நிலைத்தற்கு ஏதுவாகிய திருவடிகளை 'எல்லாமாம் எம்பெருமான்கழல்' எனவும் 'படிக்கொள்சேவடி' எனவும் தேவாரத் திருமுறை கூறிப் பாராட்டுகிறது. படிக்கொள்சேவடி=உலகத்தினைத் தன்னகத்தே கொண்ட செம்மை பொருந்திய திருவடி என்பதன்பொருள்.

இறைவன் உயிர்களைத் தோற்றிக் காத்து மறைத்து அருளுதல் 'காத்தும் படைத்துங் காந்தும் விளையாடி' என்பதனால் அவனது திருவிளையாடல் என ஒருசாரார் புகல்வர்.

"ஐயா நீ யாட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்களுய்யும் வகையெல்லாம் கேட்டொழிந்தோம்'

என்பதனால் ஒருசாரார் விளையாட்டென்றதும் ஐங்கலப் பாரஞ் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்றது போல அத்துணை யெளிதிற் செய்யப் படுதலை நோக்கியாகலின் அதுவும் பெத்தகாலத்து உயிர்கட்கு இன்ப மும் முத்திக்காலத்து வீடு பேறுங் கொடுத்தற் பயத்தாகலான் உயிர் களின் மேற்சென்ற கருணையே ஆண்டைக்குக் காரணமா மென்பர். இறைவன் அருட் பெருக்காலியற்றும் இத்தொழில்களினுட்பம் யாவரா னும் அறியப்படாத அருமைத்தென்பதனை,

'அடிகள் செய்வன ஆர்க்கறிவொண்ணுமே'

என்பதனால் பிள்ளையார் தெளிவித்துரைத்தார்.

எல்லாவுலகத்தும் தலைமையாய் எப்பொருளையும் அமைத்தியக்கும் ஆற்றல் ஒன்றுதானிருக்கமுடியு மென்றுணர்ந்து சிவனொருவனையே வழிபட்ட தனிப்பெருஞ் செல்வர்கள் தேவார ஆசிரியர்கள். ஒரு தெய்வவழிபாட்டை வலியுறுத்துஞ் சமயமே சிறந்ததென்பர் அறிவர். திருமூலரும் 'ஒன்றேகுலனும் ஒருவனேதேவனும்' எனச் சாதி வேறு பாடற்ற தனிப்பெருஞ் சிவவழிபாட்டையே பாராட்டினர். இவ் வுண்மைகொண்டே,

'ஒருவன் கழலல்லா தெனதுள்ளம் உணராதே'

'கூத்தா நின் குரையார் கழலேயலா
தேத்தா நாவெனக் கெந்தை பிரானிரே'

'அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே'

எனத் தேவார ஆசிரியர் மூவரும் போற்றியதோடு தம்பாடல்களில் முருகன், பிள்ளையார் முதலிய கடவுளர்களைக் குறிக்க நேர்ந்தவழி தம் கடவுளாகிய சிவபெருமானால் அவர்கள் தலையளிக்கப் பெற்றவர்கள் என்றவரைப் பாராட்டி, தாம் சிவனைத் தவிர வேறுயாவரையும் நினை யாச்செம்மையாளராகத் திகழ்கின்றனர்.

ஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு நிகழ்ந்த திருமணத்தில் அக்காலத் தார் கொண்டெழுகிய தீவலஞ் செய்தலாகிய சடங்கினைச் செய்யும்படி பிள்ளையாரின் தந்தை முதலானோர் வேண்டவும், இறைவனொருவனையே வணங்கும் உறுதிப்பாடுடைய பிள்ளையார் அதற்குடம்படாது,

'யான்விருப்புறும் அங்கியாவார் விடையுயர்த்தவரே'

என்னும் மெய்மையுரைத்துத் திருநல்லூர்ப் பெருமணக் கோயிலை வலம்வந்து சுற்றத்தாரோடு பற்றறுத்துய்ந்தமை பெரியபுராணத்துக் கூறப்பட்டுள்ளது, இவ்வாறே திருநாவுக்கரசரும் ஞாயிறு, தீமுதலிய

புறப்பொருள் வழிபாட்டையும் இறந்தொழியும் பிறதேவர் வழிபாட்டையும் கடிந்துரைத்ததோடு சாதி வேறுபாட்டையும் இழித்துரைத்தமை அவர் தேவாரப் பாடல்களாற் புலனும்.

தேவார ஆசிரியர்கள் மூவரும் இறைவனியல்புணர்ந்து வழிபட்டமை அவர்கள் வாய்மொழியாற் றெளியலாம். ஆளுடையபிள்ளையார் 'தோடுடையசெவியன்' என்ற பதிகத்துப் "பெம்மானிவனன்றே" எனச் சுட்டிக்காட்டியதோடமையாது,

"அலையாரும் புனல்துறந்த அமணர்குண்டர் சாக்கியர்
தொலையா தங்கலர் தூற்றத் தோற்றங் காட்டியாட் கொண்டூர்"

என்ற அடிகளால் இறைவர்தம் அருளுருவத்தினை அமணரும் குண்டரும் அவர் கூறும்படி தமக்குக் காட்டியருளிய தகைமையினை விளக்கியருளினர். இவ்வாறே மற்றிருவரும் இறைவனைக் கண்டு வழிபட்டமை அவர்கள் வாய்மொழியாற் புலனும். இவர்கள் வாழ்க்கையில் நடந்த சில அருட்செயல்களை ஒரு சிலர் பொய்யென்பர். இக்காலத்தும் பல வியத்தற்குரிய செயல்களைக்கண்டு மருளும் நாம் அவற்றின் காரணமுணராலாகாமையின் இஃதொன்றுடைத்தெனக் கொள்வதல்லது அவற்றைமறுத்துத் தள்ளுதல் தவறாகும். தேவார ஆசிரியர்கள் தம் உணர்ச்சியுருவாய பாடலிற் குறிப்பிட்டனவெல்லாம் உண்மையெனக் கொள்ளுதலே அறிவுடையார் கடன். அவ்வாசிரியர்கள், தாம் காணும் அருட்செயல்கள் உலகில் நிகழா அருமையுடையன வாதலைத் தெளிந்து, அவற்றிணுண்மை யறியாது மருளும் உயிர்களுக்கு அதன் உண்மைக் காரணத்தை உணர்த்திப் போதலொன்றே அவர்தம் உண்மைநிலையைப் புலப்படுத்தும். இறைவன் அருமையுடையனவற்றைக் காட்டியருள் செய்தல் அன்பால் தனக்குரிமையுடைய அடியார்களின் பொருட்டே யென்பதனை,

"உரிமையுடை யடியார்கள் உள்ளுற வுள்கவல்லார்கட்
கருமையுடையன காட்டியருள்செயு மாதிமூதல்வர்',

என ஞானசம்பந்தரும்,

".....அன்பர்க்குக் காணுகாட்டும்
கண்ணுங் கருகாவூரெந்தை தானே"

என நாவுக்கரசரும் அறிவுறுத்தினமை கண்டு தெளியற்பாலது.

இனி, தேவார ஆசிரியர்கள் 'தம்மால் (உயிரால்) ஆவது ஒன்றுமில்லை, எல்லாம் இறைவன்செயல்' என்னும் இவ்வுண்மையைத் தம் வாழ்க்கை முழுவதும் மறவாது நினைத்துக் குற்றமுடையனவற்றைத் தம் அறியாமையின் வினைவெனக் கொண்டும், அருமையுடைய நற்செயல்களையெல்லாம் இறைவர்தம் திருவருட்செயலெனக் கொண்டும் வழுத்தும் உள்ளமுடையாராவர். பாண்டிமாதேவியாரின் மங்கலநாணைப் பாதுகாக்கும் கருத்தோடு, தீப்பிணியைப் 'பையவே சென்று பாண்டியற்காக' எனப்பணித்த ஞானசம்பந்தப் பிள்ளையார், பின்னர்

தாம் பாண்டியனின் வெப்பகற்றி மங்கையர்க் கரசியாரின் மங்கலநாணை நல்கியவராயிருந்தும், உலகம் போற்றும் அச்செயலைத் தமதெனக் கொள்ளாமல் ' எல்லாம் முந்தனுடைச் செயலெனவே நினைத்தொழுக ' என்றபடி அதனை இறைவன்பாற்படுத்தி '' மிக்கதென்னவன் தேவிக் கணியையே மெல்ல நல்கிய தொண்டர்க்கணியையே '' எனப்போற்றியதும், திருநாவுக்கரசர் தம்மைச் சமணத்திற் சேர்த்ததும் மீண்டு சைவத்திற்குத் திருப்பியதும் இறைவனை யெனக் குறிப்பிட்டுத் தன் பணியைக் கடந்தால் அடித்தடக்குபவனும் அவ்விறைவனே யென்பதனை,

'' ஓதுவித்தாய்முன் அறவுரைகாட்டி யமணரொடே
காதுவித்தாய் கட்டகோய் பிணிதீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித்தாய் நின்பணி பிழைக்கிற் புளியம் வளரால்
மோதுவிப்பா யுகப்பாய் முனிவாய் கச்சியே கம்பனே ''

என்ற பாடலாற் குறிப்பிட்டு வழுத்துவதும் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

கடவுள், உயிர், உலகம் ஆகிய மூன்றும் என்றுமுள்ள பொருள்களெனவும், அவற்றுள் கடவுள் நிலைமாறு முற்றறிவுடைய பொருளெனவும், உயிர் அறிவிக்க அறியுமியல்பிற்றெனவும், உலகம் நிலைமாறுமியல்புடைய அறிவில் பொருளெனவும் கூறுப. இவற்றினுண்மை,

'' கற்றுக்கொள்வன வாயுளநாவுள
இட்டுக்கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக்கோ நமரென் முனிவுண்பதே ''

என்ற திருக்குறுந் தொகையால் தெளிவுறத் தெரிகின்றது. உயிர்களாகிய நாம் நமனால் முனியப்படும் எளிமையுடையமல்லோ மென்பார் இதன் முதலிரண்டடிகளாலும் உலகினுண்மை கூறி, மூன்றாமடியில் கடவுள் உயிர் இவ்விருபொருளின் உண்மை யுணர்த்திப் போயினார் நாவுக்கரசர். ' கற்றைச் செஞ்சடையானுளன் ' என்பதனையடுத்து உயிர்களைத் தம்மோடுளப்படுத்தி ' நாமுளோம் ' என்று கூறிய தன் கருத்தாவது அவனது ஆதரவால் அவனடிமையாகிய நாமும் என்றும் பொன்றுத நிலையைப்பெற வுரியராயுளோம் என்பதாம்.

உயிரியல் கூறப்போந்த சேரல்வேந்தர், ' இருண்மலம் ' எனப்படும் ஆணவத்தால் மறைப்புண்டு யாதொரு பற்றுக்கோடுமின்றி அறிவு விழிகெட்டு ஒன்றுஞ் செய்ய வியலாது தடுமாறு மியல்பிற்றுயிர் என்பதனை,

' இருளற நோக்கமாட்டாக் கொத்தையேன் செய்வதென்னே ''

எனத் தம்மேல் வைத்துக் கூறுமாற்றால் விளக்கியருளினார். செல்லிற் குமியும் செம்பினிற்களிம்பும் தொன்மையே அப்பொருள்களோடு விரவினமைபோல உயிர்களும் அனாதியே அறியாமையென்னும் இருள் விரவிய இயல்பினவாய் அதுகாரணமாக மெய்யறிவாம் கண்ணிழந்து

புகலிழந்து நிற்கின்றன என்பதனையும், அங்நிலைக்கிரங்கிய இறைவன் ஒன்றுமாற்று உயிர்களின்பொருட்டு எளிவந் தருள்செய்யும் இயல்புடையான் என்பதனையும்,

> " இருள்தரு துன்பப்படல மறைப்ப மெய்ஞ்ஞான மென்னும்
> பொருள்தரு கண்ணிழந் துண்பொருள் நாடிப் புகலிழந்த
> குருடருந் தம்மைப் பரவக் கொடுநரகக் குழிநின்
> றருள்தரு கைகொடுத் தேற்றுமையா றனடித்தலமே "

என இறைவன் திருவடிப் பெருமை நுவலு மிப்பாடலால் அரசர் அறிவுறுத்தினமை நோக்கத்தக்கது.

உயிர் தன் விழைவு, அறிவு, செயல்களின் நிகழ்ச்சி சிறிதுமின்றி, தான்மட்டும் இருண்மலத் (ஆணவத்) தோடுடனுயுளதாம் தனிநிலையும், பின்பு உடல் பொறிகளோடுகூடி அவை ஒருபுடை விளங்குங் கலப்பு நிலையும், பின்பு இருண்மல முதலாங் குற்ற நீங்கி இறைவனைத் தலைப்பட்டு அவ்விழைவு அறிவு செயல்கள் எங்குமாய்ப் பரவி விளங்குந் தூயநிலையும் ஆகிய மூன்று நிலைகளை (அவத்தைகளை) உடையதெனப் புகல்வர். இவற்றுள் முதல் நிலை இருண்மலத்தொடு மட்டும் கூடிய நிலை இரண்டாம் நிலை இறைவனுல் உடல்பொறிகள் கொடுக்கப்பெற்று வாழும் உலகியல் நிலை. இந்நிலை அறிவு வளர்ச்சிக் கெனவே அமைக்கப் பட்ட தென்ப. இந்நிலையில் இறைவன் உயிரிற் கலந்துநின்று அறிவு செயல்களை விளக்கி நன்று தீதென்பனவற்றைக் காட்டும் உதவியையும், உயிரைச் செலுத்திக்கொண்டு சென்று பொருளிற்கலந்துநின்று காணும் உதவியையும் செய்யுமியல்பினனென்பது சைவசமயத்தின் அடிப்படையாய்ச் சிறந்த கொள்கையாம். இதனை,

> " அறிவானுந்தானே அறிவிப்பான்தானே
> அறிவாயறிகின்றுன்தானே "

என்னும் அம்மையார் அந்தாதியால் நன்கறியலாம். நாவரசரும் இறைவன் காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம் போல் உயிர்களோடு கலந்து நின்று காட்டிக் காணுமியல்பினன் என்பதனை,

> " உண்ணிலாப்புகுந்து நின்றங்குணர் வினுக்குணரக்கூறி "
> "உள்ளத்தினுள்ளிருந்தங் குறுதிகாட்டி "
> "நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை "

என்ற அடிகளாலும்,

> "தெள்ளியோனுகி நின்றுதேடினேன் நாடிக்கண்டேன்
> உள்குவாருள்கிற் றெல்லா முடனிருந்தறிதியென்று
> வெள்கினேன் வெள்கினனும் விலாவிறச் சிரித்திட்டேனே "

என்பதனாலும் விளக்கிப்போந்தார். 'உள்குவாருள் கிற்றெல்லா முடனிருந்தறிதி' என்பதனுல் இறைவனது காணுமுபகாரத்தைத் தம் அனுபவவாயிலாகக் கண்டுரைத்தது நினைவிற் பதிக்கற்பாலது.

சமயக்கோள்கை

உயிர்களின் மூன்றும் நிலையாவது மலம் நீங்கப்பெற்று விரிந்திடும் அறிவு விளக்கத்தால் இறைவனே டிரண்டறக் கலக்கும் நிலையாம். இந் நிலையை யடைவதற்கே சமயங்களெல்லாம் படிகால் முறையாக உலகில் இறைவனு லமைக்கப்பட்ட தென்பது,

> ' அறுவகைச் சமயம் வைத்தார் '
> ' முறைமுறை நெறிகள் வைத்தார் '
> " ஏணிப்படிநெறியிட்டுக் கொடுப்பன
> .....ஐபாறனடித்தலமே "

என்ற பாடல்களாற் புலனும்.

பல்வகைச் சமயங்களிலிருந்தும் இறைவனை உண்மையாகப் போற் றும் மெய்யடியார்கள் எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் அவர் தமக்கு அங்கங்கே தோன்றியருள் செய்யுமியல்பினன் சைவசமயக் கடவுளாகிய சிவன் என்பதனை,

> " எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
> கிங்கேயென்றருள் புரியும் எம்பெருமான் "

என்ற பாடலடிகளால் திருஞானசம்பந்தப் பிள்ளையாரும்,

> " அறிவினுன் மிக்க அறுவகைச் சமயம்
> அவ்வவர்க்கங்கே யாரருள் புரிந்து "

என்ற பாடலடியால் நம்பியாரூரரும் கூறுமாற்றால் தெளிய அறியலாம்.

இவ்வாறே திருநாவுக்கரசடிகளும்,

> " யாதோர் தேவரெனப் படுவார்க்கெலாம்
> மாதேவன்னலாற் றேவர்மற் றில்லையே "

எனவும்,

> " விரிவிலா அறிவினர்கள் வேறெறு சமயஞ்செய்து
> எரிவினுற் சொன்னரேனு மெம்பிராற் கேற்றதாகும் "

எனவும் வரும் பாடல்களால் பல சமயங்களாற் போற்றப்படும் தெய்வங் களுக்கெல்லாந் தலைவனும் எல்லாச் சமயத்தாராலும் போற்றப்படும் இறைவனும் மாதேவனுகிய சிவனே யென்பதனை நன்கு விளக்கினமை பாராட்டற்குரியது. மேற்கூறியவாற்றுன் எச்சமயத்தார்க்கும் இறை யருள் கைகூடும் என்னுமுண்மை தேவார ஆசிரியர்கள் கொண் டொழுகிய சைவசமயத்து மிளிர்தல் காணலாம்.

இனி தேவாரத்தில் வந்துள்ள சைவசமயத்தின் சிறப்புக்கொள் கைகளை நோக்குவோம். ஆசிரியர் சேக்கிழார் தம் நூலில்

> " செய்வினையுஞ் செய்வானும் அதன் பயனுஞ் சேர்ப்பானும்
> மெய்வகையால் நான்காகும் விரித்த பொருளெனக் கொண்டே
> இவ்வியல்பு சைவ நெறியல்லவற்றுக்கில்லை யென "

சாக்கிய நாயனர் உளங்கொண்டதாக உரைத்துப் போற்றினர். இதன் கண் செய்யப்படும் வினையும், அதனைச் செய்யும் வினைமுதலாகிய

உயிரும், அவ்வினை முதற்றொழிலானாய பயனும் அப்பயனை உயிரோடு கூட்டும் தலைவனாகிய இறைவனும் எனச் சமயத்துள் விதிக்கப்பட்ட பொருள் நான்காமென்பது கூறப்பட்டது. இவற்றுள் வினையின் பயனை உயிரோடு கூட்டுந் தலைவன் இல்லாமலே செய்தவினை செய்தோனைத் தொடர்ந்துபற்றிப் பயன்தரும் எனச் சமணர் முதலாயினார் கூறுவர். இவர் கொள்கையாகிய "ஊழ்வினையுருத்து வந்தூட்டுமென்பது" சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டுள்ளது.

ஒருவன் செய்த வினையின் பயன் அவனை யடையும் முறை உண்டென்பதனை "முன்னைச் செய்வினை இம்மைக்கண் வந்துமுடியுமாகலின்" என்பதனால் நம்பியாரூரரும், "மெய்த்தன்னுறும்வினை" என்பதனாற் சம்பந்தரும் உடன்பட்டுக் கூறினாரெனினும் அவ்வினை தானே செய்தோனை யடைந்து பயன்தருமெனத் தேவார ஆசிரியர் மூவரும் தம்பாடல்களில் யாண்டும் கூறிற்றிலர். உயிர்கள் செய்த வினையின் நன்று தீதறிந்து பயனளிப்பவன் இறைவனொருவனே யென்பது சைவசித்தாந்திகளின் கொள்கை. இவ்வுயரிய கொள்கையினை மேற்கொண்ட தேவார ஆசிரியர்கள் அங்ஙனம் வினைப்பயனை ஊட்டும் இறைவன் உயிர்கட்குத் தீவினைப் பயனையருத்தும் போதும், நோயாளர்களின் பிணிநீக்கக் கருதிய மருத்துவன் அதனை நீக்கற்குரிய கைக்கும் மருந்தினை வெல்லக்கட்டி முதலிய இனிய பொருளோடும் சேர்த்தருத்துதல் போல, உயிர்கள் நுகர்தற்குரிய தீவினைப்பயனை இனிமையைத் தரும் நன்மையோடே கூட்டியருத்துதலோடு பாவங்கள் தீர்தர நல்வினையையுந் தந்தருளுவன் எனக் கூறுவர்.

இஃது,

"இனியன அல்லவற்றை இனிதாக நல்கும் இறைவன்"

"பண்டு நாம் செய்த வினைகள் பறைய வொரருள் நெறிபயப்பார்",

"பாவங்கள் தீர்தர நல் வினை நல்கி"

என்பன முதலாக வரும் ஞானசம்பந்தர் தேவார அடிகளால் நன்கு பெறப்படும்.

அன்றியும், தம் அறியாமையாற் பெரும் பிழைகளைச் செய்தவர்கள் அக்குற்றத்தின் பொருட்டு வருந்தி நெஞ்சுருகி இறைவனிடத்து முறையிடுவராயின் அவர் தம் வஞ்சனை முதலாகிய குற்றங்களை இறைவர் நீக்கியருள் புரிவா ரென்பதனை,

"நெஞ்ச மிதுகண்டு கொளுனக்கென நினைந்தார்
வஞ்ச மதறுத்தருளும் மைந்தன்."

என்பதனால் உணர்த்திய பிள்ளையார் இவ்வாறு தம்மை உள்ளங் கசிந்து வழிபடும் அடியார்களை ஊழ்வினை பாவ முதலியன பற்றாவாறு இறைவர் காத்தருள்வர் என்பதனையும்,

"வந்தித்திருக்கும் அடியார் தங்கள் வரு மேல் வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கும் பரமன்"

"அடியார் மேல் எண்ணில் வினைகளைவான்"

"ஒருவனுர் அடியாரை ஊழ்வினை நலிய வொட்டாரே"!

எனவரும் அடிகளால் அறிவித்தருளினர். இவ்வாறே திருநாவுக்கர சடிகளும் முன்செய்த பாவங்கள் கெடுதற்கு இறைவனை நெஞ்ச நெக் குருகி வாழ்த்தலே காரணமாமென்பார் அவ்வனுபவத்தைத் தம்மேல் வைத்துரைக்கும்,

"முன்னைநான் செய்த பாவம் முதலறப்
பின்னைநான் பெரிதும் அருள்பெற்றதும்
அன்னமார் வயற் கோழம்பத்துள்ளமர்
பின்னல்வார் சடையானைப் பிதற்றியே"

எனுமிப் பாடலால் உணர்த்தி இறைவழிபாட்டின் செம்மையை விளக்கிப் போக்தார்.

ஒரு சிலர், தேவார ஆசிரியர்கள் சைவசித்தாந்தக் கொள்கை யுடையரல்லரெனக் கூறுவர். அவர்கள் தம் கூற்றுக்காதாரமாக, இறை வனது எல்லாமாகிய நிலையைக் குறிக்கும் நின்ற திருத்தாண்டக முதலிய திருப்பதிகப் பாடல்களைக்கொண்டு, அவ்வாசிரியர்கள் பிரம்மாகிய ஒன்றையே உள்பொருளாகக் கொண்டனரெனவும், அவர்கள் பாடிய தேவாரத்து மும்மலம் என்ற தொகையினைக் குறிக்காது போதலால் ஆணவமலமென்ப தொன்றுண்டென்பது அவர்தமக் குடன்பாடன் றெனவும், அவரால் மலமெனக் குறிக்கப்படுவது மாயையாமெனவும் கூறுவர். தேவார ஆசிரியர்கள் முப்பொருளுண்மையை மேற்கொண் டவர்களென்பது முன்னர்க் காட்டிய குறிப்புக்களால் நன்கு புலப்படுத லானும், தேவாரத்து மலம் என்பது மூன்றென விரித்துக் கூறப்படா விடினும் மலம் ஒன்றுக்கு மேற்பட்டுள்ளமை, "தவமாம்மலமாயின தானறுமே" எனப் பன்மையில் வழங்கப்படுதலால் தெளியப்படும். இதனால் மும்மலம் தேவார ஆசிரியர்களுக் குடன்பாடென்பது புலனும். 'மலமாயின' என்றதால் பன்மையே கொள்ளப்படுமன்றி மூன்றென் னும் எண்ணையே அத்தொடர் குறிக்கவேண்டுமென்னும் யாப்புறவின் மையின் அத்தொடராற் குறிக்கப்படுவன கன்மம், மாயை ஆகிய இரண்டுமே யாமெனின், சைவசித்தாந்திகளாற் கூறப்படும் ஆணவ மலத்தியல்பு தேவார ஆசிரியர்களால் மலமெனவைத்துக் கூறப்பட்டால் அதுவு மவர்தமக் குடன்பாடாதல் கொள்ளப்படுமாதலின் சித்தாந்திகள் கூறும் மும்மலத்தியல்பினை ஒரு சிறிது நோக்குவாம்.

எண்ணிறந்த சத்திகளான் எண்ணிறந்த உயிர்களினும் செம்பிற் களிம்பும் நெல்லினுமியும் போல அனுதியே விரவிநிற்பதொன்றாய்க் கேவலத்தின் அவ்வுயிர்களின் அறிவோடு தொழிலை மறைத்து நின்று, சகலத்தில் போகநுகர்ச்சி வினைமுதலாதற் றன்மையை நிகழ்த்தி அறியாமை நிகழ்ச்சிக்குக் காரணமாய் நிற்பது ஆணவமலமென்பர். இஃது உயிரை அணுத்தன்மைப் படுத்து மறைப்பதாகலின் இப்பெயர்த்

தாயிற்று. இஃது உயிரியல்பாக அணுதியே அதனைத்தொடர்ந்துள்ள மையாற் பசுத்துவம் எனவும்படும். உயிர்களை அறியாமை யிருளிற் படுத்து மறைப்பதாகலின் இதனைத் தமிழர் இருண்மலம் எனப்புகல்வர். கன்மமாவது ஆணவத்தால் உயர்களிடத் தெழுந்து விருப்பினையுடைய தாய்ப் போக நுகர்ச்சிக் கேதுவாகி உயிரைப் பிறவியுட் படுத்துவதென் பதும், மாயாமலமாவது உவர்மண்ணுகிய அழுக்கைக்கொண்டு உடை யின் அழுக்கை நீக்குதல் போல ஏனைமலங்களை யகற்றற்கு மருந்தாய் இறைவனால் உயிர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவற்றிற்குச் சிறிது அறிவு நிகழ்ச்சியைத் தருவதென்பதும் சைவசித்தாந்த சமயத்தினர் தம் கொள்கையாம்.

ஞானசம்பந்தப் பிள்ளையார் இம்மூன்றனியல்பையும் உடம்பொடு படுத்துக்கூறி அவைகளைத் தவிர்ப்போன் இறைவனென்பதனையும்,

"விளையா ததொர் பரிசில்வரு பசுபாச வேதனை ஒண்
தளையாயின தவிரவ்வருள் தலைவன்"

எனற அடிகளில் முறையே கூறிப்போந்தமை நோக்கத்தக்கது. இத னுள் முறையே மும்மலமும் பின் வருமாறு குறிக்கப்பட்டுள்ளன.

(க) "விளை பாததொர்பரிசில் வருபசு (வேதனை)"

(உ) "பாச வேதனை"

(ங) "ஒண் தளை"

இவற்றுள் "விளையாததொர்பரிசில்வருபசு (வேதனை)" யென்பது 'புதிதாகத் தோன்றுத தன்மையில் (அஃதாவது அணுதியே) உயிரைத் தொடர்ந்து வரும் பசுத்துவம் எனப்படும் ஆணவமலத்துன்பம் என்றே பொருள்படும். "பாசவேதனை" யென்பது நல்வினை தீவினை யாகிய இருவினைக் கட்டால் உண்டாகிய துன்பம் என்றே பொருள் தரும். ஈண்டுப் பாசமென்பது இருவினையே யாமென்பது, "வினை யென்பாசமறைவிலே" எனவரும் காரைக்காலம்மையார் மொழியானும் "இருவினைப் பாசமும்" எனச் சேக்கிழார் கூறுமாற்றானும் துணியப்படும். "ஒண் தளை" என்பது உயிர்கட்குச் சிறிது அறிவு நிகழ்ச்சியை (ஓட்பத்தை) விளைப்பதாய் உயிரைத் தளைத்துள்ள மாயையாகிய மலத்தையே குறிக் கும். மாயாமலம் உயிர்கட்கு விழைவு, அறிவு, செயல்களை விளக்கு மென்பதனை மெய்கண்டதேவரின் முதன்மாணவராகிய அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் சிவஞானபோதத்தின் வழிநூலாகச் செய்தருளிய சிவஞானசித்தியாரில் மாயாகாரியமே ஆணவமலமென்பார் கூற்றை மறுத்துரைக்கப் போந்தவிடத்து,

"மலமெனவேறொன்றில்லை மாயாகாரியமதென்னின்
இலகுயிர்க்கிச்சா ஞானக்கிரியைகளெழுப்புமாயை
விலகிடு மலமிவற்றை வேறுமன் றதுவேறாகி
உலகுட்கரணமாகி யுதித்திடு முணர்ந்துகொள்ளே"

என்ற செய்யுளால் விளக்கியுரைத்தார். இப்பாடலின் இரண்டாமடியாய "இலகுயிர்க்கிச்சாஞானக் கிரியைகளெழுப்புமாயை" என்பது மாயை உயிர்களுக்கு விழைவு, அறிவு, தொழில்களை எழுப்புமியல்பிற்றென்பதனை விளக்கி நின்றது. இப்பாடலுக்கு உரையெழுதிப்போந்த சிவஞான சுவாமிகளும் "உயிரோடொற்றித்து நின்று அறிவிச்சை செயல்களை மறைப்பதாகிய மலத்துக்கும், வேறு நின்று அவற்றை விளக்குவதாகிய மாயைக்கும் தம்முள் வேற்றுமை பெரிதாகலான் மாயையே மலமென்பார் மதம் போலி" எனப் பொழிப்புரைத்தமையும் மாயை ஞ்தலை (அறிவு விளக்கத்தைத் தரும் தலை) யாதலை வலியுறுத்துமென்க.

மேற்காட்டிய "விஞையாததொர்" எனத்தொடங்கும்ஞானசம்பந்தப் பிள்ளையார் தேவாரத்து ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்தின் வைப்புமுறையும் அவற்றுளொவ்வொன்றனியல்புகளும் அடைமொழியாற் சேர்த்து விளக்கப் பெறுதலும் அறிந்தின்புறற்குரித்தென்க. 'விஞையாததொர் பரிசில்வரும்' என்ற தொடர் ஆணமவாகிய பசுவேதனைக்கும், ஒண்மை (புத்திகூர்மை) யைக் குறிக்கும் ஒண் என்னும் பகுதி உயிர்த்தலைகளுளொன்றாய மாயைக்கும் அடைமொழிகளாக வந்த நயம் பாராட்டற்பாலது. இவ்விரு அடைமொழிகளும் தனித்தனியே தாம் சார்ந்து நின்றவற்றிற் கல்லாது மற்றையவற்றுள் ஒன்றிற்கேனும் உரியதாகக் கொள்ளின் பொருந்திய பொருள் தராமையும் நோக்கற்பாலது.

இம்மும்மலத்தையும் நீக்குவோன் இறைவனே என்பதனைத் திருநாவுக்கரசடிகள் "சுழித்துணையாம்" எனத்தொடங்கும் திருமுறைப்பாடித் திருத்தாண்டகத்து "இழிப்பரிய பசுபாசப் பிறப்பை நீக்கும் என்துணையே" என்ற அடியால் பாடிப்போற்றினர். இவ்வடியில் பசுத்துவமெனப்படும் ஆணவமலத்தினையும், பாசமெனப்படும் கன்மத்தினையும் குறிப்பிட்டதோடமையாது மாயையின் தொடர்பாகிய பிறவியினையுஞ் சேர்த்து இம் மூன்றையும் நீக்குவோன் முதல்வன் எனக் குறிப்பிட்டமையும் அவர்தாம் ஆணவமுதலாக மும்மல முண்டென்னுங் கொள்கையினராதலை விளக்கும். ஈண்டுப் பிறப்பென்றது மாயாகாரியத்தைக் குறித்து நின்றது.

மேல் தேவார ஆசிரியர்கள் கருத்தாக வுடன்பட்ட மும்மலங்களுள் மூலமாய் முதலதாய ஆணவமலம், வேறு பல தேவாரப் பாடல்களிலும் குறிக்கப்படுதல் நோக்கத்தக்கது. மலமென்னும் பெயர் மூன்றற்கும் பொருந்துமாயினும் அச்சொல் அடையின்றி ஆணவமொன்றனையே சிறப்பாக உணர்த்துதல் தேவார ஆசிரியர்கள் காலத்துச் சொல்வழக்காதல் உணர்தற்குரித்து. ஆணவமலம் உயிரோடொற்றித்து நின்று அவற்றை அறியாமைப்பாற்படுத்து மறைப்பதாகலின் அதுகாரணமாகத் தேவாரப் பாடல்களில் 'இருள்' எனவும் வழங்கப்படுதல்

நோக்கத்தக்கது. இவ்விருண்மலம் இறைவனருளாலேயே ஒழிதல் கூடுமென்பதனை,

"இருள்தரு துன்பப்பட மறைப்ப.....
அருள்தருகை கொடுத்தேற்றுமையா றனடித்தலமே"

"நின்மல னென்றங் கேத்தும் நினைப்பினையருளி நாளும்
நம்மல மறுப்பர்போலும் நனிபள்ளியடிகளாரே"

"இருளறுத்து நின்(று), ஈசனென்பரர்க்கெலாம்
அருள்கொடுத்திடும் ஆனைக்காவண்ணலே"

எனவரும் திருநாவுக்கரசர் தேவார அடிகளானும்,

"தலம்நிலவிய மனிதர்களொடு தவமுயல்தரு முனிவர்கள்தம்
மலம் அறுவகை மனம் நினைதரு மறைவன மமர்தரு பரமனே"

"மலனை தீர்த்தெய்தும் மாதவத் தோர்க்கே"

எனவரும் ஞானசம்பந்தப் பிள்ளையார் தேவார அடிகளானும் தெளிவுறத் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வாறு 'பசுவேதனை' யெனவும் 'இருள்' எனவும் 'மலம்' எனவும் பெயர்கூறப்பட்டு உயிரோடொற்றித்து நின்று உயிர்களின் விழைவு, அறிவு, செயல்களை மறைப்பதாகிய ஆணவமலத்துக்கும், அதனின்றும் வேறுபட்டு விழைவறிவு செயல்களை விளக்குதலால் 'ஒண்தனை' எனப் பெயர்பெற்ற மாயைக்கும் வேற்றுமை பெரிதாதலை மேலெடுத்துக் காட்டிய தேவாரப் பாடல்களால் நன்கறியலாம்.

இறைவனை யடையும் வழியாகச் சைவர்களாற் கூறப்பட்ட சரியை, கிரியை, யோகம், ஞானம் எனுநான்கு முறைகளும்,

'தண்ணென விரும்பு சரியைத் தொழிலர்'

"காலம்பெற மலர்நீரவை தூவித்தொழுதேத்தும்
ஞாலம் புகழுடையார்"

"சினமலியறுபகை மிகுபொறி சிதைதருவகை வளிநிறுவிய
மனனுணர் வொடுமலர் மிசையெழுதருபொருள் நியதமு முணர்பவர்"

"தண்ணறிவால் வழிபாடு செய்யுங் காலுடையான்"

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரத்தினும் இவ்வாறே ஏனைமூவர் பாடல்களினும் பலபடக் கூறப்பட்டுள்ளமை தேவாரத்தை உற்றுநோக்குவார்க்கு நன்கு விளங்கும். இங்கு விரிவுநோக்கி விடப்பட்டது.

இதுகாறும் கூறியவாற்றால் தேவார ஆசிரியர்கள் மூப்பொருண்மையை மேற்கொண்ட சைவசித்தாந்த சமயத்தினராய் அதன்கட் கூறப்படும் நால்வகை நன்னெறிகளையும் போற்றி நடந்த வாழ்க்கையர் என்பது நன்கு புலப்படும்.

நம்மாழ்வார் காலம்

திரு. கே. ஜி. சேஷையர் B.A., B.L., அவர்கள்,
(முன்) உயர் நீதிமன்ற நீதிபதி, திருவனந்தபுரம்.

வைணவ ஆழ்வார்களின் வரலாறுகளைக் கூறும் நூல்களுள் இராமானுஜர் காலத்தவரான கருடவாகன பண்டிதர் வடமொழியில் வரைந்திருக்கும் திவ்யசூரிசரிதமும், பின்பழகிய பெருமாள் சீயர் செய்த குரு பரம்பரையும் அவற்றின் தொன்மைபற்றி முக்கியமானவைகளாகக் கருதப்படுகின்றன. அந்நூல்களிரண்டினும், நம்மாழ்வாரொருவர்க்கன்றி ஏனைய வாழ்வார்கட்குப் பிறந்த மாதங்களும் நட்சத்திரங்களுமே கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் நம்மாழ்வார்க்கு மட்டும் அவதார காலங்கள் விரிவாய் வரையப்பட்டுள்ளன. நம்மாழ்வார் ஆழ்வார்களுட் சிறந்தவராகையாலும், அவரை வைணவர்கள் கூடஸ்தராகவும் குலபதியாகவும் சிலாகித்துப் போற்றுவராகையாலும் அவரது முதன்மையும் மேன்மையுங் கருதி அவர் வரலாற்றைக் கூறுமிடத்து, அவதார காலக் குறிப்புக்கள் விரிவாய்க் கூறினர் கருடவாகனர் முதலியோர் என்றாகிக்கலாம். "ஆதிகுருவா யம்புவியி லவதரித்தான் வாழியே" என்று வைணவர்கள் நம்மாழ்வாரை வாழ்த்திப் பாடுவர். குரு பரம்பரைக்காரர் காலத்தில் வழங்கிவந்த கர்ண பரம்பரையை அடிப்படையாகக் கொண்டு அவதாரக் குறிப்புகள் அவரோதியிருக்க வேண்டும். ஆனால், அவர் கூற்று முழுதும் ஒப்பக் கூடியனவாகா.

ஆழ்வார்களின் பிறப்பு முறையைப்பற்றி அபிப்பிராய வேறுபாடிருப்பினும், மணவாளமாமுனி கூறியிருக்கும் அவதாரக் கிரமத்தைப் பின்பற்றிப் போதல் தவறுகாது.

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்ய னருள் மாரன் சேரலர்கோன்—துய்யபட்ட
நாதனன்பர் தாட்டேளி நற்பாண னற்கலியன்
ஈதிவர்தோற்றத் தடைவா மிங்கு

என்று அப்பெரியார் சாற்றுவர். இவ்வெண்பாவால், சிலர்கருதுவதுபோல நம்மாழ்வார் திருமங்கை மன்னனுக்கும் பின்னேறன்றியவரல்ல ரென்பது புலப்படும். இச்செய்யுட்படி, நம்மாழ்வார் முதலாழ்வார்கட்கும் திருமழிசையார்க்கும் காலத்தால் பிற்பட்டவரென்பதும், குலசேகரப்

நம்மாழ்வார் காலம்

பெருமாள், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை மன்னன் இவர்கட்கு முன்றோன்றியவரென்பதும் போதரும். இத்திருமாலடியாரின் காலத்தை யாய்வதே இக்கட்டுரையின் கோக்கம்.

குருபரம்பரைப்படி நம்மாழ்வார் கலியப்தம் 43-வது நாளிற் விஜயமானார். இக்கொள்கையை இந்நாளில் சற்றேனுஞ் சரித்திர வுணர்ச்சியுள்ளார் பொருத்தமுடையதாகக் கருதார். நிகழும் கலி வருடம் 5039.—இற்றைக்கு 5000 ஆண்டுகட்குமுன் தமிழ் நூல்களிருந்தனவென்றோ, இருந்திருப்பின் அவற்றுள் யாதேனுமொன்று, கடைச் சங்கத்திற்கு முன் சேர்ந்ததாகக் கூறப்படும் கடல் கோளுக்குத்தப்பி இதுகாறுமிருந்து வருகிறதென்றோ தமிழபிமானிகள் ஒருவருங் கூறத் துணியார். நம்நாட்டில் மகான்களின் பெருமையுஞ் சிறப்பும் அவர் தம் பழமையை அவலம்பித்து நிற்குமென்ற தவறான வெண்ணமிருப்பது பற்றியே, இப்பெரியோர்க்குச் சற்றும் சம்புதற்கு முடியாதகாலம் குருபரம்பரைகள் நிர்மித்தன. முதலாழ்வார்கள் நம்மாழ்வார்க்கு சில நூற்றாண்டுகளுக்குமுன் தோன்றியவர்களாகக் கருதப் படுகின்றனர். முதலாழ்வார் மூவருள் ஒருவர் பொய்கையாழ்வார். சோழன் செங்கணானைத் துதித்து களவழி நாற்பது பாடிய பொய்கையாரும் அப்பெயர் பூண்ட ஆழ்வாரும் ஒருவரேயென ஸ்ரீமான் மு. ராகவையங்கார் தக்க ஞாயங்கள் கூறி ஸ்தாபித்திருக்கிறார். பொய்கையார் சேரமான் கோக்கோதைமார்பன், சேரமான் கணைக்காலிரும்பொறை இவ்விருமன்னர் காலத்தவர். இவர்களின் காலம் கிருஸ்தப்தம் 3-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 4-வது நூற்றாண்டின் ஆரம்பமுமாகும். (எனது சங்ககாலத்துச்சேரமன்னர்கள் என்னும் நூலை நோக்குக.) அதனால் பொய்கையாழ்வாரும், அவர்காலத்தவரான பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் கி. பி. 4-வது நூற்றாண்டிலிருந்தவர்களாக நினைக்கலாம். அஃதேல், நம்மாழ்வார் 4-வது நூற்றாண்டிற்கு ஒன்றிரண்டு நூற்றாண்டுகட்குப்பின் அவதரித்தவரென்று கொள்ளற்குரியர். அன்றியும், நம்மாழ்வார் திருவாய்மொழியில் "சமணரும் சாக்கியரும் வலிந்து வாது செய்வீர்" என்று வழங்கியுள்ளார். (4—10—5) இதனால் அவர்காலத்தில் அவர்க்கும் சமண மதத்தார்க்கும் வாதப்போர் நிகழ்ந்ததாக எண்ணலாம். அவ்வித நிகழ்ச்சி, சமணமதம் தென் இந்தியாவில் ஆதிக்கமடைந்திருந்த காலத்தாக வேண்டும்.

இச்செய்தியை கவனியாதவராய், ஸ்ரீமான் கோபிநாதராயரவர்கள், தாமியற்றிய "ஸ்ரீ வைஷ்ணவரின் சரித்திரம்" என்னும் ஆங்கிலநூலில், நம்வாழ்வார் கி. பி. 9-வது நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தனரென்று நாட்டமுயல்வர். இக்கொள்கையை சில சரித்திரவறிஞர்கள் கைக்கொண்டனராகையால், இதற்கு இராயரவர்கள் கூறுங்காரணங்களை ஆராய்தல் நிகையாகாது. அன்னர் ஆதரவாக ஆனைமலை சிலாசாசனத்தைக் கோருவர். அது கலி 3871-ல் பொறிக்கப்பட்டது.

அதில் பராந்தக பாண்டியன் உத்தரமந்திரிமாறன்காரி ஒரு விஷ்ணு கோவில் மலையிற் குடைந்து பணி செய்வித்தானென்றும், அவனது கவித்திறம் விளங்க மதுரகவி என்ற பெயர் அவன் வகித்தானென்றும், அவன் கரவந்தபுரத்தில் வைத்திய குலத்தில் பிறந்தனனென்றும், கூறியுள்ளது. அச்சாசனத்தில், மாறன் காரியென்றும், மதுரகவியென்றும், எழுதியிருப்பது கண்டு, காரிமாறன் என்ற பெயர்வாய்ந்த நம்மாழ்வார் அவ்வுத்தரமந்திரியின் மகனாவாரென்று இவ்வாராய்ச்சியாளர் கருதி விட்டார். மேலுமவர் கூறுவது: ஆழ்வாரின் நாமங்களுள் ஒன்று பராங்குசன். பராந்தகபாண்டியன் பிதாவின் பெயரும் பராங்குசன். தான் சேவித்துவந்த அரசன் பிதாவின் பெயரைத் தன் மகனுக்கு அம் மந்திரியிட்டுத் தன்ராஜபக்தியை விளக்கினன். நம்மாழ்வாரின் சீடர் பெயர் மதுரகவி. இக்காரணங்களால், நம்மாழ்வார் ஆனைமலை சாசனத்திற்கு அணித்தான காலத்தில் பிறந்தவராகக் கருதவேண்டும். சௌரிராஜப்பெருமாள் கோவிலிலுள்ள ஒரு கல்வெட்டில் சடகோபனென்று ஒருவன் பெயர் காணப்படுகின்றது. கி. பி. 908-க்கு முன் அரசாண்ட ஆதித்தியன் காலத்தது அச்சிலாசாசனமொன்று அக்ஷர வடிவால் ஊகிக்கற்பாலது. அதனால், நம்மாழ்வார் கி. பி. 9-வது நூற்றாண்டில் வாழ்ந்தாராவர். இதுவே இராயரவர்களின் விவகாரம்.

இக்கொள்கைக்கு அடிப்படையாக விளம்புங் காரணங்கள் ஒரு சிறிது மொப்பக்கூடியனவல்ல. மந்திரி மாறன்காரி கரவந்தபுரத்தில் ஜனித்தவன். ஆழ்வாரின் தந்தை மாறன் காரி திருநகரி யென்ற திருக்குருகையில் தோன்றியவர். மதுரகவி என்ற காரணப்பெயர் கொண்ட மந்திரி வைத்திய குலத்தில் பிறந்தோன். ஆழ்வார் திருவடி சம்பந்தம் பெற்ற மதுரகவி திருக்கோளூரில் பூர்வ சிகைதரிக்கும் பிராமண குலத்தில் பிறந்த ஸாமவேதி. ஆனைமலை சாசனத்தில் தோன்றும் மாறன் காரியின் சிறப்புப் பெயர் மதுரகவி. இவ்விருநாமங்களும் ஒரு மனிதனையே அங்கு குறிக்கின்றன. ஆழ்வார் வைபவத்தில் தோன்றும் மதுரகவிக்கு நம்மாழ்வார் ஆசாரியர்.

> கண்டு கொண்டென்னை காரிமாறப்பிரான்
> பண்டைவல்வினை பாற்றியருளினான்
> எண்டிசையுமறிய வியம்புகேன்
> ஒண்டமிழ்ச்சட கோபனருளையே

என்று மதுரகவி தம்மாசாரியரின் வைபவத்தைப் போற்றுவர். உண்மையிவ்விதமிருக்க, மாறன்காரி, மதுரகவி யென்றிரண்டு பெயர்கள் சாசனத்தில் பார்த்தவுடன், ஆராய்ச்சியாளர் திரிபுணர்ச்சி யடைந்தவராய், அதை தாபிக்க வெறிதே பொருத்தமில்லாப் போலிக் காரணங்கள் சில வரைந்து படிப்போர்க்கு மருட்சியுண்டுபண்ணினர். ஆனைமலை சாஸனத்தால் உள்ளங்கைக் கனிபோல விளங்க நிற்கும் உண்மையைக் காணாவண்ணம் கண்ணையடைத்து ஏதோ ஆகாசப்பந்தல் நிர்மாணித்தது வியப்பேயாம். அச்சாசனத்தினின்று நாம் நிர்விவாத

மாய் அறியக்கிடக்கும் செய்தி அதன் காலமான கி. பி. 770-ல் மாறன் காரி, மதுரகவி யென்ற பெயர்கள் சாதாரண வழக்கில் இடப்பட்டு வந்தன வென்பதே. இப்பெயர்கள் வழக்கிற்றோன்றுதற்குக் காரணம் ஆழ்வார்கள் அப்பெயர்கள் பெற்று முன்னரே விளங்கினராதலால், என்று துணிதல் பொருத்தமாகும். அதனால் நம்மாழ்வார் காலம் கி. பி. 770-க்கு முற்பட்டதாக வேண்டுமென்பது போதரும். ஆழ்வார்க்குப் பராங்குசன் என்ற பெயர் வழங்கிவந்ததையும் தம் கொள்கைக்கு ஓர் ஆதரவாக இவ்வாராய்ச்சியாளர் கூறுவர். இராஜபக்தி மிகுதியால், மந்திரி தன்னரசன் பிதாவின் பெயரான பராங்குசன் என்ற நாமத்தைத் தன் குமாரனுக்குச் சாற்றியிருப்பானென்கிறார். இக் கூற்றும் பொருத்தமன்று. ஆழ்வாரின் நாமத்தை, பின்வந்த வைஷ்ணவப் பற்றுள்ளவர் அரசனுக்கிட்டார்களென்றல் பொருத்தமாகும். பராங்குசன் என்ற பெயர் சாதாரண வழக்கிலுள்ளதன்று. பாண்டிய வரசனே முதல்முதல் அவ்வபூர்வ நாமத்தை வகித்தானென்றல், எக் காரணம் அல்லது விசேஷம்பற்றி அவனுக்கு அப்பெயர் அளிக்கலா யிற்று ? பாண்டிய வமிசத்தில் முன்வழங்கிவந்த பெயர்களுள் அப்பெயர் ஒன்றன்று. நாம்மாழ்வார் அப்பெயரால் வழங்கப்பெற்றதற்கு கல்ல காரணமுளது. பராங்குசன் என்ற பதம் கணநாதனைக் குறிக்கும். நம்மாழ்வார் விசுவசேனர் அல்லது சேனை முதலியாரின் அவதார மென்பது ஸ்ரீ வைஷ்ணவரின் கோட்பாடு. "சேனையர்கோன் அவதாரம் செய்தவள்ளல் வாழியே" என்று நம்மாழ்வாரை வாழ்த்திப் பாடுவர் ஸ்ரீ வைஷ்ணவர். பராந்தகன் தந்தையின் காலத்திற்கு முன்னரே நம் மாழ்வாரின் பெருமையும் இசைப்பாடும் நாடெங்கும் பரவியிருந்த வென்றும், அதனால் அவர் திருநாமங்கள் மக்கட்கு இடுவாராயின வென்றும் ஊகிப்பதே சாலவும் பொருத்தமுடையதாகும்.

கி. பி. 1000-க்கு சமீபித்த காலத்தில் ஆழ்வார்களுக்கு ஆலயங்க ளேற்பட்டு, அவர்களுத்சவங்கள் கொண்டாடுவதோடு அவர்களருளிய பிரபந்தங்களுமோதப் பெற்றனவென்று சாசனங்களால் வெளியாகிறது. உக்கல் என்னுமூரிலுள்ள ஆலயத்தில் உத்தேசம் கி. பி. 1000 ஆண்டில் பொறித்துள்ள சிலாசாசனங்களில், பெருமாளின் பெயர் திருவாய் மொழிதேவர் எனக் காணப்படுகிறது. கி. பி. 1000-வது வருஷத்தில் நம்மாழ்வாரின் பிரபந்தத்தின் பெயரால் பெருமாள் அழைக்கப்பட வேண்டுமானால், நம்மாழ்வார் அக்காலத்திற்குப் பல நூற்றாண்டுகட்கு முன் அவதரித்திருக்கவேண்டுமென்று டாக்டர் ஹூல்ட்ஷ் கூறுகிறார். எத்துணை நூற்றாண்டுகட்கு முன்னென்று நிச்சயிக்க, குருபரம்பரை களினுதவி யின்றியமையாதது. ஸ்ரீரங்கத்தில் நம்மாழ்வார்க்கு திரு மங்கை மன்னன் ஒரு கோவில் கட்டி அதில் திருவாய்மொழியோத ஏற்பாடு செய்ததாக குருபரம்பரைகள் கூறும். திருமங்கையின் காலம் நிச்சயிக்க அவரருளிய பெரிய திருமொழியில் ஒருவாறு போதிய கருவி களுள. அப்பெரியாரின் காலம் 8-வது நூற்றாண்டென்று ஒருவாறு ஒப்பமுடிந்ததாகச் சொல்லத்தகும். அவர் நம்மாழ்வார்க்குக் கோவில்

பணி செய்து திருவாய்மொழிசேவை அங்கேற்படுத்திரானால், அவர் காலத்திற்குச் சில நூற்றாண்டுகட்குமுன் நம்மாழ்வாரின் விஜயம் நிகழ்ந்திருக்கவேண்டும். திருவாய்மொழிக்குச் சிறப்புத் தனியன்கள் சேர்க்கப்பட்டுள்ளவற்றுள் நாதமுனி யெழுதியதொன்று இப்பெரியார் வைணவ ஆசாரியருள் தலைவராவார். திருமங்கையாரா லேற்படுத்தப்பட்ட திருவாய்மொழி சேவை திருவரங்கத்தில் ஏதோ காரணத்தால் நின்று போன காலத்தில், அக்கைங்கரியம் மீண்டு மங்கு நடைபெறச் செய்தற்கு இப்பெருந்தகையார் திருநகரிக்குச் சென்று அங்குள்ளோர்களிடமிருந்து பிரபந்தத்தின் சரிபாடம் பெற்றுவந்தார். அன்னார்க்குத் திருவாய்மொழியின் மேலுள்ள பற்று இராமாநுச நூற்றந்தாதியில் வரும்,

ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் அமுதத்திருவா
யீரத்தமிழினிசை யுணர்ந்தோர்கட்கு இனியவர்தம்
சீரைப்பயின்றுய்யும் சீலங்கொள் நாதமுனி

என்ற அடிகளால் விளங்கும். அவர் திருவாய்மொழியின் சுத்தபாடம் திருநகரிக்குப் போய்ப்பெற்று வந்ததை, ஆழ்வாரின் தியானத்தலமான புளியின்முன் 350 வருடகாலம் நாதமுனி தபசிருந்து பிரபந்தத்தை ஆழ்வாரிடம் பெற்று வந்தாரென்று வைணவ நூல்கள் கூறும். இக்கூற்றால் சிலர் கருதுவதுபோல நம்மாழ்வார்க்கும் நாதமுனிக்கும் நேரான தொடர்பிருந்ததென்று நினைத்தல் தவறாகும். இதன் கருத்து, நாதமுனி நம்மாழ்வார்க்கு 350 வருடம் காலத்தால் பிந்தினவரென்றேயாம். நாதமுனியின் காலம் கி. பி. 823 முதல் 918 வரை நிகழ்ந்ததாக கோவிலொழுகு முதலியவற்றால் பெறப்படும். ஸ்ரீராமானுஜர் நாதமுனிக்குப்பின் வந்த ஐந்தாந்தலைமுறை. இராமானுஜர் காலம் 1017—1137 என்று சரித்திர வறிஞர் கருதுவர். இதனால், நாதமுனியின்காலம் உத்தேசம் 900-த்துக் கடுத்ததென்று கொண்டால், நம்மாழ்வார் காலம் உத்தேசம் கி. பி. 550 என்றேற்படும்.

நம்மாழ்வார் உத்தேசம் கி. பி. 6-வது நூற்றாண்டினரென்பதற்கு வேறு சான்றுங் கூறலாம். அப்பெரியார் காலத்தில் சைவ வைணவ சம்வாதமில்லை யென்பதற்குத் திருவாய் மொழியே சான்று பகரும். அக்காலத்தில் வைணவரும் திருநீறிட்டு வந்தார் போலும். "கரியமேனிமிசைவெளியநீறு சிறிதேயிடும் பெரிய கோலத்தடங்கண்ணன்" (4—5—6) என்று கண்ணபிரானையும், "நீறு செவ்வேயிடக் காணில் நெடுமாலடியாரென்றோடும்" (4—4—7) என்று இலக்குமியையும் நம்மாழ்வார் வர்ணித்திருக்கிறார். "பாமருமூவுலகு'ப் பதிகத்தில்,

என்றிருமார்பன்றன்னை யென்மலைமகள் கூறன்றன்னை
என்றுமென் நாமகளை யகம்பால் கொண்ட நான்முகனை
நின்றசசிபதியை நிலங்கீண்டெயில் மூன்றெரித்த
வென்று புலன்துரந்த விசும்பாளியைக் காணேனோ. 7—6—7.

என்று பாடியிருப்பது காணத்தக்கது. இவ்விரு வைதிக சமயங்கட்கும் இடர்விளைக்குமோர் புறச்சமயக் கோட்பாட்டின் பிரபல வெழுச்சியை சைவரும் வைணவரு மொத்துகின்று தடுக்கவேண்டிய ஆவசியகம் நேர்ந்தவொரு காலத்தில் நம்மாழ்வார் தோன்றினரெனக் கருதவேண்டும். அவ்விதமானகாலம் 5-ஆம் நூற்றாண்டின் கடை அல்லது 6-ஆம் நூற்றாண்டினாரம்பத்தில் உண்டாயிற்று.

சங்ககாலத்தே சைன சமயம் தமிழ்நாட்டில் வழங்கி வந்ததேனும், அக்காலத்தில் வைதிக சமயங்கட்கிருந்த செல்வாக்கும் அரசாதரவும் அம்மதத்திற்கு ஏற்படவில்லை. சைனசமயத்தினபிவிர்த்திக்காக விக்ரம சகாப்தம் 526-க்குச் சரியான கி. பி. 470-ல் மதுரையில் வஜ்ரநந்தி யென்பவர் ஓர் சங்கம் நிறுவினர். உத்தேசம் 5-வது நூற்றாண்டின் கடையிலல்லது 6-வது நூற்றாண்டி னாரம்பத்தில் களப்பரரென்பார் பாண்டியநாட்டில் படையெடுத்து மதுரை நகரைக் கைப்பற்றினர். பெரியபுராணத்தில் மூர்த்திநாயனார் வரலாற்றிற் கூறப்படும் கருநாடர் படையெடுப்பு இதுவேயாம். களப்பரவரசன் சைனமதத்தைச் சேர்ந்தானுகையால், "தார்வேந்தன் கோல்நோக்கி வாழுங்குடி' என்பதற் கிணங்க அவன்காலத்தில் அம்மதத்தினுதிக்கம் வலுத்து, வைதிகமதங் களின் செல்வாக்குக் குன்றத் தொடங்கியது. அப் புறச்சமய வெழுச்சி யால் சைவவைணவங்கட்கு விளைந்த தளர்வை நீக்கி யவற்றை மேம் படுத்தப் புண்ணிய புருடர்கள் அவ்விரு சமயங்களினு மவதரித்தனர். அம்மகத்துக்களுளொருவர் நம்மாழ்வார். ஆழ்வார்க்கும் சங்கத்தார்க் கும் வாதுண்டாயிற்றென்றும், அவ்வமயம் 'அண்டகோள'ப் பாசுரம் ஆழ்வார்பாடி சங்கத்தாரைப் பங்கமுறச் செய்தாரென்றும் வைணவ ஐதிகமுளது. அச்சங்கம் மேலேகூறிய சைனசங்கமென்று கொள்வது பொருத்தமாகும். களப்பரரை கடுங்கோன் முறியடித்து பாண்டிய நாட்டை மீட்ட பிறகு சைனமதத்தின் பிராதானியம் குறைவுற்றது. நுணுகி நோக்கின் நம்மாழ்வார் கடுங்கோனுக்குச் சற்று முன்னேறிய வராகக் கணித்தல் ஏற்புடையதென்று தோன்றுகின்றது. சைனரை வென்று சைனசமயம் தளர்வடைதல் கண்டே ஆழ்வார்.

பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
கலியும் நரகமும் கைந்தகமனுக் கிங்கியா தொன்றுமில்லை
(5. 2. 1.)

என்றுவப்பு மீக்கூரி அருளிச்செயல் சாற்றிக் கோஷித்தார்போலும்!

மேற்கூறியவற்றுன் நம்மாழ்வார் காலம் கி. பி. 6-வது நூற்றாண் டின் முற்பகுதியென்று கொள்ளுதல் ஏற்புடையாகுமென்று நினைக் கின்றேன்.

அடங்கன்முறை ஆராய்ச்சி

திரு. அ. சிதம்பரனார் M. T. S., M. T. A. S., M. S. Sc. அவர்கள்,
துடிசைகிழார்.

முதலாம் இயல்

முறை என்ற சொல்லுக்குப் பன்னிரண்டு பொருள்கள் உள. அவையாவன :—

(1) இடைச்சொல் (2) உறவு (3) ஒழுக்கம் (4) ஒழுங்கு (5) கிராமம் (6) குணம் (7) தரம் (8) பழமை (9) புத்தகம் (10) முறைமை (11) முறையீடு (12) வரிசை.

"முறை" என்ற சொல் எல்லாப் புத்தகங்களுக்கும் பொதுப் பெயராக இருந்தாலும், சிறப்பாக "அடங்கன் முறையை"யே குறிக்கும்.

ஏனென்றால், மேலே கூறிய 12 பொருள்களுக்கும் அடங்கன் முறை இலக்கியமாய் இருக்கின்றது.

"சிவம் எனும் நாமம் தனக்கே யுரிய செம்மேனியம்மான்" என்றபடி, கடவுள் எப்படிச் "சிவம்" எனும் நாமத்தைத் தனக்கே உரியதாக்கிக் கொண்டிருக்கிறாரோ, அப்படியே, அடங்கன் முறையும் "முறை" எனும் நாமத்தைத் தனக்கே உரியதாக்கிக் கொண்டிருக்கின்றது.

"முறை எனும் நாமம் தனக்கே உரிய முந்நான்கு மறைகள்"

(1) முறை = இடைச்சொல்

முறை என்னும் சொல்லை இடைச்சொல்லாகக் கொண்டால் முற்றுப் பொருளில் வைத்துக்கொள்ளலாம்.

"தெரிநிலை தோற்றம் ஐயம் முற்று....." என்று வரும் நன்னூற் சூத்திரம் இதனை வலியுறுத்தும்.

(2) முறை = உறவு

கடவுளுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரிவிக்கும் நூல் அடங்கன்முறை. அதாவது, பதி—பசு—பாச இலக்கணங்களைக் கூறும் நூல் என்று பொருள்படும்.

(3) முறை = ஒழுக்கம்

ஒழுக்கம் = சட்டநூல். இது புண்ணியம், இது பாவம், இது செய்தால் இன்ன பலன் கிடைக்கும், என்று அறிவிக்கும் நூல் ஆனதால் சட்டநூல் ஆகிறது.

(4) முறை = ஒழுங்கு

இயமம், நியமம் முதலிய என்விதி நெறிகளைக் கற்பிக்கும் நூல் என்று பொருள்படும்.

(5) முறை = கிராமம்

கிராமம் என்பது ஊரைக் குறிக்கும் சொல். கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் அவரவருக்கு ஏற்பட்ட இல்லங்களில் அமர்ந்து, அவரவர்க்குரிய தொழில்களைச் செய்துகொண்டு, கிரமமாய்க் காலங் கழிப்பதற்கு இடமாய் உள்ளது.

கிரமம் தவறினால் கிராமம் நிலைக்காது. அதுபோல, ஒவ்வொரு ஆன்மாவும் தனக்கு ஏற்பட்ட இல்லமாகிய தேகத்தில் வந்து கொண்டு, அச்சரீரத்தினால் கிரமமாகச் செய்யக்கூடிய தொழில்களைச் செய்துகொண்டு திருவடிப் பேற்றை அடையும் வழியைத் தேடும் முறையைக் கற்பிக்கும் நூல் என்பது பொருள்,

(6) முறை = குணம்

ஆன்மாக்களுடைய குணங்களை அறிந்துகொள்ள உதவிசெய்யும் நூல். அதாவது, சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்று பிரித்து அறிந்துகொள்ள உதவியாயிருக்கும் நூல்.

(7) முறை = தரம்

மேலே கூறிய மூவகை ஆன்மாக்களுள்ளும் பக்குவ நிலையை அதாவது தரத்தைக் காட்டும் நூல். தரமாவது,—மந்ததரம்—மந்தம் —தீவிரம்—தீவிரதரம்.

(8) முறை = பழமை

இப்பொருளானது திருமுறைகளில் கூறியிருக்கப்பட்ட பொருள்கள் புதிது அல்ல பழமை என்று தெரிவிக்கிறது.

கல்லால நீழற்கீழ் இருந்து கடவுள் சொன்ன நான்கு வேதங்களும் மறைந்துபோகவே, பின் ஒருகாலத்தில் மகேந்திரமலையினின்றும் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளால் வெளிப்படுத்தப்பட்டன. அவைகளும் மறைந்துபோகவே, மறுபடியும் மூன்றும் முறையாகத் திருப்புறம்பயத்தில் கடவுள் வெளியிட்டார். அவைகளும் ஒருகாலத்தில் மறைபடவே சமயாச்சாரிகள் மூலமாக அவ்வேதங்களை வெளியிட்டார். அவ்வேதங் களே நமக்கு இப்போது உள்ளன.

சமயாசாரிகள் வேதப்பொருள்களை வரிசைப்படுத்தி முறை மிகுபாடல்களாக நமக்குக் கொடுத்துள்ளார்கள். ஆகையால், திருமுறைப் பொருள்கள் புதிதல்ல பழமையானவை என்று அப்பெயரே விளக்குகின்றது.

(9) முறை = புத்தகம்

புது + அகம் = புத்தகம். அதாவது, பழமையான வேதத்துக்குத் திருமுறை ஒரு புதிய வீடு போன்றது என்பது பொருள்.

(10) முறை = முறைமை

இப்பொருள், இன்னகாரியத்துக்கு இன்ன தேவாரப் பாக்களை ஓத வேண்டும் என்னும் முறைமையைத் தெரிவிக்கும் நூல் என்று தெரிவிக்கிறது.

அதாவது, மாலையில், காலையில், நண்பகலில், எக்காலத்திலும் ஓதவேண்டுவன இன்னின்ன தேவாரங்கள் என்பதையும்; கலியாணத்தில், கருமாதியில், உயிரடங்கும்போது ஓதவேண்டுவன இன்னின்ன பகுதிகள் என்பதையும் தெரிவிக்கும் நூல் என்பது பொருளாம்.

(11) முறை = முறையீடு

ஆன்மாக்கள் தங்கள் குறைகளை எடுத்துக்கூறி, முறையிட்டு, அக்குறைகளை நீக்கிக்கொள்ளும் வழிகளை அறிந்து கொள்ளுவதற்கு உதவியாயிருக்கும் நூல் என்பது பொருளாம்.

(12) முறை = வரிசை

வரிசை என்றால் கீர்த்தி—புகழ் என்று பொருள். அதாவது, அடியார்களுடைய கீர்த்தியைக் கூறும் நூல். திருமுறைகளில் அடியார்களுடைய புகழ் ஆங்காங்கு கூறப்பட்டிருக்கிறதே இதற்குச் சான்று.

ஆகவே, முறை என்ற சொல்லுக்கு உள்ள பன்னிரண்டு பொருள்களுக்கும் "அடங்கன்முறை" இலக்கியமாய் இருப்பது காட்டப்பட்டது.

மற்றநூல்கள் எல்லாம் ஏதோ இரண்டொரு பொருளுக்கு இணங்கி இருக்குமேயொழிய வேறின்று.

ஆகையால், முறை என்றால் "அடங்கன்முறை" என்றே கொள்ள வேண்டும்.

—

அடங்கன்முறை

திருமுறைகள் பன்னிரண்டும் ஒரே காலத்தில் உண்டானவையல்ல, கி. மு. 3100 முதல் கி. பி. 12-ஆம் நூற்றாண்டுவரை ஒவ்வொன்றாய்த் தோன்றியவை.

(1) அடங்கன்முறை என்றால் பன்னிரண்டு திருமுறைகளும் அடங்கிய புத்தகம் என்று இப்போது பொருள் கொள்ளுகிறார்கள். அப்பெயருக்கு இப்பொருள் எப்போது கிடைத்தது. முதன்முதல் "அடங்கன்முறை" என்ற தொடர்மொழிக்கு என்ன பொருள் என்று சிறிது ஆராய்வாம்.

(2) அடங்கன்முறை = கோவிற்பதிகம்—என்ற பொருள் அகராதியில் இருக்கிறது.

கோவில் என்பது சிதம்பரம்—தில்லை; இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம்—2; அப்பர் பதிகம்—8; சுந்தரர் பதிகம்—1; ஆகப் பதினொரு பதிகங்கள் உள.

சுந்தரமூர்த்திகள், அப்பர், சம்பந்தருக்கு 50 வருடங்கள் பிற்பட்டவர். ஆகையால் அப்பர், சம்பந்தர் காலத்தில் அடங்கன்முறை என்றால் அப்பர் பதிகங்கள் எட்டும் சம்பந்தர் பதிகங்கள் இரண்டுமே யாகும்.

(3) பின் சுந்தரர் காலத்தில் அவருடைய பதிகம் ஒன்றையுங் கூட்ட பதினொரு பதிகங்களே "அடங்கன்முறை" என்ற பெயரால் வழங்கப் பட்டன என்று அறிகிறோம்.

(4) பின் கி. பி. 712-ல் சமயாசாரிகளில் நான்காவதான சுந்தர மூர்த்திகள் கயிலை செல்லவே, சைன, பவுத்த மதங்கள் தலைதூக்கின. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆதிசங்கராசாரியார் அவதரித்து, இமயமுதல் குமரிவரை சைன, பவுத்த மதங்களை வென்று தம்மதத்தைப் பரவச் செய்தார்.

அக்காலத்தில் வேற்றுமத நாட்டங்கொண்ட தமிழர்கள், தேவாரச் சுவடிகளைத் தனிமையான இருட்டறைகளிலும், பாழ்மண்டபங்களிலும் போட்டு மூடிச் செல்லுக்கு இரையாக்கினர்கள்.

இப்படியிருக்க, கி. பி. 880-ல் சோழர்கள் திருப்புறம்பயம் சண்டையில் வெற்றிபெற்று, சோழர் ஆதிக்கத்தை நிலைநாட்டினர்கள்.

கி. பி. 880 முதல் கி. பி. 969 வரை சோழ அரசர்கள் சண்டையிலேயே காலத்தைக் கழித்துவிட்டார்கள். தேவாரச் சுவடிகளைப் பற்றிக் கவனிப்பார் ஒருவரும் இல்லை.

ஆதித்தன்-II (966—970 A. D.) என்பவன் திருவாரூரை இராசதானியாக்கி ஆண்டுகொண்டிருந்தபொழுது, அவன் சபைக்கு வரும் சைவப் பெரியார்கள் பலர் தேவாரப் பாக்களில் ஒன்று இரண்டு ஓதுவ

துண்டு. அப்பாக்களின் இனிமையையும், கயத்தையும், மனத்தை உருக்கும் தன்மையையும் கண்டு, தேவாரப்பாக்கள் முழுவதும் எங்கே கிடைக்கும் என்று இரண்டாம் ஆதித்தன் தேட ஆரம்பித்தான்.

தேவார ஏடுகள் சிதம்பரத்தில் பொன்னம்பலத்தின் பின்பக்கம் உள்ள அறையில் சேமிக்கப்பட்டிருக்கின்றன என்று திருநாரையூர் பொல்லாப்பிள்ளையாருடைய அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகளால் கேள்வியுற்று, சிதம்பரம்போய், தில்லைமூவாயிரவரைக்கொண்டு, அவ்வறையைத் திறப்பிக்கச் செய்து, தேவார ஏடுகளை எல்லாம் வெளியில் எடுத்துப்பார்க்க, பெரும்பகுதி செல்லால் அரிக்கப்பட்டுப் பழுதுபட்டிருந்தன.

மீதியாய் இருந்த பதிகங்கள்:—சம்பந்தர் பதிகங்கள் 384, அப்பர் பதிகங்கள் 310, சுந்தரர் பதிகங்கள் 100, ஆக 794 பதிகங்களே.

அரசன் பெரும் பகுதிகள் கெட்டுப் போயினவே என்று கவல, "இக்காலத்துக்கு வேண்டுவன மாத்திரம் வைத்துள்ளோம்" என அசரீரி ஏற்பட்டது. அரசன் ஒருவாறு தேறி, நம்பியாண்டார் நம்பிகளைக்கொண்டு அகப்பட்ட பதிகங்களை ஏழு திருமுறைகளாக வகுத்தான்.

திருமுறைகள் கி. பி. 969-ல் கண்டெடுக்கபட்டன. ஆகையால் கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் ஆதித்தன்-II காலம் முதற்கொண்டு உத்தமச் சோழர் காலம்வரை இப்போதுள்ள ஏழு திருமுறைகளே அடங்கன்முறை என்னப்பட்டன.

(5) பின் உத்தமச்சோழர் (கி. பி. 970—985) காலத்தில் சைவப் பெரியார் பலர்கூடித், தாங்கள் காடோறும் சிவபூஜையில் ஓதிவரும் திருவாசகம்—திருவிசைப்பா திருமூலர் தமிழ் மூவாயிரம் முதலிய அருட்பாக்களையும் இவ்வேழு திருமுறைகளுடன் சேர்க்க எண்ணி, உத்தமச் சோழருடைய உத்தரவுபெற்று, உத்தமச்சோழருடைய தகப்பனர் கண்டராதித்தருடைய திருவிசைப்பாக்களையும், இரண்டாம் பராந்தகச் சோழனுடைய பெண்கொடுத்த மாமனாராகிய சேதிகாட்டு அரசனை சேதிராயருடைய திருவிசைப்பாக்களையும் சேர்த்துத் திருமுறைகளைப் பத்தாக வகுத்தார்கள்.

அக்காலத்தில் கருவூர்த் தேவரைப்பற்றி ஒன்றும் தெரியாததால் கருவூர்த்தேவருடைய திருவிசைப்பாக்கள் அதில் சேரவில்லை.

ஆகையால், உத்தமச் சோழர் காலத்தில் அடங்கன்முறை என்னும் தொடர்மொழி இப்போதுள்ள பத்துத்திருமுறைகளுக்கே வழங்கிற்று.

(6) உத்தமச்சோழர் இறந்தபின் இரண்டாம் ஆதித்தனுடைய தம்பி "அருண்மொழி" என்ற இயற்பெயரை உடைய முதலாம் இராசராசன் பட்டத்துக்கு வந்து கி. பி. 985 முதல் கி. பி. 1012 வரை அரசாண்டான்.

அடங்கன்முறை ஆராய்ச்சி

கம்பியாண்டார் நம்பிகள் இரண்டாம் ஆதித்தன் காலம் முதற் கொண்டு முதலாம் இராசராசன் காலம் வரை இருந்தார்.
(956 to 1012 A.D)

இவ்வரசன் திருவாரூர்த் தியாகேசர் சந்நிதி விமானத்தைப் பொன்னால் வேய்ந்ததால் இராசராசன் என்ற பட்டத்தைப் பெற்றான்.

இவனுடைய தமயன் இரண்டாம் ஆதித்தனுக்கும் தில்லைச் சிற்றம் பலத்தைப் பொன்னால் வேய்ந்ததால் இராசராசன் என்னும் பட்டம் கிடைத்தது. ஆனால் அவன் அதைக் கீர்த்திப் பெயராக வைத்துக் கொண்டான். அருண்மொழியோ என்றால் "இராசராசன்" என்னும் பெயரைப் பட்டப்பெயராக வைத்துக்கொண்டான். முதலாம் இராச ராசன் மிகுந்த சிவபக்தன். திருமுறைகளை நாடோறும் பாராயணம் செய்துவந்தான். அதனால் அவனுக்குச் "சிவபாதசேகரன்" என்ற பட்டமுங்கிடைத்தது.

மேலே கூறிய 10 திருமுறைகளோடு சேர்த்து (1) காரைக்கால் அம்மையார் (2) ஐயடிகள் காடவர் கோன், (3) சேரமான் பெருமாள் (4) நக்கீரர் (5) கபில தேவர் (6) கல்லாடதேவர் (7) பரண தேவர் (8) இளம் பெருமானடிகள் (9) அதிராவடிகள் (10) பட்டினத்தார் (11) இறையனார் முதலியோருடைய பாடல்களை யும் இராசராசன் நாடோறும் நியமமாக ஓதிவந்தார். கனிந்த உள்ள முடையவர். அடியார்களிடத்து நனி ஆர்வமுடையவர். ஆகையால், இவ்வருட்பாடல்கள் எல்லாம் தன் தமயன் வகுத்த ஏழு திருமுறை களிலும், உத்தமச் சோழர் காலத்தில் வகுக்கப்பட்ட பத்துத் திரு முறைகளிலும் சேராதது கண்டு, நம்பியாண்டார் நம்பிகளை வரவழைத்து, அவருடன் கலந்து யோசித்தார்

அவரும் சைவர்களுக்கு மந்திரங்கள் பதினென்று ஆதலினால் திரு முறைகளும் பதினென்றாக இருக்கட்டும் என்று திருவருளை முன்னிட்டு மேலேகூறிய பதினொருவர் பாடல்களையும் ஒருமுறையாகச்செய்து பத்துத் திருமுறைகளோடு சேர்த்துப் பதினொரு திருமுறைகளாகச் செய்தார்.

பதினொராம் திருமுறையை நம்பிகள் வகுத்தபோது நம்பிகள் பாடல்கள் அதில் சேரவில்லை. ஏனென்றால், அப்போது நம்பிகள் ஒரு தலும் செய்திருக்கவில்லை.

முதலாம் இராசராசன் பதினொரு திருமுறைகளையும் செப்பேடுகளில் எழுதுவித்து ஆரூர்த்தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்தார்.

திருஞானசம்பந்தம்பிள்ளை என்கிற இராமசாமிப்பிள்ளை என்பவர் திருமுறைகளை அச்சிடும்போது இச்செப்பேடுகளுடன் ஒத்திட்டுப் பார்த்த தாகத் தம்முடைய முகவுரையில் கூறுகின்றார். அச்செப்பேடுகள் ஆரூர்த்தியாகேசர் கருவூலத்தில் இருக்கின்றன.

இதற்கப்புறம்தான் முதலாம் இராசராசன் இராசதானியைத் தஞ்சைக்கு மாற்றிக்கொண்டு, அங்கே உலகம் போற்றும் பெரியவுடையார் கோவிலைக் கட்டினது.

இக்கோவிலைப் பார்த்தால் இவ்வரசனுடைய பெரியமனதும், பரந்த அன்பும், விரிந்த நோக்கமும் வெளிப்படும். அக்கோவிலுக்கு "இராசராசேச்சுரம்" என்று பெயர்.

கருவூர்த் தேவரால் அஷ்டபந்தனம் செய்யப்பட்டது.

கருவூர்த்தேவர் இக்கோவிலைப் பற்றியும் இராசராசன் மனைவி திரைலோக்கிய சுந்தரி அம்மையார் கட்டிய கோவிலைப்பற்றியும் திருவிசைப்பாப் பாடியுள்ளார்.

இது இப்படி இருக்க, நம்பியாண்டார் நம்பிகள் பதினொரு திருமுறைகளை வகுத்தபின், திருமுறைகளை ஆராய்ச்சிசெய்து நூல்கள் செய்ய ஆரம்பித்தார்.

இதனை,

"ஆக்கியபின் திருத்தொண்டத் தொகையடைவை அருளாலே
நோக்கியபின் நாயன்மார் நுடங்கடைவும் தொழிற் பேறும்
பாக்கியத்தாலிப முகத்தோன் அருள்செய்த பகுதியினுல்
வாக்கியல் சேர் அந்தாதி நம்பி அடைவே வகுத்தார்"

என்னும் திருமுறைகண்ட புராணச் செய்யுளால் அறியலாம்.

தொகை நூலாகிய "திருத்தொண்டத்தொகை"க்குச் சிவபெருமான் ஆரூர்நம்பிக்கு அடியெடுத்துக் கொடுத்தார்.

வகைநூலாகிய "அந்தாதி"க்கு இபமுகத்தோன் காரைபூர் நம்பிக்கு நாயன்மார் நுடங்கடைவும் தொழிற்பேறும் அருள் செய்தார்.

ஆகையால், முதலாம் இராசராசன் காலத்தில் பதினொரு திருமுறைகளும் அடங்கன்முறை என்று வழங்கப்பட்டு வந்தன. அக்காலத்தில் பதினொராந் திருமுறையில் காரைபூர் நம்பிகளுடைய பாடல்கள் சேர்க்கப்படவில்லை யென்பது வெளியாகும்.

இக் காரைபூர் நம்பிகள் காலத்தில் உமாபதிசிவம் என்று பெயரை வகித்த பெரியார் ஒருவர் சைவப்புலவராய்த் திகழ்ந்தார். இவர் சந்தானாசாரியர்களில் ஒருவராகிய உமாபதிசிவம் அன்று.

சைவப் புலவராகிய உமாபதிசிவம் திருகாரைபூர் நம்பிகள் கூடவே இருந்து, திருமுறைகள் தில்லையில் கண்டெடுக்கப்பட்டது முதல் பதினொரு திருமுறைகளாக வகுக்கும்வரை நேரே பார்த்தவர். ஆனபடியால் அவ்விடயங்களை யெல்லாம் சேர்த்து ஒரு புராணமாக "திருமுறைகண்ட புராணம்" என்ற பெயருடன் பாடி முடித்தார்.

சேக்கிழார் காலத்திலோ அல்லது அவருக்குப் பின்னிட்டோ இவர் இருந்திருந்தால் தம்முடைய புராணத்தில் பன்னிரண்டாந் திருமுறையைப்பற்றிப் பாடாது இரார்.

ஆகையால், இப்புலவராகிய உமாபதிசிவம் சேக்கிழார் காலத்துக்கு முந்தியே இறந்துவிட்டார் என்று கொள்வதே பொருத்தம்.

சைவப்புலவர் உமாபதி சிவத்தினுடைய காலம் கி. பி. 940 முதல் 1012 வரை என்று தெரிகிறது.

(7) முதலாம் இராசராசன் கி. பி. 1012ல் முத்தியெய்தவே, அவன் மகன் முதலாம் இராசேந்திரன் பட்டத்துக்கு வந்தான். இவன் கி. பி 1012 முதல் கி. பி. 1042 வரை அரசாண்டான்.

இவ்வரசன் காலத்தில் சேக்கிழார் மந்திரியா யிருந்தார்

சேக்கிழார் பெருமான் முதலாங் குலோத்துங்கனுடைய மந்திரி என்று சிலரும், இரண்டாங் குலோத்துங்கனுடைய மந்திரியென்று சிலரும் தங்களுடைய நூல்களில் எழுதியுள்ளார்கள். சேக்கிழார் முதலாம் இராசேந்திரனுடைய மந்திரியென்று இலக்கண விளக்கப் பரம்பரை திரு. சோமசுந்தர தேசிகர் எழுதியுள்ளார்.

சேக்கிழார் பெருமானுடைய காலவாராய்ச்சியைப்பற்றி இறுதியில் கூறியுள்ளோம். ஆண்டு, சேக்கிழார் காலம் முதலாம் இராசேந்திரன் காலமே என்று காட்டியுள்ளோம். ஆண்டுப்பார்க்க.

முதலாம் இராசேந்திரனும் அவனுடைய தந்தையைப் போலவே சைவத்துக்குப் பெரிய தொண்டு செய்தவனுவான். எப்படி எனில், அடியார்களுடைய சரித்திரத்தைச் சேக்கிழாரைக்கொண்டு இவ்வுலகத் தாருக்குத் தொகுத்துக் கொடுத்துப் புகழ்பெற்றவன் ஆதலால்.

முதலாம் இராசேந்திரன் சிந்தாமணி முதலிய சைன காவியங்களில் காலங்கழிப்பதைச் சேக்கிழார் பார்த்து, சைன காவியங்களில் பொழுது போக்குவது வீணுகும்; இம்மைக்கும் மறுமைக்கும் பயன் யாதும் இல்லை என்று கூறி சிவனடியார்களின் சரித்திரங்களை எடுத்துக்கூற, அச்சரித் திரங்களைக் கேட்டு அரசன் ஆனந்தபரவசனுய், அச்சரித்திரங்கள் எங்கே யுள ? அந்நூலின் பெயர் யாது ? என்று கேட்கச் சேக்கிழார் பெருமான் அச்சரித்திரங்கள் எல்லாம் சுந்தரமூர்த்திகள் பாடிய "திருத்தொண்டத் தொகை"யிலும் திருநாரையூர் நம்பிகள் பாடிய "திருவந்தாதி"யிலும் பொதிந்து கிடக்கின்றன என்றுகூற, அரசன் கேட்டு உவகையுற்று, ஆனல் அச்சரித்திரங்களை யெல்லாம் விரிவாக எடுத்து ஒரு காவியமாகச்செய்து தரவேண்டுமென்று சேக்கிழாரைக் கேட்க, அவரும் 'அப்படியேயாகுக' என்று சம்மதித்து விடைபெற்று, அரசனிடத்து வேண்டிய சவுகரியங்களைப்பெற்று, சரித்திரத்தைக்

காவியமாகப் பாடுவதற்குச் சிதம்பரம் சென்றார். சென்று, சிவபெருமானுடைய திருவருளை முன்னிட்டு ஆனந்த நடராசர் சந்நிதியில் பணிந்தெழ, நடராசப்பெருமான் "உலகெலாம்" என்று அசரீரியாக அடியெடுத்துக் கொடுத்தார்.

"உலகெலாம்" என்ற அடியை முதலாக வைத்துக்கொண்டு, சேக்கிழார் பதினொரு திருமுறைகளையும் ஆராய்ந்து, அக்காலத்தில் பதினொரு திருமுறைகளிலும் சேராத கருவூர்த் தேவர் திருவிசைப்பாக்களையும், திருகாரையூர் கம்பிகள் செய்த "அந்தாதி" முதலிய பல நூல்களையும் ஆராய்ந்து, அடியார்கள் வாழ்ந்தும் சஞ்சரித்தும் வந்த இடங்களில் எல்லாம் உலவும் நிகழ்ச்சிக் குறிப்புக்களையுங்கொண்டு, திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிய பெருங்காப்பியத்தைச் செய்து முடித்தார்.

திருத்தொண்டர் புராணம் தற்காலம் பெரியபுராணம் என்ற பெயரால் வழங்கப்பெறுகிறது.

பெரிய புராணத்தைச் சேக்கிழார் பாடி முடித்ததும், முதலாம் இராசேந்திரன் தில்லைக்குப் போய் ஏனைய அரசர்களையும், புலவர், கவிஞர், அறிஞர், அறவோர்களையும் வரவழைத்து, தில்லைவாழ் அந்தணர்கள் முன்னிலையில் அரங்கேற்றிவைத்து, பெரியபுராணம் "திருமறைக்கு நிகர்" எனச் செப்பி, எல்லோரும் ஒப்புக்கொண்டபின், பெரியபுராணத்தைப் பன்னிரண்டாவது திருமுறையாக வகுக்கும்படி அரசர் சேக்கிழார் பெருமானைக் கேட்டுக்கொண்டதோடு, அதுவரை திருமுறைகளில் சேராமல் இருந்த கருவூர்த்தேவர் திருவிசைப்பாக்களையும், கம்பியாண்டார் கம்பிகளுடைய பிரபந்தங்களையும் திருமுறைகளில் உரிய இடங்களில் சேர்த்துவைக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

சேக்கிழார் பெருமானும் அரசனது ஆணையைத் திருவருட்செயல் எனக்கொண்டு கருவூர்த் தேவர் திருவிசைப்பாக்களை எட்டாம் திருமுறையிலும், கம்பிகளுடைய பிரபந்தங்களைப் பதினொராம் திருமுறையிலும் சேர்த்துத் திருமுறைகள் பன்னிரண்டாக வகுத்தார்.

ஆகையால், முதலாம் இராசேந்திரன் காலம் தொட்டு காளது வரை திருமுறைகள் பன்னிரண்டு ஆக நடைபெற்று வருகின்றன.

சேக்கிழார் பெருமான் காலத்துக்குப்பின் வந்தவரான தாயுமானவர், சாந்தலிங்கசுவாமிகள், சிவப்பிரகாசர், சிதம்பர சுவாமிகள் முதலியோருடைய பாடல்களும் திருமுறைப் பாடல்களைப் போன்று சிறந்தனவே.

முதலாம் இராசேந்திரனும் சேக்கிழாரும் செய்தது போலவே, கரந்தைத் தமிழ்ச்சங்கத்தாரும் மேலே கூறிய தாயுமானவர் முதலியோர் பாடல்களைப் பதினொராம் திருமுறையில் சேர்க்க முயற்சி எடுத்துக் கொண்டால் புகழும் புண்ணியமுமாம்.

அடங்கன்முறை ஆராய்ச்சி

(8) அடங்கன்முறை என்பது திருமுறைகள் பன்னிரண்டாக இருக்க, ஒருசாரார் அகத்தியர் தேவாரத்திரட்டே அடங்கன்முறை என்கிறார்கள்; அவர்கள்,

"தோடு கூத்தூப் பித்தா மூன்றும்
....
எண்ணரும் அடங்கல் யாவையும் உணரும்
புண்ணியம் இவைகொடு பொருந்து மென்றவன்
தனக்கருள் செய்தனன்; ககவுற அகலல்
தீதிலா அகத்தியத் திரட்டினே உலகில்
ஓதினர் அடங்கலும் ஓதினர் ஆவரே"

என்ற பாயிர அகவலே ஆதாரங் காட்டுகின்றனர்

(9) இன்னொருசாரார் "அடங்கன்முறை" என்பது, சந்தானாசாரி யர்களில் ஒருவராகிய உமாபதிசிவம் திரட்டியருளிய திருமுறை யாகும் என்பர். அம்முறையானது தேவாரப்பாக்களினின்றும் பாடல்களைப் பொறுக்கி, (1) பதிமுதுகிலே (2) உயிரவைகிலே (3) இருண்மலகிலே (4) அருளதுகிலே (5) அருளுருகிலே (6) அறியுகெறி (7) உயிர்விளக்கம் (8) இன்புறுகிலே (9) அஞ்செழுத்தருள்கிலே (10) அணைக்தோர் தன்மை எனப்பகரும் பத்துத் தலைப்பின்கீழ் திரட்டப்பட்டவை.

(10) மற்றும் சிலர் "அடங்கன்முறை" என்பது, ஒரு ஆலம் வித்து எப்படித் தன்னுள் பெரிய மரத்தை அடக்கிக்கொண்டிருக்கிறதோ, அப்படி, அடங்கன்முறையும் நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், பதினெட்டு சட்டகலைகள், ஒன்பது ஆகமங்கள், அறுபத்துநாலுகலை ஞானங்கள் இவைகளை அடக்கிக் கொண்டிருக்கிறது என்பர். எல்லாக் கலைகளையும் அடக்கிக் கொண்டிருப்பதால் அடங்கல்முறை என்றார்.

(11) வேறுசிலர் "அடங்கல்" என்பது ஒருவிதக் கிராமக் கணக்குப் புத்தகம். அரசாங்கத்தாரால் கிராமக் கணக்குப்பிள்ளைகளுக்கு ஏற் பட்ட முக்கியமான கணக்குப் புத்தகம் அடங்கல் என்பது.

அதுபோல, கடவுளாகிய பெரிய கணக்குப்பிள்ளைக்கு அடங்கன் முறை ஒரு அடங்கல் புத்தகம் ஆகும் என்பர்.

கடவுள் அந்தப் புத்தகத்தில் என்ன எழுதியிருக்கின்றார் என்றால்,

"தொழுது தூமலர் தூவித் துதித்துகின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதுங் கிழ்க்கணக் கின்னம் பரீசனே" (சு: தே)

என்றபடி ஆன்மாக்களை இருவகைப்படுத்தி எழுதியிருக்கின்றார். ஆகை யால், அடங்கன் முறை என்றால் அடங்கல் புத்தகம் என்று பொருள் என்பர்.

அடங்கன்முறை ஆராய்ச்சி

(12) அடங்கல் முறை = மனம் அடங்கல் முறையாகும் கடைசியாக. அடங்கன்முறை ' என்பதற்குப் பன்னிரு திருமுறைகளையும் முறையே படித்தவர் மனம் அடங்கல் முறையாகும் என்பதே பொருளாம்.

"கற்றுணர்ந்தார் கண்டதடக்கம்"

"கற்றதும் கேட்டதும் எதுக்காகக் கடபடமென்
றுருட்டுதற்கோ, கல்லால் எம்மான்
குற்றமறக் கைகாட்டும் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்பஞ்சிட்டை கூடவன்றே"?

என்ற பாசுரங்களால் அறியலாம்.

ஆகையால், அன்பர்களே! "அடங்கன்முறை" என்ற தொடர் மொழிக்கும் "முறை" என்ற தனிமொழிக்கும் தனித்தனியே பன்னிரண்டு பொருள்கள் உள்ளன என்பதை உணர்ந்தீர்கள்.

அடங்கன்முறையைப் பாராயணம் செய்யும் அன்பர்கள் இம்மொழிகளின் கருத்துக்களை அறிந்து, அதன்படி ஒதவேண்டும் என்னும் கருத்தால், திருவருள் இயக்க, இவ்வாராய்ச்சி எழுதப்பட்டது.

சேக்கிழார் காலம்-

I. சர்க்கார் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் இரண்டாங் குலோத்துங்கனுடைய காலத்தில், அதாவது 1136—1146 A. D.ல் சேக்கிழார் இருந்தார் என்கிறார்கள்.

இவர்களுடைய அபிப்பிராயத்தையே கோயமுத்தூர் வக்கீல் திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியாரும் கொண்டுள்ளார் (C. K. சு. முதலியார் 'சேக்கிழார்'-பக்கம் 15.)

II. திருவாளர் மகாதேவ முதலியார் தம்முடைய "பெரிய புராண ஆராய்ச்சி" என்ற நூலில் 17-ஆம் பக்கத்தில் முதலாங் குலோத்துங்கனுடைய காலத்தில் அதாவது 1070—1120 A. D -ல் சேக்கிழார் இருந்தார் என்று கூறுகிறார்.

திருவாளர் K. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L. அவர்களுக்கும் இக்கருத்தே என்பது அவர் எழுதிய "சேக்கிழார் சரித்திரம்" என்னும் நூலால் விளங்குகிறது.

III. இலக்கணவிளக்க ஆசிரியர் பரமபரை திரு. சோமசுந்தர தேசிகர் கி. பி. 1012 முதல் கி. பி. 1042 வரை அரசாண்ட முதலாம் இராசேந்திரன் காலம் என்பர் (சைவசிகாமணிகள் எழுவர் பக்கம் 119).

I. இரண்டாங் குலோத்துங்கன் காலம்தான் சேக்கிழார் காலம் என் பாருடைய கொள்கையை முதற்கண் ஆராய்வாம்.

C. K. சுப்பிரமணிய முதலியார்—"சேக்கிழார்"—18-23 பக்கம்.

"அரசாங்கக் கல்வெட்டுத்துறை ஆராய்ச்சியாளர்களில் திரு. அரங்காச்சாரியார், கிருஷ்ணசாஸ்திரியார் முதலியவர்கள் பல கல் வெட்டுக்களின் உதவிகொண்டு இரண்டாவது குலோத்துங்கரே (1123—1148 A. D.) அநபாயர் என்று சேக்கிழார் சுவாமிகள் குறிக்கும் அரசாவர் என்று தீர்க்கட்டுகின்றனர்." பக்கம் 18.

அதே பக்கத்தில், கலிங்கத்துப்பரணியில் அநபாயர் என்ற பெயர் முதலாங் குலோத்துங்கனுக்குக் கூறப்பட இல்லை என்றும், அதனால், பரணியில் கூறப்பட்ட முதலாங் குலோத்துங்கன் வேறு, சேக்கிழார் கூறுகின்ற அநபாயர் வேறு என்று துணியலாம் என்றும், இரண்டாங் குலோத்துங்கனுக்கு அநபாயர் என்ற பெயர் கல்வெட்டுகளில் பெரும் பான்மையாய் வழங்கக் காண்கிறபடியால் இரண்டாங் குலோத்துங்கனே சேக்கிழார் கூறிய அநபாயர் என்றும் முடிவுகட்டுகிறார்.

19-வது பக்கத்தில், 'மூன்றாவது குலோத்துங்கர் ஆட்சி, 4-வது ஆண்டிலே (1178 A. D.) குலோத்துங்கச் சோழவளநாட்டிலே, குன்றத் தூர் காடு சேக்கிழார் பாலறுவாயர் களப்பாளர் ஒரு நந்தா விளக்குத்தானம் செய்தமை தெரிகின்றோம். (தஞ்சை 4082-4045-1912 கோட்டூர்ச் சாசனம்) இந்தப் பாலறுவாயர் சேக்கிழார் சுவாமிகளது தம்பியார் என்று தெரிகிறது. இந்தச் சாசனத்தில் வரும் சேக்கிழார் என்பது குடிப் பெயர். பெரியபுராணம் பாடியபின் சேக்கிழார் சுவாமிகள் துறவு பூண்டனர் என்றும், அவருக்குப்பின் அவர் தம்பியார் பாலறுவாயரை அவரது உத்தியோகத்தில் அரசன் அமர்த்திக்கொண்டார் என்றும் அறிந்தோம். அவர் மூன்றாவது குலோத்துங்கர் காலத்தில் வயோதிகராய் இருந்து வாழ்ந்து இந்தச் சாசனத்தில் கண்ட தானம் செய்தார் ஆதல் வேண்டும். எனவே, இவ்விரு சகோதரர்களும் இரண்டாவது குலோத் துங்கர் காலத்தில் வாழ்ந்தார் என்று கூறுதல் பொருத்தமுடைத்தாம். இக்காரணம் பற்றியே முதல் குலோத்துங்கர் காலத்தில் இவர்கள் வாழ்ந் திருத்தல் கூடாதாகும்.

தொண்டைநாட்டுக் களத்தூர் திருவாலீக்கோவிலில் கண்ட மூன்று சாசனங்களில் மிக முக்கியமான சில பொருள்கள், அதாவது, இரண்டாவது குலோத்துங்கர் ஆட்சி 12-ஆம் ஆண்டு, 293-ஆம் நாள் பொறிக்கப்பெற்ற உத்திரவுகள் கிடைக்கின்றன. இவற்றின்படி சிற்சில நிலங்களை அந்த அரசர் வெவ்வேறாகத் தொகுத்துக் குலோத்துங்கச் சோழன் திருநீற்றுச் சோழனல்லூர்—குலோத்துங்கச் சோழன் திருத்தொண்டத் தொகை நல்லூர்—அநபாயனல்லூர் என்று பேரிட்டுத் தானம் செய்தமை தெரிகின்றோம்.

இந்த உத்திரவுகளைத் திருமந்திர வோலை உத்தியோகம் பூண்ட, அநபாய மூவேந்த வேளான் என்பார் அந்நாட்டுத் தலைவராகிய தொண்டை மான் என்பாருக்குத் தெரிவித்திருக்கிறார்.''

* * * * *

'' திருப்புறம்பயம் (1927-350) கல்வெட்டினால் விக்கிரம சோழவள நாட்டின் அரசரான குலோத்துங்கர் சிதம்பரம் பேரம்பலம் பொன் வேய்ந்தமை தெரிகின்றது.

இந்நாட்டின் பெயர் விக்கிரம சோழவளநாடு எனப்பெற்றிருப்பதனால் இவ்வரசர் அவர் மகனுகிய இரண்டாவது குலோத்துங்கரே ஆதல் வேண்டும்.''

இவ்வாறு, திருவாளர் C. K. சு. முதலியார் அவர்களும் சாசன ஆராய்ச்சியாளர்களும் இரண்டாம் குலோத்துங்கரே அநபாயர் என்றும், பெரியபுராணத்துள் வைக்கப்பெற்றவர் என்றும், அவரது காலமே சேக்கிழார் காலம் என்றும் துணிகின்றார்கள்.

இவர்கள் கொள்கைக்கு இவர்கள் வைத்துக்கொண்ட காரணங்களாவன :—

(அ) கலிங்கத்துப் பரணியில் முதலாங் குலோத்துங்கனுக்கு அநபாயன் என்ற பெயர் காணப்படாமை.

(ஆ) இதுவரை வெளிவந்துள்ள கல்வெட்டுகளில் இரண்டாங் குலோத்துங்கனையே அநபாயன் என்று குறிக்கப்படுவது.

(இ) தஞ்சை ஜில்லா கோட்டூர் சாசனங்கள் 1912-ஆம் வருடத்திய 4045—4082 நெம்பரில் குன்றத்தூர் பாலசுவாயர் கி. பி. 1182-ல் ஒரு சந்தாவிளக்குத் தானம் செய்தமை.

(ஈ) தொண்டைநாட்டுக் களத்தூர் திருவாலீசுவரர் கோவில் சாசனம் ஒன்றில் இரண்டாங் குலோத்துங்கன் அநபாயநல்லூர் என்று பேரிட்டு ஒரு ஊரைத் தானம் செய்தமை.

(உ) சிதம்பரம் பேரம்பலம் பொன் வேய்ந்தவர் இரண்டாங் குலோத்துங்கர் என்று திருப்புறம்பயம் (1927—350) கல் வெட்டால் அறிந்தமை.

ஆகிய காரணங்கள் ஐந்தே.

இக்காரணங்களை ஒவ்வொன்றுக எடுத்துக்கொண்டு ஆராய்வாம்:—

(அ) அநபாயன் என்ற பெயர் முதலாங் குலோத்துங்கனுக்குக் கலிங்கத்துப்பரணியில் கூறப்படாததால் அநபாயன் என்பவர் முதலாங் குலோத்துங்கன் அல்ல என்னும் அவர்கள் கொண்ட முடிவு அவ்வளவு பொருத்தமில்லை.

கலிங்கத்துப்பரணி என்பது முதலாங் குலோத்துங்கனுடைய கலிங்கநாட்டு வெற்றியைக் குறித்துப் பாடிய நூல். அதில் முதலாங் குலோத்துங்கனுடைய கீர்த்திப் பெயர்கள் எல்லாம் கூறப்பட்டிருக்கின்றன என்று கூறமுடியாது. மேலும் முதலாங் குலோத்துங்கனுடைய பரியாயப் பெயர்களையெல்லாம் கூறவந்த நிகண்டுநூல் அல்ல. கட்டாயமாய் பரணியில் எல்லாப் பெயர்களையும் கூறவேண்டுமென்ற நியதியுங் கிடையாது. ஆகையால், அது ஒரு காரணமாகக் கொள்ளுவது பொருந்தாது. முதலாங் குலோத்துங்கனுக்கு ஏழாம் விஷ்ணுவர்த்தனன் என்றும், நான்காம் கரிகாலன் என்றும் பெயர்கள் உண்டு. அப்பெயர்களைக் கலிங்கத்துப் பரணியில் கூறக்காணோம். அதுபோல் அநபாயன் என்ற பெயர் விட்டுப்போயிருக்கலாம்.

(ஆ) அநபாயன் என்பது சோழர்களுக்கு உள்ள ஒரு பொதுப்பெயர். இரண்டாங் குலோத்துங்கனுக்கு அப்பெயர் சில கல்வெட்டுகளில் வழங்கக் காண்கிறோம். இனிமேல் அகப்படும், அல்லது இனிமேல் வெளிப்படும், கல்வெட்டுகளில் ஏனைய சோழர்களுக்கும் அப்பெயர் வழங்கக் காணலாம். அதனாலேயே, சேக்கிழார் குறித்த அநபாயன் இரண்டாங் குலோத்துங்கனே என்று சாதிக்க முடியாது.

(இ) தஞ்சை ஜில்லா கோட்டூர் 4045—4082-வது சாசனங்களில் "சேக்கிழார் பாலறாவாயர் களப்பாளர்" என்பவர் ஒரு நந்தாவிளக்குத் தானம் செய்ததாகக் குறிக்கப்பட்டு இருக்கிறது இத்தொடர் பாலறாவாயரைக் குறிக்கவில்லை. பாலறாவாயரின் மகனைக் குறிக்கிறதே யொழிய வேறின்று. இக்காலத்திலும் ஒருவன் தன்னுடைய முழுப் பெயர் எழுதவேண்டுமானால் முதலில் குடிப்பெயரும், பிறகு தன் தந்தையின் பெயரும், பிறகு தன்பெயரும் தொடர்ந்து எழுதக் காண்கின்றோம். அதுபோல, சேக்கிழார் என்பது குடிப்பெயர்—பாலறாவாயர் என்பது தந்தையின் பெயர்—களப்பாளர் என்பது தானம் செய்த பாலறாவாயரின் பிள்ளையின் பெயராக அமைந்திருக்கிறதே யொழிய வேறில்லை. சாசன ஆராய்ச்சிக்காரர் பாலறாவாயர் களப்பாளர் என்பவரை பாலறாவாயராகவே எண்ணிக்கொண்டதால் வந்த தவறேயாகும். ஆகையால் அவர்கள் மூன்றாவதாகக் கூறிய காரணமும் பொருத்தமில்லை.

(ஈ) இரண்டாம் குலோத்துங்கன் "அநபாயநல்லூர்" என்று பேரிட்டு ஒரு ஊரைத் தானம் செய்திருக்கலாம். அதனாலேயே, சேக்கிழார் கூறிய அநபாயன் அவன்தானென்று நிலைநாட்டமுடியாது. ஏனென்றால், அநபாயன் என்பது எல்லாச் சோழ அரசர்களுக்கும் உள்ள ஒரு பொதுப்பெயர் ஆனதால் எந்த அரசன் என்று கூறமுடியாது.

(உ) 1927-ல் வெளிவந்த 350-ஆம் நெம்பர் புறம்பயம் கல்வெட்டால் "விக்கிரமச்சோழவளநாட்டின் அரசரான குலோத்துங்கர் சிதம்பர பேரம்பல பொன்வேய்ந்தார்" என்று தெரிகிறதே யொழிய, இன்ன குலோத்துங்கர் என்று தெளிவாக இல்லை.

இரண்டாங் குலோத்துங்கனுடைய தகப்பன் மாத்திரம் "விக்கிரமச் சோழன்" என்ற பெயரை உடையவனுய் இருக்கவில்லே. முதலாம் இராசேந்திரனுக்கும் "விக்கிரமச்சோழன்" என்ற பெயர் உண்டு. ஆகை யால் இரண்டாங் குலோத்துங்கனுடைய தகப்பன் தான் விக்கிரமன் என்று உறுதிகூற முடியாது. முதலாம் இராசேந்திரனேயும் அக்கல் வெட்டுக் குறிக்கும்.

ஆகையால், மேலே கூறிய ஐந்து காரணங்களாலும் சேக்கிழார் காலம் இரண்டாங் குலோத்துங்கன் காலந்தான் என்று கூற முடியாது. அக்காரணங்கள் எல்லாம் அவ்வளவு பொருத்தமாயில்லே. உத் தேசமாய்ச் சொல்வதற்குங்கூட அவைகளில் வன்மை இல்லே.

II. இனி, இரண்டாவது கொள்கையைப்பற்றிச் சிறிது ஆராய் வாம்.

"திருவாளர் வா. மகாதேவ முதலியாருடைய "பெரியபுராண ஆராய்ச்சி"ப் புத்தகம் பக்கம் 17:—

அநபாயச் சோழன் என்பான் முதலாங் குலோத்துங்கன் என்ப.

"சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லேத்திருவெல்லே
பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறு என்றும் புவிகாக்கும்
மன்னர் பெருமான் அநபாயன் வருந்தோன் மரபின் முடிசூட்டும்
தன்மை நிலவு பதியைந்தின் ஒன்றாய் நீடுந்தகைத் தவ்வூர்"

என்னும் திருப்பாவும் அதனே வலியுறுத்தும் என்க. அவன் காலம் 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியென்று அறிஞர் தக்க ஏதுக்கள் கொண்டு வரையறுத்தனராகலின் ஆசிரியர் காலம் சற்றேறக்குறைய கி. பி. 1070 எனக்கொள்க" என்று கூறுகிறூர்.

இதில் அவர் அபயன்—குலோத்துங்கன்—அநபாயன் என்று சேக்கி ழார் குறிப்பிட்ட அரசன் முதலாங் குலோத்துங்கன் தான் என்பதற்குக் காரணங்கள் கூருமல் "அநபாயன் என்பான் முதலாங் குலோத்துங்கனே" என்று மேலே கூறிய பாட்டைக் காட்டுகின்றூர். இது எவ்வளவு தூரம் வலியுடைத்தென்று இதைப் படிப்பவர்களே அறிந்துகொள்ள லாம்.

III. இனி மூன்றுவது கொள்கையை ஆராய்வாம்: அதாவது சேக்கிழார் காலம் முதலாம் இராசேந்திரன் காலம் என்பது.

சேக்கிழார் தம்மை ஆதரித்த சோழனேப்பற்றிப் பெரியபுராணத் தில் எவ்வாறு கூறுகிறூர்:—

(1) மேயவிவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேயவன் திருப்பேரம்பலம் செய்ய
தூய பொன்னணி சோழன் நீடூழியார்
ஆய சீர் அநபாயனரசனை (பெரி-பா-8)

(2) மெய்யொளி தழைக்கும் தூய்மையினுலும்
வென்றி வெண்குடை அநபாயன்
செய்ய கோலபயன் திருமனத்தோங்குச்
திருக்கயிலாயநீள் சிலம்பு (பெரி-திருமலை-12)

(3) பொற்றடம் தோளால் வையம் பொதுக்கடிந்தினிது காக்கும்
கொற்றவ னநபாயன்பொற் குடைநிழற் குளிர்வதென்றுல்
மற்றதன் பெருமை கம்மால் வரம்புற விளம்பலாமோ
(பெரி-நாட்டு-35)

(4) மன்னுசீர் அநபாயன் வழிமுதல்
மின்னுமாமணிப் பூண்மனு வேந்தனே (பெரி-மது-13)

(5) சென்னி வெண்குடை நீடநபாயன் திருக்குலம்
புகழ்பெருக்கிய சிறப்பின் (பெரி-இயற்பகை-1)

(6) மன்னிய அநபாயன் சீர்மரபின் மாநகரமாகும்
தொன்னெடுங் கருவூர்..... (பெரி-எறி-2)

(7) சென்னி அபயன் குலோத்துங்க சோழன் தில்லைத்திருவேல்லை
பொன்னின் மயமாக் கியவளவர் போரேறென்றும் புளிகாக்கும்
மன்னர்பெருமான் அநபாயன் வருந்தான்மரபின் முடிசூட்டும்
தன்மைநிலவு பதிஐந்தின் ஒன்றுய் நீடுந் தகைத்தவ்வூர்
(பெரி-சண்டே—8)

(8) வையம்புரக்கும் தனிச் செங்கோல் வளவர்
பொன்னித் திருநாட்டு (பெரி-நமிநந்தி—1)

(9) சென்னி நீடநபாயன் திருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனர் புகழ்ச்சோழர் எனப் பொலிவார்
(பெரி-புகழ்—8)

இப்பாசுரங்களில் எல்லாம் சேக்கிழார் பெருமான் சோழனை இன்னர் மகனென்று குறித்தார் இல்லை; சோழனுடைய பட்டாபிடேகப் பெயரை யாவது குறித்தார் இல்லை; சோழனுடைய மறுபெயர்கள், அதாவது, சோழர்குலத்துக்கே பொதுவான பெயர்களை மாத்திரம் குறித்திருக் கின்றர். அவையாவன :—

(1) அநபாயன், (2) அபயன், (3) சென்னி, (4) குலோத்துங்கன்.

ஆனல், தம்மை ஆதரித்த சோழவரசன் செய்த சில குறிப்பான செய்தி களைக் கூறியிருக்கின்றர். அவையாவன :—

(1) சிதம்பரத்தில் திருப்பேரம்பலத்தைப் பொன்னல் வேய்ந்தது.

(2) தில்லைத்திருவேல்லை பொன்னின் மயமாக்கியது.

(3) இமயமுதல் குமரிவரை தனிச் செங்கோல் நடத்தியது.

இனிச் சேக்கிழார் புராணம் பாடிய உமாபதிசிவம் சேக்கிழார் காலத்துச் சோழவரசனைப்பற்றி என்ன கூறுகிறர் என்று பார்க்கலாம்.

தத்து பரிவளனுந் தன் செங்கோ லோச்சுந் தலைமை
அளித்தவர் தமக்குத் தனது பேரும்
உத்தமச் சோழப் பல்லவன்றனென்று முபர்பட்டமுங்
கொடுத்திட..... (சேக். பு—18)

இம்பர்புகழ் வளவன் அரசுரிமைச் செங்கோல்
இமசேது பரியந்த மியற்றுநாளில் (சே. பு.—19)

வளவனுங் குண்டமண்புரட்டுத் திருட்டுச் சிந்தாமணிக்
கதையை மெய்யென்று வரிசைகூர (சே. பு.—21)

இப்பாசுரங்களால் :—

(4) உத்தமச்சோழப்பல்லவன் என்ற தனது பேரை சேக்கிழாருக்கு ஈந்த அரசனுக்கு "உத்தமச்சோழப் பல்லவன்" என்ற பட்டம் இருக்க வேண்டும்.

(5) சேக்கிழார் காலத்து அரசன் 'இம சேது' பரியந்தம் அரசாட்சி செய்திருக்கவேண்டும்.

(6) அவ்வரசன் "சிந்தாமணி" நூலே மெய்யென்று கம்பி அதைப் படிப்பதிலேயே காலங்கழித்து, சைனர்களுக்கும் சைனப் பள்ளிகளுக்கும் வரிசைகள் பல செய்தவனுயிருக்கவேண்டும்.

இவைகளைக்கொண்டு சோழஅரசன் இன்னன் என்று தீர்மானிப்பது சுலபமாகும். இவைகளை ஆராயப் புகுமுன் விவாதத்திற்குரிய மூன்று சோழ அரசர்களுடைய மறுபெயர்களை இதுவரை கல்வெட்டுகளிலும் சாசனங்களிலும், இலக்கியங்களிலும் கண்டபடி கீழே தருகின்றேன்.—

(1) முதலாம் இராசேந்திரன் (1012-1042 கி. பி.)

1.	கங்கைகொண்டசோழன்	7.	இராசேந்திர சிங்கன்
2.	உத்தமச்சோழன்	8.	அநபாயன்
3.	மதுராந்தகன்	9.	அபயன்
4.	விக்கிரமச் சோழன்	10.	குலோத்துங்கன்
5.	முடிகொண்டசோழன்	11.	கடாரங் கொண்டான்
6.	பண்டிதச்சோழன்	12.	ஈழங்கொண்டான்

(2) குலோத்துங்கன் I. (1070-1120 கி. பி.)

1.	இராசேந்திரன்-II	8.	உலகுய்யவந்தான்
2.	அபயன்	9.	இராசகேசரி
3.	விஜயதரன்	10.	பரகேசரி
4.	ஜயதுங்கன்	11.	சுங்கம்தவிர்த்தசோழன்
5.	விருதராசபயங்கரன்	12.	திரிபுவனதேவன்
6.	கரிகாலன்-IV	13.	உபயகுலஉத்தமன்
7.	இராசநாராயணன்	14.	விஷ்ணுவர்த்தனன்-VII

(3) குலோத்துங்கன்-II (1136—1146 கி. பி.)

1. அநுபமன்
2. அநபாயன்
3. ஜயதுங்கன்
4. மன்னர்தீபன்
5. கலிகடிந்தசோழன்
6. அபயன்
7. கிருமிகண்டசோழன்
8. திருநீற்றுச்சோழன்
9. சென்னி
10. அகளங்கன்
11. சிவபாத சேகரன்

உமாபதி சிவாசாரியார் கூறிய மூன்று குறிப்புகளைக் கொண்டும், "உத்தமச்சோழன்" என்ற தனது பேரை சேக்கிழாருக்குக் கொடுத்தவன் யாரென்றால், "உத்தமச்சோழன்" என்ற பெயரையுடைய முதலாம் இராசேந்திரனே என்று ஏற்படுகிறது.

ஏனென்றால், "உத்தமசோழன்" என்ற பெயர் முதலாங் குலோத்துங்கனுக்காவது, இரண்டாங் குலோத்துங்கனுக்காவது கிடையாது.

உத்தமசோழன் என்ற பெயருடன் பல்லவன் என்ற சொல்லைக் கூட்டுவானேன் என்றால், பல்லவராச்சியமாகிய தொண்டைநாட்டில் தனக்குக் கீழ்ச் செங்கோலோச்சும்படி செய்ததால் என்க; இதனை,

"தத்துபரிவளவனும் தன் செங்கோலோச்சும் தலைமையளித்து
அவர் தமக்குத் தனது பேரும்
உத்தமச்சோழப்பல்ல வன்ற னென்று முயர்பட்டமுங்
கொடுத்திட"

என்ற செய்யுளால் அறியலாம்.

இனி, இரண்டாவது "இமசேது பரியந்தம்" அரசுபுரிந்தவன் முதலாம் இராசேந்திரனே".

வடநாட்டு அரசர்களை வென்று இமயமலையில் தன் மூதாதையைப் போலப் புலிக்கொடியை நாட்டினதால் "கங்கைகொண்ட சோழன்" என்ற பட்டத்தையும், சேதுவைத் தாண்டி இலங்கையாகிய ஈழநாட்டையும் அடிப்படுத்தியதால் (S. I. I. No. 29) "ஈழங்கொண்டான்" என்ற பட்டத்தையும் அடைந்தவன் முதலாம் இராசேந்திரனே; மற்ற இருவரல்ல.

இனி, மூன்றாவது சிந்தாமணி நூலை மெய்யன்று நம்பி அதைப் படிப்பதில் காலங்கழிப்பதோடு நில்லாமல் சைனர்களுக்கும் சைனப் பள்ளிகளுக்கும் தானம் வழங்கினவன் யாரென்று ஆராய்வாம்:—

முதலாம் இராசேந்திரன் கலாவிநோதன் என்பதற்கு அவனுடைய "பண்டிதச்சோழன்" என்ற பட்டமே சான்று பகரும்.

இதனால் இவன் தமிழில் புலமைவாய்ந்தவன் என்றும், சிந்தாமணி முதலிய காவிய நலன்களை நுகர்வதில் இணையற்றவன் என்றும் ஏற்படுகிறது.

அடங்கன்முறை ஆராய்ச்சி

முதல் இரண்டு குலோத்துங்கர்களுக்குப் பிற பட்டப்பெயர்கள் ஒன்றுமில்லை.

மேலும், இரண்டாங் குலோத்துங்கன் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தரால் தயார் செய்யப்பட்ட ஒரு அரசப்புலவர். சைவப்பற்று மிக்கவர். சிறுவயது முதற்கொண்டே சைவநூல்களைத் தவிர வேறு ஒன்றையுங் கல்லாதவர். அதனாலேயே அவருக்குச் "சிவபாத சேகரன்" —"திருநீற்றுச்சோழன்" என்ற பட்டப்பெயர்கள் ஏற்பட்டன. சைவநூல் களைத் தவிர சைனநூல்களை ஏறெடுத்துப் பார்க்காதவர்.

தவிரவும் ஒட்டக்கூத்தரையே தனக்கு ஆசிரியராகக் கொண்டவர்.

"ஆடுங்கடைமணி நாவசையாமல் அகிலமெல்லாம்
நீடுங்குடையிற் றரித்தபிரான் இந்த நீணிலத்தில்
பாடும் புலவர் புகழ் ஒட்டக்கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென்றே யெனைச் செப்புவரே"

ஆகையால், சேக்கிழாரை ஆசிரியராகக்கொண்ட அநபாயன் வேறு, ஒட்டக்கூத்தரை ஆசிரியராகக்கொண்ட அநபாயன் வேறு என்று ஏற்பட வில்லையா?

"செறிமதயானைச் சிரத்திற் பொற்கலத்தோடெடுத்துத்
திருமுறையிருத்தியபின் சேவையர் காவரை
முறைமைபெற வேற்றி அரசனுங் கூடவேறி முறைமையினால்
இணைக்கவரி துணைக்கரத்தால் வீச
மறைமுழங்க விண்ணவர்கள் கற்பகப்பூமாரி மழைபொழியத்
திருவீதி வலமாக வருப்போது
இறைவர் திருவருளை நினைந்து அடலரசர் கோமான்
இதுவன்றே நான்செய்த தவப்பய னென்றிசைத்தான்."

இவ்வாறு சேக்கிழாரை ஆசிரியராகக்கொண்ட அரசன் மறந்தும் வேறு ஒரு புலவரை, அவர் ஒட்டக் கூத்தராயிருக்கட்டும், வேறு யாரா யிருக்கட்டும், ஆசிரியராகக் கொள்வானே?

ஒட்டக்கூத்தன் பதாம்புயத்தைச் சூடும் குலோத்துங்கன்" என்று தன்னைச் சிறப்பித்துக்கொண்ட இரண்டாங் குலோத்துங்கன், சேக்கி ழாரை நேரே கண்டிருப்பான் ஆனால், அவரைப்பற்றி ஒரு வரியாவது பாடாமல் இருப்பானே? மேலும் அவன் அவர் பதாம்புயத்தைச் சூடுவதைவிட்டுப் பரதனைப்போல் அவர் பாதுகையை அல்லவா சூடிக் கொண்டிருப்பான்.

அல்லாமலும், முதல், இரண்டாங் குலோத்துங்கர்கள் சைன பவுத்த மதங்களுக்கு யாதொன்றும் செய்யவில்லை; அவர்கள் இருவரும் சீவகனுடைய சரித்திரமாகிய சிந்தாமணியைப் படித்ததாக ஒன்றும் தெரியவில்லை.

ஆனால், முதலாம் இராசேந்திரனை சைனபவுத்த சமயங்களை ஆதரித்து, அச்சமயங்களுக்கு வேண்டியவைகளைச் செய்து, சீவகன்

சரித்திரத்தைப் படிப்பதிலும் கேட்பதிலும் பொழுது போக்கினவன் என்று லீடன் செப்பேடுகள் கூறுகின்றன. (சைவ சிகாமணிகள் இருவர். பக்கம் 118)

ஆகையால், சிந்தாமணிக் கதையில் காலங்கழித்தவன் முதலாம் இராசேந்திரனே.

இதுவரை, உமாபதிசிவாசாரியார் கூறிய மூன்று குறிப்புகளும் முதலாம் இராசேந்திரனையே குறிக்கின்றன என்று காட்டினாம்.

இனிச் சேக்கிழார் கூறிய மூன்று குறிப்புக்களை எடுத்துக் கொள்ளுவாம் :—

(1) சிதம்பரம் பேரம்பலத்தைப் பொன் வேய்ந்தது
(2) தில்லைத்திருவெல்லை பொன்னின் மயமாக்கியது
(3) இமயம் முதல் குமரிவரை தனிச்செங்கோல் நடத்தியது

(1) 1920-ஆம் வருடம் வெளியான 350 எண் கல்வெட்டுச் சாசனத்தில் "விக்கிரமச் சோழவளநாட்டின் அரசரான குலோத்துங்கன் சிதம்பரம் பேரம்பலம் பொன்வேய்ந்தார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

முதலாம் இராசேந்திரனுக்கு விக்கிரமச் சோழன் என்ற பட்டமும் உண்டு. அதனால் அவன் கீழுள்ள நாட்டிற்கு "விக்கிரமச்சோழவளநாடு" என்று பெயராயிற்று.

இனிக் குலோத்துங்கன் என்ற பெயர் அவனுக்கு உண்டா என்று பார்ப்போம்:—

முதலாம் இராசேந்திரன் கீழைச்சளுக்கிய அரசனாகிய விமலாதித்தனோடு போர்புரிந்து, வேங்கிநாட்டை அடிப்படுத்தி, விமலாதித்தனைத் தஞ்சைக்குக் கொண்டுவந்து சிறைக் கோட்டத்தில் வைத்தான்.

விமலாதித்தன் அப்போது கலியாணமில்லாத இளைஞனாயிருந்தான். அவனைச் சண்டையில் இராசேந்திரன் கொன்று இருப்பானேல் கீழைச் சளுக்கிய குலம் அடியோடு அழிந்துபோயிருக்கும்.

ஆனால் ஊழ்வசத்தால் இராசேந்திரனுடைய சகோதரி குந்தவ்வை-II விமலாதித்தன்மேல் காதல்கொள்ள, இராசேந்திரன் குறிப்பறிந்து, விமலாதித்தனைச் சிறையினின்றும்விட்டு, தன் தங்கையை அவனுக்குக் கொடுத்து, மணத்தைமுடித்து, வேங்கிநாட்டையும் சீதனமாகக் கொடுத்து, வேண்டும் வரிசைகளும் கொடுத்து அனுப்பினான்.

இதனால், இராசேந்திரனுக்கு "குலோத்துங்கன்" (=சளுக்கிய குலத்தைத் தழைக்கச் செய்தவன்) என்ற பெயர் ஏற்பட்டது.

ஆகையால், திருப்புறம்பயம் கல்வெட்டில் குறிக்கப்பட்ட குலோத்துங்கன் முதலாம் இராசேந்திரனே யாவன்.

இனி, இரண்டாவதாக, இவன் தில்லைத் திருவெல்லையைப் பொன்னின் மயமாக்கியதற்குச் சேக்கிழார் வாக்கைவிட வேறு சாசன ஆதாரங்கள் இதுவரை ஒன்றும் கிடைக்கவில்லை. இனிமேல் வெளியாகும் சாசனங்களில் ஒருவேளை கிடைக்கலாம் அதுவரை சேக்கிழார் வாக்கியத்தையே பிரமாணமாகக் கொண்டு அது முதலாம் இராசேந்திரனையே குறிக்கிறதாகக் கொள்வோமாக.

இனி, மூன்றாவதாக, முதலாம்இராசேந்திரன் இமசேது பரியந்தம் காடுகளைவென்று, கங்கைகொண்டான், ஈழங்கொண்டான் என்ற பட்டப் பெயர்களை வகித்தான் என்று முன்னர்க் கூறினும்.

இதல்லாமல், இவன் ஜாவா, பர்மா, சீயம் முதலான இடங்களைச் செயித்து, "கடாரங்கொண்டான்" என்ற பட்டத்தையும் பெற்றான்.

முதல் இரண்டாம் குலோத்துங்கர்களுக்கு இப்பட்டம் கிடையாது. இவர்கள் காலத்தில் நாடு சென்னைராஜதானிக்கு அப்பாற் பரவவில்லை.

கி. பி. 1024—26ல் இராசேந்திரன்-I பர்மாவைச் செயித்து "பெகு" என்னும் இடத்தில் ஒரு கற்றாணில் சாசனம் வெட்டுவித்து பெரிய கோர்ட்டுக்கு முன்னுக நாட்டியுள்ளான். அக்கற்றாண் இன்றும் நின்றுநிலவுகிறது.

அதற்கு அடுத்த ஆண்டில், அதாவது, கி. பி. 1027-ல் திருவாரூருக்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவில் உள்ள "கடாரங் கொண்டான" என்னும் கிராமத்தை நிர்மாணம் செய்து, கோவில் உண்டுபண்ணி, கல்லில் சாசனம் எழுதுவித்து, பர்மா வெற்றியைக் கொண்டாடியுள்ளார்.

ஆகையால், சேக்கிழார் கூறிய மூன்றாவது குறிப்புக்கும் பொருத்தமானவன் முதலாம் இராசேந்திரனே.

முதலாம் இராசேந்திரனுக்கு அநபாயன் என்ற பெயர் சாசனங்களில் இதுவரை காணப்படாதபோதிலும், இலக்கியங்களில் வழங்கப்படுகிறது.

தண்டியலங்காரம் மேற்கோள் செய்யுள் ஒன்றில்,

"தண்க விகைக்
கொங்கார் அலங்கல் அநபாயன் கொய்பொழில்சூழ்
கங்காபுர மாளிகை"

என்று திரு. சோமசுந்தர தேசிகர் காட்டுகின்றார்.

கங்காபுர மாளிகை என்பது கங்கைகொண்ட சோழமண்டபம்; கி. பி. 1036-ல் தஞ்சை ஜில்லாவில் "எண்ணையிரம்" என்ற கிராமத்தில் முதலாம் இராசேந்திரன் "கங்கைகொண்ட சோழமண்டபம்" என்ற கல்லூரியைக் கட்டி, அதில் 14 ஆசிரியர்களுக்கும், 340 மாணவர்களுக்கும் உணவு விடுதி ஏற்பாடுசெய்து, வசிக்க உறையுள்களும் வகுத்து,

அதற்கு வேண்டிய மானியங்களும் விட்டு, செப்பேடு செய்து கொடுத்து அக்கல்லூரியில் தேறினவர்களுக்குப் பொற்பூவும் பட்டமும் அளித்துவர ஏற்பாடு செய்துள்ளான்.

ஆகையால், அநபாயன் என்ற பெயர் முதலாம் இராசேந்திரனுக்கு உண்டு என்பது விளங்கும்.

ஆகையால், சேக்கிழார் கூறிய சென்னி—அபயன்—அநபாயன்-குலோத்துங்கன் என்பவன் முதலாம் இராசேந்திரனே.

முதல்-இரண்டு-மூன்றாம் குலோத்துங்கர்கள் தங்களுக்குத் தங்கள் மூதாதையாகிய முதலாம் இராசேந்திரனுடைய சிறப்புப்பெயராகிய குலோத்துங்கன் என்னும் பெயரைப் பட்டாபிடேகப்பெயராக வைத்துக் கொண்டார்கள். உண்மையாகவே சளுக்கிய குலத்தை உத்தாரணம் செய்தவன் முதலாம் இராசேந்திரனே.

இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் குடிவழிப்பட்டியைப் பார்த்தால், சோழவம்சம் அதிராசேந்திரன் கோப்பெருஞ்சிங்கன் என்பவனை ஜனங்கள் கொன்றுவிட்டதோடு ஆண்சந்ததியற்றுப்போனது தெரியும் அவனுக்கப்புறம் முதலாம் இராசேந்திரன் மகள் அம்மங்கையின் குமாரன் முதலாம் குலோத்துங்கன் பட்டத்துக்குவந்து கி. பி. 1070 முதல் கி. பி. 1120 வரை அரசாண்டான்

குன்றத்தூர்ப் பக்கம் உள்ள திருநாகேசுரம் கல்வெட்டு ஒன்றில், "அநபாயனுக்குப்பின் வீரராசேந்திரன், கோப்பெருஞ்சிங்கச் சோழன் (=அதிராசேந்திரன்) குலோத்துங்கன் இவர்கள் ஆண்டார்கள்" என்று காணப்படுகிறது.

வீரராசேந்திரன் என்பான் முதலாம் இராசேந்திரனுடைய 6-வது மகன்.

சோழர் வமிசத்தில் முதல், இரண்டாம் குலோத்துங்கர்களுக்கு அப்பால் வீரராசேந்திரன் என்ற பெயருள்ள அரசர்களே கிடையாது. ஆகையால், திருநாகேசுரம் கல்வெட்டில் குறிக்கப்பட்ட அநபாயன் முதலாம் இராசேந்திரனே.

கி. பி. 1062—1070 வரை அரசாண்ட வீரராசேந்திரன் காலத்தில் "உத்தமச் சோழப்பல்லவர் மகன்" அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்திருந்தாரென்று திரு. சோமசுந்தர தேசிகர் சைவசிகாமணி என்னும் நூலில் 114-வது பக்கத்தில் கூறுகிறார்.

வீரராசேந்திரன் காலத்தில் சேக்கிழாருடைய மகன் உத்தியோகத்தில் இருந்திருந்தால் வீரராசேந்திரனுடைய தகப்பன் காலத்தில் சேக்கிழார் இருந்தார் என்பது சொல்லாமலே அமையும்.

அடங்கன்முறை ஆராய்ச்சி

முதலாங் குலோத்துங்கனுடைய 46-வது ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் தில்லை அம்பலத்துக்கு ஈசான திக்கில் சொன்னவாரறிவார் கோவிலும், புராணநூல் விளக்கும் புரிசைமாளிகையும் முதலாம் குலோத்துங்கன் கட்டினதாக அறிகிறோம். இதனால், சேக்கிழாரும் பெரிய புராணமும் முதலாங் குலோத்துங்கன் காலத்துக்கு முந்தியே இருந்திருக்க வேண்டுமென்று ஏற்படுகிறதல்லவா?

ஆதையால், சேக்கிழார் காலம் ஏறக்குறைய கி. பி. 992 முதல் 1042 வரை என்று ஒருவாறு கொள்ளலாம்.

கால அட்டவணை

கி.மு.	கி.பி.	
2550	450	திருமூலர் தென்னாட்டில் வசித்த காலம்
கி.பி.	கி.பி.	
50	125	கபிலர்
50	140	பரணர்
130	220	நக்கீரர்
145	215	கல்லாடதேவர் (கல்லாடநூலாசிரியர் அல்ல)
250	282	மாணிக்கவாசகர்
272	....	மாணிக்கவாசகர் சிரியன் கிறிஸ்துவர்களைச் சைவராக்கியது
567	648	அப்பர்சுவாமிகள்
600	625	மகேந்திரவர்மன் ஆட்சி
620	....	மகேந்திரவர்மன் சைவத்தைத் தழுவியது
625	650	நரசிம்மவர்மன்-I ஆட்சி
630	....	நெல்வேலிப்போர்

அடங்கன்முறை ஆராய்ச்சி

கி.பி.	கி.பி.	
634	650	திருஞானசம்பந்தர்
641	....	சீனயாத்திரிகன் உவான்சுவாங் தமிழ்நாடு போந்தது
642	....	வாதாபிச்சண்டை
648	....	அப்பர் அடைந்த ஆறும்நாள் சிறுத்தொண்டர் முத்தி
670	712	சேரமான்பெருமாள்-I
690	710	நரசிம்மவர்மன்-II
694	712	சுந்தரமூர்த்திகள்
712	....	சுந்தரமூர்த்திகளும் சேரமான் பெருமாளும் கயிலை சென்றது
712	754	சேரமான் பெருமாளுடைய மகன் தம்பிரான் தோழர் ஆட்சி
754	785	சேரமான் பெருமான்-II
880	....	திருப்புறம்பயம் சண்டை
880	907	ஆதித்தன்-I
907	947	பராந்தகன்-I
920	962	சேதிராயர்
947	948	இராஜாதித்தன்
948	953	கண்டாதித்தர்-I
940	1012	திருமுறைகண்ட புராணம் பாடிய உமாபதிசிவம் என்னும் புலவர்
950	1012	கருவூர்த்தேவர்
953	954	அரிஞ்சயன்
954	964	பராந்தகன்-II
956	1012	நம்பியாண்டார் நம்பிகள்
965	....	உறையூரில் மண்மாரி பெய்தது
965	966	உறையூரில் அரசனில்லாமல் மந்திரிகள் ஆட்சி
966	970	ஆதித்தன்-II
969	....	தில்லையில் திருமுறை கண்டெடுத்தது
970	985	உத்தமச் சோழன் ஆட்சி

அடங்கன்முறை ஆராய்ச்சி

985	1012	இராசராசன்-I ஆட்சி
992	1042	சேக்கிழார்
1012	1042	இராசேந்திரன்-I ஆட்சி
1017	1137	இராமானுஜர்
1042	1053	இராசமகேந்திரன்-I @ விஜயராசேந்திரன்
1056	1062	இராசமகேந்திரன்-II
1062	1070	வீராராசேந்திரன் @ வீரசோழன்
1070	....	அதிராசேந்திரன் @ கோப்பெருஞ்சோழன்
1070	1120	முதலாங் குலோத்துங்கன்
1087	1156	புகழேந்திப்புலவர்
1090	1162	ஒட்டக்கூத்தர்
1120	1136	விக்கிரமச்சோழன்
1136	1146	குலோத்துங்கன்-II
1145	....	புகழேந்தி முரணைநகர் சந்திரன் சுவர்க்கியிடட சென்றது
1146	1162	இராசராசன்-III
1162	1166	சேனாதிபதி திருச்சிற்றம்பலமுடைய பெருமாள்நம்பி ஆட்சி
1166	1178	இராசாதிராசன்-II
1178	1216	குலோத்துங்கன்-III
1216	1248	சங்கரச்சோழன் @ இராசராசன்-III
4248	1267	இராசேந்திரன்-III

இங்கு திருமுறை சம்பந்தப்பட்டவரை காலங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

சோழர் குடிவழிப்பட்டி



'தாய்,' 'தந்தை,' 'தங்கை'

திரு. மு. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்.,
வழக்கறிஞர், சென்னை.

தாய் என்ற சொல் தமிழ் மக்களனைவரும் அறிந்ததொன்று. செவிலித்தாய், கற்றாய், மாற்றாந்தாய் என்ற சொற்களிலும் தாய் என்ற பகுதி காணப்படுகின்றது. தாய் என்ற சொல் த + ஆய், தம் + ஆய் என்று பிரிந்து பொருள் தருவதாகக் கொள்வது மரபு. ஆய், ஆயி என்ற சொற்கள் தாயாரைக் குறிப்பதை முறையே நூல் வழக்கிலும் தென்னாட்டில் அன்றாட வழக்கிலும் காணலாம். ஆய் என்ற சொல் தாயாரைக் குறிக்கும் காரணத்தை, பிஷப் கால்ட்வெல் துரை மகனார் இரண்டுவகையாகத் தெரிவிக்கின்றார். ஆய்ந்தெடுக்கப்பட்டவள் என்பது ஒரு பொருள். இவ்வாறு கொண்டு, தகப்பனால் காதல் மணத்துக்குரியவளாக ஆய்ந்தெடுக்கப்பட்டவள் என்றேனும் அவன் பெற்றோர்களால் அவனுக்கேற்றவள் என்று தெரிந்தெடுக்கப்பெற்றவள் என்றேனும் இந்த சொல்லுக்குப் பொருள் கூறலாம். ஆய் என்ற சொல் ஆயர்பாடி, ஆய்ச்சியர் குரவை, எனும் சொற்களிற் காணப்படும் ஆய் என்ற பகுதியாக நின்று பசுக்களைக் காப்பவள் என்ற பொருள் தந்து, பண்டைக் காலத்தில் ஒரு வீட்டில் பசுக்களைக் காப்பது தாயாருடைய கடமையாக இருந்தபடியால் பசுக்களைக் காப்பவள் என்ற பெயரே தாயாரைக் குறிக்கும் சொல்லாயிற்று என்று ஊகிக்க இடமுண்டு என பிஷப் கால்ட்வெல் கூறுகின்றார். இதற்கு ஆதாரமாக வடமொழியில் துஹித்ரா என்ற சொல் பால் கறப்பவள் என்பதை யுணர்த்திப் பின்பு ஒருவனுடைய பெண்களைக் குறிப்பதாயிற்றென்றும் கால்ட்வெல் துரை மகனார் கூறுகின்றார். ஆங்கிலத்திலுள்ள 'டாடர்' (Daughter) என்ற சொல்லும் இவ்வாறே பொருள் படுவதையும் எடுத்துக்காட்டியுள்ளார். பண்டை காகரிகத்தில் ஒரு வீட்டிலுள்ள தாயார் பசுக்களைக் காக்கும் தொழிலையும் அவளுடைய பெண்கள் பால்கறக்கும் தொழிலையும் மேற்கொண்டிருந்தனர் என்ற கொள்கை இவ்வாறு பொருள் கொள்வதற்கடிப்படையாகும். வடமொழியில் தாய் என்ற வினைச்சொல்லுக்குக் காப்பாற்று என்ற பொருளுண்டு. இச் சொற்கும் தாய் என்ற தமிழ்ச் சொல்லுக்கும் ஏதேனும் தொடர்புண்டா என்பதையும் தாய் என்ற

வடசொல் முதன் முதலில் உபயோகிக்கப்பட்ட காலத்தையும் அறிஞர் கள் ஆராய்ந்து தெளிந்தால் இச்சொல் முதலில் எம் மொழியில் வழங்கப்பட்டுப் பிறகு மற்றொன்றிற் கொள்ளப் பட்டதென்பதை அறியக்கூடும்.

தந்தை என்ற சொல் தம்+தை எனப்பிரியும். எந்தை, முந்தை என்ற சொற்களிலும் தை என்ற பகுதி தகப்பனைத் தெரிவிக்கிறது. அத்தன் என்ற சொல்லிலிருந்து தை என்ற பகுதி காளடைவில் வந்திருக்கவேண்டுமென்று பிஷப் கால்ட்வெல் ஊகிக்கிறார். தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய திராவிட மொழிகளிலும் தண்ட்ரி, தந்தே, தந்த என்ற சொற்கள் தகப்பனைக் குறிப்பதால் தந்தை என்ற தமிழ்ச் சொல் மிகப்பழமையான தொன்றாகும். மக்களைத் தந்தவன் தருபவன் என்ற பொருளில் தந்த என்ற பகுதி மருவி, தந்தை என வந்திருத்தல் கூடுமோ என்ற விஷயம் அறிஞர்கள் ஆராய்ச்சிக்குரியது.

தங்கை என்ற சொல் தம்+கை எனப் பிரிந்து, கைபோல உதவி புரிபவள் என்று பொருள்படுமென பிஷப் கால்ட்வெல் கூறுகிறார். கங்கை, மங்கை, தங்கை என்ற மூன்று சொற்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் கை என்ற பகுதியின் உண்மையான பொருள் யாதென்பது புலப்படக்கூடும்.

இம்மூன்று சொற்களையும் தம்பிரான், தமையன் முதலிய வேறு சில சொற்களையும் ஆதாரமாகக் கொண்டு மரியாதையாக அழைக்கும் முறை தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரே இருந்ததாக கால்ட்வெல் ஊகிக்கிறார். தம்பிரான் என்ற சொல் ஆங்கிலத்தில் 'His Lordship' என்ற வழக்குக்கு ஈடான தென்றும் தந்தை என்ற சொல் 'His Fatherhood' என்பதற்கு நேரான தென்றும் இவை போன்றே பிறவும் வருமென்றும் அவர் கூறுகிறார். இப் பொருள்பற்றிய ஆராய்ச்சியையும் தமிழறிஞர்கள் செய்தல் வேண்டும்.

மேற்கூறியவைகளெல்லாம் சிறந்த தமிழ்ப் புலவர்கள் ஆராய்ச்சிக் குரியன வென்ற ஒன்றை ஞாபகப்படுத்துவதற்காகவே சிறியேனால் எழுதப்பட்டன. இவற்றுள் எதையும் எனது முடிபாகவோ கருத் தாகவோ எவரும் கொள்ளுதல் கூடாது.

திரவிடக்குழுமொழிகள்

திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைநகர்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு ஆகிய ஆறு செப்பனிட்ட மொழிகளையும், தோடா, கோடா, கோண்டு, கூ, ஒரேவான், இராஜமஹால் ஆகிய ஆறு செப்பனிடா மொழிகளையும் எல்லாம் "திரவிடக்குழுமொழிகள்" எனச் சொல்லுதற்கு உரிய காரணங்கள் சிலவுள. அவையாவன :—

(அ) இம்மொழிகளெல்லாம் இலக்கணப் பண்புகளான் ஒத்துள்ளன ஆகலின், ஒருகாலத்தில் யாதோ ஒரே மூலமொழியினின்று தோன்றியிருத்தல் வேண்டும்.

(ஆ) தென்னிந்திய மக்களையும் தென்னிந்திய மொழிகளையும் குறிக்கச் சம்ஸ்கிருத மொழிநூலாளர் "திரவிடம்" என்ற சொல்லையே ஆண்டுள்ளார் ஆகலின், வழக்கிலுள்ள அதனைக் கோடல் குற்றமன்று.

(இ) தென்னிந்திய வர்க்கத்தார் அனைவரையுங் குறிக்க மநுதர்ம சாஸ்திரத்தில் (X. 43, 44) 'திரவிட' என்ற சொல்லே வழங்கப்பட்டுள்ளது. ஆகலின், தென்னிந்திய மக்கள் பலர் பேசிய பல்வேறு பெயருடைய மொழிகளையும் "திரவிட" என்ற பொதுப்பெயரான் வழங்குதல் ஏற்புடைத்து.

(ஈ) இம்மொழிகள் அனைத்தையுஞ் சேர்த்துத் "தமிழ்க்குழு" என வழங்குவோ மென்பாருளராயின், அன்னர் "தமிழ் மொழி" என்னும்போது தமிழாகிய தனித்த மொழியையும், "தமிழ்க்குழு" என்னும்போது பன்னிரு மொழியையும் குறிக்கும் மயக்கத்திற்கு ஆளாவராதலின் "திரவிட" மென்ற சொல் ஏற்ற முடைத்தெனத் தோன்றுகிறது.

(உ) மேலும், திரவிட மொழிநூலைத் தந்த முதல்வர் கால்டுவேலர் இப்பன்னிருமொழிக்கும் பொதுப் பெயராகத் "திரவிடம்" என்பதையே ஆண்டுள்ளார் ஆகலின், அவரொடு இகலாது அவர் கொண்ட பெயரையே வழங்குதல் சாலும் என்பர் கிரையர்ஸன்.

திரவிடக்குழுமொழிகள்

இனி, இப்பன்னிரண்டு மொழிகளையும் தனித்தனி நோக்குவோம்.

I. தமிழ்.

திரவிடக் குழுமொழிக ளெல்லாவற்றுள்ளும், முதன் முதலில் திருத்தம்பெற்ற மொழி தமிழே. அஃதே பழமையும் செழுமையும் வாய்ந்ததென்றும், பழைய சொல்லுருவங்கள் சிதையாதின்றளவு மிருப்பதென்றும், அறிகின்றோம். இதனாலன்றே, கால்டுவேலர், திரவிடக் குழுமொழிகளின் வரிசையில் தமிழை முதல்வைத் தெண்ணிய தூஉம் என்க. அவர், பழந்தமிழைச் செந்தமிழென்றும், பிற்காலத் தமிழைக் கொடுந்தமிழென்றும், கூறியுள்ளார். ஆனால், இன்றுஞ் செந்தமிழெழுதுவோரும், முன்னிருந்தோரில் கொடுந்தமிழ் புகுத்தினோரும், உளராகலின் பழையன வெல்லாஞ் செந்தமிழெனவும், புதியன வெல்லாங் கொடுந்தமிழெனவுங் கூறல் பொருந்தாது.

தமிழ், சென்னைக்கு வடக்கு ஐம்பது மைல்களுக்கப்பால் உள்ள புலிக்கட்டு முதலாகத் தென்குமரிவரையும், மேற்குத் தொடர்மலை முதலாகக் கிழக்கு வங்காளக்குடாக்கடல் வரையும், பேசப்பட்டு வருகின்றது. திருவிதாங்கூர் சமஸ்தானத்திலும், சிலோன் வடக்கு, வடமேற்குப் பாகங்களிலும், ஆங்கிலேயர் படைவீடுகளாகவுள்ள ஆந்திர தேயத்துப் பெல்லாரியிலும், மலையாளநாட்டுக் கண்ணனூரிலும், கைசாம் தேயத்து ஐதராபாத்திலும், நாளங்காடி, அல்லங்காடி, முதலான இடங்களிற் பேசப்பட்டு வருகின்றது.

"தமிழர், தாளாண்மையும் வேளாண்மையு முடையவர்; குருட்டுத் தன்மையான கொள்கையில்லாதவர்" என்பது கால்டுவேலர் கொள்கை. தமிழருடைய தாளாண்மையையும் இடுக்கணழியாமையையும் போற்றிக் கிழக் கிரேக்கரென அவரைக் கால்டுவேலர் புகழ்ந்துள்ளார்.

1931-ல் எடுத்த ஆட்டொகைக் கணக்குப்படி சென்னை மாகாணத்தில் மாத்திரம் இருநூற்றுப்பதினைறுலட்சம் பேருக்கு மேலு முளர். பினாங்கு, சிங்கப்பூர், மலேயா, யாழ்ப்பாணம், பெகு முதலான இடங்களில், தமிழ்ப் பேசுவோர் பலரிருக்கின்றனர். தென்னப்பிரிக்காவிலும், இலண்டனிலும், தமிழர் காணப்படுகின்றனர். இலண்டனில், தமிழர் கழக மொன்றுளது. தமிழ் கற்பிக்கும் பேராசிரியர் பதவியிலொருவருளர். தமிழ்ப் பயிலிடங்களாகச் சிறப்புற்றுத் திகழுமிடங்கள், சென்னை, அண்ணாமலைநகர், திருவையாறு, கரந்தை, மதுரை, மேலைச் சிவபுரி, முதலியவாம்.

சென்னையில், செயின்ட் ஜியார்ஜு கோட்டையென வழங்கப் படுவது, முற்காலத்தில், ஒரு சிற்றரணாக இருந்தது. அதை அப் பொழுதுடையவர், சென்னப்பநாய்க்கர் என்பவர். அவரிடமிருந்த அக்கோட்டை, ஆங்கிலேயருக்குக் கிடைத்தமையானும், அஃதே அரசி

யலுக்குப் பெரிது முதவியாக விருந்தமையானும், அதையுடையவராக விருந்த சென்னப்பநாய்க்கர் பெயரால், "சென்னப்பப்பட்டினம்" என வழங்கலாயிற்று. அப்பெயர், காலடைவில் சென்னப்பட்டினமாய், இப் பொழுது சென்னையென மருவிவருகின்றது. இக்ககருக்குள்ள "மதராஸ்" என்னும் மறுபெயர், மதிலைக்குறிக்கும் "மதுரா" என்னும் தெலுங்கு மொழியின் மருவெனக் கூறுகின்றனர்! அது மதில் சூழ்ந் திருந்த விடமாகலின், அதுவும் பெயராயிற்று அதற்கு.

தமிழ் என்னுஞ் சொல்லைத் திருத்தமாக ஒலிக்கமுடியாமல், பற் பலர் பலவாறாக மொழிகின்றனர். பிரென்சு தேயத்தார் 'தமூல்' என வழங்குவர். போர்ச்சுகல் தேயத்தார், தமிழும் மலையாளமும் ஒன் றென்னுங் கருத்தால், "மலபார்" என்பர். 1577-ல் எழுந்த தமிழ்ப்புத்தக மொன்று முதன்முதலில் அச்சுவாகனம் ஏறியதாகக் கூறப்படுகிறது. அதன்கண் "மலவார், அல்லது தமூல்" எனத் தலையங்கம் தரப்பட் டுளது. ஸமஸ்கிருதம் வல்லார், திராவிட மென்பர். திராவிடமென் னும் வடமொழியிலிருந்து தான், 'தமிழ்' என்னுஞ் சொல் பிறந்தது என்று கூறும் கால்டுவேலர் காட்டுமாறு, த்ரவிடம்—தமிடம்— தமிடம்—தமிழம்—தமிழ் என்பது. 'த்ரவிடம்' என்ற சொல்லிலுள்ள விகாரம் துவாங்க்ஷா என்னுஞ் சொல், துமாங்க்ஷா ஆயினுற் போல, மிகாரமாக மாறியது என்பர். 'த்ர' என்பதிலுள்ள 'ர' என்னு மெழுத்துக் கெட்டது; 'ஸ்ரவண' 'சமணம்' என்றாற்போலத் திரிந்து மருவியதென்பர். த்ரவிட என்பதிலுள்ள டகரம் ழகரமானதற்கு, வட மொழி 'காடி' யென்பது 'காழி' யாயினுற்போல என்பர். தமிழ என்ற சொல்லின் அகாரவிறுதி கெட்டதற்குத் தமிழில், உயிரீறுய் வழங்குஞ்சொல் அரிதாவதைக் காட்டுவர்.

தமிழில், கல்லதுமினியதும் இன்றியமையாததுமாயுள்ள பொருள் களைக் குறிக்கும் சொற்களெல்லாம் வடமொழியிலிருந்து வந்தனவென வாரம்பற்றிக் கூறும் வாக்குவல்லார்க்கன்றி, பிறர்க்கு இக்கொள்கை யுடன்பாடாகாது. திருவையாற்றுக் கல்லூரித் தலைவரான சுப்பிர மணிய சாஸ்திரியார் தமிழெனுஞ் சொல்தான், வடமொழியில் திரவிட மெனத் திரிந்ததெனக் கூறியுள்ளார். தமிழ் வரலாற்று முறையைக் கண்கொண்டு நோக்கினும், தமிழே, தமது மொழிக்குத் தமிழரிட்ட பெயரெனப் புலனுகின்றது. தொல்காப்பியத்திலும், புறநானூற்றிலும், வழங்குவது தமிழென்னுஞ் சொல்லன்றி, திரவிடமன்று. ழகரத்தை யுச்சரிக்க முடியாத நாவினர், தமிழைத் திரவிடமென வுச்சரித்திருந் தால், அதுகொண்டு, அவரிட்ட பெயர் நம்மொழியை வந்து கட்டு முன்னில், நம்மொழிக்குப் பெயரேயில்லையென்றல், எங்ஙனம் பொருந் தும்! கலித்தொகையை முதலில் பதிப்பித்த சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்கள் முன்னுரையில், தமிழில் வழங்கும், சுவர், என்ற

1. இதுபற்றிப் பலவேறு வகையாக எழுதியுள்ளார்கள்.

சொல், ஆங்கிலச் சொல்லாகிய 'wall' என்பதிலிருந்து வந்ததெனவும், அது சுவாலென்றுகிப் பிறகு சுவல் என்றுகிச் சுவர் என வாயிற்று எனவும் கூறுவார் கூற்றையொக்கும், தமிழ் திரவிடம் என்ற சொல்லிலிருந்து வந்ததென்பார் கூற்று, எனக்குறிப்பிட்டிருக்கிறார். உண்மை நோக்கின், தமிழே, தமிட திரமிட திரவிட என்ற உருவங் களேயெல்லாந் தந்த ஆதிமூலமெனத் தோன்றுகிறது. அதற் காதாரங் கள் பின் வருவன :— தொல்காப்பியர் காலத்துக்குப் பிற்பட்டவையாய் உச்சரிக்கும் வேளையிலவையின்றி, "நார்ப்பாய்," "கோர்ப்பாய்" என்னுமிடங்களில் தோன்றும் ரகர ஒற்றுப்போல ஒரு ரகரம் தோன்றி 'த' என்பதோடு சேர்ந்து 'த்ரா' எனவந்தது. வகாரமும் மகாரமும் பிறப்பிடம் சற்று ஒத்திருத்தலின், மகரம் வகரமாயிற்று. முகாரமும் டகாரமும் ஓரிடத்தே பிறத்தலான் முகரம், டகரமாயிற்று. இம் முறை யான் 'தமிழ்' எனுஞ்சொல் 'த்ரவிட' எனவாயிருத்தல் கூடும். பிறகு திரவிடம் எனப்படிப்படியாய் மருவி யிருத்தல் கூடும்.

தமிழென்னுஞ் சொல்லிற்கு, இனிமை யென்பது பொருளென்பர். ஆனல், தமிழர், தாம் பேசிய மொழிக்குப் பெயரிட்டஞான்றே, அப் பொருளில்தான் முதலில் நிறுவினர் என்பதற்குப் போதிய சான்றில்லை, "தமிழ் தழீஇய சாயலவர்" என்னுஞ் சிந்தாமணியடியிலுள்ள தமி ழென்னுஞ் சொல்லிற்கு நச்சினர்க்கினியர், இனிமையெனப் பொருள் கூறியுள்ளார். கம்பரும், "தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே" என்றவிடத்து, இனிமையென்னும் பொருள்படும்படி யாத்துள்ளார். செய்யுள் நூல்களில் இவர்கள் இன்னணம் வழங்குவதற்கு முன்னல், பிங்கலந்தையில் "இனிமையு நீர்மையுந் தமிழெனலாகும்" என வரையப்பட்டிருக்கிற தறியத்தக்கது. இங்ஙிகண்டின் காலம், கி. பி. ஆரும் நூற்றாண்டென்பர். தெலுங்கரோ தமது மொழியாகிய தெலுங்கை, தெனுகு என்பதிலிருந்து திரிந்து வந்ததெனவும், தெனுகு தேனடியாகப் பிறந்ததெனவும், அதனல் தம்மொழி தேனையொத்த இனிமையுடைய தெனவும் மொழிகின்றனர். இவற்றை முடிவுசெய்யப் பொற்கிழியளிக்கும் பாண்டியனும், ஒருபாற் கோடாது பாடிக்காட்டும் செம்மையனும் இன்றுளராயின் நன்றுமன்!

வடமொழியாளர் தமிழைத் திரவிடமெனவும் போர்ச்சுகல் தேயத் தார் மலபார் எனவும் வழங்க, தெலுங்கரும், கருநாடரும், முஸ்லீம் களும், "அரவம்" என அழைத்தனர். ஆனல் அவர்கள் அரவமென அழைத்ததற்குக் காரணமாக, தமிழில் அறநூல் மலிந்திருப்பதால், 'அறம்' 'அரம்' எனவாகி அரவமென மருவியிருக்கலாமெனக் குண்டர்டு என்பவர் கூறுகின்றார். தென்னிந்தியருள், அறிவுமிக நிரம்பியிருந்த தமிழர், அறிவிலென்பட்ட காரணத்தால், அச்சொல் சிதைந்து அரவமென அவர் மொழியைக் குறிக்கலாயிற்று என்பாரு முளர்; அவ்வாறன்றி "ஏதமில் பன்னிருகாட்டெண்" என வெண்ணப் படுங் கொடுந்தமிழ் நிலங்களுள் ஒன்றுகிய "அருவா" என்பது

சிதைத்து அரவம் எனப்பட்டதென்பாருமுளர். ஆனால் இம்மூன்று கொள்கைகளும், இச்சொல்லினெலி யொற்றுமைகொண்டு மதிநுட்பத்தால் கூறப்படுவனவே யன்றி, யேற்றுக்கொள்ளத் தக்கனவாகவில்லை. ஏனெனின், அரவமென்ற சொல் தமிழைக் குறிக்கத் தமிழில் வழங்கவில்லை. தமிழில் வழங்காச் சொல்லுக்குத் தமிழ் மூலம் கற்பித்துத் தமிழ்ப் பொருள் கூறல் யாண்டுப் பொருந்தும்? தெலுங்கரும் கருநாடரும் தமிழை யரவமென்கின்றனரென்றால், அவர் மொழியில் எப் பொருளிலுளதெனப் பார்த்தலன்றே முறை! அம்முறையே நோக்கின், அரவம் என்பதற்கு அவர் மொழியில் ஒலியற்ற தென்பதே பொருளெனத் தோன்றுகின்றது. "ரவ" என்ற சொல்லிற்குத் தெலுங்கு கன்னடங்களில், ஒலியெனப் பொருள் வழங்குகிறது. நியாயம் என்னுஞ் சொல் அகரச் சேர்க்கையால் அநியாயம் ஆதல்போல, 'அரவம்' என்பது 'ரவ' என்பதனெதிர்மறையாயிற்று. ஆனால் தமிழ் ஒலியற்ற மொழியோவெனின், அற்றன்று. கவர்க்கம், சவர்க்கம், தவர்க்கம், பவர்க்கம், டவர்க்கமாகிய ஐவர்க்கத்தில் உள்ள இரண்டாவது மூன்றாவது நான்காவது எழுத்துக்களின்மையால், தமிழில் ஒலியில்லை யென்பது கருத்து. இவ்வெழுத்துக்களை யொலிக்க அவ்வைந்து வருக்கத்தின் முதலெழுத்தை யுச்சரிக்கும் முயற்சியைவிட அதிக முயற்சிவேண்டும். தமிழர் வாயிறுக்கமாகவிருந்து, இரண்டு மூன்று நான்காவதாகிய எழுத்துக்களை யுச்சரிக்கமலிருந்தனராகலின், அவரை யேளனஞ்செய்ய வெண்ணிய தெலுங்கரும் கருநாடரும் அவரை, அருவரெனவும் அவர் மொழியை யரவம் எனவும் அறையலாயினர். அதனாலன்றே கலிங்கப் போரில் ஓடிய தெலுங்கர், "அருவர ருவரெனு வஞ்சியோடினர்" எனச் செயங்கொண்டாரால் சொல்லப்படுகிறார். தமிழில் அரவமென்றால் ஒலியென்பதன்றே பொருள் எனின், தெலுங்கர் தமிழின் பெயராய் வழங்கும் "அரவமு" வேறு; தமிழர் கூறும் ஒலியென்ற பொருளையுடைய அரவம், அரதனம் போன்றது. "ரவ்விற்கம் முதலாமுக் குறிலும்" என்ற இலக்கணத்தின்படி, வடமொழியில் ஒலியைக் குறிக்கும் "ரவ" என்பது, 'அரவ' என்றாகி அரவம் என்றாயிற்று. தெலுங்கர் தமிழுக்குப் பெயராய் வழங்கும் அரவமு என்பதிலுள்ள அகரம் எதிர்மறைப் பொருளது, ஒலியற்றது என்ற பொருளிலேயே வழங்கப்பட்டது.

II. தெலுங்கு

சொல்வளத்தானும் பழமையானும், திரவிடக் குழுமொழியுள், தமிழுக்கடுத்தவிடம் பெறுதற்குரியது தெலுங்கு. இம்மொழி செவிக்கினிமை பயப்பதில், தமிழினு முயர்ந்ததென்பர் கால்டுவேலர். சில ஐரோப்பியர் இம்மொழியை "ஜெண்டு" என வழங்கினர். போர்ச்சுகீய பாடையில், கடவுள் நம்பிக்கையில்லாதவர் என்று பொருள்படும் சொல்லின் சிதைவு "ஜெண்டு" என்பதாயின், தெலுங்கர்க் கது பொருந்தாது. தமிழர் அம்மொழியை "வடுகு" என வழங்குவார். அவரை

வடுகரெனப் பன்னெடுங்காலமாய் வழங்கி வருகின்றனர். "கல்லாநீண் மொழிக் கதநாய் வடுகர்" என அகநானூற்றில் வருகின்றது. "வட திசை மருங்கின் வடுகுவரம் பாகத் தென்றிசையுள்ளிட் டெஞ்சிய மூன்றும்" எனச் சிறுகாக்கைப்பாடினியாரும் பாடியுள்ளார். வடுகரும் வடுகும், வட என்ற திசையினடியாகப் பிறந்தவை. தமிழருக்கு வட பாலிருந்தமையா லவ்வாறு கூறப்பட்டனர் போலும்!

தெலுங்கநாட்டை கி. பி. முதனூற்றாண்டிலிருந்த "பிளீனி" என்பார், "மொதொகலிங்க" மென எழுதியுள்ளார். "மொதொக" என்னுஞ் சொல்லிற்குப் பொருள் மூன்று என்பதாதலால், இப்பதம் மூன்று இலிங்கங்களுள்ள நாட்டைக் குறிக்குமென்பர் காம்பெல் என்பவர். மூன்று இலிங்கங்களாவன, காளேஸ்வரம், ஸ்ரீ சைலம், பீமேஸ்வரம், என்பன. அதனால் அந்நாடு "த்ரிலிங்கம்" எனவும் வழங்கு மென்பர். ஆனால் கால்டுவேலர் இதனை யேற்றுக்கொள்ளாது, பண்டைத் தெலுங்கர் "மொதொக" என்னுஞ் சொல்லைப் பேச்சு வழக்கில் பெற்றிருக்கவில்லை யெனவும், வழக்கிலிருந்த சொல் 'மூடு' என்பதெனவும், அதன்றிரிபே "மொதொ" என்பதெனவுஞ் சொல்லி, மூன்று கலிங்கம் "மொதொகலிங்கம்" எனப்பட்ட தென்றும் கூறு கிறார். அப்பொழுது "த்ரிலிங்கம்" என்பது "திரிகலிங்கம்" என்பதன் சிதைவாகவேண்டும். திரிகலிங்கமென்னும் வழக்குப் புராணங்களிலும் சில சாசனங்களிலுமுண்டென்பது கன்னிங்காம் பண்டிதராலறிய வருகிறது. தாரநாதர் என்னும் திபேத்த ஆசிரியரும், தெலுங்க நாட்டைத் திரிகலிங்கமென்றே வழங்கியுள்ளார். கலிங்கத்திற்கும் லிங்கத்திற்குமுள்ள தொடர்பு, இன்று அறுதியிட்டுக் கூறப்படா விடினும், மூன்று லிங்கம் என்பதைவிட, மூன்றுகலிங்கம் என்பது நன் றென்பர் கால்டுவேலர். ஆனால் வடமொழியாளர் தெலுங்கை, "ஆந்த்ரா" என வழங்குவர். இதன் மூலத்தை நாடின், இருவே யுணர்ததும் தாது உண்டெனப் பலர் பகர்கின்றனர். அவருடைய கருத்து, இருள் நிறைந்த தண்டகவனத்தில் தெலுங்கர் இருந்தவரென் பதும், அவரே "ஆந்த்ர" என வழங்கப்பட்டன ரென்பதுமாம். ஆந் திர மொழி இம்முறையே யாந்த்ரமெனப்பட்டது போலும். ஏழாம் நூற்றாண்டில், இந்தியாப் போந்த சீனயாத்திரிகர் "யுவன்ஸ்வாங்" என் பவர், ஆந்த்ரமொழியென ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். வடமொழி வல்ல குவாரில்லபட்டரும், "ஆந்த்ரா" என்னுஞ்சொல்லைத் தெலுங்கு என்ற பொருளில் வழங்கியுள்ளார். அதாவது, தெலுங்கையும் தமிழையுஞ் சொல்ல நினைத்தவர், "ஆந்த்ர த்ராவிடபாஷா" என வரைந்தனரென்பர். இதனால் வெளியாவதியாதெனின்? தெலுங்கரு ளொருபிரிவினர் மிருப்பவர் ஆந்த்ரர் எனவும், மற்றொருபிரிவினர், கலிங் கர் எனவும் வழங்கப்பட்டனர் என்பதாம். கலிங்கரினும், ஆந்திரர் சிறந்த காரணத்தால், தெலுங்கர் பேசியமொழி சிறப்புப்பற்றி வட மொழியாளரால் ஆந்த்ரம் எனச் சொல்லப்பட்ட தென்பர். ஆந் திரரைப்பற்றிய குறிப்பு இருக்குவேதத்திலுங் காணப்படுகின்றது.

கிறிஸ்துகாதர் பிறக்குமுன், ஆந்திரர் வட இந்தியாவிலரசாண்டன ரென சில இந்தியப் புராணவரலாறுகளா லறியப்படுகின்றது. தற்காலத் திருக்கும் தெலுங்கறிஞர்கள், ''ஆந்திரர்'' என்பார் முதலில் வட நாட்டில் தோன்றியவர், பின்னெருகால் தென்னுடற்று, ஆண்டிருந்த பண்டைத் தமிழர், தெலுங்கருடைய தொடர்புபெற்று மீண்டும் வட நாடு புக்கு, மகதத்தில், கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலரசாண்டன ரென்றும், அவ்வாந்திரர் தென்னிந்தியத் தெலுங்கருமல்லர் வடவிந்திய வாரியருமல்லரென்றும் கூறுவர். அவர் கருத்துப்படி ஆந்திரர் வேத வாரியரொழித்த ஒரு பெரும் வர்க்கத்தாரெனத் தோன்றுகின்றது.

இதுகாறும் நாம் பார்த்துவந்தவையெல்லாம், தெலுங்கு மொழிக்குப் பிறர் தந்துள்ள பெயர்கள். இனித் தெலுங்கர் தம் மொழிக்கு எப்பெயரிட்டனரென ஆராய்வோம். அது தெலுங்கே. ஆயினும் தெலுங்கு 'தெலிங்க' 'தெலுகு' 'தெனுகு' என்றெல்லாம் வழங்குவதுண்டு. தெலுங்கு என்பது ''திரிலிங்கம்'' என்பதன் சிதைவெனக் கொள்ளும் பண்டிதரொருசாரார்; மற்றொருசாரார் அது ''தேன்'' என்பதிலிருந்து வந்ததெனச் சாதிப்பர். அவர் கொள்கைப்படி, தெனுகு என்ற சொல்லே தெலுகு என்பதைவிடப் பழமை மிக்கது.

இம்மொழி, புலிக்கட்டு முதலாகச் சிக்காகோ என்னுமூர்வரையில் பேசப்பட்டு வருகின்றது. மைசூர், மராட்டியம், மைசாம், நாகப்பூர் ஜில்லாவின் பலபாகங்கள், ஆகிய பலவிடங்களில் பேசப்படுகின்றது. திராவிடருள், தெலுங்கரே யாளெண்ணிக்கையில் மிக்குள்ளனர் எனக் கூறுவதுண்டு. 1931-ல் எடுத்த கணக்குப்படி சென்னையில் மாத்திரம் 162 லட்சத்திற்கு மேலுமிருந்தனர். பண்டைநாளில் 'ஆர்ச்சிலாகோ' என்னு மெல்லிவரைச் சென்று வாணிகஞ் செய்த பெருமை தெலுங்கரது. பிற்றைநாளிலவண் சென்று வாணிகஞ்செய்த தமிழரையும், அதனால் கலிங்கரெனவழைத்தது வியப்பன்று. சுமத்திரா, ஜாவா, முதலிய தீவுகளில், தெலுங்கர் ஊராண்மை யுடையராயிருந்துளர். கி. பி. பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில், தமிழ்நாட்டின்கண் சேர்ந்து ஆக்கம் தேடப் புக்க தெலுங்கரின் வம்சத்தவர் தமிழ்நாட்டில் நாயுடு, ரெட்டியெனச் சொல்லிக்கொண்டு, தெலுங்கு தம் தாய்மொழி யென்கின்றனர். கலிங்கத்துப் பரணியில் கூறப்பட்டவாறு தமிழர் தெலுங்கரை வென்றனராயினும் ஆண்டுச் சென்றரசாண்டாரில்லை.

III. மலையாளம்

பிற திராவிடக் குழுமொழிகளிலும் மலையாளமே தமிழொடு நெருங்கிய தொடர்பைக் காட்டுகிறது. தமிழின் பண்டைய கிளையே மலையாளமென்பது கால்டுவேலர் கருத்து. தமிழொடு பிறந்தாள் மலையாளம் என்பதிலும் தமிழின் உதரத்துதித்தெழுந்தாள் என்பதே அமைவது என்பரவர். வடமொழிச் சொற்களும் புணர்ச்சிகளும்

நிரம்பிய பழந்தமிழே மலையாளம் என்பர் M. சீனிவாச ஐயங்கார். ஆனால் மலையாள அறிவாளிகளுட் சிலர் தம்மொழி வடமொழியி னின்றும் தோன்றியதன்றித் தமிழொடு தொடர்புமுடையதன்று என்று கூறுவர். இக்கூற்றுக்கு அவர்தம் மாணுமானமே காரணமாதல் வேண்டும். மலையாள இலக்கியத்தையும் இலக்கணத்தையும் நேரக்கினுல் இத்துணைத் தொடர்பிருக்கவும் இல்லையென்று வாதிக்கும் நண்பரின் மனநிலை வெளிப்படுவதொருதலை. மலையாள இலக்கியங்களில் மிகப் பழையது எனக் கருதப்படுவது கண்ணேசப்பணிக்கர் என்பாரியற்றிய இராமாயணமாகும். அது கி. பி. 1350-ல் இயற்றப்பட்டது. அதன் சிறுபகுதி ஒன்று கீழே தரப்படுகிறது.

"கொண்டலிற் நேரிருண்டு சுருண்டு
நீண்டொளி வார்ந்து திங்கும்
குந்தளபாரமோடு முகில் குலத்திட
மிக்கல் போலே.....ஸீத சொந்நாள்"

இதில் சொந்நாள் என்பதிலுள்ள ஆள்விகுதி தமிழ் விகுதியே. இற்றை நாளில் மலையாளத்தில் சொன்னுள் என்பது சொல்லி என்றே வழங்கும். இவ்விராமாயணத்தில் வழங்கியுள்ள சொற்களில் படிக்குப்பாதி வட மொழியாயிருந்தாலும் இலக்கண அமைதிகளெல்லாம் தமிழே.

கி பி. 1550-ல் கிருஷ்ணப்பாட்டை மலையாளத்தில் எழுதிய செருச் சேரி நம்பூதிரி என்பார் செயிச்சு, தின்மை ஆகிய சொற்களைத் தமிழின் "செய்வித்து", "நீமை" ஆகிய வடிவங்களின் திரிபாக வழங்கியுள்ளார். இவர் பிராமணராயினும் கண்ணேசப் பணிக்கரைப்போல நிரம்பநிரம்ப வடமொழிகளை ஆளாதிருப்பதின் காரணம் இவரது கிருஷ்ணப்பாட்டுப் பொதுமக்களுக்குப் பயன்படவேண்டும் என்ற நோக்கமாகும்.

துஞ்சத்து இராமானுஜ எழுத்தச்சன் என்ற ஒருவர் கி. பி. 1650-ஐ ஒட்டிய ஆண்டுகளில் வாழ்ந்தவர். அவர் முன்னோர் சென்ற நெறி யினின்றும் விலகித்தாமே மலையாளத்தை விகற்பிக்க எண்ணி வடசொல் பலவும் வடசொல் இலக்கணங்கள் பலவும் தாமியற்றிய நூல்களிற் புகுத்துவாராயினர். இவர் செய்த இத்தீச் செயலுக்காக மலையாள நாட்டார் அவரையே தமது "நல்லிலக்கியத்தின் தந்தை" யெனப் போற்றுகின்றனர்! மலையாள இலக்கணம் 1860-ல்தான் எழுந்தது. அதற்குமுன் அம்மொழியில் இலக்கணநூல் இல்லை. குண்டர்டு என்னும் ஆங்கிலேய பிரபுவே மலையாளிகளுடைய அகத்தியரும் திவாகரருமாவர். மலையாளமொழியில் ழகரமும் றகரமும் இன்றும் பயில்வது தமிழும் மலையாளமும் தொடர்புடைய என ஊகிக்க உதவுவதொன்று. வடசேரி, திருச்சூர், ஓலவக்கோடு, பாலக்காடு, பலவங்காடி, கடுக்கரை முதலான மலையாள ஊர்ப்பெயர்களில் வரும் சேரி, ஊர், கோடு, காடு, அங்காடி, கரை முதலாய வெல்லாம் அவ்வூர்களின் தமிழ்த் தொடர்பைப் பறை யறைகின்றன. மலையாளத்தார் வழங்கும் திசைப் பெயர்களாகிய கிழக்கும் மேற்கும் தமிழ்மொழியின் தொடர்பையே வலியுறுத்துகின்றன.

"கிழ்", "மேல்" என்பனவே இத்திசைப் பெயர்களின் பகுதிகளா யிருத்தல் வேண்டும். தமிழ் காட்டின் குடபால் எல்லாம் மலையும், குண பால் எல்லாம் கடலுமாக இருத்தலின் மேலே ஏறுவதென்றால் மேற்றி சையும், கீழே இறங்குவதென்றால் கிழத்திசையும் வருதலொருதலை. ஆனால் மலையாளத்தினின்று மேற்றிசைப்பக்கம் செல்வதென்றால் மேலே ஏறுவதில்லை. அங்ஙனமிருந்தும் குடதிசைக்கு ஆண்டும் வழங்கும் பெயர் "மேற்கா"யுள்ளது. இதனாலறியப் படுவதென்னென்றால் மலை யாள காட்டார் "மேற்கை"ச் சொல்லடிப்பொருளில் வழங்கினரல்ல ரென்பதும் தமிழரிடம் கடன் வாங்கித் தமிழர் வழங்கிய பொருளி லேயே வழங்கினரென்பதுமாம். மேலும் மலையாள காட்டார் வழங்கும் 'படிஞ்ஞாறு' என்னுஞ்சொல் தமிழ் 'படுஞாயிறு' என்பதன் திரிபே யாதலால் மேலைத் திக்குணர்த்தும் இச்சொல்லும் தமிழ்த்தொடர்பைத் திண்ணமையாக்கல் காண்க.

மலையாளம் என்பது மலயாழ்மா மலயாய்மா என்றும் சிற்சிலரால் வழங்கப்பட்டதென்பர். வடமொழி மலையத்திற்கும் மலையாளத்திலுள்ள 'மலைக்கும்' உள்ள தொடர்பை விளக்கப் புக்க கால்டுவேலர் சம்ஸ்கிருத 'மலயா' என்றசொல் திரவிட 'மல' என்பதிலிருந்து வந்தது என்று சொல்லியுள்ளார். ஆளம் அல்லது ஆழ்மா என்பது ஆழ்என்னும் வினைப்பகுதியடியாகத் தோன்றி ஆளப்படுவது, உடைமை, ராஜ்ஜியம் ஆகிய இப்பொருட்டதாம். இதன் பகுதியும் ஆழம் என்பதிலுள்ள பகுதியும் வெவ்வேறே. 'வெள்ளாளன்' 'வெள்ளாழன்' ஆனாற்போல 'மலையாளம்' 'மலையாழம்' என வழங்குவதுண்டு. தமிழ் 'வெள் ளாண்மை' மலையாளத்தில் 'வெள்ளாய்மா' என ஆவதற்கு ஒப்ப மலையாளம் என்பது மலையாய்மா எனச் சிலகால் வழங்கும். எனினும், மலையாளம் மலையாழ்மா மலையாய்மா ஆகிய இம்மூன்று சொல்லுருவங் களும் மலைப்பிரதேசத்து மொழி என்பதையே குறித்தல் மறுக் கொணாது.

மேலைத்தொடர் மலைகளில் சந்திரகிரிமுதல் திருவனந்தபுரம்வரை பேசப்படும்மொழி மலையாளம். சென்னைமாகாணத்தில் மாத்திரம் 1931-ல் மலையாளம் பேசிவந்த மக்கள் 40 லட்சம் எண்ணுடையா ரெனத் தெரிகிறது. மலையாளமக்கள் திரவிடர் எல்லாருள்ளும் தனித்து நின்று அன்னியருடைய தொடர்பை அறவே வெறுப்பதோடு குருட்டு நம்பிக்கை மலிந்தவராயுமுளர் என்று கால்டுவேலர் இற்றைக்கு 80 ஆண்டுகட்கு முன்னர் எழுதியது இன்று பொருந்தாது. குருட்டு நம்பிக்கைகொண்டு ஒருவருக்கத்தாரை அடியோடு கோவில்களினின்றும் பொதுவிடங்களினின்றும் நீக்கிவைக்காது "ஹரிசனங்கள்" என்பார்க் குக் கோவில்களைத் திறந்துவிட்ட திருவிதாங்கூர் சமஸ்தானம் குருட்டு நம்பிக்கை யுடையதாமா? டாக்டர் கசின்ஸ் (Cousins) என்ற ஆங்கிலே யரை ஜெயராம் என்னும் இந்தியராக்கிய அச்சமஸ்தானம் குருட்டு நம்பிக்கை உடையதாயின் தமிழ்நாட்டின் எப்பகுதி அஃதற்றதெனற்

பாற்று? திருவிதாங்கூர் பேரரசரும் அவர் தாயார் பேரரசியும் சமஸ்தான மன்னர் பலருள்ளும் விரிந்த நோக்கமுடையாரென்பதும் பல நாடுகள் சுற்றிப் பார்த்தவர் என்பதும் நாமறிந்தனவே யன்றே! அறிந்து வைத்தும் மலையாளநாட்டார் அன்னியர் தொடர்புக்கு அஞ்சுகின்றனர் என்போமா? இன்று இலண்டனிலுள்ள இந்தியா ஆபீஸிலும் ஜினிவா (Geneva) விலுள்ள சர்வதேச சங்கக்காரியாலயத்திலுமுள்ள பதவிகளுள் சிலவற்றை மலையாளிகள் வகித்துவருவதைக் கண்டால் கால்டுவேலர் தாம் மொழிந்ததைத் திருத்தி எழுதுவர் என்பதில் ஐயமில்லை.

வடமொழியாளர்கள் தமிழுக்கும் மலையாளத்திற்கும் வேறுபாடு பல காணுதறிறபோதும் இரண்டையுஞ் சேர்த்துத் திரவிடமென்றே வழங்கினர். ஆனால் மலையாளநாட்டை மாத்திரம் வேறு பிரித்துக் கேரளம் என்று குறித்து வந்ததுமுண்டு. கி. மு. 3-ஆம் நூற்றாண்டிலெழுந்த அசோகருடைய கல்வெட்டுச் சட்டமொன்றில் மலையாளநாட்டு மன்னர் கேரள புத்திரர் எனப்பட்டுள்ளார். எல்லாத் திராவிடமொழிகளுள்ளும் கேரளம் எனும்சொல் திரிந்தோ திரியாமலோ வழங்கி வருகிறது. கால்டுவேலர் கேரளம் எனும் சொல்லை வடமொழியாளர் உடைமையாக்கித் தமிழ்ச் "சேரனை"க் "கேரள"த்தின் திரிபெனப் பகர்வர். அது பொருந்தாது. கன்னடமொழியினர் கேரளம் என்னும் சொல்லை வழங்கிவந்தாராக, அதை அவ்வுருவிலே கொண்டனர் வடமொழியாளர் எனத் தோன்றுகிறது. தமிழ்ச்சொல் 'செவி' என்பது கன்னடத்தில் 'கிவி' ஆதல் போலவும், தமிழ் "செய்"யென் ஏவல் கன்னடத்தில் "கெய்"யென் ஏவல் ஆதல் போலவும், தமிழ்ச் "சேரனும்" "கேரளன்" ஆயிற்று. அம்மொழியில் அதனையே அவ்வுருவில் வடமொழியாளர் கன்னடமக்களிடமிருந்து கடன்வாங்கிக் கொண்டனர். கொண்டாராகவும் இப்பொழுதோ வடமொழிக் கேரளத்திலிருந்து தமிழ்ச் "சேரன்" வந்ததெனக் கூசாது கூறுகின்றனர். தமிழ்ச்சேரன் நமக்குக் கிடைத்துள்ள பண்டைத்தமிழ் இலக்கியங்களுள்ளெல்லாம் காணப்படுகின்றான். "கடுந்தடுதானைச் சேரலாதனை" (புறம்) முதலிய நினைவு கூர்க. பதிற்றுப்பத்துப் பாக்கள் அனைத்தும் சேரமன்னர் மீதே பாடப்பட்டவை. சிலம்பு வஞ்சிக்காண்டம் முழுவதும் சேரன்கொற்றமும் வெற்றியுமே காணப்படுகின்றன. அக்காவியம் இயற்றினவரும் ஒரு சேர இளவரசர். இவையெல்லாம் பழஞ்சேரர் நல்லதமிழ ரென்பதையும் அவர் தம்முள் சிலர் நல்ல தமிழ்க் கவிஞரென்பதையும் காட்டுகின்றன வல்லவா? புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் "சேரன்" என வழங்கியது "சேரலன்" என வழங்கலாயிற்று. திருவாசகத்தில் "தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கன் வரக் கூவாய்" எனக் குயிற்பத்தில் வருவது காண்க. இங்குக் காணப்படும் சேரலன் என்ற சொல் மாணிக்கவாசகருக்கு முந்திய காலத்திலேயே வழங்கியிருத்தல் கூடும். இச்சேரலன் என்ற சொல்லே கன்னடத்தில் கேரலன் எனவாகியிருத்தல் வேண்டும். தமிழ்ச்சொல் 'ஆள்' என்பது

கன்னடத்தில் 'ஆலு' என வழங்கப்படுகின்ற காரணத்தால் இவ் விரண்டு மொழியினிடத்தே லகர ளகர பேதமின்று எனத் தெரிகின்ற மையின் "கேரலன்" "கேரளன்" ஆதல் கூடும்.

மலையாளம் வழங்கிய பகுதிகளில் கடலோரமிருந்த காடே கேரளம் எனச் சொல்லப்பட்டது. உள்நாட்டுப் பகுதிகள் கொங்கு என்னும் பெயரால் வழங்கின. தோயம்புத்தூர், சேலம், மைசூரில் ஒருபகுதி ஆகிய இவையே கொங்கு நாடெனப்பட்டன.

இவ்வளவுஞ் சொல்லிய பிறகு மலையாளம் என்பது தமிழிலக் கியத்திலாதல் பிறநாட்டு யாத்திரீகர் குறிப்புக்களிலாதல் அப்பெயரான் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை என்று சொல்லாதிருத்தல் சாலாது. ஆயினும் கி. பி. 6-வது நூற்றாண்டிலெழுந்த கிறிஸ்துவப் புத்தக மொன்றில் 'மலே' என்று அப்பெயர் ஒருவாறு காணப்படுதல் அறிந்து கோடற்பாற்று.

கோரமண்டலம் என்ற பெயரால் போர்ச்சுகியர் தென்னிந்தி யாவின் கீழ்க்கரைப் பிரதேசத்தைக் குறித்துவந்தனர். இச்சொல் "கருமணல்" என்ற ஒரு நாட்டின் பெயரது திரிபே என்றும் அந்நாடு புலிக்கட்டு என்பதற்கு அண்மையில் உளதென்றும் கூறினர் கால்டு வேலர். பின்னர்ச் சில்லாண்டு கழித்து அவரே தமது கருத்துப் பிழை பட்டமை உணர்ந்து, அச்சொல் சோழமண்டலம் என்பதன் திரிபாகவே இருத்தல்வேண்டும் என்ற முடிபிற்கு வந்தனர். ஆயினும் கோர மண்டலத்தைச் சோழமண்டலத்தின் சிதைவெனக்கொண்டு, சோளம் நிறைந்தநாடு சோழமண்டலம் எனக் கூறிய புலவரும் இருந்தனர். அவர் 'பால்' (Paul) என்னும் பெயருடையார். 1874-ஆம் ஆண்டில் 'ரோலன்சன்' (Rowlanson) என்ற ஒருவர் மொழிபெயர்த்த "மலையாள நாட்டு முகமதியர் வரலாறு" என்ற புத்தகத்தில் தென்னிந்தியக் கீழ்க் கரையில் "சோல்மண்டல்" என்று காணப்படுகிறது. ஆதலின் சோழ மண்டலமென்பது கோரமண்டல மெனப் போர்ச்சுகியக் கடலோடி களால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அதனையே சிலர் "சோல் மண்டல்" என வழங்கினராதல்வேண்டும்.

கி. பி. 1150-ஆம் ஆண்டில் முதன் முதல் "மலபார்" என்ற சொல் எழுந்ததாகச் சொல்லப்படுகிறது. அச்சொல்லால் தென்னிந்தியாவில் மேலைக்கரைப் பிரதேசம் குறிக்கப்பட்டதெனத் தெரிகிறது. ஆயினும் 851-ல் 'மலே' என்றும், 1150-ல் 'மலி' என்றும் இப்பிரதேசமே வழங்கிவந்ததென்றும் புலனாகிறது. "மலீபார்" என அரேபியரும் "மெலிபார்" எனப் போர்ச்சுகியரும் அதனை வழங்கத்தொடங்கிய காலம் கி. பி. 1150 என்பர்.

மலபார் என்ற சொல்லிலுள்ள பகுதி மலை என்பதே. இது 'மல' என்று திராவிடக் குழுமொழிகள் சிலவற்றிற் காணப்படும்; தமிழ்த்

'தலை' கன்னடத்தில் 'தல' ஆவதுபோல, 'பார்' என்பது வடசொல் 'வார' என்பதன் திரிபேயென்றும், வடமொழி வார என்பதன் பொருள், பிரதேசம் என்றும், சிலர் முன்னரெல்லாம் கூறிவந்தார்கள். ஆனல் அது ஒவ்வாது; மலயவார என்பது மலபார் ஆயிற்று என்று சொல்லுவோர் சொல்லுக்குச் சான்றாக மலயவார என்ற சொல் வழக்கை வடமொழியிலும் மலையாள நாட்டிலும் காண்கின்றோமில்லையாகலின். பிறசிலர் தமிழ் அல்லது மலையாள மொழியில் வழங்கும் "வாரம்" என்னும் சொல் மலையடிவாரத்தைக் குறிக்குமன்றே! அதுவே ஈண்டும் காணப்படாகின்றது என்பர். அன்னர் அறிய வேண்டுவதொன்றுண்டு. அஃதாவது "மலபார்" என்ற வழக்கு இந்தியாவிற் புகுமுன் வேறுதேயங்களில் பிறந்துவிட்டதென்பது. பர்சியன் மொழியில் "பார்" என்றால் கரை அல்லது நாடு என்று பொருள்படும். அராபியமொழியும் பர்சிய "பாரை"க் கடன்வாங்கிக் கண்டம் என்ற பொருளில் வழங்குவதாகக் குண்டர்டு கூறுகிறார். ஜான்சிபார் (Zanzibar) என ஓர் ஊரிருத்தல் போல மலபார் என்றதும் மலைநாடு என்றபொருளில் எழுந்ததாகல் வேண்டும்.

IV. கன்னடம்

"கன்னடம்" என்ற சொல் "கர்நாடகம்" என்ற வடமொழிச் சிதைவென்று சில கன்னடப்பண்டிதர்கள் சென்ற நூற்றாண்டில் கருதினர்கள். டாக்டர் குண்டர்டு என்பவரே முதன்முதலாக அச்சொல்லைத் திரவிடக் "கரு" "நாடு" என்ற சொற்களோடு தொடர்புபடுத்திக் காட்டியவர். கருமை—நாடு கருநாடகமாயிற்று என்பர் அவர். கன்னடப் பிரதேசத்தின் கரும்பஞ்சுக்களத்தை நோக்கின் இஃது ஒப்புக் கொள்ளக்கூடியதாயுளது என்பர் கால்டுவேலர். கர்நாடகம் என்ற சொல் பண்டைநாளில் தெலுங்கு கன்னடமொழிகளையும் ஒருங்குகுறித்ததெனச் சொல்லப்படுவதுண்டு. நாளடைவில் கன்னட மொழியையும் கன்னட மக்களையுமே அது குறித்துநிற்கலாயிற்று என்பர். தொல்லை வடிவாகிய "கர்நாடகம்" என்பதைச் கர்நாடக மக்களே கன்னடமென்றும் "கனர" என்றும் வழங்கமுற்பட்டமையால் ஆங்கிலேயமக்கள் "கனரீஸ்" என்பாராயினர். இங்ஙனம் கூறும் கால்டுவேலர் கருத்தைத் திருத்தி உரைக்கின்றார் மகாமகோபாத்தியாய ராவ் பகதூர். R. நரசிம்மாச்சாரியார் என்னும் கன்னடப் பேரறிஞர். அவர் கருத்தின்படி கன்னடம் என்பது "கன்னு" என்பதன் திரிபாவதோடு கன்னுடி என்பதே "கம்மிநாடு" என்பதன் சிதைவாகிறது. "கம்மிநாடு" என்பது மணமுடைநாடு என்னும் பொருட்டாதம். அவ்வூர் மருங்கே காடுபடுசந்தனமும் புனற்படுகமலமும் கடிமணங் கமழலின் இப்பெயர் பொருந்துமென்பர் அப்பெரியார்.

இம்மொழி மைசூரிலும், தென்மராத்திய நாட்டிலும், ஹைதராபாத்துத் தலைவர் ஆட்சிக்குட்பட்ட சில ஜில்லாக்களிலும் வழங்குகின்றது. தென்கன்னட வடகன்னட ஜில்லாக்களிலும் அதன் வழக்

குண்மை எடுத்துரைக்கவேண்டா. நீலகிரிப் பாங்கருள்ள "படகர்" என்பார் கன்னடமொழியின் வழிவந்த ஒருமொழியைப் பயில்கிறார்கள். சென்னை மாகாணத்திலொன்றே கன்னடம் பேசும் மக்கள்தொகை ஒன்பது இலட்சம் இருக்கும்.

கால்டுவேலர் தமிழ்மொழியைச் செந்தமிழ், கொடுந்தமிழ் எனப் பிரித்தவாறுபோலக் கன்னடமொழியையும் பழங்கன்னடம் புதுக் கன்னடம் எனப் பிரித்துள்ளார். ஆனல் ஆங்கிலக் கன்னட அகராதி ஒன்றை இயற்றிய டாக்டர் கிட்டில் (Kittel) என்பார் இம்மொழி வரலாற்றை மூக்கூறுக்கி, முதலது பதின்மூன்றும் நூற்றாண்டோடு முடிவுறும் என்றும், இரண்டாவது பதினைந்தாவது நூற்றாண்டோடு முடிவுறும் என்றும், மூன்றாவது இந் நூற்றாண்டுவரை எட்டும் என்றும் பகர்வர். முதலாவது பகுதிக் காலம்வரைக் கன்னடத்தில் ளகர ழகர பேதம் வழங்கிற்று ; அங்ஙனமே ரகர றகர பேதமும். ஆனல் இரண்டாங் காலப்பகுதியில் ழகரம் அறவே அகற்றப்பட்டுவிட்டது. இக் காலக் கன்னடத்தில் பல வடமொழிப் பிராகிருதச் சொற்கள் வழங்குகின்றன. ஆயினும் தெலுங்குபோன்று மிக்கபல சொற்களைக் கன்னடம் வடமொழியினின்றும் எடுத்துக்கொண்டு தன்னை வடமொழிக்கு அடிமைப்படுத்திக்கொள்ளவில்லை. இதன் காரணம் தெலுங்கர் ஊர் ஆரியநாடாகிய வட இந்தியாவுக்கு அண்மையிலிருப்பதுபோல் கன்னட நாடு அத்துணை அண்மையில் இல்லாதிருப்பது. திரவிடக்குமுமொழிகளுள் யாவையாவை தென்கோடியிலிருந்தனவோ அவைஅவை ஆரியத்திற்கு அடிமைப்பட்டமை குறைவு. அதனல்தான் கன்னடமும் களிதெலுங்கும் வடமொழிக்குக் கடப்பாடுடையனவா யிருக்குந்துணை தமிழும் மலையாளமுமில்லை.

கன்னடம் திரவிடக் குமுமொழிப் பண்பினை நன்குணர்த்தும் காரணத்தாற் போலும் அதனை வடமொழி வழிவந்தது எனக் கூறுவாரில்லை. கன்னடர் கி. மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே சரித்திரத்தில் கூறப்படுகின்றனர். மோரிய மன்னன் சந்திரகுப்தன் சமணம் சார்ந்து மைசூர் சேர்ந்ததாகச் சொல்லப்படுவ துண்மையாயின், மைசூரில் வாழ்ந்த கன்னடர் வட இந்தியத் தொடர்புடையராதல் வேண்டும். அக்காலத்திலேயே சமணமுனிவரும் சாக்கியச்சிலரும் தமிழ்நாட்டிற் புக்கு அந்நாட்டுமொழியில் வல்லுநராகி இலக்கண இலக்கியங்கள் தந்தாராதல் வேண்டும். அங்ஙனமே கிறிஸ்துநாதர் பிறக்குமுன்னர்ப் பௌத்த சமணவந்தேறிகள் கன்னடமொழியிலும் பலநூல்கள் தந்தாராதல் வேண்டும். இவ்வந்தேறிகளுள் எவரோ ஆதிக்கன்னட இலக்கணமாகிய "கர்நாடபாஷா பூஷணம்" என்பதை வடமொழியில் தந்தாரெனச் சொல்லப்படுகின்றது. கன்னட எழுத்தா னெழுதப்பட்டுள்ள ஒரு கிரேக்கநாடகம் அண்மையிற் கிடைத்துளதென்றும், அதன் பெயர் ஆக்ஸிரிங்கஸ், பேப்பிரஸ் என்றும், அது எழுந்தகாலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டென்றும் சில பண்டிதர்கள் பகர்கின்றார்கள்.

V. துளு

துளுமொழியில் இலக்கியங்களுள என்று சொல்லற்கில்லை. துளு மொழிக்கென வடிவெழுத்துத் தனியாக உளதென்றும் சொல்லற்கில்லை. எனினும் திருத்தம்பெற்ற மொழிகளில் வைத்து எண்ணற்குரியது இது என்பது கால்டுவேலர் கொள்கை. துளுநூல்களுள்ளே முதன்முதல் அச்சிடப்பட்டவையெல்லாம் கன்னட எழுத்திலிருந்தன. சற்றேறத் தாழ 9 இலட்சம் மக்கள் துளு பேசுகின்றார்கள். திராவிடருள்ளே இம்மொழியாளரே பழைமையை நன்று பாராட்டிக் கடைப்பிடிக்கிறார் கள். ஒருபுடை மலையாளத்தாலும் மற்றொரு புடை கன்னடத்தாலும் தாக்குண்டும் இம்மொழி அழியா நிலையிலுள்ளது

தமிழினின்று மலையாளம் வேறுபடுவதினும் அதிகமாக துளு மலையாளத்தினின்று வேறுபடுகிறது. அத்துணை அதிகமாக அது கன்னடத்தினின்று வேறுபடுவதில்லை. குடகுமொழிக்கும் அதற்கும் வேறுபாடு குறைவே. அதுபோலவே தமிழிற்கும் அதற்குமுள்ள வேறுபாடு மிக்கது. சந்திரகிரி, கல்யாணபுரி ஆகிய இடங்களில் இது பேசப்படுகிறது என்பர். அவ்வூர்கள் கன்னட ஜில்லாவிலுள.

VI. குடகு

குடகு என்னுமொழியைத் தனித்து எண்ணது கன்னடத்தி னுள்ளே அடக்கிக் கூறினர் கால்டுவேலர் 1856-ல். ஆனால் அவரே இருபது ஆண்டுகள் கழித்துத் தமது கருத்தை மாற்றிக்கொண்டார். மாற்றி, செப்பனிடப்பட்ட மொழிகளுள் ஒன்றாக அதனைத் தனித்து வைத்து எண்ணத் தொடங்கினர். அதனைக் கன்னடத்தின் வழிமொழி (dialect) எனக் கால்டுவேலர் கொண்டார். துளுவக் கலப்பும் இடை யிடையே யுடையது அது என்றனர். ஆனால் மோலிங்கு (Mogling) என்னும் ஜெர்மானியப் பாதிரியாரொருவர் குடகுதேசத்தில் வசித்துப் பழகியவர் வேறுவிதமாகக் கூறுகின்றார். கன்னடத்திலும் குடகிலும் காணப்படும் பொதுத்தன்மையினும் மிக்கதாக மலையாளம் தமிழ் குடகு இவற்றிடைச் சாமியம் உளதென்கிறாவர். குடகு என்னும் சொல்லை நோக்கினும் அது தமிழ்த்தொடர்பு நிரம்ப உடையதேயோ எனும் ஐயம் வலியுறுகின்றது. "குடம்" என்பதன் பொருள் மேற்கு அன்றே? குடபால் எனின் மேலைப்பக்கம் என்றுதானே பொருள்? அவ்வாறே குடகு என்பதும் மேலைப்பிரதேசத்து மொழியைக் குறிக்கலாயிற்றெனத் தோன்றுகிறது. அம்மொழி பேசப்படுமிடம் தமிழ்நாட்டின் மேற்பால் ஆதலின் இப்பொருள் ஒப்புக்கொள்ளத்தக்கதாயே இருக்கிறது. அம் மொழியில் இலக்கியம் என்று சொல்லத்தக்க தொன்றுமில்லை. ஆயினும் அதன் ஒலிகளை யுச்சரிப்பதில் அன்னியர் உறும் அவலம் எடுத்துரைக் கும் தகைத்தன்று.

VII. தோடா.

"தோடா" என்னும் சொல்லும் கூட்டம் என்னும் பொருளுடைய தமிழ் "தொழு" என்னும் சொல்லும் தொடர்புடையன என்பது

டாக்டர் G. U. போப் (Pope) ஐயர் கருத்து. ஆயினும் தோடா என் பதன் தோற்றுவாய் இன்றும் கிச்சயிக்கப்படவில்லை. திருத்தம் பெரு மொழிகளெல்லாம் தமக்கென வடிவெழுத்துப் பெரு திருப்பது போலவே இதுவும் வடிவெழுத்து இன்னும் பெறவில்லை. இம் மொழிபயில் மக்களை நீலகிரியில் இற்றைநாள் காணலாம். ஆயினும் அதுவே அவரது பண்டையநாடு என்று சொல்லவொண்ணுது. அவர்களது எண்ணிக்கை சற்றேறத்தாழ ஆயிரம் இருக்கும். மண்டை யோட்டைக்கொண்டு மக்களின் பெற்றியைக் கண்டுரைக்கும் சாஸ்திரப் பயிற்சியுடைய கர்னல் மார்ஷல் என்பார் தோடருடைய பழக்கவழக்கங்களைக் குறித்துச் சில சொல்லியுள்ளார். கஞ்சா குடிப்பதும் பெண்மகவுக் கொலையும் இவ் வருக்கத்தாரிடை நிரம்ப உண்டு என்று சொல்லப்படுவதுண்டு.

VIII. கோடா

கோடா என்பது கன்னடத்தின் பழைய வழிமொழிகளுள் ஒன்று. நீலகிரியில் வாழும் சில கைவினைஞரால் இம்மொழி பேசப்படுகிறது. அங்ஙனம் பேசுவோர் 1,200 பேரிருப்பர். அவர்களெல்லாம் முன்னொரு காலத்தில் கன்னட நாட்டினின்றும் கடத்தப்பட்டனரெனச் சொல்லப் படுகிறது. நீலகிரியிற் பயிலும் மொழிகளுள் படகர் பேசும் கன்னட வழிமொழி யொன்று; இருளரும் குறும்பரும் பேசும் கொடுந்தமிழ் ஒன்று; இவையேயன்றிக் கோடாவும் ஆங்கே பயில்கிறது.

IX. கோண்டு

மத்திய இந்தியாவின் காட்டுப்பிரதேசங்களிலும் மலைப்பிரதேசங் களிலும் தொன்றுதொட்டுள்ள மக்களால் பேசப்படும் மொழி கோண் டென்பது, அம்மக்கள் தொகை பத்தரை இலட்சம். இம்மொழியைப் பற்றியும் இம்மக்களைப்பற்றியும் அதிகமான செய்திகள் ஒன்றும் தெரிய வில்லை.

X. கூ

"கூ" என்றும் "கோண்டு" (Khond) என்றும் வழங்குகின்ற மொழி கோண்டு (Gond) என்பதனோடு தொடர்புடையது எனச் சிலர் சொல்லுவர். தமிழ்ச்சொல் "குன்று" என்பதிலிருந்தோ தெலுங்கு "கொண்ட" என்பதிலிருந்தோ வந்தது கோண்டு (Khond) என்பர் சிலர். ஆனல் கால்டுவேலர் இதனை ஒப்புக்கொள்கின்றாரல்லர். அம் மொழி பேசும் மக்கள் தங்களைக் கோண்டர் எனச் சொல்லிக் கொள் வதினும் கூவர் எனக் கூறிக் கொள்ளவே விரும்புகின்றனர். ஆகலின் அவரது மொழியின் புராதனப் பெயர் "கூ" எனக் கோடலே பொருந்து மென்பாவர் அம்மொழியில் இடம் ஓரிஸ்ஸா மாகாணத்தி லுள்ள மலையடிவாரம். அதனைப் பேசுவோர் ஐந்தரை இலட்சம் மக்கள் எனத் தெரிகிறது. தோடர்கள் பெண்மகவுக் கொலைக்குப் பேர் போனவர் என்றால், கூவர் குழவிகளைப் பிடித்தோடுவதில் பேர்போனவர்.

அக்குழுவினை வேள்வித்தீக்கு இரையாக்க எனவே பிடித்தெடுத்துச் சென்றனராயினர். ஆனால் இக்கொடுஞ்செயல் நீலமலை காட்டாண்மைக் கழகத்தாருடைய அருட்செயலால் இந்நாள் அகற்றப்பட்டு விட்டது.

XI. ஒரேவான்.

பீகார் ஓரிஸ்ஸா மாகாணங்களின் சிற்சில பகுதிகளில் பயிலும் மொழி ஒரேவானுகவுளது. இம்மொழிபயிலும் மக்கள் எட்டு இலட்சத்தினர். மாலர்மொழி காட்டும் திரவிடப்பண்புகளினும் மிக்க பல வற்றை இம்மொழி காட்டுகின்றது என்பர் கால்டுவேலர். இம்மொழியில் காணப்படும் பண்டைய திரவிடச் சொற்களுள் சில பின்வருவன:—ஆல்—மனிதன். பல்—எயிறு. பாய் (Bai)—வாய். இம்மொழியின் எண்ணுப்பெயர்களாகிய ஒந்த, மூந்து, நாச் முதலிய தமிழ் ஒன்று மூன்று நான்கு ஆகியவற்றை ஒருவாறு ஒப்பன. தமிழ் "நான்" என்பது இம்மொழியில் "என" என்று காணப்படுகிறது. "நாம்" என்பது "எம்" எனவும், "நீ" என்பது "நின்" எனவும், "நீர்" என்பது "நீம்" எனவும் காணப்படுகின்றன.

இங்ஙனம் இராஜமகால் மொழியிலும் ஒரேவான் மொழியிலும் காணப்படும் திரவிடக்குழுச் சொற்களைக்கொண்டு வங்காளம் வரை தமிழர் அக்காலத்துச் சென்று சேர்ந்திருந்தனர் என்பர் கால்டுவேலர்.

XII. இராஜமஹால் அல்லது மாலர்மொழி.

வங்காள தேசத்திலுள்ள இராஜ்மஹால் மலைகளில் வதியும் வெற்பருடையமொழி இராஜ்மஹால் என்பது. அவ்வெற்பர் "மாலர்" என்றும் வழங்கப்படுவர். அவர் மொழியாகிய "மாலர்" என்பது இப்பொழுது இராஜ்மஹால் என்ற பெயரான் வழங்குகிறது. இம்மொழி பேசுவோர் தொகை அறுபத்தி நாலாயிரம்.

இம்மொழியின் இலக்கண அமைப்புக்கள் இன்னும் கன்முகப் புலனுகவில்லை. எனினும் சிலவகைகளில் இம்மொழியும், திரவிடக் குழுமொழிகள் சிலவும் ஒத்திருத்தலின் இதனையும் திரவிடக்குழுவில் அடக்கிக் கூறுகிறார்கள். "கு" என்னும் உருபு கொண்டே நான்காம் வேற்றுமைப் பொருள் இம்மொழியினும் உணர்த்தப்படுகிறது. "நான்" என்னும் தன்மை ஒருமைப் பெயரிலுள்ள னகரம், "நாம்" என்புழி மகரம் ஆதல் போலவே, இராஜ்மஹால் மொழியினும் ஆதல் உண்டு. "அவர்" என்னும் சொல்லின் படர்க்கைப் பன்மை ஈறுகிய "அர்" என்பதே அம்மொழியினும் படர்க்கைப் பன்மை யீறு.

இவ்விலக்கண அமைப்புக்கள் ஒத்திருத்தலேயன்றி, சில சொற்களும் திரவிடமொழிகளோடு ஒத்துள்ளன. உதாரணமாக: நமது "நான்" அம்மொழியின் அன்; பல்—பால; காது—கேது; மீன்—மீன்; ஆய்—ஆய்; ஆள்—அல்; நோய்—நோகி. இவை இராஜ்மஹால்மொழி திரவிடக்குழுவைச் சேர்ந்தது என்று சொல்லுதற்குதவும் சான்றுகள்.

XII. (a) பிரஹுஇ

பலுசிஸ்தானத்தில் வாழும் வெற்பர்மொழி பிரஹுஇ என்பது. அம்மொழி பேசுவோர் இருபது இலட்சத்தினர்க்குக் குறைந்தவரல்லர். இது செப்பனிடப்படாத திரவிடக்குழுமொழியைச் சேர்ந்ததேயோ என ஐயுற்றுத் தெளியாமையின், கால்டுவேலர் தமது ஒப்பிலக்கணப் புத்தகத்தில் இதனைத் திரவிட வருக்கத்தில் அடக்காது விட்டனர். ஆனால் 1911, 1931 ஆகிய ஆண்டுகளில் எடுக்கப்பட்ட ஆட்டொகைக் கணக்குகளில் இம்மொழி திரவிடமொழி எனவே கொள்ளப்பட்டுள்ளது.

கீழ்வரும் காரணங்களினால் பிரஹுஇ மொழியைத் திரவிடக் குழுவின்பாற்படுத்தி உரைத்தல் சாலும் எனத் தோன்றுகிறது.

(அ) திரவிடக்குழுமொழிகளிற் போன்றே இம்மொழியிலும் வேற்றுமையுருபுகள் பெயரின் முன்னரன்றிப் பின்னரே சேர்க்கப்படுகின்றன.

(ஆ) ஒருமைப் பெயரே நின்று பன்மைவினை ஏற்றல் திரவிடக் குழுமொழிகளிற் காணப்படுவதுபோல ஈண்டும் காணப்படுகிறது.

(இ) சில இடங்களில் ரகரமே பன்மையைக் காட்ட உதவுகிறது. "நீங்கள் இருக்கிறீர்கள்" என்பதை அரோரி என மொழிபெயர்ப்பார்கள். இங்குள்ள கடை "ரி" பன்மையைக் காட்டுவதாகச் சொல்லப்படுகிறது.

(ஈ) தான் என்னும் சொல் தன் எனநின்று தன்னை தனக்கு என வேற்றுமை ஏற்பதுபோல பிரஹுஇச் சொல் "தென்" என்பதும் ஏற்கிறது.

(உ) முன்னிலை ஒருமைப்பெயர் அம்மொழியிலும் "நீ" என்பதே.

(ஊ) அம்மொழியில் இரண்டினை "இரத்" என்றும் மூன்றினை "மூசித்" என்றும் வழங்குகிறார்கள். இவற்றுள் "இர்" என்பதும் "மூ" என்பதும் ஆகிய அடிகள் ஒத்துள.

(எ) அம்மொழியில் "ஆய்" என்பது தாயையும், "தீர்" என்பது நீரையும், "பா" என்பது வாயையும், "பில்" என்பது வில்லையும் "கல்" என்பது கல்லையும் குறிக்கின்றன.

இவ்வியைபுகளால் பிரஹுஇமொழி திரவிடக்குழுமொழிகளில் வைத்து எண்ணத்தக்கதா யுளது. இம்மொழி இத்துணை ஒப்புமைகளோடு பலுசிஸ்தானத்தில் வழங்கும் காரணத்தால், மத்திய ஆசியாவிலிருந்து வந்த திராவிடர் இந்தியாவின் வடமேற்குக் கணவாயைத் தாண்டிப் பெலுசிஸ்தான் வழியாக வந்து பின்னர்த் தென்னிந்தியாவில் குடியேறினர் என்பர் சிலர். தென்னிந்தியாவிலிருந்து தமிழ் மக்களில் ஒருசாரார் வடநாடு நோக்கிச் சென்றவர் பலுசிஸ்தானம்வரை எட்டினர் ஆனமையின், அவ்வூரிலும் தமிழொடு ஒத்த பண்புள்ள ஒரு

மொழி காணப்படுகிறது எனக் கொள்வோருமுளர். எங்ஙனமாயினும் பிரஹூஇ செப்பனிடப்படாத திரவிடக்குழுமொழிகளுள் ஒன்று எனக் கொள்ளுந் தகுதியுடைத்தென்பது இதுகாறும் கூறிப்போந்தவாற்றூற் புலப்படும்.

திரவிடக் குழுமொழிகளின் சிறந்த பண்புகள்

திரவிடக்குழுமொழிகளிற் காணப்படும் சில சிறப்புப் பண்புகள் பின்வருவன :—

(அ) இறுதியில் வரும் மெய்யெழுத்துக்களுக்குமுன் குற்றியல் உகரமோ முற்றியல் உகரமோ சிற்சில சமயங்களில் சேர்த்து வழங்குதலுண்டு.

உதாரணமாக, "புள்'' என்பதை, "புள்ளு என்று பரிமேலழகர் திருக்குறளுரையில் கூறியிருப்பதைக் காண்கின்றோம். சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லாரும், 'கள்' என்பதை 'கள்ளு' என்று ஆண்டுள்ளார். இன்னும் பேச்சுவழக்கில் "பால்'' என்பதைப் "பாலு'' என்னுமிடத்தில் ஓர் உகரம் சேர்க்கப்படுதல் உண்மை. தெலுங்கு கன்னடமொழிகளிலும் இங்ஙனமே ஒரு குறுகிய உகரம் வருதலுண்டு. உதாரணமாகத் தமிழ்ப் 'பல்' என்பது தெலுங்கில் "பல்லு'' என்றும், கன்னடத்தில் "ஹல்லு'' என்றும் வழங்கப்படுகின்றது.

(ஆ) திரவிடக்குழுமொழிகள் சிலவற்றுள், "உயிரொலியியையபு'' எனச் சொல்லத்தக்க தொன்று வழங்குகிறது.

உதாரணமாக "கத்தி'' என்னுஞ் சொல்லோடு "கு'' என்ற நான்காம் வேற்றுமை யுருபைக் கூட்டினால் "கத்திக்கு'' எனவன்றே அது நிற்கற்பாற்று! அங்ஙனமன்றி, "கத்திக்கி'' எனத் தெலுங்கில் அது வருகின்ற காரணம், உயிரொலி யியைபே யாகும். வேற்றுமை யுருபுளுள்ள உகரம் இகரமாய்த் திரிந்ததன் காரணம், "கத்தி'' என்னும் பகுதி யீற்றில் இகரம் உண்மையாம். இந்த இடத்தில் முன்னல்வரும் இகரம் நோக்கிப் பின்னல் வரும் உகரம் திரிந்தமை கண்டோம். இனி, இதற்கெதிராகப் பின்னல் வருகின்ற ஓர் உயிரெழுத்தை நோக்கி, முன்னர் வரும் ஓர் உயிரொலி திரிந்து இயைபுறுதலுமுண்டு. உதாரணமாக, "கத்தி'' என்ற சொல்லோடு பன்மை காட்டும் "லு'' சேர்ந்து "கத்திலு'' என ஆகற்பாலது; அங்ஙனம் ஆகாமல் "கத்துலு'' என ஆவதைக் காண்கின்றோம். ஈண்டு, "லு'' விலுள்ள உகரம் நோக்கி, நிலைமொழியிலுள்ள இகரம் திரிந்தியைந்தது.

(இ) திரவிடக்குழுமொழிகளில் காணப்படும் சிறந்த பண்பென, "வல்லெழுத்து மெல்லெழுத்து மாற்றம்'' ஒன்று சொல்லப் படுவதுண்டு.

உதாரணமாக, கல்வி, தப்பு, சோறு, பழம், ஆகிய இச்சொற்களில் வருகின்ற மொழிமுதல் வல்லினங்கள் தமக்குரிய வல்லொலி பெற்றேயுள.

ஆஞல், அகம், பசுமை, ஏதம், பாபம் முதலான சொற்களில், மொழி யிடை வரும் வல்லினங்கள் தமக்குரிய வல்லொலி முழுதும் பெருமல் மெல்லொலி போன்ற தொன்றைப் பெறுகின்றமை காண்கின்றோம். அங்ஙனமே குருகு, அரசு, மருது, தபு என்னுஞ் சொற்களின் கடை யில் வரும் வல்லினங்களும் தமக்குரிய வல்லொலி பெருது மெல்லொலி போன்ற தொன்றையே பெறுதலைக் காண்கின்றோம், இதைத்தான் "வல்லொலி மெல்லொலி மாற்றம்'' எனக் கூறுவது. தமிழ் இலக்கணங் களில் இதற்கேற்ற விதி யாண்டும் ஒன்றும் சொல்லப்பட்டிலதேனும், இக்காலைப் பேச்சுவழக்கில் இவ்வழக்கு இருந்தே வருகிறது. இதன்படி, மொழிக்கு முதலில் வருகின்ற வல்லினங்களே வல்லொலி பெற்றிருக்கு மென்றும், இடை, கடை, இடங்களில் வரும் வல்லினங்கள் தம்மை ஒத்த மெல்லெழுத்துக்களைப் பெருது தனித்தே வருமாயின் தம் ஆற்றல் குறைந்து நிற்குமென்றுந் தோன்றுகிறது. பட்டு என்னுஞ் சொல்லி லுள்ள "டகரம்'' தனக்குரிய வல்லொலி பெற்றொலித்தல், அதனண் மையில் தன்னை யொத்த மெய்யாகிய ''டகரம்'' இருத்தலின் ஆம். மேலும் வடமொழிச் சொல்லாகிய "தந்தம்'' தமிழிலே வரும்போது, "தந்தம்'' எனவே ஒலிக்கப்படுகிறது. வடமொழிச் சொல்லில் முதற் கண் உள்ள தகரம் மூன்றுவதாக இருப்பினும், அது தமிழில் முதலா வது தகரமாகவே வழங்கப்படுகின்றது. அச்சொல்லிலேயேயுள்ள மூன்றுவதெழுத்தாகிய முதல்தகரம் தமிழில் வழங்கும்போது மூன்று வது தகரமாக வழங்குகிறது. இதைப்போன்றே பிற சொற்களும் வந்து வழங்குவன காண்க.

(ஈ) திரவிடக் குழுமொழிகளில், உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடு பெயர்ச் சொற்களிலுண்டு. தெலுங்கில், உயர்திணையை "மகத்'' என்றும், அஃறிணையை "அமகத்'' என்றும் கூறுவதுண்டு.

(உ) வடமொழியிலிருப்பது போலன்றித் திரவிடமொழிகளில் ஒருமையும், பன்மையுமேயுள; இருமையில்லை.

(ஊ) இக்குழுமொழிகளில், பன்மைச் சொற்களே போல் ஒருமைச் சொற்கள் பன்மை விகுதிமுடிபு பெறுவதுண்டு. உதாரணம் கண் கண்டன, தலை யசைந்தன, தோள் பூரித்த என்பனவாம்.

(எ) ஒருமைச் சொற்களுக்கும், பன்மைச் சொற்களுக்கும், ஏற்றப் படும் உருபுகள் ஒருதன்மையனவேயாம். உதாரணமாக "அவன்'' "அவனை'' என ஆவது போலவே "அவர்கள்'' என்பது "அவர்களை'' என ஆகின்றது.

(ஏ) வடமொழியைப் போலல்லாமல், தமிழ் மொழியிலும் பிற திரவிட மொழிகளிலும் உரிச்சொற்கள் வேற்றுமை ஏற்பதில்லை.

(ஐ) திரவிடக் குழுமொழிகள் பலவற்றுள், தன்மைப் பன்மைப் பெயர்கள் இரண்டு காணப்படுகின்றன. அவற்று லொன்று, கேட் போரை யுட்படுத்தும்; மற்றொன்று அகற்றும். உதாரணமாகத் தமிழில்

"நாங்கள்" என்பதும், மலையாளத்தில் "ங்கள்" என்பதும், தெலுங்கில் "மேமு" என்பதும் கேட்போரை விளக்கி யொழிப்பனவாம். ஆனால் தமிழில் "நாம்" என்பதும், மலையாளத்தில் "நாம்" என்பதும் தெலுங்கில் "மநமு" என்பதும் கேட்போரை யுளப்படுத்துவனவாம். இவ்வழக்குத் தமிழிலக்கணங்களில் இன்னும் ஒத்துக்கொள்ளப்படாவிட்டாலும், இந்நாள் உலகிற் பயில்வதுண்மை.

(ஓ) முன்னிலைப் பன்மைப் பெயர்களும் படர்க்கைப் பன்மைப் பெயர்களும் சிற்சிலகால் ஒருமைப்பொருளினும் உயர்வுகாரணமாக வழங்கப்படுதலுண்டு. உதாரணம் நீர்போவிர்; அவர்கேட்பார்; என்பன.

(ஓ) சுட்டுப் பெயர்களைக் கடையில்பெற்று வருகின்ற வினையாலணையும் பெயர்கள் திரவிடமொழிகளிலுண்டு. உதாரணமாக தமிழில், வந்தவன் என்பதும், தெலுங்கில் "கொட்டினவாடு" (அடித்தவன்) என்பதும் ஆம்.

(ஔ) பண்டைக் காலத்தில், திரவிடக்குழுமொழிகளில் வினை விகுதிகள் இல்லாமலே, வினைமுற்றுக்கள் வந்தனபோற் றோன்றுகின்றன. உதாரணம்: பழைய வழக்கில், "செய்து" என்பதன்பொருள், நான் செய்தேன், நீ செய்தாய், அவன் செய்தான், என்பன. அங்ஙனமே "செய்தும்" என்பதன் பொருள், நாம் செய்தோம், என்பது முதலானவை. மலையாளத்தில் "அடிச்சு" என்றால், அடித்தேன், அடித்தாய், அடித்தான், எனினும் பொருளெல்லாம் படும்.

(ஃ) செயப்பாட்டுவினை திரவிடக்குழுமொழிகளில் இல்லை என்று சொல்லப்படுகின்றது. இதன் உண்மை கண்டறியற்பாற்று.

திரவிடக்குழுமொழிகள் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவை

உலகத்திலுள்ள எந்தப் பெருங் குடும்பத்தைச் சேர்ந்தன திரவிடமொழிகள் என்பதைப்பற்றி ஒன்றிய கருத்து இன்றுவரை நாட்டப்படவில்லை. கால்டுவேலர் இந்திய—ஐரோப்பியக் குடும்பத்தில் திரவிடமொழிகளை வைப்பதினும் சீத்தியக் குடும்பத்தில் வைத்தல் நலமென்றார். துருக்க, மங்கோலிய, பின்னிஷ் (Finnish) மொழிகளையெல்லாஞ் சேர்த்துச் "சீத்தியக் குடும்பம்" என ஒன்று உண்டு எனக்கொண்டு, அக்குடும்பத்தின்கண் சார்த்தினர் திரவிடமொழிகளை. திரவிடமொழிகட்கும் இந்தி—ஐரோப்பிய மொழிகட்கும் இலக்கண முறைகளில் பல வேற்றுமைகள் இருக்கின்ற காரணத்தை யொட்டியும், சீத்தியக் குடும்பத்தைச் சார்ந்த 'பிகிஸ்டன்' (Behistun) சாஸனம் ஒன்றிற்கும் திரவிடமொழிகட்கும் உள்ள ஒப்புமைகளைத் தழுவியும் அவர் தமது கருத்தைத் தந்தாராவர். கி. மு. நான்காம் நூற்றாண்டில் அச்சாசனங்கள் எழுந்தன. அச்சாசன மொழிக்கும், திரவிட மொழிகட்கும் உள்ள சில பொதுத்தன்மைகள் சுட்டப்படுகின்றன. அவையாவன :—

திரவிடக்குழுமொழிகள்

(அ) தமிழில் உள்ள டகர ணகர ளகரங்கள் பிகிஸ்டன் மொழியிலுங் காணப்படுகின்றன.

(ஆ) தமிழ் மலையாளம் தெலுங்கு முதலான மொழிகளின் கான்காம் வேற்றுவை யுருபாகிய "கு" ஒருவாறு ஆண்டும் காணப்படுகிறது.

(இ) இருமொழிகளினும் ஆரும் வேற்றுமை உணர்த்தும் அகர உருபுண்டு.

(ஈ) தமிழில், முதலாம், இரண்டாம், மூன்றும் என்றெல்லாம் சொல்கின்ற இடங்களில் வரும், 'ஆம்' என்பதற்கொப்ப "ஈம்" என்பதைப் பிகிஸ்டன் மொழி இவ்விடங்களில் ஆளுகின்றது.

(உ) தமிழில், "நீ" என்னும் முன்னிலை ஒருமைச் சொல் இருப்பது போலவே, பிகிஸ்டன் மொழியிலும் அது அவ்வடிவிலேயே காணப்படுகிறது.

இன்னோரன்ன ஒப்புமைகளால் கால்டுவேலர் திரவிடக்குழுமொழிகள் சீத்தியக் குடும்பத்தைச் சேர்ந்தன எனச் செப்பினர்.

"முல்லர் பிரெடரிக்" என்பார், தமிழ்மொழி, சிங்களமொழி, வட இந்தியாவில் காணப்படும் மூண்டமொழி, ஆகிய இவையெல்லாம் ஒரு காலத்தில் தனிப்பகுப்பாக இருந்தன என்றும், அவற்றினின்றும் இப்பொழுது பெயர்ந்து நிற்பன திரவிட மொழிகள் என்றும் கூறியுள்ளார். அவர் கூற்றை மறுத்துரைத்துள்ளார் பேராசிரியர் கிரையர்ஸன். அவர் பின்வருங் காரணங்களால் திரவிடமொழிகளும் மூண்ட மொழிகளும் வேறுபட்டன என்பதை நிறுவியுள்ளார். அவையாவன:—

(அ) மூண்ட மொழிகளில் அரைமெய்கள் இருப்பது போலத் திரவிடக்குழுமொழிகளில் இல்லை.

(ஆ) திரவிடக்குழுமொழிகளில், பொருள்களை உயர்திணை, அஃறிணை எனப் பகுத்திருப்பது போல, அம்மொழிகளில் பகுக்கப்படவில்லை.

(இ) திரவிட மொழிகளில் ஒருமையும் பன்மையுமேயிருப்பவும் அம்மொழிகளில் இருமை வேறுபிரித் துரைக்கப்படுகிறது.

(ஈ) வேற்றுமை உருப்புகளும் வேற்றுமை ஏற்கும் முறைகளும் இருதிறத்து மொழிகளிலும் வேறுபட்டு நிற்கின்றன.

(உ) திரவிடர்கள் பத்துப் பத்தாக எண்ணுவது போலன்றி, மூண்ட மொழி பேசுவோர் இருபது இருபதாகக் கணக்கிடுகின்றனர்.

(ஊ) திரவிட மொழிகளும் மூண்ட மொழிகளும் பெற்றிருக்கும் வினைச்சொற்களும், பெயரை வினைப்படுத்தும் முறைகளும் வேறுபட்டிருக்கின்றன.

திரவிடக்குழுமொழிகள்

ஆகலின், திரவிடக்குழுமொழிகள் அறியப்படாத ஏதோ ஒரு தனிக் குடும்பத்தைச் சேர்ந்தவை யென்றும், அக் குடும்பம் சிங்கள மொழியையும் மூண்ட மொழியையும் உள்ளடக்கி இருந்தது எனக் கூறுதல் பொருந்தாது என்றும் ஊகிக்கலாம்.

இனி, வேறுசிலர் திரவிடக்குழுமொழுகள் இந்திய ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பர். அங்ஙனம் கூறுவோர் போப் ஐயர், சேஷகிரி சாஸ்திரியார் முதலானவராவர். அவர்தம் கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டப்படுவன பின்வருவன சில:—

(அ) சில இடங்களில் வகர, யகர உடம்படு மெய்யை ஆளாது தமிழ், கன்னடம் தெலுங்கு முதலான மொழிகளில் நகரம் அல்லது னகரம் ஆளப்படுவது போல இந்திய-ஐரோப்பிய மொழிகளிலும் ஆளப் படுகின்றது. உதாரணம் (தமிழ்) சொல்லின— (வடமொழி) அஞ்தி.

(ஆ) படர்க்கைப் பெயரிலே மட்டும் பால் காட்டும் விகுதிகள் தமிழில் காணப்பட்டுத் தன்மை முன்னிலைப் பெயர்களிடத்தில் காணப் படாது இருப்பதன் காரணம் திரவிட மொழிகள் இந்திய ஐரோப்பியப் பண்பை ஏற்றுக்கொண்டதால் ஆகும் என்பர்.

(இ) அண்மைச் சுட்டு 'இ' எனத் தமிழில் வருவதுபோலவே இந்திய ஐரோப்பிய மொழிகள் சிலவற்றிலும் வருவது உண்மை. தமிழில் 'இது' என்பது சமஸ்கிருதத்தில் 'இதம்' எனப்படும்.

(ஈ) தமிழில் தகரம் இறந்தகாலம் காட்டுதல்போலவே, அம்மொழி களிலும் அது சிறுபான்மை இறந்தகாலம் காட்டுகிறது.

உதாரணம்: ஜீத = ஜெயித்த.

(உ) முதனிலை நீண்ட தொழிற் பெயர்கள் தமிழில் வருதல்போல, அம்மொழிகளிலும் வருதலுண்டு.

(ஊ) பகுதி இரட்டித்து இறந்தகாலம் தமிழில் காட்டுவதுபோல அம்மொழிகளிலும் காட்டுவதுண்டு.

இனைய காரணங்களால் இந்திய ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்தவை திரவிடமொழிகள் என்பர். ஆனால், அது பொருந்தாது. பொருந்தாமைக்குரிய காரணங்களை இனிக் காண்போம்.

திரவிடமொழிகளிலே பெயர்ச்சொற்களை உயர்திணை குறிப்பன என்றும், அஃறிணை குறிப்பன என்றும் வகுத்துள்ளார்கள். உயர்திணை யின் பாற்படும் ஆண்பால் பெண்பால் பலர்பாலாகியவை. அஃறிணை யின் பாற்படும் ஒன்றன்பாலும் பலவின்பாலும். இம்முறை வடமொழி யிற் காணப்பட்டிலது. அம்மொழி முறைப்படி ஆண்பால் பெண்பால் பொதுப்பால் ஆகியவே காணப்படுகின்றன. தமிழில் பால்வேறுபாடு பொருளளவான் கொள்ளப்படுகிறதே யல்லாமல் சொல்லளவான் கொள்ளப்படுவதில்லை. ஆனால் வடமொழியிலோ வேறு முறை காணப்

படுகிறது. பெண்பாலையே குறிக்கக்கூடிய சொல் ஒருகால் பெண்பாலாகவும், ஒருகால் ஆண்பாலாகவும், மற்றொருகால் பொதுப்பாலாகவும் வழங்குகின்ற விதத்தை வடமொழியில் காண்கின்றோம். உதாரணம், மனிஷி என்னும் பொருளைக் குறிக்கின்ற மூன்று சொற்கள் வடமொழியிலுள. அவைதம்முள் "பார்ய" என்பது பெண்பாற்சொல். "தார" என்பது ஆண்பாற்சொல். "கலத்ர" என்பது பொதுப்பாற்சொல்.

இனி, தமிழில் அஃறிணையில் வைத்து எண்ணப்படும் சிலபொருள்கள் வடமொழியில் ஆண்பாலாகவும் பெண்பாலாகவும் வருகின்ற தன்மையைக் காண்கின்றோம். 'கோல்' என்னும் பொருளில் வருகின்ற 'தண்ட' என்ற சொல் ஆண்பால். 'கல்' என்னும் பொருளைக் குறிக்கும் 'சிலா' என்னும் சொல் பெண்பால். "அசுவ" என்பது ஆண்பால்.

திரவிடமொழிகளில் உரிச்சொற்கள் வேற்றுமையுருபுகள் ஏலா; பெயரே ஏற்கும். வடமொழியிலோ பெயர்ச்சொல்லுக்கு வேற்றுமையுருபுகள் கூட்டுதல்போல உரிச்சொற்களுக்கும் கூட்டி விகற்பித்துக் காட்டலாம். உதாரணமாக, "பாபமானகாமம்" எனும் தொடர் "பாபஸ் காமஸ்" என்று வழங்கும். "பாபமான காரியத்தை" என்பதை "பாபம் காமம்" என்பார்கள். மூன்றும் வேற்றுமையில் "பாபேன காமேன" என்ப. இப்படியே எல்லா வேற்றுமைகளிலும் பெயர்ச்சொல்லைத் திரித்துக் கூறுவது போலவே உரிச்சொல்லையும் திரித்துக் கூறுவது வடமொழியிலன்றி தமிழ்மொழியிலில்லை.

வடமொழியோடு ஒத்தமொழிகளில் காணப்படுவது போன்று உரிச்சொற்கள் தனித்த முறையில் தமிழிற் காணப்படவில்லை. ஆனால் தமிழில் பெயரெச்சங்களே பெரும்பாலும் உரிச்சொற்களினுடைய இடத்தை எடுத்துக்கொள்ளுகின்றன. உதாரணமாக, வந்த மனிதன், பெருகிய வெள்ளம் என்ற சொற்றொடர்களில் உள்ள "வந்த" "பெருகிய" என்பன உரிச்சொற்கள் (adjectives) எனத் தமிழிற் கொள்ளப்படவேண்டும். இந்த முறையில் வடமொழிப் பெயரெச்சங்களில்லை. திரவிடமொழிகளுள்ளே தன்மைப் பன்மைப் பெயர்கள் "நாம்" எனவும் "நாங்கள்" எனவும் இரண்டு வகையாகக் காணப்படுகின்றன. இவை தம்முள் முன்னது பேசப்படுவோரையும் உட்கொண்டது. "நாங்கள்" என்பதோ கேட்போரையும் சொல்லுவோரையும் உள்ளடக்காது கேட்போரை விலக்குவது. இம்முறை வடமொழியிற் காணப்பட்டிலது.

தமிழில் காணப்படும் உண்ணஉடுக்கப் பூணப்பூச என்றாற்போலவரும் செவ்வெண் வடமொழியிலில்லை. இவ்வளவு வேறுபாடுகள் வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் இருப்பவும், எந்த மொழியறிவுள்ள மகனும் வடமொழியினின்று தமிழ்மொழி வந்ததென விளம்பமுன்வரான். வருவானேயாயின் நகைக்கு நிலைக்களனுவன். அங்ஙனமே ஆகின்றார் கோல்புரூக்கு (Colebrooke) முதலான சில புலவர்கள். அவர்கள் வழுக்கி வீழ்ந்ததன் காரணம் சில உள. அவையாவன:—

திரவிடக்குழுமொழிகள்

(அ) திரவிடமொழிகளிலே காணப்படும் தனித்திராவிடப் பண்புகள் நிரம்ப இருப்பவும், அவற்றினும் குறைவாகவே வடமொழிப் பண்புகளாகத் தமிழில் வந்து வழங்குவ உள. இதனை அவர் அறிந்திலர்.

(ஆ) முன்னிலை ஒருமைப் பன்மைப்பெயர்களும் தன்மைப் படர்க்கைப் பெயர்களும் எண்களும் வினைக்குறியீடுகளும் வாக்கிய அமைதியும் ஆகிய இவைகொண்டே ஒரு பாஷையினுடைய உண்மை உயிர்ப்பண்பு கண்டறியப்படவேண்டும் என்பதையும் இவர் மறந்தனர் போலும்.

(இ) அவர் வடமொழியிலிருந்து தமிழ்மொழியில் வந்து வழங்கும் சொற்களெல்லாம் தமிழ்மொழியில் வடமொழியாக்கம் என்ற தலைப்பின் கீழ் வைத்துத் தமிழ்மொழிச் சொற்களினின்று வேறுபிரித்து வழங்கப் படுகின்றன என்பதையு மறிந்திலர்.

(ஈ) செப்பனிடப்படாத் திரவிடக்குழுமொழிகள் சிலவுள என் பதையே கண்டறியாத ஒருகாலத்தில் வாழ்ந்தோர் அன்னோராதலின், அச்செப்பனிடப்படாமொழிகளுள் வடமொழிச் சொற்கள் செப்பனிடப் பட்டுள்ள மொழிகளுள் வழங்குமத்தனை வழங்கவில்லை என்பதையும் அறியாது போயினர்.

(உ) ஒரு மொழியினுடைய இலக்கணப் பண்புகளையும் முறைகளை யும் கொண்டே அம்மொழி பிறிதொருமொழியொடு தொடர்புடைய தாமா என்று கண்டறிவதே சிறப்புடைத்தன்றிச் சில வார்த்தைகள் ஓரொருகால் ஒத்த உருவத்திலும் பொருளிலும் இருமொழிக்கண்ணே வழங்குவது கொண்டு மொழித்தொடர்பை முடிபுகூறல் சாலாது என் பதை அறியாது விட்டனரோ? அறிந்தும் மறந்தனரோ? யாமறியேம். இக்காரணத்தாலும் இன்னோனையர் குற்றத்திற்கு ஆளாயினர்.

ஒருமொழி உருவத்தானும் பொருளானும் ஒத்த பிறிதொரு மொழியின் சொல்லை வழங்குகின்ற காரணத்தானென்றே ஒருமொழி மற்றொரு மொழியினின்றும் வந்தது என்று சாதிக்க முற்படுதல் தீயது. இம்மொழியிலக்கண உண்மையை எவரும் மறக்கலாகாது. இக்கால், தமிழ் இலக்கியங்களிலோ முற்காலத்தமிழ் இலக்கியங்களிலோ வட மொழிச் சொற்கள் மிக்கும் குறைந்தும் வழங்குகின்ற காரணங் கொண்டு தனித்தமிழ்ச் சொல்லெனச் சிலவும் இல என எவரேனும் சொல்வாரேனும் இவரும் நகுதக்கனரே. இக்காலை, தமிழ்மொழி சிலபல வடமொழிச் சொற்களை வழங்குகின்றதாயின் அச்சொற்களெல் லாம் தமிழுக்கு இன்றியமையாதன என்பதானல்லாமல் அவையெல்லாம் விளையாட்டுப் பொருள்கள் என்று கருதி வழங்கப்படுவதே காரண மாதல் வேண்டும். இக்காலில் தெலுங்குமொழி தன்பாலுள்ள வட மொழிப் பண்புகளையும் வடமொழிச்சொற்களையும் அகற்றுதல் அரிது. அதனினும் கன்னடமொழி தன் வடமொழிப்பண்புகளை விடல் அரிது. அரிதினும் அரிதே மலையாளம் அவற்றை விலக்குதல். ஆனல் தமிழ்

திரவிடக்குழுமொழிகள்

மொழியோ வேண்டுமாயின் வடமொழிப்பண்புகளையும் சொற்களையும் அறவே அகற்றித்தள்ளும் ஆற்றலுடைத்து. அங்ஙனம் அகற்றுகின்ற முகத்தான் தனித்து நிற்பதோடன்றி ஒப்பின்றி மிளிரவும் மிளிரும். பண்டைத் தமிழ் இலக்கியங்களை நோக்கநோக்க எவை தம்முள் வடமொழிச் சொற்கள் குறைந்தவளவில் உளவோ அவையே செந்தமிழ்ப்பனுவல் எனப் போற்றப்படுகின்றன. ஒரு தமிழ்நூலில் வடமொழிப் பண்புகள் மிக்குக் காணப்படின் அந்நூல் செந்தமிழ் நூலன்று என்று சொல்லும் தகைத்து. நாட்டுப்புறங்களில் வாழும் தமிழ்மக்கள் பேசுமொழி இத்தகைய வடமொழிப் பண்புகளால் இன்னும் பழுறவில்லை. நகர்களில் வசிக்கும் தமிழ்மக்களெல்லாம் தம் தனித்தமிழ்ச் சொல்லாகிய சோறு, நீர் என்பவற்றையெல்லாம் மறந்து சாதம், ஜலம் என்றெல்லாம் வழங்குகின்றாராயின், அவர்களெல்லாம் தக்கோரெனப் பிறர் சிலரால் மதிக்கப்பட வேண்டும் என்ற கருத்திலை செய்வார் ஆதல் வேண்டும். கால்டுவேலரே கூறுகிறார்: "தமிழ்மொழி அறவே வடமொழிச் சொற்களை ஒழித்தல் கூடும். அன்றி வடமொழிச் சொற்கள் பெரும்பாலனவற்றையாகிலும் ஒழித்தல் கூடும். அப்படி ஒழிக்கின்றவகையான் மிக்க தூய உயரிய நடையை தமிழ்மொழி எய்துதல் திண்ணம். ஆனால் இதைப்போன்று ஆங்கிலம் தான் கடன்வாங்கி நிற்கும் இலத்தீன் சொற்களை விடுமேயாயின் தன் தெளிவுடைமையையும் விட்டதாகும்."

கால்டுவேலர், சீத்தியக் குடும்பத்தைச் சார்ந்தன திரவிடமொழிகளெல்லாம் என்னும் தமது கூற்றுக்குச் சான்றாகப் பின்வருஞ் சில திரவிடச் சொற்களும் சீத்தியக் குடும்பச் சொற்களும் ஒத்துள எனக் காட்டுகின்றார்.

தமிழ்	சீத்தியக்குடும்பம்
அத்தன்	அத (தூருக்கு)
அன்னை	அனை (மார்டுவின்)
அம்மாள்	அம்மா (சமாய்டு)
ஆம்	ஆம் (வோகல்)
கல்	கல்லெ (லாப்பிஷ்)
கோழி	கொரெ (வோகல்)
தீ	தி (சமாய்டு)
பிள்ளை	பில்லா (தார்த்தார்)
விளக்கு	விலாகு (ஹங்கேரியன்)

என்பன. கால்டுவேலர் தமது கருத்துக் காதாரமாகச் சில சொல்லுருவங்களைக் காட்டினாராயினும், அவைகொண்டு ஒருமொழி மற்றொரு மொழியைச் சார்ந்தது என நிறுவுதல் கூடாது. கால்டுவேலரே தமது கருத்தில் திண்ணமான நம்பிக்கை வைத்தவரல்ல ரென்றும் புலனாகின்றது. எப்படியெனிற் கூறுதும்.

கால்டுவேலர் தமது ஒப்பிலக்கணப் புத்தகத்தின்கண்ணே பல்வே றிடங்களிற் பல்வேறு கருத்துக்களைத் தந்துள்ளாராதலின் என்க. அங்ஙனம் வருகின்ற இடங்களிற் சில பின்வருவன :—

(அ) சீத்தியக் குடும்பத்தில் சார்த்தித் திரவிடமொழிகளை வழங்கு வதே, இந்திய ஐரோப்பியக் குடும்பத்திற் சார்த்தி வழங்குவதினுஞ் சிறந்தது.

(ஆ) திரவிடமொழிகள் சித்தியக் குடும்பத்திற்கும் இந்திய ஐரோப்பியக் குடும்பத்திற்கும் இடையேயுள்ள ஓரிடம் பெறத்தக்கன.

(இ) பெரும்பான்மையானும் முக்கிய பண்புகளானும் திரவிட மொழிகள் சீத்தியக் குடும்பத்தைச் சேர்ந்தவை எனச் சொல்ல விரும்பு கின்றேன்.

(ஈ) திரவிட மொழிகளெல்லாம் எக்குடும்பத்தைச் சேர்ந்தன என்பதைப்பற்றிப் பலர் பலவாறு பேசியிருப்பினும், எவரும் முற்றுற ஆராய்ந்தாரல்லர். காணும் இப்புத்தகத்தில் கூறுவன வெல்லாம் முற்றிய ஆராய்ச்சியாற் கூறினேன் எனக் கருதுகின்றேனல்லேன்.

இங்ஙனங் கருத்து சற்றுச்சற்று பிறழ்ந்து கால்டுவேலரே கூறி யிருக்கின்ற காரணத்தால் அவர் முடிபு துணிந்த முடிபாகாது என்பது வெளிப்படை. உண்மை நோக்கின் சீத்தியக் குடும்பமென ஒரு குடும் பமேயில்லை யென்பதே இற்றைநாள் மொழிவல்லுநர் துணிபு. மொழிக் குடும்பத்திற்கு இருக்கவேண்டிய பண்புகள் "சீத்தியக் குடும்பம்" எனச் சொல்லப்படுவதன்கண் காணோம். உலகிலுள்ள எல்லா மொழி களையும் மூன்றே குடும்பத்தின்பாற் படுத்தவேண்டும் என்னுங் கொள்கை கொண்டசிலர், இந்திய ஐரோப்பியக் குடும்பம் செமிட்டிக் குடும்பம் ஆகிய இவ்விரண்டு குடும்பங்களில் அடங்கா மொழிகளை யெல்லாம் சீத்தியக் குடும்பமொழிகளெனச் சொல்லி வைத்தனர். ஒரு குடும்பத்தில் ஒரு மொழியோ பலமொழிகளோ அடங்கவேண்டுமாயின், அம்மொழிகளிடையே காணப்படும் இலக்கணப் பண்புகளும் முறை களும் முதன்மையாகவும், சொற்களும் சொற்பொருள்களும் பின்ன தாகவும் ஒத்திருத்தல் வேண்டியது இன்றியமையாதது. சீத்தியக் குடும்பத்தில் வைத்து அடக்கப்படும் மொழிகளெல்லாம் தம்முளே ஒத்திலவா யிருப்பவும், அவைதம்மை ஒரு குடும்பமெனவைத்து எண்ணியது யாங்ஙனம் ஒக்கும்? அவையெல்லாம் ஒத்திருந்தா லன்றே அவற்றின் பொதுத்தன்மைகள் பிறகுழுவைச் சார்ந்த மொழி களின் பொதுத்தன்மைகளோடு பொருவன எனக் கூறல் கூடும்? ஆகலின், கால்டுவேலர் காட்டியுள்ளனவாய் நாம் மேலே கண்ட சில சொல்லுருவங்களால் பெறப்படும் பொதுத்தன்மை பெரும் பயனியை வில்லை. அவர் காட்டியனவாக நாம் மேலேகண்ட சில இலக்கணப் பண்புகளும் முறைகள்தாமும் சீத்தியக் குடும்பமொழிகளினின்று திரவிட மொழிக்கு வந்தன என்று கூறமுடியாது. ஆயின், பொதுத்

தன்மைகள் இத்துணை காணப்படுகின்றனவே, காரணம் என்னையோ வெனின், மக்களது ஒத்த பண்பானும் மக்கள் வாழ்ந்த இடங்கள் ஒத்திருந்தமையானும் மக்களது ஒத்த ஆற்றலானும் ஆதல் கூடும் என்க.

கால்டுவேலர் கொள்கையைக் கடிந்து ஒதுக்குவார் பேராசிரியர் கிரையர்ஸன். அவரே யன்றித் தெலுங்கு அறிஞராகிய இராம கிருஷ்ண ஐயா என்பவரும், கன்னட நிபுணராகிய இராவ் பகதூர் நரசிம் மாச்சாரியரும், தமிழ் கற்றோராகிய M. சீனிவாச ஐயங்காரவர்களும் கால்டுவேலர் கருத்துக்கு முரண்பட்ட கருத்துக்களை யுடையவர்களாவர். மேலும் அமெரிக்கா தேயத்து மொழியிலக்கண வல்லுநராகிய விட்னி என்பவரும் கால்டுவேலர் கொள்கையை மறுத்துரைத்துள்ளார்.

இதுகாறும் கூறிப் போந்தவாற்றால், சீத்தியக்குடும்பமொழிகளின் பால் தமிழை இனப்படுத்தலாகாது என்பதும், இந்திய—ஐரோப்பியக் குடும்பத்தின்பால் வைத்தெண்ணுதல் கூடாதென்பதும் கண்டோம். சிங்களம், மூண்டமொழி, திரவிடமொழிகள் ஆகிய இவைகள் சேர்ந்து ஒரு தனிக்குடும்பமென முன்னளில் நின்றன என்று சொல்லுதலும் சாலாதென்பதுங் கண்டோம். சுருங்கக்கூறின், கால்டுவேலரே தமது கொள்கை முற்றுப்பாடுடைத்தென்று கூறுகின்றாரல்லர். அவரே சீத்தியமொழிகளுக்கு வேண்டிய ஒப்பிலக்கண மொன்று இதுகாறும் எழுதப்பட்டிலாமையைக் குறித்துப் பெரிதும் வருந்துகின்றார். அம் மொழிகளுக் கமைந்த ஒப்பிலக்கண மிருந்தாலன்றே திரவிட மொழி களுக்கும் அம்மொழிகளுக்கும் ஒத்த பொதுப் பண்புகள் உளவா எனக் கண்டறியக் கூடும்? மேலும் சீத்திய மொழிகள் என எண்ணப்படு கின்றன வெல்லாம் ஒருதனிக் குடும்பப் பண்புடையவல்ல வென்பதையும் முன்னரே கண்டுள்ளோம். உலகத்திலுள்ள மொழிகளில், இந்திய ஐரோப்பியக் குடும்பத்திலும் செமிட்டிக் குடும்பத்திலும் வைத்து எண்ணியன வொழித்து ஒழிந்தன வெல்லாம் ஒருதனிக் குடும்பமென் றும், அக்குடும்பத்திற்குச் சீத்தியக் குடும்பமெனப் பெயரென்றும், கூறுவதன் பெருந்தாமையை முன்னரே கண்டுள்ளோம். சீத்தியக் குடும்ப மொழிகளுக்கும் திரவிடமொழிகளுக்கும் இடையே காணப் படும் இலக்கண முறை யியைபுகளெல்லாம், ஒத்த தகுதியானும், ஒத்த ஆற்றலானும் ஒத்த இடங்களானும் அமையக் கூடியனவே. அதாவது, சீத்தியர்களும் திரவிடர்களும் ஆற்றலானும் தகுதியானும் பிறவாற்றா னும் ஒருபுடை ஒத்தவரென்றும், அதுகாரணமாக அவர்தம் இலக் கணங்கள் ஒத்துச் சென்றன என்றும் கூறுதல் கூடுமென்பதாம். இனி, இலக்கணப் பண்புகள் எவ்வளவு ஒற்றுமை காட்டுகின்றனவோ, அவ் வளவுக்குமேல் சொற்கள் மாத்திரம் பிறசான்றுகள் தந்துவிடமாட்டா. இலக்கணப் பண்புகள் ஒத்திருந்தாலொன்றே போதாது; சொற் பொருள்கள் ஒத்திருக்கின்றனவா என்பதாராயப்பட்டு, ஒத்திருப்பின், இருவேறு மொழிக் குழுக்கள் ஒரு குடும்பத்தில் வைத்தெண்ணப்படல் வேண்டும்.

இக்காரணங்களால் நோக்குழி, திரவிடக் குழுமொழிகளெல்லாம் எந்தக் குடும்பத்திலும் வைத்து அடக்கத்தகாத ஒரு "தனிக்குழு" என்ற முடிவுக்கே வரவேண்டியவர்களாய் உள்ளோம். கிரையர்ஸனும் கால்டுவேலர் கொள்கையை நன்காராய்ந்த பிறகு பின்வருமாறு கூறுகிறார்:—

"திரவிடக்குழுமொழிகளே இந்தியாவின் அப்பாலுள்ள மொழிக் குடும்பங்களிடைவைத்தெண்ண முற்படும் முயற்சிகளெல்லாம் பாழ் பட்டனவாகலின், அவையெல்லாம் தனித்து நிற்கும் ஒரு குழு வென்றுதல் ஒரு குடும்பமென்றுதல் கூறுதலே தகுதியுடைத்து."

உலகத்திலே உள்ள எல்லா மொழிகளும் தக்க, தக்க குடும்பங் களின்பால் வைத்து அறுதியிடப்பட்டுவிட்டன என்று கூறுதல் முடி யாது. உலகில் எண்பது மொழிக்குழுக்களுக்குக் குறையாமல் தனித்த தனித்த குழுக்களாகப் பல உள என்பது "டாக்டர் டக்கர்" என்பார் கருத்து. இக்கருத்தை யொட்டி நோக்கினால், திரவிடக் குழுமொழிகள் எக்குடும்பத்தின்பாலும் சேர்த்தலாற்றாது, தனித்து நிற்கும் ஒரு குழு என்று சொல்லுதல் வழுவன்று.



தமிழின் தொன்மை

(வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள், B. O. L. (M. U.))

திராவிட மொழிகட்குள் பழமையானது 'தமிழ்' என்பது ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒப்புக்கொண்டதோர் உண்மை. ஆனால், அவர்கள் இன்றுள்ள தமிழைப் பிற திராவிட மொழிகளின் 'தாய்மொழி' எனக் கூற மறுத்தனர். என்னை? பிறமொழிகளில் இல்லாத பழைய சொற்கள் மிகப்பல தமிழில் இருப்பினும், மிகச்சில சொற்கள் ஏனைய திராவிடமொழிகளில் இருத்தலே காரணம், என்க. ஆயினும், சீனம், ஆஸ்ட்ரேலியா, மத்திய ஆசியா, போர்நு (மத்திய ஆப்ரிக்கா), பலுசிஸ்தானம் இவ்விடங்களில் உள்ள மொழிகளில் தமிழ்த் தொடர்பு காணப்படுகின்றதே அன்றி ஏனைய திராவிடச் சொற்களின் தொடர்பு காணப்படல் அரிது. மேலும், இன்று புதுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிந்துப்பிரதேச திராவிடர் காகரிகத்தும் தமிழ் எழுத்துக்களே மிகுதியாகக் காணப்படுகின்றன[1] எனக் கூறப்படுதலும் நோக்கத் தக்கது. இவையன்றி, வேதங்களில் புகுந்த முக்தா (முத்தம்), ஓடா (ஓடம்) முதலிய சொற்களும் தமிழ்ச் சொற்களாகவே காணப்படுகின்றன என்பதும் கன்கறியத் தக்கது. இவற்றுல், திராவிடமொழிகளில் மிகப் பழமையானதும் தாய்மொழியானதும் 'தமிழே' என்பது ஈண்டு அறியத் தகும் அருஞ்செய்தியாகும்.

இன்றுள்ள தமிழ்ச்சொற்கள் பல மிகப்பழைய காலத்தில் பேசப் பட்டவை அல்ல என்பதை நினைவிற் கோடல் நலம். பல சொற்கள் வட இந்திய திராவிட பாஷைகளான ஓரயான் (Uraon), இராஜ்மஹால் (Rajmahal), ப்ராஹி (Brahui) இவற்றில் பழைய வடிவுடனும் உச்சரிப்புடனும் காணலும், அவையே இன்று தமிழில் வேறுபட்டுக் காணலும் இவ்வுண்மையை உறுதிப்படுத்துவதாகும். இதன் மென்மையை கன்குணராமல் செந்தமிழுக்கு (செப்பஞ் செய்யப்பெற்ற தமிழுக்கு) முற்பட்ட தமிழ்ச்சொற்களே மேற்கூறிய வட இந்திய திராவிட மொழிகளி

1 Vide Father Heras's article on 'Light on the Mohenjo Daro Riddle' in 'The New Review', July, 1936, (pp. 14, 15.)

லும் தென்னிந்திய திராவிட மொழிகளிலும் காணப்பெறுவன என்னும் உண்மையை உணராமல் 'தமிழ், திராவிட மொழிகளிற் பழமையானது; திராவிட மொழிகட்குத் 'தாய்மொழி' என ஒன்றிருந்திருத்தல் வேண்டும்' எனக் கால்ட்வெல் முதலியோர் கூறிச் செல்வாராயினர். இஃது தொழிக. இனி, இத்தமிழின் தொன்மையைச் சிறிதளவு ஆராய்வோம்:

திராவிடமொழிகள் இந்து-ஐரோப்பிய மொழிகளோடு ஒப்புரவு கொள்ளாது மத்திய ஆசியமொழிகளுடன் பெரிதும் ஒப்புமை கொண்டுள்ளது காணத்தக்கதொரு காட்சி என டாக்டர் கால்ட்வெல் கழறியது கவனிக்கத் தக்கது. மத்திய ஆசிய மொழிக்கூட்டம் 'சிதியன்குடி' எனப்படும். அது கி. மு. 5-ஆம் நூற்றாண்டில் திறம்படப் பேசப்பெற்ற மொழி இனம் ஆகும். அச்சிதியன் மொழிகளுடன் திராவிட மொழிகள் இலக்கண அமைதியும் பெற்றுத் திகழ்தல் பாராட்டற்குரியது. இதனை வியந்து பாராட்டிய கால்ட்வெல் பாதிரியார், ''இவ்வொருமைப் பாட்டால், திராவிடர், சரித்திர காலத்துக்குப் பன்னெடுங்கால முன்னரே இந்தியாவிற் குடியேறி இருந்தபோதிலும், முதலில் மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர் உக்ரோ-துரேனியர், ஆரியர் இவர்களை விட்டுப் பிரிந்தவர் பிரிந்து, இந்தியாவை அடைந்தவர்; வருகையில் பலுசிஸ்தானத்தில் தங்கள் கலையை விதைத்தவர் என்பன அறியலாம்''[1] எனவும், ''வட ஐரோப்பாவில் உள்ள பின்ஸ் (Fins) மக்கள் மொழியிலும், சைபீரிய மக்களான உக்ரியர் ஆஸ்டியக்கர் மொழிகளிலும் திராவிட மொழிகளிலும் உள்ள தெளிவான ஒருமைப்பாடு காண வியப்பைத் தருகிறது. இதனால், சரித்திர ஆதாரம் சிறிதும் இல்லாதிருந்தும் பாஷை ஒற்றுமை ஒன்று கொண்டே டெக்கான் பிரதேசத் திராவிடர் டியூடன்ஸ், ஹெல்லென்ஸ் என்பவர்க்கும், இவர்கட்கு முன் ஐரோப்பா வந்த 'செல்டியர்' என்பவர்க்கும் முன்னர் ஐரோப்பா முழுவதும் பரவியிருந்தனர் எனக் கொள்ளவேண்டுவதாகவுள்ளது. 'எல்லா நாட்டு மக்களும் ஒரே உதிரம்கொண்டவராக இறைவர் இயற்றினர்' என்னும் கூற்று முக்காலும் உண்மையெனத் தோற்றுகிறதே!''[2] எனவும் வியப்பாராயினர். இதுபற்றியே புறநானூற்றுத் தமிழரும், "யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' எனக் கூறிப் போந்தனரோ? என யாமும் ஐயுறுகின்றேம்.

"மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள 'போர்நு' பாஷை, பிற ஆப்பிரிக்க மொழிகளைப் போலின்றித் திராவிட மொழிகட்குரிய முறையிலேயே அமைந்திருத்தல் வியக்கத்தக்கது. வேற்றுமை உருபு முதலிய உருபுகளைப் பெயர்-வினைகட்குப் பின் சேர்க்கும் முறையும், சொல்லிலேயே எதிர்மறை உருபு அடங்கியிருத்தலும் முன்னிலை ஒருமை 'நீ',

1 Vide 'Comparative Grammar on Dravidian Philology' Int. p. 67 (3rd Edition.)

2 Ibid p. 68.

என்றிருத்தலும் பிறவும் திராவிட பாஷைக்கும் அதற்கும் உள்ள ஒருமைப் பாட்டினை உணர்த்துகின்றன. இது மேலும் கன்கு ஆராய்தற்குரியது.[1]

"தமிழ் மக்கள் தங்கள் நூல்களைக் கி. மு. 7-அல்லது 6-ஆம் நூற்றாண்டில் எழுதத்தொடங்கி யிருத்தல் வேண்டும். ஆயினும், அதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே—திராவிட மக்கள் தென்னாடு போந்து தனித்தனி காடுகளைத் தாபித்த பிறகே—அவர்கள் முதலில் பேசிய மொழியும் வேறுவேறுகப் பிரிவு பெற்றதாதல் வேண்டும். அங்ஙனம் அவர்கள் பிரிந்த காலம்—திராவிட மொழிகள் பிரிந்தகாலம்—அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. ஆயினும், அவை ஆரியர் வருகைக்கு முன்னரே (கி. மு. 1600) பிரிந்திருத்தல் கூடும். 'ப்ராஹி' மொழியில் உள்ள திராவிட மொழியின் மிகப்பழைய பழமையை அறுதியிட்டுக் காட்டுவனவாகும். அவையே தென்இந்திய திராவிட மொழிகளில் உள்ள பல சொற்கட்கும் முற்பட்டவை. எனவே, அவற்றின் காலம் கி. மு. 1600-க்கும் மிக—மிக முற்பட்டவையாகும்"[2]

ஆரியர் இந்தியா நுழைந்த காலம் சுமார் கி. மு. 2600 ஆக இருக்கலாம் என்பது சர் ஜான்மார்ஷல் கருத்து[3]. இதன்படி காணில், ப்ராஹியில் உள்ள தமிழ்ச் சொற்களின் காலமும், தென் இந்திய திராவிட மொழிகள் பிரிந்த காலமும் (ஆரியர் வருகைக்கு முற்பட்டதெனக் கால்ட்வெல் கூறுதல் ஒப்புக்கொள்ளப்படின்) கி. மு. 2600-க்கு முற்பட்டதென அறிக.

தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே 'செந்தமிழ்' (செப்பஞ் செய்யப்பட்ட தமிழ்) எனத் தமிழ் வேறுபடநின்றமையும், வடவேங்கடம் தென்குமரிக்குட்பட்டுத் தமிழகம் சுருங்கிவிட்டமையும் கால்ட்வெல் பாதிரியார் கூற்றை ஆதரித்தல் காண்க.

"பால்முறை உலகில் உள்ள வேறெந்த மொழிகளின் தொகுதிகளிலும் (Seythian, Indo-European and Scemitic languages) திராவிட மொழிகளில் உள்ள பண்பட்டவகையில் காணல் இயலாது. இந்த முறையில் திராவிட பாஷை தனித்து நிற்கக் காணலாம்,"[4] எனவும், "'நீ' என்னும் முன்னிலை ஒருமை பேஹிஸ்டன் பட்டயங்களிலும் சீன மொழியிலும் காணப்படலும் அதே சொல் திராவிட மொழிகளில் காணப்படலும் வியக்கத்தக்கன. சீனபாஷை மிகப் பழையது. இதுவே ப்ராஹி பாஷையிலும் போர்து பாஷையிலும், ஆஸ்ட்ரேலிய சுதேசிகள் பாஷைகளிலும் காண்டல் இப்பாஷைகளின் பழமையை வலியுறுத்

1. Ibid. p. 77.
2. Ibid. p. 105.
3. Vide his 'Mohenjo-Daro and the Indus civilization', Int, p. 1.
4. Vide 'Caldwell's comparative Grammar', p. 251.

துவதாகும்[1]'' எனவும், ''பேசுவோர், தம்மையும் கேட்போரையும் உளப்படுத்தி 'நாம்' எனக்கூறவும், கேட்போரை விலக்கித் தம்மை மட்டும் 'நாம்' எனக்கூறவும் உள்ள வசதி திராவிட பாஷைகட்கே உண்டு. இவ் விருபொருள் வழக்கு முறை வடமொழியிலோ இந்து-ஐரோப்பிய மொழிகளிலோ இல்லை. ஆயின் இது சிதியன் பாஷைகளில் உள்ளது; போலினியேஷியன் மொழிகளிலும் அமெரிக்க மொழிகளிலும் ஆஸ்ட்ரேலிய சுதேச மொழிகளிலும் உண்டு,''[2] எனவும், "அவன், இவன். உவன், எவன், யாவன் என ஐம்பால்களிலும் வரும் சுட்டு, வினைப் பெயர்களின் அழகான—வேதாந்தமயமான ஒழுங்குமுறை உலகில் உள்ள வேறு எப்பாஷையிலும் எந்த மொழி இனத்திலும் காணல் இயலாது! இம்முறைக்கு இரண்டாவதாகக் கூறத்தக்கதும் இல்லை!! இவ்வொழுங்குமுறை செவ்வனே அமையப் பெற்றமொழி தமிழ் ஒன்றே''[3] எனவும், "ஏகார ஓகாரங்கள் வினைப்பொருளில் வருதல் திராவிட பாஷைகளைத் தவிர வேறெந்த உலக பாஷையிலும் இல்லை. அவை வடமொழிக்கே தெரியாதவை; காஷ்மீர மொழியில் மட்டுமே காணலாம்'' எனவும்,[4] பிறவாறும் கூறப்படும் உண்மைச் செய்திகள் பொதுவாகத் திராவிடமொழிகளின் தொன்மையையும் சிறப்பாகத் தமிழ் மொழியின் பழமையையும் பறையறைகின்றன.

ஆரியர் இந்தியா வருமுன் இந்தியா முழுவதும் தமிழ் மொழியே பரவியிருந்ததென்பது உண்மை. என்னை? சிந்து, பஞ்சாப்—பிரதேசங்களில் கடைபெற்ற ஆராய்ச்சியின் பயனாக அங்குத் திராவிடபாஷை வழக்கில் இருந்ததென்பது நன்கு துணியப்பட்ட உண்மை. ''மோஹென்ஜோ—தாரோ, ஹரப்பா என்னும் இருபட்டணங்கட்கும் இடைப்பட்டதூரம் 400 மைல். ஆயினும், இரண்டு இடங்களிலும் அகப்பட்டபொருள்கள், எழுத்துக்கள், பிற—யாவும் ஒரேமாதிரித்தைக் காட்டுவனவாகும். இது வியக்கத்தக்கது[5]. கி. மு. 2750-க்கு முன்னரே திராவிடர் எழுத அறிந்திருந்தனர்''[6]. அவ்விடங்களில் கிடைத்துள்ள குறிகளைப் போன்றவற்றைக் கொண்ட மட்பாண்டங்கள் ஹைதராபாத் சமஸ்தானத்திலும்,[7] அக் குறிகளைக் கொண்ட காணயங்கள் திருநெல்வேலி ஜில்லாவிலும் கிடைத்துள்ளன[8]. எனவே, சிந்துப்பிரதேச திராவிடர் காலத்தில் (கி. மு. 3250—கி.மு. 2750) இந்தியா முழுவதும் ஒரே பாஷை,

1. Ibid. pp. 392, 393.
2. Ibid. p. 414.
3. Ibid. pp. 422, 426.
4. Ibid. p. 442.
5. Vide 'Mahenjo-daro and the Indus civilization', Vol. i. p. 91.
6. Ibid. vol. II p. 415.
7. Hydrabad Archealogical Society Journal, 1917.
8. Mysore Archealogical Report, 1935.

ஒரே நாகரிகம் பரவி இருந்தன எனக் கோபுரத்தின்மீதிருந்தும் கூசாமற் கூறலாம். மேலும் சில ஆதாரங்களைக் காண்போம்.

"நாவிற் பிறப்பனவான (Linguvals) 'ட், ண்' என்பன திராவிட மொழிக்குரியவை. அவற்றை வடமொழி இந்தியாவுக்கு வந்தவுடன் கைக் கொண்டது. என்னை? வேறு இந்து-ஐரோப்பிய மொழிகளில் இவை இல்லை யாதலின் என்க. இவை ப்ராஹ்மி பாஷையிலும் உண்டு. ஆரியர் சிந்துப் பிரதேசத்தில் தங்கியிருக்கையில் இவற்றைக் கடன் பெற்றிருத்தல் வேண்டும். எனவே, வட இந்தியாவில் திராவிட பாஷை அப்போழ்து இருந்திருத்தல் வேண்டும் என்பது வெள்ளிடை மலை."[1]

"தன்மை ஒருமையின் மாறுதல் (வேற்றுமை உருபு ஏற்கையில்) ('நா' அல்லது 'நன்' என்பது) தெலுங்கு, கன்னடம், கு (Ku), 'காண்ட்' (Gond) மொழிகளில் காணப்படுகிறது. 'என்', 'ஞ்' (மலையாளம்) என்பன தமிழ்-மலையாளத்தைச் சேர்ந்தவை. முதல் வேற்றுமை—அன்னு (காண்ட்), நான், யான் (தமிழ்), ஞ்யான், யான் (மலையாளம்), நேனு, ஆனு (கன்னடம், தெலுங்கு, கு.) இவற்றுக் குள்ள ஒற்றுமை நயம் காணத்தக்கது: காண்ட், கு—இவ்விருமொழி களும் நெடுங்காலமாகத் தமிழ்—மலையாளம் இவற்றிலிருந்து பிரிக்கப் பட்டிருப்பினும் மேற்கூறிய ஒற்றுமை நயம் இருத்தல் இன்றைய தமிழ் நூல்கள் செய்யப்பெற்ற பழைய காலத்தைப் போல மும்மடங்குள்ள பழைய காலத்தில் வட இந்திய சமவெளிகளில் இற்றைத் தமிழர் முன்னோரும் இற்றைக் 'காண்ட்' மக்கள் முன்னோரும் கலந்திருந்த நிலைமையை நன்கு விளக்குவதாகும். அஃது எக்காலமாயினும், அப்பொழுது 'நான், யான்' என்பன இரண்டும் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும். இவற் றுள் பழையது 'யான்' என்பதே."[2] இங்கிலீஸ் ஆரியர் வருகைக்கு முற்பட்டதென்பது கூறுமல் உணரக்கூடுமன்றே?

"பிரதி பன்மைப் பெயர்கட்கு 'ம்' சேர்க்கப்படல்—'காண்ட்' மக்களும் தமிழ் மக்களும் ஓரினத்தவராக ஓரிடத்தில் (வட இந்தியாவில்) வாழ்ந்திருந்தபோது—பிராக்ருத பாஷை சிதைந்து இப்போதுள்ள வட இந்திய (கௌரிய) மொழிகளாக மாறுவதற்கு நெடுங்காலத்துக்கு முன் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது."[3]

"நாம்" என்னும் தன்மைப் பன்மைச் சொல் பேசுபவரையும் கேட் போரையும் குறிப்பதோடு, கேட்போரை விலக்கிப் பேசுவோரை மட்டுமே குறிப்பதும் உண்டு. இவ்விருவழக்கு உடைமை சிறிதளவு மராத்தி, குஜராத்தி, மொழிகளில் காணக்கிடத்தல்—வட இந்திய மொழி

1 Vide Caldwell's 'Comparative Grammar' p. 148.
2 Ibid p. 368.
3 Ibid p. 412.

களில் திராவிடமொழிகளின் உயிர்நாடி ஓரளவு கலந்துள்ளது என்பதைக் காட்டுவதாகும். ஏனெனில் இவ்வழக்கு வடமொழியிலோ, இந்து ஐரோப்பிய பாஷைகளிலோ இல்லை! இல்லை!![1].

"கி. மு. 2500-ல் (ஏறக்குறைய) ஆரியர் இந்தியாவில் நுழைந்தனர். அதற்குமுன் பஞ்சாப், சிந்துப் பிரதேசங்கள் திராவிட நாகரிகத்தில் மூழ்கி இருந்தன என்பது சிந்துப் பிரதேச ஆராய்ச்சியால் வெளியாகிறது. சிந்துப்பிரதேச திராவிடர் கி. மு. 3000-ல் வாழ்ந்த சுமேரியரை ஒத்திருந்தனர்; அச் சுமேரியரும் திராவிடராகக் கருதப்படுகின்றனர். எனவே, சிந்துப் பிரதேச நாகரிக காலத்தில் ஆரியர் இந்தியாவில் நுழைந்திலர் என்பது தேற்றம்"[2]

"ஆரியர் திராவிடரை எளிதில் விரட்டி நாட்டைக் கைப்பற்றக் கூடவில்லை. அவர்கள் பலுசிஸ்தானத்திலிருந்து வங்காளம் வரை பரவி யிருந்தார்கள். அவர்களே மெதுவாகவும் படிப்படியாகவுமே ஆரியர் வென்றனர்; ஆயினும், திராவிடர் தங்கள் கலைகளையும் மொழியையும் ஆரியர் மீது தெளித்தனர் என்பது உண்மை."[3]

"வடஇந்தியமக்கள் ஆரியர்க்கு அடிமைப்பட்டு அவர்கள் மொழியைப் பேசத்தொடங்கியதும் அதனில் தங்கள் உச்சரிப்புக்களும் புதுச் சொற்களும் அவர்களை அறியாமலே கலந்துவிட்டன. எனவே, வடமொழி சிதையலாயிற்று; இறுதியில் வேத பாஷையினின்றும் வேறுபட்டதாகிப் 'பிராக்ருதபாஷை' (பொது மக்கள் பாஷை) எனப் பெயர் பெறலாயிற்று."[4]

"எ, ஒ—இரண்டும் 'பாலி' பாஷையிற் காணப்படலும், பல்லிடத்தே பிறக்கும் எழுத்துக்களை நாவிற் பிறப்பனவாக உச்சரித்தமையும் ஆரியர்க்கு முற்பட்ட மக்கள் மொழியையும் பழக்கத்தையும் காட்டுவன. இன்றைய திராவிடர் மொழிகளில் இவை காணப்படலால், இத்திராவிடர் முன்னேரே பாலி பாஷை (ஆரியர் ஆட்சியில்) பேசினவராதல் வேண்டும்."[5]

"ஆரியரது கரடுமுரடான வடமொழியைத் திராவிடரும் கோலரும் பேசியதால் உண்டானவையே, இப்போதுள்ள வட இந்திய ஆரிய மொழிகள். வேதமொழி—இவர்கள் கூட்டுறவால் இன்றையமாறுதல் பெற்றதோடு, திராவிட முறைப்படி எளிமையாக்கவும் பட்டது. வேத கால ஆரியர் நாகரிகம் ஹெல்லென்ஸ், இட்டாலியர் முதலிய மேனாட்டார் நாகரிகத்தையேஒத்திருந்தது; 'மறுபிறப்பு' என்பதுபற்றிய பேச்சே ரிக்

1 Ibid p. 414.
2 Vide N. K. Dutt's 'Aryanisation of India' (1925)
3 Vide Sunitikumar Chatterji's 'Origin and Development of the Bengali Language'—p. 28.
4 Vide Prof. Woolner's 'Introduction to Prakrit', p. 10
5 Vide Dr. R. G. Bhundarkar's 'Collected Works', Vol. 4, p. 293.

வேதத்தில் இல்லை. ஆத்மவுணர்வுடைய ஆரியரல்லா (திராவிட) மக்களிடமிருந்தே அது ஆரியர் கொண்டிருத்தல் வேண்டும். பஞ்ச பூதங்களைப் பற்றிய சில நினைவுகள் திராவிடருடையனவே; திராவிடருடைய சில கடவுளரின் வழிபாட்டை ஆரியர் கைக்கொண்டனர். ரிக்வேத பாஷை பல அம்சங்களில் இந்து-ஐரோப்பிய நிலையில் இருப்பினும், அதன் உச்சரிப்பு மாறுதல் அடைந்துவிட்டது; அப்பாஷை சில திராவிடச் சொற்களையும் கோலர் சொற்களையும் கடனும் பெற்றது. அவற்றுள் சில வருமாறு:—அணு, அரணி, கபி, கர்மார (கருமான்), கால (காலம்), குட (குடிசை), கண (இயம்), நானு (பல), நீல, புஷ்பம், பூசனை, பல (பழம்), பீஜ (விதை), மயூர (மயூரம், மயில்), ராத்ரி (இரவு), ரூப (வடிவம்)."[1]

"வேதகால சம்ஸ்கிருதமும் சம்ஸ்கிருத மொழியும் வழக்கு வீழ்ந்து விடினும், அவ்விரண்டிலும் பழைய இந்திய மொழிகள் (ஆரியமல்லாச் சொற்கள்) கலந்துள்ளமை கண்கூடு. இக்கலப்பைவிட ப்ராக்ருத மொழிகளில் சுதேச மொழிக் கலப்பு மிகுதியாகக் காணப்படுகிறது. உச்சரிப்பு முதலிய பல அம்சங்களிலும் வடஇந்திய மொழிகளில் திராவிட நாடி இருந்துவருகிற தென்பதில் இம்மியளவும் ஐயமில்லை. இதனை விளக்க நூற்றுக்கணக்கான உதாரணங்கள் கூறலாம்."[2]

"தமிழ்மொழி வடமொழிக் கலப்பு மிகச் சிறிதளவே கொண்டது. பழைய நூல்களில் அதுதானும் காணல் அரிது. அதுபோலவே தெலுங்கும் கன்னடமும் ஒரு காலத்தில் ஆரியக் கலப்பற்றதாக இருந்திருத்தல் வேண்டும். இன்றேல், திராவிட உயிர்நாடி அம்மொழிகளில் பேரளவு இருத்தற்கிடமில்லை."[3]

பழைய (ஹள) கன்னடம் தூயதமிழாக இருப்பதும், பழைய மலையாளம் தூயதமிழாக இருத்தலும் அவ்வம்மொழிப் புலவரே ஒப்புக் கொண்டுள்ள உண்மையாகும். அதுபோலவே பழைய தெலுங்கும் தூயதமிழாகவே இருந்திருத்தல் வேண்டும். ஆனால், ஆரியக்கலப்பு விரைவாகவும் எளிதாகவும் பெறத்தக்க இடத்தில் தெலுங்குமொழி இருந்தமையே அது முதலில் வடமொழிக் கலப்புப் பெற ஏதுவாயிற்று. இக்கலப்பு சரித்திர காலத்துக்கு முன்னரே ஏற்பட்டு விட்டதால், தெலுங்கின் பண்டைய வடிவம் இப்போது நிச்சயிக்கக்கூடவில்லை. எனினும் அது தமிழே என்பதில் எவருக்குத்தான் ஐயம் உண்டாகும்? நமது பண்ணையாள் 'காத்தான்' மகன் 'கறுப்பன்' இங்கிலாந்திற் படித்து 25 வருடம் கழித்து உருமாறி வந்தாலும்—'காத்தான் மகன் கறுப்பன்' ஆவனே அன்றி 'வெள்ளையன்' (தோற்றம் வெண்மையாக இருப்பினும்) ஆகமாட்டான் அல்லவா?

1 Vide 'Origin & Development of the B. L.'—pp. 41—45.
2 Vide 'Studies in Dravidian Philology'—pp. 29—34.
3 Ibid p. 40.

தமிழின் தொன்மை

செயப்பாட்டுவினை தமிழில் (திராவிட மொழிகளில்) இல்லாதிருத்தல் போலவே வடஇந்திய மொழிகளிலும் சரியான முறையில் இல்லை. திராவிட பாஷைகளில் 'படு' என்பது துணையாக நின்று செயப்பாட்டுவினையை உணர்த்தல் போலவே வட இந்தியமொழிகளிலும் துணைவினை ஒன்று தனியே நின்று செயப்பாட்டு வினையை உணர்த்துகின்றது. 'அடி உண்டான்' என வருவதில் உள்ள 'உண்' என்பது போன்ற சொல் ஒன்று திராவிட பாஷைகளில் இருப்பது போலவே வட இந்திய பாஷைகளிலும் இருக்கிறது.[1] இன்னும் இவை போன்ற பல ஒருமைப் பாடுகளைக் காட்டலாம்; விரிப்பின் பெருகும்.

இதுகாறும் கூறப்பெற்ற மறுத்தல் இயலாப் பல்வகை ஆதாரங்களால்—இந்திய மொழிகளில்—என்? உலகப் பழைய மொழிகளில், திராவிட மொழி சிறந்த ஒன்று என்பதும், இந்தியாவில் வடமொழிக்கு முற்பட்டது அதுவே என்பதும், அத்திராவிட மொழிகளில் தமிழே தொன்மையுடையது என்பதும், அத்தமிழே பேரளவில் சிந்துப் பிரதேச திராவிடரால் பேசப்பட்டதென்பதும், இந்தியா முழுவதும் பலுசிஸ்தான முதல் வங்காளம் வரை மேற்குக் கிழக்காகவும், இமய முதல் பண்டைக் குமரி வரை வடக்குத் தெற்காகவும் பேசப்பட்ட தனிப்பெரும் பாஷை என்பதும், அதனைப் பேசி வந்த திராவிட (தமிழ்) மக்களே இந்தியா முழுவதும் பரவியிருந்தனர் என்பதும், அவர்களில் ஒரு பகுதியினரே பாபிலோனிய நாகரிகத்தைத் தோற்றுவித்த 'சுமேரியர்' என்பதும் நடுநிலை நின்று நாடுவார் நயம்பெற உணரும் நற்செய்திகள் ஆகும்.

வையகம் எங்கும் தெய்வத் தமிழ்

சிந்துப்பிரதேச திராவிடர் ஆரியர் வருகைக்கு முன் இருந்தவர். அவர்கள் பாஷையே இப்பொழுது பலுசிஸ்தானத்தில் காணப்பெறும் சிதைவுடைய 'ப்ராஹி' என்பது[2]. சிந்துப்பிரதேச நாகரிகத்துக் குரியவர் ஆரியர்க்கு முற்பட்ட திராவிடரேயாவர்[3]. ஆரியர் வட இந்தியா வந்தவுடனே 'தாஸ்யுஸ்' என்ற வகுப்பாருடன் போரிட்டனர் என்பதும் அவர்கள் நல்ல நாகரிகத்தில் இருந்தவர் என்பதும் ரிக் வேதமே கூறுகிறது. இதிகாச காலத்தில் (கி.மு. 1400—கி.மு. 750) வட இந்தியாவில் திராவிடர் இருந்தனர் என்பது தேற்றம். காந்தாரர், மஹிசர், மச்சர், நாகர், கருடர், பஹ்லியர் அனைவரும் திராவிட வழியினரே[4]. 'ப்ராஹி, ஓரயான்' என்னும் இரண்டு திராவிட

1. Vide Caldwell's 'Comparative Grammar', pp 464, 465, 466.
2. Vide Hunter's 'The Script of the Harappa and Mohenjo—Daro and its connections with other Scripts'—p. 12
3. Vide Prof. R. D. Banerji's 'Pre-historic, Ancient and Hindu India' p. 10
4. Ibid p. 38

மொழிகள் வட இந்தியாவில் இருந்தலே வட இந்தியா முழுவதும் திராவிடர் இருந்தனர் என்பதை உறுதிப்படுத்துகிறது. சிந்துப்பிரதேச ஆராய்ச்சியில் காணப்பெற்ற எழுத்துக் குறிகள் கி. மு. 5000-ன் இடையில் காணப்பெற்ற 'இபிரியன்' எழுத்துக்குறிகளையும், 'லிபியன்' எழுத்துக்குறிகளையும் 'மினோவன்' எழுத்துக்குறிகளையும் ஒத்துள்ளன. ஈஜிப்டியர் பழைய எழுத்துக் குறிகளையும் அவை ஒத்துள்ளன. இச்சிந்துப் பிரதேச திராவிடரோடு கலந்தபின் சுமேரியர், சிந்துப் பிரதேச எழுத்துக்குறியீடுகளைச் சில மாறுதல்களோடு தமவாக்கிக் கொண்டனர்; கி. மு. 2500-ல் எழுதப்பெற்ற சீன எழுத்துக் குறிகள் இச்சிந்துப் பிரதேச எழுத்துக் குறிகளை ஒத்துள்ளன[1]. தென் அமேரிய 'சபியன்' மொழியிலும் திராவிட எழுத்துக் குறிகளைக் காணலாம்[2]. திராவிட பாஷைகள் மத்திய ஆசியாவில் உள்ள சித்தியன் பாஷைகளைப் பெரிதும் ஒத்துள்ளன; உறங்கேரிய பாஷையையும், ஆப்பிரிக்க 'போர்நு' பாஷையையும் ஒத்துள்ளன என்று டாக்டர் கால்டுவெல் கூறுதலும் அதற்குரிய அசைக்க முடியா ஆதாரங்களைக் காட்டலும் இங்கு நினைவிற் கோடல் கலம். இவை அனைத்தையும் ஒன்றுபடுத்து நோக்குக. மேலும், "சிந்துப்பிரதேச திராவிடர் சுமேரிய நாடடைந்து அங்கிருந்த அநாகரிக மக்கட்கு எழுத்துமுறை-கலை இவற்றைக் கற்பித்தனர்; இதுவே மேல் நாடுகளிற் பரவலாயிற்று. அத்திராவிடர் ஈஜிப்ட், ஸ்பெயின் முதலிய இடங்களில் உலகம் புகழ்தற்குரிய நாகரிகத்தைத் தோற்றுவித்தனர்; இங்கிலாந்து, ஐயர்லாந்து, ஸ்காண்டிநேவியா முதலிய இடங்களிலும் பரவித் தங்கள் நாகரிகச் சின்னங்களை ஏற்படுத்தினர். அவ்விடங்களில் ஈழம், புதுக்கோட்டை, பழனிமலைத்தொடர் இவ்விடங்களிற் காணப்பெறும் கல் மேசைகள் (Dolmens or chrombechs) இருந்தலே இதற்குச் சான்றும்"[3] என்பதும் நோக்கத்தக்கது. இவற்றுல் பழைய உலகத்தில் (ஆசியா, ஐரோப்பா, ஆப்ரிக்கா, ஆஸ்ட்ரேலியா) திராவிடர் நாகரிகமே முற்பட்டது என்பது ஐயமற அறியக் கிடத்தல் காண்க.

இனி இந்திய எழுத்து முறையைக் காண்போம்: "மோஹெஞ்சோ—தாரோ எழுத்துக் குறிகள் ஹைதராபாத் சம்ஸ்தானத்தில் காணப்பெற்ற பழைய சமாதிகள் மீதும், திருநெல்வேலி ஜில்லாவில் கண்டெடுக்கப்பட்ட மட் பாண்டங்கள் மீதும் நீலகிரியில் உள்ள பாறைச் சாஸனங்களிலும் காணக்கிடைக்கின்றன. எனவே, இந்தியா முழுவதும் இக்குறிகள் வழக்கத்தில் இருந்தன என்பது தன்கு புலனும். வட இந்தியாமீது படையெடுத்த ஆரியர் முதலில் எழுதக் கற்றிருந்தனர் இல்லை.

1. Vide Heras's, 'Light on the Mohenjo-Daro Riddle'—pp. 56, 'The New Review', July, 1936.
2. Vide Hunter's 'The Riddle of Mohenjo-Daro—p. 319 'The New Review', April 1936
3. Vide Heras's lecture, 'Madras Mail' (21—10—37)

பின்னரே அவர்கள் கற்கலாயினர். அதன் விளைவே அசோகனுடைய வடபிராமி சாஸன எழுத்துக்களாக மாறியது. அவ்வெழுத்துக்கள் சிந்துப் பிரதேச திராவிட எழுத்துக்களின் நேரான வளர்ச்சியுடையன அல்ல. வளர்ச்சி மாறுதல் ஆரியரால் ஏற்பட்டது. அசோகனுடைய தென் பிராமி சாஸனங்களே நேரான வளர்ச்சியுடையவை. அவை தென் இந்திய திராவிடரால் பாதுகாக்கப்பட்டன. தமிழ் மொழி, சிந்துப் பிரதேச திராவிடர் எழுத்துக்களின் தொடர்புடையதென்பதை எழுத்து முறை கொண்டும் வளர்ச்சிகொண்டும் கன்கறியலாம் ''[1].

" மோஹெஞ்சோ—தாரோவில் வாழ்ந்த மக்களும் தென் இந்திய திராவிடரும் ஓரினத்தவரே. அவர்கள் இரு பிரிவினரும் பேசிய மொழி யும் ஒன்றே '' [2].

'' சிந்துப்பிரதேச திராவிடர் இராசிமண்டலத்தை கன்கறிந்தவர் அவர்கள் காலத்தில் இராசிமண்டலத்தில் 8 இராசிகளே இருந்தன. சுமேரியர் காலத்தில் பத்து இராசிகள் கணக்கிடப் பட்டுள்ளன. இத் திராவிடர் இராசிமண்டலகம் கண்டு பிடித்த காலம் சுமார் கி. மு. 5610 எனக் கணக்கிட்டுக் கூறலாம். இக்காலம் சுமேரியர் நாகரிகம் ஏற் படாத காலம் ஆகும் ''[3].

இதுகாறும் கூறிய ஆராய்ச்சியாளர் முடிபுகளால் சிந்துப்பிரதேச திராவிடர் தொன்மையும், அச்சிந்துப் பிரதேச திராவிடரே தமிழர் என்பதும், அவர்கள் மொழியாகிய தமிழ் (இப்போதைய தமிழ் அன்று; மிகப்பழைய தமிழ்) உலகெங்கும் பரவி இருந்ததென்பதும், தென் இந்தியத்திராவிடர் அவரின் வேறானவர் அல்லர் என்பதும், இந்திய ஆதிமொழியான சிந்துப்பிரதேச தமிழர் மொழியிலிருந்தே வட இந்திய பிராமி தோற்றமாயிற்றென்பதும், ஆரியர் இந்தியாவிற்கு வந்தபின்னரே எழுதக் கற்றனர் என்பதும், வட இந்திய பிராமிலிபியிலிருந்தே வடமொழி எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும்[4], '' திராவிடபாஷைகட்கும் வடமொழிக்கும் சில முக்கியமான அம்சங்களில் ஒற்றுமை காணப்படு கின்றன. அவை இரண்டும் மூலாதார பாஷை ஒன்றிலிருந்து இவற்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ''[5] என டாக்டர் கால்ட்வேல் தமது ஒப்பிலக்கண நூலில் பல இடங்களில் சுட்டிப் போதலின் உண்மை இப்போழ்து கன்கு புலனகிறது என்பதும் செவ்விதின் உணரத்தக்க செய்திகளாம்.

---

1. Vide Heras's article, pp. 7, 8, 'The New Review', July 1936
2. Vide Heras's lecture, Madras Mail (21—10—37)
3. Ibid
4. Vide 'Ancient Tamil ietters' by P. N. Subramanian, Kalai-magal part 70
5. Vide his Grammar, pp. 383, 392, 402, 477 etc.

எனவே, தமிழ்மொழியின் தோற்றம் சுமார் 8000 ஆண்டுகட்கு முற் பட்டதெனல் எவ்வாற்றானும் தவறுகாதன்றே? சிந்துப் பிரதேச ஆராய்ச்சியாளர் கூற்றை ஆராய்கையில் இத்திராவிட மக்களின் பண்டைமதம் சைவம் என்பதும், அது உலகில்தோன்றிய மிகப்பழைய இரண்டொரு மதங்களில் ஒன்று என்பதும், அவை இறந்தும், இன்று 'என்றுமுள பாரபரம் போல்' இருந்து வருகிறது, [1] என்பதும் இங் கறிதல் வேண்டும்.

சிந்துப் பிரதேச ஆராய்ச்சியைப் போலத் தமிழகத்துப் பழைய நகரங்களான கொற்கை, காயல், புகார், வஞ்சி, முசிரி, முதலியவற்றை ஆராய்ச்சி செய்யின் பல அற்புத விஷயங்களை அறியக்கூடும். ஆனல், வால்டோ எமர்சன் [2] கூறுமாப்போல எந்த அரசியல் கட்சி காட்டை ஆண்டால் என்ன ? ஆராய்ச்சித்துறைக்கு உதவிசெய்யாத அரசியல் இருந்தென்ன ? இறந்தென்ன ?

இதுகாறும் இதனைக் கருத்துடன் படிக்கும் அறிஞர்

" தென்னாட்டையச் சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !!

என்பதன் மெய்ப் பொருளை ஆராய்ச்சி முறையால் அறிந்து இன்புறு வாராக.

" யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணேம்".

1. Vide 'Mohenjo-Daro and the Indus civilizatien'—Sir John Marshall
2. Vide Waldo Emerson's 'Politics'

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

ஆண்டு விழாக்களின்போது

தலைவர்களித்த

நல்வரவேற்புப் பத்திரங்கள்

தலைவர்கட்களித்த

முதலாவது ஆண்டு

திருவாளர். கா. நமச்சிவாய முதலியார் அவர்கள்

பூவிரி பொழிலும் பொன்விளை நிலனும்
புனிதநீர்ப் பொய்கையுங் கனலுங்
காவிரி பாக்கக் கடிநக ரதனிற்
கலிமக ளாக்கமன் னியசீர்த்
தூவிரி ராம சாமிமால் பயந்த
சுதனெனத் தோன்றிய தோன்றல்!
நாவிரி கலியார் நமச்சிவா யப்பேர்
நாவல நாவலர்க் கணியே! (க)

இராவிட மிலையிம் மலர்தலை யுலகத்
தெனமதி மாண்புளா ரெவரும்
பராவிட மலிந்து மெலிந்தநந் தமிழாம்
பசியதே னனையதீஞ் சுவைசால்
திராவிட மொழியை முன்புபோற் சிறக்கச்
செய்யமற் றதற்குறு குறையை
ராவிட விதித்திங் கதற்கென வுழைக்கும்
அருந்தமிழ்க் கரசனுந் துணையே! (உ)

முன்னைநா ளிருந்த சங்கமோர் மூன்றும்
மூழ்குமுந் நீர்வயி னெளித்த
பின்னைமாண் பிழந்த செழுந்தமிழ் வளர்ப்பான்
பெற்றவிக் கரந்தையொண் சங்கந்
தன்னைநீ யெடுத்துப் பான்மொழி புகட்டித்
தமிழ்மகள் கிளர்வுற வளர்ப்பாய்
சென்னைமா நகர்க்கோர் சிகாமணி யாகித்
திகழ்நமச் சிவாயதே சிகனே! (ஊ)

புன்மொழிப் பகையாற் கவர்தரப் பட்டுப்
போயநந் தமிழெனு மமிழ்தாஞ்
சொன்மொழிப் பசுவை மீட்டுமுற் கொணர்வான்
துணிந்தவெம் முயற்சிகண் டுவந்து
இன்மொழி யியம்பி யித்திரு மாலைக்
கதிபனு யிருக்கநீ யிசைந்தாய்
தென்மொழிக் கரசே! கரந்தையைப் புனையச்
சிறந்தவ னீயலா தெவரே! (எ)

நல்வர வாக, நமச்சிவா யப்பேர்
நாயக! நல்லர வாக,
சொல்வர வுணர்த்தும் பல்லியின் சொல்லைச்
சொல்லென நினைந்துவிண் வருமச்
செல்வர வெதிரும் புள்ளென விருக்குஞ்
செந்தமிழ்ப் பிரியரா மெமக்கு
நல்வர வாக, நாநல மென்னு
நலன்மிகப் படைத்தநா வலனே! (ஏ)

வரவேற்புப்பத்திரங்கள்

அகவற்பா

நடீச்சி வாயப் பெயரிய நாவல
இமயக் கொடியமர் இதய கேவல
தமிழுக் குழைக்கச் சமைந்த காவல
எமது விண்ணப்பம் யாதெனிற் பாவல

இத்தமிழ்ச் சங்கத் தியாண்டு நிறைவியற்ற
உத்தம தானத் துரிமை பூணுக
அத்தவென் றிரந்தனம் ஆயிர வரையாம்
அத்துணை யவரில் ஆமென் றவரிலை

வித்தக

உன்னை யெதிர்ந்தனம் உன்பெய ரறிந்தனம்
பின்னை யடுத்தனம் பெற்றி உரைத்தனம்
என்னை ! என்னை ! அதிசய மென்றனை
முன்னு குறையினை முற்றச் சமைந்தனை

இதளல்

வித்தக நீறணி வார்தம் வினைப்பகைக்
கத்திர மாவன அஞ்செழுத் தும்மெனும்
வித்தக வாக்கின் மெய்ப்பொரு ளுணர்ந்தபை
சித்திர மிதனினும் சீரிய தியாதோ

ஆதலின்

வருக வருக வந்தீண்டி யாருளம்
உருக உருக ஓண்பொருண் மலியுரை
தருக தருக தகைமை
பெருக பெருக பெருமநிற் கென்பதே

வெண்பா

எம்மோர் விருப்புக் கிணங்கியிங்ங னீண்டியுள
செம்மல்கான் செய்யதமிழ்ச் செல்வர்கான்—உம்மரிய
அன்பிருக்கு மெம்மரிய ஆதரிப்பி லோதுகுறை
பின்பிருக்கும் என்போம் பெரிது. (1)

ஆதலிரு வின்போ டமர்ந்திரண்டு நாளுநல்ல
ஓதி யுணர்த்தியுணர்ந் துத்தமரே—போதிரென
நான்வேண்டு கின்றேனென் சோதரர்க்கா நன்கிணங்கத்
தான்வேண்டு பன்பிற் றகைந்து. (2)

தலைவர்கட்களித்த

இரண்டாவது ஆண்டு

ஸ்ரீமான் T. A. இராமலிங்கச்செட்டியார் B.A., B.L., அவர்கள்

மதிதவழ் புரிசை மாடக் கூடற்
பதியிற் கன்மாப் பலகையினசைஇத்
தொன்றுபடு மரபி னின்றமி ழாய்ந்த
தாவறு காட்சி மேவிய புலவோ
ரெய்ப்பில் வைப்பென வெம்மனோர்க் கீத்தவற்
றொன்றாய்ப் பன்னலந் துன்றிச் சிறக்கும்
வித்தக சேத்தும் 'பத்துப்பாட்டின்
கால வரையறை' வாலிதிற் றந்த
கற்றவற் றகலமு மற்றைய பிறவு
மிற்றெனத் தேற்றிய வந்தால்! வருக.
ஆங்கில வறநூ லரிறபத் தெரீஇ
நீதி பன்றத் தேறிவா தியற்றி
வெல்லு நாத்திறன் வல்லோய்! வருக.
'இருவே லுலகத் தியற்கை' சேணுறத்
திருவுங் கல்வியு மருவுந! வருக.
தமிழ்க்குத் தொண்டுசெய் தாவி னல்லிசைத்
தவரையின் மேய வொருதோ மானுங்
திரிபுர மெரித்த விரிசடை யவனுங்
குன்ற மெரித்த குமர வேளுமென்
றின்னவ ரொருங்கிவண் துன்னின சோவெனக்
கேட்போர் நெஞ்சம் வேட்கை மீக்கூறும்
இராம லிங்கச் செட்டி யாரென
ஓங்கிய நாமத் தொருவன்! வருக.
இமிழ்திரை முழங்குந் தமிழக வரைப்பிற்
செங்கோ லோச்சிப் பைந்தமிழ் வளர்த்த
முடியுடைப் பெருநில மன்னவர் மூவருட்
காவிரி புரக்கு நாடுடைச் சோழர்
மூதூர் தம்மிற் கோதறு தஞ்சைப்
பொற்றொடி மடந்தை யற்புட னுதவிக்
கார்தையந் தொட்டிலிற் காண்வர வேற்றிய
தன்னிக ரின்றமிழ்ச் சங்கக் குழவிக்
கருநிதிக் கிழவன் பெருங்குடித் தோன்றி

வரவேற்புப்பத்திரங்கள்

நடைமடம் படாது கொடைமடம் பூண்டு
வரையா வண்மை மாமழை பொழிதலின்
தமிழ்க்கொடி தழைக்குங் கொழுகொம் பாகி
அளகையின் மேம்படு பளகறு நகரத்
திலங்கு பெத்தாச்சி யிளங்கோ வள்ளலும்
ஐந்தரு வாழ்க்கைப் பைந்தா ரகலத்
திந்திரன் மரபில் வந்தநற் றேரன் றல்
கற்றவர்க் களிக்கெனப் பெற்றிடு வளத்தான்
விதித்தன வல்லால் விலக்கிய நாளும்
அமரா பதியெனு மரிதையம் பதியான்
கோபால சாமிக் குரிசிலு மென்றுங்
கிருபெருஞ் செல்வச் செவிலியு மொருவா
தருணனி சுரந்துகாத் தளித்தலி னின்பொடு
கழிந்த இரண்டாம் யாண்டு விழாவிற்
றலைமை தாங்குக தக்கோ னீயென
வேண்டு முன்னர் மாண்டக வமைந்தனை !
மன்பதை யுலக மகிழுறல் வேண்டிப்
பயன்றூக் காது நயன்றரு முதவிசெய்
இயல்பின் மேம்படூஉ மின்னிசை யாளநிற்
கெம்மாற் செயத்தகுங் கைம்மா றெவன்கொல் ?
அதனால்,
வேட்டவர் மகிழ்தரக் கேட்டவர் நினைசீர்
தம்மெய் வருத்தமும் பிறவு மெண்ணாது
செவியுணவிற் சுவைநாடி
அருமையொடு பெருமைபேணுப்
பல்கேள்வித் தொல்லறிஞர்
நல்லாயமொடு நகருள்ளார்
ஆதரம் பெருகப் போதந்து குழீஇ
யீண்டுமிச் சங்கத் திருந்து
வேண்டுவ புரிகென வேண்டுதும் யாமே.

தலைவர்கட்களித்த

மூன்றுவது ஆண்டு

திருவாளர். தோ. இராமகிருஷ்ணப்பிள்ளை அவர்கள்

(B.A., F.M.U., F.R H S.)

திருவளர் கமலச் செல்வி யுறைதரும்
குருவளர் நிறத்தன் குரைகழல் வழுத்தும்
நற்குணக் குன்றே நாடினேர் தமக்கிங்
கெக்கணத் தேனும் இயன்றது செய்வோய்
மேனுட் டவரும் வியந்து புகழ்தர
ஆனு வாங்கிலப் புலமை யடைந்தோய்
உயரிய சென்னை யூனிவெர் சிட்டியில்
சயமுறச் செய்யும் தமிழ்த் துறை கட்கெலாம்
தலைமை வகிக்கும் தண்ணிய மணியே
பலகலை யுணரும் பண்டிதர்க் கணியே
சோலைகள் சூழும் தோட்டக் காட்டினன்
மாலடி மறவா வரதப் பெரியோன்
செய்தவ மனைத்துந் திரண்டோ ருருவா
எய்திய தெனவரும் இராம கிருட்டினப்
பெயருறு சுகுண பிறங்கிய தஞ்சையின்
வயமுறு கரந்தை வளநகர் மேய
வலம்படச் சுழலும் வரிவடி வியலும்
நலம்படு மேன்மை நற்றமிழ்ச் சங்க
மூன்றும் யாண்டு மூன்னும் விழாவை
ஆன்ற சபைக்கண் அக்கிரா சனத்தை
ஏற்றிங் கெவரும் இதயங் களிக்க
ஆற்றிட இன்னே அன்புடன் வருக
வருக வருக வண்டமிழ் வாண
பெருகு கலைமலாம் பெருக வருகவே.

வரவேற்புப்பத்திரங்கள்

நான்காவது ஆண்டு

திவான்பகதூர். சா. ராம. மு. இராமசாமிச் செட்டியார் அவர்கள்

வாழியர் வருக! வளந்தலை மயங்கிய
மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
தொண்டுபுரி யாட்சி சுருங்கிய பின்றை
மன்னவர் பின்னவர் என்னுமுறைக் கியைய
உலவில் செல்வக் கொருதா மாகி;
ஆதியிற் றமிழ்நூல் அகத்தியற் குணர்த்தியும்,
முச்சங் கத்தினும் மெச்சவீற் றிருந்தும்,
மாறனும் புலவரும் மயங்குறு காலைப்
பொருணூ லதனைத் தெருள்பெற வருளியும்,
பாசுரம் பகர்ந்தும், வாசகம் வரைந்தும்,
அம்மையே யென்னும் செம்மொழி கூறியும்,
தூது முதலாய தொண்டுபல புரிந்தும்,
தம்முறு விருப்பும் செயலும் எல்லாம்,
அம்ம! தமிழின் பாலமைத் தருளிய
கண்ணுதற் பெருமான் நண்ணிவீற் றிருக்கும்
புண்ணியப் பதிக ளெண்ணிலா தவற்றிற்
றிருப்பணி யாதிய விருப்பொடு புரிந்தும்;
எந்தாய் மொழியிஃ தெந்தாய் மொழியென்
றமிழ்தி னினிய தமிழினைப் பேணியும்;
முதற்கட னற்று மதற்படு வணிகர்
குலமார் பாற்கடல் நலமார் தரவெழு
சிந்தா மணியே! நந்தா வைந்தருக்
காநா டுறழுங் காநாடு காத்தான்
பொற்புமிக் குடைய நற்பதி யானெய்!
இருவே றியற்கையு மொருவழிக் காணத்
திருவும் அறிவும் திகழ்தரு நலத்தோய்!
சென்னைமா நகரிற் றிகழ்சட்ட சபைக்கண்
உறுப்பெனப் பொலிந்த சிறப்புடை யாள!
புலிக்கொடிச் சோழர் புனலுட் டகத்தே,
புலித்தே லுடையெம் பொருவில் புனிதன்
புலிக்கான் முனிவற்குப் பொற்கழல் காட்டி
மாதுமை காண வைகலு மைந்தொழில்

ஏது வாக இயற்றுதிரு நாடகம்
விஜயி னேமையும் நிஜையுமா றருளும்
புலியூ ரென்னும் மலிபுகழ்ப் பதியில்,
வந்தரு மாந்த ருதவுபொருள் கொண்டு
புரிவன புரீஇ நகரம் புறந்தரு
சங்கத் திற்கோர் தங்கமார் தலைவ !
நீரின் றமையா துலகெனு மெய்ம்மை
யாரு மறிகுவ ராயினு மென்னும் ?
வான்புரி செய்கை யான்புரி குவலென
நீர்கா ஸிருப்புச் சீர்சால் தூம்பிற்
கன்பி னிலக்கம் வெண்பொ னளித்த
வள்ளால் ! இந்த மாநிலம் புரக்கும்
ஆங்கில மன்னர் பாங்குடன் சூட்டு
திவான்பகதூரெனுஞ் சிறப்பெய்து செம்மால் !
வருக ! நின்றன் மலர்முகங் காணுஉப்
பொருள்பொ திபின் னுரை கேட்பான் புரிந்துள
எங்க ளுளங்களி சிறக்க, இத்தமிழ்ச்
சங்க முயர்ந்து தழைக்கப் புரிவுடன்,
இராமசாமிப்பெயர் வந்தால் !
வருக ! வருக !! மகிழ்கனி சிறந்தே.

வெண்பா.

இராமசாமிப்பெயரி னேந்தலும் யாரும்
பராவு மறிஞர் பலரும்—விராவியே
இங்குற்றூர் ! என்னே யுறுத வினி ? இதுவிச்
சங்கத்தின் மேலைத் தவம்.

வரவேற்புப்பத்திரங்கள்

ஐந்தாவது ஆண்டு இராமநாதபுரத்தரசர்
மாண்புமிக்க. B. இராஜராஜேசுவர சேதுபதி அவர்கள்

நேரிசை ஆசிரியப்பா

உலகம் வியப்ப வுணர்வுமிக் கோங்கிய
வித்தகன் சுவாமி விவேகா னந்தன்
வேந்துமுனி யென்ன வேந்திப் புகழ்ந்த
படைமடம் படாத பண்புடை மரபிற்
கொடைமடம் பட்ட குணத்தவ னுய
பாற்கரச் சேது பதிதவத் தளித்த
ராஜரா ஜேஸ்வரப் பெயர்பெறு மகிப !
முக்கட் கரும்பிணை முறையிறைஞ் சுறுபய
னெக்க வளிக்கு முரியசண் டேசரிற்
கருவிரா மற்செயுந் திருவிரா மேசர்
காட்சியி னுறுவ,தற் காண்பவர்க் களிக்கும்
பண்புமேம் படீஇய பார்த்திப ரேறே !
கந்தமா தனமு, முத்துநீர் வைகையுஞ்,
செம்பிநன் னாடுந், தேவைநன் னகரு,
மூல்லை யத்தாரு, முழுவலிப் பரியு,
நல்லியல் களிறும், புள்ளியல் கோடியு,
முன்னெறி முரசுஞ், செங்கதிர்க் கோலு,
மைந்திரண் டங்கமென் றமைந்தன வாக
வரசிய லுடங்கே யமைந்திடு நெடியோய் !
மன்னிய மேன்மைச் செந்நிலமா காணச்
சட்டநிர் மாணத் தனிச்சபை யிடத்துப்
பட்டவர்த் தனர்தம் பகுதிகட் குரியையா
யமர்ந்துல கின்ப மடைதர முயல்வோய் !
கரந்தையர் கோனுக் குதிர்த்தலி னெங்கள்
கரந்தைச் சங்கமுங் காண்வர நின்பா
லிடம்பொரு ளேவலி னேர்புன லிலங்கிய
வேண்டுநன் னிலையை வினைந்துளது, இஃதுங்,
கடைச்சங் கம்மெனக் கரையுரை பொய்த்துப்
போதச் செய்து புதுவது தோன்றிய
மதுரைச் சங்க மாண்புறத் தலைமைபூண்
டினிதி னளிக்கும் இறைவ ! நீ யன்பாற்
றலைமைவீற் றிருக்கச் சார்ந்தனை யாதலிற்
கைவரப் பெற்றதாக் கருதுபு மகிழ்ந்தேம்.
தந்தையி னளித்த தமிழ்ப்பெரு வேந்தர்
மறைந்தன ராக விருந்தன லெம்படர்
முத்தமிழ்த் தெய்வ முழுதொருங் கொழிப்ப
வந்துவந் தளிக்கு மரபினை யாகலின்
வாழ்க ! நின் மரபு ! வளர்க ! நின் னுயுள் !
வீழ்க! நின் மேவார்! மிளிர்க! நின் சீர்த்தி!யென்
றெளிமையின் வந்தநின் னின்னருட் குவந்து
முழுமுத லிறைவனை முன்னி
வழுவறு மனத்தால் வாழ்த்துகின் றேமே.

தலைவர்கட்களித்த

ஆருவது ஆண்டு

திரு. தி. செல்வக்கேசவராயமுதலியார் அவர்கள் M.A.,

நேரிசை யாசிரியப்பா

வருக ! வருக ! வண்டமிழ் வாண !
அமிழ்தவூற் றிருக்குந் தனித்தமிழ்க் கடலும்
அரசியன் மருங்கின் வருமொழிக் கடலுமென்
றிருருங்குடன் பருகிய கருவிமா முகிலினை !
செப்புபல் லறத்தி னெப்புற வாற்றிய
வைப்பெனும் பச்சை யப்பமா னிறுவுஞ்
சென்னெயம் பதியின் மன்னிய கல்விச்
சாலையி னெங்குமூஉந் தண்டமிழ்க் கற்பகம் !
கலைவளர் சர்வ கலாசங் கத்தின்
அருந்துணை யமைந்த ஆணியங் கனகம் !
நாற்றிசை மணந்துபன் னூற்றிதழ் தழைந்த
தீந்தமி ழென்னுந் தெய்வத் தாமரை
தேந்துளி பிலிற்ற வாய்ந்து விரித்துங்,
கண்ணெனக் கொண்டும் மண்ணிடை விளங்கிய
பருதிமாற் கலைஞற் கொருபெருந் துணையினை
சொல்லளம் பொருள்வளம் பல்வளம் பழுத்திய
சங்கநூன் முதற்பல துங்கநூற் சுவையும்
மறுபுல மொழியி னரிதுணர் சுவையுமென்
றினையவை யுலகி னெனையரும் பெறுமா
றுரைநடை யெழுதி யுபகரித் தருளியோய் !
பைந்தமிழ்ப் பின்செலும் பரனடிக் கினிமை
கிளர்வரு செல்வக் கேசவ ராயமால் !
தோலா நாவின் மேலோய் ! வருக !
இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மருங்கினெங்
குடிக்குவாழ் முதலா யுயிர்க்குயி ராகு
மேமமார் தமிழெனுங் காமதே னுவினிரை
அயலில் ‡ வெட்சிய ராயொரு சாரார்
வென்றி வேந்தன் பணிப்ப வும்பணிப்
பின்றியுங் கொண்டன ராக வியைபினின்
மற்றது மீட்கும் வகைகுறிக் கோளினு
யாந்தை தீரக் கரந்தையங் குழுவினம்
நின்பெருந் தலைமையு நேர்ந்தனம். அதனுற்
சூசன் மாற்றித் தந்துநிரை புரிந்து
வேத்தியன் மலிவுங் குடிநிலைப் பெருக்கமுங்
காண்கும் கருத்தமர்ந் தேற்றனம்
மாண்புக ழாள ! வருகமா வெனவே.

‡ அயலில் வெட்சி—அயலெழுந்த தொகைவெட்சி; வெருட்சி

வரவேற்பு

ஏழ், எட்டாவது ஆண்டு

ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகள்.

ஆசிரியப்பா.

வாழியர் ! வருக ! மாண்புறு பெரியோய் !
ஊழி பெயரினும் பெயரா வுரவோய் !
தமிழ்நா டுளுற்றிய தவத்தினிற் ரோன்றி
யெமையா ளரசை யேந்துழ வாரமும்
சிந்தையி னன்பும் செவ்வாய்ப் பாடலும்
அந்தமில் வேடமும் உடைய அப்பரைக்
கரையேற விட்ட வுரையேறு பொருளாந்
தோன்றுத் துணைவர் ஈன்ரூளு மாயவர்
விருப்புறு திருப்பா திரிப்புலி யூரிற்
நிருக்கோ வல்சார் உருக்கிளர் மடத்திற்
கதிபதி யாய துதிபெறு சீரோய் !
தென்றமிழ்ப் பரப்பும் வடநூற் கருத்தும்
நன்றுணர்ந் தோங்கிய நலையில் புலவ !
கண்டுணர் பொருளெலாங் கண்டென விளிக்கக்
கடன்மடை திறந்தென முகின்மழை பொழிந்தெனத்
தடைபடா துரைக்குந் தனித்தமிழ் ஈவல !
திருக்குறள் முதலாஞ் சிறப்புறு நூல்க
ளுரைத்துநன் மாணவர்க் குவக்கும் ஆசிரிய !
இளைஞர்க டமக்குக் களைகணும் படியோர்
கல்விச் சாலையுங் கழகமு மமைத்து
நல்லித் தகம்புரி செல்வக் குரிசில் !
மணிமயி லுயரிய மாரு வென்றி
யணியயிற் செவ்வேள் அடியிணை நினைதொறும்
நைந்துநைந் துருகுஞ் சிந்தையா ரன்ப !
நின்பல சீரும் நிலத்தினி லாரும்
அன்புட னுரைத்தல்கேட் டின்புற் றனமால்.
ஏனைப் பெரியருமித் திறம் புரியின்
வானைப் பழித்திவண் மன்பதை மகிழ்மே !
தமிழி னுர்வந் தழைத்திடு சான்ரோய் !
விஞ்சை யெலாம்புகு கஞ்சையைச் சார்ந்தே
யரந்தை கெடுக்குமிக் கரந்தையில் யாங்கள்

தலைவர்கட்களித்த

தாய்மொழி போற்றலே தருமமுந் தவமுமென்
றுய்ந்து நிறுவி யருமையின் வளர்த்திடு
சங்கத்திருவிழாத் தலைமை யமர்ந்து
துங்கப் புலவர்கள் சொற்பொழி வேற்பித்
தெங்கட் கெல்லா மிரும்புய னளிக்க
இங்குநீ வரப்பெற் றியாமுளந் தழைத்தே
நீர்பெற் றுயர்ந்த நிறைபுல மாணெம்.
சீர்பெற் றுயர்ந்த சிவசண் முகமெய்ஞ்
ஞானியா ரென்னும் மானவ ! வருக !
வருக ! மாதவ ! வள்ளால் !
வருக !! நீடிழி வாழியர் வருகவே !!!

வெண்பா

தாய்மொழியாந் தெய்வத் தமிழ்மொழியைப் போற்றுமா
வாய்மொழிசேர் நன்மக்காள் ! வம்மினே !—தாய்மொழியைச்
சொல்லுமின் ! கேண்மின் ! துதிமின் ! கனிந்துருகி
நில்லுமின் ! என்றும் நினைந்து.

வரவேற்பு

ஒன்பதாவது ஆண்டு

திருவாளர். S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A., B.L.,

வாழியர் ! வருக ! வாழியர் ! வருக !
பண்டைத் தமிழகத் தெண்டகு துறைவளத்
தெல்லையை இன்றும் எடுத்துக் காட்டுமா
ளுளந்துகடை யறியா வளம்பல கொண்டும்,
வழங்கியும் வறிதிராக் கலம்பல பரப்பிநல்
லாற்றுக் குடிநிறை தூற்றுக் குடிநகர்த்
தோன்றி யொளிருஞ் சுடரே ! வருக !
உருவுந் திருவு மூயர்பெருந் தன்மையு
மருவின் சாயலும் வளர்மதி துணுக்கமும்
" ஈ தென் தாய்நா டிதென் தாய்மொழி
யிவைவளம் பெறலே யாண்வளம் பெறலே "
எனுமுயர் பூட்கையு மியல்வோய் ! வருக !
ஆங்கில முதலா வாய்பல கலையும்
அமிழ்திணு மினியநம் தமிழ்மொழிக் கடலும்
கற்றுத்துறை போகிய கொற்றவ ! வருக !
எதிருரை யாளர் இறும்பூ தெய்த
அசைத்த லாகா வரும் பெருஞ் சான்றோ
டிசைநடை வரையும் உரவோய் ! வருக !
வல்லோ ராய பல்லோ ரவையுள்
சித்திரப் பாவையி னத்தக வடங்க
யாவரு மறிந்திலா ஆய்வுரை கொண்டு
திறம்பட மொழியுஞ் செம்மாஅல் ! வருக !
மாமனு வந்த சோமனே யென்ன
மன்றில் வழக்கிடும் வென்றியாய் ! வருக !
வேறுவே றுகக் கூறுஞ் சமயநூல்
யாவையு நடுநின் றுரையில்லா துணர்ந்து
தெய்வ மொன்றெனத் தெளிந்தோய் ! வருக !
நங்கள் கரந்தைச் சங்கத் தன்பு
பொங்குஞ் சோம சுந்தர ! வருக !
பாரதி போற்றும் பாரதி ! வருக !
வருக ! வருக ! வருக !
ஊழி ஊழியான் வாழியர் ! வருகவே !

தலைவர்கட்களித்த

பத்தாவது ஆண்டு

திருவாளர், பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் B. E., M. C. I.,

திணை—பாடாண்டிணை; துறை—இயன்மொழி.

மலர்தலை யுலகின் மாண்புறீனியுடைய
விழுத்திணைப் பிறந்தோ ருள்ளுஞ் சிலரே
பழுத்த கல்வியும் பளகறு மறிவும்
திண்ணிய கோளுஞ் நண்ணுவ ரென்ப;
தொன்றுபடு சிறப்பிற் றமிழ்க்குடித் தோன்றி
நின்ற சொல்லும் நீடுதோன் றொளியும்
ஒன்றிய பெருஞ்செ யுரவோய் நீயே!
நின்புக ழெம்மனோர் நிகழ்த்துதற் கெளிதே?
அன்பினி லொருசிறி தறைகுது மம்ம!
கண்ணென வான்றோர் கழுமுங் கணக்கினில்
மேனாட் டவரும் வியக்குமா நுணுக்கம்
காட்டினை, பொதுநலக் கருவித் தொழிற்றுறை
மாட்டுமோப் பில்லா வன்மை படைத்தனை,
உடனூல் உளநூல் ஒள்ளிய நரப்புநூல்
குறிநூல் ஒருமைநூல் இறைநூல் மறைநூல்
முதற்பல கலையும் அதர்ப்பட வறிந்தனை,
முன்மொழி தென்மொழி வடமொழி யோடும்
பன்மொழி பின்மொழி பயின்றனை மன்னுல்,
தொல்காப் பியர்திரு வள்ளுவர் கம்பர்
உட்கோ ளனைத்தும் நற்குறக் கண்டனை,
கம்பர்வால் மீகி கருத்து வேற்றுமை
இம்பரில் யார்க்கு மெளிதிற் றெருட்டினை
அகமோ டோமெழுத் தருமை விளக்கினை, அதனன்று,
தமிழ்மொழி யியற்கை மொழியெனுந் தன்மையும்,
இம்மொழி கொண்டே யெம்மொழி யெவ்வொளி
யனைத்தும் வளைதற் கையமின் றென்பதும்
மொழிநூ லியற்கை வழுவின் றுகக்
கையுறு நெல்லியிற் காட்டுபு மற்றஃ
தெவ்வெவ ருள்ளமுஞ் செவ்விதிற் கொள்ள
வழங்குநின் றனைமன், நின்னு லிவ்வுல
கெய்திய பேற்றினு மெய்தக் கடவதே
றுலப்பில வுளவென வுள்குதும் பெரும!
அனையையா கலினெம் மன்புறு தோன்றல!
நங்கள்சங் கத்தெந் நாளுமா நிலையோய்!
மாணிக்கப் பெயர் திகழ் வள்ளால!
வாழி! யூழிநீ வளம்பல சிறந்தே.

வரவேற்புப்பத்திரங்கள்

பதினென்றாவது ஆண்டு

திருவாளர். கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் எம்.ஏ., எம். எல்.,

பல்வளனும் படைத்ததமிழ்ப் பாரினுக்கோர் முடியாகும்
நெல்வேலி நகர்சிறக்க நிலவுதிரு விளக்காகி
எல்லையறு பெருநிதியும் இருங்கலையும் வழிவழியே
மல்கியுயர் சிவநெறியே வயங்கியவே ளாண்மரபில்
நல்குரவுக் காந்திமதி நாதனுயர் தவத்துதித்துச்
சொல்லரிய புகழ்பெறு சுப்பிரமணியே! சுடர்மணியே!

இருவகைத்த பெருநிதியம் இணைந்தும்நினை ஏற்பார்மாட்
டருமையிலா தெளியனு அமைந்தீதல் நின்குணனே!

எம்வ அஃ திருதுறையில் இணைவதும் ஓர்எம்எல்லே
அம்மே! மற் றிவைதாமே? அவற்றினூஉங் கிலையன்றே!

நிலைகண்டு கலைக்கடலை நெடியகரை கண்டாரையக்
கலையறிஞர் கல்லாத கலையில்லான் எனல்என்னே!

பன்மொழியும் பயின்றவற்றுட் பழுத்தபுலம் பெற்றுயை
மன்னுமொரு மொழியன்றி மற்றறியாய் எனல்என்னே!

சட்டநிலைக் கொருமுடியாம் தாகூர்நன் கொடையதனை
எட்டவென இதுகாறும் எண்ணிஞரும் இங்கிலரே!

கணக்கிலாக் கலையறிவாய் கணிக்கும்வழக் கறிவார்முன்
கணக்காயர் தமதுதொழில் கருதியநின் செயலென்னே!

இருகோடி மக்களுடன் இளைப்பாளை இந்தியநாட்
டிருகோடி வரையலைக்க எண்ணுவது நலனண்றே!

மேனாட்டுக் கலையுணர்ந்தும் மீப்பதங்கள் தாமார்ந்தும்
ஆனுமன் அமையமென அகற்றிலைஎன் வழிபாடே?

மிகவருவாய் வருவவெலாம் வெறுத்தொதுக்கி விரிமதியார்
நகவுயரும் பொருளளித்து கவில்தொழிலின் திறமென்னே!

வள்ளுவனூர் திருமரபும் மலிமறையின் வரலாறும்
எள்ளலிலா நடுநிலையார் இயைபுமரும் பொருளன்றே!

எனவாங்குப்

தலைவர்கட்களித்த

பலவும் நின்சீர் பாராட் டெதற்கிலம்
நங்கள் சங்கத்தில் நாளும் ஓங்கிய
உழுவல் அன்பினை, உறுப்பினை, கடமை
ஆற்றுதி யாதலின், அன்ப! அறிஞ !!
குணக்கடல்! சிவப்பழம் !! தமிழ்த்தாய் தவச்சேய் !!!
வருக! வருக! வருக! எம் அண்ணல்!
நீஇ
நீடு நீடு நீடு நிலவி
வாழி! வாழி! வாழியர் நன்றே!

வரவேற்புப்பத்திரங்கள்

பன்னிரண்டாவது ஆண்டு

தமிழ்வள்ளல், திவான்பகதூர்.,

சா. ராம. மு. சித. பெத்தாச்சிச்செட்டியார் அவர்கள் M R·A·S , M L C.,

மாநில மடந்தை மதிமுகம் பொருஉம்
அந்தமில் சிறப்பிற் செந்தமிழ் நாட்டிடைக்
கோலுடு வளஞ்செறி காலுடு காத்தான்
என்னுநற் பதியின் மன்னிய பெருங்குடி
வந்து தோன்றிய சுந்தரக் குரிசில்!
தென்றிசை திசைக்கோ னென்றிசைக் கும்படி
ஓங்குயர் செல்வம் பாங்கினி லுற்றோய்!
இளமையும் அழகும் இயைந்தநற் பண்பும்
வளமையும் எல்லாம் மன்னிய தோன்றல்!
பல்வகைக் கலையும் ஒல்வகை யாய்ந்து
கல்வி நிரம்புறூஉ நல்லறி வாள!
பற்பல கல்லூரி பற்பல பேரவை
பொற்புற நீணிதி யற்புடன் வழங்கியும்
மாணவர் பலர்க்கு மாண்பொருள் சுரந்தும்
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டியு மருந்து முறையுறு முதவியும்
பண்டெழு வள்ளலும் பான்மையி னேருருக்
கொண்டெனப் பொலியுங் கொடைக்கடன் பூண்டே
உரைப்பா ருரைக்கு முரையெலாம் தன்புகழ்
மேலவாக் கொள்ளும் மேதகு பெரியோய்!
இம்மையு மறுமையும் ஈறி லின்பமும்
செம்மையி னளிக்கும் சிவன்சே வடியிணை
என்றும் மறவா நன்றறி யுளத்தினை
கருஆ ரானிலை யரனர் திருவிழாச்
செப்புதற் கரிய சிறப்புட னிகழ்த்தி
இயலிசைப் புலவர் எண்ணிலார் மகிழப்
புயலெனப் பொன்மழை பொழியுங் கோமான்!
மதுரைத் தமிழ்வை மாட்சியிற் புரப்போய்!
காரந்தையேம் சங்கம் காதலித் தளிப்போய்!
இன்னபல் சீரும் எண்ணி ஆங்கில
மன்னவர் கூட்டு திவான்பக தூரினை!
ஆண்டிப் பட்டிநா டாளுங் காவல!
வருக! பெத்தாச்சி மாண் பெயரோய்! நலம்
பெருக எம்சங்கத் திருவிழாப் பீடுற
வருக!! தலைமையின் வாழியர் வருகவே!!!

தலைவர்கட்களித்த

பதின்மூன்றுவது ஆண்டு

திரு. திவான்பகதூர். T.N. சிவஞானம்பிள்ளையவர்கள் B A., M.L.C,

பொன்மேவு நெல்வேலி புரிதவத்தின் பயனுய்
மண்மீது தமிழனையார் மாண்புறுகன் மகனுய்
எங்காளு முயர்சைவத் திருத்துறையின் எழிலாய்
கண்ணுகுங் கலைத்துறைசேர் சிவஞானக் கன்றே!
கனியிய இவ் வவைவருக! சிவஞானக் களிறே!

பொறையாலும் நிறையாலும் பொங்கரவை யணிந்த
இறையாவான் திருவடியை யேத்தியுளம் போற்றும்
முறையாலும் நினைகோர்வர் முழுதுலகும் இலராக்
குறையாமை வளர்செல்வச் சிவஞானக் கோவே!
குலவிய இவ் வவைவருக! சிவஞானக் கோவே!

அரசாள்வர் நெறிதன்னை அன்னவரோ டுலகோர்
பரவுறுமா உளபடிகள் பற்பலவும் ஏறித்
தெருளுறுதி வான்பகதூர் செப்புகன மாண்பும்
பெறலருஞ்சீர் பிறவுங்கொள் சிவஞானப் பேராய்!
பெறுபுகழிவ் வவைவருக! சிவஞானப் பேறே!

மன்னன் செங்கோ லதுவோச்சும் மாண்பார் அவையின் அமைச்சாய
தன்னே ரில்லாப் பேறுற்றும் தாயைச் சான்றோர் மறவாரே;
தன்னே ரில்லாப் பேறுற்றும் தாயைச் சான்றோர் மறவாமை
அண்ணல்! எங்கள் சிவஞான அன்பே! நின்பால் அறிந்தாமே!

பொங்கும் சான்றோர் அரசவையோர் போற்றும் அமைச்சாம் பேறுற்றுத்
தங்கும் வேலை யான்முதிர்ந்தும் தாயைப் போற்றற் கிலையாரே;
தங்கும் வேலை யான்முதிர்ந்தும் தாயைப் போற்றற் கிலையாமை
ஏங்கள் தலைவ! சிவஞான ஏந்தால்! நின்பால் ஓர்ந்தாமே!

மங்காச் சீர்த்திச் சான்றோர்கள் மாணும் ஆட்சி நிலைதன்னில்
தங்கள் தொண்டர் பலரேனும் தாமே தாய்த்தொண் டியற்றுவரே;
தங்கள் தொண்டர் பலரேனும் தாமே தாய்த்தொண் டியற்றுவது
துங்கன் எங்கள் சிவஞானத் தோன்றல்! நின்பாற் றோன்றுவதே!

வளமலியும் பொருணிலையில் மாணுமை மயங்கிடினும்
உளநிறையன் பர்மிகுவ தொருகாந்தை யுறுசங்கம்;
உறுசங்கம் இதுவென்றே உற்றனையிவ் வோங்கவையம்
வருமெங்கள் சிவஞான வள்ளலால்! நீ வாழியவே!

புலமையினர் சிலரேனும் பொருளர்பலர் இலரேனும்
வளமையினும் உளமுடையார் வாய்காந்தை வளர்சங்கம்;
வளர்சங்கம் இதுவென்றே வந்தனையிம் மாவவையம்
உளமகிழும் சிவஞான உயர்வோய்! நீ வாழியவே!

வருதேவர் பலராக, மலிபுகழார் தமிழ்த்தேவும்
ஒருதேவென் பார்மலியும் ஓர்காந்தை ஒளிர்சங்கம்;
ஒளிர்சங்கம் இதுவென்றே ஓர்ந்தவையம் நோர்ந்தனையால்
எழிலன்பிற் சிவஞான ஏந்தால்! நீ வாழியவே!

வரவேற்புப்பத்திரங்கள்

பதினான்காவது ஆண்டு

திருவாளர். பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியார் அவர்கள்

வளமலியும் மகிபாலன் பட்டியெனுந் திருவாழ்வின் வாழ்வாம் ஏந்தால்!
அலகில்பெருந் திருவணிகர் அறநெறிச்சேய்க் கன்னையென அமைந்த சீரார்
குலமதற்கோர் தலைமணியே! கொழுந்தமிழ்த்தாய் முதன்மகனே! குலவிச் சங்கம்
உளமகலாப் பேரன்போய்! உயர்புலத்தாய்! **கதிரேச**! உறுக! ஈங்கே!

ஒரு மொழியோ! ஒரு கலையோ! ஒரு நூலோ! ஒருரையோ! ஒரோர் காலோ!
திருவியல்நம் தென்மொழியிற் சேர்திருவ வடமொழியிற் றிகழும் பல்ல
அரியகலை வகையனைத்துள் அளவிறந்த நூலுரைகள் ஆய்த லொன்றே
உரியவொரு நாட்செயலா வுற்றனைநின் கலைமாண்பை உணர்வார் யாரே!

வடமொழியாம் பேரார வாரநீர் மகிழ்ந்தாடி வருவான் புக்குத்
திடமகலத் தளர்ந்தாழ்ந்த சிலர்மயங்கித் தமிழ்த்தாய்க்கும் சிறுமை சொற்றார்;
'அடகெடுக! அவர்செயலென்! அறிஞனிவன் செயல்பா'ரென் றறிந்தார் கூற
வடமொழியை எதிர்நீந்தி வந்துதமிழ் அணியுணர்த்தும் மாண்பன் நீயே!

பொழுதெலாம் கலையாய்ச்சி! புரிவெலாம் தமிழ்த்தொண்டு! பொருந்திச் சூழும்
குழுவெலாம் புலவர்குழாம்! கொண்டுகொடுத் திடுபொருளும் குறிநூற் செல்வம்!
வழுவிலா வுரையாடல் மலிவியப்பு! மாண்புடைய மனத்தின் வாழ்வோ
முழுதெலாம் உடையபிரான் முளரியடி! **கதிரேச** முன்னோய்! நிற்கே.

கல்லார்கள் ஒருநூலைக் கடைபோகக் கற்றாலும், கற்றார் மற்றார்
எல்லாரும் இனிதுவப்ப எடுத்துரைக்கும் திறனெய்தார்; எய்து வாரேல்,
வல்லார்கள் எமைப்போல்வார் மற்றினியார் எனுஞ்செருக்கு மன்னித் தீர்வார்;
பல்லாரும் நனிவியக்கப் படித்துரைத்துப் பயிலெளிமை படைத்தாய்! வாழி!

'கூடியவெப் புலவருந்தாம் கொண்டபுலத் தெல்லையினைக் குறித்துக் காணும்
ஆடியினிற் றிகழ்வை' யெனும் அவ்வுரையும் ஓராற்றான் அமையும் போலும்;
நீடுபுகழ் உலகமெலாம் நிறைத்தபழம் புலவரென நேர்வார் யாரும்
நாடிமகிழ்ந் திருக்கும்ஒளி நற்படமா யாங்காணும் நலத்தோய்! வாழி!

உள்ளநிறை பெருஞ்செல்வத் தொருவனாய், ஒப்பில்புலம் உற்றோன் றானாய்,
எள்ளரிய நன்னெறிகள் எடுத்துரைக்கும் நல்லமைச்சாய், இதனைக் காக்கும்
வள்ளன்மைப் புரவலனாம் வாய்ந்ததுணர்ந் துனைத்தேர்ந்தேம்; மன்னு மொன்றும்
அல்லனலன் என்றுரைக்கும் அவையடக்கம் யார்கொள்வார்! அன்பின் வாழ்வே!

கோட்டிழிதே னெனவொழுகும் உரைநடையும், குலவமிழ்தம் கொண்ட கண்டாம்
பாட்டியற்றும் பெருந்திறனும், பயின்றமொழி பெயர்ப்பழகும் படைத்த பண்பு,
நாட்டினர்க்குப் பயன்படவே நன்னூல்கள் நாணாளும் நல்கும் நிற்குக்
காட்டுமொரு நிகருண்டோ! **கதிரேச**! எமதன்ப! கலையின் வாழ்வே!

ஒரு பெரியன் எடுத்துரைக்க ஒருபுலவன் இணைந்துரைக்க உண்மைத் தொண்டு
வருபெரிய தமிழ்க்கழகம் வழங்கிய **பண்டிதமணி** யாம் மாண்பொன் றேயோ
உரியதுவே! புலவர்கடம் உளமணியே! தலைமணியே! ஓங்கு வாழ்வு
தருமணியாம் திருமணியே! தமிழ்த்தாயின் கண்மணியாம் தக்கோய்! வாழி!

பதினைந்து, பதினாறாவது ஆண்டு

பல்லாவரம் உயர்திரு. மறைமலையடி அவர்கள்

வருக தமிழன்னை மாண்பார் அருளே
உருவாகி வந்த ஒருவ ! பெருவாழ்க்கை
உற்ற தொருகுடியில் ஓங்குமில் வாழ்வெல்லாம்
பெற்றும் அவைதுறந்த பெம்மானே ! மற்றுலகில்
இல்லை கலைகளிவன் ஏய்ந்துகல் லாதவென
வல்லாரும் போற்றுகலை மாமணியே ! எல்லையறு
செந்தமிழிற் பல்வகையாச் சேர்துறைகள் எவ்வெவற்றும்
முந்து பெருட்புலமை முற்றியோய் ! வந்த
உரையார் வடநூலில் ஓங்காங் கிலத்தில்
வரையாப் பெருட்புலமை வாய்ந்தோய் ! வரை நின்
எழுத்தின் தனிச்சீரை எவ்வழியுந் தேர்ந்து
வழுத்தாதார் யாரிந்த மண்ணில் ! பழுத்தமிகு
மெல்லினிமை சான்றுமணம் வீசுங் கனியினையும்
வெல்லும் உரைநடையை வேண்டாரார் ! மல்கு
பெருநூ லெதற்கும் பிறழா துரைக்கும்
பொருளின் வளமெவரே போற்றார் ! தெருளார்ந்த
மேலைப் புலத்தோரும் மெச்ச வியற்றுநின்
நூலின் பெருஞ்சீர் நுவலாரார் ? சாலப்
பெருகு மவைக்கண்ணின் பேருரைகள் சூட்டே
உருகி நிறைமகிழ்தம் முள்ளம்- மருவினராய்
வானின் ஆமிழ்தே மலயத்தென் காலேநற்
றேனருவி யேயென்னச் செப்பாரார் ! மேனிலைசேர்
கல்லூரி போற்றுங் கணக்காய ராகியகாள்
சொல்லின் றிறனேர்ந்து சொல்லாரார் ! பல்வளஞ்சேர்
'மூல்லை'யோடு 'பாலை'யினில் முற்றியநின் ஆய்வுரையை
நல்லிசையோர் தம்முள் நயவாரார் ! தொல்லடிகள்
மாணிக்க வாசகனார் வாழ்க்கைவிரி நூற்கண்டு
நாணிக்கன் கூசாத நண்ணுரார் ! ஆணிப்பொன்
அன்ன சிறப்பினவாய், ஆக்குநூல் ஆக்கமெலாம்
எண்ணிக் துணிதற் கியலாகித்- துன்னும்
கினதுரை நூலாகும் நீள்கடலை நீந்திப்
புனைவதற்கார் வல்லார் புவியில் ! இணையில்லாச்
சைவத் துறையின் தகுசீ ரனையெல்லாம்
எவ்வெவர்க்கும் ஊட்டும் இணையிலாய் ! இவ்வுலகிற்
செல்வர்யா மென்னச் செருக்குஞ் சிலவரைப்
புல்லு துகளாக்கொள் பொற்போனே ! பல்வழியிற்
றம்மை மதியாரைத் தாமதியா நன்மானம்
இம்மை எவர்க்குமுன் எய்ந்தோனே ! செம்மையெலாம்
தங்குங் காந்தைத் தமிழ்ச்சங்கத் தெந்நாளும்
பொங்குந் தனியன்பு பூண்டோனே ! திங்கள்
நிறைநிலையே யென்ன நிலவிப்பல் ஆழி
மறைமலையே ! வாழி மகிழ்ந்து !

வரவேற்புப்பத்திரங்கள்

பதினேழு, பதினெட்டு, பத்தொன்பதாவது ஆண்டு

திருவாளர். கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் M.R.A.S.

திருவளருந் தமிழ்த்தாயின் செங்கமல வடித்தொண்டு செய்தற் காய
வொருபெரிய தவமுடையாய்! உறுதவத்தன் னேர்வாழ்விற் கோங்கு மெல்லி
மருவுமுயர் நிலையுடையாய்! மாநிலமெல் லாமறிய மலிந்த சீர்த்தி
வருநமச்சி வாயவெனும் மாண்பெயராய்! வாழி! யிவண் வருக மாதோ!

மூன்றுறுநாள் தமிழகத்தைந் திணைமயக்கம் பல்புலவர் மொழிந்தா ரேனும்
அந்தவியல செயற்கையினில் ஆக்கினர் யாருமிலர் அம்ம! கீயோ!
எந்தநிலத் தெங்குளதெம்தென்றுய்ந்தாங் கமைத்தாய்நின் னில்லில்! ஆயின்
ஐந்திணையின் கருவெல்லாம் அமைந்ததனைக் கடலகமென் றழைப்ப தென்னே!

சென்னைநகர்க் குறுபுலவர் சேர்வதெவ ணெனக்கலங்கித் தியங்கா வண்ணம்
அன்னவர்க்கோர் தமிழில்லம் அமைந்ததெனத் திகழுறின தழகா ரில்லைத்
தென்னரசர் பணியென்னத் திகழ்முன்னாட் சங்கமெனச் சீர்சால் பாரி
தன்னரிய வாழ்க்கையெனத் தமிழ்த்தாயின் கோயிலெனச் சாற்ற லாமே!

மேனிலத்தா ரவர்தாமும் வியந்தனர்போற் றிடுமாறு மேவு மில்லம்
நானிலத்துங் கொண்டனையாய் நல்வாழ்விற் கோரிலக்கா நாட்ட வல்ல
மாநலத்த பெருந்திருவம் வாய்ந்தனை! மற் றின்னபலர் வாய்ந்தா ரேனும்
தூநலத்தாய் மொழியன்பில் தோன்றல்! நின் னெப்பாவார் தோன்றி லாரே.

பாலர்நினை யோர்ந்திடுவர்! பள்ளியினா ஓர்ந்திடுவர்! பயில்நல் லூரிப்
பாலர்நினை யோர்ந்திடுவர்! பயிற்றுவிப்பா ரோர்ந்திடுவர்! பழுத்த கேள்வி
நூலர்நினை யோர்ந்திடுவர்! நுண்ணிபலா ரோர்ந்திடுவர்! நுவல்சிற் றூரர்
சாலநினை யோர்ந்திடுவர்! சார்நகரத் தாரோர்வர்! தனிச்சீர் எய்தினை!

ஆங்கிலமொன் றேயரிவார் அருந்தமிழ்சேர் மாணவர்கட் காசா னுகி,
ஓங்கியபல் கலைக்கழகத் தும்மொழிக்காம் உறுப்பாகி, உச்சி யெய்தி
ஆங்கலரோ ராப்பாடம் அமைத்ததனைப் படிப்பித்தே யாய்ந்து கொள்ளும்
நீங்கலரும் வியப்பம்ம! நீங்கியது நீள்புலத்தாய்! நின்பாலன் றே!

உலகியலிற பலதுறையு மோராராய், உறுபுலவர் ஓதுவிக்கும்
எலிமுயல்விற் குறுவாழ்க்கை யிவ்வொன்றே யறிவாராய் இளைப்பார்க் கம்மா!
மலிபொருளும் மாண்புகழும் மதிப்புயரு மேனிலையும் வாய்ந்தே யார்க்கும்
தலையாகத் தமைச்செய்வார் தாமேயென் னினைவதனைத் தருவை மாதோ!

நிலவுலகிற் பெருவளஞ்சேர் நெறியலது புலமைநெறி; நிலையிற் றுக,
ஆகலில்பெருந் திருவினரோ அதன் பெருமை யோர்ந்தவரை யளிப்ப தில்லை;
இலகுமிரு திருவுடையார் நினையனையர் ஈரொருவர் இருப்ப தாலே
சிலவர்புல வேராதல் செழுமையடைந் திப்புவியிற் சிறக்கின் றாரால்.

ஆண்டொன்றில் நிகழ்விழுவில் அவைத்தலைமை கொண்டனைமற் றப்பே ருலே
ஈண்டியநல் லாண்டுபல எய்தினவால்; எம்மன்பா! இந்நாள் காறும்
வேண்டியவவ் வளவதனில் வேண்டுவன செய்துவந்தாய் வேண்டு மிந்நாள்
ஆண்டுளநின் அலுவல்பல அகற்றினைவந் தருளினையால் அன்ப! வாழி!

தலைவர்கட்களித்த

இருபது இருபத்தொன்றும் ஆண்டு

பண்டித திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்

ஆசிரிய விருத்தம்

தேனுட்சி செயுமொழியும் திருவாட்சி செயுமுகனும் திகழு மன்பு
தானுட்சி செயுமனனும் தாமாட்சி கொளவிருக்கும் தனிச்சீ ராள !
மேனுட்சி ராப்பள்ளி பெற்றிருந்த வீறின்றும் மேவ விங்நாள்
மீனுட்சி சுந்தரனு விளங்கிடுவேங் கடசாமி வேந்தே ! வாழி !

மன்னியநல் லிசைப்புலவர் மருதநிலக் கருவளங்கள் மாணக் கூறும்
அன்னவையெல் லாமின்றும் அமைந்தநடுக் காவேரி அண்ணல் எங்கள்
முன்னவன்செந் தமிழ்முன்பன் முத்துச்சா மிப்பெயரன் முன்னம் செய்த
எண்ணரிய தவந்தருவேங் கடசாமி ! இவண்வருக ! வருக ! ஏந்தால் !

நத்தூரும் புனன்மதுரை நகர்ப்பாண்டி மன்னிறுவு நான்காஞ் சங்கத்
'தெத்தேர்வு தாமுமிலை யிவைநிகர்வ' எனப்படுமோர் ஏற்றஞ் சாலும்
முத்தேர்வும் மூவாண்டில் முதன்மையினில் முற்றுவித்தாய் முன்ப நின்னை
ஒத்தாரும் ஒப்பாரும் உளரோபல் வகைத்தேர்வாம் உலகத் தம்மா !

படித்தினித்தநாவிற்கும் பார்த்தொளிர்ந்த கண்ணிற்கும்பார்த்தவெல்லாம்
மடுத்தடுக்கித் தினைத்திருக்கும் மனத்திற்கும்வல்லாதார், மலிசீர்த்தோடா,
தொடுத்தனர் நின் கைக்கு, ஒருகை பார்ப்பலெனத் தினையேகொள்
[துணைய தாகி,

அடுப்பவர்க்கு வரையாத அவ்விவருகை வரைந்திட்ட அழகு கண்டே !

பெருக்கமுறு நூலியற்றப் பிறங்குமுரை நடையெழுதப் பேச்சு வன்மை
சிறக்கும்விரி வுரையியற்றச் செழுநூல்கட் குரைவிரிக்கத் திகழா ராய்ச்சி,
தருக்கநூல் இவைகாணத் தாம்தாம்தாம் எனமுழங்கும் தகவி னோரும்
செருக்ககல அவையியற்றும் திண்ணியவேங் கடசாமிச் செம்மால் வாழி !

பண்டிதருட் சிலர்புதுமை பழகாமை ஆங்கிலமேற் பள்ளிக் கொவ்வாத்
தொண்டரெனக் கூறறிவின் தோற்றமிலார், தகுவரெனச் சுட்டு பட்டம்
கண்டவரை, ஐயநெடுங் கணக்கியாதோ என்னவிழி காட்டா நிற்பர்
மண்டவர்நின் முன்சேரின் மதிமுன்னர் மீனிருக்கும் மாண்பே யன்றே !

கல்லூரித் தமிழ்த்தொண்டு கடவநாட் கணித்திருந்து காணும் பின்னோர்
நல்லூரிற் கலைமாடம் நாட்டியவண் அமைந்திருக்க நாடி நிற்பாய் ;
சொல்லூர் மற்றிதுவாக, இச்சங்கத் தொண்டரெலாம் துணைவ ராகப்,
பல்லூரும் பன்னுடும் பயிலிடம்நம் பள்ளியிதாப் படைப்பாய் மன்னே.

நாடெல்லாம் உறுசங்கம் நற்றலைமை கொளச்செல்வாய்; நங்கள் சங்கம்
கூடுறுகால் வருபுலவர் கூட்டத்திற் காம்தொண்டு குறித்து நிற்பாய் ;
பீடுறும்நின் னுரிமையிதேல், பிறங்குதலை மைக்கேது பிறிதொன் றன்று ;
வாடுறுகின் னுடனலத்தால் வாய்த்தொண்டொன் றேயமைய வைத்த
[தன்றே.

திருவாழ்வு செய்வாழ்வு கலைமகளார் திருவருளாற் றிகழா நின்ற
ஒருவாழ்வு மணைமக்கள் உறுவாழ்வோ டுடனலங்கள் ஓங்கா நின்ற
பெருவாழ்வு தமிழ்த்தாயாம் பெரியாடன் திருச்சீரைப் பேசு மன்பால்
வருவாழ்வு பலவூழி வாய்ந்தினேவேங் கடசாமி வாழி மாதோ !

வரவேற்புப்பத்திரங்கள்

இருபத்திரண்டாவது ஆண்டு

உயர்திரு சுவாமி விபுலாநந்தர் அவர்கள் B. Sc. (London).

பொங்குஞ்செஞ் சொல்லாற் பொருளா லணிதன்னு
லெங்கும் புகழும் இனிமையாற்—றங்கும்
இளமைத் திறன்மேவி என்றும் வழங்கும்
வளமை தனைக்கொண்ட மாண்பால்—உலகிற்
றனக்கு நிகரில் தமிழ்த்தேவி எங்கள்
அனைக்குச் செறிமைந்த ராவார்—கணக்கிற்
கிருகோடி மேலார் இவருட் டலைமை
மருவுஞ் சிலருள்ளே மாண்பார்—ஒருவன்
இவனென் னும் சுட்டெய் தெழிலோய்! நின் சீர்கள்
இவையென்னச் சுட்டல் எளிதோ—சுவையென்ப
தாங்கும் இயல்பிற் றமிழ்ச்சொல் வழக்கென்றும்
பாங்குற் றுயரும்பாழ்ப் பாணத்தில்—ஓங்கி
யுயர்வான் குடியுற்ற ஒண்பிறையிற் றோன்றி
மயில்வா கனப்பெயரை மன்னிப்,—பயிரின்
வளமை நெறியில் வருபயன்போல், நற்சீர்
இளமை யகத்தே யிலங்கக்—கலைகள்
பிணங்கி எமதுதவப் பேறென்னச் சாரக்,
குணங்க ளெலாமங்ஙன் கூட,—மணங்கொண்ட
தண்டமிழின் மேலாம் தரமென் றுலகேத்தும்
பண்டிதரென் றோங்குமொரு பட்டம்—இலண்டன்
கலைக்கழகத் தாராய்ந்து காட்டறிவு நூலின்
புலக்கிழமை யுஞ்சேர்ந்து பொற்ப,—நிலக்கிணரு
தன்னே ரிலாக்கவிஞன் தாகூரின் பாக்களெனப்
பொன்னேரும் பாக்கள் புனைதிறனும்—பன்னும்
உரையும் எழுதும் உரைநடையும் யார்க்கும்
நிறையுமெய்ப் பாட்டை நிகழ்த்தச்,—செறியும்
அணியிற் நிலைக்களன் ஆமதங்க ளூளா
மணிமூன்று நூல்கள் வகுத்தே,—துணியும்
புலமை யிவையெல்லாம் பொற்பக்கொள் ளின்பம்
உலகம் அடையவுளங் கொண்ட—நிலையால்,
மருவும் பிறவி மருவாத் துறவு
உருவும் உளமும் உறவே,—பொருவும்
இணையி லிராம கிருட்டினப் பேர்த்தன்னை

தலைவர்கட்களித்த

வணையும் ஒருமா மடத்தின் — துணையாகி,
மாசில் பலதொண்டு மன்னி யுலகெங்கும்
பேசுவிபு லாநந்தப் பேரெய்தி,— வீசொளியுட்
கண்ணென் னும் கல்விக் கலைகள் பயில்பள்ளி
எண்ணு மிலங்கைமுத லெவ்விடத்தும்-நண்ணச்செய்
அண்ணல்! இனநின்சீர் ஆய்ந்துரைத்தல் ஆகாபோல்
எண்ணற்கும் ஆங்கண் இயையாவே!— அண்ணல்
மலையார் கலைமன்றில் மாணும் தமிழ்ப்பாற்
றலைமை தணையருளாற் ருங்கி— நிலையும்
தமிழ்த்தாயின் தொண்டே தலைமையாக் கொண்டு
தமிழ்த்தாயின் வாழ்வே தனதாய்த்— தமிழ்த்தாய்
திருவருளெந் நாளும் திகழக்கொள் செம்மால்!
வருக! இவண் வருக! வள்ளால்! வருகவே!
வாழி எமதன்ப! வாழி பலவூழி!
வாழி பலநலனும் வாய்ந்து!

வரவேற்பு

இருபத்துமூன்றுவது ஆண்டு

உயர்திருவாளர் மகாமகோபாத்தியாய டாக்டர்

உ. வே. சாமிநாதையர் அவர்கள்

திருமேவு தமிழ்த்தாய்தன் செய்தவங்கள் பலகோடி திரண்டு வந்தோர்
உருமேவி யுற்றவென உத்தமதா னச்சீரூர் உற்றோய் ! வாழி !
தருமேவி வளர்கரந்தைத் தமிழ்ச்சங்கப் பேரன்பா ! தமிழர் தங்கள்
பெருவாழ்வே! வருகஇவண்! பெரியோனே! வருக ! தமிழ்ப் பேறே வாழி !

மன்னியசீர் மீனாட்சி சுந்தரன்முன் மாப்புகழை வரைய வல்லார்
நின்னேயலா தியாருளரே ? நின்சீரை யங்ஙனமே நிகழ்த்த வல்லார்
அன்னவன்றன் னருள்பெற்ற ராரேனும் உளராயின் ஆவா ரன்றித்
தன்னமுமியாம் வல்லேமோ ? சாமிநா தப்பெயர்கொள் தனிச்சீ ராளே !

படியிதனி லணிதருமென் பட்டமெலாம், பல்லோர்கள் பரிந்து பெற்றே
முடியதனி லினிதிருத்தி முக்காலும் போற்றிடவும், முன்னு வாய்நின்
அடியதன்கீழ் அமைந்தனதாம் அணிகொள்நெறி ஆய்ந்திடினே அனநின்
[சிரெப்
படியுரைப்பேம் ? படியுரைக்கும் படியில்லாப் பாவலன்பாற் பயின்ற
[கோவே !

கானிலமுன் னனபல கடந்தேடு தேடியநின் கால்க டாமோ !
பேணிவரு மேடுகளைப் பெயர்த்தெழுதிப் பெருவன்மை பெற்ற கையோ !
மேனிலையர் தம்மினிமை மேவாது பார்த்துமிளிர் விழிக டாமோ !
பான்மொழிசேர் எமதுதமிழ்ப் பாவையருள் பணிகள்பெறும் பாலவம்மா!

பல்லாண்டின் முன்வரையப் பட்டனவாம் ஏடுகளின் பண்பும், அன்ன,
கல்லாண்ட வுளத்தோரும் கரைந்துருகப் பழுதுற்ற காட்சி தானும்,
சொல்லாண்ட பொருணுட்பம் தொகுத்துணர்ந்தச் சியற்றிடுமா
[தொடுக்குந் துன்பும்,
எல்லாண்ட புவிச்செல்வர் எனனறிவர் இந்நெறியின் எய்தாக் காலே ?

கலைகாட்டித் தாய்மொழியின் கனிஞட்டும் நின்றிருண்டைக் காட்டு
[மொன்றை
மலைகாட்டு மேனாட்டில் வாய்ந்திட்டார் உளராயின், மன்முன் யாரும்
அலைகாட்டு நிதிகூட்டி அவர்நூலே மனைக்கேற்ற அணியாக் கொண்டு
சிலைநாட்டித் தெருத்தோறும் தெய்வமாக் கொண்டுவிழாச் செய்வ ரன்றே!

தலைவர்கட்களித்த

பாட்டுமகன் பதவுரையும் பகர்ந்திடுவார் கிழப்புலவர், பல்லா ராய்ச்சி
கேட்டுமறி யாரென்னக் கிளந்திடுமாங் கிலப்புலவர், கிளர்ந்தின் னூலின்
ஏட்டுமுதல் மேற்கோணூல் இவையென்ன அகமுதல் இயம்பல் கண்டே
நாட்டமவை இமையாராய் நடுநடுங்கு முளத்தாராய் நாணு வாரே !

மேனாட்டிற் சான்சன்றன் மெய்ந்நிழலா நாணுளும் மேவி நின்றே
வானாட்டின் அமிழ்தென்ன வரலாறு பாசுவலான் வரைந்தான்; அஃது
தானாட்டும் நேரின்றித் தனிச்சீர தாயதது தன்னை இன்னே
மீனாட்சி சுந்தரன்றன் வரலாறு மேவியெதிர் வெல்லு மாலோ.

சொல்லாத்தி சூடிமுதல் தொல்காப்பி யம்மீறுந் தொன்மை நூல்கள்
எல்லாம்நின் கையாலச் சியற்றக்கொள் எழில்வேண்டும் எங்கள் அன்னை
கல்லாள்நின் னலங்குறித்து நாணுளும் தவமிருக்கும் நன்மை யாலே,
வல்லாய்நீ பல்லூழி வாழ்வுறுவாய் நலனுற்றே வாய்மை யாமே !

வாழியபல் லூழியெலாம் வளருறுதாய் மொழித்தொண்டு மன்னும்
[வள்ளால் !
வாழியபல் லூழியெலாம் மாண்புறுநற் றமிழர்தமை வைத்த கோவே !
வாழியபல் லூழியெலாம் மன்னுமொளி யுலகெங்கும் வரையும் ஓரோய் !
வாழியபல் லூழியெலாம் மலிவளனும் பிறநலனும் வாய்ந்து மாதோ !

வரவேற்பு

இருபத்துநான்காவது ஆண்டு

உயர்திருவாளர் மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள்

திருவளரும் தமிழ்மன்னர் சேதுநாட் டியர்புலவன் ! செழிய கல்விக்
கருவளரண் ணுமலையின் கலிக்கூடத் தாய்ச்சிநெறிக் கிலஞன், நாளும்
மருவளரும் தமிழ்மணக்கும் வாய்வள்ளல்! இராகவப்பேர் வாய்ந்த
வருகவவன்! வருகவிவண்! வளரூழி பலவாழி! வருக மாதோ! [செல்வன்!

இவ்வுலகிற் கெழிறருவ திந்தியா மற்றிதற்கோ எழிற்றென்னுடு
செவ்விததன் சீர்க்குறுகால் செந்தமிழ்த்தாய் செப்புமிதன் செவிலித்தாயர்
பவ்வமதிற் பவங்காணுப் பார்மன்னர் பாற்கான்முன் னைபல்லோர்
எவ்வுலகும் அவர்சீரை எய்துவிப்போன் இராகவனும் எங்கள்ஏறே!

செந்தமிழின் முதற்றலைவன் செய்தனவாம் தாய்த்தொண்டு செப்பற்
[பாற்றே!
முந்தியநூல் செய்யுள்பல முறையாக வச்சிட்டான்; முயலா தாரும்
பிந்தியநள் ளிருட்காலப் பிணக்கமெலாம் நுழைந்தாய்ந்து பிறங்கும்
[உண்மை
தந்திடுவான் ஐயங்க டமையறுப்பான் ஆய்ச்சிமுறை தருவான் அம்மா!

கண்டின்மிக வினிக்கின்ற கட்டுரைகள் பலதந்தான்; கருத்து மிக்க
எண்டொகையுள் அகத்திற்கங் கியலுரையுள் ளுறைதோன்ற இயற்றி
வைத்தான்;
வண்டிறலார் வடகடலுள் நலமுகந்து தமிழ்க்கடலுள் வார்த்துக்
[கொள்வான்
தண்டமிழ்த்தேன் ஒழுக்கமெனும் தாழிசைசெய் தோங்குமிசை தானுங்
[கொண்டே.

சந்தமுறு மகுவம்சம் சாருந்த லம்கீதை சார மெல்லாம்
தந்திடுபா ரதநீதி பல்லடன்றன் சதகமிவை தந்தான்; செந்தேன்
உந்தும்ஒரு துறைக்கோவை ஒருகோடி தனிச்செய்யுள் உவையுந் தந்தான்;
எந்தவுயர் பாவலன்முய்க் கிராகவன்போற் பன்னெறித்தொண் டியற்றி
[னனே!

எத்தனையோ புலவர்களை இப்புவித்தாய் பெற்றேற்றம் எல்லாம்
செய்தாள்:
அத்தனைபேர் தங்களிலவ் வன்னையினுக் கொருமாலை யன்பி னீந்த
வித்தகரை யாமறியேம்: வியன்ஞால விரிவஞ்சி விடுத்தார் போலும்:
புத்தமுதம் எனப்புணர்ந்தான் புவியெழுப தெனுமாலை புலவர் கோவே!

வள்ளன்மைப் பெரும்பாரி வளர்புகழன் எனப்புலவர் வரைவர்; அங்ஙன்
விள்ளுமது விணைத்தொகையா விரிஞாலத் திஞ்ஞான்றும் விளங்கும்
[வண்ணம்,
பல்புலவர் உடன்புணர்ந்து பழகிநரும் பாடாத பண்பை யெல்லாம்
சொல்வளங்கூர் வெண்பாவிற் சொற்றவன்றன் ரூப்தொண்டிற் றூய
[துண்டே!

வண்ணமுறு செந்தமிழும் வடமொழியும் மற்றைமொழி யுலகும் வாய்ந்த
எண்மலியுங் கலையுருவி யிரும்புலவர் கருத்துருவி இற்றை நாளில்
மண்ணினிகழ் மாண்புருவி வருமமிர்தம் இராகவன்றன் வாயின் செல்வம்
திண்ணியபே ரறிஞரொடு சிறுவர்தம துள்ளத்தும் திகிக்கு மாலோ!

நாட்டினர்க்காம் அரியவிலை நன்கலனென் கலைக்கூடம் நாட்டும் வள்ளல்,
ஈட்டுமணி தமைத்தேர்ந்தங் கிருஞ்சிறப்பு நல்லுரையென் றின்ன செய்து,
நாட்டுமணி நகரமணி நாயகப்பா ரதிமணிகள் நாடி, மன்னர்
மாட்டலது மேவாவிம் மணிபெறவே மன்னனெனும் மாண்புற் றனே.

மூவேந்தர் வழிமுறைக்கு முன்பொருகால் அவைப்புலமை முன்னுங் காவேந்து பாவலனுய் நற்குருவாய் நற்றுணையாய் நாடி நின்றன்; [கூத்தன்
பாவேந்தர் வேந்தனவன் பண்பெல்லாம் படைத்தனன்நம் பாவல்
[லோணும்;
காவேந்து தமிழ்நாடு கருதுசிறப் பளித்துயர்த்துங் கடமைத் தன்றே.

வாழியரோ தமிழ்த்தாயின் மைந்தனிரா கவப்பெயர்கொள் மாண்பன்
[வாழி
வாழியரோ சேதுரசர் வளர்புகழ்சா லவைத்தலைமை மன்னு சீரோன்!
வாழியரண் ணுமலையார் மாண்புறுநற் கலைக்கூட வாழ்வாம் செல்வன்!
வாழியரோ நம்சங்க மலியன்பு வளர்ந்திடுநன் மகிழ்ச்சி யோனே!

வரவேற்பு

ஆண்டிபட்டி சமீன்தாரும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்
ஆதரிப்பாளரும் ஆகிய காநாடுகாத்தான்

திருவாளர். சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்கள் M.R.A.S.

கரூர் நகராண்மைக்கழகத் தலைமை ஏற்றபோது மகிழ்ந்துரைத்த

வாழ்த்துப்பா.

வானுயர் புரிசை மதிதுழை மாடம்
வினைமாண் கூடம் வெயிலுறுப் பொங்கர்
குண்டுநீர்த் தடமுதற் பண்டுவரு சிறப்பும்,
மின்னவிர் விளக்கம் வீசுபொறிச் சிவிறி

ஏவலர்க் கூவுமணி யாங்கா கியரும்
கேசென மொழிபொறி சீர்கால் தூம்பு
மற்றுப் பிறவா பிற்றைப் புதுமையும்
ஓராங் குற்ற வுயர்நிலை யில்லப்
பந்திய, விசைசூழ் பண்டிய, பலப்பல,

விழவி னன்ன குழுவறு வியன்றெருக்
காட்சியும், வயின்வயிற் கவின்பிற மாட்சியுங்
காண்டகு சிறப்பிற் காஞ்சி காத்தான்
செய்தமா தவத்தொடு, சீர்சா லந்தகர்
முதனகர்க் குரிமை முழுதுமுற்றியகுலம்

அந்தண ரரசர் அவ்விரு குலக்கும்
மேல்வைத் துரைத்த தோலா நற்குலம்
வளம்பல படைத்த வணிக மாக்குலம்
செல்வச் செருக்காஞ் சிறுமைசே ராக்குலம்
திருப்பணி முதலாத் திகழறம் பலவும்

புரிந்துபுகழ் நிறுத்த புனிதஞ் சால்குலம்
அத்திருக் குலச்சார் அவனியிற் றமிழென
முழுதுல கறிந்த பெருமைசேர் செம்மல்
திருவளர் குரிசில் சிதம்பரப் பெயரோன்
புரிந்தமா தவத்தாற் புவியுறும் புனிதன்,

கல்வியுஞ் செல்வமும் கலந்துற வெய்தி
ஒருநிலை நிற்கு மருமைகா ணுருவன்,
ஒழுக்கமுங் குணமும் பழுத்தருள் கனிந்து
மன்னுயிர் தமக்கவ ரின்னுயி ரனையான்,
இன்னீர்ச் சாயல னெழில்சே ருருவன்,

கன்னிலை மாறினுஞ் சொன்னிலை மாறான்,
அறனே பொருளே யின்பே யென்றுங்
கிவ்வகை மூன்றுஞ் செவ்விதி னுற்றோன்,
தூக்கிய வினையெலா மூக்கம் பிறைமதி
யணைத்தாப் பெருகலின்நினைத்தவா முடிப்போன்,

தலைவர்கட்களித்த

குன்று மீச்சுடரின் நன்றுணர் சீலன்,
யாஞ்ஞெரு தமிழன் என்ரும்மொழி தமிழ்
தாய்மொழி புரத்தல் தமியற்குங் கடனே
என்ரும் குணரு மேதமி னன்னெறி
முழுதகத் தொளிரு மூதறி வாளன்,

கொடை மடம் போகிய கொற்றமும் பின்றை
வருபயன் குறியா வழக்கின் வணிக
நடைமடப் பூட்கையும் நயந்தன ஞகலின்
மல்லன்மா ஞாலத் தெல்லா வுயிர்க்கும்
ஏமம் புணர்க்குஞ் சேம நன்கொடை

வருவழி யாவும் வயங்குற நாடி
மொழிபுரந் திடன்முதற் பல்வறஞ் சூழ்ந்து
பொதுமை நீங்கிய பொருளுறுங் கொடையன்,
மூப்பாற் சங்க மூனமிருந் தனநிகர்
மதுரையம் பதியின் மன்னுசங் கத்திற்

குதவித் தலைவரா முரிமைக் கிழவன்,
தமிழ்நூற் பயிற்சி தலைதந் திடனுங்
கைத்தொழிற் பயிற்சி கைவரச் செயலுங்
கழிபயன் றருநூல் மொழிபெயர்த் திடனு
மென்ரும் குரைக்கும் பின்ரு நிலைதாறு

முழைக்கும் பெருமை தழைக்கும் தஞ்சைக்
கரந்தைத் தமிழ்ச்சங்கத் துயிர்நிலை,
பாலையங் கோட்டைப் பண்பார் சைவ
சபைக்குறும் வரிசை தந்திடுஞ் செம்மல்,
ஏனைநற் சபைக்கு மியம்புறுந் தூணவன்,

வேண்டின தருஉம் விளைநிலம் பெருகிய
ஆண்டிபட்டியின் அதிபன், அரச
பத்தியிற் சிறந்தோன், மற்றவர் விருப்பால்
ஆதியிற் றமிழ ராசுவீற் றிருந்த
கரூஉர் நகர்ப்பரி பாலனங் காண்போன்,

பெத்தாச்சி என்னும் பெயருறுஞ் சீமான்.
அனையன் வாழியர்! அனையன் வாழியர்!
புதல்வர் சிறக்க! பொன்பெரி தோங்குக!
கெழுமிய பெருங்கிளை மருவுகமாண் பெலாம்!
நானில முழுவதூஉ நல்லிசை பரவுக!

காவிரித் துளியினுங் கற்குல்வான் மீனினும்
மல்குக வாணுள்! வாழியு ழியரோ!

வரவேற்பு

கரந்தைத் தமிழ்ச்சங்கம் மூன்றும் ஆண்டுவிழாவில்

திருவாளர். சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்கட்கு

சங்கத்தார் வழங்கிய வாழ்த்து

வாழி முதிரா மன்னவர் குலத்தோய்
வாழி முதிர்ந்த மாதவத் துதித்தோய்
வாழி ஆண்டிப் பட்டியில் வந்தோய்
வாழி தாதனுத் தனதனை வைத்தோய்
வாழி பெத்தாச்சி வண்பெயர் பெற்றோய்
வாழி யிளையாள் மலர்க்கணைக் குற்றோய்
வாழி "யாக்கம் அதர்வினுப்" வருமா
தாழ்வி லாக்கம் சமைந்த பெருமா
நின்னூ ரதனையோ நின்பே ரதனையோ
நின்குல மதனையோ நின்குண மதனையோ
நின்னுள மதனையோ நின்வள மதனையோ
நின்னிரு கையையோ நின்னரு புகழையோ
இங்குரைத் தவற்றிற் புங்கவ ரவற்றை
நன்கெடுத் துச்சொலி நாங்கள்வாழ்த் திடுவோம்.
காலு காலும் காண்மதி நீதியும்
மீளவும் வளருநின் புகழ்நிற மிகையால்
தன்னிரு கையிற் சாருநீள் பணைத்தால்
பன்னரு முயிர்பல மாய்த்தனன் பார்த்தன்
உன்னிரு கையின் உற்றநீள் பணைத்தால்
எண்ணரு முயிர்கள் காத்தனை இறைவ.
முன்னுள் வளவன் முதிர்ந்ததன் வளத்தால்
மன்னு ஒருசிறு சங்கமும் வளர்த்திலன்
இந்நாள் வளவநின் னெழின்மிகு வளத்தால்
எந்நா ளுஞ்செழித் தோங்கி யிருக்குமா
றெங்கள்சங் கத்தை ஏந்திணைய் மதுரையார்
தங்கள்சங் கத்தைத் தாங்கிணைய் பாளையங்
கோட்டைச்சங் கத்தைக் குறிக்கொண் டுள்ளாய்
நாட்டுமுச் சங்கமும் நன்குவளர்த் துள்ளாய்
வளம்பெற் றுள்ளார் வரையப் பெறுரான்
புளம்பெற் றுள்ளார் ஒருவரின் றுண்போல்
பணங்கொடு விடமுடைப் பாம்பிற்கு முண்டு
பணமிடுங் குணத்தொடு படைத்துளாய் நீயே
பிறர்பொருள் தம்பொரு ளென்னப் பேணும்
விறல்கொள் குலத்துறு மேன்மக னீயே
'பெத்தாய்ச்சி' யென்னப் பெயருனக் கிட்டவர்
உத்தமர் தம்முள் உத்தம ராவார்
'பெத்தாய்ச் சிக்குப்' பெரியதா யெனப்பொருள்
அத்தா அறிந்தோர் புகலுவார் அதுதான்

தலைவர்கட்களித்த

மூன்று சங்கக் குழவியும் முட்டுறா
தேன்றொருங் களிக்கும் இறைமைகொண் டமையால்
பழமலை நாதன் பங்கமர் தாய்க்கு
விழுமிய அப்பெயர் மேவியுள் ளதுகாண்
செட்டியா ரீசன் சேயார் பெயரதை
இட்டன ருன்பெயர்க் கிறுதியி லிதுதான்
முட்டையென் றிட்ட முருக னெந்தை
சிட்ட னாயவன் சிறுபெரு உருக்கொடு
முன்னொரு சங்கம் முதன்மை கொண்டும்
பின்னிரு சங்கம் பிறக்கிடாக் குறையை
இந்நாள் முடிக்குமா றீண்டுதித் தெழுந்து
முன்னர்யாம் கூறிய சங்கமூன் றினையும்
மன்னித் தாங்க வந்ததே மானும்
இதனால்
முன்பெய ராலே மூவா அன்னைநீ
பின்பெயர் சேரப் பிறங்கு பிள்ளைநீ
இளையாய் அழகுளாய் என்றும் ஒன்றுக்
குளையா யெங்கள் உள்ளத் துறைவாய்
என்னநின் தாதையர் இப்பெய ரிட்டார்
அன்னவர் பெருமை யளவிடற் பாலதோ
உன்னூர்ப் பெயரின் முன்னின் றிடுமொழி
தன்னைக் காசிலா தவர்க்கிட் டழைப்பர்
அன்ன ததன்பொரு ளன்றாம் அஃதேல்
பின்ன ரதன்பொருள் யாதெனிற் பேசுதும்
ஆண்டியெப் புவனமும் ஆளுமீ சன்பெயர்
ஆண்டிப் பட்டி யவன்குறிக் கொள்ளும்
ஊரென் றாகுமவ் வூரி லுள்ளார்
யாரு!மவனருட் கருக ரென்பதாம்.
இங்ஙனம்
ஊரால் பேரால் உயர்குலங் குணத்தால்
சீரா ருளத்தாற் செய்ய வளத்தால்
இரண்டு கையால் ஒன்று புகழால்
சிறந்த வுனக்குநேர் சீரிய நீயே
முச்சங் கம்மென மும்முறை யுரைத்தாம்
எச்சங் கக்கு மிறைவ னாகுவை
என்னல் தொனித்த தின்ன ததனால்
மன்னிய சீர்சால் மன்னவ நீதான்
கருவூ ருறாதெமைக் காக்கு மீசன்
கருவூ ராட்சி கைக்கொள லானாய்
ஒருவூ றூரார்க் குறாமல்
திருவார் மார்பனிற் சிறந்துகாத் திடுகவே.

வரவேற்பு

அன்னூர் கருவூர் நகரக்கழகத் தலைவராகத் தேர்வுபெற்றகாலை சங்கத்தார் கூறிய வாழ்த்து.

கங்கை வேணியன் கழன்மற வாது
பொங்கு மக்கமும் பூதிசா தனமும்

அடியா ரடிக்கிங் காற்றுந் தொண்டுமே
படிமீ தென்றும் பாக்கிய மென்னும்

தனைவை சியருள் தழைத்த மணியே
இனமார் நலனெலாம் எய்தப் பெற்றோய்

இனிமையே பொருளா எய்திய தமிழிற்
கனிவுகொண் டதனைக் காக்குங் காவல

சித்தச னென்னத் திகழுருக் கொண்ட
பெத்தாச் சிப்பெயர் பிறங்கிடுஞ் சுகுண

முத்தமிழ் மதுரை மூன்னிய சங்க
வித்தக விளைய தலைமை மேவினை

சைவந் தழைக்கத் தழைத்து விளங்கும்
மெய்வரு பாளயங் கோட்டையில் வீறும்

சைவ சபையோர் தாமுள மகிழ
ஐய வுதவினை அச்சுயந் திரமே

அன்றியும் பற்பல அளிக்கின் றனையால்
பொன்றிகழ் கரந்தைப் புரியில் விளங்கும்

தமிழ்ச்சங் கத்திற் சார்ந்துபோ ஷகனுய்
அமிழ்தினு மிகவே அருளுகின் றனையால்

நின்னருஞ் செயல்கள் நிகழ்த்தவும் படுமோ
நன்னயக் கருவூர் நகர பாலன

அக்கிரா சனமும் அளிக்கப் பெற்ற
மிக்கநற் செய்தியை மேவின மதனால்

அனைவரும் குழுமி அகமிக மகிழ்ந்தோம்
அனையநல் லிடத்திற் கமைந்தவ னீயே

என்னக் கொண்டே இறுமாந் திட்டோம்
கன்னய முறநீ நாளும்வா ழியவே.

தலைவர்கட்களித்த

இராவ்சாகிபு. திருவாளர், ஐ. குமரசாமி பிள்ளை B. A., அவர்கட்கு,

தஞ்சை நகராண்மைக் கழகத்துத் துணைத்தலைமை ஏற்றபோது

சங்கத்தார் அளித்த வாழ்த்து.

நிலமண்டில ஆசிரியப்பா.

ஓங்குசீர்ப் பரப்பின் உரைசால் ஞாலத்து,
பன்னிய நாடெலாம் சென்னிநன் னெடனைப்
பலர்புகழ் பீடுகொள் பாடல்சால் சிறப்பின்
பொன்னிநன் னாட்டிற் போந்த பொற்ப!
வண்டமிழ்ப் பெளவ வரைப்பினிற் படிந்து
எல்லை யுகந்த எண்ணில் வளனும்
உலகுயத் தந்து ஒண்சீர் நிலைஇய
மீனாட்சி சுந்தர மெய்க்கவிக் கொண்டல்
பொழிதரு பன்னூல் போற்றி நிலைபெறுத்திப்
பண்ணையிற் பண்ணிய பைங்கூ ழுகற்குப்
பருவமுங் காலமும் பாற்படு உரனும்
ஏற்ப நாடி இன்னீ ருதவ
அமைந்து நின்று அரும்பயிர் வளர்க்கும்
சூழி யென்னச் சுற்றுமா ணவர்க்கு,
காலமு மிடனும் வாலிதின் நோக்கிக்
கொள்வோர் கொள்வகை யறிந்தவ ருளங்கொள
வல்லிதி னிலக்கிய விலக்கண வகையெலாம்
உணர்த்தி யுதவிய ஒண்ணூற் கயமாம்
ஐயாச் சாமி யருந்தமிழ்க் கவிஞன்
பயந்த பண்ணவ! பழிப்பில் புலவ!
வசையில் வண்புகழ் மிசைபெருஞ் சிறப்பின்
தண்டமி ழன்னைத் தொண்டுகொள் மாட்சி
கண்டனை யோர்ந்து விண்டுளம் நெகிழ்ந்து
தாய்நிலைக் கிரங்கி, தாங்கமுன் போந்து
சங்கத் தங்கமாய்ச் சமைந்த சான்றோய்!

வரவேற்பு

ஒழுக்கமுற் றுயரிய ஒண்டமிழ்க் குடியில்
தோன்றிய தோன்றல்! தொல்சீ ராள!
வளவர் கோமகன் வரையில் சீர்த்தியன்
இராச ராசன் இயற்றிய விந்நகர்
நகர பரிபாலனம் நடத்துக நீயென
வேண்டின நிரப்ப விரும்பி யமைந்தனை!
நகர்க்குறு குறையெனை? நாடிவந்துற்றுக்
கூவலுங் குண்டமுங் கோதறு நதியமும்
கூலமும் பள்ளியுங் கோமளச் சோலையும்
எல்லியம் போது இயங்குவார்க் குதவும்
தீப தம்பமும் திருவளீண் மறுகொடு
நகரொளிர் சிறப்புற நாடும் பண்பினை!
எமக்குறு குறையெனை? ஏக்கல்நீ வந்தபின்
சங்கமுஞ் சீர்த்தது சமழக்கற நகருடன்.
காவிரி நாட்டினிற் கதிர்த்திழி காஞ்சனம்
பொழிதரு துளியினும் பொலிக நின்னுயுள்!
பொன்னினும் இனிய புதல்வர் மல்குக!
வளம்பல சுரக்க! வண்சீர் பரவுக!
அருந்தமிழ்த் தொண்டிற்பொருந்தி நனிசிறந்து
நாள்செய் கோளினும் நண்ணிய புகழொடு
ஓங்கி விளங்குக! உயர்ந்து விளங்கவே!

காரைதைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவரும், அதன் தலைவரின்
அருமைத் தம்பியாரும், தனுக்கோடி நாட்டாண்மைக் கழகத்தினரும்,
கடற்சுங்கக் கழகத் தலைமைத் தாளாளரும் ஆகிய

திருவாளர், வே. இராதாகிருட்டின பிள்ளையவர்கள் B.A.,

இவ்வுலக வாழ்வை நீத்ததற்காற்றாது கூறிய

கையறு நிலைச் செய்யுட்கள்.

மோகனூர், திரு. R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் கூறியன:—

என்றிளைய பருவத்தே எழுந்ததுநின் னட்பம்மா
அன்றுமுதல் யாமெய்துஞ் சீரெல்லாம் அதன்பயனே
நன்றருளும் நண்பாவோ ! நண்பாவோ !! நண்பாவோ !!!
ஒன்றுளத்து நினையன்றெம் மூக்கமதே யிழந்தனமே.

ஒருபொழுதும் வாழ்வறியேம் ஒருகோடி கருதினமே
நெருநலுளார் இன்றில்லார் எனல்சிறிதும் நினைந்திலமே
அருமைபெறும் அன்பாவோ! அன்பாவோ!! அன்பாவோ!!!
மருவுளஞ்சேர் நினையன்றெம் வலியினையே யிழந்தனமே.

பல்லான்ற கேள்வியினாய்! பாழ்ங்கூற்றம் நிற்கொண்டு
கல்லாரை நீத்தகன்ற காரணமும் ஓர்ந்தனமே!
மல்லார்ந்த நேயாவோ! நேயாவோ!! மனநீத்துச்
செல்லாத நினையன்றெம் செயலினையே யிழந்தனமே.

வள்ளுவர்தம் திருநாளே நின்னுளா மாண்புற்றோய்!
ஒள்ளியசீர் நின்மக்கள் உன்புகழை ஏந்துவரால்
கள்ளிய நின்காதலியை, நம்மூன்னை, நண்பர்களை
விள்ளரிய துயரடக்கிப் பொறுமைகொள வேண்டுதுமே.

திருச்சிராப்பள்ளி தூயபேதிரு கல்லூரித் தமிழ் ஆசிரியர், திருவாளர், பண்டித. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் கூறியது :—

விளக்க மேனய விழுத்திணைப் பிறந்து
துளக்கமில் கல்வியுந் துகளறு நலனு
மூக்கமுந் திறனு முட்கும் பொருந்தி
மேக்குயர் புகழினை வித்தினை பெரிதும்
திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும்
விரிதிரைப் பௌவம் வேல்விடுபு சுவற்றிய
விறல்வெஞ் சேனயும் விரும்பிய தமிழின்
றுறைவாய் துழைந்து தொகுத்த பொருட்குவை
யெண்மையிற் பிறர்க்களித் தேனுர் தருஉம்பொரு
ணுண்மை யுணரும் நுழைநோக் குடையைநீ
மன்பதை யாவும் வண்டமிழ்ச் சீருணர்ந்
தின்புற வெண்ணி முன்பெறு காந்தையிற்
றமிழ்க்கழக நிறீஇத் தாளாண்மை மேற்கொ
டமைப்பரு நலம்பல வாக்கினை யதாஅன்று
ஆங்கிலக் கல்வியி னேங்கிய விறலினை
தணுக்கோடி யாங்கண் மனுக்கோ டின்றி
மதிவலி யானே பதிநலம் பேணினை
நவிலுறு நூனயம் போலத் தவிரா
வின்பு சுரக்க வியைந்த கேண்மையி
னட்டனை மன்னே முன்னே யெம்மொடு
விட்டனை யினியாம் விழுமங் கூர
இனையை யாகலின் இராதா கிருட்டின !
ஒளியு மிருளும் போல
அளியகண் டேமிவ் வகனில வாழ்க்கையே.

கூடலூர். திரு. வே. இராமசாமி வன்னியர் அவர்கள் கூறியன.

கோச்சகக் கலிப்பா

சீரார் கரந்தைத் திருப்பதியி லங்குரித்த
பேரா ரீராதா கிருட்டினப்பேர் பெற்றவனே !
வாரு நின்புகழை யிவ்வுலகி லேநிறுத்தி
நீரார் சடைமுடியோன் நீள்கழல்சென் றுற்றனையே.

மண்மதன்கா ணெண்ணும் வடிவுடையாய்! மாநிலத்திற்
கண்மனமு நீராங் கனிந்த மொழியுடையாய் !
பொன்மலியு முள்ளப் புனிதமுடை யாய் ! எங்கள்
கன்ம நலமிலதாற் கையகன்றாய் கண்ணியனே !

தீந்தமிழ் லாங்கிலத்திற் றேர்ச்சிபெறு நுண்ணறிவாய் !
வேய்ந்த கரந்தை யெழிலார் தமிழ்ச்சங்கம்
வாய்ந்த புகழ்பரவ மன்னுவித்தா யக்கழகம்
பாய்ந்து பெருகுவதைப் பாராது சென்றனையே !

செந்தமிழ்க் கல்வி சிறந்த தொழிற்கல்வி
அந்தமுள நங்நாட் டதிவிருத்தி செய்விக்கச்
சிந்தை யுடையமதிச் சீரியனே நின்னிழந்தே
இந்த வுலகமிக வேக்கமுற தீத்தனையே !

உண்ணரிய அண்ணன் உமாமகே சுரமாலும்
மன்னிய கற்பின் மனையாளும் மக்களுமுன்
தன்னிய அன்புவலைத் தோய்ந்தமைந்த நட்பினரும்
பன்னரிய துன்பப் படுதீத்த னிற்கழுகோ !

நேரிசை வெண்பா

எங்களிரா தாகிருஷ்ண வேந்தல் தமிழ்ப்புலவர்
சிங்களஞ் சிவமாந் தினமாகும்—பிங்கள
மாசிபதி னாறுபுத வாரமதிப் பிற்பக்கம்
ஆசிறுதி யையுத்தி ரம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து இயல்நூற் பெரும்புலவர்

சோழவந்தானூர்

திரு. அரசஞ்சண்முகனார் அவர்கள்

காலஞ்சென்றது குறித்தது,

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்

கூறிய

கையறுநிலைச்செய்யுட்கள்

பஃறுழிசைக் கொச்சகக்கலிப்பா

தரவு

வளமலிசீர் நிறைசோழ வேந்தானி லவதரித்திட்
டிளமையிலே புலமைநிறைந் திசையெல்லாத் திசையுநிறீஇக்
குலனருடெய் வங்கொள்கை குறித்தபிற குணனெல்லா
மிலகுறநல் லாசிரிய னெனுந்தகுதி சிறந்தோங்கி
யுரியபொரு ளறமின்ப முறத்துய்த்துச் செவ்வேடன்
றிருவடிக்கே மாறுத லிந்தைபெறுஞ் சண்முகனே !

தாழிசை

காப்பொன்றே யொருநூறு கவின்கொளுரை யொடுவிளங்கப்
பாப்பொலியும் நூறேக பாதநுவல் சண்முகனே !
காலமெலாங் கழித்திடினுங் கவிஞர்பலர் காண்கில்லா
மாலைமாற் றெனுந்துறையின் மாலைபகர் சண்முகனே !
மந்தமுறு மாணவர்தம் மதிதியெனும் பிணிதீங்க
வந்தாதித் தொடைநிகண்டை யளித்தபுகழ்ச் சண்முகனே !
இன்னிசைசே ருருநூற்றை யெழிற்பஞ்ச தந்திரத்தை
மன்னிசைவெண் பாவளங்கள் மலியமொழி சண்முகனே !
எண்பெருகு நூலுரையு ளியற்றியவா ராய்ச்சிகளை
நுண்பொருட்கோ வையெனவே நுவன்றுவந்த சண்முகனே !
பண்டைச்சங் கம்பலுவற் பாலெழுமா ராய்ச்சி யெனுங்
கண்டுநிகர் வசனமுனங் கனிந்தளித்த சண்முகனே !
தமிழ்மணக்கு மீழுட்சித் தாய்க்குரிய தோத்திரமாம்
அமிழ்துறழ்சொற் பாவாலை யறை அரசஞ் சண்முகனே !

மண்ணிலுயர் வானினிகர் மற்றில்லாத் திருக்குறட்குச்
சண்முகன்றன் விருத்தியெனச் சாற்றிவந்த சண்முகனே!
உலகர்தமிழ்த் திறம்வியக்கு * மொருநூலி னுரைதொடங்கி
யிலகுமதிற் பாயிரத்தை யினிதளித்த சண்முகனே!

தனிச்சொல்

எனவாங்குத்

சுரிதகம்

தமிழ்த்தாய் தனது தலைமணி பொருவும்
மகவுனை யிழக்து மற்றுநீ யியற்றிய
வரும்பணி குறித்து வருந்தினள் புலம்ப
யாங்கே கினையோ வம்ம!
தீங்கனி புரையுஞ் செந்தமிழ்ப் பேறே.

எழுசீராசிரியவிருத்தம்

கல்வியின் வரம்பு கணித்திடுங் கவிஞர் கற்பனைக் கிலகுறுங் காட்டே!
மல்கிய நூலின் மறையெலாம் யார்க்கும் மாசறத் தெரித்திடு மணியே!
ஒல்குமோ ருண்மை யுரைத்திட வுற்ற ருருசெஞ் நடுநிலை யுரவோய்!
வெல்லுமா றின்று விதியெனு முண்மை விளக்கிய ருளங்குறித் தனையே!

கோச்சகக்கலிப்பா

அருமைதரும் பொருண்மையங்கி யறிஞர்மலைந் திடக்காணிற்
பெருமைதரு மினியமொழி பிறங்கிடவுண் மைப்பொருளைத்
தரும்புலமைச் சண்முகன்றன் றனிமொழியென் றுவக்கிருக்கும்
இருநிலமுந் தமிழ்த்தாயு மென்படுமோ நினைத்தணந்தே!

அறுசீராசிரியவிருத்தம்

நின்னனையான் பண்டொருவ னரன்கவிக்குப் பழுதுரைத்து கோல்வெல்லாத
வன்னவன்ற னனல்விழிக்கே யஞ்சினனென் னுங்குறையை யகற்றவுன்னித்
தன்னெடிலக் கணவமைதி சாற்றுகெனச், சண்முகனே!
[சார்ந்தாய் கொல்லோ?
நன்மையதே நவப்போற ஞடியவா வென்றிங்ன னண்ணு வாயே.

---

* தொல்காப்பியம்

பாலவனத்தம் சமீந்தாரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தலைவரும்
தமிழ் வள்ளலும் ஆகிய,

டோ. பாண்டித்துரைத் தேவரவர்கள்

கல்லுஞ்சென்றபோது கூறிய

கையறுநிலச் செய்யுட்கள்

வெண்பா

பாண்டித் துரைத்தேவே பாலவனத் தக்கோவே
வேண்டிப் புலவாடை வித்தகனே—காண்டக்க
காமனே யோர்ந்தளிக்குங் கற்பகமே பார்தீத்துப்
போமனே யென்றுகாண் போம்.

அறுசீராசிரிய விருத்தம்

ஐயோவித் தமிழுலகம் என்படுமோ! என்செயுமோ! அந்தோ! அந்தோ!
தையாரும் புகழ்ப்பாண்டித் துரைமகனைத், தமிழ்மகட்குத் தொகைசா
செய்தானைச், செல்வர்தமிற் சிமானை, வானேயுஞ் சிவணு நல்லீ [னன்மை
கையானைக், கவிஞர்கடங் கண்மணியைக், காலமெனுங் கடற்போ கட்டே.

தமிழுலகப் பெருஞ்சேயே! தமிழ்த்தாயின் றமிழ்த்தாயே! தங்கு மன்புச்
சிமிழெனுநற் சிற்தையனே! சீர்த்திதரும் புந்தியனே! செல்வ மிக்காய்
உமிழுமெழிற் றிருமுகனே! யுயர்பாண்டித் துரைமகனே! யுனைத்தோற்
[றிந்நாள்
அமிழ்கிறதே! தமிழுலகம் பெருந்துயர அளக்கருளே! அந்தோ! அந்தோ!

மண்ணினையே மிருத்துரைத்து வானுரு மேமாக்க வந்திப் பாரில்
நண்ணினையே! தமிழ்மணமித் தமிழகமும் பிறவுலகும் நாளும் வீசப்
பண்ணினையே! பண்ணியதெல் லாம்பாண்டித் துரைத்தேவே!
[பற்று தாமென்
றெண்ணினையே! என்செய்வேம்! உனையிழந்தந்
[தோகெட்டோம் யென்செய் வேமே!

நகடெல்லாம் பொருள்செய்து தமிழ்மகளா ருறையவிலம் நவின மாயிவ்
வீடெல்லாம் போலாது மெய்வீடு போற்சமைக்க வேண்டிச் சாயல்
மாடெல்லாம் கண்டறிய மாபாண்டித் துரைசென்றான் மனம்ப டாத
பாடெல்லாம் பட்டுருகிப் பதைக்கின்ற தென்னேயோ பாவ லோர்க்கே

தேசிகற் றிருமேனி திகழ்பாண்டித் துரைத்தேவிற் றேன்பா லென்னப்
பேசுமொரு பிரசங்கப் புலமைக்கும், திருவிற்கும், பிறவி தீர்த்துச்
சாசுவதந் தருமரிய சைவநிலைச் சார்பிற்கும், தனிவண் மைக்குங்
காசினியிற் சிறந்தாராங் காட்சியைக் காண்பதுமெக் கால மேயோ !

பிறந்தாருட் பெரும்பேறு பெறுப்பாண்டித் துரைத்தேவே! பீடு சான்று
சிறந்தாய்மற் றாழ்வுவியாற் சென்றுயச் செலவிலுமோர் செப்பங் கண்டா
யிறந்தார்க டிறத்திறப்பா ரியற்கையெனச் சிலகால மெண்ணிப் பின்னர்
மறந்தாலும் மறந்தறியா வகையுறலின் மறவிகெடு மாண்பிற் றென்றே.

தாய்மொழியை வளர்த்தபெருந் தகைப் பாண்டித் துரையாவி
[தானென் றுன்னுந்
தூயமனை, சுற்றமெலாந் துறந்தேதகுங் கரிநாளிற் றுயர்ந்தன் னேக்கக்
காய்சினத்த பெருவழுதி கடுங்கோனென் றின்னவரிற் கவிய ரங்க
மேயவரோ டிணைத்துமுறை யேழைக்கு மூன்றிரண்டென்றென்
[றெண்ணு வாமே.

கல்லாரைக் கற்றவராச் செயும்பாண்டித் துரைவாயிற் காலனென்னுஞ்
சொல்லாடிப் புகுந்திருந்து சோர்வுழிக்கொண் டேகியதோர் சூழ்ச்சிகண்டு
மெல்லாரு மூய்வதியே மெமனமனென் றிருக்கின்ற மிமையோர் முன்னப்
பல்லாரு மெமைப்பாரார் படியாரென் றிசைக்கின்ற பான்மை நன்றே.

வெண்பா

விரோதி கிருதே ! விருச்சிகமே ! யுங்கள்
விரோதம் விரித்துரைக்க வேண்டா—குரோதத்தாற்
றம்மிற் கடையாஞ் சனியு மிரேவதியு
மும்மிற் கலந்துற்ற தோ !

மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் அரசர்,
முத்துவிசயரகுநாத ராச பாஸ்கர இராசராசேசுவர சேதுபதியவர்கள்
மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவராக அமர்ந்தமை குறித்து,
தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் அளித்த

வாழ்த்துப் பாக்கள்

இணைக்குறள் ஆசிரியப்பா.

நிலவு புகழுலக நீணில மருங்கின்
இலகிய மொழிதாம் பலவே; அவற்றுள்
இந்திய நாடு ஈன்றது மிரண்டே ;
இரண்டின் வழியே இனைத்தன பன்மொழி
ஆரியந் திராவிடமாமிவற் றுள்ளே
சிறந்து பொலியுஞ் செல்வத் தமிழ்மகள்
முத்துடைப் பாண்டி யெனுமுத னாட்டின்
தத்து சங்கத் தொட்டிலிற் கிடந்து
பாண்டியர் ஆதர மாதரங் கனிய
நச்சி வளர்க்க வளர்ந்தனள் பல்லாண்டு,
அவற்றிடை, இன்புறுநாளுமவையே,இன்புறீஇ,
துன்புறு நாளுஞ் சிலபல இவையென்று
அன்பின் மாக்கள் அரற்றுங் கொடுமொழி
பாழ்த்ததென் றுரைக்க ஆழ்த்தவே ளுன்றி,
பண்டைச் சங்கப் பனுவலாம் பாகல
விண்டடங் காத வியனீர் தேக்கி,
தேம்படு கனியின் மேம்படு வடமொழி
நீங்கில சாத்திரந் தேங்கிலா ஆங்கிலம்
ஆயபன் மொழியெனு மெருவிடைக் கொண்டே
உலக மியாங்குளும் புகழ்மணம் பரப்பி,
திப்பிய இலக்கிய நெடுங்கிளை விரிய
ஓங்கிய சங்க ஆணிவே ராகுவை !
வணிகர் நிலக மாகுறு வளமை
செழுவிய குரிசிலாம் பழுதிய பண்பின்
நலஞ்செறி செல்வ பெத்தாச்சி யெனும்பேர்
நிலைத்த செல்வ னின்னெழிற் றொப்பார்
யாரு மிலரென் றிருக்கவீண் டிவனே !

தலைவர்கட்களித்த

தமிழணங் கிருவிழி யாகிய நீவிர்
களுலொளி சான்ற கதிரொளிக் கன்றே,
"மழகதிர் ஞாயிறு எள்ளுந்" தோன்றல்,
பழனத் தாமரை ஆருந் தமிழ்நிலம்
எந்நில மருங்கெணு மலர்செறி தடமாம்
உலக வாவியுள் உயர்ந்தோர் மனமெனப்
பன்னிறங் கமழ மின்னி இயங்கும்;
அதனால், இராமநாத புரமெனு நகர்க்கே
கதிரொளி வேண்டா காட்சி சான்றனை,
தமிழ்மகள் மேம்பட தலைமைசான் றனையே!
அம்ம! அவ்வணங்கே அணிதிருத் தியநின்
செம்மொழி கேட்கச் செவிசாய்த் தனளே!
ஆகலின்!
வையையே பொன்னியே வளம்படு கங்கையென்
றனைத்துந் தன்னக மடக்கிய
கடலுண் மணலினும் பல்லாண்டு களுல
வாழிய நீயே! வாழிய நீயே!
நன்னெறி வரம்பாய் நீடு வாழியவே!

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

தமிழ்மகளே ஒளிபெற்றுய் தமிழ்மகளே விழியுற்றுய்தலைமை சான்ற
தமிழ்மகளே நின்றனக்கே தகுதிகலனியாவையு மேதரிக்கப் பெற்ற
தமிழ்த்தலைவ னிலனென்றே மணமுமிலை யினியென்றே தயங்கினுமால்
தமிழ்த்தலைவன் சேதுபதி தலைலனுய்அமர்ந்தன்றேதளிர்த்தோமன்றே.

கலிநிலைத்துறை

உலக மெங்கணும் வியப்புறுமொழிக்குழுவிடையே
திலக மாகிய தமிழ்மகள் திப்பிய மரையின்
அலகில் சோதிய கயல்நிகர் ஆகிய கண்ணின்
இலகு காட்சிநின் தலைமையில் அடைந்தனள் அரசே!

வரவேற்பு

நீலமண்டில ஆசிரியப்பா.

நிலவுநீர் வரைப்பின் நீணில மருங்கில்
உலப்புறு மடத்தான் உயிர்சேர்ந் துயிர்ப்பார்
அலைப்புறு மனத்தார் ஆர்வமீக் கூர
தெய்வக் குறளும் திருவா சகமும்
ஆதிய பழைய அருமைப் பனுவலின்
அறவுரை தெளித்து மறவினை தொலைத்துப்
பேதமை யென்னும் பெருநோ யகற்றி
அறிவுநனி களிர்ப்ப ஆற்றும் பெற்றியும்,
தகையறும் பவிழ்த்துப் புதுமணம் பரப்பித்
தேன்றுளி தூற்றுந் திப்பிய தென்றலும்,
உருகுபாண் மிழற்றி உவப்பினை யூட்டும்
துணர்பூங் கொம்பின் வணர்வாய்க் குருகும்,
ஆதிய நலத்தாற் போதுற் றவர்தம்
இளைப்புந் தவிப்பும் இன்னிதின் நீக்கி
ஆற்றலும் வலனும் அளிக்கும் பெற்றியும்
வாய்ந்து திகழுமூஉம் வளங்கொள் சிறப்பின்
தமிழகப் பெயரிய தண்ணிய தடஞ்சேர்
கன்னலின் இனிய கல்விப் பிரதம்
உவட்டெடுத் தோட உருகெழீஇத் தோன்றும்
செந்தா மரையெனுஞ் சேதுநா டதனில்
உவந்துசேர் திருவை ஒண்மணம் புரிந்து,
தன்கோல் நோக்கித் தங்கிய குடியினைச்
சாதியுங் குலமும் யாதுநோக் காது
பொதுவுற வெண்ணிப் பொற்புடன் போற்றிச்
செம்மையிற் றிரியாது செங்குடை நிழற்றி
வள்ளுவ நீதி வழாது முறைசெயும்
பொன்னுப் புகழின் பின்னுப் பீடோய்!
குறையா வன்பிற் புலவர்ப் பேணி
வரையா வீகை வண்மை சான்ற
தொல்லோர் மருக! துகளில் தோன்றல்!
உணங்கிப் புலர்ந்த ஒண்டமிழ்ப் பாதபம்
மென்றளிர் காட்டி இன்மலர் சொரிந்து

பொன்றுது பரப்பிப் புண்ணியம் நிழற்றக்
காசென வீகை மாரி பெய்து
பாவலர் புகழுறுஉம் பாற்கர மன்னன்
ஆற்றிய தவமே போற்றுருக் கொண்டென
உதித்த செம்மால் ! உருகெழு குமர !
"ஒழியாப் புகழின் ஒங்கு பாண் டித்துரை
நிறுவிய சங்கம் நிலைதள ராது
கரந்தையர் கோனதைப் புறந்தரல் கொண்டான்;
கரந்தைவாழ் சங்கக் காவலன் அளியன்
இலங்கு பெத் தாச்சி யெனும்பெயர் வள்ளல்
தன்னோடு பொருந்திக் தாயவட் குறுபணி
இயற்றும் பெற்றியில் இனிது சிறந்தனன்."
என்று, காவல ! நின்றிருச் சீரினைக்
கேட்டனம் ! வியந்தனம் !! இளர்மகிழ்
[வெய்தினம் !!!
தமிழவட் புரக்கும் தாயில் நல்லிசை
இமிழ்கடல் வரைப்பில் எங்கணும் பரப்பும்
காமரு சிறப்பின் தோமில் சீசோய் !
முத்து விசய ரகுநாத ராச
இராச ராசேஸ்வர பூதசிப் பெரியோய் !
ஐய ! நுமக்குயாம் அறைவதும் என்னே !
வாழ்க ! வாழ்க ! நீ வளம்பல வீண்டி
தண்கதிர் மதியெனத் தழைக்கநின் குடைநிழல்!
தமிழர் சிறக்கவும் தமிழ்ப்பயிர் தழைக்கவும்
கொண்டநின் எண்ணம் குறைவில தாகுக !
வாழிய பெரும ! வாழிய பெரும !!
ஊழி ஊழி வாழிய சிறந்தே !!!

வரவேற்பு

திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர்

திரு. ஞானியார் மடாலயத் தலைவர்

உயர்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளது

அறுபதாண்டு நிறைவு விழாவில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார்

கூறிய வாழ்த்து.



சிவசிவசண் முகஞான குருவென்னத் திகழொலிசேர் சிவிகை யூர்ந்தும்,
தவமுதிர்வும் அருண்முதிர்வும் சிவமுதிர்வும் உறுமுதிர்வு தாங்கி நின்றும்,
நவமணியின் அரவணியும் ஒருவனையே அணியழகு நாளும் பெற்றும்,
புவியிலுறு மமிழ்தெனுமோர் மணிமொழியைக் கனிமொழியைப் பொற்பக்
[கொண்டும்,

அப்பரிலை சம்பந்த அடிகளிலை சுந்தரனா ராவா ரில்லை
ஒப்பரிய மணிமொழியா ரில்லையென உலகுகவல் உறுமிக் காலம்
தப்புதலில் சைவநெறி தழைத்தோங்கத் தமிழன்னை தனிச்சீர் தாங்க
இப்புவியை வாழ்விக்கும் எம்மடிகாள்! என்றென்றும் இனிது வாழி!

உலகமெலாம் எமதடிகள் அடிகளென உரைப்பதற்கிங் குரிய நின்னைக்
குலவுதிருக் கோவலூர் ஆதினக் குரவனெனக் கூறும் ஒன்றும்,
திலகமெனுஞ் சீர்த்திருப்பா திரிப்புலியூர் அடிகளெனச் செப்பும் ஒன்றும்,
இலகுலகம் ஈன்றாளை இத்தலத்தோர் எமதீன்றாள் என்ப தொன்றே!

துணிவுறுபன் னூன்முடிவும் தொகுத்தெடுத்த பொருளழகும், சொல்லின்
அணியழகும், ஒருங்குறப்பல் லாயிரவர் கூடுமவை, ஆதி சேடப் [பல்ல
பணியதுவும் தலைநாணப் பகருரையின் தெய்வமணப் பாங்கை நோக்கிப்
பிணிமுகமூர் செவ்வேளின் பேரருளாம் திறமோர்வர் பெரியர் அம்மா!

சமயத்தார் சாதியினர் தன்மதிப்பார் அரசறிஞர் சாற்று மின்ன
அமைவினைக்கொள் எக்குழுவோ ராயவரும் கேட்டுவக்கும் ஆற்றல்
[சான்றே
இமையவர்நாட் டமிழ்தினிலும் இனிதினிக்கும் விரிவுரையின் ஏற்றம் ஓரின்
இமையமொடு குமரியிடை யிந்நாட்டன் றெந்நாட்டும் இணையொன்
[றுண்டோ!

தலைவர்கட்களித்த

கல்லூரி காட்டுவித்தாய்! கணக்கறிஞன் ருனேயாய்க் கற்பித் திட்டாய்!
சொல்லாடுங் திறமையினிற் றுணையில்லாக் கழகமது தோன்றச் செய்தாய்!
பல்லூரும் சைவநெறிப் பாங்குயர விரிவுரைகள் பகரு மாறு
செல்வார்தம் செலவினுக்காஞ் செல்லலறப் பொருளளிக்கும் சிந்தை
[கொண்டாய்!

இன்னணமெல் லாம்புரியி னிருங்கலையுற் றெவ்வெவரும் இலம்பா டின்றி
நன்னர்மிகு வாழ்வெய்த, நன்ஞானத் திணையுற்றெந் நாளுங் குன்ரு
மன்னுசிவ வாழ்வெய்த, மனமொழிமெய் யருளோடு மாசில் லாச்சீர்ப்
பொன்னுமளித் துலகினரைப் புரந்தருளுஞ் செயலெல்லாம் புகழ்வார்
[யாரே!

ஒப்பரிய திருப்பவனி வலங்கொருகால் தமிழ்நாட்டி லுற்ற காலைக்
கைப்படுநற் கனியமிழ்திற் கட்பயனைச் செவிப்பயனைக் கவினக் கொண்டார்
இப்பிறவி தனில்யாங்கள் இன்னெருகால் எய்துவமோ என்பர், என்னே
செப்புதிருப் பாதிரியூர் செய்தவத்தைப் போற்றவங்கள் செய்யார்
[மன்னே!

எங்சசந்தைத் தமிழ்ச்சங்கத் திறும்பலகால் எழுந்தருளும் எண்ணம்
[வேண்டும்;
அங்குமிகு நாளருளி அக்காலின் விரிவுரைகள் ஆற்றல் வேண்டும்;
பொங்குதமிழ்த் தாய்த்தொண்டு போற்றுநெறி யடியேமைப் புகுத்தல்
[வேண்டும்;
தங்குமெம துளக்குறைக டாமிவையே; அருளுரைகள் தருதல் வேண்டும்!

தோன்றுத துணையருளாற் ரேன்றுதுணை யாமடிகள் துணைத்தாள்
போற்றி!
வான்ரேயு நெறியோரா மன்னுயிர்த மிருளகற்றும் மதியம் போற்றி!
ஆன்ரேர்தம் சிந்தையினை யகலாதங் கருள்பெருக்கும் அடிகள் போற்றி!
மான்ரேயு மிடத்திறைவன் மன்னருளாற் பல்லாண்டு வாழி! வாழி!

வரவேற்பு

பல்லாவரம் சமயநிலை நன்னெறிக் கழக ஆசிரியர்

உயர் திருவாளர் சுவாமி வேதாசலனார் அவர்கட்குத்

கஞ்சைக் காஞ்தைத் தமிழ்ச் சங்கத்தார்

கூறும் வாழ்த்து

பஃறொழிசைக் கொச்சகக் கலிப்பா

தரவு

தமிழ்மணக்குந் தமிழ்க்குடியில் தலைமைசால் மகவாகி
யமிழ்துறழுந் தமிழ்க்கிலையும் ஆங்கிலமும் வடகலையும்
தெள்ளிதறிந் துயர் சைவச் செந்நூல் முற் பலவாய்ந்து
பள்ளியுயர் புலம்நடத்திப் பயில்வோர்தம் முளக்கொண்டே
யுற்றமுத லறத்தொழுகி உலகருமம் பேறெல்லா
முற்றவமைந் தவைதுறந்த முதல்வ! மறை மலையடிகேள்!

தமிழ்மொழியுந் தமிழ்ப்புலமுந் தமிழ்பயிலு மாணவருந்
தமிழர்களுந் தமிழகமுந் தமிழ்த்தொண்டு மிவைமுறையே
அன்னையென மனைவியென அருமைபெறு மகவென்னத்
தன்னரெனத் தன்னிலனுத் தன்பொருளாக் கொண்டநினை
உண்மைபெருந் துறவியென உலகுரைக்குந் திறமறியேம்
மன்னியசெந் தமிழ்ப்பேறே! மறைமலைப்பேர் அடிகேளே!

தாழிசை

தேனெழுக்கே யெனவொழுகுஞ் செவ்வியநின் னுரைநடைமன்
னானஉரை நடைக்கெல்லாம் ஆயவொரு படியன்றே ?

தொல்லிசையோர் இயற்கைவளந் துறவாத தூய்மையினுர்
நல்லிசையோர் செய்யுணெறி காட்டவலாய் நீயன்றே ?

விரவுமுயர் பொருண்மேற்செல் விரிவுரையின் நிறம் அன்பர்
பரவுளமோ வேனேர்தம் பகையுளமும் போற்றுவதே !

நூற்புலவன் உரைப்புலவன் நுவல்புலவன் என்னும்முப்
பாற்புலவன் நீயேல்முப் பாற்புலவன் நேரன்றே ?

வடகலையு மேனுட்டார் மலிகலையுந் தமிழ்க்கலையோ
டிடமுறவாய்ந் ததுகாட்டும் எழில்சேர்நின் னுரையுரையே!

தலைவர்கட்களித்த

தமிழ்மொழியி லாங்கிலத்தில் தனியெழுதி வருந்தாட்கு
இமிழ்கடல்சூழ் உலகதனு ளிணைகூறச் சிலவுண்டே!

ஓற்றியூர் மும்மணியு முயர்காஞ்சி யாக்கமுமே
பற்றுனின தியலறிவும் பாட்டறிவுங் காட்டாவே ?

தக்கதிருக் குறள், பண்டைத் தமிழர் ஆரியர் ஆய்ச்சி
மிக்கபெரு மாசாய்ச்சி மேனாட்டும் போற்றுவவே!

பாலியொடு மூல்லைப்பேர் பாட்டிலியற் றூசாய்ச்சி
லதுமா சாய்ச்சியினர்க் கிருவிழிக டாமன்றே !

குளிர்குமுத வல்லியொடு கோகிலத்தின் திருமுகங்கள்
மிளிர்மக்க ளிணக்கமிலை விலையறியா விருந்தன்றே !

நூருண்டு வாழ்நெறியும் நூற்றின்பின் னும்நெறியும்
வேரும்பல் லுயிர்நூலும் விரிப்பவனும் நீயன்றே !

பெயர்ப்பாலு மச்சுறுத்திப் பெரிதறியா திருந்தது ; நின்
பெயர்ப்பாலே பெரும்பேறு பெற்றதுசா குந்தலமே !

சிவஞான மூனியிவனே தெளியேமென் றுலகுரைப்பச்
சிவஞான போதவுரை தெளிப்பவனு நீயன்றே ?

உருகுரு ஙித்தெளிவுற் றுணைத்திரு மொழிப்
[பொருளை
நுணுகுநு ணுணு ஙித்தெளிக்கும் நூண்புலவன் நீயன்றே ?

தனிச்சொல்

எனவாங்குப்

சுரிதகம்

பல்ல கூறினும் பற்ரு வுயர்வுடைக், கல்வியும் அறிவும் கவினிய சிவநெறிச் செல்வமும் சான்ற செந்தமிழ்ச் சேயே !, மல்குமிவ் வனைவத்தலை மன்னி நல்லிசை நாட்டி நாளும் வாழியரே !

வரவேற்பு

அரித்துவாரமங்கலம்

உயர்திருவாளர் கோபாலசாமி ரகுநாத ராஜாளியாரவர்களுக்கு

கரந்தைத் தமிழ்ச்சங்க நூல்நிலையத் திறப்புவிழாவன்று

சங்கத்தார் கூறிய வாழ்த்துப்பாக்கள்

ஆசிரியப்பா

சங்கேந்தியபரன் சரணதாமரையை
இங்கேந்திய பொன்னிதயதாமரையோய்
பங்கேருகத்தமர் பாவையரிருவரும்
தங்கேரகமெனச் சாரரித்துவாச
மங்கலமதையினும் மங்கலஞ்செய்யுமா
பிங்கலநன்கலமென்னப் பிறங்குவோய்
பிங்கலநன்கலமென்னப் பிறங்குவோய்
புங்கமாலிமயம்புக்கன எவையும்
அங்கதனிறம்பெறு மென்பவதனுக்
கிங்கொருகாட்டென இருந்துசிறந்துளோய்
சங்கமூன்றுமுன் தாபித்தவர்மனம்
மங்க எங்கெங்கும் வண்டமிழ்ச் சங்கம்
சங்கஞ்சங்கமாத் தாபித்தொளிர்வோய்
அங்கிங்கென்பதேன் தங்கிய தங்கிய
எங்கும் புத்தகசாலை யியற்றியோய்
எங்கள்சங்க மெழிலுடன்வளருமா
றிங்கதன் போஷகனாக இயைந்துளோய்
தங்கு கோபாலசாமியை முன்னிய
துங்க ரகுநாதப் பெயர்கொடுதோற்றியோய்
எங்கள் புத்தகசாலையைச்
செங்கரமதுகொடு திறக்க நீ வருகவே.

வேண்பா

வாழி நமதரசன் வாழிபுவனியெலாம்
வாழி ரகுநாத வள்ளானீ—வாழி
வயலும் கயலும் வளனுங்குளனும்
புயலும் நினக்குப் புரிந்து.

நிக

தலைவர்கட்களித்த

ஆசிரியப்பா

திருவளர் சீர்த்திச் செம்மா லரிதைப்
பதிவள ரிந்த்ர குலாதிப மோகப்
பயிற்சி யானநன் முயற்சி யாள!
முத்தமிழ் தன்னையு நத்திப் படித்த

மூதறி வாளவெப் போதும் புலவர்க்
காதரத் தளிக்கு மண்ணு லெவர்க்கு
மடமை நோய்பசி மற்றிம் மூன்றுந்
தொடரிற் றொல்லை படருமென் றேர்ந்தாங்
கடைந்தவர்க் கன்னைவை யனுகா வண்ணமோர்

மாணவர் கழகம், மருந்தருள் சாலை,
பேணு மன்ன சத்திர மிவற்றைப்
புதுக்கிய புண்ணிய புனிதமா தவனு
நிலமதை யளந்த நெடுமுடி யண்ணறன்
மலர்ப்பத மறவா மாண்பமை மனத்தோய்!

வாசுதே வப்பெயர் வள்ளல்செய் தவத்தான்
வந்தநற் றாய மனத்தகோ பால
சாமி ரகு நாத ராஜா ளிப்பெயர்
பெற்ற பெரியோய்! பேணின மீண்டு
வருக! வருக! மகிழ்ந்தனை வருக!

கருணையொ டெங்கணற் கரந்தை வாழ்தமிழ்ச்
சங்கத் திணைந்தவிச் செந்தமிழ்க் கல்விச்
சாலையைத் திறக்கச் சம்மதித் துவந்து
வந்தனை பெருமவிந் நகர்லோரையுள்
உரைபிறழ் கல்லா வுயர்வுறு வாயாற்

பெருமைபெற் றோங்கிப் பிறங்குக வென்றுபல்
லாசி மொழிகளைப் பேசிக் காரெனக்
கரவா தளிக்குங் கவின்பெறு கையாற்
றிறப்பைமற் றதனுற் செவ்வி யோயிஃ
தன்னரு ளோடுமற் றேனைச் செல்வர்த

மின்னரு டன்னையு மெளிதினிற் பெற்றே
யென்று முயர்ந்தோ ரிசையெனப் பொலிந்து
மேன்மே லோங்கி வளருக வென்னு
வாலமர் செல்வன தடியைச்
சீலமார் மனத்திற் றினமும்வேண் டுவமே.

வரவேற்பு

பெத்தாச்சிப் புகழ்நிலையம் என்னும் நூல் நிலையத்தைத் திறந்தருளும்
காநாடுகாத்தான் பெருந்திருவர்

சர். மு. சித. முத்தையாச் செட்டியார் M. L. A. அவர்களுக்குச்
சங்கத்தார் கூறும் வாழ்த்துப்பா.

வருக ! வருக ! வாழியர் ! வருக !
காநாடு காத்தான் றானாடு தவத்தான்
திருமகள் வளரும் ஒருபெரு மரபில்,
வழிவழிச் சிறந்த மாபெருங் குடியில்,
சிதம்பரன் அருள்சேர் சிதம்பரன் பேறாய்
வந்து பிறந்தொளிர் மாபெருஞ் செல்வ !
நந்தா விளக்கே ! நானிலம் போற்றக்
கலைபயில் கழகம் பலபல அளித்தும்,
சங்கம் பலவும் தாங்கிப் புரந்தும்,
பாவலர் யாவரும் பாடிய அருளியும்,
ஆலயம் அமைத்தும், ஆவன புதுக்கியும்,
எங்கள்சங் கத்தின் எழிற்புர வலனாய்
ஆயிரம் ஆயிரம் ஆயமாப் பொருளொடு
எண்ணில் அடங்கா தியல்பல நூலும்,
பிறவும் அருளியும் அறவுரு வாய
பெத்தாச்சி யாய நற்றமிழ் வள்ளல்
பின்னோன் என்ன முன்னோன் ஆகி
வேண்டிய பொருளெலாம் வேண்டினோர்க் களித்து
மனமகிழ் சிறப்பு வாய்ந்திடுஞ் செல்வ !
சென்னைமா நகரின் சிறப்பினன் என்னும்
பன்னருஞ் சீரொடு பகர் சர்ப் பட்டமும்
பெற்றொளிர் பெருமைய ! பிறங்கும் இந்திய
அரசியல் உறுப்பினன் ஆயஎம் அண்ணால்!
இந்திய நாட்டுட னேனையாங் கிலமா
நாடும்நின் சீரினை நன்கறிந் திடுமெனின்
முன்னுநின் சீர்கள் முழுதுரைப் பனவோ !
ஆயமாப் புகழினை ! மேயவிச் சங்கத்
தெளிமை எண்ணா தெம்பியின் நல்லருள்
வாய்ந்தொளிர் சங்கம் மன்னுநம் அருளையும்
ஏய்வதற் குரித்தென எண்ணிவந் தருளினை !
பெத்தாச்சி வள்ளல் பெரும்புகழ் நிலையம்
திறந்தருள் செய்க ! செம்மாஅல் ! நீணிலத்
தெத்திசை யும்புகழ் முத்தையப் புரவல !
மாநில நிதிபதி மான
ஊழி ஊழி வாழி ! வாழியரே !

திருவாளர் திவான்பகதூர்

சா. ராம. மு. சித. பெத்தாச்சிச் செட்டியார்

எம். ஆர். ஏ. எஸ்., எம். எல். சி., அவர்களுக்குச்

சங்கக் கல்லூரி மாணவர் கூறும் வாழ்த்து

சீரார் மார்பிற்றிரு
சிதம்பர வள்ளலருள்
சீர்த்தி மேவிய பெத்
தாச்சிப்
சீலன்
காரே கருகு கொடைக்
கருணை பெருகு விழிச்
காண்டற் கொத்தவள
கைபன்
செய்யன்
ஆண்டிப்
ஐயன்

ஏரார் காஞ்சி
இவன் அக் கா நாடு
எங்கள் கரந்தைத் தமிழ்ச்
காத்தான்
காத்தான்
சங்கம்
காத்தான்

பாரோர் கலிமுழுதும்
பரவையி லிவ்வுலகம்
பகல்மதி உளவரை
வீழ்க
மூழ்க
பகைகெடவே
வாழ்க!

வாளன் நல்ல
பாலன் வரும்
பேர்கொள்குண
செங்கோலன்
உயர்
நலங்
பட்டியாளும்
மிகுதயன்
வாழ்
வளர்
உயர்ந்திடவே
மகிழ் பூத்தான்
தமிழ்ப்
இவன்
நன்கு
அறஞ் சூழ்க!

சென்னை மாகாண வளர்ச்சிநெறி யமைச்சர் திருவாளர், திவான்பகதூர்

T. N. சிவஞானம் பிள்ளை B. A., M. L. C. அவர்களுக்குச்

சங்கத்து மாணவர் கூறும் வாழ்த்துப்பா.

மன்னுநெல் வேலிசெய் புந்தவன்—ஒரு
மாணுருக் கொண்டுபி றந்தவன்—அந்தத்
தன்னிக ரில்லா வுமைபங்க னருத்
தாளிணைக் கன்புமி குந்தவன்

மாசில்வே ளாண்குல மேயினன்—சென்னை
மாகாண மந்திரி யாயினன்—இந்தக்
காசினி தன்னிலே வாழ்பவர்க் கென்றுங்
கருணை புருந்திடுந் தாயனன்

சீர்கொள் சிவஞானப் பேரினன்—செம்மை
சேர்புகழ் மல்கிய னரினன்—மிகும்
பேர்கொள்தி வான்பக தூர்ப்பட்ட மேவிப்
பெருமைகொ ளும்மலர்த் தாரினன்

எங்கரந் தைத்தமிழ்ச் சங்கமே—தலை
யேற்றத மிழ்க்கலைச் சிங்கமே—இவன்
மங்கள மோங்கிப்பல் லாண்டுகள் வாழ்கஇம்
மாநிலத் தில்மிகத் துங்கமே!

தஞ்சை மா நாட்டாண்மைக் கழகத் தலைவர், திருவாளர்,

A. T. பன்னீர்ச்செல்வ உடையார் *Bar-at-Law* அவர்கட்குக்

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி மாணவர்கள் சூட்டிய

வாழ்த்துப்பா மாலை.

தேனை னைத்தித் திக்கும் அன்னை
வானை னைப்பு ரக்கும் அன்னை
தேச வாழ்வ ளிக்கும் அன்னை—இமையோர்கள்

தேடு புகழ் மேய மைந்தர்
கோடி யிரண்*டேயு மைந்தர்
தேர்த மிழர் ஆய மைந்தர்—தமையீன்றாள்

நானி லங்கள் போற்று தஞ்சை
தானி லங்க வாழ்க ரந்தை
நாடு தவ மாகு சங்கம்—தனையாள்வாள்

நாளு மக லாத தொண்டே
வாழ்ப யன தாகக் கொண்ட
நாய க னு மாம கேசன்—துணையாவான்

மாநி லையோ ரார்கள் எஞ்சி
நாணி ட வே வென்று தஞ்சை
மாக ழ கத் துச்சி கொண்ட—திருவாளன்

மாண வர்கள் ஓரு மன்பன்
பாக லத்தர் சேரு ணர்பன்
மாத மி ழர் தேறு மின்பன்—அருளாளன்

மேனி லத்தோர் இட்ட பட்டம்
மாநி லத்தோர் இட்ட னென்னும்*
மீயு யர்பொ ருட்ட ரவே—தகுசீலன்

மேத கு கல் விச்செல் வ மும்
ஓது பொன்பு விச்செல் வ மும்
மேய பன்னீர்ச் செல்வம் வாழி! மிக வாழி!

---

* பார்இஷ்டர்.

சென்னை மாநில முதல் அமைச்சர்

திருவாளர்

Dr. P. சுப்பராயன், M. A., Bar-at-Law அவர்கட்கு

காரைதைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி மாணவர்கள் சூட்டிய

வாழ்த்துப்பா மாலை

ஆழி சேரு நானி லங்கள்
சூழு மங்கி லேயர் கல்வி
ஆரு மெல்லி யாய யெம்மே-கற்றவன்-மிகு
பாரிட்ட ரா மோர்பட் டமும்-பெற்றவன்

மேழி நலம் சேர்கு டி கள்
வாழ்கு மார மங்க லத்தை
மேய வ ரு ளாற்பு ரக்கு-மன்னவன்-அதற்
காய முற்ற வப்ப ய னே-பன்னவன்

வாழி சுப்ப ராய னெ ன
நாளு மு யர் ஓர்பெ ய ரன்
வார்க ட லார் சென்னை மு தன்-மந்திரி-புவி
யார்கள் மெச்சு பே ர ரச-தந்திரி

வாழி ய வ னேர்த வ மாய்
நாளு ம க லாத தூணை
வாள்வி ழி வெண் பூ ம டந்தை-தன்னையே-கலை
யால் நி கர்த்த மாது நங்கள்-அன்னையே



செந்தமிழ்

சங்கநிதி பதுமநிதி இரண்டுந்தந்து
தரணியொடு வானளந்த தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்பேம் அல்லேம்
மாதமிழுக் கோந்தர் அல்லராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
நன்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர் அன்பராகில்
அவர்கண்மீர் யாம்வணங்குங் கடவுளாரே

கூட்டுறவுப் பதிப்பகம், கருந்திட்டாங்குடி, தஞ்சாவூர்.